3910

ஓம்

தத்சத்.

பரப்பிரஹ்மணேநம:

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

# வேதாந்தசூளாமணி

## மூலமும்,

இராமநாதபுரம்

முத்துவிஜய ரகுநாதசேதுபதி மகாராஜா

அவர்கள் வேண்டுகோளால்

திருத்துருத்தி, இந்திரபீடம் - கரபாத்திரசுவாமிகள் அதீனத்து

பிறைசை. அருணாசல சுவாமிகள்

அருளிச்செய்த

## விரிவுரையும்.

இவை

சென்னை, பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்,

ஸ்ரீமத் பூ. இராஜரத்தின முதலியார், பி.ஏ.,

அவர்கள் விருப்பத்தின்படி

சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியார்

அவர்கள் பரிசோதித்தெழுதிய

## குறிப்புரையுடன்,

சி. பொ. சுப்பிரமணியப் பிள்ளையால்

சென்னை:

ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1908.

விலை ரூபா 1—4—0.

T003910
Sarasvati Mahal Library. Thanjavur
THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY TANJORE

ஓம்

தத்சத்.

பரப்பிரஹ்மணேநம :.

# முகவுரை.

எண்ணாறு தன்னிலை யெய்தச் சங்கர
பரம குருவின் பாதாம் புயங்கள்
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே.

பகற்குப்பின் இரவும் இரவிற்குப்பின் பகலும் இடைவிடாது வருதல் போன்று மக்கட்குச் சுகத்திற்குப்பின் துக்கமும் துக்கத்திற்குப்பின் சுகமும் வருத லியல்பா யிருத்தலினாலும், அங்ஙனம் வருதற்கேது அவனவனது வென்னும் பேதபுத்தியாயிருத்தலினாலும், அப்பேதபுத்தியின் நாசத்திற்கேது சர்வம் மித்தை சர்வம்பிரஹ்மம் சர்வம்நான் என ஐயந்திரிபின்றி யுண்டாகும் ஞானமாயிருத்தலினாலும், சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் முதலிய சுவாநுபூதிமான்கள் சர்வம்மித்தை யெனக் காண்டற்கும் அவற்றைப் பிரஹ்மமென வுணர்தற்கும் சர்வம் நானென அறிதற்கும் ஏதுவாக, பல நூல்களை உபநிடதம் கீதை பிரஹ்மசூத்திரம் என்னும் பிரஸ்தானத்திரயங்களை மூலமாகக் கொண்டு இயற்றியருளினார்க ளென்பது வேதாந்த சித்தாந்தத்தை ஐயந்திரிபற வுணர்ந்த நன்மக்க ளியாவராலும் அங்கீகரிக்கப்பட்டதொன்றாம். அவர்களருளிச்செய்த நூல்கள் வடமொழி வல்லார்க்கே யன்றி ஏனையோர்க்குப் பெரிதும் பயன்படாதிருத்தலை நோக்கிச் சுவாநுபவமும் ஆனாநற்கல்வி யறிவுடைமை முதலியனவுமுடைய ஆன்றோர்கள் தேசபாஷைகளிலும் அவற்றைத் தொகுத்தும் விரித்தும் பலவேதாந்தநூல்க ளருளிச் செய்தார்க ளென்பதும் வெள்ளிடைமலையாம். அவ்வேதாந்த நூல்களுள் வேதாந்த பரிச்சேதம் என்பதும் ஒன்று. இது கன்னட பாஷையில் நிஜகுணயோகி யென்னும் சுவாநுபூதிமானால் அருளிச்செய்யப்பட்டது. இஃது அப்பெரியார் அருளிய (வீரசைவ சித்தாந்தத்தை விரித்துக் கூறும்) விவேகசிந்தாமணி என்னும் நூலினிறுதியி லிருக்கின்றது. அவர் வீரசைவம் வேதாந்த நிலையை

யடைதற்குப் பரம்பராசாதனமா யுள்ளவற்றுள் முக்கிய சாதன மெனக் கருதி அங்ஙனமருளிச் செய்தனர். வேதாந்த பிரக்கிரியைகளை யெல்லாம் சுருங்கச் சொல்லலும் விளங்கவைத்தலுமாகக் கூறும் அவ்வேதாந்த பரிச்சேதத்தைத் தமிழ் மக்களும் எளிதிலுணர்ந்து தன்னிலையடைந் துய்யும்பொருட்டுக் கருணையினால் துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகள் ௧௮௬-விருத்தப்பா வடிவமாக மொழிபெயர்த்து **வேதாந்தசூளாமணி** எனப் பெயரிட்டருளினர். இது தமிழ்ப்பாஷை வல்லார்க்கேயன்றி மற்றையோர்க்குப் பெரிது முபயோகமாகா திருப்பது கருதி இராமநாதபுரம் முத்துவிஜயரகுநாத சேதுபதி மகாராஜா அவர்களின் வேண்டுகோளால் திருத்துருத்தி, இந்திரபீடம் - கரபாத்திர சுவாமிகள் அதீனம் நாகை - அருணாசல சுவாமிகளின் பிரதம சீடராகிய **பிறைசை-அருணாசல** சுவாமிகளவர்களால் இதற்கோர் விரிவுரையியற்றப்பட்டது. இவ்விரிவுரையில் வேதாந்தப் பிரக்கிரியைகளும் அநுபவ இரகசியங்களும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுரையோடு கூடிய வேதாந்த சூளாமணி தற்காலத்தில் கிடைப்பதரிதா யிருப்பது கருதித் தமியேன் சென்னை, பிரஸிடென்சி மாஜிஸ்டிரேட், **ஸ்ரீமத் - பூ - இராஜரத்தினமுதலியார், பி-ஏ** அவர்கள் விருப்பத்தின்படி, அதனைச் சென்னைமாநகரத்தின்கண் வேதாந்த பாஸ்கரரா யெழுந்தருளியிருந்த மகான், சை - இரத்தினசெட்டியாரவர்களிடத்து வேதாந்தாப்பியாசஞ் செய்தவர்களு ளொருவரும், சென்னை-இந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமான **ஸ்ரீமத்-கோ. வடிவேலுசெட்டியா** ரவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்தும் அவசியமாய் வேண்டுமிடங்களிற் குறிப்புரை யெழுதுவித்தும் பதிப்பித்தனன்.

இதிற் பிழையுளதாயின் உலகம் பொறுக்க.

இங்ஙனம்:

மாவை. வே. வி.

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணேநமஃ.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

இந்நூலுரையாசிரியர் மாணுக்கருள் ஒருவராகிய

பாரிப்பாக்கம்,

## முனியப்பமுதலியாரவர்களியற்றிய

### நேரிசையாசிரியப்பா.

மணிவள ருததிசூழ் மாநில மதனி
லணிபெற விளங்குநல் லான்மகோ டிகடம்
முருவினை மறந்தறி யாமையோ ருருவாய்
மருளினிற் சுழன்று வருந்திடுங் காலையிற்
றன்னை மறவாத் தன்மையான் மாயையின்
மன்னியோ னருளான் மகிழ்வுட னோக்கிக்
காலமா தியதத் துவங்களு மிலகு
ஞாலமார் புவன போகமு நல்கித்
தனுகர ணங்களுந் தந்தனு பவிக்கு
மினம்வகுத் ததனு லிதந்தனை யுணர்வித்
துண்ணும் போததி லுறுசுக துக்க
நண்ணுறு மதனு னலிவுறு மவற்றை
நீக்குவான் கருதி நெறியுணர்ந் துய்ய
வூக்கமாய் முனமே யுளதா மோத்திற்
சிலவெடுத் திருக்கா தியபதி னன்கா
நிலவிட வைத்த நிமலமாம் வித்தையுட்
சிறந்தமீ மாஞ்சையுட் செப்புமுத் தரத்தி
னுறைந்திடும் பிரம காண்டத்து ளோதும்
பொருளது விளங்கப் புத்தேள் வியாத
னருளொடு சூத்திர ரூபமா யமைப்ப
விளங்குறுஞ் சாம வேதத் துச்சியிற்
றுளங்குமா வாக்கியத் தூய்மையி னமைந்த

பிரமகூ டத்தரின் பேதநீங் கினமெய்
யுரமதே யுண்மையென் றோர்ந்துல குய்யச்
சங்கரா சாரிய சாமிதன் னருளாற்
றுங்கமா நுவலுமத் துவிதபார் டியமே
யுண்மைப் பொருளென வுணர்வுடை யோர்க
ணண்ணுறு மிஃதை யாவரு நணுகக்
கருதிஞ றியமொழி கற்றுவல் லார்க்கே
யுரியதா மேனையோர்க் குரியதன் றுதலிற்
சிவப்பிர காச தேசிகன் மகிழ்ந்தே
சிவத்தினுக் கார்வமாந் தென்மொழி யதனி
லுரைத்தவே தாந்தசூ ளாமணி யொண்கவிக்
குரைவிரித் துலகோ ருய்யத் தருகெனுச்
சுப்பிர மணியனுந் தொல்கடன் மூழ்கி
யற்புத மாந்திரா விடவமு தனைத்தும்
வாரி விழுங்கிய மாமுனி யுறையுங்
காருலாம் பொதியையின் ககனம ளாவிய
சிரந்தனி னின்றுஞ் சீருல குய்யப்
பரந்திடும் வானதி பாரினிற் போந்து
சந்தன மாதிய தருக்களின் குழுவுஞ்
சுந்தர மாநவ மணிகளுந் தொடரத்
தலைவனை நோக்கிச் சார்ந்திடு வையைசூழ்
நிலமக டிலகமாய் நிலவிடுங் கன்னி
நாட்டிற் சிறந்தமென் னந்தைமா நகரிற்
பாட்டிற் புகழ்தரு பல்வளம் பெருகும்
பூவசி யன்றொழின் மேவுத னன்கெனத்
தாவினல் லுழவரைக் கூஉய்த் தனதிடஞ்
சேர்த்துவன் பூவினைப் பார்த்துத் திருத்தி
நீர்த்தடை யின்றிப் பூர்த்தியாய்ப் பாய்ச்சிச்
செந்நெலு மிக்குபுன் கன்னல்சீர்க் கமுகாய்
மன்னிய கமுகுநற் றென்னைநற் றருவெனச்
செல்லுறை சோலையு மில்லுறை வோரையு
நல்லுற வைக்கொடு புல்லுற வைத்தவிர்
துறவியு நல்குர வுறுப்வர் யாரையு
மறத்துடன் வளர்க்குஞ் சிறப்பினம் மறவர்கோன்
முத்துச் சாமிவே ளுத்தம தவத்திற்
சித்தியா நான்முகன் புத்தியி னுதித்த
செய்யா முனிவரி னையாச் சாமிமால்
வையகம் புகழுங் கடம்பவ னேந்திரன்
வடிவேன் முத்து வயிரவக் குரிசின்
முடியென வந்தோர்க் கடியெனு மிளவல்

தேவுல கத்திற் சீருள தான
பூவுல கத்திற் பொற்புற விளங்கு
மேருவின் றென்பால் விளங்குநன் னதிகளிற்
சீருயர் கங்கையிற் சிறந்தவிற் கோடியு
மத்திசை தன்னி லமர்நற் றலங்களின்
முத்தித் தலம்வா ரணாசி தனின்முதிர்
முராரியர்ச் சித்து முற்பவந் தொலைத்த
விராமேச் சுரமெனு மிருஞ்சிவ தலமும்
பாது காக்கும் பண்பி லுயர்ந்த
சேது பதியெனுஞ் சீர்த்தியை யுடையோன்
மணஞ்செய்வான் கருதி மான்முத லமரர்
கணம்வர வரவக் கயிலைதா ழாமற்
சமஞ்செயக் குறுமுனி தனித்துவீற் றிருக்கு
நிமலஞா னிகளக நிலையென நிற்கும்
புதுமலர் வாசப் பொதியமால் வரையோன்
றுதைமலர்க் குருந்தினற் றூயவ னருளா
மதுரவா ரியின்வாய் மடுத்தருள் பொழியு
முதியமா ணிக்கவா சகன்றுயர் முனிய
வுருகுமெய் யன்பிற் கொடுத்தமா நதியைப்
பெருக விடுக்கப் படிமிசை பெருகி
யன்பிற் றேக மாதிய கரைக்க
வின்புரு வாய்வரு மியல்பென முத்தின்
குழுவையுந் துப்பின் கொடியையு மீர்த்து
வழுவறச் செல்லும் வையைமா நதியோன்
பனையொடு மலயத் துவசனேற் றால்வருந்
தனையளங் கயற்கணி தனிமுடி கவித்துப்
பூவேந் தனைவரும் போற்றரி யணைமிசைத்
தேவேந் தாகித் திகழ்வதை வானோர்
செந்நெலுங் கன்னலு மரம்பையுந் தெங்கு
மன்னுசோ பானமாய் வந்தடி பணியும்
பைந்தமிழ் விளங்கும் பாண்டிநன் னாடன்
மைந்துற மெயிலு மாசுண முடிமேற்
றங்குநீ ரகமுந் தனித்தனி சூழத்
திங்கள்வந் துலவுஞ் சேணுயர் மேடையின்
பளிக்கினா லமைந்த பலகணி வாயி
னொளித்துநோக் கியமின் னொள்ளிய முகமல
ராடவ ராகந மருக்கனாய் மலராக்
கூடியா னந்தங் குளித்தகற் பினர்வா
ழராவணைத் துயில்வோ னருள்பெறு பதியா
மிராம நாத புரமெனு நகரோ

னறிவின்மை யாமிருட் கறிவெனுங் கதிரோன்
செறிவுற் றஃதைச் செயித்துநிற் பதுபோற்
பகைவர்வல் லமையைப் பாறிடத் துரத்துந்
தகையுளன் றளவத் தாமமா லிகையான்
மனமெனும் புரவியான் மாயா புரத்தைத்
தனியனுய்த் தாண்டுஞ் சதுரினைப் போலக்
கருதல ரரணைக் கடந்தன னகரை
மருவிடச் செய்யு மாதே சுடையா
னனகமார் முணர்வை யடைந்திடு நிமித்த
முனமக மெனவுரை மூன்றின் முதன்மையாம்
பரமாங் காரமரப் பகர்மதக் களிற்றி
னூரமுறப் பவப்பகை யோடத் துரத்தலி
னிகலவர் வலிகெட வெவ்வெத் திசையுந்
தகவுற நடாத்துந் தந்தா வளத்தான்
றன்னைத் தான்காண் பதுவே சத்தியம்
பின்னமாக் காண்பது பெட்டென் றெங்கு
மவனியோர் காணவே தங்க ளதிர்த்தலி
னிவனே மன்னவ னென்பது மெய்யென
முன்றிலி லென்று முழங்குமா முரசோன்
மன்றில்வாழ் சிற்றம் பலவனென் மனமே
கோயிலாக் கொண்டான் கொடியகா மங்கள்
வாயில்விட் டோடின வகையுல கறியக்
காவி தரித்த கருத்தைக் காட்டலின்
பூவிற் கரசு பொருந்தினு னிவற்கு
வந்திறை கொடுத்து வளமைபெற் றிருக்கச்
சந்ததங் கூவுந் தாளாண் மையினைக்
காண வாடுங் காவிக் கொடியோன்
பேணுதற் கரிய பிரம மதம்பெறச்
சீவரைச் செலுத்துஞ் சிட்சைரட் சைகளாற்
பாவபுண் ணியவினைப் பற்றற விளங்கு
நடுநிலை யாக நடிக்குமீ சனைப்போற்
குடிமுழு தாளுங் கொள்கையா லிவரிற்
றுட்டரைக் காய்ந்து சிட்டரைத் தூய்மையிற்
றட்டறக் காத்துத் தானவை சாரா
மனுநெறி யதனை வழாது நடாத்துங்
கனமுற வுலகைக் காத்தசெங் கோலான்
சக்கர வாளத் தன்மையாற் காக்கு
மிக்கசத் துவமதி வெண்கொற்றக் குடையான்
கட்டுத் தவறுக் கவரிபோன் மனுவின்
சட்டந் தவறுத் தன்மையா னஃதின்

சிகழியை யிருபுறஞ் செல்விய நிரட்டும்
புகழ்தரு கவரி புடைபொலி வுடையான்
முடியா னடியே முடியா னதனாற்
படிமீ தெவர்க்கும் பணியா முடியான்
திரிபுண் டரநீற் றழகுந் திலகமு
மருவி விளங்கு மதிமுக நுதலான்
ஞாலமா ருயிர்க ளியாவு நயப்புறச்
சீலமார் தன்போற் றேர்கரு ணைக்கணன்
வச்சிரத் தோடு மரகதத் தொங்கலு
முச்சம தாயொளி ரும்பல வணியுந்
தவமெலா முதிர்ந்த சற்குரு மொழியே
நவநவ மாகக் கேட்குநற் செவியான்
சதுமறை முடிவின் றற்பரம் பொருளை
மதுரமா யடைந்துமெய் வழங்குறு வாக்கோன்
மணிமுத் தாரமு மகரகண் டிகையு
மணிபர மேச னருட்கண் ணாரமு
நாதா தீதமாய் நவிறரும் பொருளை
நாதமாக் காண நவில்கண் டத்தா
னங்கதங் கடக மாழிகண் முதலாத்
துங்கமா நவமணி குயின்றபல் லணியுமார்
மாய வரையை மணலென நூறுந்
தூயமே ருவினற் றுணையெனுந் தோளான்
றிருவுங் கவுத்துவஞ் சேர்ந்து விளங்கவி
னருளு மதாணியு மாரமா திகளு
மிருபுறஞ் சாரா வேகமா முரத்தி
னொருபுறஞ் சாரா வுளமுர முடையா
னுலக மனைத்தையு முதரத்தில் வைத்து
நலமுறக் காக்கு நாரணன் றனைப்போற்
றனதர சிற்குட் சாருயி ரனைத்தையுங்
கனமுறக் காக்குங் கருப்ப முடையான்
சிட்டா ளனைவரு மூமுடன் றிகழவுந்
துட்டா டங்குணந் தூரப் போகவு
மன்னவர் யாவரு மகிழ்ந்ததி சயிக்கவு
நன்னல மொலிக்குநற் கழலணி யடியா
னரசருக் கறிகுறி யாகுமா சுத்தா
னுரந்தனைக் காட்டா வொளியெனும் பொறியா
னுக்க மழியா தருளொடும் விளங்கு
மூக்கமாஞ் சிரசி லொளிர்பிரா ணத்தான்
றனக்கொரு சலனஞ் சாரா நெறியின்
கனத்த சிவச்செயல் கருதிடு மனத்தான்

றன்மனி னிறைந்த சத்துவ குணத்தான்
மன்னரில் வீமனை மதித்திடும் வலியா
னிதியிற் சங்கம் பதுமநீள் வானோர்
பதியிற் கற்பக பாதபங் காம
தேனுவுஞ் சிந்தா மணியினுஞ் சிறந்து
நானிலந் தன்னின் ஞானா சிரியன்
றன்னைக் கொடுத்தல்போற் றரும்பெருங் கொடையான்
பன்னிய வருளு மன்பும் பாச
வொழிவும் பிரமத் துண்மை யுணர்தலும்
வழாது நிறைந்த மன்னுணர் வுடையான்
சுருதி நடாத்துந் தொல்லறி ஞரைப்போன்
மிருதி நடாத்தும் விருப்புள நீதியான்
சமய மனைத்துந் தற்பரன் றனையே
யமர்தரத் துதிக்கு மன்பினின் றுலகு
மனைத்து மகிழ்வுற வாதரிப் பதனான்
மனத்துந் துதிக்கு மன்னிய புகழான்
சீமதி ரணிய கருப்ப யாசி
யேம ரவிகுல முத்து விஜய
ரகுநாத ராம சாமிசே துபதிக்கு
மிகமுளோர் புகழுமி ராணிசே துபதி
பருவத வர்த்தனிப் பங்கயா சனிக்குந்
திருவெனும் புத்திரி யாகுமி ராணி
சேதுப தித்துரை யிராஜ நாச்சியார்
காதலன் முத்து விஜய ரகுநாத
சேதுப தித்துரை சிற்சுக மாமனு
பூதி விளங்கப் புசன்றன னுக
சைய கிரியிற் றங்கிய தமிழ்முனி
செய்ய கமண்டலத் திருந்தசெல் வியைமுனந்
தந்தி முகக்கொடி சாய்க்கநீ ருருவாய்ச்
சந்தனஞ் சங்கந் தரளந் தமனிய
மாதிய வீசு மலையொடு பரந்து
நீதியாஞ் செந்நெல் முதலிய பைங்கூழ்
பலமுத லாகிய சோலைகள் படரப்
புலப்படக் காக்கும் பொன்னிநா டதனிற்
சந்திர காந்தத் தகடுசாந் தந்தோய்
சுந்தர மாகவிண் டோய்ந்துயர் மாளிகை
மலிதிருத் துருத்தி மாநகர் தனில்வா
ழிலகுமுத் தரவே தீச்சுரன் சந்நிதி
தன்னின் மறையவர் சதுமறை யறைய
மன்னரும் வசியரு மரபுட னேதச்

சூத்திரர்க் கப்பொரு ளேய்மையாய் விளங்கப்
பார்த்திருந் தவர்க்கெலாம் பவப்பிணி யகலச்
சமயிக ணெறியெலாந் தட்டழிந் திரிய
வமையும் வன்னுச் சிரமங்க ளகலத்
துவிதம் விசிட்டாத் துவிதம்விட் டோடத்
துவிதமின் றியபொரு ளேய்மையாய்க் காணச்
சங்கரா சாரிய சாமிக ளமைத்த
துங்கமா ரிந்திர பீடத் தொருமுதற்
கரபாத் திரனெனக் காணுஞ் சதாசிவப்
பிரமேந் திரயோகி வரியர் பெருமான்
முத்தி யுலகிற் கரசனாய் முடிவில்
பத்தியுள் ளோர்க்கருள் பண்பின னாகி
யரியா சனத்திருந் தாக்கின சக்கர
மரியாப் பிறவா மாண்புயி ரெய்த
நடாத்து நாளி னடரும் பதத்தை
விடாது பற்றும் விமலதத் தாத்ரய
சேதனர்க் கருளவச் செம்மல்செங் கமலபொற்
பாதர்க் கருளவப் பான்மையோ னுலகவாழ்
மறையவ ராசர் வசியர்சூத் திரருக்
குறைதரும் பொருளெலா மாராய்ந் ததனின்
களங்க மனைத்தையுங் கருவொடு களைந்து
வளம்பெற நிறைந்த மாசிலா மணிபோற்
றிகழ்தரு பிரமமே சேடமென் றுணர்த்தும்
புகழரு ணாசலப் புங்கவர்க் கருளத்
திங்கள்வந் துலவுஞ் சேணுயர் மாளிகை
துங்கவார் துவசத் தோகை விளிக்க
வரம்பைகள் வரவிவ் வரண்மனை மாதர்
பரிந்துப சரித்துப் பண்புடன் றிருவென
வுலவுமேன் மேடையு மொளிர்மணி விளங்கும்
பலமணித் தோரணப் பைந்தா ரரம்பையும்
பூரண கும்பமும் புட்பமா லிகையுந்
தோரண நிரையாய்த் துலங்குமா வணமு
மாதிய வளமலி யமலைவாழ் பிறைசை
யூதிய வுயிர்கட் குளமகிழ் வெய்த
வெமக்கண் பாகிய விந்துவு நதியுஞ்
சமப்பட விளக்குந் தன்மையா னமக்குச்
சிரமெனத் தமனியத் திருமதில் சூழப்
பருப்பத மென்னப் பரந்தகோ புரமுஞ்
சூழுநற் கோயிலே தொல்லைமாக் கயிலையின்

வாழுதற் கிடமென வளர்விசா லாட்சி
தன்னுடன் மகிழ்விசு வேசன் றனமர்
பொன்னுறை பிறையாற் றின்வளர் புங்கவன்
றனக்கவ னருளத் தானனு பவிக்கத்
தினங்குரு பரன்மொழி சிந்தித் ததற்கோர்
சான்று விளங்குஞ் சதுமறை முடிவை
யூன்றி விசாரித் தொளிர்மா வாக்கியத்
ததுநீ யானு யேனும்பதப் பொருளைக்
கதவுத லதனுற் கண்டகூ டத்தன்
பிரமமா யதுவும் பேரா னந்த
வுருவமா யாவு முணர்ந்தது வதுவா
யிலங்கு மனுபவத் தியற்கையுந் தழீஇப்
பலநூற் பொருளின் பான்மையுந் தழீஇக்
குருவாக் கொருமொழி கொண்டத னிலைதழீஇ
யருமையாத் தர்கண்மொழி யனுபவ முந்தழீஇ
யனுபவ ரத்தின கரமெனு நாமம்
புனைந்தரு ளினன்முற் புகலுமா நகரி
னருளிறை நாம மமைந்த
பொருவரு மருணு சலபுங் கவனே.

---

சேலஞ்ஜில்லா, சிவில்கோர்ட்டு வக்கீல்

## அப்பாசுவாமி பிள்ளையவர்கள்

இயற்றிய

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மூவடிவாய் முழுதுமா யல்ல வாகு
முழுமுதலாஞ் சிவத்தியல்பு முழுதுந் தேர்ந்திங்
கோர்வடிவாஞ் சிவப்பிரகா சையன் சொல்வே
தாந்தசூ ளாமணிக்கின் னுரைபு கன்றான்
கோர்வடிவா யெழுந்தருளி யன்பர்க் கெல்லாங்
குலவுமொரு நொடியில்பர ஞான மோனச்
சேவடிவாய்த் திடவளிக்கும் பிறைசை மேவுஞ்
செம்மலரு ணைசலதே சிகனெங் கோனே.

---

இந்நூலுரையாசிரியர் மாணுக்கருள் ஒருவராகிய

## ஈசூர் - சச்சிதாநந்தசுவாமிகள்

இயற்றிய

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சந்தனவெற் புறைமுனிவன் றனைநிகருஞ்
சிவப்பிரகா சைய னேதுஞ்
செந்தமிழ்வே தாந்தசூ ளாமணிக்கின்
னுரைபுகன்றான் சிறிய னேனுட்
பந்தமற வீட்டிமலர்ப் பதஞ்சூட்டி
யொருமொழிப்பா லூட்டி யாண்ட
நந்தலில்சீர்க் குருபரனற் பிறைசையரு
ணசலமெய்ஞ் ஞான வேந்தே.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ. | |
| அகிலகாரண | 90 |
| அங்கிமக | 118 |
| அண்ணனிரு | 131 |
| அதனது | 226 |
| அத்தியா | 64 |
| அந்தவவித் | 149 |
| அப்பாற் | 112 |
| அப்பிரம | 19 |
| அப்பெரும் | 115 |
| அப்பொரு | 131 |
| அருமறை | 21 |
| அருமையெனு | 191 |
| அருவிரா | 88 |
| அவித்தை | 112 |
| அவைகளுப | 195 |
| அவ்வகிலங் | 190 |
| அறியவுண | 42 |
| அறிவுடையோ | 224 |
| அறைதலுறு | 170 |
| அறைந்தநுகர் | 229 |
| அனுபவித்தல் | 144 |
| அனையதொரு | 105 |
| அனையவன | 40 |
| அன்றியள | 201 |
| அன்னமொடு | 151 |
| ஆ. | |
| ஆகமுதலன | 65 |
| ஆங்காரான்மா | 137 |
| ஆதலினாலானந்த | 70 |
| ஆத்தமுடன் | 30 |
| இ. | |
| இகலிலா | 177 |
| இக்கரண | 116 |
| இசைப்பிலது | 159 |
| இச்சையுட | 241 |
| இத்திறத்தீ | 93 |
| இத்திறமிங் | 157 |
| இந்தவுடம் | 198 |
| இந்துவினை | 102 |

| செய்யுள். | பச்சம். |
|---|---|
| இப்பரிசு | 242 |
| இருந்தவகங் | 152 |
| இருமகதத் | 113 |
| இறைவனா | 129 |
| இங்கிலனிற் | 45 |
| ஈ. | |
| ஈங்குமன | 122 |
| ஈசனிருமித | 130 |
| ஈசனொன்றிடு | 99 |
| உ. | |
| உடம்பினை | 31 |
| உண்டிலை | 212 |
| உரைத்தவிரண் | 18 |
| உரைத்தவைதா | 81 |
| உரைத்தவையுட் | 167 |
| உரைப்பரும் | 114 |
| உலகநிலை | 34 |
| உலகவழக் | 240 |
| உலகிறந்த | 248 |
| எ. | |
| எல்லாவாழ் | 220 |
| என்றுமெய் | 250 |
| ஏ. | |
| ஏனையவோ | 193 |
| ஒ. | |
| ஒருமலர்க்கு | 186 |
| ஓ. | |
| ஓங்காராதி | 201 |
| ஓர்வடிவாகி | 92 |
| க. | |
| கங்கையினில் | 172 |
| கடத்தினுக்கு | 197 |
| கடத்தொடு | 188 |
| கடந்துநதி | 163 |
| கடமுதலா | 43 |
| கடாதி | 213 |
| கந்தமுதலா | 121 |
| கருத்தனுமொ | 161 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| கா. | |
| காய்ந்துள | 85 |
| கு. | |
| குதகாரத் | 192 |
| குறிகளோர் | 236 |
| குறையகலு | 208 |
| கூ. | |
| கூறுமிவை | 195 |
| கோ. | |
| கொன்மக | 113 |
| ச. | |
| சங்கமறு | 215 |
| சங்கைநவ | 164 |
| சச்சிதானந்த | 214 |
| சத்துவகுண | 115 |
| சமைதமை | 29 |
| சா. | |
| சாதகர்களா | 36 |
| சாற்றரியசீவ | 83 |
| சாற்றரியசுவே | 209 |
| சாற்றியவச் | 17 |
| சாற்றின்வயி | 121 |
| சி. | |
| சித்திரப்பட | 89 |
| சீ. | |
| சீர்கொண்ட | 5 |
| சீவசேதன | 108 |
| சீவனொன்றிடு | 98 |
| சீவனோடீச | 71 |
| சீவன்முத்தர்க் | 233 |
| சீவபரவிசாரணை | 132 |
| சு. | |
| சுருதிசித்தமா | 126 |
| சுருதியினுளே | 61 |
| சூ. | |
| சூசகனா | 37 |
| சூதகாதிக | 192 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| சூத்திரான்மக | 88 |
| **சே.** | |
| செஞ்ஞானி | 227 |
| செப்பரிய | 199 |
| **சொ.** | |
| சொற்பன | 156 |
| சொற்றவ | 148 |
| **ஞா.** | |
| ஞானநிலை | 219 |
| ஞானரக் | 234 |
| **த.** | |
| தக்கதேசான் | 207 |
| தக்கமா | 216 |
| தடத்தினுயர் | 232 |
| தத்துவஞானத்தி | 222 |
| தத்துவஞானத்தி | 244 |
| தருக்கவனுமா | 200 |
| தருணமாது | 4 |
| தற்பதத்தினு | 171 |
| தற்பதவாச் | 176 |
| **தி.** | |
| திருந்திய | 59 |
| **தீ.** | |
| தீவிரமங் | 134 |
| **து** | |
| தும்மலுட | 120 |
| துரியநிலை | 162 |
| **தூ.** | |
| தூயதத்தொ | 182 |
| **தெ.** | |
| தெரித்தகாரி | 124 |
| தெரிவரிய | 237 |
| **ந.** | |
| நடுக்கமறு | 155 |
| **நா.** | |
| நானரிப்பவ | 39 |
| **நி.** | |
| நித்தியமான் | 28 |
| நியமசத்தி | 96 |
| நிரவயவ | 60 |
| நின்றிதயந்த | 119 |
| **நீ.** | |
| நீலகுணவிசே | 153 |
| நீங்கியவிகா | 95 |
| நீர்விழுந் | 87 |
| **நெ.** | |
| நெருப்பினெ | 136 |
| **ப.** | |
| பகர்ந்தவுயி | 204 |
| பகற்பொழு | 45 |
| பஞ்சபூதமு | 142 |
| பந்தமவை | 206 |
| பரமமாஞா | 226 |
| பற்றியவான் | 135 |
| **பி.** | |
| பின்னமொடு | 106 |
| **பு.** | |
| புகலுலகா | 52 |
| புத்தியிந்திரியங் | 117 |
| புலனில்கண | 110 |
| புன்னெறி | 160 |
| **பெ.** | |
| பெருந்தூல | 142 |
| பெற்றவுயர் | 228 |
| பெற்றவொரு | 84 |
| **பொ.** | |
| பொய்ப்பொருள் | 128 |
| பொய்யாகி | 109 |
| **போ.** | |
| போற்றிறை | 95 |
| **ம.** | |
| மடிவிடயா | 204 |
| மண்ணுலகில் | 243 |
| மதித்தன் | 67 |
| மருவலுறு | 210 |
| மறப்பகலு | 238 |
| மன்றசுழுத்தி | 149 |
| **மா.** | |
| மாதுமுதல் | 74 |
| மாயைவரு | 111 |
| **மி.** | |
| மிகுமரப் | 97 |
| மித்தையெனு | 217 |
| **மு.** | |
| முத்திவிரு | 252 |
| முற்றலுறு | 223 |
| முன்னமொழி | 173 |
| **மூ.** | |
| மூடமொடு | 32 |
| **மே.** | |
| மேய்ந்துதிரி | 143 |
| **மை.** | |
| மைந்தர்முத | 137 |
| **வ.** | |
| வடிவொடு | 100 |
| வந்தணை | 239 |
| வந்தமய | 231 |
| வந்துசிறு | 222 |
| **வா.** | |
| வாய்த்தநூன் | 23 |
| வாதாராயணன் | 245 |
| **வி.** | |
| விடயங்க | 230 |
| விடயமது | 26 |
| விண்ணின் | 107 |
| விரிஞ்சனே | 91 |
| விரிந்துபட | 1[illegible]9 |
| விரிந்தவிதி | 165 |
| விரியுமுல | 75 |
| விருத்தமறு | 174 |
| விருத்திபரி | 126 |
| விலங்கு | 146 |
| விளங்குறு | 102 |
| வினையிரண்டு | 253 |
| **வெ.** | |
| வெப்பினேனு | 158 |
| வெம்மை | 68 |
| வெயிலினிடை | 154 |
| **வே.** | |
| வேண்டும்வயி | 206 |
| வேதமுத | 255 |
| வேதமொரு | 8 |
| வேதவியா | 246 |


செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.

உ

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 18 | சூளாமனி | சூளாமணி |
| 7 | 13 | எனவும் | எனவுங்கூறுதலானும் |
| ௸ | 18 | எனவும் | என்பதனாலும் |
| 7 | 30 | என்தற் | என்றதற் |
| 11 | 27 | சமிஞ்சை | ச'ிஞ்ஞை |
| 12 | 32 | கொள் | கொள்க |
| 14 | 2 | சாதாஸ்தி | ஸ்யாதஸ்தி |
| ௸ | 2 | சாதாநாஸ்தி | ஸ்யாந்நாஸ்தி |
| 16 | 19 | வேதந்திக்ள் | வேதாந்திகள் |
| ௸ | 35 | றின்றி | ன்றி |
| 18 | 18 | மாதாந்தரம் | மதாந்தரம் |
| 21 | 11 | ளளைத்து | ளனைத்து |
| 23 | 26 | பிரதிஞ்சை | பிரதிஞ்ஞை |
| 31 | 18 | என்னும்மைகள் | எண்ணும்மைகள் |
| 41 | 5 | தமதபயஸ்தத்தை | தமதபயாஸ்தத்தை |
| 43 | 23 | விஸ்மானை | விஸ்மரணை |
| 47 | 5 | பெறிகளை | பொறிகளை |
| 48 | 12 | சித்திருந்தும் | சித்தித்திருந்தும் |
| 49 | 35 | வெனவென்னும் | வென்னும் |
| 51 | 35 | சுத்தானுவ | சுத்தானுபவ |
| ௸ | 37 | ஸ்பாரணமே | ஸ்புரணமே |
| 53 | 3 | அறிகெரித | அறிகதெரி |
| 55 | 41 | இன் | இது |
| ௸ | 42 | பேசுகின்ற | பேசுகின்றது. |
| 63 | 9 | மராத்தத்தா | மார்த்தத்தா |
| 64 | 2 | பாம | பரம் |
| 65 | 34 | அநி | அறி |
| 68 | 17 | பரிச்சின | பரிச்சின்ன |
| 69 | 33 | சிதா | சிதாந |
| 84 | 6 | தைசஸ | தைசத |
| 85 | 13 | வியட்டிவபி | வியட்டியபி |
| 89 | 12 | சகத்யோணி | சகத்யோனி |
| 93 | 30 | கத்திருவமு | கத்திருத்துவமு |
| 39 | 20 | காரணமுபதிகள் | காரணமாமுபாதிகன் |
| ௸ | 29 | திரு | திருட் |
| 91 | 2 | அபஞ்சி | அபஞ்சீ |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 97 | 23 | சீவேசுரார் | சீவேசுரர் |
| 98 | 23 | என்றே | என்ற |
| 102 | 1 | திரிஸ்ய | திருசிய |
| 108 | 19 | மித்தை | மித்தி |
| 116 | 11 | தியு | பாதியு |
| 117 | 24 | காந்தம் | கந்தம் |
| 118 | 5 | இச்செயுளில் | இச்செய்யுளில் |
| ஷை | 39 | பதினென் | பதினென்றெ |
| 120 | 39 | தெழில் | தொழில் |
| 121 | 30 | நெசிழ்ச்சி | நெகிழ்ச்சி |
| 127 | 29 | கயிறரவு | கயிற்றரவு |
| 128 | 14 | நசிக்கப்படட | நசிச்கப்பட்ட |
| 131 | 28 | ச்சீவசிருஷ்டி | ஈசுவரசிருஷ்டி |
| 133 | 40 | விசரரிக்கு | விசாரிக்கு |
| 134 | 37 | வெளிப்படுத்தலின் | வெளிப்படுதலின் |
| 136 | 19 | இரிப்பபரும் | இரிப்பரும் |
| 138 | 38 | சத தியமாக | சத்தியமாக |
| 147 | 23 | விவய | வியவ |
| 140 | 8 | உண்ட | உண்டா |
| 144 | 30 | விருத்தினு | விருத்தியினு |
| 145 | 16 | சிந்தப்பதே | சிந்திப்பதே |
| 149 | 17 | றும | றும் |
| 150 | 11 | யதொருத்த | யாதொருத்த |
| 151 | 2 | அமனுத்மா | அனுத்மா |
| ஷை | 2 | இமிவற்றை | இவற்றை |
| 153 | 19 | உறபலம் | உற்பலம் |
| 154 | 3 | வியடங்களை | விடயங்களை |
| 160 | 9 | திகப்பை | திகைப்பை |
| 162 | 35 | தினல் | வினல் |
| 163 | 2 | அதீன | அதீத |
| ஷை | 13 | கான்பது | காண்பது |
| 166 | 11 | அயமாதமா | அயமாத்மா |
| 167 | 38 | யுய்ந் | யுய்த் |
| 168 | 26 | பரோட்சதுவ | பரோட்சத்துவ |
| 171 | 35 | பெலிவை | பொலிவை |
| 172 | 3 | பிரகாசம | பிரகாசம் |
| ஷை | 13-16 | விலக்கனை | விலக்கணே |
| 173 | 12 | உணர்த்திடுக | உணர்ந்திடுக |
| ஷை | 20 | வாச்சயார்த்த | வாச்சியார்த்த |
| 176 | 16 | உண்ர்த்தும் | உணர்த்தும் |
| 178 | 23 | அக்கூடஸ்தனே | இக்கூடஸ்தனே |
| 183 | 32 | அவச்சேத | அவச்சேதக |
| ஷை | 36 | பலப்பிராப்தி | பலப்பிராப்தி |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 185 | 10 | குநதிக்கு | குநதுக்கு |
| 192 | 27 | குதசாதி | சூதகாதி |
| 189 | 37 | நயக் | நயத் |
| 192 | 8 | அரிதற் | அறிதற் |
| ஷை | 21 | கிருத்தியா | ங்தித்தியா |
| 194 | 11 | இருட்டின்சு | இருட்டின்க |
| 196 | 14 | ளுக்கதித | ளுக்கதீத |
| 203 | 4 | தரிசிக் | தரிசித் |
| 207 | 28 | உபாதி | உபரதி |
| 211 | 20 | ஆநந்தத்தி | ஆநந்தத்தில் |
| 219 | 23 | ஞாளியினிடத்தில் | ஞானியினிடத்தில் |
| 221 | 32 | லுண்டரன | லுண்டான |
| 222 | 28 | மன்ன | மனன |
| 223 | 5 | பாமாணு | பரமாணு |
| 225 | 30 | ஞாஞேரய | ஞாஞேதய |
| 231 | 24 | மென்னும | மென்னும் |
| 244 | 14 | மாத்தித்தில் | மாத்திரத்தில் |
| 246 | 9 | நிஷ்காமியம | நிஷ்காமிய |
| ஷை | 12 | யனுபவிக்க | யநுபவிக்க |
| 247 | 16 | ளகிய | ளாகிய |
| 250 | 2 | உலாகா | உலகா |
| 254 | 28 | ஐக்கமான | ஐக்கியமான |
| 256 | 15 | சந்தோஷத்து | சந்தோஷித்து |

சிவமயம்.

# வேதாந்த சூளாமணி

## மூலமுமுரையும்.

### உரைப்பாயிரம்.

விநாயகஸ்துதி.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நாதாந்தப் பேரொளியாய் நவையற் றெங்கு
நண்ணுபரி பூரணமாய் நடுவாய் நின்ற
போதாந்தம் பெற்றவருண் மதத்தை வீசும்
பொற்களிற்றி னடிவழுத்திப் புலன்க டம்மின்
பேதாந்த மகற்றிநிர திசயா நந்தப்
பெற்றியுல கடைந்துய்யப் பெருமை யோங்கும்
வேதாந்த மரபினிலை விளக்கு மொண்வே
தாந்தசூ ளாமணியை விரித்தல் செய்வாம்.

இதுவுமது.

கலிவிருத்தம்.

மோன பூரண வாரியின் மூழ்குமெய்ஞ்
ஞான யோகிய ருள்ளமுந் தில்லையு
மான கற்பகத் தானை பதாம்புயத்
தேனை யுண்டுரை செப்புது மொப்பவே.

சிவஸ்துதி.

வெண்செந்துறை.

சிவமெனத் துதிசெயப்
பவம்பொடி படுமே.

### சபாபதி ஸ்துதி.

கட்டளைக்கலித்துறை.

திருவளர் தில்லைச்சிற் றம்பல மேவிய சிற்சுடரை
மருவள ராநந்த மஞ்சரி சூட்டி வணங்குதுமால்
கருவளர் துன்பங் கடக்கவே தாந்தசூ ளாமணிக்கட்
டெருள்வள ரப்பொருள் பூரித் துலகுய்யச் செப்புதற்கே.

இதுவுமது.

பொன்னம் பலவனங் கம்முகங் கண்முகம் புண்டரிகப்
பொன்னம் பலவன மாயமைந் தாலெனப் பொங்குதில்லைப்
பொன்னம் பலவன மோடு சடாடவிப் பொற்புமிகும்
பொன்னம் பலவனென் றன்னுள மாயுரை பூரிப்பனே.

### அருளிறை வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சத்தியவிந் திரபீடத் தலைமையாங் கரபாத்திர சத்தா மாத்திர
வித்தகமூ தீனமர பினிலகு மடிகடமை விடாத மோன
சித்தகுண சிவோகமாய்த் திருநாகைப் பதியுளெழு சிவக்குன் றாய
நித்தியவரு ணாசலதே சிகனையுளத் திருத்தியுரை நிறுத்து வாமால்.

அவையடக்கம்.

வேதமுப நிடதமுத லாகவரு தொன்னூலின் விளங்கு ஞான, நீதமர புணரவே தாந்தசூ ளாமணிக்கு நிலையின் றேங்க, வோதுமுரை நவமணியைக் குறவர்புனை யினுமெள்ளா துலகின் வேந்தர், சோதிமுடிக் கணிவதற்கா சிப்பதுபோற் றெல்லறிஞர் சூழு வாரால்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# * வேதாந்த சூளாமணி

## மூலமும் உரையும்.

## சிறப்புப்பாயிரம்.

### அவதாரிகை.

வடமொழியி லமைந் தாழ்ந்திலங்குகின்ற மாட்சிமைகொண்ட வேதங்களின் முடியின்கணுள்ள மகா வாக்கியார்த்தங்களை விசாரித்து அதனால் ஆன்மாக்களுக்குத் தமதாநந்தபோதம் வெளிப்படுமாறு பகவத்வடிவ ஸ்ரீ வியாசபகவானா லருளிச்செய்யப்பட்டுள்ள உத்தரமீமாஞ்சை யென்னும் பிரமகாண்டத்தில் பிரமான்ம ஐக்கியமான அத்துவித ஸ்வரூபம் சூத்திரரூபத்தினால் வெளியிடப்பட்டும், அங்ஙனம் வெளியிடப்பட்ட அதுவும் கற்றுவல்ல பண்டிதர்க்கே யன்றி யேனையோர்க்குப் பயன்படா திருக்கின்றமையின், அது கருதி வெளியானபாஷியங்கள்:—கருணையே வடிவாய ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளென்னும் அபிதானங்கொண்டெழுந்தருளி விளங்கிய குரவனால் அச்சூத்திரார்த்த மெளிதிற்றோன்ற அருளிச்செய்யப்பட்ட அத்துவித பாஷியமும், அதன் அருத்தம் நன்கு வெளிப்படச்செய்தவிவரண வியாக்கியானமுமாம். இவையும் அத்தியயநஞ் செய்யும் ஆரிய பாஷையின் பாண்டித்திய முடையோர்க்கே யன்றி, அங்ஙனங்கூடாத செந்தமிழாளர்க்குப் பயன்படா திருக்கின்றமையின் அதுநோக்கி, அக்கருணையே மானிடச்சட்டை சாத்திச் சிவப்பிரகாச ஸ்வாமிக ளென்னு நாமதேயத்தோடு முதித்து, அப்பாஷியார்த்தந் தோன்றும்வகை நிஜகுணயோகி யென்னும் பெரியார் அருளிச்செய்த விவேகசிந்தாமணியின் வேதாந்த பரிச்சேதத்தைத் தென்மொழியிற் பத்திய வடிவத்திற் றிருக்குத் திரிசியமென்னு மிரண்டு

---

* வேதத்தினிறுதியிலுள்ள உபநிடதம் வேதாந்த மெனப்படும். அதன் பொருளை விரித்துஞ் சுருக்கியும் கூறும் நூல்களும் உபசாரவழக்கால் வேதாந்த மெனப்படுகின்றன. ஒன்றன்றன்மையை மற்றொன்றன் மேலேற்றிக்கூறுதல் உபசார வழக்கெனப்படும். சூளாமணியென்பது தெய்வலோகத்துள்ள மணிகளுள் ஒன்று. அதன் பொருள் முடிமணியென்பது. எனவே, வேதாந்த சூளாமணி யென்பது வேதாந்தமாகிய முடிமணி யென்றும்.

விவேகமாகக் கூறத்தொடங்கிய வேதாந்தசூளாமணி யென்னு மிந்நூல், இனிது முடிதற்பொருட்டுச் சிவப்பிரகாச ஸ்வாமிகள் ஆன்றோராசாரம் பற்றி, இதன் அந்தரங்கமான * திருக்கு ஸ்வரூபத்தை விநாயகமூர்த்தி யாகத் துதிக்கின்றார்.

### கலிவிருத்தம்.

தருணமா துமைமுகத் தாம ரைக்கெழு
மருணஞ் மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.

### (இதன் பதப்பொருள்.)

தருணமாது - (சிவத்தைவிட்டு நீங்காமற் சதா) † யுவதியாக விளங்குகின்ற, உமை - பார்வதியினது, முகத்தாமரைக்கு - திருமுகத்தாமரை விகசிதமாதற்கு, எழும் - (தாமரை மலர்தற்கு) எழாநின்ற, அருணனுமென - சூரியனு மென்றியம்பும்படி, உதித்து - உதயமாய், அடியர்பாற்புரி - அடியார்களிடத்தில் வைக்கும், கருணை - அருளையே, மாமதமென - மாட்சிமையான மதமென்ன, காட்டும் - காட்டாநின்ற, மாமுகன் - யானை முகமுடைய விநாயகமூர்த்தியினது, சரணவாரிசமலர் - பாதாம்புயங்களை, தலையிற் கொள்ளுவாம் - எமது சிரத்திலணிவாம்,—என்றவாறு.

முகத்தைத் தாமரையாகவும் விநாயகரைச் சூரியனாகவும் உருவகித்தார்.

சத்தி சத்தனைத்தவிர இன்மையாற் சிவமும், சூரியனென்றமையால் விகசிக்குந் தன்மையும் தாமரையும், தலையிற் கொள்ளுவாம் என்றமையால் எமதென்பதும் வருவிக்கப்பட்டன.

### இதன் பதசாரம்.

பிரமசுபாவமான சிற்சத்தி என்றும் ஒருதன்மைத்தாக விளங்குகின்றதென்பார் 'தருணமாது' எனவும், அச்சித்துப் பிரமப்பிரகாசமாய் விளங்குதற் காநந்தோதயமாயிற் றென்பார் 'உமைமுகத் தாமரைக்கெழு மருணனு மெனவுதித்து' எனவும், தமது ஸ்வரூபமான வாநந்தசாகரத்திற் றதும்புங் கருணாமிர்தத்தையே யடியவர்க் கூட்டுவிக்கும் வடிவமுள்ளதென்பார் 'அடியர் பாற்புரி கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்' எனவும், அவ்வாநந்தானுபவ மறிவினிடத் தமைந்திருக்க வேண்டுமென்பார் 'சரணவாரிசமலர் தலையிற் கொள்ளுவாம்' எனவுங் கூறினார்.

---

* திருக்கு (அறிவு) வடிவாயுள்ளவர் விநாயகரென்பது சிவஞான வள்ளலார் "ஆகமெனுங் கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிக்கே யன்பு செய்வாம்" என்று கூறியதாலு மறிக.

† யுவதி - யௌவனமாது; அஃதாவது பதினாறுவயதுப்பெண்.

மாமுகனென்பது நிர்த்தேசம்; சாணவாரிச மென்பது வாழ்த்து; தலை யிற் கொள்ளுவாமென்பது வணக்கம். எனவே இம்மூன்றிலக்கணங்களை யுடையது மங்களாசரணையாயிற்று. இவற்றை வடநூலார் * மங்களாசரணை யெனவுந் தென்னூலார் கடவுள் வாழ்த்தெனவுங் கூறுவர். இங்ஙனம் வணங்குத னூலாசிரிய ரியாவர்க்கு முரித்தென்பதைப் பல நூல்களானுங் காண்க. சிவம், சத்தி, கணேச னென்றதனாற் சச்சிதாநந்த ஸ்வரூபமென வனுபவங் கூறியதாயிற்று.

வினா.—இந்நூலி னபிப்பிராய மத்துவிதமாய் விளங்கத் துவிதமாகத் துதித்த தென்னை.

விடை.—துவிதமாகத் தோற்றிய ஜீவேசுவரர்களைக் காண்பித்து அவ ற்றினிறைந்திருக்குங் கூடஸ்தப்பிரம ஐக்கியமே ஆன்ம வஸ்துவெனக் கண்டு அவ்விரண்டையு நீக்கலே அத்துவித மாதலாலென்க

## இதன் † தாற்பரியம்.

சச்சிதாநந்த சுபாவமான ஆன்ம சொரூபத்தை விநாயக மூர்த்தியாக வுருவகித் ததனோ டைக்கியமாகு நிமித்தந் திரிகரண சுத்தியாக வணங்கின தாம். (க)

## அ - கை.

முன் கடவுள் வணக்கங் கூறி மேற்சிறப்புப்பாயிரங் கூறுவான் தொடங்கி யிச்செய்யுளிற் சிவப்பிரகாசத்தாற் ருமியற்றப்புகும் நூலினது பெயரும் அதன் வரலாறும் உணர்த்துகின்றார்.

## எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

‡ சீர்கொண்ட வருமறையின் முடிமணியைத் தெய்வ
சிகாமணியை யடியவர்தங் கண்மணியை மாயைப்
பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணியை முக்கட்
பெருமணியை யகத்தினுக்கோர் விளக்காக விருத்தி
யேர்கொண்ட விவேகசிந்தா மணியெனுநூ லதனு
ளெடுத்தியம்பும் வேதாந்தப் பரிச்சேதப் பொருளை
நேர்கொண்ட தமிழ்விருத்த யாப்பதனாற் றெரிய
நிகழ்த்துவன்வே தாந்தசூ ளாமணியென் றொன்றே.

---

* மங்களாசரணத்தின் தன்மையை இந்நூலின் எட்டாவது செய்யு ளிற் கண்டுகொள்க.

† "கவிப்பொருள் சுருக்கிக் காட்டல்தாற் பரியம்".

‡ இது தற்சிறப்புப்பாயிரம்; என்னை? "தெய்வ வணக்கமுஞ் செயப் படுபொருளு, மெய்த வுரைப்பது தற்சிறப்பாகும்" என்றாராகலின்.

(இ - ள்.) சீர்கொண்ட - புகழ் நிறைந்த, அருமறையின் - அறிதற்கரிய வேதங்களின், முடிமணியை - சிரத்தின் விளங்கு மிரத்தினத்தை, தெய்வசிகாமணியை - (மூவர் முதலிய) தேவர்கட்கு முடியாக விளங்கு மிரத்தினத்தை, அடியவர்தங் கண்மணியை - அடியார்களின் (அகக்) கண்மணியாக விளங்கு மிரத்தினத்தை, மாயைப்பேர்கொண்டே விருள் - மாயையென நாமந் தரித்த அஞ்ஞானந்தகாரத்தை, இரிக்கும் - கெடுக்கும், தினமணியை - (ஞான) சூரியனாக விளங்கு மிரத்தினத்தை, முக்கட் பெருமணியை - மூன்று கண்களுடன் மாட்சிமையாக விளங்குஞ் சிவரத்தினத்தை, அகத்தினுக்கு - எனதுளத்திற்கு, ஓர் விளக்காக விருத்தி - ஒப்பற்ற தீபமாகவைத்து, ஏர்கொண்ட - (மெய்) அழகுவிளங்கும், விவேக சிந்தாமணியெனும் - விவேகசிந்தாமணி யென்கின்ற, நூலதனுள் - (பல சருக்கங்களோடுங் கூடிய)நூலின்கண், எடுத்தியம்பும் - (சாரமாக) வெடுத்துக்கூறும்,வேதாந்தப் பரிச்சேதப்பொருளை-வேதாந்தபரிச்சேதமென்னுஞ் சருக்கத்தி னருத்தத்தை, நேர்கொண்ட - முரணுருதமைந்த,தமிழ் - தமிழ்மொழியின், விருத்த யாப்பதனல் - விருத்தப்பாவினல், தெரிய - (யாவருக்கு மெளிதில்)விளங்க, வேதாந்த சூளாமணியென்றொன்று - வேதாந்த சூளாமணி யென்றொரு நாமந்தரித்து, நிகழ்த்துவன் - (யான்) இயம்புவன், எ - று.

ஏகாரம் - ஈற்றசை. மணியென்ற * உருவகம். சூடாமணியென்னும் ஆரியமொழி டகர ளகர வேற்றுமையின்றிச் சூளாமணியென வந்தது. சூடை - சிகை. எனவே சூடாமணி சிகாமணியெனக்கொள்க. வேதாந்த சூளாமணியெனவே, நான்கு வேதங்களின் முடியின்கணுள்ள மகாவாக்கியத்தின்கண் விளங்கும் அத்துவித சுயம்பிரகாச சொரூபம் இதன் ஞான வாயிலாக அடையும் பயனெனக் கொள்க. மாயையை இருளென்றமையின் தினமணியை ஞான சூரியனெனவும் நான்கிடத்து மணியென்றமையின் மணியெனவும் கூறினும்.

(ப - ம்.) பிரமான்ம ஐக்கிய அத்துவித சொரூபம் வேதமுடியின்கணுள்ள மகாவாக்கியத்திற் சொற்பிரகாசமாக விளங்குகின்ற தென்பார் 'சீர்கொண்ட வருமறையின் முடிமணி' எனவும், இது தேவர்க்கெல்லா மகா தேவாகிய சின்மாத்திரமாய் விளங்குகின்றதென்பார் 'தெய்வ சிகாமணி' எனவும், இஃதெவ்விடத்தும் பூரணமா யிருந்தும் அடியார்களிடத்தில் விசேடமாக விளங்குகின்ற தென்பார் 'அடியவர்தங் கண்மணி' எனவும், இஃதென்றும் அறியாமையின்றி அறிவாகவே விளங்குகின்ற தென்பார் 'மாயைப் பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணி' எனவும், இது சச்சிதாநந்தவடிவ சிவமாய் விளங்குகின்றதென்பார் 'முக்கட் பெருமணி' எனவும், இவைகள் என்றுந் தானாக விளங்கிய ஆநந்தப் பிரகாசமென்பார்

---

* உவமானத்தையும் உவமேயத்தையும் வேற்றுமை யொழிவித்து ஒன்றென்னு முள்ளுறை தோன்றக் கூறுவது உருவகமாம்.

'அகத்தினுக்கோர் விளக்காக விருத்தி' எனவும், இவ்வனுபவத்தைக் கரதலாமலகம்போல விளக்கும் மகாவாக்கியார்த்தங்களை வெளிப்படையாகத் தெரிவிப்பே னென்பார் 'வேதாந்தப் பரிச்சேதப் பொருளை ... தெரிய நிகழ்த்துவன்' எனவுங் கூறினர்.

இதற்குதாரணம்: சசிவன்னபோதம் "மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந், தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே" என்பதிற் காண்க. 'அருமறையின் முடிமணி' என்றதற் குதாரணம்: பகவற்கீதை "உன்னு நான்மறை மால்வரை யுச்சிமேன், மன்னுமேக முழக்கிய வாக்கினைப், பன்னு சீர்ப்பர மார்த்த தரிசன, மென்னு நாமத் திதனை யியம்புவாம்" எனவும், இன்னும் சிதம்பரபுராணம் "ஆரணங்கள் முடிந்தபதத் தாநந்தவொளி" எனவும், இன்னும் "மறைமுடி வதனில் விளங்கிடு மொளி" எனவும், "அருமறையின் சிரப்பொருள்" எனவும் இன்னும் பல நூல்களினுனுங் காண்க. 'தெய்வசிகாமணி' என்றதற் குதாரணம்: ஞானவாசிட்டம் "தீவினை யெலாமறுத்து மங்கல மெலாமுதவுந் தேவபூசை, யாவதெனக் கேட்டலுமே யருள்செய்வான் றெய்வந்தா னியாதென்றோதிற், கேவலமே யரியல்ல வரனல்ல பூதவுடல் கிடைத்ததல்ல, வோவுமன மன்றடியு முடியுமிலாச் செயப்படா வுணர்வே தெய்வம்" எனவும் இன்னும் பல நூல்களினுனுங் காண்க. 'அடியவர்தங் கண்மணி' என்றதற் குதாரணம்: ஞானவாசிட்டம் "முழுது சத்தியுமாய்ப் புரணமா யென்று முடிவறு பிரமமா வதுதான், பழுதின் ஞானிகடம் மனமலா தில்லைப் பரமமா மிதிலிலா தில்லை" எனவும், மோகவதைப்பரணி "அகமுளரி தனி னுதவு மகிலவுயி ரகமுளரி யகம்" எனவும், திருவாசகம் "உடையா ளுன்றன் னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி, யடியே னடுவு ளிருவீரு மிருப்பதானல்" எனவும் இன்னும் பல நூல்களினுனுங் காண்க. 'மாயைப் பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணி' என்றதற் குதாரணம்: ஞானவாசிட்டம் "மோக வற்சனு பிக்கொடி முளைத்தெழு மூலஞ், சோக மாசுணமிருந்தர சாள்வதோர் சூழ, லாக மேமுத வியானெனக் காணுமஞ் ஞான, மேக மாகிய பராபரந் தோன்றின விறக்கும்" எனவும் இன்னும் பல நூல்களினுனுங் காண்க. 'முக்கட் பெருமணி' என்தற் குதாரணம்: ஞானவாசிட்டம் "அயனெடுமால் சங்கரனுஞ் சதாசிவனு மிந்திரனு மருக்கன் றானும், வியனிலுப சாந்தராய் வேலையினி லுபாதியெலாம் விட்டு நீங்கிப், பயனில்சக மென்கின்ற பற்றகன்று சின்மயமாம் பரமரூப, முயர்விகற்ப மிலாவறிவா யெங்குநிறை சிவமாகி யொன்றாய் நிற்கும்" எனவும், "முச்சுடராகி யொன்றாய் முடிந்ததோர் சோதிபாதம்" எனவும் இன்னும் பல நூல்களினுனுங் காண்க.

வினு.—சாட்சியான எனதறிவைக்கொண் டறிவிக்கின்றேனெனது, சான்று சாக்கிய ரகிதமான அவாங்மனோகோசர சுத்த சைதன்னிய சுயம்பிரகாசத்தைக்கொண் டறிவிப்பே னென்ற தென்னையெனின்?

விடை:—உலகத்தினுள்ள வோர்பொருளைத் தெரிவிப்பதற்கு நட்சத்திரம், சந்திரன், அக்கினி, சூரியன் இவைகளொன்றுக் கொன்று விசேடமாயினும் அவை உபாதிநீங்கிய விடத்தொருமையான பிரகாசமா யெங்ஙனமுண்மையைத்தெரிவிக்குமோ அங்ஙனங் கூடஸ்தப்பிரம ஐக்கியாத்துவித சொப்பிரகாசமே யுண்மையைத் தெரிவிக்கு மாதலினென்க.

(நா - ம்.) இந்நூ * லுபக்கிரமத்திற்றானே வஸ்து நிச்சயமு மஃதே தானென்பதுந் தானே யாவு மென்பதுந் தோன்றக் குறிப்பாக விக்கவியினு லறிவித்ததாம். (உ)

அ - கை.

முற்கூறிய வேதாந்த மிஃதெனத் தெரிவிப்பான்கருதி யிருக்கு முதற் பதினான்கு வித்தைகளி லொன்றான மீமாஞ்சையிற் பூருவ முத்தர மென்னு மங்கங்களுக்குச் சைமினியும் வியாசபகவானும் சூத்திரரூபமாகக் கூறிய கருமகாண்டந் தேவதாகாண்டம் பிரமகாண்ட மென்றவைகட்கு வியாக்கியானி வியாக்கியானங்களை மரபோடு கூறத்தொடங்கி யிச்செய்யுளில் வேதமுதலியவற்றி னுமத்தையுங் கன்மகாண்டப் பிரதிபாதிகரையு முணர்த்துகின்றார்.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய
மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா
வோதலுறும் வித்தைகளா மிவற்றுண்மீ மாஞ்சை
யுயர்ந்ததா யைந்நான்கத் தியாயமா யருத்த
பேதமுற விருகூறு மவற்றுண் முதற் கூறே
பிறங்குமருட் சைமினிசூத் திரரூப மாகிப்
போதுமீ ராறத்தி யாயமாய்க் கருமப்
பொருளுணர்த்திப் பூருவமீ மாஞ்சையெனப் படுமால்.

இ - ள். வேதமொருநான்கும் – நான்கு வேதங்களும், ஆறங்கமும் – ஆறங்கங்களும், நன்னியாயம் – நல்ல நியாயமும், மீமாஞ்சையோடு – மீமாஞ்சையும், மிருதி - (பத்தொன்பது) ஸ்மிருதிகளும், புராணமும் – (பதினெண்) புராணங்களும் (என), ஈரேழா – பதினான்காக, ஓதலுறும் வித்தைகளாம் – சொல்லப்படும்வித்தைகளாகும், இவற்றுள் – இவைகளுக்குள்ளே, மீமாஞ்சை – மீமாஞ்சையெனும் வித்தையானது, உயர்ந்ததாய் – (பொருளால்) மேம்பாடுள்ளதாய், ஐந்நான்கத்தியாயமாய் – இருபதத்தியாயமாகி, அருத்தபேதமுற – பொருட்பேத மடைதலினால், இருகூறும் – இரண்டுவிதமாகச் சொல்லப்படும், அவற்றுள் – அவைகளுக்குள்ளே, முதற்கூறே – முதற்பாகமே, பிறங்குமருள் – கிருபைவிளங்கிய, சைமினி – சைமினியினாற்செய்யப்பட்டு, சூத்திரரூபமாகிப்போதும் – சூத்திர வடிவ

* உபக்கிரமம் – ஆரம்பம்.

Tiruvadamarudur

மாகி வருகின்ற, ஈராறத்தியாயமாய் - பன்னிரண் டத்தியாயமாய், கருமப் பொருளுணர்த்தி - (யாகமுதலிய) கருமார்த்தங்களைத் தெரிவித்து, பூருவ மீமாஞ்சை யெனப்படும் - (லோக வேதாதிகரண முதலான சகஸ்திர நியாயத்தையுடைய) பூருவ மீமாஞ்சையெனப் பெயர்கொள்ளும், எ - று.

ஆல் - அசை.

## சதுர்வேதம்.

நான்கு வேதங்களாவன:—இருக்குவேதம், எசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேத மென்பனவாம். இவை சுவயம்புவென்றும், ஈச்சுரனாற் சொல்லப்பட்டவையென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள் இருக்குவேதம் இருபத்தொருபேதம், எசுர்வேதம் நூற்றொருபேதம், சாமவேதம் சகஸ்திரபேதம், அதர்வணவேதம் நவபேதமாம்.

## வேதவாதசதுஷ்டயம்.

அவ்வேதங்கள் விதிவாதம், அர்த்தவாதம், மந்திரவாதம், நாமதேயமென நான்கு பேதத்தால் சகல தர்மங்களையுஞ்சொல்லும். அவற்றுள் இராசாக்கினையைப்போல மனிதரை நிஷேத கர்மஞ்செய்யாமல் திருப்பிச் சுகர்மஞ்செய்ய வேண்டுமென்று விதிப்பது விதிவாதம், படர்களைப்போல வேதார்த்தத்தின் மகிமையைத் துதிப்பது அர்த்தவாதம், ஆசாரியனைப் போலச் செய்யத்தக்கவைகளைக் காட்டுவது மந்திரவாதம், பிதாவைப்போல யாகாதிகளுக்குப் பெயரிடுவது நாமதேயம். இந்நான்கும் கன்மகாண்டப் பிரதிபாதகமாம்.

## உபநிஷத்து.

அவ்வேதத்தில் சீருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, சுரசபிந்து, பிரமசுபாலம், தேஜோபிந்து, வாஜசநேயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாச்சியாயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பராக்கிரமம், புரோக்ஷ்யம், முத்கலம், முண்டகம், மைத்திராயணீயம் என்னும் முப்பத்திரண்டு உபநிஷத்துக்களும் ஞானங்கமான விபூதி ருத்திராக்ஷாதிகளையும், பிரம ஞானாதிகளையும் விவகரிக்கும்.

## உபவேதம்.

அவ்வேதத்துக்கு ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதமென உபவேதம் நான்காம். அவற்றுள் ஆயுள்வேதம்: வியாதிநிதானம், வியாதிச்சின்னம், மந்திரௌஷதாதி சிகிச்சை என்பவற்றால் ஆயுராரோக்கியாதிகளைக் காட்டுவது; அர்த்தவேதம்: தக்ஷிணை, ஆச்சியம், சரு (அவி) முதலான உபகரணங்களால் தர்மாதி சதுஷ்டயத்துக்குச் சாதனமாம்; தனுர்வேதம்: சத்துரு க்ஷயார்த்தமான மந்திராஸ்திரப்

பிரயோகங்களைக் கற்பிப்பது; காந்தருவ வேதம்: சாம வேதாதிகளின் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் சத்த ஸ்வர கீதப் பிரபந்தங்களை விவகரிப்பது.

## வேதாங்கம்.

அவ்வேதத்துக்குப் பாதம், அஸ்தம், முகம், கிராணம், நேத்திரம், சுரோத்திரமென்னும் முறையால் சந்தசு, கற்பம், வியாகரணம், சிக்ஷை, சோதிஷம், நிருத்தி யென்னும் ஆறும் அங்கங்களாம். அவற்றுள், சந்தசு: மந்திர சுலோகாதிகளுக்கு அக்ஷரகணிதஞ் செய்வது; கற்பம்: ஆசுவலாயன, போதாயன, ஆபஸ்தம்பாதி சூத்திரங்களில் யக்கியப் பிரயோகாதிகளைக் கற்பிப்பது; வியாகரணம்: வைதிக சாஸ்திரார்த்த சித்தியைச் சமர்ப்பிப்பது; சிக்ஷை: உதாத்த, அனுதாத்த, ஸ்வரித, பிரசயமென்னுஞ் சதுர்வித ஸ்வர கர்ண பூர்வகமான பதபாளிக்கிரம வேதாத்தியயனுதிகளைச் சொல்வது; சோதிஷம்: லக்கின, திதி, வார, நக்ஷத்திர, யோக, கரணுதிகளால் வைதிக கர்மங்களுக்குக் காலந் தெரிவிப்பது; நிருத்தி: வைதிக சப்த நிர்வசனத்தை நியமிப்பது.

## வேதோபாங்கம்.

அவ்வேதத்துக்கு ஸ்மிருதி, புராணம், நியாயம், மீமாம்சம் என்னும் நான்கும் உபாங்கமாம்.

## ஸ்மிருதி.

மநு, அத்திரி, ஔரிதம், விஷ்ணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்ஷம், கௌதமம், சாதான்மம், வசிஷ்டம் என அந்தந்த நாமதேயமுள்ளவர்களால் சொல்லப்பட்ட தர்ம சாஸ்திரம் பத்தொன்பது.

## யுகதர்மம்.

கிரேதாயுகத்தில் மநுஸ்மிருதி தர்மமும், திரேதாயுகத்தில் கௌதமஸ்மிருதிதர்மமும், துவாபரயுகத்தில் சங்கலிதஸ்மிருதி தர்மமும், கலியுகத்தில் பராசரஸ்மிருதி தர்மமும் முக்கியமாம். இந்த ஸ்மிருதிகளில் சாதி வருணுச்சிரமங்களும், தாயாதி விவகாரங்களும், அஷ்டாதச விவகாரங்களின் பேதங்களும், மகா பாதகங்களுக்குப் பிராயச்சித்தாதி விதிகளும் சொல்லப்படும்.

## சாதிவருணங்கள்.

அவற்றுள் கம்மியம் அல்லது மஹாராஷ்டிரம், கன்னடம், ஆந்திரம், திரவிடம் எனச் சாதி நான்கு. பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென் வருணம் நான்கு.

## பிராமணதருமம்.

இந்நான்கில் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், உன்னயனம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், சௌளம்,

உபநயனம், மகாநாமியம், மகாவிரதம், உபநிஷத்து, சோபனம், உத்துவக னம், மிருதியென்னும் சோடச கர்மங்களுடனே யசனம், யாசனம், அத்தி யயனம், அத்தியாபனம், தானம், பிரதிக்கிரகமென்னுஞ் சட்கர்மமும, சிவ பத்தியாதி சகல சற்குணங்களு முடையவன் பிராமணன்.

## க்ஷத்திரியதருமம்.

பிரசாபாலனம், யசனம், அத்தியயனம், துர்ச்சன துஷ்டமிருக பக்ஷி சத்துரு சங்காரம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதா னம், கோதானம், உபயமுகிதானம், இரண்ணியதானம், மகிஷதானம், அசுவதானம், சுவேதாசுவதானம், காலதானம், காளாமுகிதானம், மகா மேருதானம், கற்பக விருக்ஷதானம், வித்தியாதானம், மகாதானுதிகளின் பொருட்டுக் கால தேச பாத்திர பரீக்ஷை விஷ்ணுபத்தியாதி கர்மமுடைய வன் க்ஷத்திரியன்.

## வைசியதருமம்.

யக்கம், தசம், சதம், சகஸ்ரம், தசசகஸ்ரம், லக்ஷம், தசலக்ஷம், கோடி, தசகோடி, சதகோடி, அற்புதம், நிர்ப்புதம், கர்வம், மகாகர்வம், பற்பம், மகாபற்மம், க்ஷோணி, மகாக்ஷோணி, சங்கம், மகாசங்கம், க்ஷிதி, மகா க்ஷிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், நிதி, மகாநிதி, சாகரம், மகாசாகரம், அரி, மகாஅரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது, மகாகிருது என் னும் முதல் ஸ்தானமுதல் முப்பத்தாறு ஸ்தானபரியந்தமான இலக்கங்களை யும்; (க) யக்கம்: ஏகரூபம், பூமியாதிசமிஞ்ஞை (பெயர்); (உ) துவே: துவய், துவந்துவ, துவிதம், துவய, விதிய, யுக்கும, யுகள, யுக, உபய, பாகு, பாத, பக்ஷ, நயனுதிசமிஞ்ஞை; (ங) திரி: திரய, திரிதிய, ஹரநயன, அக்கினி, புராதிசமிஞ்ஞை; (ச) சௌள: சதுர்த்தி, வேத, வர்ண, ஆச்சிர மாதிசமிஞ்ஞை; (ரு) பஞ்ச: ஹரவக்த்ரகஷாய, விருத, இந்திரிய, விஷய, பாண, பாண்டவ பூதாதிசமிஞ்ஞை; (சு) ஷடு: பாவ, ராசாங்க, இருது, ரச, ஸ்கந்தமுக, வேதாங்க, வர்ணகர்ம, தரிசனுதிசமிஞ்சை; (எ) சத்த: முனி, கிரி, தானுங்க, ராசாங்க, துரக, தாது, சாபாங்க, ஸ்வர, சாசராதி சமிஞ்ஞை; (அ) அஷ்ட: வசு, திக்கு, சஜ, மத, விகார காமாதி சமிஞ்ஞை; (கூ) நவ: திரவியாந்திரு, நிதி, கிரக, ரத்நாதிசமிஞ்ஞை; (க0) தச: பிந்து, சூன்னிய, நாஸ்தி, அவதார, ககநாதி சமிஞ்ஞை என்னும் இவை முத லான சமிஞ்ஞைகளையு மறிந்தும்; கிரமுகாதி வஸ்துக்களை எண்ணியறிந் தும், பத்தரைப்பணத்தினிறை கழஞ்சு; கழஞ்சு ச-கூடினது கரிஷம், கரிஷம் ச-கூடினது பலம், பலம் ச0-கூடினது வீசை, வீசை ரு-கூடி னது துலாம், துலாம் ஙஉ-கூடினது பாரம், பாரம் ச0-கூடினது அஸ்த மென்று கர்ப்பூராதிகளைத் தூக்கி அறிந்தும்; ஒருசிட்டி நிகுஞ்சம், நிகுஞ்சம் ச-கூடினது குடுவம், குடுவம் ச-கூடினது பிரஸ்தம், பிரஸ்தம் உ-கூடி னது வாகம், வாகம் உ-கூடினது ஆடகம், ஆடகம் ச-கூடினது துரோ ணம், துரோணம் ரு-கூடினது கரி என்று தன்னியாதிகளை யளந்தறிந்

தும்; சுவர்ணத்தின் மாற்று, பிரவாளத்தின் கழஞ்சு, மணியின் சவ்வு, ரத்தினத்தின் சூத்திர பரீக்ஷை, வச்சிரத்தின் மஞ்சாடி, பச்சையின் ரதியமாதிகளை யறிந்தும்; கிரயம், வட்டம், வட்டி முதலியவற்றை யறிந்தும் செய்கிற வாணிச்சிய, கிருஷி, கௌபாலிக (கோரக்ஷணை), யசன, அத்தியயன, தானங்களோடு சூரியாதிபத்தியென்னும் கர்மமுடையவன் வைசியன்.

## சூத்திரதருமம்.

பிராமணாதிவர்ணத்திரய சேவை, க்ஷேத்திரரக்ஷை, சகல தேவதாபத்தி முதலான கர்மங்களுடையவன் சூத்திரன்.

## ஆச்சிரமம்.

பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென ஆச்சிரமம் நான்கு.

## விவகாரபதம்.

கடன்கோடல், உபநிதி (ஒருவனிடத்துக் காக்கும்படி வைத்தபொருள்), கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான் விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ள மொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நில வழக்கு, மாதராடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என விவகாரபதங்கள் பதினெட்டாம்.

## அஷ்டாதசபுராணம்.

பிரமம், பதுமம், விஷ்ணு, சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பௌஷ்யம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சியம், காருடம், பிரமாண்டம் எனச் சிவப்பிரசாதத்தால் வியாசமகாரிஷியாற் சொல்லப்பட்ட வேதத்திலுள்ள சாரார்த்தத்தைச் சொல்லும் நான்கிலக்ஷம் கிரந்த சங்கியையுள்ள அஷ்டாதச புராணங்களில் சைவம்; ஸ்காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷ்யம், மச்சியம், மார்க்கண்டேயம், பிர்மாண்டமென்னும் பத்தும் சிவபுராணமும்; நாரதீயம், பாகவதம், காருடம், விஷ்ணுவென்னும் நான்கும் விஷ்ணுபுராணமும்; பிரமம், பதுமம் என்னுமிரண்டும் பிரமபுராணமும்; பிரமகைவர்த்தம் சூரியபுராணமும்; ஆக்கினேயம் அக்கினி புராணமுமாம். இந்த ஏற்றத் தாழ்விலேயே தேவதா தாரதம்மியங்களையும் அறிந்துகொள்.

## சர்க்காதி பஞ்சலக்ஷணம்.

இப்புராணங்களில் சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மனுவந்தரம், வம்சாநுசரிதம் என்னும் பஞ்ச லக்ஷணங்களும், வைதிக தாந்திரிக கர்மங்களுஞ் சொல்லப்படும்.

## உபபுராணம்.

சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, சிவதருமம், தூர்வாசம், நாரதீயம், கபிலம், மானவம், உசனம், பிரமாண்டம், வாருணம்; காளி, வாசிஷ்ட

லிங்கம், சாம்பவம், சௌரவம், பராசரம், மாரீச்சியம், பார்க்கவமென்னும் அவ்வப் பெயருள்ளவர்களால் செய்யப்பட்ட அஷ்டாதச உபபுராணமும் வைதிக தர்மத்தையே சொல்லும்.

## இதிகாசம்.

பாரத இராமாயணாதிகள் வியாச வான்மீகிகளாலுண்டான இதிகாசங்கள். அவை சத்துவாதி குணபேதங்களையும், தேவத்திரய லக்ஷணங்களையும், தேவதானவாதிகள் சனனக்கிரமத்தையும், யுதிஷ்டிர ராமச்சந்திராதிகள் சரித்திரங்களையும், வைதிகாதி தர்மங்களையும் திடப்படுத்திச்சொல்லும்.

## நியாயம்.

நியாயமாவது: பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, ஏத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகஸ்தானமென்னும் சோடச பதார்த்தங்களையுஞ் சொல்லிப் பிரபஞ்சத்துக்கு ஈச்சுரனே கர்த்தாவென்று நிச்சயிப்பது.

## வைசேஷிகம்.

வைசேஷிகமாவது: திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேஷம், சமவாயம், அபாவமென்னும் சத்த பதார்த்தத்தைச் சொல்லுவதனால் பிரபஞ்ச சொரூபத்தை விவகரிப்பது.

## அவைதிக சாஸ்திரத்திரயம்.

இதற்குமேல் பிரகஸ்பதி, ஆகிதர், சுகதரென்னும் இவர்களால் முறையே சொல்லப்பட்ட சாருவாகம் ஜைநம் பௌத்தமென அவைதிக சாஸ்திரத் திரயமுண்டு. அவற்றுள்:—

சார்வாகமாவது: பிருதிவியாதி நால்வகைப்பூத விகாரமான சகத்தில் சுசமே சுவர்க்கம், துக்கமே நரகம். இவையன்றி வேறு சுவர்க்க நரக மில்லையென்று பிரதிபாதிப்பது.

சைநமாவது: சித்த, பத்த, நாரகீகளென்னும் புருஷத்திரய லக்ஷணங்களையும்; ஒட்டீச, ஒட்டாமிலேச, சுவாலினகற்ப, பதுமாவதிகற்ப, சாரதாகற்ப, குக்குடனாதி கற்பாதிகளையும்; மந்திரௌஷதாதி பிரயோகஞ் செய்பவர்களான பரம சித்தர்களையும்; லூனகேச (முண்டித) திகம்பர பாணி பாத்திர (கமண்டல) மயூரபிச்ச (மயிற்றோகை) பஞ்சமல தாரணாதிகளின் கொலை, களவு, கள், காமம், பொய்களின்றிய பஞ்சானு விரதங்களில் மதுகம் பலாண்டு (உள்ளி) முதலான நிஷேதத் திரவியங்களை வர்ச்சித்து, தப்த சிலாசயனாதி உக்கிர தபசாசரிக்கிற முனி விருத்திகளையும்; ஏமசந்திர, நாகசந்திர, நேமிசந்திர, ஏகிசந்திர, மாகசந்திர, அருகந்த, ஆதிநாத, அசகள, பாரீசுவநாத, சௌகத, சுருதிகீர்த்தி, ஸ்ரீமத் காமரகித முனிசுவாமி முதலான இருபத்துநான்கு தீர்த்தகரருடைய சரித்திரங்களை

யும்; சாதாஸ்தி (என்று மிருத்தல்), சாதாநாஸ்தி (என்று மின்மை) முத லான சத்தபங்கிகளையும்; சீவ, சற்சீவ, நிர்ச்சீவ, நிர்ச்சர, ஆசீர்வ, பந்த, மோக்ஷமென்னும் சத்த பதார்த்தங்களையும் பிரதிபாதிக்கும்.

பௌத்தமாவது: சௌத்திராந்திகம், வைபாடிகம், யோகாசாரம், மாத்தியமிகமென நான்கு பிரகாரமாய்ப் பிருதிவியாதி புத்தியந்தமான இருபத்துமூன்று தத்துவ வடிவமான பிரபஞ்சம் தீபச்சுவாலையைப்போல க்ஷணிக மாத்திரமென்று பிரதிபாதிப்பது.

இதற்குமேல் நிஷேதகர்ம சாஸ்திரங்களுண்டு. அவை சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திர நாதர், கோரக்கநாதர் என்னும் நவநாத சித்தர்களால் கற்பிதமான கௌளயாமளாதி இம்சை மைதுனாதி நிஷேதகர்ம முள்ள சாஸ்திராந்தரங்கள். அவை அபிசார கர்ம சனிதவியாதியாதியால், அகாலமிருத்துரூபமான மரண சுழுத்தி விஷமூர்ச்சாதி ரூபமோகனமும், அக்கினி ஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், இந்திரியஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், சிங்குவைஸ்தம்பனம், கதி ஸ்தம்பனாதி ஸ்தம்பனமும், பூர்வசுகாசிரம நிரசனாத்மகமான உச்சாடனமும், வஸ்திராபரண வனிதாதி வஸ்துக்களை நிஜஸ்தானத்திலிருந்து அழைப்பிக்கும் ஆகருஷணமும், பிராண சிநேகமான விடத்தில் அந்நியோந்நிய விரோதமுண்டாக்குகிற வித்வேஷணமும், இராஜவசியாதி வசியங்களுமாகிய ஷட்கர்மங்களையும்; சுராசுர பூதக்கிரகாவேசங்களையும்; பாதுகாசித்தி, அஞ்சனாசித்தி, குடிகாசித்தி, மூலிகாசித்தி, ரசவாத மென்பவற்றையும் பிரதிபாதிக்கும்.

## சாக்தீகபாஞ்சராத்திரம்.

இதற்குமேல் சத்திதத்துவ வாசி யென்னும் ஒரு ஆத்துமாவினாலும், வாசுதேவனாலும் கிரமத்தில் பிரதிபாதிக்கப்பட்ட சாக்திசம் பாஞ்சராத்திரமென வேறு சாஸ்திர மிரண்டுள்ளன. அவற்றுள்:—

சாக்தீகம் சடாசடப் பிரபஞ்சமெல்லாம் சத்தி பரிணாமமென்றல் முதலிய மதவிஸ்தாரஞ்செய்வது.

பாஞ்சராத்திரம் பிருதிவியாதி மானசமீறான இருபத்துநான்கு தத்துவத்துக்குமேல் குணதத்வ வடிவ வாசுதேவனால் சக்தி தாதாத்மீகமா யுண்டான கிருஷ்ண, அனிருத்த, மகரத்துவச, ரௌகிணேய ரென்னும் நால்வரா லுற்பத்தி முதலிய தொழில்களாமென்று பிரதிபாதிப்பது.

இதற்குமேல் இலௌகிகம், வைதிகம், ஆத்தியாத்மீகம், ஆதிமார்க்கிகம், மாந்திரிகமென பஞ்சவிதசாஸ்திரங்களுண்டு அவற்றுள்:—

## இலௌகிகசாஸ்திரம்.

தன்வந்திரி முதலியோராற் சொல்லப்பட்ட ஆயுள்வேதம், தண்டம், நீதிமுதலான சாஸ்திரம். அது திருஷ்ட பலன்களைப் பிரதிபாதிப்பது.

## வைதிக சாஸ்திரம்.

ஜைமினி, அக்ஷபாதர், கணாதரென்னும் இருஷிகளால் கிரமத்திற் சொல்லப்பட்ட பூர்வ மீமாம்சை, நியாயம், வைசேஷிகமெனத் திருஷ்டா திருஷ்ட பலன்களைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத் திரயமுண்டு. அவற்றுள்: பூர்வ மீமாம்சையென்பது உபக்கிரம உபசங்கார முதலான சட்விதலிங்க தாற்பரியத்தால், வேதவாக்கிய விசார பூருவகமாய்ச் சோதிஷ்டோம யாகாதி கர்மங்களை விதிப்படி சொல்லுவது. நியாயவைசேஷிகத்தைப் பற்றி மேலே காண்க.

## ஆத்தியாத்மீகசாஸ்திரம்.

கபிலர் பதஞ்சலி வியாசரென்னு முனிவர்களால் கிரமத்திற் சொல்லப்பட்ட சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தமென ஆத்மஞான பலன்களுள்ள ஆத்தியாத்மீக சாஸ்திரத் திரயமுண்டு. அவற்றுள்:—

சாங்கியம்: நித்திய நிர்மலமான ஆத்ம சந்நிதானத்தில் குணத்திரய வடிவமான பிரகிருதியே இருபத்தைந்து தத்துவ சொரூப ஜகத்தாமென்று விவகரிப்பதே சம்சாரபந்தமென்றும், சத்துவாதி குணத்திரயக் கிரமத்தால் சிலேட்டுமப்பிரகிருதி பித்தப்பிரகிருதி வாதப்பிரகிருதியிலுள்ள சாந்த, குரோத, மூடாதி குணங்களோடு கூடிய உத்தம மத்திம அதம புருஷத்திரய வர்ண நீதிமுதலானவைக ளுண்டாமென்றும் சொல்லும்.

பாதஞ்சலம்: இயம நியமாதி அஷ்டாங்கயோகத்தால் மனோ நிச்சல சித்தியாமென்று சொல்லும்.

உத்தரமீமாம்சை: உபநிஷதார்த்தத்தைச்சொல்லும் வேதாந்தம். அது பிரபஞ்சத்துக்கு மித்தியாத்துவஞ் சாதித்தலால் பிரமாத்தும ஐக்கியத்தை வர்ணிக்கும்.

## ஆதிமார்க்கிகசாஸ்திரம்.

மாயாதத்துவ வித்தியா தத்துவ வாசிகளான ருத்திரராற் சொல்லப்பட்ட பாசுபத காபாலிக மாவிரதமென ஆதிமார்க்கிக சாஸ்திரத்திரயமுண்டு. அவற்றுள்:—

பாசுபதம் மாயாகர்மாதிகளைச் சொல்வது.

காபாலிகம் நரகபால பிக்ஷாடனாதிகளைச் சொல்வது.

மாவிரதம் அஸ்திதாரணாதிகளைச் சொல்வது.

## மாந்திரிக சாஸ்திரம்.

சரியை, கிரியை, யோக, ஞானங்களைக் கூறும் காமிகாதியாகமங்களிருபத்தெட்டும் மாந்திரிகமாம். அவை சிவபேதம் உருத்திரபேதமென விருவகைப்படும்.

## நாநாமதஸ்தர்களுடைய ஆத்துமநிருபணம்.

இவ்வாறு சொல்லப்பட்ட மதங்களெல்லாவற்றிலும் நிருபிக்கப்படும் ஆத்மசொரூபமாவது:—

சார்வாகர்: ஆத்துமா தேகமே யென்பர்,

சார்வாக ஏகதேசிகள் ஆத்துமா இந்திரியமே யென்பார்கள்.

இரணிய கர்ப்பரென்னுஞ் சார்வாக ஏகதேசிகள்: ஆத்துமா பிராணனே யென்பார்கள்.

சைநர்: ஆத்துமா தேகாதி விலக்ஷணமாய்த் தேகபரிணமிதமாய், பரிணமித மத்தியையில் சங்கோச விகாச தர்ம யுக்தமாயிருப்ப தென்பர்.

பௌத்தர்: ஆத்துமா புத்தியே யென்பர்.

கௌளயாமள சாத்துவீகர்; ஆத்துமா ஆனந்தமே யென்பர்.

பாஞ்சராத்திரிகள்: ஆத்துமா நாடிமத்தியி லுள்ளதாய், அணுபரிமாணமாகவே யிருக்குமென்பர்.

இலௌகிகர்: ஆத்துமா தேகபுத்திர களத்திராதி வடிவினதென்பர்.

மீமாம்ச பேதரான பாட்டப் பிரபாகரர்: ஆத்துமா ஸ்வதப்பிரமாணமான (தானே பிரமாணமாவதாகிய) ஞானசொரூப மென்பர்.

நியாய வைசேடிகர்: ஆத்துமா ககனம்போல மகத்பரிமாணமாய், பாஷாணம்போலச் சடரூபமானாலும், மனோ சையோகத்தால் சித்துசமயுக்தமாயிருப்பதே சிற்சமத்தோடு கூடியதாயிருப்ப தென்பர்.

சாங்கிய பாதஞ்சலிகர்: ஆத்துமா அசங்க சின்மாத்திரமென்பர்.

வேதாந்திகள்: ஆத்துமா ஞெப்திமாத்திர மென்பர்.

பாசுபத காபாலிக மாவிரதிகள்: ஆத்துமா நித்திய வியாபக சைதந்நியமென்பர்.

மாந்திரசமிஞ்ஞாசித்தாந்திகள்: ஆத்துமா நித்திய வியாபக ஞானக்கிரியா சொரூபமென்பர்.

## நாநாமதஸ்தர்களுடைய மோக்ஷலக்ஷணம்.

இனி இவ்வெல்லாச் சமயவாதிகளாலும் பிரதிபாதிக்கப்படும் மோக்ஷலக்ஷணமாவது:—

சார்வாக லௌகீகர்: மரணமே மோக்ஷமென்பர்.

ஜைநர்: ஆகாச மத்தியில் உத்தரோத்தர கமனமே (மேன்மேற் செல்லுதலே) மோக்ஷமென்பர்.

பௌத்தர்: சுக துக்காதிகளால் மயக்கப்படாம லிருக்கும் சுத்தபுத்தி சந்ததியே மோக்ஷமென்பர்.

கௌளயாமளர்: ஆகாசகமனசித்திப்பிராப்தியே மோக்ஷமென்பர்.

சாத்துவீகர்: ஆனந்தப்பிராப்தியே மோக்ஷமென்பர்.

பாஞ்சராத்திரிகள்: வாசுதேவாத்துமகப் பிரகிருதியில் சொரூபக்கேடின்றி அடங்குவதே மோக்ஷமென்பர்.

இலௌகிகர்: இகலோகத்தில் புத்திரதாராதிகளுடன் கூடி வியாதி யாதி துக்கமில்லாமல் சுகத்திலிருப்பதே மோக்ஷமென்பர்.

பூர்வமீமாம்ஸகர்: சுவர்க்காதி லோகப் பிராப்தியே மோக்ஷமென்பர்.

நியாய வைசேடிகர்: ஆத்துமா சரீரேந்திரியாதி இருபத்தொரு துக்கத்தின் அத்தியந்த நாசத்தால் பாஷாணம்போலிருப்பதே மோக்ஷமென்பர்.

சாங்கியர்: பிரகிருதி புருஷவிவேகத்தால் அவித்தியா நாசமாவதே மோக்ஷமென்பர்.

பாதஞ்சலிகர்: யோகாப்பியாச பலத்தால் மனோலய வாயிலாக அஞ்ஞானமழிவதே மோக்ஷமென்பர்.

வேதாந்திகள்: பிரமாத்தும ஐக்கிய ஞானத்தால் விவகாராதி சம்சார பந்த நிவர்த்தியே மோக்ஷமென்பர்.

பாசுபதர் : பிரவாகேசுவரத்தால் ஈச்சுரத்துவம் அந்நியருக்குக்கொடுத்து ஆத்துமா ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷமென்பர்.

காபாலிகமாவிரதிகள் : கர்த்திருத்வமான சம்சாரபாவத்தை விட்டு ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷமென்பர்.

மாந்திர சமிஞ்ஞா சித்தாந்திகள்: ஆத்துமா சடத்துவாதீத சிவசமானத்துவமாவதே மோக்ஷமென்பர்.

இவ்வாதிகளில் சார்வாகர், ஜைநர், பௌத்தர், மீமாம்ஸகர், சாங்கியராகிய இவர்கள் நிரீச்சுரவாதிகள் ; மற்றையர் சேசுரவாதிகள். இம்மகாவாதிகளில் சார்வாகாதிக ளனைவரும் பேதவாதிகள் ; வேதாந்தி யொருவனே அபேதவாதி. (ரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சைமினி சூத்திரத்திற்கு மூன்று வியாக்கியானி வியாக்கியானங்களி னுமங்களுணர்த்துகின்றார்.

சாற்றியவச் சைமினிசூத் திரத்திற்கு மிக்க
சாபரமென் றொருபாடி யம்புரியப் பட்ட
தூற்ற * மீ மாஞ்சைக்கு மதம்பாட்ட மென்ன
வொன்றுபட்டா சாரியனு லுரைத்திடவந் தென்றும்
போற்றுமவன் சீடனு கியபிரபா கரனுற்
புகழ்பிரபா கரமெனவோர் மதாந்தரநன் கமைய

---

*பூர்வமீமாம்சை தருமமீமாம்சை யெனவும், உத்தரமீமாம்சை பிரமமீமாம்சை யெனவும் சொல்லப்படும். எதில் தருமத்தின்மீமாம்சை இருக்கிறதோ அது தருமமீமாம்சையாம்; எதில் பிரமத்தின்மீமாம்சை யிருக்கிறதோ அது பிரமமீமாம்சையாம். மீமாம்சை - ஆராய்ச்சி.

வாற்றியவச் சாபரபா டியமதற்கு விளங்க
வாக்கப்பட் டுலகமெலா மறிந்திடநின் றதுவே.

(இ - ள்.) சாற்றிய - முற்கூறிய, அச்சைமுனிசூத்திரத்திற்கு - அந்தச் சைமினிமுனிவர் கூறிய சூத்திரவடிவமான பூருவ மீமாஞ்சைக்கு, மிக்க - மேலான, சாபரமென்று - சாபரமென்றுரைக்குமாறு, ஒருபாடியம் - ஒரு வியாக்கியானம், புரியப்பட்டது - சபரரென்பவரால் செய்யப்பட்டது, ஊற்றம் - அறிஞராற் புகழப்படுகின்ற, மீமாஞ்சைக்கு - அம்மீமாஞ்சைக்கே, மதம்பாட்ட மென்னவொன்று - பாட்டமென்றொருமதாந்தரம், பட்டாசாரியனல் - பட்டாசாரியரால், உரைத்திடவந்து - (வார்த்திகவடிவத்தில்) சொல்லப்போந்து, என்றும் போற்றும் - எப்பொழுதுந் துதிக்கின்ற, அவன் சீடனுகிய - அப்பட்டாசாரியரது மாணுக்கராகிய, பிரபாகரனுல் - பிரபாகரமுனிவரால், புகழ் பிரபாகரமென - புகழ்பெற்ற பிரபாகரமென் றுரைக்குமாறு, ஓர் மதாந்தரம் - ஒரு மதாந்திரமானது, நன்கமைய- நன்ரு யமையும்படி, ஆற்றிய - செய்த, அச்சாபரபாடியமதற்கு - அந்தச் சாபர வியாக்கியானத்திற்கு, விளங்கவாக்கப்பட்டு - பொருள் விளங்கச் செய்யப்பட்டு, உலகமெலாம் - உயர்ந்தோ ரியாவரும், அறிந்திட - அறியுமாறு, நின்றது - நிலைபெற்று நின்றது, எ - று. ஏ - அசை. மாதாந்தரம் - வேறுமதம்.

(தா - ம்.) சைமினிமுனிவர் சூத்திர ரூபமாகக்கூறிய பூருவ மீமாஞ்சையின் கருமப்பொருள் வெளிப்படச் சபரர்செய்த சாபரமும், அம்மீமாஞ்சைக்கே பட்டாசாரியர்செய்த பாட்டமும், அச்சாபரம் விளங்கப் பிரபாகரர் செய்த பிரபாகரமுமாகிய பாஷியங்கள் ஒன்றற்கொன்று தந்திரங்களின் விருத்தம்போலத் தோன்றி யந்தரங்கத்தில் அவிருத்தமாக விளங்கு மென்பதாம். (௪)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வியாசசூத்திரமான வுத்தரமீமாஞ்சையின் முற்பகுதியதாகிய தேவதாகாண்டத்தின் தெய்வத விலக்கணத்தை விளக்குவிக்கும் வியாக்கியானி வியாக்கியானங்களி னுமமுணர்த்துகின்ருர்.

உரைத்தவிரண் டாங்கூறு பிரமமுரைப் பதனு
லுத்தரமீ மாஞ்சையெனப் பட்டருள்கூர் வியாதன்
றெரித்தசூத் திரவடிவ மாகியிரு நான்கத்
தியாயமா மவற்றுண்முத னுன்கத்தி யாயம்
விரித்தலுறு தேவதா காண்டமெனப் பட்டு
விளங்குறுதெய் வதவிலக் கணம்பலபத் திரனு
னிரைத்துரைசெய் யப்படுமே னுன்கத்தி யாய
நிகழ்பிரம காண்டமென வேநிகழ்த்தப் படுமால்.

(இ - ள்.) உரைத்த - முற்கூறிய, (மீமாஞ்சையினுள்) இரண்டாங் கூறு - இரண்டாம் பாகமானது, பிரமமுரைப்பதனல் - பிரமத்தைச்சொல்லுவதனல், உத்தரமீமாஞ்சை யெனப்பட்டு - உத்தரமீமாஞ்சை யென்று சொல்லப்பட்டு, அருள்கூர் வியாதன் - கிருபைமிகுந்த வியாசமுனிவர், தெரித்தசூத்திரவடிவமாகி - சொல்லியருளிய சூத்திர ரூபமாகி, இருநான்கத்தியாயமாம் - எட்டத்தியாயங்களாகும், அவற்றுள் - அவைகளுக்குள்ளே, முதனன்கத்தியாயம் - முற்பகுதியதாகிய நான்கத்தியாயங்களும், விரித்தலுறு - விரிவாகப்பொருந்திய, தேவதாகாண்ட மெனப்பட்டு - தேவதாகாண்டமென்று சொல்லப்பட்டு, விளங்குறும்-விளங்காநிற்கும், (அதில்) தெய்வதவிலக்கணம் - (மந்திரவாதத்தைப்போலத்) தேவதாலட்சணங்கள், பலபத்திரனல் - பலபத்திரராமரால், நிரைத்து - கிரமமாக, உரை செய்யப்படும் - சொல்லப்படும், மேனன்கத்தியாயம் - பிற்பகுதியதாகிய நான்கத்தியாயங்களும், நிகழ் - விளங்காநின்ற, பிரமகாண்டமென - பிரமகாண்டமென்று, நிகழ்த்தப்படும் - சொல்லப்படும், எ - று. ஏ - ஆல் - அசை.

தெய்வதலட்சணத்திற்கு உதாரணம்: ஞானவாசிட்டம் "தேகமுதற் பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்களிலத் தெய்வ முண்டோ, பாகமறப் பணதியற வடிமுடிவற் றுளவுணர்வே பரம போத, மாகலின லதுதெய்வ மருச்சித்தற் குரித்தாகு மறிவி லாத, மூகருக்கு வடிவமுத லருச்சனையே யியல்பென்று மொழியு மன்றே" என்று கூறுவதனற் காண்க.

வின:—பிரமப்பொரு ளுணர்த்து முத்தர மீமாஞ்சையில் தெய்வத விலக்கணங் கூறியதென்னை?

விடை:—மாயா சம்பந்தத்தின லாரோபிதமாய்ப் பிரமம்போலத் தோற்றுந் தெய்வங்களி னிலக்கணங்களை வகுத்துக்காட்டி யிவைகள் பிரம மன்றென நீக்குவித்தற்கென்க. (ரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வுத்தரமீமாஞ்சையின் பிற்பகுதியதாய பிரமகாண்டத்திற் பிரமான்ம ஐக்கியம் போதிக்கு மகாவாக்கியார்த்தத்தை விளக்குவிக்கும் வியாக்கியான வியாக்கியானிகளி னம முணர்த்துகின்றார்.

அப்பிரம காண்டத்துட் சிவமொடுயி ரயிக்க
மறைதலாற் சங்கரா சாரியனுங் குருவா
லொப்பரிய பாடியமென் றென்றுரைக்கப் பட்ட
துரைத்ததற்கு விவரண சாரியனென் பவனாற்
செப்பரிய விவரணமாக் கூறப்பட் டதுவே
தெரியின்வே தாந்தநூ லென்றுரைக்கப் படுமா

லிப்பெரிய வேதாந்த நூற்பொருளி னகல
மெங்ஙனமென் றிடினுரைத்து மியம்பியநூன் முறையே.

(இ-ள்.) அப்பிரமகாண்டத்துள்-முற்கூறிய பிரமகாண்டத்தின்கண், சிவமொடுயிரயிக்கம் - பிரமான்ம ஐக்கியம், அறைதலால் - சொல்லப்படுத லால், சங்கராசாரியனுங்குருவால் - சங்கராசாரியரென்னு மூலோககுருவி னால், ஒப்பரிய - சமானமின்றிய, பாடியமென்று-அத்துவிதபாஷியமென, ஒன்றுரைக்கப்பட்டது - ஒன்றியம்பப்பட்டது, உரைத்ததற்கு - கூறிய வப் பாஷியத்திற்கே, விவரணசாரியனென்பவனால் - விவரணசாரிய ரென் பவரால், செப்பரிய - மொழிதற்கரிய, விவரணமாய் - விவரணமென்னு மோர் வியாக்கியானமாக, கூறப்பட்டதுவே - சொல்லப்பட்டவதுவே, தெரியின் - விசாரிக்குமிடத்து, வேதாந்தநூலென்று - வேதாந்த சாத் திரமென்று, உரைக்கப்படும் - சொல்லப்படும், இப்பெரிய - இம்மகத்தான, வேதாந்த நூற்பொருளின் - வேதாந்த சாத்திரார்த்தத்தின், அகலம் - விரி வை, எங்ஙன மென்றிடின் - (கூறுவது) எப்படியெனின், இயம்பிய நூன் முறையே - முதனூலிற் சொல்லுங் கிரமப்படியே, உரைத்தும் - இனிக் கூறுதும், எ - று.

வினு:—வேதங்களின் முடியினுள்ள மகாவாக்கியங்களின் பொருளி னபிப்பிராயத்தை மீமாஞ்சையிற் கூறியதென்னே?

விடை:—இருக்குமுதற் புராணமீறுன பதினன்குவித்தையினுள் மீமா ஞ்சை சிறந்திருத்தலாலென்க.

வினு:—அற்றேல் இஃது இருக்குமுதலியவற்றிற்கும் மேன்மையாவ தெப்படி?

விடை:—ஐம்பது சாகையோடுங் கூடிய அதர்வண வேதத்திலுள்ள மாண்டூக்கிய வுபநிடதத்தில் அயமாத்மாப்பிரமம் எனக்கூறிய மகாவாக்கி யார்த்த சாட்சாத்கார ஸ்வருபத்தை ஆயிரஞ் சாகையோடுங் கூடிய சாம வேதத்திலுள்ள சாந்தோக்கிய வுபநிடதத்தில் தத்துவமசியெனக் கூறிய மகாவாக்கியார்த்தமான குரு வுபதேசத்தினல் நூற்றொன்பது சாகையோ டுங் கூடிய யசுர்வேதத்திலுள்ள தையித்திரியவுபநிடதத்தில் அகம்பிரமா ஸ்மியெனக் கூறிய மகாவாக்கியார்த்தஞ் சீடனுக்கனுபவமாம்படி, இருபத் தொரு சாகையோடுங்கூடிய விருக்குவேதத்திலுள்ள ஐத்திரேய வுபநிட தத்தில் பிரக்கியானம்பிரம மெனக்கூறிய மகாவாக்கியார்த்தமானது விளங் கச்சொல்லும். இங்ஙனங்கூறு மிந்நான்கனுட் பொருள் விசேடமா யமைந் திருக்கின்ற சாமவேதத்தில் மற்றைய வேதங்களும், சாந்தோக்கிய வுப நிடதத்தில் மற்றைய வுபநிடதங்களும், தத்துவமசி வாக்கியத்தில் மற்றைய வாக்கியங்களுஞ் சேர்ந்திருக்கு மாதலி னஃதே விசேடமாயிற்று.

இச்சாமவேதத்தில் தன்னைமறந் தொன்றுந் தோன்றாதுநின்ற சிவன் தத்தரிசனஞ் செய்யுநிமித்தம் முன்ன ரவனுக்கு விடயஞானத்தை விளக்கு

தற்காக விதிவாக்கிய முதலியவற்றைக் கூறுங் கருமகாண்டத்தைப் பிரதிவாதிப்பதற்கெழுந்த சந்தசு முதலியவாறங்கங்களும், பிரமாணுதிய சோடசபதார்த்தங்களைச் சொல்லு நியாயமும், வருணச்சிரம முதலிய பதினெண் விவகாரங்களையும் பிராயச்சித்தாதிகளையுங் கூறும் மனுமுதலிய பத்தொன்பது ஸ்மிருதிகளும், சர்க்கமுதலிய பஞ்சலட்சண முள்ளனவாய் வைதிக தந்திர கருமங்களைச் சொல்லும் பிரமமுதலிய பதினெண்புராணமுமாய விவ்வொன்பது வித்தைகளு முன்னடங்கின மூன்று வேதங்களோடுங்கூட வடங்கும்.

இங்ஙனம் வியாபித்த சாமவேதம் முற்கூறிய சீவனுக்குச் சுவர்க்க முதலிய விடய போகங்களைத்து மனுபவித்தெய்க்கு நிமித்தங் கருமங்களை யனுட்டிக்கும்படி கருமகாண்டமும், அவற்று லிப்போகங்களனைத்து மின்பம்போலத் தோன்றித் துன்பத்தை விளைக்கின்றன வென்றவற்றிற் ருேஷ திருஷ்டியுண்டானபின்பு காரணனை வீசுரனுக்கு அக்கருமங்களை யொப்புவித்து அவனருள் பெறுநிமித்த மவனது இலக்கணமறிந்து உபாசிக்கும்படி யுபாசனகாண்டமும், அதனுற்றிரிபுடி தோன்றலாற் சலனமுண்டாய்த் துன்ப நீங்காமையால் மேற் சர்வம்பிரமமென்னு மத்துவித ஞானமுதயமாம்படி ஞானகாண்டமுஞ் சங்கிரகித்துக் கூறித் தனதபிப்பிராயம் வெளிப்பட விம்மூன்றுகாண்டத்தில் முன்னிரண்டையும் பூருவபட்சமாகவும் பின்னென்றையும் சித்தாந்தமாகவும் சொல்லிய இம்மூன்று காண்டத்தின் அருத்தமும் மீமாஞ்சையில் வெளிப்பட விளங்கலாலென்க.

வினு:—அங்ஙனமாயின் மீமாம்சையிற் கூறும் வேதாந்தமெனுது "விவேகசிந்தாமணியதனுளறைவேதாந்தப்பொருளினை" என்று கூறியதேன்?

விடை.—விவேகசிந்தாமணி வேதாந்த பரிச்சேதத்தில் விவரணசாரியரியற்றிய விவரண வியாக்கியானமென்னும் வேதாந்த சாஸ்திரத்தினைச் சுருங்கச்சொல்லலும் விளங்கவைத்தலுமாகக் கூறினமையாலென்க.

(தா - ம்) வியாசமுனிவர் செய்தருளிய வுத்தரமீமாம்சை யிருபகுதியதாய் உபாசனையையும் பிரமான்ம ஐக்கியஞானத்தினையுங் கூறுவதாய்ப் பிற்பகுதி சங்கரபாஷியத்தை யுடையதா யிருக்குமென்பதாம். (சு)

அ - கை.

இச்செய்யுளில் இந்நூலாசிரியரது அருமையும் அவரது நாமமும் விளங்க வுணர்த்துகின்ருர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

* அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணியதனு
ளறைவே தாந்தப்

---

* இச்செய்யுள் இந்நூலாசிரியரால் தம்மைப் பிறர்போல் வைத்துக் கூறப்பட்டது. தம்மைப் பிறர்போல் வைத்துக் கூறுதல் நாந்தியெனப்படும்.

பொருளினைமுந் நீர்வரைப்பி னுலகறியச் செந்தமிழாற்
 புனைதல் செய்தான்
பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன்மல ராற்புனைபாப்
 பெருந்தண் மாலை
கருமிடற்று வானவற்கே சாத்துசிவப் பிரகாசன்
 கவிஞர் வேந்தே.

(இ - ள்) அருமறையின் - அறிதற்கரிய வேதங்களினுள்ள, பொருடெரித்த - பொருள்களைத்தெரிவித்த, விவேகசிந்தாமணியதனுள் - விவேகசிந்தாமணியென்கிற நூலின்கண், அறை - சொல்லாநின்ற, வேதாந்தம் - வேதாந்தபரிச்சேதத்திற் கூறிய, பொருளினை - பிரமாத்ம ஐக்கியமாக விளங்கிய மகாவாக்கியார்த்தத்தை, முந்நீர்வரைப்பின் - கடல்சூழ்ந்த பூமியினுள்ள, உலகறிய - பண்டிதபாமரர்க ளியாவரும் சாதாரணமா யறிந்துய்யும்படி, செந்தமிழால் - செவ்விதான தமிழ்ப்பாவினுல், புனைதல் செய்தான் - (சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய வழகுபொருந்த வேதாந்தசூளாமணி யென்றொரு நூல்) அலங்கரித்துப் பாடினுன், (அவனுரென்றுல்) பெருகு சுவை நறவொழுகு - அளவின்றிப் பெருகாநின்ற நவரசமாகிய தேனிடையரு தொழுகிக்கொண் டிருத்தற்கிடமாகிய, செஞ்சொல் மலரால் - செவ்விய சொற்களாகிய மலர்களால், புனை - தொடுக்கப்பட்ட, பாப்பெருந்தண்மாலை - அன்புளோர்க்ககங்குளிரச் செய்யுமகத்துவம்வாய்ந்த பாமாலைகளை, கருமிடற்று - திருநீலகண்டத்தையுடைய, வானவற்கே - பரமசிவத்திற்கே, சாத்து - தரிக்காநின்ற, சிவப்பிரகாசன் - சிவப்பிரகாசனென்னு நாமதேயத்தையுடைய, கவிஞர்வேந்து - கவிவல்லோர்களுக் கிறைவன், எ - று. ஏ - ஈற்றசை.

சொன்மலர், பாமாலை என்பன வுருவகம்.

(தா-ம்.) இந்நூலாசிரியனது சிறப்பை விளங்க வுணர்த்தியதாம். (எ)

சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

# பொதுப்பாயிரம்.

அ - கை.

முன்னர்ச் சிறப்புப்பாயிரங்கூறிப் பின்னர் மங்களாசரணை முதல் அளவையீறாய வங்கங்களும் அதிகாரிக ளாசிரியர்களி னியல்பும் பொதுப் படக்கூறும் பொதுப்பாயிரங் கூறுவான்றொடங்கி யிச்செய்யுளில் மங்களா சரணை முதலன்னுவயமீறான மூவிலக்கணங்களு மனுபந்த சதுட்டய நாமமு முணர்த்துகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாய்த்தநூன் முகத்துரைக்கு * மங்களா சரணை
வாழ்த்துவணக் கொடுவத்து நிர்த்தேச மெனமூன்
றார்த்தபதம் பதப்பொருளே வாக்கியயோ சனையே
யறிவினா விடையிவையைந் † துரையினிலக் கணமாங்

---

* மங்களாசரணையினால் நூல்முடிவிற்குப் பிரதிபந்தங்களாயுள்ள விக்கினங்கள் நாசமாகின்றன. விக்கினமென்பது பாவத்திற்காம். பாவத்தினால் சுபகாரியம் முடிவுபெறுகிறதில்லை. அப்பாவங்கள் மங்களாசரணையினால் கெடுகின்றன. பாவமற்றவனும் நூலாரம்பத்தில் மங்களம் அவசியம் செய்யவேண்டும். நூலாரம்பத்தில் மங்களம் செய்யாவிட்டால் நூலாசிரியனிடத்துச் சனங்களுக்கு நாஸ்திகப்பிராந்தியுண்டாய் நூலின்கண் பிரவிர்த்தி யுண்டாகமாட்டாது. இதனால் நூலாரம்பத்தில் மங்களம்செய்தல் இன்றியமையாததென்றாயிற்று. மங்களம் நூலாரம்பத்திற் செய்வதேயல்லாமல் இடையிலும் கடையிலும் செய்தலுமுண்டு. மங்களம் எனினும் மங்கலமெனினும் ஒக்கும். இது வஸ்துநிர்த்தேசரூபம் (பொருளியல்புரைத்தல்), ஆசீர்வாதரூபம் (வாழ்த்து), நமஸ்காரரூபம் (வணக்கு) என மூன்றுவகையா யிருப்பினும் அவற்றின் அவாந்தரபேதங் (உட்பிரிவு)கள் இருபத்தேழாம். நூலாரம்பத்தில் மங்களம் செய்யவேண்டு மென்பதற்கு மங்களம் செய்யத் தக்கதென்று வேதத்தில் விதிக்கப்பட்டது (பிரதிஞ்சை), உலக நடையும் பழிப்புமல்லாத ஆன்றோ ரொழுக்கமாதலின் (ஏது), வேள்வி முதலியனபோல (உதாரணம்) என்னும் அனுமானமே பிரமாணமாம். இம் மங்களம் வாக்கானே யன்றி மனத்தானுஞ் செய்யப்படும்.

† பத்தியத்திற் (பாடலுக்)காவது கத்தியத்திற் (வசனத்திற்)காவது உரைகூறுங்கால் பதப்பிரிவும், பதப்பொருளும், பதசாரமும், வினாவும், விடையுமுடையதாகக் கூறல்வேண்டும். இவ்வாறன்றி, கருத்துரையும் பதவுரையும் அதற்கேற்க வுதாரணமும் அதிற்றோன்று மாட்சேபமும், அதற்குச் சமாதானமுமுடையதாகக் கூறலுமுண்டு. அதனை ஐங்காண்டிகையுரை யென்பர்.

கோத்துரைசெய் விசேடவிசே டியங்கருத்தா கருமங்
கொள்கிரியை யிவையைந் ‡ தன் னுவயவிலக் கணமாஞ்
சாத்து || மனு பந்தசதுட் டயநூற்கு விடயஞ்
சம்பந்தம் பயனதிகா ரிகளெனநான் கறியே.

(இ-ள்.) வாய்த்த-(முமுட்சுக்கணிரதிசயானந்தம் பெறுவான்)கிடைத்த, நான்முகத்துரைக்கும் - சாத்திரங்களின் முகப்பிற் கூறும், மங்களாசரணை - மங்களாசரணையாவது, வாழ்த்து - வாழ்த்தலும், வணக்கொடு - வணங்குதலும், வத்துநிர்த்தேசமென - வஸ்துநிர்த்தேசமுமென, மூன்று - மூன்றும், ஆர்த்த - கவியிற் சொல்லாநின்ற, பதம் - பதமும், பதப்பொருள் - பதத்தி னருத்தமும், வாக்கிய யோசனை - வாக்கியார்த்தத்தை யோசித்தலும், அறி - அப்பொருளை யறிதற்கு, வினா - வினுதலும், விடை - அப்பொருள் விளங்கக் கூறுதலுமான, இவையைந்து - இவ்வைந்து வகையும், உரையினிலக்கணமாம் - வியாக்கியானங்களினிலட்சணமாம், கோத்துரைசெய் - கோவையிட்டுக்கூறும், விசேடம் - விசேஷணமும், விசேடியம் - விசேஷியமும், கருத்தா - கருத்தாவும், கருமம் - கருமமும், கொள்கிரியை - கொள்ளாநின்ற கிரியையுமான, இவையைந்து - இவ்வைந்தும், அன்னுவய விலக்கணமாம் - அன்னுவய லட்சணமாகும், நூற்கு - வேதா

‡ அன்னுவயமாவது செய்யுளில் பொருத்தமறிந்து பதங்களைக் கூட்டிப் பொருள்கொள்ளுதலாம். இஃதாற்றுநீர்ப் பொருள்கோள் மொழிமாற்றுப் பொருள்கோள் என்றற்றொடக்கத்தனவாய்ப் பலவகைப்படும். இதனால் விசேடணம் (அடை), விசேஷம் (அடைகொளி) எழுவாய், பயனிலை செயப்படுபொருளென்னு மைந்துஞ் செவ்விதாயுணரப்படும். இஃதில் வழிமுடிவு காண்டல் முடியாது.

|| அதிகாரி, சம்பந்தம், விஷயம், பயன் என்னுமிந்நான்குங்கூடி நிற்றலுக்கு அனுபந்த சதுஷ்டயமென்றுபெயர். சதுஷ்டயம் - நான்கு. அநுபந்தமென்பதில் பந்தமென்பதன்பொருள்கூடி நிற்றல். அல்லது கட்டு என்றும். அநு என்பது உபசர்க்கம்; எனவே, அனுபந்த சதுஷ்டயமென்பது நான் கோடுகூடி நிற்றலென்றாயிற்று. ஈண்டுச் சதுஷ்டயமென்பது தொகைக்குறிப்பாய் அதிகாரி முதலியவற்றை யுணர்த்தி நின்றது. இவ்வனுபந்த சதுஷ்டயத்தை யறியாவிட்டால் விவேகிக்கு அத்தியான்ம (ஞான) சாஸ்திரத்தின்கண் பிரவிருத்தி யில்லாதொழிதலின் இதனை அவசியம் விசாரித்தல்வேண்டும். எது தன்னை யுணர்ந்தபின்னர் முமுட்சுவை ஞான சாஸ்திரத்துடன் சம்பந்தப்படுத்துகின்றதோ அஃதநுபந்த மெனப்படும். நான்கு கால்களின்றிக் கட்டில் எங்ஙனம் நிற்காதோ அங்ஙனமே அனுபந்த சதுஷ்டயமில்லாத நூலுமாமென்க. அனுபந்தசதுஷ்டயமுள்ள நூலே நூலென்று பெறப்படுதலின், நூலாராய்ச்சி செய்யு மொவ்வொருவரும் அனுபந்த சதுஷ்டயத்தை விசாரித்தறிதல் அத்தியாவசியமாமென்க.

ந்தசாத்திரங்கட்கு, சாற்றும் - அறிஞராற் கூறத்தகும், அனுபந்த சதுட்டயம் - அனுபந்தசதுஷ்டயமாவன, விடயம் - விஷயமும், சம்பந்தம் - சம்பந்தமும், பயன் - பயனும், அதிகாரிகள் - அதிகாரிகளும், நான்கென - நான்கென்று, அறி - நீயறிவாய், எ - று. ஏ - ஈற்றசை.

ஆசரித்தல் - ஆசரணையெனவந்தது. எனவே, நடத்தையாம். நிர்த்தேசம் - காண்பித்தல். எண்ணும்மைக டொக்குநின்றன. மங்களாசரணை - மங்களநடத்தையாம். அவையாவன: மங்களம் - நிரதிசயசுகமாய், ஆசரணையாவினுங்கண்டு நடக்குதல். அதன்மூன்றிலக்கணமாவது இந்நூலி னபிப்பிராயமாயுள்ள பரவஸ்துவை மனத்தாற் காண்டலும், வாக்காற் றுதித்தலும், காயத்தால் வணங்குதலுமாம்.

உரையினைந்திலக்கணமாவது முன்னர் நிர்த்தேசித்த வஸ்து வெளிப்படுநிமித்தம் நூலாசிரியர் கூறுங்கவியில் உயிர் மெய் எழுத்துக்கள் புணர்ந்து விகாரப்பட்டிருந்த பதங்களை யியல்பாக வுரையாசிரியர் பிரித்தலும்,அப்பதங்களிலுள்ள பலபொருள்களை நீக்கி முற்கூறியதற்கியைந்த பொருளைக் கூறுதலும், அப்பொருளிற்கு முதனூலிற் பூருவபட்சமாய்க் கூறும் பலவற்றையு நீக்கிச் சித்தாந்தமாய்க் கூறும் ஆத்ம ஞானசுருதிகளை மேற்கோளாவெடுத்துக்காட்டலும், அவ்விரண்டு மொன்று யனுபவிக்கும்போது அவைகட்குத் தடையாயுள்ளவைகளை நீக்கி அதன் யதார்த்தம் விளங்க வினுதலும், அவ்வினுவிற் கையந்திரிபின்றி யப்பொருள் விளங்க விடை கூறுதலுமாம்.

அன்னுவய விலக்கணமாவது அங்ஙனம் உரையிடுதற்கு மூலமான பதங்களிலமைந்திருக்கின்ற பரவஸ்துவின் சிறப்பென்னும் விசேடணமும், அச்சிறப்பையுடைய விலக்கியமான விசேடியமும், அவ்விலக்கியமான கருத்தாவும், அக்கருத்தாவைக் காட்டுங் கருமமும், அக்கருமந்தவறாது செய்யுங் கிரியையுமான வைந்திற் பரவஸ்துவான கருத்தா வெளிப்படுகிறதற்குப் பொருத்தமான பதங்களை யெடுத்துக் கூட்டிக்கொள்ளுதலாம்.

அனுபந்தமென்பதில் அனு - உபசர்க்கம், பந்தம் - கூடிநிற்றலாம்; எனவே, அது விஷயமாதி நான்குங்கூடி நின்றதாயிற்று.

வினு:—இங்ஙனங் கூறிய மங்களாசரணைக்கும் அங்ஙனங் கூறிய கடவுள் வணக்கத்திற்கும் பொருட்பேதமிருப்ப தென்னை?

விடை:—அஃதிந்நூல் நிர்விக்கினமாய் நிறைவேறு நிமித்தமும் இது சிஷியப் பிரசிஷியப் பிரவாகப் பிரவர்த்தனையோடுங் கூடிய நூன்மரபு விளங்கு நிமித்தமுங் கூறினதேயன்றிப் பொருள்வேறின்றென்க.

(தா-ம்) இந்நூலிற் கூறும் பரவஸ்துவின் இலக்கணமுணரும் நிமித்தம் அமைக்குங் கவிகளின் பொருள் திரிபுபடாமற் செவ்விதாய்ப் பெற்றுக் கொள்ளுகிறதற்காகவேண்டி யிவ்விலக்கணங்களைக் கூறியதென்பதாம். (அ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய அனுபந்த சதுட்டயத்தின் இலக்கணமும் மேற் சாதன சதுட்டயமும் உணர்த்துகின்றார்.

விடயமது சிவ * சீவர் தமதேகத் துவமாம்
விமலனொடு நூற்கறையப் படலறையுந் தன்மை
யடைதலுறு † சம்பந்தம் பயன்றுயரெ லாநீத்
தாநந்த பதம்பெறுதல் சாதனநான் கினையு

* சீவனென்றது சீவசாட்சியான கூடஸ்தனை.

† கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் அறைதல் அறையப்படல் என்னும் பிரதிபாதக பிரதிபாத்திய சம்பந்தமிருக்கிறது. பிரதிபாதனம் (அறைதல்) செய்தலெதுவோ அது பிரதிபாதகமெனப்படும். இந்நூல் பிரமத்தைப் பிரதிபாதனஞ் செய்வதாயிருத்தலால் பிரதிபாதகமாம். எது பிரதிபாதனம் செய்யப்படுகின்றதோ அது பிரதிபாத்தியமாம். பிரமம் இந்நூலாற் பிரதிபாதனஞ் செய்யப்படுவதா யிருத்தலால் பிரதிபாத்தியமாம். எந்த வஸ்துவிற்கு எதனோடு சம்பந்தமிருக்கிறதோ அந்த வஸ்துவிற்கு அதன்கண் சம்பந்தமிருக்கிறது. குயவன் முதலியோருக்குக் குடத்துடன் சம்பந்தமிருக்கிறது. அதனால் அவர்கள் குடத்தில் உபயோகமாகின்றார்கள். எந்தவஸ்துவிற்கு எதனோடு சம்பந்தமில்லையோ அந்த வஸ்துவிற்கு அதனிடத்து உபயோக முண்டாகிறதில்லை. நேத்திரத்திற்கு வாயுவினோடும் ஆகாயத்தினோடும் சம்பந்தமில்லை. அதனால் நேத்திரத்திற்கு வாயுவினிடத்தும் ஆகாயத்தினிடத்தும் உபயோகமுண்டாகிறதில்லை. அதுபோலக் கிரந்தத்திற்கும் பிரமத்திற்கும் பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) சம்பந்தமில்லாவிட்டால் கிரந்தத்திற்குப் பிரமத்திலும் பிரமத்திற்குக் கிரந்தத்திலும் யாதொரு வுபயோகமும் சித்தியாது. ஆகையால் பரஸ்பரத்தின் உபயோகம் பரஸ்பரத்தில் நிச்சயிக்கும்பொருட்டு அவற்றின் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

பிதாவிற்குப் புத்திரன் ஜன்னியனாதலின் பிதாவிற்குத் தனது ஜன்னியனான புத்திரனோடு ஜன்னியத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. அதுபோலக் கிரந்தத்திற்குத் தனது பிரதிபாத்தியமாகிய பிரமத்தோடு பிரதிபாத்தியத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. புத்திரனுக்குப் பிதா ஜனகனாயிருத்தலால் புத்திரனுக்குத் தனது ஜனகனாகிய பிதாவோடு ஜனகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. அங்ஙனமே பிரமத்திற்குக் கிரந்தம் பிரதிபாதகமாம். அதனால் பிரமத்திற்குத் தனது பிரதிபாதகமாகிய கிரந்தத்தோடு பிரதிபாதகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. எப்படி பிதாவிற்கும் புத்திரனுக்கும் ஒருவர்க்கொருவர் ஜன்னிய ஜனகத்தன்மைச் சம்பந்தமிருக்கிறதோ அப்படியே கிரந்தத்திற்கும் பிரமத்திற்கும் ஒன்றற்கொன்று பிரதிபாத்திய

முடையவனே ‡ யதிகாரி யென்றறைவ ரவிஞ
ருரைத்தசா தனசதுட் டயஙித்த வஙித்தப்
படுபொருளின் விவேகமிக பரபோக விராகம்
பழிப்பரிய சமைமுமுட் சுத்வமெனப் படுமால்.

(இ - ள்.) விடயமது - (முற்கூறியவனுபந்த சதுட்டயத்தினுதலிய) விடயமாவது, சிவசீவர்தமது - சீவப்பிரமங்களினது, எசத்துவமாம் - ஐக்கியத்துவமாகும், அடைசலுறும் - பொருந்தாநின்ற, சம்பந்தம் - சம்பந்தமாவது, விமலனெடுநூற்கு -பிரமத்திற்கும் வேதாந்தசாத்திரத்திற்கும், (உடனிகழ்ச்சியாக) அறையப்படல் - சொல்லப்படுதலும், அறையுந்தன்மை - சொல்லுந்தன்மையுமாம், பயன் - பயனாவது, துயரெலாநீத்து - துன்பங்களனைத்தையும் நீக்கி, ஆநந்தபதம்பெறுதல் - நித்தியாநந்தபதத்தையடைதலாம், அதிகாரி - அதிகாரியாவான், சாதன நான்கினையும் - நான்கு சாத

---

பிரதிபாதகத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றதென்பது சித்தித்ததென்க.

இச்சம்பந்தம்போல் அதிகாரிக்கும் பலத்திற்கும், அதிகாரிக்கும் ஆராய்ச்சிக்கும், கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் சம்பந்தங்களிருக்கின்றன.

அதிகாரிக்கும் பலத்திற்கும் பிராப்பியப் பிராபக பாவசம்பந்தமுண்டு. பயன்-பிராப்பியம்; அதிகாரி-பிராபகன். எஃது அடையப்படுகிறதோ அது பிராப்பியமென்றும், எவனதை யடைகின்றானோ அவன் பிராபகனென்றும் சொல்லப்படும். அதிகாரிக்கும் ஆராய்ச்சிக்கும் கர்த்துருகர்த்தவ்விய பாவ சம்பந்தமுண்டு. அதிகாரி - கர்த்தா; ஆராய்ச்சி-கர்த்தவ்வியம். ஒன்றைச் செய்பவனைக் கர்த்தாவென்றும், செய்யப்படுவதைக் கர்த்தவ்வியமென்றும் சொல்லப்படும்.

கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் ஜனகஜன்னிய பாவசம்பந்தமுண்டு. ஆராய்ச்சிவாயிலாகக் கிரந்தம் (நூல்) ஞானத்திற்கு ஜனகமா யிருக்கிறது; ஞானம் ஜன்னியமா யிருக்கிறது. எதனை யெஃதுற்பத்தி செய்கின்றதோ அது ஜனகமென்றும், எதனாலெஃது துற்பத்தி செய்யப்படுகின்றதோ அது ஜன்னியமென்றும் சொல்லப்படும், இதுவேயுமன்றிச் சிரவணாதிகளுக்கும் தத்துவஞானத்திற்கும், மோட்சத்திற்கும் சாதகசாத்தியபாவ சம்பந்தமுண்டென்றுமறிக.

‡ இராஜசூய யாகத்திற்கு க்ஷத்திரிய னதிகாரியாயும் மற்றவர்களல்லராயும், பிரகஸ்பதி சவனமென்னும் யாகத்திற்குப் பிராமண னதிகாரியாயும் மற்றவர்களல்லராயு மிருத்தல்போன்று, அந்தக்கரணத்திலுள்ள மலம் (பாவம்) நிஷ்காமகர்மத்தினாலும் விட்சேபம் (புடைபெயர்ச்சி) ஈசுவரோபாசனையினாலும் ஒழித்துத் தனதெதார்த்த வடிவத்தை (கற்பனையாக) மறைத்திருக்கின்ற அஞ்ஞானத்தோடும் நான்கு சாதனங்களோடுங் கூடியிருக்கிறவனே ஈண்டதிகாரியாவன்; மற்றவர்களதிகாரிகளல்லர்.

னங்களையும், உடையவனே - உடைத்தானவனேயாம், என்றறைவரறிஞர் - என்றறிவுடையோர் சொல்லுவார்கள், உரைத்த - இங்ஙனங்கூறிய, சாதன சதுட்டயம் - சாதன சதுஷ்டயமாவன, நித்தவநித்தப்படுபொருளின் விவேகம் - நித்தியாநித்தியவஸ்துவிவேகமெனவும், இகபரபோக விராகம் - இகமுத்திரார்த்தபலபோகவிராகமெனவும், பழிப்பரிய சமை - குற்றமற்ற சமாதிசட்கசம்பத்தி யெனவும், முமூட்சுத்துவ மெனப்படும் - முமுட்சுத்துவ மெனவுஞ் சொல்லப்படும், எ - று. ஆல் - அசை.

வடநூலார் அறையப்படலைப் பிரதிபாத்தியமெனவும், அறையுந்தன்மையைப் பிரதிபாதகமெனவும் கூறுவர்.

(நா - ம்.) குருமுகமாகத் தெளிந்துகொள்ளுஞ் சீடனுக்கு இந்நூற்பொருளாகிய கூடத்தப்பிரம ஐக்கியமான வத்துவிதஸ்வரூபமே அபரோட்சமானவிடயமெனவும், அவ்வஸ்துவும் இந்நூலினருத்தமு மொன்று யிருப்பதே சம்பந்தமெனவும், அதனுற்றுக்க நிவர்த்தியாய்த் தடையற்ற வாநந்தம் வருதலே பயனெனவும், இப்பயனையடைதற்கேதுவான சாதனசதுட்டயமுடையவர்களே யதிகாரிகளெனவுங் கூறினதாம். (கூ)

அ - கை.

இச்செய்யுளில் மேற்கூறிய சாதனசதுட்டயங்களின் மூன்ற னிலக்கண முணர்த்துகின்றார்.

நித்தியமான் மாவேபொய் விடயமெலா மெனத்தேர்
  நிலைதருநித் தியாநித்திய வத்துவிவே கம்பின்
மெத்திவரு மிகமுடனுத் தரத்தில்வரு போக
  விராகமிம்மை மறுமையுள விடயநுகர் வனைத்தும்
பொய்த்தழியு மிடும்பையென மனம்விடுத லாகும்
  புகழ்சமையே முதலாய சட்குணங்கள் பெறுதல்
வைத்தசமை யியல்பாய முத்திவிருப் பதுவே
  வயங்குமுமூட் சுத்துவமென் றறிந்திடுக மதித்தே.

(இ - ள்.) நித்தியாநித்தியவத்துவிவேகம் - (முற்கூறிய சாதனநான்கனுள்) நித்தியாநித்திய வஸ்து விவேகமாவது, * நித்தியமான்மாவே - பிரமமே நித்தியவஸ்துவெனவும், பொய்விடயமெலாமென - விஷயரூபமான சகத்தும் அதன் காரணமான மாயையும் அநித்தியவஸ்துவெனவும்,

---

* நித்தியவஸ்து சேதனமென்றும் அனித்தியவஸ்து மாயையும் அதன் காரியமாகிய உலகமுமென்றும் பரோட்சமாகத் திடப்பட வேறு பிரித்தறிதல் நித்தியாநித்திய வஸ்து விவேகமாம். அழிவுபாட்டபாவத்திற் கெதிர்மறையாகாதது நித்தியவஸ்துவென்றும், அழிவுபாட்டபாவத்திற்கெதிர்மறையாவது அநித்தியவஸ்து வென்றும் அறிக.

தேர்நிலைதரும் - பகுத்தறிவசாம், பின்மெத்திவரும் - பின்பமைத்துக்கூறிய, இகமுடனுத்தரத்தில் வருபோக விராகம் - † இகமுத்திரார்த்தபலபோக விராகமாவது, இம்மை மறுமையுள-இகத்தினும் பரத்தினுமுள்ள, விடய நுகர்வனைத்தும் - விடயானுபவங்களியாவும், பொய்த்தழியும் - இன்பம்போலத் தோற்றி மித்தையாக நசிக்கப்பட்ட, இடும்பையென - துன்பமயமெனக்கண்டு, மனம்விடுதலாகும்-அவைகளில் மனம் பற்றறவிடுதலாம், வைத்தசமை - பின்வைத்த சமையாதிசட்கசம்பத்தியாவது, புகழ்-புகழ்பெற்ற, சமைமுதலாய - சமை முதலிய, சட்குணங்கள் பெறுதல் - ஆறுகுணங்களையு மடைதலாம், வயங்கு முமூட்சுத்துவம் - பின் விளங்கவைத்த முமுட்சுத்துவமாவது, இயல்பாய முத்திவிருப்பதுவே யென்று - சகஜசாயுச்சிய ஸ்வரூப மோட்சாபேட்சையே யாமென்று, அறிந்திடுகமதித்து - யூகித்தறிவாயாக, எ-று. ஏ-ஈற்றசை. (௧௦)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்தமுறையாற் சமைமுதலிய சட்குணங் களினுமமும் அவைகளி னிலக்கணங்களும் உணர்த்துகின்றார்.

‡ சமைதமையே திதிக்கையுப ரதிசிரத்தை சமாதி
சமைமுதலா மறுகுணங்க ளுட்கரண மடக்கல்
சமைதமைதான் புறக்கரண மடக்குதல்கா மாதி
தணித்திடுகை திதிக்கைகரு மங்களனைத் தினையுஞ்
சுமையெனவே விடுதலுப ரதிசுருதி குருவைத்
துணிவினு னம்புமதே சிரத்தைகுரு மொழிநெஞ்
சமைவுறவே திட்பமுறல் சமாதியிச்சா தனஞ்சே
ரதிகாரி செயுங்குருசே வையினையெடுத் தியம்பில்.

---

† இம்மையிலும் மறுமையிலு மடையத்தகுவதாயுள்ள விஷயபோகங்களெல்லாம் நிலையற்றனவென்றும், உண்மையில் துன்பத்தைத் தருவனவென்று மறிந்து அவற்றின்கண் ஆசையில்லாதிருத்தல் இகபரபோகவிராகமாம். இகம் - இவ்வுலகம்; பரம் - சுவர்க்காதியுலகம்; போகம் - இன்பத்துன்பங்கள் புலப்படத்தோன்றல். ஈண்டுப்போகமென்பது இன்பம் புலப்படத்தோன்றலின்மேல் நின்றது.

‡ ஒருகோவையின்கண் வெவ்வேறுவகைப்பட்ட பல விரத்தினங்கள் கோக்கப்பட்டிருப்பினும் பல விரத்தினங்கள் கோக்கப்பட்டிருத்தல்பற்றிப் பலவென்று கூறுது ஒருகோவையென்றே சொல்லுதல்போன்று, மூன்றுஞ் சாதனமாகக் கூறிய சமதமாதிகள் வெவ்வேறுவகைப்பட்ட விலக்கணமுடையனவாயினும் பரஸ்பரசகாயத்தை யபேட்சிக்கிறபடியினுல் அவ்வாறுங் கூடியது ஒரேசாதனமென்று சொல்லப்படுகிறதென்க.

(இ - ள்.) சமை - சமையும், தமை - தமையும், திதீக்கை - திதீட்சையும், உபரதி - உபரதியும், சிரத்தை - சிரத்தையும், சமாதி - சமாதியுமே, சமைமுதலா மறுகுணங்கள் - முற்கூறிய சமாதிசட்க சம்பத்தியாம், (அவற்றுள்) உட்கரண மடக்கல் - அந்தக்கரணங்களைப் பாகியவிடயத்திற் செல்லவொட்டா தகத்திலடக்குதல், சமை-சமையாம், புறக்கரணமடக்குதல் (ஞானேந்திரிய கன்மேந்திரியங்களான) பாகிய கரணங்களையு மவ்வாறடக்குதல், தமை - தமையாம், காமாதிதணித்திடுகை - காமக்குரோதாதிகளை மேலெழவொட்டாது தணியச்செய்தல், திதீக்கை - திதீட்சையாம், கருமங்களனைத்தினையும் - சகல கருமங்களையும், சுமையெனவே விடுதல் - பயனின்றிய பாரமென நீக்குதல், உபரதி - உபரதியாம், சுருதி - வேதமுடியினுள்ள மகாவாக்கியத்தையும், குருவை - ஆசிரிய ருபதேச வாக்கியத்தையும், துணிவினுனம்புமதே - உண்மையெனத் தெளிவாக நம்புதலே, சிரத்தை - சிரத்தையாம், குருமொழி - ஆசிரிய ருபதேசவசனம், நெஞ்சமைவுற - மனதின் கட்பொருந்த, திட்பமுறல் - சலனமின்றித் திடமாயிருத்தல், சமாதி - சமாதியாம், இச்சாதனஞ்சேர் - இந்நான்கு சாதனமுமடைந்த, அதிகாரிசெயும் - அதிகாரியான சீடன்செய்யும், குருசேவையினை - குருதரிசனத்தின் முறைமையை, எடுத்தியம்பில் - எடுத்துச்சொல்லுமிடத்து, எ - று. தான் - ஏ, அசை. பவத்தைத் தாண்டுகைக் கிச்சையாதோ, அதுவே திதீட்சையாம். ஆமென்பதும், எண்ணும்மையும், வருவிக்கப்பட்டன.

(தா-ம்.) முற்கூறிய பரவஸ்துவே நித்தியமெனவும் பிரகிருதி முதற் பௌதிகமீறான சகலமும் அநித்தியமெனவும் அறிந்து, அச்சகலமும் அநித்தியமென்பதற் கனுபவந்தோன்ற அவைகளி னிராசை பிறத்தலும் அந்நிராசை யனுபவமாதற் கடையாளமான சமாதி சட்கசம்பத்தியும் அக்குணங்களாற் பரவஸ்துவை யடைதற் கடையாளமான முத்தி விருப்பமு முடையவனே யதிகாரியென்பதாம். (கக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய அதிதீவர பக்குவமுடைய அதிகாரியானவன் ஆசிரியரைப் பூசித்தவருக் கன்புசெய்யும் நான்கு பகுதியி னிலக்கணமும் மூன்றதிகாரிகளி னுமமும் உணர்த்துகின்றார்.

ஆத்தமுட னங்கமே தானஞ்சற் பாவ
மாமவற்றுட் குருபரனுக் கனுகூல விருத்தி
யாத்தமுயர் குருபரன்குற் றேவலே யங்க
மருட்குரவற் குரியமனை நிலமுதலா மவற்றைக்
காத்தலது தானமாஞ் சற்குருவே மெய்யாய்க்
கண்டசிவ மெனநம்பு மதுவேசற் பாவ
மேத்துகரு மம்பத்தி மிகுஞான காண்ட
மெனுமிவற்றுன் மூவதிகா ரிகள்வே றுமுளரால்.

(இ - ள்.) ஆத்தமுடன் - (அக்குருசேவையானது) ஆப்தமும், அங்கம்-அங்கமும், தானம் - தானமும், சற்பாவமாம் - சற்பாவமுமென நான்காம், அவற்றுள் - அந்நான்கனுள், குருபரனுக்கு - ஆசிரியருக்கு, அனுகூலவிருத்தி - அவர்பிரியவசத்தாய் நடப்பதே, ஆத்தம் - ஆப்தமும், உயர் குருபரன் குற்றேவலே - மாட்சிமையுள்ள வாசிரியரது பாதசிசுருஷையே, அங்கம்-அங்கமும், அருட்குரவற்கு - கருணையே வடிவமான வாசிரியருக்கு, உரிய - உரித்தாகிய, மனைநில முதலாமவற்றை - கிரகக்கிராம முதலானவற்றை, காத்தலது - விக்கினம் வாராமற் காப்பதே, தானமாம் - தானமும், சற்குருவே - ஆசிரியரே, மெய்யாய்க்கண்ட - உண்மையாக வனுபவத்திற் றரிசித்த, சிவமென - பிரமஸ்வரூபமேயென, நம்புமதுவே-மனதிற் றுணிவு பிறந்திருத்தலே, சற்பாவம் - சற்பாவமுமாம், ஏத்து - துதிபெற்ற, கருமம் - கருமகாண்டமும், பத்தி - பத்திகாண்டமும், மிகுஞான காண்டமெனும் - மேன்மையமைந்த ஞானகாண்டமு மென்கின்ற, இவற்றால் - இம்மூன்றினால், மூவதிகாரிகள் - கருமகாண்டி பத்திகாண்டி ஞானகாண்டியென மூன்றதிகாரிகளும், வேறுமுளர்-(முற்கூறிய சாதன நான்கினையு முடையவனே அதிகாரி யென்பவனையே யன்றி) மற்றுமுளர், ஏ - று. ஏ - ஆல், அசை. என்னுமைகள் வருவிக்கப்பட்டன.

(ப-ம்.) இருவிழிக்கோர் மணிபோல் இவனறிவு அவரறிவினிற்றலின் 'ஆத்தம்' எனவும், கண்ணிற் கிமைபோல இவன் அங்கம் அவரங்கமாகப் பணிசெய்து நிற்றலின் 'அங்கம்' எனவும், பிதாசுதன்போல இவன் தன் பொருளை யவர் பொருளாகக் கொடுத்தலால் 'தானம்' எனவும், பிரமநிஷ்டரைப்போன்று இவன் தன்னிசஸ்வரூபம் அவரது சத்துஸ்வரூபமாகப் பாவித்தலிற் 'சற்பாவம்' எனவுங் கூறினார். இவற்றை நிரலே ஆவி, உடல், பொருள்களைப் பிரமோபதேசகாலத்தி லாசிரியருக்குத் தத்தமாகக் கொடுப்பானென்பதும், மேற்சேஷித்து நின்ற தனது ஸ்வரூபமே குருதுரியமெனக் கண்டமைந்து நிற்பானென்பதுங் காண்க. 'மனை நிலம்' என்றமையால் துறவியேயன்றிக் கிரகஸ்தனும் குரவனுவா னென்பதாயிற்று.

(தா - ம்.) குருகுலவாசத்திற் சீடன் செய்யுமுறைமையாவது ஆசிரியருக்குத் தஸ்மரணை விட்டு விஸ்மரணைவாராது அவர் பிரியப்படி நடப்பதும், அவரது தேக சவரக்ஷணை நிமித்தமான பணிகளைச் செய்வதும், அவரது குடும்ப முதலியவைகளைத் தானே பொறுத்துக்காத்தலும், அவரே சிவஸ்வரூபமெனத் தரிசித்தலுமாம். (கஉ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய கருமகாண்டி முதலிய மூவரிலக்கணங்களையும் அப்பியாசிகளின் தாரதம்மியமான கருமிமுதலியோரின் ஐந்து நாமங்களையும் உணர்த்துகின்றார்.

உடம்பினையும் வருகுடும்பந் தனையுமியா னெனதென்
றுளன் கரும காண்டியெலாக் கிரியையுமீ சற்கே

திடம்பெறநின் றூக்குமவ னேபத்தி காண்டி
செயுங்கரும மனைத்தினுக்குங் கரிதானென் றிருப்போன்
மடந்தவிரு நன்ஞான காண்டியென லாகு
மற்றுமுள ரைவரொரு வர்க்கொருவ ருயர்வா
யடைந்தவதி காரிகளாங் கருமிமுமூட் சுவினோ
டறையுமப்பி யாசியனு பவியுடனா ரூடன்.

(இ - ள்.) உடம்பினையும் - (முற்கூறியமூவருள்) தேகத்திலும், வருகு டும்பந்தனையும்-அதுகாரணமாகவந்த கிரககிருத்தியாதிகளிலும், யானென தென்றுளன்-யானென்னும் அகங்காரமு மெனதென்னு மமகாரமு முள்ள வனே, கருமகாண்டி - கருமகாண்டியெனவும், எலாக்கிரியையும் - யாகாதி சகல கருமங்களையும், ஈசற்கே-பரமசிவத்திற்கேயென, திடம்பெற நின்று- திடமாக நின்று, ஆக்குமவனே - செய்பவனே, பத்திகாண்டி - பத்திகாண் டியெனவும், செயும்-திரிகரணங்களும் செய்கின்ற, கரும மனைத்தினுக்கும்- சகல கிரியைகளுக்கும், கரிதானென்றிருப்போன் - தானேசாட்சியென்றி ருப்பவன், மடந்தவிரும் - அறியாமை நீங்கிய, நன்ஞானகாண்டி யெனலா கும் - நன்மையுள்ள ஞானகாண்டியெனவுமாம், மற்றும் - இவர்களையன்றி யும், ஒருவர்க்கொருவர் - ஒருவருக்கொருவர், உயர்வாயடைந்த - மேம்பாடு பெற்ற, கருமி - கருமியும், முமூட்சுவினோடு - முமுட்சுவும், அறையு மப்பி யாசி - சொல்லாநின்ற அப்பியாசியும், அனுபவியுடன் - அனுபவியும், ஆரூடன் - ஆரூடனுமாகிய, அதிகாரிகள் - அதிகாரியானவர்கள், ஐவ ருளர் - ஐந்துபேரிருக்கின்றனர், எ - று. உடம்பையா னெனவும், குடும் பத்தை யெனதெனவுங்கொள்க. ஆம் - சாரியை.

(தா - ம்.) சகல கருமங்களையுங் காமியமூலமாகத் தனக்காக்கிச்செய் பவன் கருமகாண்டியெனவும், அக்கருமங்களை நிஷ்காமமாகவீசுரார்ப்பணஞ் செய்பவன் பத்திகாண்டியெனவும், இக்காமிய நிஷ்காமியங்களாற் செய் யுங் கருமங்க ளனைத்திலும் பற்றின்றி அவைகளியாவுந் தனதிடத்து நிக ழ்வதாயும் தானவற்றிற்குச் சாட்சியாகவும் காண்கின்றவன் ஞானகாண்டி யெனவும் விளக்கியதாம். (கரு)

அ - கை.

இச்செய்யுளில் மேற்கூறிய வைந்ததிகாரிகளுள் நால்வ ரிலக்கண முணர்த்துகின்றார்.

மூடமொடு தன்சாதி கருமமே பற்றி
முத்தனு மவனூறு பிறப்பினிலொண் கருமி
நீடுலக முண்மையென நினைந்துபுறக் கரும
நிட்டனுய் முப்பிறப்பின் முத்தனு மவனே

நாடரிய முமூட்சுலகங் கனவெனக்கண் டுள்ள
நற்கருமஞ் சேர்ந்துபிறப் பிரண்டினிலப் பியாசி
வீடுலக விவகார நினையாமல் விவேக
மேவியோர் பிறப்பினு முத்தனனு பவியே.

(இ - ள்.) மூடமொடு - (முற்கூறிய வதிகாரிகளைவருள்) அறியாமையால், தன்சாதி - தன் வருணத்திற்குரிய, கருமமேபற்றி - கருமத்தையே கடைப்பிடித் தொழுகி, நூறுபிறப்பினில் - மேற்சதஜன்மத்தில், முத்தனுமவன்-சீவன்முத்தனாகு மவனே, ஒண்கருமி - சிறந்த கன்மியாம், நீடுலகம் - விரிவாகத் தோன்றி நசிக்கின்றசகம், உண்மையென - (எவ்விதத்தாலும்) உண்மையாகாதென்று, நினைந்து - தெளிவாகக்கருதி, புறக்கருமநிட்டனாய்- அச்சக சம்பந்தத்திற்கு வேறான குரு சிசுருஷைபுடையவனாய், முப்பிறப்பின் - மூன்று ஜநநத்தில், முத்தனுமவனே - சீவன்முத்தனாகு மவனே, நாடரிய முமூட்சு - நாடற்கரிய முமூட்சுவாம், உலகம் கனவெனக்கண்டு - இச்சகத்தைச் சொப்பனம்போலப் பார்த்து, உள்ளம் - மனத்தில், நற்கருமஞ்சேர்ந்து - நல்ல ஞானப்பியாசஞ்செய்து, பிறப்பிரண்டினில் - இரண்டு சென்மத்தில், (சீவன்முத்த னாகுமவனே) அப்பியாசி-அப்பியாசியாம், வீடு - முன்விடப்பட்ட, உலக விவகாரம் - சகத் விவகாரங்களை, நினையாமல் - மேற்கருதாமல், விவேகமேவி - ஆத்மவிவேகத்தையடைந்து, ஓர் பிறப்பின் - ஒரு ஜநநத்தில், முத்தனும் - சீவன் முத்தனாகின்றவனே, அனுபவி - அனுபவியாம், எ - று.

பிறப்பிரண்டினிலென்பதனீற்றில்சீவன்முத்தனாகுமவனேயென்பது வருவித்துரைக்கப்பட்டது. வீடுலகவிவகார நினையாமலென்றது நீங்கின புறப்பற்றுக்களின் வாசனை தோன்றாதகப்பற்று நீக்கத்தினை.

(ப - ம்.) வேதங்களிற் கூறும் விதி நிஷேதஞ் சித்தார்த்தபோதமென்னும் வாக்கியங்களிலொன்றுந் தோன்றாதவித்தையால் மறைக்கப்பட்டிருந்தவன்நிஷேதவாக்கியத்தைநீக்கி விதிவாக்கியத்தி லோர்பிரயோசனத்தைக் குறித்தாவது கட்டுப்பட்டானாதலாற் கணிக்கப்படாத சநநமற்றுக் கணிக்கப்பட்ட சில பிறப்பிலே முத்தியை யடைவானென்பார் 'நூறுபிறப்பினிலொண் கருமி' எனவும், அக்கருமத்தினு லுண்டாகும் பதப்பிராப்தி முதலிய பிரயோசனங்களனைத்தும் அனித்தியமாய்த் துன்பத்தை விளைத்தலின் அவைகளில் தோஷ திருஷ்டியுண்டாய் நித்தியவஸ்துவை யடை யவிருப்பமுடையவனாய்ச் சித்தார்த்த போத வுபதேசவாக்கியார்த்த நிச்சயங்களைக் குருமுகமாய்ச் சிரவணஞ் செய்பவன் மேல் மனனம், நிதித்தியாசனம், சமாதியென்னு மிம்மூன்றையு மனுஷ்டித்து முத்தியடையவேண்டு மென்பார் 'முப்பிறப்பின் முத்தனுமவனே...முமூட்சு' எனவும், அவ்விசாரணையிற் சேடித்த பிரமவஸ்துவைச் சம்சயமற மனனஞ்செய்பவன் மேல் நிதித்தியாசனம்,சமாதியென்னு மிவ்விரண்டையு மனுஷ்டித்து முத்தியை யடைய

வேண்டுமென்பார் 'இரண்டு பிறப்பினில் (முத்தனாகுமவனே) அப்பியாசி' எனவும், அம்மனனத்தினுற் றெளிந்த வஸ்துவை நிதித்தியாசனத்திற் காட்சிப்படுவான் மேற்சமாதியை யனுஷ்டித்து முத்தியை யடையவேண்டு மென்பார் 'ஓர் பிறப்பினு முத்தனனுபவி' எனவுங் கூறினர். (கச)

அ - கை.

இச்செய்யுளில் மேற்கூறிய ஐவருள் முடிவான ஆரூடனிலக்கண மும் மேல் உலக முதலியாதென்னும் விவேகி முதலிய மூன்றதிகாரிகளி னிலக்கணமு முணர்த்துகின்றார்.

உலகநிலை தோன்றுமற் றன்றிகழ்ஞா னத்தா
 னுண்மைமுத்த னுமவனே யாரூடன் மற்று
முலகமுத லியாதெனத்தேர் வொடுகுருவை யடைந்து
 முடம்பாதி பொய்யெனக்கண் டருட்குருவை யடைந்து
முலகிலொரு குரவன்றன் மகற்குபதே சஞ்செய்
 துறக்கேட்டு முயர்தருஞா னிகளாகி முத்தி
யுலகுதொழு விவேகமொடு விரத்திதெய்வ கதியா
 லுற்றிடுவ ரிவர்வேறு மூவதிகா ரிகளாம்.

(இ - ள்.) உலக நிலைதோன்றுமல் - சகத்தோற்றரவில்லாமல், தன் றிகழ் ஞானத்தால் - தானேதானாய்விளங்குகின்ற ஞானத்தினல், உண்மை முத்தனுமவனே - இச் சநநத்திற் சத்தியமுத்தனுமவனே, ஆரூடன் - ஆரூடனாகும், மற்றும் - இவ்வைந்ததிகாரிகளன்றிப் பின்னும், உலகமுதல் (காரியவடிவாய் மித்தையாயிருத்தலினல்) சகத்தின் காரணம், யாதென - யாதென்கிற, தேர்வொடு - விசாரணையுடன், குருவையடைந்தும் - ஆசிரி யரைச்சேர்ந்தும், உடம்பாதி-சரீரமுதற் பிரகிருதியீறன தத்துவங்க ளியா வும், பொய்யெனக்கண்டு - அனித்தியமெனக்கண்டு, அருட்குருவை யடை ந்தும் - கருணைவடிவமான வாசிரியரைச்சேர்ந்தும், உலகிலொரு குரவன்- உலகத்திலோராசிரியன், தன்மகற்கு - தனது சீடனுக்கு, உபதேசஞ்செய் துற - உபதேசஞ்செய்ய, கேட்டும் - அதனைக் கேள்விபட்டும், உயர்தரு ஞானிகளாகி - மாட்சிமைபொருந்திய ஞானவான்களாகி, உலகு தொழு விவேகமொடு - பெரியோர்கள் வணங்கும் விவேகத்தினாலும், விரத்தி-விர த்தியாலும், தெய்வகதியால் - தெய்வகதியாலும், முத்தி - மோட்சத்தை, உற்றிடுவர் - அடைவர், இவர்வேறு-முற்கூறியவர்களையன்றி வேறே யிவர் களும், மூவதிகாரிகளாம் - மூன்றதிகாரிகளாவர், எ - று.

சத்திய முத்தன்-சத்தியோ முத்தன்; ஞானமுதயமானபோதே சீவன் முத்தனானவன்.

(ப - ம்.) முன் நிதித்தியாசனத்திற் காட்சிப்பட்டுத் தெளிந்த பர வஸ்துவே தானகச் சமாதியின்கண்ணுதயமான வபரோட்ச சாட்சாத்கார

மானவப்போதே முத்திபெற்றுனென்பார் 'உண்மை முத்தனுமவனேயாரு டன்' எனவும், அசத்தியமான விச்சகஞ் சிருஷ்டியாதற்குமுன் சத்தாமாத் திரமாயிருந்தது யாதென்கின்ற விவேகத்தினுல் குருமுகமாய் விசாரித்திவ் வசத்தை நீக்கி யச்சத்தாயிருக்கின்ற பிரமத்தை யடைந்தானென்பார் 'உலக முதலியாதெனத் தேர்வொடு குருவை யடைந்து' எனவும், தேகமுதற் பிரகிருதியீருன சகல தத்துவங்களு மனித்தியவஸ்து வெனக் குருமுக மாய் விசாரித்து அவைகளில் விரக்தியுடையவனுய் அவைகளழிந்தும் அழி யாதிருக்கின்றதானே நித்தியமான பிரமமென்றறிந்து அஃதை யடைந்தா னென்பார் 'உடம்பாதி பொய்யெனக்கண் டருட்குருவை யடைந்து' எனவும், ஒன்றிலும் பற்றற் றிருக்கின்ற நின்மலமான சித்தத்தில் ஆசிரியர் மாணுக்கனுக் குபதேசிக்கும் பிரமானுபவந் தெய்வகதியாலமைய அப் பிரமத்தை யடைந்தானென்பார் 'குரவன்றன்மகற்குபதேசஞ் செய்து றக் கேட்டுத் தெய்வகதியா லுயர்தருஞானிகளாகி முத்தி...உற்றிடுவர்'என வுங் கூறினர். தெய்வகதி யென்பது இவனது முயற்சியின்றி நிஷ்காம புண்ணிய பரிபாகத்தினுற் றனக்குத்தானே யோர் முன்னிலையிலுண்டாவ தாமென்க.

(தா-ம்.) இச்சகத்தையும் இதிலுள்ள சுகதுக்கங்களையு முண்மையெ னக்கருது மறியாமையை நீக்குவான் கருதி அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் விதித்த தத்தம் விதிப்படி நடக்கின் இச்சகபோகங்கள் அசத்தியமாய்ப் பரலோக போகங்கள் சத்தியமாமெனக் கருதி நடப்பவனே கருமியும், இக்கரும முதிர்ச்சியால் இவ்விகபரங்கள் உண்மை யன்றென்று தெளிந்துஅவற்றின்அபரோட்சம் வெளிப்படுநிமித்தம் இச்சக சம்பந்த மில் லாது சற்கருமங்கள் செய்பவனே முமுட்சுவும், இச்சற்கரும முதிர்ச்சியாற் கனவைப்போல மனத்தோற்றரவே சகமெனக் கருதிச் சமாதி யனுஷ்டிப் பவனேஅப்பியாசியும், இவ்வப்பியாச முதிர்ச்சியால் இச்சகரூபமாகிய மனத் தின் காரணமான அறிவுதயமாய் அதனிடத் தமைந்திருப்பவனே அனுபவி யும், இவ்வறிவின் முதிர்ச்சியால் தானே சகமாய் இச்சகத் தோற்றரவின்றிச் சாட்சாத்காரமா யிருப்பவனே ஆருடனும், இச்சகத்காரணம் யாதென் னும் விவேகத்தினுற் குருமுகமாய் விசாரித்துப் பிரமமே தானெனத் தெளி ந்த விவேகியும், தேக முதலியவைக ளனித்தியமா யிருத்தலின்மேல் நித்தி யமாயிருப்பது யாதென்கின்ற விரத்தியினுற் குருமுகமாய் விசாரித்துப் பிர மமே நித்தியமெனத் தெளிந்த விரத்தனும், இப்பிரமமே நீயெனச் சீடனுக் காசிரிய ருபதேசிக்கு முபதேசமே தனக்குபதேசமாகப் பிரமமே தானெ னத் தெளிந்த தெய்வகதியனுமாகிய இவ்வெண்மரு மதிகாரிகளாவ ரென் பதாம். (கரு)

அ-கை.

இச்செய்யுளில் சீடர்களின் அதிகாரபேதங்களால் வரும் ஆசிரியர்பே தம் எண்வகையாகக் கூறுவான் றொடங்கிப் போதகர் முதலிய நால்வ ரிலக்கண முணர்த்துகின்றூர்.

சாதகர்க ளாஞ்சீடர் பேதத்தாற் குரவர்
தாமும்போ தககுருவே முதலாக விருநாற்
பேதமடை குவரவரிற் போதகன்முன் னூலிற்
பெரும்பொருள்கூ றிடுபவன்றத் துவந்திகழ்த்து பவனே
வேதகனல் வசியாதி யாலிம்மை யின்பம்
வெந்துயரங் குதவுமவ னிகிதகுரு வறத்தைப்
போதகஞ்செய் திருமையினு மின்பமருள் பவனே
புகழ்தருகா மியகுருவென் றறைகுவர்மூ தறிஞர்.

(இ-ள்.) சாதகர்களாம்-(முற்கூறிய) அப்பியாசிகளாகிய, சீடர்பேதத்தால் - மாணுக்கர் பேதங்களினுல், குரவர்தாமும் - ஆசிரியர்களும், போதக குருவே முதலாக - போதகாசாரிய ராதியாக, இருநாற்பேத மடைகுவர் - எண்வகைப்படுவார்கள், அவரில் - அவர்களில், முன்னூலின் - முதனூலான வேதத்திலுள்ள மகாவாக்கியத்தின், பெரும்பொருள் கூறிடுபவன் - மாட்சிமையுள்ள அருத்தத்தைப் போதிப்பவனே, போதகன் - போதகாசாரியனும், தத்துவந் திகழ்த்துபவன்-பிரகிருதிமுதலிய தத்துவங்களை வேதித்துப் பரதத்துவத்தைத் தரிசிப்பித்தவனே, வேதகன் - வேதகாசாரியனும், நல்வசியாதியால் - சிறப்புள்ள வசியமுதலிய அஷ்டகருமங்களால், இம்மையின்பம் - இகலோகத்திலின்பமும், வெந்துயரங்கு - அப்பரலோகத்தில் வெவ்வியதுன்பமும், உதவுமவன் - கொடுப்பவனே, நிகிதகுரு - நிகிதாசாரியனும், அறத்தை - காமியகருமத்தைச் சொல்லுங் கருமநூலை, போதகஞ்செய்து - போதித்து, இருமையினும்-இம்மை மறுமை யிரண்டினும், இன்பமருள்பவனே - பேதசுகங்களை வருவிப்பவனே, புகழ்தரு - புகழ்பெற்ற, காமிய குருவென்று - காமியாசாரியனென்று, அறைகுவர் மூதறிஞர் - பேரறிவையுடையோர் சொல்லுவார்கள், எ - று.

நிஹிதமென்னு மாரியமொழி "மூன்றேயகவும்" என்னுஞ் சூத்திரப்படி நிகிதமென வந்தது; விகிதமான ஹிதத்தை நீக்கலால் நிகிதமாயிற்று. வசியாதியென்றது வசியம், மோகனம், தம்பனம், ஆகருஷ்ணம், உச்சாடனம், வித்துவேஷ்ணம், பேதனம், மாரணம் என்னும் அட்டகருமங்களை. அவை: சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதரென்னும் நவநாதசித்தர்களாற் கற்பிக்கப்பட்ட சவுளயாமளாதி இம்சை மைதுனுதி நிடேதகருமமுள்ள சாத்திராந்தரங்களிற்கூறுவனவாம். அவற்றுள்:— ராஜவசியம், சனவசியம், ஸ்திரீவசியம், சுரபூத கிரகாவேசங்களை வசியமெனவும்; பாதுகாசித்தி, அஞ்சனுசித்தி, குளிகாசித்தி, மூலிகாசித்தி, ரசவாதாதிசித்திகளைச் செய்வது பேதனமெனவும்; சுழுத்தி, விடம், மூர்ச்சை, சாதுரிக கரணலட்சண மாயங்களைச் செய்வது மோகனமெனவும்; அக்கினிஸ்தம்பம், சலஸ்தம்பம், இந்திரியஸ்தம்பம், கட்கஸ்தம்பம், கதிஸ்

தம்பம, ரூபஸ்தம்பாதிகளைச் செய்வது ஸ்தம்பனமெனவும்; வஸ்திராபரணவாகன வனிதாதி வஸ்துக்களை நிசஸ்தானத்திலிருந்து வரச்செய்வது ஆகருஷ்ணமெனவும்; பூருவசுகாசிரம நிரசனாத்மகமே உச்சாடனமெனவும்; பிராணசிநேகமானவிடத் தன்னியோன்னிய விரோதகரணஞ் செய்வது வித்துவேஷணமெனவும்; அபிசாரகன்ம ஜனிதவியாதியாதிகளிலிருந்தகால மிருத்துவரச் செய்வது மாரணமுமாம். (கசு)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையாற் சூசகன்முதல் நால்வரிலக்கணமும் சீட ரதிதீவர பக்குவத்தினால் வருந் துக்கதரிசனமும் உணர்த்துகின்றார்.

சூசகனும் விவேகத்தாற் சமைமுதலாங் குணங்க
　டொகுப்பவன்பொய் விடயமென வான்மவிருப் பருள்வோன்
வாசகனுஞ் சிவசீவ ரைக்கியஞா னத்தை
　வழங்குமவன் காரக னையந்தவிர்த்து நிலைத்த
வாசகலு முத்தியருள் பவன்விகித குருவா
　மதிகாரி யிவராகு மெனமுன்னர்க் கூறு
நேசமுறு சீடர்தம்மு ளொருவன்முத் தாப
　நெருப்பினால் வெந்துசிந்தா குலமுடைய னாகி.

(இ - ள்.) விவேகத்தால் - விவேகமுகத்தினால், சமைமுதலாங்குணங்கள் - சமைமுதலாகிய ஆறுகுணங்களையும், தொகுப்பவன் - ஒருங்கேவரப்பண்ணுகிறவனே, சூசகனும் - சூசகாசாரியனும், பொய்விடயமென-விடயங்களனைத்து மித்தையென வெறுக்கச்செய்து, ஆன்மவிருப்பருள்வோன்- ஆன்மாவினிடத்து விருப்பமுண்டாகச் செய்பவனே, வாசகனும் - வாசகாசாரியனும், சிவசீவரைக்கிய ஞானத்தை - சீவப்பிரம ஐக்கிய ஞானத்தை, வழங்குமவன் - கொடுப்பவனே, காரகன் - காரகாசாரியனும், ஐயந்தவிர்த்து - சந்தேகத்தைநீக்கி, நிலைத்த - நிலைபெற்ற, ஆசகலுமுத்தி - குற்றமற்ற மோட்சத்தை, அருள்பவன் - அனுக்கிரகிப்பவனே, விகிதகுருவாம் - விகிதாசாரியனும், அதிகாரி யிவராகுமென் - இவர்க ளதிகாரி யாவர்களென்று, முன்னர்க்கூறும் - முன்பு சொல்லாநின்ற, நேசமுறுசீடர்தம்முள் - அன்புள்ள சீடர்களுக்குள்ளே, ஒருவன் - ஒருபுருடன், முத்தாபநெருப்பினால் - தாபத்திரயாக்கினியினால், வெந்து - வெதும்பி, சிந்தாகுலமுடையனாகி - மனதிற் றுக்கமுடையவனாய், எ - று.

விருப்பென்றமையால் வெறுக்கச்செய்து என்பது வருவிக்கப்பட்டது. விசேடமான இதத்தைச் செய்தலால் விகிதமெனவந்தது. காரகன் - கொடுப்பவன்; எனவே, ஐக்கியஞானத்தைக் கொடுப்பவனென்பதாயிற்று. முற்கூறிய சாதன சதுட்டயமுடைய முமுட்சுமுதற் றெய்வகதியனீறான அதிகாரிகள் பன்னிருவருள் உத்தமன், மத்திமன், அதமன், அதமாதம னென்

றொருவர்க்கொருவர் தாரதம்மியமா யிருப்பாராதலின் இச்சீடர்களின் பக்கு வங்களைக்குறித்து வந்தநாம மெண்வகையாதலால் அவ்வாசிரியர் பேதமின் றெனவும்; இவர்களுள் விகிதகுருவினாலடைந்த தெய்வகதியனும் காரக குருவினா லடைந்த முன்னைய முமுட்சுவும் ஞானகாண்டியும் அனுபவி யும் ஆரூடனுமாய இவ்வைவரும் உத்தமரெனவும், சூசககுருவினாலடைந்த பத்திகாண்டியும் வேதக குருவினாலடைந்த அப்பியாசியும் போதககுரு வினாலடைந்த விவேகியும் வாசககுருவினாலடைந்த பின்னையமுமுட்சுவும் விரத்தியனுமாய இவ்வைவரும் மத்திமரெனவும், காமியகுருவினாலடைந்த கருமகாண்டி அதமனெனவும், நிகிதகுருவினாலடைந்த அஷ்டகருமி அத மாதம னென்வுவாம்.

வினா:—இவர்களுள் கருமகாண்டியு மதிகாரியாவனோ ?

விடை:—முன் 'ஆப்தமுடன்' என்ற கவியில் அதிகாரி என்றமையா னும், துன்பத்தி லதீதப்பட்டிருந்தவன் தனுவையும் அதைப்பற்றிய குடும் பத்தையும் யானெனதென்னு மபிமானத்தினாற் சுகதுக்கந் தோன்றியவழி அவற்றை நீக்குமரபில் உடன்பட்டானாதலானும் அவனுமதிகாரி யாவா னென்க.

வினா:—அங்ஙனமாயின் அவனை யேன் சில வேதாந்தநூலிற் சேர்க்க வில்லை?

விடை:—சரிதை கிரியை யோகமென்னும் மூன்றுபாதங்களுங்கடந்து மேல்ஞான பாதத்திற்கு வந்த வதிகாரிகளை நோக்கியென்க.

வினா:—நிகிதகுருவு மாசிரியராவரோ ?

விடை:—'நல்வசியாதி' என்றமையானும் அக்கிரியை சில சீவர்கட் கனுகூல நிமித்தமா யிருக்கின்றமையானும் அவருமாசிரியராவரென்க.

வினா:—அற்றேல் அவரை நிகிதகுருவென்பானேன்?

விடை : — சமயாபரோட்சமாக விழிவான கருமங்களை யுயர்வாக இந்திரனுக்குப் பிரகஸ்பதி யுலகாயுதமதம் போதித்ததுபோலப் போதிக்குங் கருமத்தினால் வந்ததென்க.

வினா:—அங்ஙனமாயின் இவ்வாசிரியர்களுடன் சேர்க்காமல் நீக்கக் கூடாதோ?

விடை:—பிரகஸ்பதியை நீக்காமையாற் கூடாதென்க.

தாபத்திரயாக்கினிகளாவன:—பதினான்கு விடயங்களானும் வியாக் கிராதி துஷ்டஜந்துக்களானும் தேகத்திற்குவருந் துன்பங்களைத் தனதா கப் பாவித்துவருந்துதல் ஆதிபௌதிகமும், மனாதிகரணங்களை யியக்குதற் கேதுவான சந்திராதி தேவதைகளானும் ஐயன் பிடாரிமுதலான துர்த் தேவதைகளானும் அந்தக்கரணங்களுக்கு வருந் துன்பங்களைத் தனதாகப் பாவித்து வருந்துதல் ஆதிதெய்வீகமும், தானல்லாததைத் தானெனக் கருதும் அகம்பாவத்தினாற் சுங்கற்பரூபமான சிதாபாசனா லுண்டாகும் வருத்தங்களைத் தனதாகப்பாவித்து வருந்துதல் ஆதியாத்மீகமுமாம்.

(நா - ம்.) ஆசிரியர்கள் சீடர்களுக் குணர்த்து° மிலக்கணங்க ளிவை யென வுணர்த்தியதாம். (கஎ)

அ - கை.

இச்செய்யுளில் மேற்கூறிய சீடரு ளொருமுமுட்சுவானவன் தனது துன்பங்களை நீக்குவான் கருதி ஞானசிரியரை யடைந்து வினவலி னிலக்கணம் உணர்த்துகின்றார்.

நானாரிப் பவமெனக்கு வந்தவா றென்கொ
 னசிப்பதெவ ராலெனவாய்ந் தலர்கரங்கொண் டேகி
யானாநற் கல்வியறி வடக்கம்வை ராக
 மாதியாங் குணமுடைச்சற் குருவையடைந் தெதிர்மண்
ணூறப் பணிந்தெழுந்தன் பாற்கரங்கள் குவித்து
 வுறவழுத்தி யருட்குருவே யென்பாசத் தழிவு
தானுமெத் திறத்தினா லெனவினவல் சீடன்
 றனதுவிதி வத்துபசன் னத்துவமா மன்றே.

(இ - ள்.) நானார் - நான்யாவன், இப்பவம் - இச்சநநம், எனக்கு வந்தவாறென் - எனக்கு வந்தவகையென்ன, நசிப்பதெவராலென - இது கெடுவது யாவராலென்று, ஆய்ந்து - இவ்வாறு தன்னுள் விசாரித்து, அலர் கரங்கொண்டேகி - பத்திரபுட்ப பலாதிகளைக் கையி லெடுத்துக்கொண்டு போய், ஆனா - என்றும் நீங்காத, நற்கல்வி - வேதாந்தவித்தையும், அறிவு - அதனாலுதயமான ஞானமும், அடக்கம் - அந்தஞானத்தினா லுண்டான அடக்கமும், வைராகமாதியாம் - அதுகாரணமாயுண்டாய வைராக்கியமுத லாய, குணமுடை - நற்குணங்களையுடைய, சற்குருவையடைந்து - ஞானாசாரியரைச் சரணாகதி யடைந்து, (அவர்திருவடித் தாமரைகளிலே மலர்களா லருச்சித்து நைவேத்தியமுஞ் செய்து) எதிர் - அவ்வாசிரியர் சந்நிதிமுன், மண் - நிலத்தின்கண்ணே, ஊறப்பணிந்து - தனதுமெய் தோயவணங்கி, எழுந்து - எழுகென வெழுந்து, அன்பால் - மெய்யன்பினால், கரங்கள் குவித்து - கைகளைக்கூப்பிச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, உறவழுத்தி - நாவிற்பொருந்த * அட்டமந்திரங்களாற் றுதித்து, அருட்குருவே - கரு

* "சைதந்யம் ஶாஸ்வதம் சாந்தம்
வியோமாதீதம் நிரஞ்சனம்
நாதபிந்து களாதீதம்
தஸ்மைஸ்ரீ குருவேநம:"

என்னும் அஷ்டமந்திரபூர்வகமாய் இருபதம், இருகை, இருதோள், மார்பு, நெற்றி என்னும் அஷ்டாங்கமும் நிலத்திற்படப் பணிந்து பின்னெழுந்து பயபத்தியினாலே, அடிமைத்தன்மை மிகுந்து கரகமலங்கூப்பித் தனது கார்ப் பண்ணியமுங் காட்டிக் குருமகிமையையுங் கொண்டாடி ஞானம், வைராக்கியம், பலம், ஐசுவரியம், கீர்த்தி, ஸ்ரீயென்னும் சட்குண சாமக்கிரியையால் பகவானாகிய ஓ சற்குருவே! எவ்வாறு எனக்கிந்தப் பவபந்தம் விடுமென்று விண்ணப்பஞ் செய்வதே சிஷ்யனது விதிவதுப சந்நத்துவமாம் (விதிப்படி சரணடையுந் தன்மையாம்)" என்று விவேகசிந்தாமணியிற் கூறப்பட்டிருக்கிறது.

ணவடிவமான வாசிரியரே, என்பாசத்தழிவுதான்-எனதஞ்ஞானத்தினசம், ஆமெத்திறத்தினலென - எவ்விதத்தினலாமென்று, வினவல் - கேட்பது, சீடன்றனது - மாணக்கனது, விதிவத்துபசன்னத்துவமாம் - விதிப்படி சரணடையுந் தன்மையாம், எ - று.

'அலர்கரங்கொண்டேகி' என்றதனற் றிருவடித் தாமரைகளிலே அருச்சித்தென்பதும், அதற்கங்கமான நைவேத்தியமென்பதும் வருவிக்கப்பட்டன. 'மண்ணூறரப் பணிந்து' என்றது அட்டாங்க நமஸ்காரத்தை. அஃதாவது பதத்துவயம், கரத்துவயம், புசத்துவயம், லலாடம், வட்சம் இவ்வெட்டும் பூவிலணையப் பணிவதாம். அட்டமந்திரத்தைக் குருகீதையில் "சைதன்யஞ் சாஸ்வதம்" என்னுஞ் சுலோகத்தாற் காண்க. 'வழுத்தியருட்குருவே' என்பது ஞானுதி சட்குண சம்பன்னனன பகவானேயெனத் துதிப்பதாம். ஞானுதி சட்குணமாவன:—ஞானம், வைராக்கியம், பலம், ஐஸ்வரியம், கீர்த்தி, ஸ்ரீ என்பனவாம். உபசன்னத்துவமென்பது உப சமீபம், சன்னத்துவம் இருத்தல்; எனவே, சமீபத்திற் கேட்கவேண்டிய கேள்வியைக் கேட்டலென்பதாயிற்று. கரங்கள் குவித்து வுறவழுத்தி என்பதில் குற்றுகரங்கெடாது வகரவுடம்படுமெய்வந்தது. "தன்முகமாகத் தானழைப்பதுவே" என்பதனற்காண்க.

(நா - ம்.) தனதாத்ம விலக்கணத்தையும் அனுத்ம விலக்கணத்தையும் அஃதுண்டான வகையையும் நசிக்கும் வகையையும் விசாரித்து அனுத்மாவைக் கெடுத்து ஆத்மாவை விளக்குவிப்பவர் நிராசை முதலிய குணங்களுடைய வாசிரியரேயெனத் தெளிந்து அவரைத் தரிசனஞ்செய்து அவ்வனுத்மரூபமான பாசநாசம் வருமாறு வினவினதென்பதாம். (கஅ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சீடனது பக்குவத்தை யறிந்து தீட்சா சம்ஸ்காரஞ் செய்து அவனதறியாமையால் வந்த வனுத்ம புத்தியை நீக்கி, மஹாவாக்கியத்தி னசிபதார்த்தமான வாத்ம சொரூபமே நீயென வுபதேசித்து அப்பொருளை ஐயந்திரிபின்றி வெளிப்படுத்து நிமித்த முபதேசிக்கும் உபதேசமும் உத்தேசமுதல் மூன்றுவிதமாமென வுணர்த்துகின்றார்.

அணையவன ததிகாரந் தெரிந்தருளா னேக்கி
 யஞ்சலோம் பென்றபய காஞ்சிரத்தி லிருத்தி
புணையவருஞ் சுருதியுத்தி யாலவ னனுன்ம
 புத்தியினை யொழித்துத்தா தான்மியவாக் கியத்தா
னிணைவரிய வொருபிரம நீயேயென் றுள்ள
 நிலையையுணர்த் துதல்குரவ னுபதேச மாகு
மிணையவுப தேசமுறை யுத்தேச முடனே
 யிலக்கணஞ்சோ தனையெனுமூன் றிணையுமுடைத் தாமால்.

(இ - ள்.) அனையவனது - அங்ஙனம் வினவிய சீடனது, அதிகாரந்தெரிந்து - பக்குவமறிந்து, அருளால் - (ஆசிரியர் தமது) கிருபையால், நோக்கி - கருதிப்பார்த்து, அஞ்சல் - பயப்படாதே, ஓம்பென்று - யாமருள்வதைப் பாதுகாப்பாயென்று, அபயகரம் - தமதபய ஸ்தத்தை, சிரத்திவிருத்தி - அவனது சிரத்தின்கண் வைத்து, புனையவரும் - சுரத்தினலலங்கரிக்கப்பெற்ற, சுருதி - சுருதியினலும், * உத்தியால் - உத்தியினலும், அவன் - அவனது, அனன்மபுத்தியினை - தேகான்ம புத்தியை, ஒழித்து - நீயதிகளைந்து, தாதான்மிய வாக்கியத்தால் - ஒன்றுபடுத்திக்கூறும் மகாவாக்கியத்தினல், நினைவரிய-நினைத்தற்கரிய, ஒருபிரமம் - ஒப்பற்றபரப்பிரமம், நீயேயென்று - நீதானென்று, உள்ளநிலையை - உள்ளதத்துவத்தை, உணர்த்துதல் - அறிவித்தல், குரவனுபதேசமாகும் - ஆசிரியருபதேசமாம், இனையவுபதேசம் - இத்தன்மையுள்ள வுபதேசமானது, முறை - கிரமமாக, உத்தேசமுடனே - உத்தேசமும், இலக்கணம் - இலக்கணமும், சோதனையெனும் - சோதனையுமென, மூன்றினையு முடைத்தாம் - இம்மூன்று வகையினையுமுடையதாம், ஏ - ற். ஆல் - அசை. ததாத்மனேபாவா—தாதான்மியம்; எனவே, ஐக்கியவஸ்துவை விளக்குதல்.

'பிரமம் நீயே' என்பது அதுவே நீ யென்பதாம்; எனவே, அது நீயாயினையென்னும் மகாவாக்கியார்த்தமான பிரமோபதேசமாம். நோக்கிக் கரஞ்சிரத்திலிருத்தி என்றமையால் அவைகட்கினமான கருதுதல் வருவிக்கப்பட்டது.

கமடம் (ஆமை) போலக் கருதுதலும், சலசரம் (மீன்) போல நோக்கலும், குருகு (பறவை) போலப் பரிசித்தலும் ஆகிய இம்மூன்றுந் தீட்சாசம்ஸ்காரமாம். அகத்தீட்சை மூன்று, புறத்தீட்சை மூன்றெனக் கூறுதலுமுண்டு. அவைகளும் இவற்றி லடங்கியிருக்கின்றன. அவை யெங்ஙனமெனின், நோக்கில் கருதுதலும் யோகமுமடங்கினமையால், இம்மூன்றும் அகத்தீட்சையெனவும், கரஞ் சிரத்திலிருத்தியென்ற பரிசித்தலில் சுருதியென்றநூலும், நீயே பிரமமென்ற வாக்குமடங்கினமையால், இம்மூன்றும் புறத்தீட்சை யெனவுங்கொள்க.

(ப-ம்.) முன்னர்த் துன்பமென்றறிந்த தேகமுதலிய விடயங்களொன்றினுஞ் செல்லாது இன்புருவமான தத்ஸ்வரூபந் தரிசனமாய் அதன் கணில்லாது மத்தியிற் கலக்கமுற்றுத் துன்பநீங்கி யவ்வின்ப மெங்ஙன முதயமாமென அவசரப்படுந் தீவிரதர பக்குவனென் றறிந்தாரென்பார் 'அனையவன ததிகாரந்தெரிந்து' என்றும், அவனது இன்புருவம் வியாபிக்கு நிமித்தந் தீட்சாசம்ஸ்காரமான பூரண திருஷ்டிவைத்தா ரென்பார் 'அருளானேக்கி' என்றும், அத்துன்பமான விடயங்களுக்கஞ்சாது அவை

* உத்தி - பொருந்துமாறு. அஃதாவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது.

களை நீக்குநிமித்தம் அஸ்தமஸ்தக சையோகஞ் செய்தாரென்பார் 'அஞ்ச லோம்பென் றபயகரஞ் சிரத்திலிருத்தி' என்றும், தானுய் விளங்கும் ஆத்மஸ்வரூபம் விளங்கத் தேகாதிப்பிரபஞ்சத்தை யுண்மையாகக் கொண்டதை நேதிகளைந்தாரென்பார் 'புனையவருஞ் சுருதியுத்தியா லவனனுன்ம புத்தியினை யொழித்து' என்றும், மகாவாக்கியத்தின் அருத்தமான அது நீயானுயென்னும் அத்துவித ஸ்வரூபமான தன்னை அபரோட்சமாகத் தரிசிப்பித்தா ரென்பார் 'தாதான்மிய வாக்கியத்தானினை வரியவொரு பிரமநீயேயென்றுள்ள நிலையை யுணர்த்துதல் குரவனுபதேசமாகும்' என்றுங் கூறினர். (கக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய உத்தேசமுதலிய மூன்றனிலக்கணமும் அப்பொருள் அனுபவமாதற்குக் காட்சி முதலிய வெண்வகை யளவையும் உணர்த்துகின்றார்.

அறியவுணர்த் துறுபொருளை நாமமாத் திரையா
யறைந்திடுத * லுத்தேச மாங்களகம் பளமாங்
குறியுடைய தானெனல்போ லப்பொருளிற் சிறந்த
குறியுரைத்த லிலக்கணமவ் விலக்கியமாம் பொருளிற்
செறிவுறுமவ் விலக்கணமுண் டோவிலையோ வென்னத்
தெரிந்திடுதல் பரிட்சையோர் பொருளறிந்து பெறற்குப்
பொறியுறல்செய் காட்சியா மளவை முதலாகப்
பொருந்துபிர மாணங்க ளெட்டுளவா மன்றே.

(இ - ள்.) அறிய - சீடனுக்கு விளங்க, உணர்த்துறுபொருளை - ஆசிரியரறிவிக்கும் பொருளை, நாமமாத்திரையாய் - பெயர்மாத்திரந் தோன்ற, அறைந்திடுதல் - உரைத்திடுதலே, உத்தேசமாம் - உத்தேசமும், களகம்பளமாம் - அலைதாடியாகிய, குறியுடையது - அடையாளமுள்ளது, ஆனெனல்போல் - பசுவென்பதுபோல, அப்பொருளில் - அந்தப்பொருளின்கண், (பொதுவானபல குறிகளையுந் தள்ளி) சிறந்த குறியுரைத்தல் - விசேடமான வோரடையாளஞ் சொல்லுவதே, இலக்கணம் - இலக்கணமும், அவ்விலக்கியமாம்பொருளில் - அவ்விலக்கியமான பொருளின்கண், செறிவுறும் - பொருந்திய, அவ்விலக்கணம் - அந்த லட்சணமானது, உண்டோ விலையோ வென்ன - இருக்கின்றதோ இல்லையோ வென்று, தெரிந்

* இலக்கியத் தன்மையை வரைந்துகொள்ளுதல் மாத்திரத்தான் இலக்கியத்தைக் கீர்த்தித்தல் உத்தேசம். அசாதாரண தருமம் (சிறப்பியல்பு) இலக்கணம். இஃதவ்வியாத்தி அதிவியாத்தி அசம்பவ மென்னு முக்குற்றமு மற்றிருக்கும். உத்தேச இலக்கணங்களின் பொருத்தம் பொருத்தமின்மையென்னு மிரண்டில் ஒருபயனையுடைய விசாரம் பரிட்சை.

திடுதல் - தெரிந்துகொள்ளுவதே, பரிட்சை - பரீட்சையுமாம் ஓர்பொருள் - இங்ஙனம் லட்சியித்த வொப்பற்றபரவஸ்துவை, அறிந்துபெறற்கு- தெரிந்தடைவதற்கு, பொறியுறல் செய் - இந்திரியங்களினுலுற்றறியும், காட்சியாமளவைமுதலாக - பிரத்தியட்சப் பிரமாணமுதல் ஐதீகமீருக, பொருந்து - அமைந்திருக்கின்ற, பிரமாணங்கள் - அளவைகள், எட்டுளவாம் - எட்டுவகை யுள்ளனவாம், எ - று. அன்று, ஏ - அசை.

களமென்பது - கண்டம், கம்பளமென்பது - கம்பிளிபோற் ருெங்கும் அலே தாடியாம். ஆசிரியர் பிரமமேநீ யென்பது பரோட்சமாகத் தோன்ற உபதேசிப்பதே உத்தேசமெனவும், அங்ஙனந் தோன்றிய பிரமம் அபரோட்சமாய் நிரதிசயாநந்த வடிவமெனத் தோன்ற வுபதேசிப்பதே இலக்கணமெனவும், அவ்விலக்கணம் சத்தாவத்தையிலும் பேதியாமல் தானய் விளங்கும்படிசோதிக்க வுபதேசிப்பதே பரிட்சையெனவுங் கொள்க.

சத்தாவத்தையாவன:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், மூர்ச்சை, மரணமென்பனவாம். காட்சி முதலென்பது, பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அனுபலத்தி, சம்பவம், ஐதிகம் என்பனவாம். இவற்றுள் : சுதரிசனம்-பிரத்தியட்சம், அனுமித்தல் - அனுமானம், வேதம் - ஆகமம், உவமித்தல் - உவமானம், பொருட்பேறு - அருத்தாபத்தி, விளங்குதலின்மை - அனுபலத்தி, உண்டெனல் - சம்பவம், தொன்றுதொட்டு வழங்கிவருகை ஐதிகமாம்.

(தா-ம்.) ஆசிரியர் சீடனது பக்குவங்களறிந் துபதேசிக்கும்போதே விஸ்மரணையாவும் நீங்கித் தனித்தவிடஞ் சாமானியமாகத் தோன்றவும், அஃதே தனது பேரின்பமாக விளங்கவும், அஃதே யாவும் பிரமஸ்வரூபமாகக்கண்டடையவும் உபதேசித்தாரென்பதாம். (உ0)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வளவையெட்டனுள் காட்சிமுதல் மூன்று * பிரமாணங்களி னிலக்கண முணர்த்துகின்ருர்.

† கடமுதலா மவற்றினது காண்கையது தானே
காட்சிபுகை யாலங்கி ஞானமனு மானந்

---

* உண்மையனுபவ வறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாண மெனப்படும்.

† (1) செவியாதி யிந்திரியங்களால் சப்தாதி விஷயங்களைக் காணுமறிவு பிரத்தியட்ச மெனப்படும். (2) புகை முதலிய குறிகளால் மலை முதலிய விடங்களில் நெருப்பு முதலியவை யுண்டென் றுராய்ந்தறிதல் அனுமான மெனப்படும். (3) ஒன்றற்கொன்றுள்ள சாதாரண தருமம் (பொது

திடமருவு மவ்வனுமா னம் ‡ பதிஞை யேது
 திட்டாந்த மெனுமங்க முடைத்தவற்றுட் பதிஞை
யிடமலைவெவ் வழலுடைத்தென் பதுபுகையுண் மையினு
 லெனலேது மடைப்பளிபோ லென்பதுதிட் டாந்த
முடைமையுண ராத்தனுரை யானதிதீ ராதி
 யுறுகனியா திகளுண்மை ஞானமா கமமாம்.

(இ - ள்.) கடமுதலாமவற்றினது - கடமாதியவஸ்துக்களின், காண்கையதுதானே - தரிசனமே, காட்சி-பிரத்தியட்சமும், புகையால்-தூமத்தினுல், அங்கி - அக்கினியுண்டென்னும், ஞானம் - ஞானமே, அனுமானம்-அனுமானமும், திடமருவும் - இவ்வாறு திடமாகத் துணியப்படும், அவ்வனுமானம்-அந்த வனுமானமும், பதிஞை-பிரதிஞ்ஞையும், ஏது-ஏதுவும், திட்டாந்த மெனும் - திஷ்டாந்தமுமென, அங்கமுடைத்து - மூன்றங்கங்களையுமுடையதாம், அவற்றுள் - அம்மூன்றனுள், இடமலை - விசாலமானமலை, வெவ்வழலுடைத் தென்பது - வெம்மையான தீயை யுள்ளேயுடையதென்பதே, பதிஞை - பிரதிஞ்ஞையும், புகை யுண்மையினு லெனல் - தூமமுள்ளதனு லென்பதே, ஏது - ஏதுவும், மடைப்பளிபோலென்பது - அடுக்களையைப்போலென்பதே, திட்டாந்தம்-திருஷ்டாந்தமுமாம், உடைமை - தேசத்திலுள்ள பொருள்களை, உணராத்தனுரையால் - அறிந்த இஷ்டனது யதார்த்தவசனத்தினுல், நதிதீராதி - நதிக்கரைமுதலியவற்றில், உறுகனியாதிகள்-பொருந்திய பழமுதலியவைகளிருக்கின்றனவென்னும், உண்மை ஞானம் - சற்பாவஞானமே, ஆகமம் - சத்தமுமாகிய பிரமாணங்களாம், எ - று.

பிரமாண மென்றதை மற்றிரண்டிடத்தினுங் கூட்டுக. கட முதலென்றமையிற் படமுங் கொள்க. கொள்ளவே கண்முதலியவைந்து பொறிகளினுலும் ரூபம் முதலிய பஞ்ச விடயங்களையும் அறிதலென்பதாயிற்று.

---

மை)பற்றி யறிதல் உவமான மெனப்படும். (4) சிருஷ்டியி னாரம்பத்தில் சீவர்க ளுய்யுமாறு பரமேசுவரன் எடுத்துச்சொல்லிய வேதமும் அதற்கு விரோதமின்றிய சாஸ்திரமும் ஆகமமெனப்படும். (5) இங்ஙனமன்றுயின் இது கூடாதென் றெதிர்மறைவாயிலாக வறிதல் அருத்தாபத்தி யெனப்படும். (6) விளங்குத லுண்மைக்கு மாறுபட்ட விளங்குதலில்லாமை அனுபலத்தி யெனப்படும். அனுபலத்திப் பிரமாணத்தா லறியப்படும் பிரமேயம் அபாவமாம். (7) தொன்றுதொட்டு இம்மரத்தில் பேய் இருக்கிறதென்று வழங்கிவருதல் ஐதீகமெனப்படும். (8) ஆயிரத்தில் நூறுண்டென்னும் ஞானம் சம்பவ மெனப்படும்.

‡ பக்கத்தைத் துணிபொரு ளுடைத்தாகக் கூறுவது பிரதிஞ்ஞை. இன் ஆன் என்னும் உருபீருக இலிங்கத்தை யெடுத்துக்காட்டுவது ஏது. வியாத்தியை யெடுத்துக்காட்டுவது உதாரணம், யாண்டுப் புகை ஆண்டுத் தீ என்னும் நியதமான வுடனிகழ்ச்சி வியாத்தியாம்.

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையால் அருத்தாபத்திமுத லிரண்டளவையி னிலக்கணம் உணர்த்துகின்ருர்.

பகற்பொழுதுண் ணுனெருவ னிளையாமை கண்டு
பரிந்திரவூண் கற்பித்தல் காணருத்தா பத்தி
யகத்தினிலை யுறுதேவ தத்தனெனி லிருப்ப
னவன்வேறு ரிடத்திலெனத் தெரிந்தறித றன்னைத்
தகப்பெரியர் கேள்வியருத் தாபத்தி யென்பர்
தகுபசுவோ டொக்குமரை யெனுமொழிகேட் டிருந்தோன்
புகப்படரும் வனத்திற்றன் விடயஞா னத்தாற்
பொருந்துதலே யுவமானப் பிரமாண மாகும்.

(இ - ள்.) பகற்பொழுது - பகற்காலத்தில், உண்ணுனெருவன் - புசியாத வோர்புருடன், இளையாமைகண்டு - பூரித்திருத்தலைப் பார்த்து, பரிந்து - ஆசையுடன், இரவூண்கற்பித்தல் - இரவிலுணவை யொளித்துண்பானெனக் கற்பித்துச்சொல்வதே, காணருத்தாபத்தி - காட்சியருத்தாபத்தியும், உறுதேவதத்தன் - நீ கேட்ட சீவிதபுருடன், அகத்தினிலையெனில் - வீட்டின்க ணில்லையென்ருல், அவன் வேறுரிடத்தில் - அப்புருடன் மற்றோரிடத்தில், இருப்பனென - இருப்பானென்று, தெரிந்தறிதறன்னை - ஆராய்ந்தறிவதை, தகப்பெரியர் - தகுதியுள்ள பெரியோர்கள், கேள்வி யருத்தாபத்தி யென்பர் - கேள்வி யருத்தாபத்தியுமெனச் சொல்லுவார்கள், தகுபசுவோடொக்கும் - இங்ஙனம்பொருந்திய பசுவுக்குச் சமானமாம், மரையெனுமொழி - மரை யென்கிற வசனத்தை, கேட்டிருந்தோன் - கேள்விப்பட்டிருந்தவன், புகப்படரும்வனத்தில் - விஸ்தாரமான வனத்திற்செல்ல, தன் விடயஞானத்தால் - தனது சாதுருசிய விடயவறிவினல், பொருந்துதலே - மரையைத் தெரிந்துகொள்ளுதலே, உவமானப் பிரமாணமாகும் - உவமானப் பிரமாணமாம், எ - று. (உஉ)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையால் அனுபலத்தி முதலிய மூன்றளவைகளின் இலக்கணம் உணர்த்துகின்ருர்.

இந்நிலனிற் கடமில்லை யென்பதனுற் றேன்று
மின்மையுணர் வபாவமா மாயிரமா கியவெண்
டன்னிலொரு நூறெனுமெண் ணுண்டெனுஞா னந்தான்
சம்பவமா மிம்மரத்தி னியக்கனுள னென்னுஞ்
சொன்னிகழ்வில் வருமியக்க விடயவுணர் வதனைச்
சொற்றிடுவ ரறிஞரை திகமென்ன வளவை

யென்னவிவண் டொகுத்துரைத்த காட்சி முதலாய
வெண்வகையிற் சமயர்கொள லின்னவென வுரைப்பாம்.

(இ - ள்.) இந்நிலனில் - இம்மண்ணின்கண், கடமில்லை யென்பதனால் - கடம் விளங்கவில்லையென்று கூறு மனுபலத்திப் பிரமாணத்தினால், தோன்றும் - உதயமான, இன்மையுணர்வு - கடாபாவஞானமே, அபாவமாம் - அபாவமாகும், ஆயிரமாகிய - ஆயிரமான, எண்டன்னில் - எண்ணிக்கையுள்ள தொகையில், ஒருநூறெனு மெண் - ஒருநூறென்கின்ற கணக்கு, உண்டெனு ஞானந்தான் - உண்டென்னு மறிவே, சம்பவமாம் - சம்பவப் பிரமாணமாம், இம்மரத்தின் - இவ்(வால)விருக்ஷத்தில், இயக்கனுளனென்னும் - யட்சனுண்டென்னும், சொன்னிகழ்வில் - உலகவார்த்தையாக, வருமியக்கவிடய வுணர்வதனை - மனத்தின்கண்ணுதிக்கும் யட்சரூபமான விடயஞானத்தையே, ஐதிகமென்ன - ஐதீகப்பிரமாணமென்று, சொற்றிடுவ ரறிஞர் - அறிவுடையார் சொல்லுவார்கள், அளவையென்ன - பிரமாணமென்று, இவண்டொகுத்துரைத்த - இவ்விடத்துத் தொகுத்துக் கூறிய, காட்சிமுதலாய - பிரத்தியட்சமுதலிய, எண்வகையில் - அஷ்டப் பிரமாணங்களுக்குள், சமயர் - சமயவாதிகள், கொளல் - கொண்டபிரமாணங்கள், இன்னவென வுரைப்பாம் - இவையிவையெனச் சொல்லுவாம், எ - று.

வினா:—முற்கூறிய பிரமவஸ்துவானது ஐயந்திரிபின்றி யபரோட்ச சாட்சாத்கார மாதற்குத் திட்டாந்தமாகக்கூறிய அஷ்டப்பிரமாணங்கட்குந் தாட்டாந்தமாவ தியாது?

விடை:—ஊனக்கண்ணிற்குக் கடமுதலியவைகள் பிரத்தியட்சமாவது போல ஞானக்கண்ணிற்குத் தற்சொரூபஞ் சந்தேக விபரீதமின்றி யதார்த்தப் பிரத்தியட்சமாகப் பிரமத்தை யடையவேண்டுதலிற் காட்சிப்பிரமாணமும், காரியமாகிய தூமத்தைக்கண்டு காரணமான அக்கினியைப் பிரத்தியட்சமாகக் காண்பதுபோலக் காரியமாகிய தேகாதிப்பிரபஞ்சத் தோற்றம் விளங்குதலைக்கண்டு, அவற்றை விளக்குவிக்கும் காரணமான பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் அனுமானப் பிரமாணமும், ஆப்தன் வசனத்தினால் நதிதீரங்களில் அபூருவமான பலங்களிருக்கின்றனவெனவறிந்து அவ்வழிச்சென்று அப்பலத்தைப் பிரத்தியட்சமா யடைவது போல மகான்கள் அனுபவித்துச் சொல்லிய சுவானுபவத்தைச் சுருதி மார்க்கத்திற் சென்று அப்பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் ஆகமப்பிரமாணமும், ஊணொழிந்தா னென்பவன் பருத்திருக்கையால் இரவிற் கரவிற்புசிப்பன், நீ வினவின புருஷன் இங்கனில்லை யெனின் மற்றோரிடத்தி லிருப்பனென்னுங் காட்சி கேள்விகளினால் அவற்றைப் பிரத்தியட்சமாய்க்காண்பதுபோலத் தேகமுதலியவைகள் அனுபவிக்கவில்லையெனின் இவை தேஜஸோடும் விருத்தியடைந்து வருதலி

ஞல் ஒருவன் மறைந்திருந் தனுபவிக்கின்ருனெனவும் அவனெங்ஙனெ னில் இங்ஙனில்லை யென்பதனுல் இச்சுட்டிறந்து நின்ருனெனவும் நிச்ச யித்து அப்பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் அநுத்தா பத்திப்பிரமாணமும், மரையைக்காணவேண்டிற் பசுவின் பொறிகளைக் கூறி அவ்வலதாடியொன்றில்லையெனச் சொல்வதனுல் அவ்வயத்தனுய் அடவியிற் சென்று மரையைப் பிரத்தியட்சமாக வறிவதுபோல ஆத்மாவை யறியவேண்டினவன் ஆத்மாவி னடையாளம் நாமரூப நீங்கினதெனக் கூறினவிடத்து அவ்வழிச் சென்று அஃதே சச்சிதானந்தமெனப் பிரமத் தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் உவமானப் பிரமாணமும், கடமானது முன் பின் னிடை யொருகாலத்து மில்லையென்ருல் அந்நான்கு காலத்தும் மிருத்திகை பிரத்தியட்சமா யிருப்பதுபோலப் பஞ்சபூத பௌ திக முதலிய யாவும் முன் பின் னிடை யொருகாலத்து மில்லையென்றத னுல் இந்நான்குகாலத்துங் காலாதீதமான சத்தே யிருக்கின்றதென்று அச் சத்தாகிய பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் அனுபலத் திப் பிரமாணமும், ஆயிரமென்னுந் தொகையில் நூறுண்டென்பது பிரத்தி யட்சமாவதுபோல அளவின்றிய சீவர்களாகவிளங்கும் பிரமத்தில் அளவிட் டெண்ணுபவ னொருவனுளனுதலால் அவன் பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலிற் சம்பவப்பிரமாணமும், இம்மரத்திற் பேயுண்டென் னுஞ் சத்தமாத்திரத்தில் அஃதேயுண்மையாய் அப்பே யுளத்திற் பிரத்தி யட்சமாவதுபோலத் தோன்றுதொட்டு இவ்வுலகத்தை விளக்குமோர் பர வஸ்து வுண்டென்னுஞ் சத்தமாத்திரத்தில் அஃதே யுண்மையா யறிவின் கண் ணுதயமான பிரமத்தைப் பிரத்தியட்சமாக வடையவேண்டுதலின் ஐதிகப் பிரமாணமும் வந்தனவென்க.

மேற் பிரத்தியட்சப் பிரமாணமானது ஞானகதப் பிரத்தியட்சமென வும் விஷயகதப் பிரத்தியட்சமெனவு மிரண்டாம். அவற்றுள்:—ஞானக தப் பிரத்தியட்சத்தை நிருவிகற்பப் பிரத்தியட்ச மெனவும், விஷயகதப் பிர த்தியட்சத்தைச் சவிகற்பப் பிரத்தியட்சமெனவுங் கூறுவாருமுளர். இவ ற்றுள்:—ஞானகதப் பிரத்தியட்சமானது அபரோட்ச ஞானமாம். விஷய கதப்பிரத்தியட்சமானது * இந்திரியப்பிரத்தியட்சமெனவும், மானதப்பிரத்

---

* (1) உயிரினே டுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றிச்
செயிருறு விகற்பமின்றித் தெரிவதிந் திரியக்காட்சி
(2) அயர்விலிந் திரியஞான மைம்புலன் சார்ந்துயிர்க்கண்
மயர்வற வந்தஞான மானதக் காண்டலாமே.
(3) அருந்தின்பத் துன்பமுள்ளத் தறிவினுக் கராகமாதி
தருந்தன்வே தனையாங்காட்சி
(4) சமாதியின் மலங்கள்வாட்டிப்,
பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்களெல்லாம்
இருந்துணர் கின்றஞான மியோகநற் காண்டலாமே.
என்று சித்தியார் கூறுகின்றது.

தியட்சமெனவும், சுவசம்வேசனப்பிரத்தியட்சமெனவும், யோகப்பிரத்தியட்சமெனவும் நான்காம். இவற்றுள்:—வேதாந்தமுடியினுள்ள மகாவாக்கியப்படி பரமார்த்மாயிக்கியமான அத்தவித வேதாந்திகட்கு ஞானகசப்பிரத்தியட்ச மொன்றுமேயாம். ஏனையவுலகாயுதன்முதல் பாட்டனீறான சமயவாதிகட்கு சவிகற்பக்காட்சியின்பேதமான விஷயகதப் பிரத்தியட்சமாதிகளில் அவரவர்க்குத்தகுந்தவைகளேயாம். இன்னும் பிரத்தியட்சப்பிரமாணமானது மூன்றுவிதமா யிருக்கும். அவையாவன:—விபரீதப் பிரத்தியட்சமெனவும், சந்தேகப் பிரத்தியட்சமெனவும், யதார்த்தப் பிரத்தியட்சமெனவுமாம். இவற்றுள் உஷக்காலாந்தகாரவிமோசனபூருவங்கண்ணிருந்துங் கட்டையைக் கள்வனாகக் கண்டு பயகம்பனாதிகளை யடைவதுபோல அஞ்ஞானாந்தகாரவிமோசன பூருவஞ்சித்திருந்துஞ் சச்சிதானந்த ஸ்வரூபமான பிரமத்தை அநிர்தசடதுக்கரூபமான சகத்தாகக் காண்பதே விபரீதப் பிரத்தியட்சமும், அருணோதயபூருவம் நாம் கண்டது கள்வனாக இருந்தாற் சரிக்கவேண்டுமே அங்ஙனஞ் சரியாமையினாற் கட்டையோ கள்ளனோ என்றையுறுதல்போல அஞ்ஞான விமோசன விவேகபூருவம் யாங்கண்டது சசத்தாகவிருந்தால் பிரியமின்றித் தோற்றவேண்டுமே அங்ஙனந் தோற்றாமையாற் சச்சிதாநந்தமோ சகத்தோ வெனவையுறுதல் சந்தேகப் பிரத்தியட்சமும், சூரியோதயகாலத்தில் யாங்கண்டது நிச்சலமா யசைவற்றிருத்தலிற் கள்வனன்று கட்டையே யென்றறிந் தாநந்திப்பதுபோல ஞானோதயகாலத்தில் நாமரூபமின்றி யிருத்தலின் யாங்கண்டது அநிர்தசடதுக்கரூபமான சகத்தல்ல; சச்சிதாநந்த ஸ்வரூபமாகிய சித்தேயெனக் காண்பது யதார்த்தப் பிரத்தியட்சமுமாம்.

வினா:—இங்ஙனம் ஸ்வரூபப்பிரத்தியட்சமான அனுபவம் உண்டானால் மேல் அநுமானப்பிரமாணமியாதுக்கு?

விடை:—பூர்வஞ்செய்த நிஷ்காமபுண்ணிய பரிபாகத்தினால் இவ்வனுபவங் கிடைப்பது அதிதீவரதரபக்குவர்க்கேயன்றி ஏனையோர்க் கின்மையின் அவர்களை முன்னிட்டு அக்காரணமான சித்தைக் காரியமான திரிசியத்தினால் வெளிப்படுத்திப் பிரத்தியட்சமாகக் காண்பிக்கும் நிமித்தம் இப்பிரமாணமும் வந்ததென்க.

வினா:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—அவ்வனுமானப்பிரமாணம் ஐந்துறுப்புடைத்தா யிருக்கும். அவையாவன:—பிரதிஞ்ஞை, ஏது, திருட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பனவாம். இவற்றுள் பிரதிஞ்ஞை மூன்றுவிதமாம். அவையாவன:—பிரதிஞ்ஞை, ஸப்பிரதிஞ்ஞை, விப்பிரதிஞ்ஞை யென்பனவாம். ஏது மூன்றுவிதமாம். அவையாவன:—இயல்பேது, காரியவேது, அனுபலத்தியேது என்பனவாம். திருட்டாந்த மிரண்டுவிதமாம். அவையாவன:—அன்னுவயம் வியதிரேக மென்பனவாம். உபநயம், நிகமனம் என்னு மிரண்டும் இவற்றி

லடங்கியிருக்கின்றன. இவ்வைந்தங்கங்களையுடைய வனுமானம் பூருவப் பிரத்தியட்சானுமானமெனவும், அனுமானுனுமானமெனவும், ஆகமானுமானமெனவும் மூன்ரும். முற்கூறியவற்றுள் இப்பருப்பதத்தில் வேயாதி விருட்சங்களுங் காந்தமாதிய கற்களு மிருப்பதனுல் அத்தருக்கள் ஒன்ருேடொன் றிழைந்து அவற்றுள் வியாபித்திருந்த வக்கினியும் கதிரினுட்டணமும் காந்தக்கல்லிற் ருக்க அவற்றுள் வியாபித்திருந்த அக்கினி வெளிப்படுதலின் இம்மலையின்கண் அக்கினி யுண்டென நிச்சயிப்பதுபோல இச்சகத்தின்கணுள்ள சராசர வுயிர்கள் ஒவ்வொருபோகங்களை யனுபவிக்குமிடத்தும் அவற்றுள் வியாபித்திருந்த தற்பிரீதி வெளிப்படுதலின் இவ்வுயிர்களிடத்திற் பிரமசித்துண்டென நிச்சயிப்பதே பிரதிஞ்ஞையெனவும், அத்தருவின்கணுள்ள அக்கினி வெளிப்படுத்தற்கு அததன் காரியமான புகை முன்னர் வெளிப்படுதல்போல இவ்வுயிர்களிடத்துள்ள ஆன்மப்பிரியம் வெளிப்படுத்தற்கு அதன்காரியமான விடயானந்தம் வெளிப்படுதலின் இஃதே யேதுவெனவும், சலமாதியவற்றுள்ள தூமம்போலன்றிப் பாகசாலையின்கணுள்ள தூமத்தா லக்கினியைப் பிரத்தியட்சமாகக் காண்பதுபோலக் காலவரம்பைக் காட்டுங் கடியாரமாதியவற்றினுல் இஃதின்னவிதமாகச்செய்யின், இன்னவிதமாகக் காலவரம்பைக் காண்பிக்குமென்றறிந்து அதுசெய்யுஞ் சத்தியைக்கொண்டு அச்சத்தனை யறிவதுபோல இச்சகத்துற்பத்திலய மிவ்விதமாய்ச் செய்யி னிவ்விதமாய் நடந்துவருமென் றறிந்துசெய்யுஞ் சிற்சத்தியைக்கொண்டு அதனுதாரமான சுயஞ்சித்தைப் பிரத்தியட்சமாகக் காண்பதே திருட்டாந்தமெனவுமாம்.

வினு:—இங்ஙனம் இவ்விரண்டு பிரமாணத்தால் ஞானகதப் பிரத்தியட்சமானுல் மேலாகமப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவத்தை யடைவோர்கள் அதை யடைந்த ஆப்தர்கள் வசனத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுவதாகலின் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—இவ்வாகமமும் சாத்திரம் அசாத்திரமென விரண்டாம். இன்னுமிவையே மூன்றுகலைகளாம். அவையாவன:—தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை யென்பனவாம். இன்னுமிவையே யிரண்டு சுருதிகளாம். அவையாவன:—அற்பசுருதி, பிரபலசுருதி யென்பனவாம். அவற்றுள்:—கானலாற்றின் கரையிற் கனி யிருக்கின்றதென்னும் அநாப்தன்வசனத்தைக்கேட்டுச் செல்வதுபோலத் தேவர் முதல் தாவரமீருயுள்ள வுலகங்களிற் சொர்க்காதி விடயாநந்தங்க ளிருக்கின்றனவெனவென்னும் பாமரர் வசனத்தை நம்பச்சொல்வது அசாத்திரமெனவும், கங்கையாதிய நதிதீரங்களில் முக்கனி முதலியவைகள் இருக்கின்றனவென்னும் ஆப்தன் வசனத்தைக்கேட்டுச்சென்று அவற்றை யடைவதுபோல மனுடாநந்தமுதல் இரணியகருப்பாநந்த மீருன வாநந்தங்களனைத்தும் விளங்குதற்கு ஸ்தான

மான நிரதிசயாநந்த மிருக்கின்றதென்ற வாப்தன் வசனத்தைக் கேட்டு அவ்வழிச்சென்று அச்சுயஞ்சித்தைப் பிரத்தியட்சமாகக் காணச்சொல்வதே சாத்திர மெனவுமாம்.

வினு:—இங்ஙனம் மூன்று பிரமாணத்தால் அச்சுயஞ்சைதன்னியம் பிரத்தியட்சமானுல் மேலுவமானப்பிரமாணமியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் அறிவினிடத்திற்கண் டதீதமாக வேண்டுதலால் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—அஃது அதிட்டம், திட்டமென விரண்டாம். அவற்றுள்:—புருடனைப்போலச் சாயாபுருட னிருப்பானெனக் காணுதலின் சுத்தாவத்தையிற் றோன்றும் அனுபவம் ஆநந்தாதீதமா யிருக்குமென்பது அதிட்டமும், பசுவைப்போல மரை அலைதாடியின்றி யிருக்குமென்றபடி யதைத் தேடிக்கண்டவிடத்து அஃதாயதி லதீதப்பட்டு நிற்றல்போலச் சமாதியின்கண் தத்தரிசனமான வாத்மாநந்தத்தைப்போலச் சிவாநந்தம் போதமின்றி யிருக்குமென்றபடி சிந்தித்தவிடத் துதயமானபோது அவ்விரண்டுமின்றி அதீதானுபவம் பிரத்தியட்சமாய்க் காண்பது திட்டமுமாம்.

வினு:—இங்ஙனம் அந்நான்கு பிரமாணத்தாற் சுவானுபவம் பிரத்தியட்சமாயிருக்க, மேலருத்தாபத்திப்பிரமாண மியாதுக்கு?

விடை:—அவ்வனுபவி எவ்விதமா யிருக்கினும் அவ்வானந்தாதீதமாகவே யிருப்பனென் றறிதற்காக இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—அது சிரவணம், திட்டமென விரண்டாம். அவற்றுள்:—சீவிதமான புருடன் வீட்டின்கணில்லை யென்றுல் மற்றோரிடத்தி விருப்பானென் றறிவதுபோல அவ்வறிவினிடத்து அதீதானுபவ மில்லையென்றுல் ஆநந்தத்தி லிருக்குமென்பது சிரவணருத்தாபத்தியெனவும், பகலிலுண்ணாத புருடனது தேகம் பருத்திருப்பதைப்பார்த்து அவன் இரவிலொளித்துண்பானெனக் காண்பதுபோலப் புறம்பினுள்ள விடயங்களைக் கூடியாநந்தியாதவனது முகத்திற் பிரமதேஜஸு ஜொலிக்கின்றதைப் பார்த்து அவன் அகத்திற் பிரமாநந்தத்தைப் பிரத்தியட்சமா யடைந்திருக்கின்றுனெனக்காண்பது திருட்டாருத்தாபத்தியெனவுமாம்.

வினு:—இங்ஙனம் இவ்வைந்து பிரமாணத்தாற் சமாதியனுபவம் பிரத்தியட்சமானுல் மேல் அனுபலத்திப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் சகசத்தில் விளங்கு நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—அனுபலத்தியா லறியப்படுகின்ற அபாவம் பிராகபாவம், பிரத்தொம்ஸாபாவம், அன்னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவமென நான்காம். அவை முன் பின் னிடை யொருகாலத்து மில்லையென்பனவாம். அவற்றுள்:-உற்பத்திக்குமுன் மிருத்திகையைத் தவிரக் கடமின்மைபோலச் சிருட்டிக்குமுன் சத்தைத்தவிரச் சகத்தில்லாமையால் பிராகபாவமெனவும், லயத்திற்குப்பின் மிருத்திகையைத் தவிரக் கடமின்மைபோல லயத்திற்குப் பின்னுஞ் சத்தைத்தவிரச் சகத்தில்லாமையால் பிரத்தொம்சாபாவமெனவும், இடையில் கடத்திற் படமும் படத்தில் கடமு மின்மையென்பதனுல் மிருத்திகையுந்தந்துவுமே யிருத்தல்போல இடையி லறிதலில் அறிபொருளும் அறிபொருளில் அறிதலுமின்றி யறிவாகிய சத்தேயதுவதுவாய் விளங்குதலின் திரிபுடி ரூபமாகிய சகத்தில்லாமையால் அன்னியோன்னியாபாவமெனவும், இந்த மூன்றிடத்தும் மிருத்திகையைத் தவிரக்கடமில்லாததுபோல எப்போதுஞ் சத்தே பிரத்தியட்சமா யிருத்தலின் எப்போதுஞ் சகத்தில்லாமையால் அத்தியந்தாபாவமெனவுமாம்.

வினு:—இங்ஙனம் இவ்வாறுபிரமாணத்தினுல் சதோதயமான சத்தே பிரத்தியட்சமானுல் மேற்சம்பவப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் எக்காலத்திலும் இயல்பாய் விளங்குகின்றதென்பதை யறிவிக்கு நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—சகஸ்தி (ஆயி)ரத்திற் சத (நூறு) மிருக்கு மென்னுமிடத்திற் சகஸ்திரத்திற்குஞ் சதத்திற்கும் அபேதந் தோன்றுதல்போலப் பிரமத்திற் கூடத்தனிருக்கு மென்னுமிடத்து அக்கூடத்தனே பிரமம் பிரமமே கூடத்தனென அபேதம் பிரத்தியட்சமாகத் தோன்றுவதே சம்பவப்பிரமாண மெனவுமாம்.

வினு:—இவ்வேழு பிரமாணங்களால் அத்துவித ஸ்வரூபம் பிரத்தியட்சமானுல்மேல் ஐதீகப்பிரமாண மியாதுக்கு?

விடை:—இவ்வனுபவம் தொன்றுதொட்டு விளங்குகின்றதென்பதை யறிவிக்கு நிமித்தம் இப்பிரமாணமும் வேண்டிற்றென்க.

வினு:—அற்றேல், அஃதெங்ஙனம்?

விடை:—இம்மரத்தில் இயக்கனுளனென்பது அநாதி சித்தமாயிருப்பதென்னுமிடத்து இம்மரமேபேயாய்க் காண்பதுபோல விச்சகத்திற்சித்துளதென்பது அநாதி சித்தமாயிருப்ப தென்னுமிடத்துச் சகமேசித்தாய் விளங்குதல் பிரத்தியட்சமாவதே ஐதீகப்பிரமாண மெனவுமாம்.

வினு:—இவைகட்குச் சுத்தானுவமியாது?

விடை:—சுவாநுபவாதீத சுயம்பிரகாசஸ்வரூபமே பிரத்தியட்சமும் அதனது ஸ்வப்பிரபையான ஸ்பரணமே அனுமானமும் அந்த ஸ்புரண

ரூபமான சங்கற்பம் அதீதமான சத்தரிசனார்த்தமாய் வந்ததேயன்றி வேறின்றென நிச்சயிப்பது சத்தமும், இப்பூரணமான சங்கற்பத்தைப் போல் அவ்வறி விருப்பினும் அறிதல் மாத்திரங்கரைந்து நிற்றல் உவமானமும், இச்சங்கற்பம் பகிர் முகத்தி லதிசயமான விடயானந்தங்களால் மொத்துண்டு அதுவே அகத்தினிரதிசயாநந்தத்தைக் காட்டுதலின் அருத்தாபத்தியும், அச்சங்கற்பம் முன் பின் னிடையொரு காலத்துமின்றி யெப்போதுந் தானாகப் பிரகாசித்தலின் அனுபலத்தியும், இச்சங்கற்பம் சத்தின்கண் கற்பித சுபாவமாயுண்டென்பதனாற் சம்பவமும், இச்சங்கற்பத்தையதீதம் வியாபித்து நிற்றலின் ஐதிகமெனவுமாம். இவற்றைச் சுருதி குரு சுவானுபவரீதியாற் குருவாக்கியப்படியனுபவத்திற் காண்க. இன்னும் பிரமாணங்களின் விரிவைத் தர்க்கசாத்திரத்திற் கண்டுகொள்க.

(நா - ம்.) பரோக்ஷமாய் விளங்கக்கண்ட பரவஸ்துவானது அபரோக்ஷமாய் விளங்குவதைக் காண்பதன்நிமித்தம் இவ்வெண்வகையளவைகள் இயம்பப்பட்டனவென்பதாம். (உரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய அஷ்டப்பிரமாணங்களுள் உலகாயிதன் முதல் புராணிகன் ஈருனசமயிகள் கொண்டபிரமாணங்களிவையிவை யென வுணர்த்துகின்றார்.

புகலுலகா யிதனுக்குக் காட்சியொன்றே சயின
 புத்தவைபா டிகர்கடமக் கிரண்டனுமா னத்தோ
டுகளுறுசாங் கியற்குமூன் றுரையொடுநான் குவமை
 பொடுநியா யற்கருத்தா பத்தியொடைந் தாகு
மிகுபிரபா கரற்காறு ம்பாவமொடு பாட்ட
 வேதாந்தி கட்காகு மெனவறிக தெரிவுற்
றிகலருமொண் புராணிகர்க டமக்களவை யெட்டா
 மென்றுரைப்பர் சம்பவவை திகங்களுட னன்றே.

(இ - ள்.) புகலுலகாயிதனுக்கு-சொல்லப்பட்டவுலகாயித னென்னுஞ்சமயவாதிக்கு, காட்சியொன்றே - பிரத்தியட்சப்பிரமாண மொன்றேயாம், சயின புத்த வைபாடிகர்கடமக்கு-சயினர், பௌத்தர் வைபாடிகர்களாளனவிம்மூன்று சமயிகளுக்கும், அனுமானத்தோடு - அனுமானத்துடனே, இரண்டு - இரண்டு பிரமாணங்களாம், உகளுறுசாங்கியற்கு-தத்துவங்களைக் கடந்த சாங்கியவாதிக்கு, உரையொடு - சத்தத்தோடு, மூன்று - மூன்று பிரமாணங்களாம், நியாயற்கு - தார்க்கீகவாதிக்கு, உவமையொடு - உவமானத்துடன், நான்கு - நான்கு பிரமாணங்களாம், மிகுபிரபாகரற்கு - மேன்மையுள்ள பிரபாகரனென்னும் சமயவாதிக்கு, அருத்தாபத்தியொடைந்தாகும்-அருத்தாபத்தியுடனைந்து பிரமாணங்களாம், பாட்டவேதாந்தி

கட்கு - பாட்டனுக்கும் வேதாந்திக்கும், அபாவமொடு - அனுபலத்திப் பிர மாணத்துடன், ஆறுகுமென - ஆறு பிரமாணங்களாகுமென்று, அறிகரித வுற்று - தெளிவுற்றறிவாயாக, இகலரும் - பகையின்றிய, ஒண்புராணிகர்க் கடமக்கு - அழகுள்ள பௌராணிகர்களுக்கு, சம்பவைதிகங்களுடன் - சம் பவம் ஐதிகமென்னு மிரண்டு பிராமணங்களோடு, அளவை யெட்டாமெ ன்று - பிரமாணங்களெண் வகையாகுமென்று, உரைப்பர் - கற்றுவல்லோர் சொல்லுவார்கள், எ - று. அன்று ஏ - அசை.

பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானமென்னும் நான்கும் ஜைனருக்குப் பிரமாணங்களாமென் றுரைத்தலுமுண்டு. ஆகமம் சத்தம் உரை என்பன வொருபொருட் கிளவி.

(ப - ம்.) பிரகஸ்பதியினாற் சொல்லப்பட்ட வுலகாயிதமென்னும் அவைதீகசாத்திரம் கந்தமுதலிய நான்கு குணங்களையுடைய பிருதிவியாதி சதுர்ப்பூதமே சகத்து. அதனேகதேச விகாரமாய்ப் பரிணமித்த தேகத் தில் அப்பூதங்களின் கூட்டுறவினாற் சைதன்னிய மென்றொரு தருமம் பிறக்கும் என்னும். அதைச் சாருவாகன் தேகமெனவும், சாருவாகவேக தேசிகளிந்திரியமெனவும், இரணியகருப்ப சாருவாகவேகதேசிகள் பிராண னெனவும் இவற்றையே யாத்மாவெனவும் இவற்று லுண்டான சுகதுக்கங் களே சொர்க்கநரகமெனவு மிவற்றினொருமையாய் மகளிர்முதலிய விஷ யானுபவமுந் தேகநசிப்புமே, முத்தியெனவுங் கூறுவர். இவர்கட்குக் கண் டதே காட்சியென்ப தறுதியாகலின் 'புகலுலகாயிதனுக்குக் காட்சியொன் றே' எனவும்,

அரகதமுனிவனாற் சொல்லப்பட்ட சயினமென்னும் அவைதிகசாத்தி ரம் நிகண்டவாதி ஆசிவகனென்னு மிரண்டுபேதமாம். காரணகாரியரூபத் தா லாத்மாக்களின் கன்மானு ரூபமான சரீரங்களினுடைய பரிமாணத் தைத் தனக்குப் பரிமாணமாகக்கொண்டிருக்கின்ற சகத்து பின்னபின்ன மும் நித்தியாநித்தியமும் சத்தியாசத்தியமுமாயிருக்குஞ் சமுசாரம் அநாதி யெனவும், இன்னும் லூனகேச, திகம்பர, பாணிபாத்திர, மயூரபிஞ்ச, பஞ்ச மலதாரணாதிகளையும், பொய் களவு, பரத்துவராவதி, காங்கிசை, இம்சை யில்லாதிருக்கிற பஞ்சானுவிரதங்களையும், மதுபலாண்டு முதலிய நிடேத திரவியங்களை விட்டுத் தப்தசிலாசயனாதிகளில் உக்கிரதவமாசரிக்கிற முனிவித்தைகளையும், ஏமசந்திராதிய விருபத்துநான்கு தீர்த்தகர் சரித்திர ங்களையும், சதாஸ்தி சதாநாஸ்தி யென்னுமிவை முதலான சப்தபங்கிகளை யும், சீவ சற்ஜீவ, நிர்ஜ்ஜீவ நிர்சர, ஆசீர்வ, பந்தமோட்சமென்னுஞ் சப்த பதார்த்தங்களையும்,ஞானமுதலிய வெண்குணங்களையு மடைந்து ஞானாவர் ணியமாதிய வெண்குற்றமும், பசித்தல்முதலிய பதினெண்குற்றங்களையுங் கடியவேண்டுமெனவும்,காலம் சீவன், தன்மாத்திகாயம்,அதன்மாத்திகாயர், புண்ணியம், பாவம், விசும்பு, புட்கலம், பந்தம், வீடு என்கின்ற பதார்த்தங் கள்பத்தும் அநாதியெனவும்,தேகாதிவிலட்சணனாய்த் தேகபரிமிதனாகிமத்

திமபரிணாமத்தின் சங்கோச விகாசகன்ம யுத்தனுமே ஆத்மனெனவும், பல தாராணுதிகளாலும் ஆத்மஞானத்தாலும் பிரகிருதி நிர்ம்முத்தனு யூர்த்தகதியில் உத்திரோத்தர கமனமே மோட்சமெனவுங்கூறுஞ் சயினனுக்கும்; சுகதராற் சொல்லப்பட்ட பௌத்தமென்னும் அவைதீகசாத்திரம் சவுந்திராந்தகம், யோகாசாரம், மாத்திமிகன், வைபாடிகமென்று நான்கு பேதமாம். பூமியாதி புத்தியீறாக விருபத்துமூன்று தத்வாத்மகமே பிரபஞ்சம். அஃது தீபச்சுவாலையைப்போல க்ஷணிகமாத்திரமாம். ஞாதுரு, ஞான, ஞேயமென்னும் பதார்த்தங்கட்கு உரு, அரு, வீடு வழக்கென நான்காம். அவற்றிற் பூதம் உபாதானமென உருவத்திற்கிரண்டும் சித்தங்கன்மமென அருவத்திற்கிரண்டும், குற்றங்கந்தமென வீட்டிற்கிரண்டும், உள்ளதில்லதென வழக்கிற்கிரண்டுமாக வெட்டாம். இவற்றின் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்றவைந்துகந்தத்தாலுண்டானது சகத்தெனவும், அம்முறைப்படி கெடல் பந்தம், முற்றுங் கெடல் வீடெனவும், உயிர், ஆகாயம், காலம், திசை, ஈசன் இவ்வைந்துமில்லையென்னும் சவுந்திராந்திகனுக்கும்; ஞாதுரு ஞேயங்களின் மயக்கஞானமே, கனவைப்போலச் சகத்தாம். அதுவும் க்ஷணிகமென்றறிவதே முத்தியென்னும் யோகாசாரனுக்கும்; தேகமேசகத்து; பிரமாணபிரமேயப் பிரமாதாவுண்டென்பது மயக்கம், சூனியத்தாலே இத்தேகஞ்சூனியமென்றறிகை முத்தியென்னு மாத்மிகனுக்கும்; மஞ்சளுஞ் சுண்ணமுங்கூடினவிடத் துண்டான சிவப்பைப்போலப் பரமாணு சங்காதமாகிய விடயமும் தத்விஷயக்கியானமுங் கூடினவிடத்துப் பிரசித்த சித்தமாயிருப்பது சகத்து, அதையறியும் புத்தியேயான்மா; அதிற்பிர புத்தியே பந்தம்; இதிற்சுகதுக்காதி மயக்கமடாத சுத்தபுத்தி சந்ததியே மோட்சமென்னும் வைபாடிகனுக்கும்; இன்னும் காயாநிகன், சவுசுருதனென்பவருக்கும்; புகையைக் கண்டு நெருப்புண்டென்று நிச்சயிப்பதுபோலத் தத்விஷயமாகிய அனுமானத்தைக்கொண்டு புத்தியே யாத்மாவெனவும், இன்னுஞ் சூனியமேயாத்மாவெனவும், இதைப் பிரத்தியட்சமாக வறிதற்கு அவ்வனுமானமும் வேண்டுதலின் இதுவும் வேண்டுமென்பார் 'சயினபுத்தவைபாடிகர்கடமக்கிரண்டனுமானத்தோடு' எனவும்.

கபிலராற் சொல்லப்பட்ட சாங்கியமென்னும் அத்தியாத்மீக சாத்திரம் அசங்க சின்மாத்திரமான வாத்ம சந்நிதானத்திற் குணத்திரயமாத்மகப்பிரகிருதி சுதந்திரமாகப் பஞ்சவிம்சதிதத்துவாத்மக ஜகதாகாரமாயிற்று. அந்தப்பிரகிருதியோ டாத்மாவுக் குண்டான வநாதிசம்பந்தமே சம்சாரம். பிரகிருதி புருடவிவேகத்தினுல் அவித்தையி னிவர்த்திய மோட்சம் என்று கூறும். சாங்கியர்க்குப் புருடனைப் பிரத்தியட்சமாக வறிதற்கு விவேக புத்தியாகிய வனுமானமும், பிரகிருதிசம்பந்தம யாரோபிதமா யுண்டென்னு மாகமப்பிரமாணமும் வேண்டுமென்பார் 'சாங்கியற்கு மூன்றுரையோடு' எனவும்,

அக்ஷபாதராற் சொல்லப்பட்ட வைதிகசாத்திரம் பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்

கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, எத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகஸ்தானமென்பனச் சோடச பதார்த்தங்களெனவும், பரமாணுசமுகமே சகத்துக் குபாதான காரணமெனவும், அனுமானிகேசுரனே நிமித்த காரணனெனவும், விபுவாயும் அனேகமாயும், சைதன்னிய யுத்தனுயுமிருப்பவனே யாத்மாவெனவும், பிருதிவி அப்பு தேயு வாயுக்களின் பரமாணுக்களும், ஆகாயம் காலம், திக்கு, ஆத்மா, மனம் என்னும் இவ்வைந்தும் நித்தியமெனவும், சம்சார மநாதியெனவும், ஈசுரோபாஸ்தியாற் றேகமுதலாய விருபத்தொருவிதமான சுகதுக்கஞானநசிக்கையே மோட்சமெனவுங்கூறும். இவ்வாத்மாவியாபகப் பிரத்தியட்சத்தை யடைதற்குப் புத்தியாகிய வனுமானமும், சம்சார மனுதியென்பதற் காகமமும் ஈசுரோபாஸ்திக்கவ னின்னவிதமாயிருப்பனென் றுபாசிக்குநிமித்தம் உவமானமும் வேண்டுமென்பார், 'நான்குவமையொடு நியாயற்கு' எனவும்,

சைமினிமுனிவரால் சூத்திரரூபமாகச் சொல்லப்பட்ட பூருவமீமாஞ்சையின்பேதமான பிரபாகரமென்னும் வைதிக சாத்திரம் அநாதிகன்மத்தினற் றனே யுண்டாகி யழிவதே சகம். மந்திரரூபமே தேவர்கள். வேதம் அநாதி. நித்யராய்ச்சுவதப் பிரமாணமான ஞானஸ்வரூபனே யாத்மா. கன்மமானது நித்தியம், நைமித்தியம், காமியம், விலக்கு, பிராயச்சித்தமெனவைந்தாம். சீவகோடிகளுக்குப் பிராரத்த ஆகாமிய சஞ்சிதங்கள் அபூருவத்துவாரா சொர்க்கவின்பத்தைக் கொடுத்தல் முத்தியென்றுகூறும். பிரபாகரத்திற்குத் தேவாநந்தப் பிரத்தியட்சத்தை யடைதற்கு அதையறியு மறிவென்னுமானமும், அச்சுகத்தைப் போதகஞ்செய்யும் வேதமும், அச்சுகமிங்ஙன மிருக்குமென்னு முவமானமும்,யாகாதிகளின் வாகிய அருத்தமானது அகத்திலின்புற்றுச் சுகத்தை விளக்குதலின் அருத்தாபத்தியும் வேண்டுமென்பார் 'அருத்தாபத்தி யொடைந்தாகு மிகுபிரபாகரற்கு' எனவும்,

வியாசரா லுபநிடதார்த்தப் பிரதிபாதகமான வேதாந்தமென்னும் அத்தியாத்மீக சாத்திரம்: பாஸ்கரியம், மாயாவாதம், யாதவப்பிரகாசம், யோகாயனம், சத்தப்பிரமவாதம், கிரீடப் பிரமவாதமென ஆறுபேதமா யிருக்கும். அவற்றுள்:—பிரமந்தானே சத்தியோபாதி மிசிரமாய்க்கொண்டு பிரமிக்கையே சமுசாரம். வருணச்சிரம தர்மோசிதமாய் வாக்கிய சன்னியஞான பூருவகமாயுள்ள வுபாசனுத்மக ஞானத்தினுல் உபாதி நசிக்கையே மோட்சமென்னும் பாஸ்கரியமும், நிர்விசேஷ சின்மாத்திரமே மாயாசபளமாகக்கொண்டு பிரமிக்கையே சம்சாரம். மகாவாக்கிய சன்னியஞானத்தினு லந்தப் பிரமை (மயக்கம்) போகையே மோட்சமென்னும் * மாயா

* திருமந்திரம் மத்திய சாக்கிராவத்தையில் "ஆகின்ற தொண்ணுறேடாறும் பொதுவென்ப, ஆகின்றவாறு றருஞ்சைவர் தத்துவம், ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க், காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே" என்று கூறுவதால் இருபத்தைந்து தத்துவங்கூறுவோர் மாயாவாதிகளென்பது பெறப்படுகின்றது. இருபத்தைந்து தத்துவங் கூறுவோர் சாங்கியராயிருத்தலின் அவர்களே மாயாவாதிகளாம். இதுவன்றி உலகத்திற்குக் காரணம் கேவலம்மாயையே என்று கூறுவோரும் மாயாவாதிகளாவர். இன்பற்றிச் சூரியபுராணம் விசேடமாகப் பேசுகின்ற சாங்கியரும் உலகிற்கு முதற்காரணம் கேவலம் பிரகிருதியே யென்பர்.

வாதமும், அந்தப்பிரமந்தானே சத்தியமான சித்து அசித்து ஈசுராத்மக மான பிரபஞ்சமாகப் பிரமிக்கிறது. அதற்குண்டான பேதஞானம் சம்சாரம். ஞானகன்மங்களினாலே பேதஞானம் போகையே மோட்சமென்னும் யாதவப்பிரகாசமும், பிரமம் சகத்காரணம். அப்பிரமத்துக்கு அதிபயசத்தி விசிட்டமென்னும் யோகாயனமும், அப்பிரமம் நாதாதீதமென்னுஞ் சத்தப்பிரமவாதமும், தற்சொரூபமே லீலையினால் யாவுமா யானந்தித்துக் கொண்டிருக்கிறதென்னும் கிரீடப்பிரமவாதமுமாம்.

இன்னும் மித்தியாத்துவமே சகத்து. பரமாத்மாயிக்கத்துவமாய் வர்ணிக்கப்பட்ட ஞெப்திமாத்திரமே யாத்மா. பரமாத்மாயிக்கியத்தால் விவகாராதிசம்சாரபந்த நிவிர்த்தியே மோட்சமென்னும் வேதாந்தத்திற்குப் பரமாத்மாயிக்கியமான ஞானகதப் பிரத்தியட்சத்தை யறிதற் கேதுவான விசாரக்கியானமாகிய வனுமானமும், அஃதே வஸ்துவென நிச்சயிப்பதற்கு வேதமும், அஃததீதமாதலால் அதன் பரியாய நாமங்க ளறிதற்குவமானமும், ஒருசெயலுமின்றி நித்திய திருத்தியடைந்திருத்தற்கு அருத்தாபத்தியும், அதுவே சதோதயமான நித்தியமாய் விளங்குதற் கனுபலத்தியும் வேண்டு மென்பார் 'ஆருமபாவமொடு...வேதாந்திகட்கு' எனவும்,

முற்கூறிய முனிவரால் சிவப்பிரகாசத்தாற் சொல்லப்பட்ட வெத்த, நட்ட, சாகர, அர்த்தப் பிரதிபாதிகமான நாலுலட்சங் கிரந்தமுள்ள புராணங்கள் : சர்க்க, பிரதிசர்க்க, வம்ச, மன்மந்திர, வம்சானு சரித்திரங்களென்னும், பஞ்சலட்சணங்களும், சமஸ்த வைதிக தாந்திரீக கன்மங்களுஞ் சொல்லாநிற்கும். புராணிகர் முற்கூறிய ஞானகதப் பிரத்தியட்சத்தை யறிதற்குச் சத்துக்களறிந்துரைத்த வனுமானமும், அதுவே நிச்சயமென் றறிவிக்கு மாகமமும், அதற்கு ஆப்தர்களடைந்திருந்த வனுபவ வுல்லாசத்தைக் காண்பதற் குவமானமும், அவர்க ணிராசையாற் றிருத்தியடைதற் கருத்தாபத்தியும், அத்திருத்தி மாறுதிருக்குந் துக்கநிவிர்த்தியாதற் கனுபலத்தியும், இக்குணங்களிற் றுன் பிரிவுபடாம லொன்று யிருத்தற்குச் சம்பவமும், இவ்வனுபவந் தொன்றதொட்டுப் பண்டிதபாமரர்களுக்குச் சாதாரணமா யுளதென்பதற்கு ஐதீகமும் வேண்டுமென்பார் 'புராணிகர் கடமக்களவை யெட்டாம்' எனவுங் கூறினர்.

இவற்றுள்:—கணாதராற் சொல்லப்பட்ட வைசேஷிக சாத்திரம் திரவியம், குணம், கன்மம், சாமானியம், விசேடம், சமவாயமென்னுஞ் சட்பதார்த்தங்களுள் திரவியத்திற்குப் பிருதிவி முதலிய வொன்பதும், குணத்திற்கு உருவமுதலிய விருபத்துநான்கும்,கன்மத்திற்குக் குவிதல் முதலியவைந்தும், சாமானியத்திற்குமேற் சாதிமுதலிய விரண்டும், விசேடத்திற்கொன்றும், சமவாயத்திற்கொன்றும் என்றும், இவ்வாறு பதார்த்தங்களுடைய விசேட விவேகஞானத்தாலே யறியத்தக்கவைகளான சகணதிபூத பஞ்சக சீவாத்மா பரமாத்மாக்களாகிய வேழும் நித்தியம். பாஞ்சபூதிகமான

பிரபஞ்சம் சகாத்திரிகம். சீவாத்மா அநேகமாயும் விபுவாயுஞ் சுகதுக்க பல போக்தாவாயுங் கர்த்துருபராதீனமாயு மிருக்கும். ஈசுவரன் அனுமானீச்சு ரனே என்றும், இச்சட்பதார்த்த விவேக ஞானத்துவாரா சுகதுக்க நிவிர்த் தியே மோட்சமென்றும், பிரதிபாதிக்கின்றமையின் வைசேடியனைத் தார்க் கீகனோடும், உபக்கிரம முதலான சடுவிதலிங்கதாற்பரியத்தில் வேதவாக் கிய விசார பூருவகமாய் ஜோதிஷ்டோமயாகாதிகளை விதியுக்தமாகக்கூறி ஆத்மசுவதப்பிரமாணமே ஞானஸ்வரூபனெனச் சொல்லும் பூருவமீமாஞ் சையின் பேதமானபாட்டனைப் பிரபாகரனோடுங் கூட்டுக.

இன்னஞ் சில மதங்களுள்ளன. அவையாவன:—சாக்தேயம், பாஞ்ச ராத்திரம், லௌகீகம், பாதஞ்சலம், பாசுபதம், காபாலிகம், மகாவிரதம், சித்தாந்தமென வெண்வகையாம். இவற்றுள்:—சத்திதத்துவ வாசியினாற் சொல்லப்பட்ட வாமசாத்திரத்தின்படி சத்தியின் பரிணாமமே சடாசடப் பிரபஞ்சம். ஆநந்தமே ஆத்மா. ஆநந்தப் பிராப்தியே முத்தியென வாதி மத விஸ்தாரஞ்செய்வதே சாக்தேயமெனவும், வாசுதேவனாற் சொல்லப்பட்ட பாஞ்சராத்திரமென்னுஞ் சாத்திரத்தின்படி பிருதுவியாதி மனசாந்தமான சதுர்விம்ஸதி தத்துவத்திற்குமேற் குணதத்வாத்மக வாசுதேவனிலிருந்து கிருஷ்ண அனிருத்த மகரத்துவச ரௌகினேயரென்னு நால்வர்களாலும் உற்பத்தியாதி கிருத்திய நிகழுமெனவும், நாடி மத்தியகதனு யாத்மா வணு ப்பிரமாணமாயிருக்குமெனவும், வாசுதேவாத்மகப் பிரகிருதியிற் சொரூப வாணியில்லாதடங்குவதே மோட்சமெனவும் வாதி மதவிஸ்தாரஞ் செய் வதே பாஞ்சராத்திரமெனவும், தன்வந்திரி முதலானவர்களால் சொல் லப்பட்ட லௌகீக சாத்திரம் ஆயுள்வேதம் தண்டம் நீதி முதலானவை யாம். இவை திஷ்டபலன்களான தேகபுத்திராதிரூபமே யாத்மாவெனவும் இகபரங்களிற் புத்திர பாரியாதிகளுடனே கூடி வியாதியாதிய துக்கமில் லாமற் சுகத்திலிருக்கிறது மோட்சமெனவும் நிரூபிப்பதே லௌகீகமென வும், பதஞ்சலியினாற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாத்திரத்தின்படி இயமாதி யஷ்டாங்கயோகத்தினால் மனோநிச்சல சித்தியுண்டாமெனவும் அசங்க சின்மாத்திரமே யாத்மா வெனவும் மனோலயத்துவாரா அஞ்ஞான வழிவே மோட்சமெனவும் வாதி விஸ்தாரஞ் செய்வதே பாதஞ்சலமென வும், மாயாதத்துவவாசியான ருத்திரனாற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாத்திரத்தின்படி மாயை கன்மமென்னும் பாசத்தொய்த நிச்சயமும் நித்திய வியாபக சைதன்னியனே யாத்மனெனவும் பிரவாகேசுரத்தின வீசுரத்ருவ மன்னியருக்குக் கொடுத்து ஆத்மன் ஞெப்திமாத்திரமா யிருப்பது மோட்ச மெனவும் வாதி கூறுவதே பாசுபதமெனவும், முற்கூறிய தத்துவவாசியான ருத்திரனாற் சொல்லப்பட்ட ஆதியாத்மீக சாத்திரத்தின்படி நரகபால பிட் சாடனாதிகளின் விதியைக் கூறி நித்திய வியாபக சைதன்யனே யாத்மன், கத்துருத்துவமே சமுசாரம், அதைவிட்டு ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோட்சமெனக் கூறுவதே காபாலிகமெனவும், வித்தியாதத்துவவாசியான

ருத்திரனாற் சொல்லப்பட்ட அத்தியாத்மீக சாத்திரத்தின்படி அஸ்திதா ரணாதிகளின் விதியைக்கூறி நித்தியவியாபகசைதன்னியமே யாத்மன், கர்த்துருத்துவமே சமுசாரம் அதைவிட்டு ஞப்திமாத்திரமாயிருப்பதே மோட்சமெனக் கூறுவதே மஹாவிரதமெனவும், பரமசிவனாற் சொல்லப்பட்ட மந்திரசமிஞ்சா சித்தாந்தத்தின்படி மோட்சாங்கமான சரிதை கிரியை யோகம் ஞானங்களைக்கூறி நித்தியவியாபகக்கிரியாரூபனே யாத்மா, சடத்திவாதீத சிவசமானத்துவம் மோட்சமென்பதே மந்திரசமிஞ்ஞா சித்தாந்தமெனவுமாம். உலகாயத சயின பௌத்த பூருவமீமாஞ்ச சாங்கியரென்னு மிவர்களை நிரீசுரவாதிகளெனவும், மற்றவர்களெல்லாஞ் சேசுரவாதிகளெனவும், இம்மஹாவாதிகளுக்குள் சாருவாகனாதியயாவரும் பேதவாதிகளெனவும் வேதாந்தியொருவனே யபேதவாதி யெனவுங்கொள்க. இவைகளோடு முற்கூறிய சமயங்கள் பதினெட்டும் அவற்றின் கருத்தாக்கள் பதினெண்மரும் அவர்களாற் கூறப்பட்ட சாத்திரபேத மேழுமாம். இன்னு மனேக மதங்களுள்ளன. அவைகளைக் காணவேண்டின் அவைகட்குரிய நூல்களிற்காண்க. (உச)

போதுப்பாயிர முற்றிற்று.

உ

ஸ்ரீ சற்குருவேநமஃ.

# திருக்குவிவேகம்.

அ - கை.

முன்னர்ப்பாயிரங்களின் இலக்கணங்கூறி மேல் வேதமுடிவிற் கூறிய பரமாத்ம ஐக்கியமான அத்துவிதம் இஃதெனத் தெரிவிப்பானியற்றிய திருக்குத் திரிஸ்ய விவேகமென்னு மிரண்டனுள் கானற்சலம்போலக் காணப்படுஞ் சகமாகிய திரிஸ்யமும் கானற்போல விளங்குங் காண்பானாகிய திருக்குவும் அக்கானற்சலமுங் கானலுஞ் சூரியப் பிரகாசமாய் விளங்குதல்போல விவ்விரண்டுஞ் சிற்பிரகாசமாக விளங்குகின்றதனால் அவற்றிற் கிடையாயுள்ள திருக்குவை முற்பாலதாக்கி யிதிற் கற்பனையாகத் தோன்றிய திரிஸ்யத்தைப் பிற்பாலதாக்கி யிவ்விரண்டிற்கு மாதாரமான சிற்சொரூபத்தைக் கரதலாமலகம்போல விளக்குவிக்குஞ் சாமவேத மகா வாக்கியவிவேகத்தை முடிவின்கண்வைத்து அதனிலக்கணங்களைக் கூறுவான்றொடங்கி, இத்திருக்குவிவேகத்தின்கண் விளம்பும் பிரமசுபாவமான திருக்குவின் ஆதாரமாகிய சிற்சொரூப மொன்றேயன்றி வேறின்றென இச்செய்யுளில் உவமான பூருவகமாகச் சுவகதாதிபேதம் பிரமத்திற் கின்றென்பதை யுணர்த்துகின்றார்.

திருந்தியவே தாந்தநூ லியம்புறுவ திருக்குத்
  திரிசியமென் றிருபொருளங் கவற்றின்முதற் றிருக்கின்
வரைந்திடுவ சுவகதந்தன் சாதிவிசா திகளா
  மற்றவைமூன் றினுக்குமுதா ரணமுறையே மொழியின்
விரிந்தநிழ றருநெடும்பூம் பனைமரமொன் றிற்கு
  மிஞிறினங்கள் புக்குமுகத் துழுதுபெரு குறுதே
னருந்துநறு மலர்முதலா யினவும்வே றுள்ள
  வணிமரமுங் கன்முதலா யினவும்போ லாமால்.

(இ - ள்.) திருந்திய - சுத்தமான, வேதாந்தநூல் - வேதாந்த சாஸ்திரங்களால், இயம்புறுவ - சொல்லப்படுவன, திருக்கு - திருக்கென்றும், திரிசியமென்று - திரிசியமென்றும், இருபொருள் - இரண்டுபொருள்களாம், அங்கவற்றின் - அவைகளின், முதல் - முற்கூறிய, திருக்கின் - காண்பானாகிய சித்தினுக்கு, வரைந்திடுவ - நீக்கப்படுவனவாவன, சுவகதம் - சுவகதமும், தன்சாதி - சுசாதியும், விசாதிகளாம் - விசாதியுமாம், அவை மூன்றினுக்கும் - அம்மூன்றிற்கும், உதாரணம் - உவமானங்கள், முறையே மொழியின் - கிரமமாகச்சொல்லின், விரிந்தநிழல் - பரந்தநிழலை, தரும் - கொடுக்கின்ற, நெடும் - நீண்ட, பூம்பனை - அழகியகிளைகளையுடைய, மர

மொன்றிற்கு - ஓர் விருட்சத்திற்கு, மிஞிறினங்கள் - வண்டின் கூட்டங் கள், புக்கு - புகுந்து, முகத்துழுது - இதழ்முகங்களைக் காலாற்கின்று, பெருகுறு - அதனாற் பெருகப்பட்ட, தேனருந்தும் - மதுக்களை யுண்ணும் படியான, நறுமலர் முதலாயினவும் - வாசனையுள்ள புட்பாதிகளும், வே றுள்ள - அம்மரத்திற்கு வேறாயுள்ள, அணிமரமும் - அழகிய விருட்ச மும், கன்முதலாயினவும் - அம்மரத்திற்குப் பேதமாயுள்ள பாடாணாதிக ளும், போலாம் - போல்வனவாம், எ - று. மற்று - ஆல் -, அசை.

'மலர் முதலாயினவும்' என்றமையின் பத்திர பலாதிகளும், 'கன்முத லாயினவும்' என்றமையின் கடபடாதிகளையுங்கொள்க. காண்பானாகிய சித் தைத் திருக்கெனவும், காணப்படு மாயாகாரியமாகிய சடத்தைத் திரிசிய மெனவுங் கூறினர். சுவகதமாவது: சுவ - தன்னிடத்தில், கதம் - நீங்காது பற்றல்; எனவே ஒன்றிற்றொன்றி யதை நீங்காது பலதன்மையாயிருத்த லாம். தன்சாதி - சுசாதி. அஃதாவது தன்னைப்போல மற்றொன்றிருத்தல். விசாதியாவது: வீ - நீக்கம், சாதி-அம்சம்; எனவே தனக்குமாறாக மற்றொ ன்றிருத்தலாம். சுவகதத்திற்கு மரத்தையும் அதிற்றோன்றிய பத்திரபுட்ப பலாதிகளையும், சுசாதிக்கு அம்மரத்திற்கு வேறாயுள்ள மரத்தையும், விசா திக்கு அம்மரத்திற்கு மாறாயுள்ள கல்லையு முவமித்து, இம்மூன்றுஞ் சுபாஞ் சித்திற் கின்றென்பதை யிங்குத் திருக்குவின்மேல் வைத்துக்கூறினர். (௫௫)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய உவமானப்படி பிரமத்திற்குச் சுவகதாதி பேதமின் றென்பதற்கு உவமேய முணர்த்துகின்றார்.

நிரவயவ மாதலினா னுஞ்சத்து வேறு
  நிகழாமை யானுமிறை தனக்குமுத னடுவின்
றொருவுறுக விவ்வுலக காரணமா மாயை
  யுண்மையினா லிறுதியதா லென்பதென்கொ லென்னில்
வரைவுதரு சித்திரிகன் சித்திரசத் தியைப்போன்
  மாயையுஞ்சின் மாத்திரமாம் பிரமத்தின் வேறாத்
தெரிவதிலா மையினென்றுஞ் சச்சிதா னந்த
  சிவத்தினுக்கு விசாதியிலை யென்றுணர்க தெரிந்தே.

(இ - ள்.) நிரவயவமாதலி னானும் - அவயவமின்மையினாலும், சத்து - சத்தைப்போல, வேறு - மற்றோர்சத்து, நிகழாமையானும் - விளங்காமை யினாலும், இறைதனக்கு - பிரமத்திற்கு, முதல்-முதலிற்கூறிய சுவகதமும், நடு - இடையிற் கூறிய சுசாதியு மாகியவிரண்டும், இன்றொருவுறுக - இல் லையென நீக்குவாயாக, இவ்வுலககாரணமாம் - இச்சகத்திற் கேதுவாகிய, மாயை - மாயையென்பது, உண்மையினால் - இருத்தலால், இறுதியது - முடிவிலுள்ள விசாதியை, இல்லென்பதென்னென்னில் - இல்லையென்ப

தெங்ஙனமெனின், வரைவுதரு - எழுதாநின்ற, சித்திரிகன் - சித்திரக்காரனது, சித்திரசத்தியைப்போல்-சித்திரமமைக்கின்ற சத்தி அவனிலும் வேறுகக்காணுமைபோல, மாயையும்-மாயாசத்தியையும், சின்மாத்திரமாம் - சைதன்னியமான, பிரமத்தின் - பிரமத்திற்கு, வேறு - வேருக, தெரிவதிலாமையின் - தோன்ருமையின், என்றும் - எப்போதும், சச்சிதானந்த - சச்சிதாநந்தஸ்வரூபமாகிய, சிவத்தினுக்கு - பிரமத்திற்கு, விசாதி யில்லையென்று - விசாதிபேதமில்லையென, உணர்க தெரிந்து - நன்ருயுணர்ந்திவாயாக, எ - று. கொல் - ஏ - அசை.

மாயையுமென்றவும்மை சித்திரசத்தியைத் தழுவிநின்றமையின் இறந்ததழுதழீஇயவெச்சவும்மை. பிரமத்திற்குச் சித்திரிகனேயும் மாயைக்குச் சித்திரசத்தியையும் உவமித்தார். (உசு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய உவமேயத்திற் குறுதியாக யசுர்வேத மகா வாக்கியார்த்தத்தினுல் அத்துவிதப் பிரமத்திற்குச் சுவகதாதி பேதமின்றென்பதை யுணர்த்துகின்ருர்.

சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ்
 சொற்கிடையு ளேகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க
மரிதிலுண ரேவவென்னு மிடைச் சொற்குத் தேற்ற
 மத்துவித மெனுமொழிக்குத் துவிதவிலக் காகக்
கருதுபொருள் வருதலினு லிம்முறையே மாயா
 கற்பனைகள் கடந்துநிர வயமாகி யென்றுந்
திரிதலில்சின் மயமாகு மொருபிரமந் தனக்குத்
 தெரித்தசுவ கதமுதலா யினமூன்று மிலையே.

(இ - ள்.) சுருதியினுள் - யசுர்வேதத்தினுள், ஏகமேவாத்துவிதமென்னும் - ஏகமேவாத்துவிதமென்கின்ற, சொற்கிடையுள் - வாக்கியத்திற்குள், ஏகமெனும் - ஏகமென்கின்ற, சொல்லதனுக்கு-சொல்லினுக்கு, அயிக்கம் - ஐக்கியமும், அரிதிலுணர் - அருமையாயுணரப்பட்ட, ஏவவென்னும் - ஏவவென்கின்ற, இடைச்சொற்கு - இடைச்சொல்லிற்கு தேற்றம் - தேற்றமும், அத்துவிதமெனுமொழிக்கு - அத்துவிதமென்கின்ற சொல்லிற்கு, துவிதவிலக்காக-துவிதநீக்கமுமாக, கருதுபொருள் - சிந்திக்கப்பட்ட அருத்தம், வருதலினுல் - வருகின்றதனுல், இம்முறையே - இம்முறைமைப்படியே, மாயாகற்பனைகள் - மாயாரோபிதங்களை, கடந்து - நீங்கி, நிரவயமாகி - அவயவமின்ருய், என்றும் - காலத்திரயத்திலும், திரிதலில் - மாறுபடாத, சின்மயமாகும் - சின்மாத்திரமாகிய, ஒருபிரமந்தனக்கு - ஒப்பற்றபிரமத்திற்கு, தெரித்த - முற்கூறிய, சுவகதமுதலாயின - சுவகதாதிய, மூன்றும் - மூன்றுபேதங்களும், இலை - என்றுமில்லை, எ—று. ஏ - ஈற்றசை.

மரத்திற்ருேன்றிய பத்திரபுட்பபலாதிகட்கு வெவ்வேறுதன்மை யிருத்தல்போலச் சத்திற்ருேன்றிய சகசீவபரங்கட்கு வெவ்வேறுதன்மை யின்மையின் சுவகதமும், மரத்திற்கினமாய் மரமிருத்தல்போலச் சத்திற் கினமாகச் சகசீவபரம் வேறின்மையின் சுசாதியும், மரத்திற்குக் கல் மாரு யிருத்தல்போல அச்சத்திற்கு மாருகச் சகசீவபரம் வேறின்மையின் விசா தியுமாகிய விம்மூன்று பேதங்களும் அச்சத்வடிவ பிரமத்திற்கின்றெனக.

வினு:—அற்றேல், சத்திற்ருேற்றிய சகசீவபரங்கட்குச் சடத்துவ கிஞ் சிஞ்ஞத்துவ சர்வஞ்ஞத்துவாதி பேதத்தன்மைகளிருக்கச் சுவகதபேதமின் றென்பதென்னே ?

விடை:—சகமாதிகட்குச் சடத்துவாதித்தன்மை நுண்ணியவறிவு ளோர் கூருர். அஃதியாதினு லென்னின் சடமாயிருப்பது சகம், கிஞ்சிக் ஞுயிருப்பவன் சீவன், சர்வக்ஞுயிருப்பவன் பரன் என்னுமிடத்தில் இம் மூன்றினு மிருப்பது சத்தேயாதலின், இவற்றிற் சத்துத் தன்மையைக் காண்பதேயன்றி வேறுதன்மையைக் காண்கிலராதலின் சுவகதபேதமின் றென்க.

வினு:—அற்றேல், முற்கூறிய சத்தைப்போல இச்சகசீவபரங்களி னும் சத்திருக்கச்சுசாதிபேதமின்றென்ப தென்னே ?

விடை:—அச் சத்தைப்போல வேருேர்சத்தென்பதின்று, அச்சத்தே யிருத்தலின் சுசாதிபேதமின் றென்க.

வினு:—அற்றேல், மாயாவிகாரமான சகசீவபரங்கள் தோன்றுதொட் டிருக்க விசாதிபேதமின்றென்ப தென்னே?

விடை:—அவையாவுஞ் சத்தாயிருந்து விளங்குதலின் விசாதி பேத மின்றென்க.

வினு:—அற்றேல், பிரமத்திற் சச்சிதானந்தமென்னும் பேதம் விளங் கச் சுவகதபேதமின்றென்ப தென்னே?

விடை:—சூரியனதழலே பிரகாசமாயும் அப்பிரகாசமே சூரியனுயுமி ருத்தல்போலச் சத்தினது தேஜசே சித்தும், அத்தேஜஸான சித்தே சத் தும் அவ்விருமையினெருமையே யாநந்தமுமாய் வேற்றுமையின்றி யிருத்த லின் சுவகதபேத மின்றெனக.

வினு:—அற்றேல், சத்தைப்போல வியாவகாரிகம், பிராதிபாஸிகம், பாரமார்த்திகமென மூன்றுசத்திருக்கச் சுசாதிபேத மின்றென்பதென்னே?

விடை:—அங்ஙனமிருத்தல், சத்தொளியின் பிரதிபலினமே யன்றிச் சத்தன்ருதலின், சுசாதிபேதமின்றெனக.

வினு:—அற்றேல், அதீதப்பிரமத்தின் ஆநந்தானுபவம், நவநவமாயனு பவித்தலால், விசாதிபேத மின்றென்பதென்னே?

விடை:—அது சச்சிதாநந்த வொருமையான சுவானுபவமெனத் தோன்ருத பேதவாதிகட்கு அங்ஙனந் தோன்றுவதன்றி அவ்வனுபவமுள்ள அபேதவாதிகட்கு அங்ஙனந் தோன்ருதாகலின் விசாதிபேத மின்றெனக.

வினு:—அற்றேல், இவைகட்குப் பிரமாணமுண்டோ ?

விடை:—"அறிஞர்க் குலகா னந்த மயம்" என்பதனுலும், "விளக்குமிரவியுமலரு முண்டா முண்டாம் வீசொளியும் பகர்பொழுதும் விரையும்போலத், துளக்கமில்சித் துண்டாகி லுண்டாம்ஞாலந் தோற்றரவு மாத்திரமே சொரூப மாகுங், கிளர்த்தபர மாாத்தத்தா வில்லை" என்பதனுலும், "பொருகடலிற் றிரைமுதலாப் பிறந்தவெல்லாம் புனலாகி விளங்காமற் புழுதியாமோ, வொருபொருளாம் பிரமமாத் திரமேயல்லா லுபயமெனுங் கற்பனைப்பே ரொன்ருதாகும்" என்றருளிய வசிட்ட சம்மிதையினுலும், "சத்தேசித்தாகுமய லெனிலசித்தா மசித்தாளுற் சாக்ஷி யெங்கே, சித்தேசத் தாகுமய லெனிலசத்தா மசத்தானுற் சடங்களுக்குத் திதியுமில்லை, யொத்தேதோன்றிபசத்துஞ் சித்துநல்ல சுகமாகும்" என்ற கைவல்ய நவநீதத்தினுலும், ஏகமென்னும் பதத்தினுற் சுவகதமும் ஏவவென்னும் பதத்தினுற் சுசாதியும், அத்துவிதமென்னும் பதத்தினல் விசாதியும் இன்றெனுஞ் சுருதியினுலும், "சர்வம் பிரமமயம்" என்னும் பிரமோபதேசத்தினுலும், "கசனுயர் சமாதி நீங்கி" யென்ற கவியினுலும், "மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில், வானில்வை யகத்திலெங்கு மியானன்றி மற்றென் றில்லை, யானிலா விடமுமில்லை யெனதிடத் தியாதுமில்லைத், தானிகழ்ப் பொருள்வே றில்லைச் சச்சிதாநந்த மென்ருர்" என்ற கசமுனி சுவானுபவத்தினுலும் யாவுந் தன்மயமாய் விளங்குதலால் எப்போதுஞ் சுவாகாதிபேதம் பிரமத்திற் கின்றெனக.

வினு:—அற்றேல், பரவியாபகத்துள் சகசீவபரம் தத்தங்குணங்களோடும் விளங்கினதாக விஸ்வரூப தரிசனத்திற் கிருஷ்ணசுவாமி காண்பித்ததென்னை?

விடை:—முன்பு பாகியத்திற் பேதமாகக் கண்ட விசயனுக்கு அவை நீங்குநிமித்தந் தனதகத்தி லுறுப்பாக விருப்பதைக் காண்பித்து அதற்குமேல் அபேதமான பிரமஸ்வரூபத்தைக் காண்பிப்பதற்கேயன்றி வேறின்றெனக.

வினு:—அற்றேல், அங்ஙனமயிக்க வஸ்துவை மேற் றரிசிப்பித்ததற்குப் பிரமாண முண்டோ?

விடை:—அதனை அந்நூலிற்ருனே "பிரம மானோர் பிரம நெருப்பிடைப், பிரம மாகிய மந்திரந் தன்னினுற், பிரம மாய சருவுடன் பெய்தபின், பிரம மேயடை வாரவர் பின்னுங்கேள்" என்ற, கவியினுற் காண்க.

வினு:—அற்றேல், இச்சுவகதாதிபேத மொருவரு மொப்பவிலையோ?

விடை:—பரவியாபகத்திற் சீவர்கள் பின்னுபின்னமா யிருக்கின்ருரென்ற விசிட்டாத்துவிதிகள் சுவகதமும், பரசிவசமானம் ஆத்மாவென்ற

விசிட்டாத்துவிதபக்ஷங் கிஞ்சித் தொப்புக்கொண்டவர்கள் சுசாதியும், பரம வேறு, சீவர்கள் வேறு, அப்பரத்தின தருளா லிச்சீவர்கள்தத்தங் குணங்க ளோடுஞ் சுகித்திருக்கின்றூர்க ளென்ற துவிதிகள் விசாதியுமுண்டென ஒப்புவரென்க.

வினு:—அற்றேல், அவர்களனுபவந்தானியாது?

விடை:—ஸிஷ்களஸ்வரூபமான பரவாசுதேவ சமுகத்திற் சீவர்களவ் வடிவமாயிருந்து அவனதருளாற் பரமாநந்த மனுபவிப்பரென்ற விசிட்டா த்துவிதிக ளனுபவமும், நிஷ்களஸ்வரூபமான பரசிவத்தினது பேராநந்த த்தை நிஷ்களஸ்வரூபமான வாத்மாக்க ளனுபவிப்பவென்ற சிவசமானத்து வமென்னும் விசிட்டாத்துவிதவேக தேசிகளனுபவமும், நிஷ்களஸ்வரூப மான பரவாசுதேவசமுகத்தில் ஆத்மாக்க ளெவரெவ ரெத்தன்மையரோ, அவரவர் அத்தன்மையி லேற்றங்குறைவின்றி யுபாசிப்பதனுல் அவர் கொடு த்த வாநந்தத்தை யனுபவிப்பரென்ற துவிதிகளனுபவமுமாமென்க.

வினு:—அற்றேல், இவர்களுக் கிவ்வனுபவத்தால் முத்தியின்றே?

விடை:—பரமாத்மபேதமான பதமுத்தியேயன்றி அவைக ளேகமென் னும் அபேதமான அயிக்கியமுத்தி யன்மையின் முத்தியின்றெனக.

(தா-ம்.) சர்வம் பிரமமயம் சர்வமின்றென்னும் பிரமோபதேசப்படி அனுபவந் தோன்றப் பேதவாதிகள்கொண்ட சுவகதாதிபேதங்களென்னுங் களங்கங்களை நேரேகளைந்து அபேதவாதிகட்கு அனுபவமான அத்துவித சொரூப மிஃதென நிச்சயித்ததாம். (உஎ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிச்சயித்த பிரமசொரூபத்தைத் தரிசிப்பிப்பான் கருதி, அதன்கண் கற்பனையாகத் தோற்றிய ஆரோபமும் அதனை நீக்கும் அபவாதமும் அது நீங்கினவிடத்துள்ள யதார்த்தத்தை அறிவித்தற் கேது வான மூன்றிலக்கணநாமமும் உணர்த்துகின்றூர்.

அத்தியா ரோபமப வாதமென விரண்டா
யறைகுவர்கற் பிதமத்தி யாரோப முள்ள
சுத்தியூ டிலாதவிர சிதம்விளைத்தல் போலச்
சொற்பிரம சத்தினிலா வுலகதுகற் பித்த
லெத்திதுதான் வெள்ளியன்றிப் பியெனல் போலோர்ந்
திறைமெய்பொய் யுலகமெனத் தெளிதலப வாத
மெய்த்தபொரு ளறியுமிலக் கணமூன்று மவைதாம்
விளங்கதத்து வாவிருத்தி தடத்தமொடு சொரூபம்.

(இ - ள்.) அத்தியாரோபம் - அத்தியாரோபமும், அபவாதமென - அபவாதமுமென, இரண்டாய் - இருவிதமாக, அறைகுவர் - சத்துக்கள்

சொல்லுவார்கள், கற்பிதம் - கற்பிதமாகிய, * அத்தியாரோபம் - அத்தியாரோபமானது, உள்ளசுத்தியூடு - உள்ளதான கிளிஞ்சலினிடத்தில், இலாதவிரசிதம் - இல்லாத வெள்ளியை, விளைத்தல்போல - கற்பித்தல்போல, சொல் - சொல்லாநின்ற, பிரமசத்தின் - உள்ளதான பிரமத்தினிடத்தில், இலாவுலகது - இல்லாதசகத்தை, கற்பித்தல் - உண்டெனக் கற்பித்துச் சொல்லுதலாம், † அபவாதம்-அபவாதமாவது, எத்திது-இஃதெத்தன்மைத்தெனில், வெள்ளியது - பிராந்தியாய்த் தோற்றிய விரசிதம், இன்று - யதார்த்தமாகவில்லை, இப்பியெனல்போல்-இருக்கின்றது சிப்பியேயென்று உணர்தல்போல, ஓர்ந்து - விசாரித்து, இறைமெய் - பிரமஞ் சத்தியம், பொய்யுலகமென - சகமித்தையென்று, தெளிதல் - தெளிவதாம், மெய்த்தபொருள் - உண்மையான பிரமவஸ்துவை, அறியும் - அறிதற்கேதுவான, இலக்கணமூன்றும் - இலக்ஷணங்கள் மூன்றுவிதமாம், அவை - அவையாவன, விளங்கு - விளங்காநின்ற, அதத்துவாவிருத்தி - அதத்துவாவிருத்திலட்சணமும், தடத்தமொடு - தடத்தலட்சணமும், சொரூபம் - சொரூபலட்சணமுமாம். எ - று. தான் - தாம் - அசை.

வடநூலார் அதிகதம் ஆரோபம் - அத்தியாரோபமெனவும், அபகதம் வாதம் - அபவாதமெனவுங் கூறுவர்.

(தா-ம்.) பிரமத்திற் சகசீவபரந் தோன்றுங் கற்பனையும் அக்கற்பனை கணிங்குமுறைமையுந் தெரிவித்ததாம். (உஅ)

அ - கூ.

இச்செய்யுளில் முற்கூறிய மூன்றிலக்கண பூருவகமாக வெளிப்படும் பயனையும் அங்ஙனம் வெளிப்படும் பயனுய பிரமத்திற்குரிய பரியாயநாமமைந்தையும் உணர்த்துகின்றார்.

ஆகமுத லனநேதி யதுசெய்து நின்ற
  வாருயிரை யறிவித்த லதத்துவா விருத்தி
சாகைநுனி மதியுளதென் றுணர்த்தலிற்பூ தாதி
  சகமாய காரணங்கொண் டறிவுணர்த்த றடத்த
மாகனலி விளங்குகதிர் சொரூபமென்னல் போலா
  மாவினிச சொரூபமிது வெனவுணர்தல் சொரூப
நீகடவுள் சொரூபநிசஞ் சச்சிதா நந்த
  நித்தியம்பூ ரணமாக நீநினைந்து கொள்ளே.

(இ - ள்.) ஆகமுதலன - தேகாதிகளை, நேதியதுசெய்து - நேதிகளைந்து, நின்ற - சேடித்துநின்ற, ஆருயிரை - வியாபகமான கூடத்தனை, அறி

* வஸ்துவில் (கயிற்றில்) அவஸ்துவை (பாம்பை) க்கூறுதல் அத்தியாரோபமாம்.

† அதிஷ்டானசேஷம் (கயிறு மிஞ்சுதல்) அபவாதமாம்.

வித்தல் - தெரிவிப்பது, அதத்துவாவிருத்தி - * அசத்துவியாவிருத்திலட்சணமாம், † சாகைநுனி - இம்மரக்கோட்டினுச்சியில், மதியுளதென்று - மூன்றாம் பிறையிருக்கின்றதென, உணர்த்தலின் - அறிவிப்பதுபோல, பூதாதிசகமாய - பிருதிவிமுதற் பிரகிருதியீறானசகமாகிய, காரணங்கொண்டு - ஏதுவைக்கொண்டு, அறிவுணர்த்தல்-பிரமத்தையறிவிப்பது, ‡ தடத்தம் - தடத்தலட்சணமாம், பானுவொலி - சிறந்த சூரியன், விளங்குகதிர் - பிரகாசகிரணமே, சொரூபனெனல்போல் - வடிவனென்பதுபோல, ஆன்மாவின் - ஆத்மாவினுடைய, நிசசொரூபம் - உண்மையான சொரூபம், இதுவெனவுணர்த்தல் - இதுவெனவறிவிப்பது, ¶ சொரூபம் - சொரூபலட்சணமாம், நீ - நீயென்னுங்கூடஸ்தனும், கடவுள் - அதுவென்னும் பிரமமும், சொரூபம் - ஆனுயென்னும் அயிக்கியஸ்வரூபமே, நிசம் - அத்துவிதத்தினுண்மையாம், சச்சிதாநந்தநித்தியம் பூரணம் - சத்தாதியைந்தும், ஆக - அதன்வடிவமாக, நீநினைந்துகொள் - நீகருதிக்கொள்ளுவாய், எ - று. ஏ - அசை.

(ப - ம்.) பூரணமான கூடத்தனென்பார் 'ஆருயிர்' என்றார். நீகடவுள் சொரூபமென்றது அது நீயானுயென்னுஞ் சாமவேதமஹாவாக்கியத்தை. நீயதுவானுயென்னும் பிரகடவுபதேசமாகக் கூறினது இதுவே பிரமோபதேசத்தின் கருவியாதல்பற்றிபாம். அதத்துவியாவிருத்தி யென்பது அதத்வாவிருத்தியென்றாயிற்று; தது-பிரமம், அத்து-சகத்து, வியாவிருத்தி - நீக்கம். தடஸ்தமென்பது லட்சியமுள்ளவரை யஃதில்லாததாயும்அதற்கேயுரித்தாயுமிருப்பது. எனவே நாதமுதற் பிருதிவிபரியந்தமில்லாதது பிரமமாம்.

(தா - ம்.) அதத்துவியா விருத்திலட்சணத்தாற் றேகவிலட்சணமான நீயென்னுங் கூடஸ்தனையும், தடஸ்த லட்சணத்தாற் சகத்துவிலட்சணமான அதுவென்னும் பிரமத்தையும், சொரூபவிலட்சணத்தா லானுயென்

---

* அதத்துவியா விருத்திலட்சணம் உபலட்சணமாம். எது காரியத்திற் சம்பந்தமில்லாததாய் மற்றவற்றினின்றும் வேறுபிரித் தறிவிக்கின்றதோ அது உபலட்சணமாம். இதற்குதாரணம்: காகமுடைய வீட்டிற்குப்போ என்றாற்போல்வது. காகம் போனவிடத்தும் வீடறியப்படுகின்றதே இதில் விசேடணம்.

† சாகைநுனி மதியுளதென்றுணர்த்தலைச் சாகாசந்திரநியாயமென்பர்.

‡ எது ஒருகாலத் திருப்பதாய் மற்றவற்றினின்றும் வேறுபிரித்தறிவிக்கின்றதோ அது தடத்தலட்சணமாம். இதற்குதாரணம்: இவன் நாமக்காரன் என்றாற்போல்வது.

¶ எது எப்போதுமிருப்பதாய் மற்றவற்றினின்றும் வேறுபிரித்தறிவிக்கின்றதோ அது சொரூபலட்சணமாம். இதற்குதாரணம்: சூடுடையது தீயென்றாற்போல்வது.

னுமத்துவித ஸ்வரூபத்தையும் நீ கடவுள் சொரூபமெனும் வாக்கிய மூலமா கத் தெரிவித்ததாம். (உக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சத்தாதியைந்தின் இலக்கண முணர்த்து கின்றார்.

மதித்தன்மதி யாமைநன வாதிகளிற் றனக்கோர்
வாதையிலா துண்டெனல்சத் தவத்தையனைத் தினுமே
யுதித்தவிட யங்களைநின் றறிந்திடுதல் சித்தா
மூவப்பினுக்கு விடயமாந் தன்மையா நந்தந்
திதித்தசதோ திதநித்த மனைத்தினுஞ்சா தகமாந்
திறத்தினு லனைத்தினுஞ்சம் பந்தநிறை வெனவே
விதித்திடுக வுயிர்சச்சி தாநந்த மயமேல்
விளங்கியதி லவற்றுளா நந்தமெங்கு மெனினே.

(இ - ள்.) மதித்தன்மதியாமை - அறிவறியாமைகளிலும், நனவாதி களின் - சாக்கிராதியவத்தைகளிலும், தனக்கோர் - தனக்கொரு, வாதை யிலாது - வாதையின்றி - உண்டெனல், எப்போது முண்டென்பதே, * சத்து-சத்தும், அவத்தையனைத்தினும் - எல்லாவவத்தைகளிலும், உதித்த- தோன்றிய, விடயங்களை - திரிஸ்யங்களை, நின்று - விலட்சணமாயிருந்து, அறிந்திடுதல் - அறிவதே, சித்து - சித்தும், உவப்பினுக்கு - பரமப்பிரீதி க்கு, விடயமாந்தன்மை - விஷயமாகுந் தன்மையே, ஆநந்தம் - ஆநந்தமும், திதித்த - நிலைபெற்ற, சதோதிதம்-எப்போது முதயமாயிருக்கின்றதே, நித் தம் - நித்தியமும், அனைத்தினும் - சர்வார்த்தங்களுக்கும், சாதகமாந்திறத்தி னுல், முதற்காரணமாயுமிருக்குந் தன்மையினுல், அனைத்தினுஞ்சம்பந்தம்- சர்வத்தினுங் கலந்திருப்பது, நிறைவு - பூரணமும், ஆமென - ஆகுமென, விதித்திடுக - மதிப்பாயாக, உயிர் - ஆன்மாவானது, சச்சிதாநந்தமயமேல்- சச்சிதாநந்த ஸ்வரூபமானுல், அவற்றுள்-அவைகளுக்குள், ஆநந்தம்-ஆநந்த மானது, எங்கும் - எவ்விடத்தும், விளங்கியதில் - விளங்கவில்லையே, எனின் - எனக்கேட்கில், எ - று. ஏ - ஈற்றசை.

தனக்கோர்வாதையிலா துண்டெனல் சத்து என்றமையால் அவத்தை கள் வாதிக்கப்பட்ட அசத்தென்பதாயிற்று. பிரமசொரூபம் சத்தாதியைந்

* (1) முக்காலத்திலும் பொய்யென்று நிச்சயிக்கப்படாதது சத்தாம்.

(2) முக்காலத்தும் எல்லாவற்றையு மறிவதாயும் அறியப்பட்டவற்று லறியப்படாததாயு மிருப்பது சித்தாம்.

(3) முக்காலத்தும் மிகுந்த பிரியத்திற்கு விஷயமாயிருப்பது ஆநந்த மாம்.

(4) நாசமின்றியிருப்பது நித்தியமாம்.

(5) கடத்தில் மண் நிறைந்திருப்பதுபோல யாவற்றினும் நிறைந்திருப் பது பூரணமாம்.

தெனவே சகத்து அசத்து, சடம், துக்கம், அனித்தம், கண்டமெனக்கொள்க. அசத்தான பிரகிருதி முதலிய தத்துவங்களியாவற்றிற்குந் தன் சத்தைக் கொடுத்து அவைகளுஞ் சத்துப்போன்றிருக்கச்செய்து அவைகளியாவும் அசத்தாயினுந் தானங்ஙனமாகா திருப்பது யாதோ அதுவே சத்தும், அச்சடமான வஸ்துக்களியாவற்றிற்குந் தன்னறிவைக்கொடுத்து அவைகளுஞ் சித்தைப்போன் றறியச்செய்து அவை சடமாயினுந் தானங்ஙனமாகாது அவைகட்குச் சாக்ஷியாய் விளங்குவது யாதோ அதுவே சித்தும், பவ முதலிய துன்பங்க ளியாவற்றிற்குந் தன்னின்பத்தைக் கொடுத்து அவைகள் இன்பமாயிருப்பதுபோலத் தோற்றுவித்து அவைகளனைத்துந் துன்பமாயினுந் தானங்ஙனமாகாது எப்போது மின்பமாய் ரமிக்கின்றதியாதோ அதுவே யாநந்தமும், உதித்தொடுங்குகின்ற வஸ்துகளியாவற்றிற்குந் தன் னித்தியத்தைக் கொடுத்து அவைகள் என்றும் உதயமா யிருப்பதுபோலத் தோற்றுவித்து அவைக ளநித்தியமாயினுந் தானங்ஙனமாகாது சதோதயமாய் விளங்குவதுயாதோ அதுவேநித்தியமும், பரிச்சின்னமான வஸ்துக்களியாவற்றிற்குந் தன்னபரிச்சின்னம்சத்தைக் கொடுத்து அவைகளஃதைப்போல விளங்கச்செய்து அவைகள் பரிச்சினமாய்ச் சிதறினுந் தானங்ஙனமாகாமல் நிறைவாய் விளங்குகின்றது யாதோ அதுவே பூரணமுமாம்.

(இ - ம்.) பிரமத்தினது சுபாவமே சத்துமுதலேந்திலக்கணங்களுமாமென்பதாம். (௫0)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சத்தாதியே யாத்துமாவானல் அவற்றுளொன்றானஆநந்தம் சீவர்களிடத்து நிரந்தரமாகக் காணப்படவில்லையேயென்ற வினவை நோக்கி இச்சச்சிதாநந்தம் விருத்தித் திரயத்தினற் பேதம்போலத் தோற்றுந்தன்மையை யுணர்த்துகின்றார்.

வெம்மையொளி யுருவாய வழல்விளக்கி லொளியே
 விளங்கியிடும் புனலிடத்தின் வெம்மையே விரியும்
வெம்மையொளி யிரண்டுமெழும் விறகினிலவ் வகைபோல்
 விமலசத்தொன் றேநிகழுங் கன்முதலா மவற்றின்
மென்மைதவிர் புத்தியது தமோகுணத்தின் மூட
 விருத்தியினு மிராசதத்தின் கோரவிருத் தியினு
மெய்ம்மையொடு சித்தாகுஞ் சத்துவத்திற் சாந்த
 விருத்தியினிற் சச்சிதா நந்தங்க டோன்றும்.

(இ - ள்.) வெம்மை - உட்டணமும், ஒளி - பிரகாசமும், உருவாய வழல் - வடிவமாயுள்ள வக்கினியானது, விளக்கில் - தீபத்தில், ஒளியே விளங்கியிடும் - பிரகாசமொன்றுமே மேற்பட்டிருக்க விளங்கும், புனலிடத்தில் - சலத்தில், வெம்மையேவிரியும் - உட்டணமே மேற்பட்டிருக்க வியாபித்திருக்கும், வெம்மை - வெப்பமும், ஒளி - பிரகாசமுமாகிய, இர

ண்டும் - இவ்விரண்டும், எழூம்விறகினில் -காட்டத்திற்ருேன்ற இருக்கும், அவ்வகைபோல் - அத்தன்மையைப்போல, விமலம்-நின்மலமான வாத்மாவின் தன்மைகளில், கன்முதலாமவற்றின் - மலைமுதலாயவற்றில், சத்தொன்றே நிகழும்-சத்தொன்றுமே விளங்கும், மென்மைரவிர் - கடினமாகிய, புத்தியது-புத்தியினது, தமோகுணத்தின் - தாமதகுணத்தினுலாய, மூட * விருத்தியினும் - மூடவிருத்தியிலும், இராசதத்தின் - இராசதகுணத்தினுலாய, கோரவிருத்தியினும் - கோரவிருத்தியிலும், மெய்ம்மையொடு - சத்துடன், சித்தாகும் - சித்தும் தோன்ருநிற்கும், சத்துவத்தில் - சாத்துவிதகுணத்தினுலாய, சாந்தவிருத்தியினில் - சாந்தவிருத்தியில், சச்சிதானந்தங்கடோன்றும் - சச்சிதாநந்தமாகிய மூன்றநந் தோன்றும், எ - று.

† ஆத்மாவிற்கு அழலையும், அதன் சத்திற்கு உட்டணத்தையும், அதன் சித்திற்குப் பிரகாசத்தையும், அதனுநந்தத்திற்கு உருவத்தையும்,மூடவிருத்திக்குப் புனலையும், கோரவிருத்திக்கு விளக்கையும், சாந்தவிருத்திக்கு விறகையு மூவமித்தவாறுகாண்க. புத்தியினது மூடவிருத்தியிற் சத்தும், கோரவிருத்தியிற் சத்துஞ் சித்தும், சாந்தவிருத்தியிற் சச்சிதாநந்தமும் பிரகடிதமாய் (வெளிப்பட்டுத்) தோற்றுமென்க.

வினு:—அங்ஙனமாயின், ஒன்றே மூன்ருயிருத்தலால் ஒவ்வோர் விருத்திகளிற் சில தோற்றிச் சில தோற்ருதவாறென்னே ?

விடை:—அவத்தாத் திரயங்களிற் றத்துவவிரிவினுல் விரிந்தும் அவை குவிவதனுற் குவிந்துந்தோன்றுதலா லென்க.

வினு;—அஃதெப்படி.

விடை:—சுழுத்தியிற் றத்துவங்களொடுங்கிநின்ற தாமதத்தினுள்ள மூட விருத்தியிற் சத்து மேலிடும்போது மற்றிரண்டும் அந்தர்க்கதமாயும், சொப்பனத்திற் றத்துவஞ்சில விரிந்த விராசதத்தினுள்ள கோரவிருத்தி

---

* அந்தக்கரணத்தின் பரிணுமம் விருத்தியெனப்படும்.

உவமானம்.

† உஷ்ணமும் பிரகாசமுமுள்ள தீபத்தில் பிரகாசமேற்பட உஷ்ணம் கீழ்ப்பட்டிருக்கும்; (சுடு) ஜலத்தில் உஷ்ணம் வெளிப்பட்டிருக்கப் பிரகாசம் தோன்ருதிருக்கும்; விறகில் உஷ்ணமும் பிரகாசமும் வெளிப்பட்டிருக்கும்.

உவமேயம்.

பிரமத்தின்சத்து கல்முதலானவைகளில் வெளிப்பட்டிருக்கும்; சிதாநந்தங்கள் அந்தர்க்கதமாயிருக்கும். புத்தியின் தமோகுணத்தால் அஞ்ஞானமயமான மூடவிருத்தியிலும், ரஜோகுணத்தால் இராகமயமான கோரவிருத்தியிலும் சத்து சித்து இரண்டும் பிரகாசிக்கும்; ஆநந்தம் பிரகாசியாது. சத்துவகுணத்தால் வைராக்கியமயமான சாந்தவிருத்தியில் சச்சிதாநந்தங்கள் நன்ருய்ப் பிரகாசிக்கும்.

யிற் சத்துஞ் சித்தும்மேலிடும்போது ஆனந்தமொன்றும் அந்தர்க்கதமாயும், சாக்கிரத்திற் றத்துவ முழுதும் விரிந்த சத்துவத்தினுள்ள சாந்தவிருத்தி யிற் சச்சிதானந்த மூன்றுந் தோற்றுமென்க. அந்தர்க்கதம்—அடங்கியிருத் தல்.

வினு:—அற்றேல், கோரவிருத்தியிற் சத்தென்னுது 'கன்முதலாம வற்றின்' என்றதென்னை ?

விடை:—இச்சச்சிதாநந்தப் பிரகடிதம் ஆத்மாவைக்குறித்தே யன்றி அநாத்மாவைக் குறித்தன்மையிற் கற்பிதாத்ம சம்டந்தமான மூடத்தன்மையையுடையதருவைப்போல மலைகளுஞ் சுழுத்தியையுடைய வுயிராத லின் அங்ஙனங் கூறினரென்க.

(தா - ம்.) விருத்தி பேதங்களினுல் இருக்கின்றது இல்லையென்பன போலத் தோற்றவதேயன்றி யெப்போதும் ஆத்மா சச்சிதாநந்த ஸ்வரூப மாகவே விளங்குமென்பதாம். (௩௧)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சத்தாதி யைந்தினைப்போல அவற்றிற்குப் போலியாகத் தோற்றிய குற்றங்களை நீக்கிச் சுத்தம் வெளிப்படுத்துவான் சுருதி அவற்றுட் சுயஞ்சத்தி ஞபாசமான மூன்ற னிலக்கண முணர்த்து கின்றார்.

(சத்துத்திரயம்.)

ஆதலினு லானந்த மயமா மான்மா
வவைந்தினுக்கு * முபாதியுள வவைமுறையே மொழியிற்
பேதமுறு ‡ சத்துமூன் றும்விவகா ரிகம்பின்
பிராதிபாசி கம்பார மார்த்திகசத் தெனவே
மூதுணர்விற் சுழுத்தியிற்றோன் றுதுநன வுற்று
முத்தியுறு மளவுமுறுங் கடாதிமுத லதுவாம்
போதுகன விற்றோன்றி யழிவதிலை யதுவாம்
பொன்றுத பிரமசத்தே யிறுதியதா மன்றே.

---

* ஒரு வஸ்துவைப் பல வஸ்துவைப்போலத் தோன்றச்செய்வதற் குக்காரணமாயிருப்பது உபாதியாம்.

‡ (1) மூன்றுகாலத்தும் பொய்யென்று நிச்சயிக்கப்படாதது பாரமார் த்திகசத்தாம். அத்தகையது பிரமமாம்.

(2) ஆத்மஞானத்தினுல் பொய்யென்று நிச்சயிக்கத்தக்கது வியாவகா ரிகசத்தாம். அத்தகையது மாயையும் அதன்காரியவடிவ வுலகுமாம்.

(3) ஆத்மஞானமில்லாமலே பொய்யென்று நிச்சயிக்கத்தக்கது பிரா திபாசிக சத்தாம். அத்தகையது கட்டையிற் கள்வன் கயிற்றிற் பாம்பு முத லியனவாம்.

(இ - ள்.) ஆதலினால் - ஆதலால், ஆநந்தமயமாமான்மா - ஆநந்தஸ்வ ரூபமே யாத்மாவாம், அவ் வைந்தினுக்கும் - அச்சத்தாதி யைந்திற்கும் உபாதியுள - உபாதியுள்ளனவாம், அவை - அவ்வுபாதிகளை, முறையே மொழியில் - கிரமமாகச் சொல்லு மிடத்து, பேதமுறு - சுயஞ்சத்தினு பாசமான, சத்துமூன்றும் - சத்துத் திரிவிதமாம், (அவையாவன) விவ காரிகம் - வியாவகாரிக சத்தெனவும், பின் - பின்பு, பிராதிபாசிகம் - பிராதிபாசிக சத்தெனவும், பாரமார்த்திகசத்தென - பாரமார்த்திக சத் தெனவுமாம், (அவற்றுள்) மூதுணர்வில் - மூதுணர்வின்றிய மூர்ச்சையி லும், சுழுத்தியில் - சுழுத்தியவத்தையிலும், தோன்றாது - தோன்றாமல், நனவுற்று - சாக்கிரத்தை யடைந்து, முத்தியுறுமளவும் - மோட்சமடைகிற பரியந்தமும், உறும் - இருக்கின்ற, கடாதி - கடாதி விஷயசத்தே, முத லதுவாம் - முற்கூறிய வியாவகாரிக சத்தாம், போதுகனவில் - சொப்பன காலத்தில், தோன்றி - தோன்றிநின்று, அழிவது-நனவிலழிகின்ற மனுதி விஷயசத்தே, இடையதுவாம் - இடையிற்கூறிய பிராதிபாசிக சத்தாம், பொன்றாத-கெடாமலிருக்கின்ற, பிரமசத்தே-(சுழுத்தியில் விளங்குகின்ற) பிரமசத்தே, இறுதியதாம் - முடிவிற் கூறிய பாரமார்த்திக சத்தாம், எ-று. அன்று ஏ - அசை.

வியாவகாரிகம் - விவகரிக்கப்படுதல். பிராதிபாசிகம் - பிரதிபலித்ததா கக் காணப்படல். பாரமார்த்திகம் - விருத்தி சம்பந்த நீங்கிநிற்றல். கடாதி யென்றது கண்ணாதி யைம்பொறிகளாலும் அறியும் புலன்களனைத்தையும். மூன்றுகாலத்தினும் பொய்யென்று நிச்சயிக்கப்படாதுள்ளது சத்தெனவும் ஒருகாற் றோன்றி யொருகாலழிதலின் மற்றையவை சத்துப்போலி யென வுங்கொள்க.

(ப - ம்.) நனவிற்றோற்றுங் கடாதி விஷயக்காட்சி யுளதா யிருப்பது வியாவகாரிக சத்தும், கனவிற்றோற்று மனோரூபமான விடயங்களுளதா யிருப்பது பிராதிபாசிக சத்தும், சுழுத்தியிற்றோன்றுஞ் சூன்யபோத விட யமே யுளதாயிருப்பது பாரமார்த்திக சத்துமாம்.

வினு:—அற்றேல், சுயஞ்சத்தாவது யாது?

விடை:—ஆரோபிதமான சத்துக்களிருத்தற்கு ஸ்தானமாய்த் துரியத் திற் காட்சிப்பட்டு அதீதமாயிருப்பதேயாமென்க.

(நா - ம்.) பஞ்சபூத பௌதிகங்களை யெனதெனவும் தேக முதலிய தத்துவங்களை யானெனவும் கூறுங் குற்றங்கணீங்கினவிடத்து யாவுந் தானுயிருத்தலே சுயஞ்சத்தாமெனத் தெரிவித்ததாம். (௬௨)

அ - ணை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையாற் சுயஞ் சித்தினுபாசமான நான் கினிலக்கணமுஞ் சுயாநந்தாபாசத்தின் எண்வித நாமமுமுணர்த்துகின்றார்.

## (சித்துச்சதுஷ்டயம்.)

சீவனை டீசன்கூ டத்தன்பிரம மென்னச்
சித்துநான் காங்குடநீர் கதுவுறும்வெண் மீன்வான்

றாவுபனி நீர்விம்ப வனுமிதா காசஞ்
சொல்கடா * வச்சின்ன காசமொடு மாவான்
மேவுமிவை யவற்றினுக்குத் † திட்டாந்த முறையாம்
விடயமொடு பிரமம்வா சனைமுக்கி யம்பின்
னேவுநிச மான்மாவோ டத்துவிதம் வித்தை
யெனுமிவற்றின் பெயராலெண் வகைப்படுமா நந்தம்.

(இ - ள்.) சீவனொடு - சீவனும், ஈசன் - ஈசனும், கூடத்தன் - கூடத்தனும், பிரமமுமென்ன-பிரமமுமென, சித்துநான்காம்-சித்துநான்கு விதமாம், (அவையாவன) குடநீர்-கடசலத்தில், கதுவுறும்-பிரதிபலிக்கின்ற, வெண்மீன் - வெண்மையான நட்சத்திரங்களையுடைய, வான் - ஆகாயமும், தாவு - வீசாநின்ற, பனிநீர் - குளிர்ந்தமேகசலத்தில், விம்ப - பிரதிபிம்பமாகிய, அனுமிதாகாசம் - அனுமானத்தாலறியும் மேகாகாசமும், சொல் - சொல்லாநின்ற, கடாவச்சின்னகாசமொடு - கடாகாயமும், மாவான் - மகாகாசமுமாக, மேவுமிவை - பொருந்தாநின்ற விந்நான்கும், அவற்றினுக்கு - அச்சீவாதிநான்கினுக்கும், திட்டாந்தமுறையாம் - நிரலே திருட்டாந்தமாம், விடயமொடு - விடயாநந்தமும், பிரமம் - பிரமாநந்தமும், வாசனை - வாசனாநந்தமும், முக்கியம் - முக்கியாநந்தமும், பின் - பின்பு ஏவும் - சொல்லாநின்ற, நிசம் - நிசாநந்தமும், ஆன்மாவொடு - ஆத்மாநந்தமும், அத்துவிதம் - அத்துவிதாநந்தமும், வித்தையெனும் - வித்தியாநந்தமுமென, இவற்றின்பெயரால் - இவைகளினமங்களால், எண் வகைப்படுமாநந்தம் - ஆநந்தமெட்டுவிதமாம், எ - று.

பிரதிபிம்பமென்பது விம்பமென விகாரப்பட்டு நின்றது. என்றுந் தானாய் விளங்குவது சித்தெனவும், ஒருகாற்றெரிவு மொருகாற்றெரிவின் மையுமாதலின் மற்றையவை சித்துப்போலியெனவுங்கொள்க. கடாவச்சின்னகாயம் - கடத்துள் வளைவுபட்டுள்ள ஆகாயம். அனுமிதம்-அனுமானத்தாலறியப்பட்டது.

சீவனுக்குக் கடசலப்பிரதிபிம்பாகாயமும், ஈசனுக்கு மேகசலப்பிரதிபிம்பாகாயமும், கூடத்தனுக்குக் கடாகாயமும், பிரமத்திற்கு மகாகாயமும் உவமித்தவாறும். ஆநந்தமென்பது கடைநிலைத்தீபகமாக நின்றது.

தூலாதிசரீரத்திரயங்களில் நின்று நனவாதியவத்தாத்திரயங்களிலுள்ள விசுவாதியபிமானிகளோடும் அவித்தையாதி தத்துவங்களை யா

---

* அவச்சேதமுடையது அவச்சின்னமாம். ஒன்றை மற்றவற்றினின்றும் வேறுபிரித்தறிவிப்பதற் கேதுவாயிருப்பது அவச்சேதமெனப்படும்.

† வாதிப்பிரதிவாதிகளுக்கு யாண்டு விவாத முண்டாகவில்லையோ யாண்டு இருவராலும் நிச்சயிக்கப்பட்ட அர்த்தமுளதோ அது திருஷ்டாந்தமாம்.

னென தென்றறியுங் கிஞ்சிக்ஞனே சீவனெனவும், விராட்டாதி சரீரத் திரயங்களினின்று நனவாதி யவத்தாத்திரயங்களிலுள்ள பிரமனுதி யபிமானிகளோடு மாயா தத்துவங்களையறியுஞ் சர்வக்ஞனே ஈசனெனவும், வியட்டி தூலாதிகளசையத் தானசையாது சாட்சியாயறிவதே கூடஸ்தனென வும், சமட்டி தூலாதிகளசையத் தானசையாது சாட்சியாயறிவதே பிரமமென்வுமாகிய இந்நான்கனுள் முன்னையவிரண்டும் வியட்டிசமட்டியை யறிதலுந் தங்களை யறியுமிடத்துக் கிஞ்சிக்ஞ சர்வக்ஞபேதமாயறிதலும் இவையுந் தற்பிரகாசங் கொண்டறியாது புறப்பிரகாசங்கொண் டறிதலுமாதலின் ஆரோபிதமும், பின்னையவிரண்டும் முற்கூறிய சீவபரங்களின் செய்கைகட்குச் சாட்சியாதலினுலுந் தங்களை யறியுமிடத்துச் சீவசாட்சி யீசுரசாட்சியென்கின்ற பேதமிருத்தலினுலும் இவ்வறிதலுந் தானுயிராது தற்பிரகாசங்கொண்டறிதலின் இந்நான்குஞ் சித்தினுபாசமாமென்க.

வினு:—அற்றேல், கூடஸ்தப்பிரமஞ் சித்தேயெனப் பஞ்சதசப்பிரகரண முதலிய நூல்களிற்கூற இங்ஙனஞ் சீவேசுரரைப்போ லவற்றையும் நீக்கினதென்னை ?

விடை:—கடத்தைப்போலத் தேகத்தைச் சடமெனவும், கடசலப்பிரதிபிம்பம்போலச் சிதாபாசனைச் சீவனெனவும், கடாகாசம்போற் றேகத்தினுள்ளிருக்குஞ் சாக்ஷியைக் கூடஸ்தனெனவும், மேகம்போலப் பாஞ்சபூத பௌதிகத்தைச் சடமெனவும், மேகசலப் பிரதிபிம்பம்போற் பரனை ஈசனெனவும், மகாகாசம்போற் சர்வசாக்ஷியைப் பிரமமெனவுங் கண்டு உபாதிகளைப் பிரித்து அவற்றிற்கு விலட்சணமானவைகளைத் தரிசிக்கு நிமித்தம் சமயாபரோக்ஷமாகச் சித்தெனக் கூறினதேயன்றி யவைகளை முன்னிட்டு உதயமான கூடஸ்தப்பிரமத்தை யுபாதியின்றிய வத்துவிதசைதன்யமெனக் கூறுமையின் காரியத்தோடு இக்காரணத்தையுங் கூட்டி நீக்கினுரென்க.

வினு:—இங்ஙனம் நீக்குதற்கு மேற்கோளுளவோ ?

விடை:—"விண்ணென்றே மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும் பாரின், மண்ணென்ற கடவிண் ணென்று மருவிய சலவிண் ணென்று,மெண்ணுங் கற்பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம மீச, னண்ணுங் கூடத்தர் சீவ னென்குசை தன்ய மாமே" என்னும் கைவல்யநவநீதக் கவியினுற்காண்க.

வினு:—இங்ஙனங் கூறலாமோ ?

விடை:—பொய்யைக்குறித்து மெய்யும் மெய்யைக்குறித்துப் பொய்யும் வந்தமைபோலச் சீவேசுரர்களைக்குறித்துக் கூடஸ்தப்பிரமமும் அவைகளைக் குறித்துச் சீவேசுரருமென்னும் நாமங்கள் வந்தமையானும், சத்துள்ளமட்டும் அசத்துண்டென்பதனுனும், உள்ளதிற்கும் இல்லதிற்கும் அதீதமே சொரூபமென்னும் சுருதிவாக்கியத்தினுனும் இந்நான்காகாயமும் நீங்கினவிடத்து நாமரூபரகிதமான வாகாயமே விளங்குதல்போல அவித்தை மாயா

வுபாதிகள் நீங்கினவிடத்து இந்நான்குஞ் சின்மாத்திரமாய் விளங்கலாற் காரியகாரணோபாதியைக்குறித்துப் பொய் மெய்யெனவுங் கூறப்பட்டதே யன்றிச் சுபாவமா யவ்விரண்டு மின்றெனக.

வினு:—இனிச்சித்தாவதுதா னியாது ?

விடை:—இங்ஙனங்கூறிய அவத்தைகளொன்றினுென்று மறையினுந் தான் மறைபடாது விளங்குதல் விளக்குதலென்பதின்றி யென்றுஞ் சதோதயமாய்த் தானேதாயை் விளங்குதலே சுயஞ்சித்தாமெனக.

(தா-ம்.) அதிஷ்டான ஆரோபிதமாகத்தோன்றிய பிரமஞானதி தாரதம்மியங்களைத் தரிசிப்பித்து அவைகணீங்கின பரிசுத்தஞானமே சுயஞ்சித்தென அபரோக்ஷப்படுத்தினதாம். (௯௯)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய ஆநந்தாபாசமான அஷ்டவிதாநந்த விலக்கணங் கூறுவான்றொடங்கி சடுவிதாநந்த விலக்கண முணர்த்துகின்முர்.

(ஆநந்தாஷ்டகம்.)

மாதுமுதல் விடயவூ தியங்கடமிற் றோன்றி
வரல்விடய வானந்தங் கண்படையிற் றோன்ற
லோதுபிர மாநந்தந் துயிற்றெளிவிற் றோற்ற
முடையதுதான் வாசனு நந்தங்கே டௗவா
மாதலுமின் ஞெதுமன்மதி தோன்றுதன்முக் கியமா
மாநந்த மனேலயயோ கத்தினில்வந் துதித்த
லேதமறு நிசாநந்தம் பிரியவிட யத்து
ளியான்பிரிய னென்னத்தோன் றுதலான்மா நந்தம்.

(இ-ன்.) மாதுமுதல் - வனிதாதிய, விடயவூதியங்கடமில் - விடயப் பிரயோசனங்களில், தோன்றிவரல் - தோற்றுவதே, விடயவாநந்தம் - விடயாநந்தமும், கண்படையில்-நித்திரையில், தோன்றல் - தோற்றுவதே, ஓதுபிரமாநந்தம் - சொல்லாநின்ற பிரமாநந்தமும், துயிற்றெளிவில் - நித்திரைதெளிந்துந் தெளியாவிடத்தில், தோற்றமுடையது - உண்டாவதே, வாசனநந்தம் - வாசனநந்தமும், கேடௗவாமாதலுமில் - விருப்பு வெறுப் பின்றிய, நொதுமன்மதி - உபேக்ஷாபுத்தியில், தோன்றுதல் - உண்டாவதே, முக்கியாநந்தம் - முக்கியாநந்தமும், மனோலயயோகத்தினில் - யோகாப்பியாசத்தினல் மனேலயமான விடத்தில், வந்துதித்தல் - உண்டாதலே, ஏதமறும் - குற்றமற்ற, நிசாநந்தம்-நிசாநந்தமும், பிரியவிடத்துள் - வனிதாதி பிரியவஸ்துக்களில், யான்பிரியனென்ன - யானேபிரியவஸ்துவென, தோன்றுதல் - தோற்றுதலே, ஆன்மாநந்தம் - ஆத்மாநந்தமும், ஆம் - ஆகும், எ - று. தான் - அசை.

Tiruvadamarudur

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையால் இரண்டாநந்தங்களும் நித்தியாபாசமான வபாவசதுட்டயங்களு மாகிய விவைகளின் இலக்கண முணர்த்துகின்றார்.

(அபாவசதுஷ்டயம்.)

விரியுமுல கனைத்தும்பொய் மெய்ம்மைதா னென்னும்
விவேகத்திற் றோன்றுவதே யத்துவிதா னந்த
மரியமறை முடிவாகும் வாக்கியஞா னத்தா
லாதலது வித்தையா நந்தமென வறிக
* வுரியனமுன் னின்மையொடு பின்னின்மை யன்றி
யொன்றினிலொன் றின்மையென்று மின்மையென நான்காந்

* பிராகபாவம் உற்பத்தியின்றி நாசமுடைத்தா யிருக்குமென்றும், தொம்ஸாபாவம் உற்பத்தியுடைத்தாய் நாசமின்றியிருக்குமென்றும், அத்தியந்தாபாவமும் அந்நியோந்நியாபாவமும் உற்பத்தியும் நாசமுமின்றி யிருக்குமென்றும் தார்க்கிகர் கூறுவர்.

1. பிராகபாவம் (முன்னின்மை) தனது பிரதியோகி (எதிர்மறை) யுண்டாய காலத்து நாசமடைதலின் நித்தியமன்றாம்.

2. அழிவுபாட்டபாவம் (பின்னின்மை) தனது பிரதியோகியான சமவாயி (முதற்) காரணத்தி லிருத்தலாலும் அது நாசமடைந்தகாலத்தில் தானும் நாசமாய்ப் போதலாலும் அதனை நித்தியமெனல் கூடாது; ஏனெனில், மண்ணாகிய காரணங் கெட்டவழி அதிலுள்ள அதன் காரிய கடத்தின் தொம்ஸாபாவம் (அழிவுபாட்டபாவம் – அழிந்து பின்னில்லாமற் போதல்.) அழிவின்றி நிற்குமெனல் யுக்திக் கொவ்வா திருத்தலி னென்க.

3. 'கடம் படமன்று' என்புழிப் படத்தின் பேதம் கடத்திலிருக்கிறது. கடம் அழிந்தவழி படத்தின் பேதமும் அழிந்துவிடுதலின் அப்பேதம் நித்தியமன்றாம். பேதத்தை அந்நியோந்நியாபாவமென்பர்.

4. 'தீயின்கட் சீதளம் யாண்டுமின்று' என்புழித் தீயின்கண் சீதளத்தின் அத்தியந்தாபாவமிருக்கிறது, தீயழிந்தபோது தீயிலிருந்த சீதளத்தின் அத்தியந்தாபாவமு (முழுதுமின்மையு) மழிந்துவிடுதலின் அதுவும் நித்தியமன்றாம்.

பிருதிவியாதிபாவ பதார்த்தங்கள் நித்தியமாகாவிடினும் அந்நியோந்நியாபாவ முதலிய அபாப பதார்த்தங்கள் நித்தியமாகாவோ வென்பாரை நோக்கி அதனை மறுக்க "உரியனமுன்.........திறத்தனவாம் என்று கூறினர். பிரமந்தவிர ஏனையவை நித்தமாகாவென்பது சூதசங்கிதை "இல்லையிருப்பதுபொய்மெய் விளக்கமஃ தின்மையென விவைமுன் னாகச், சொல்லும் விவ காரமெலா மாயையினற் றனின்ப சொரூப னென்னும், வல்லசிவன் கற்பித்த மாயாகா ரியப்பவஞ்ச மருவுந் தோற்றம் செல்லலுறு விவகார திசையி னன்றிப் பரமார்த்த திசையி னில்லை" என்று கூறுவதாலறிக.

திரியுமபா வங்களிவை † நித்தியத்துட் புகாத
திறத்தனவாம் பூரணத்து முருதனமூன் றுரும்.

(இ - ள்.) விரியும் - மாயையினின்றும் விரிந்த, உலகனைத்தும் - நாம ரூபப் பிரபஞ்சமியாவும், பொய் - மித்தையெனவும், மெய்ம்மைதானென் னும் - பிரமமே சத்தியமெனவும், விவேகத்தில் - விசாரிக்கின்ற விவேக ஞானத்தில், தோன்றுவதே - உண்டாவதே, அத்துவிதாநந்தம் - அத்து விதாநந்தமும், அரிய - அறிதற்கரிய, மறைமுடிவாகும் - வேதாந்தத்தி னுள்ள, வாக்கியஞானத்தால் - மகாவாக்கியத்தினுற் சனிதமான ஞானத் தால், ஆதலது - உண்டாகின்றவாநந்தமே, வித்தையானந்தமென - வித் தியாநந்தமென்று, அறிக - அறிவாயாக, உரியன - அறிதற்குரியனவாகிய, முன்னின்மையொடு - பிராகபாவத்துடன், பின்னின்மை - பிரத்தொம் சாபாவமும், அன்றி - இவையன்றியும், ஒன்றினிலொன்றின்மை - அன்னி யோன்யாபாவமும், என்றுமின்மையென - அத்தியந்தாபாவமுமென, நான் காம் - அபாவசதுட்டயங்களாம், திரியுமபாவங்களிவை - வேறுபாடுடைய விந்நான்கபாவங்களும், நித்தியத்துட்புகாத - நித்தியத்திற் சேராத, திறத் தனவாம் - தன்மையையுடையனவாம், பூரணத்தும் - பூரணத்தினும், உரு தன - பொருந்தாதனவாகிய பரிச்சேதங்கள், மூன்றுரும் - திரிவிதமாம், எ - று.

எஞ்ஞான்றும்பிரியவடிவாயிருத்தலின் ஆநந்தமும் ஒருகாற் பிரியமும் ஒருகாற் பிரியமின்மையுமா யிருத்தலின் இவ்வெண்வகையும் ஆநந்தப் போலியெனவும், சதோதயமாய் விளங்குவதே நித்தியமெனவும், முன்னின் மையாதிய நான்கிடத்துந் தோற்றுதல் நித்தியப்போலியெனவுங் கொள்க.

நனவினுள்ளவோர்விடயக்கூட்டரவிற் கூடுவோனுகிய வியாவகாரிக சீவனையும் கூடப்படும் பொருளாகிய விடயவஸ்துக்களையு மழித்துக்கொண் டெழாநின்ற பயனெதுவோ வது விடயத்தை முன்னிட்டு வருதலால் 'விட யாநந்தம்' எனவும், சுழுத்தி நித்திரையினுள்ள சூனியமான விடயக் கூட்டர விற் கூடுவோனுகிய பாரமார்த்திகசீவனுங் கூடப்படும் பொருளாகிய சூனியமுங் கரைந்தவிடத்து எழாநின்ற பயனெதுவோ வது நித்திரையை முன்னிட்டுவருதலாற் 'பிரமாநந்தம்' எனவும், நித்திரை தெளிந்துந்தெளியா விடத்துச் சூனியமும் விடயமுங் கூடுங் கூட்டரவில் அவற்றைக்கரைத்துக் கொண்டெழாநின்ற பயனெதுவோ வது வாசனையை முன்னிட்டு வருத லால் 'வாசனாநந்தம்' எனவும், சகல வஸ்துக்களிலுங் கூடும்போது பிரியாப் பிரியமின்றிய வுபேக்ஷாபுத்தியிற் றோன்றும் பயனெதுவோ வது சமத்து வத்தை முன்னிட்டுவருதலால் 'முக்கியாநந்தம்' எனவும், யோகத்திற்காக்ஷி யாகிய குறியைக் காண்பதாகிய மனஞ்சேர்ந் தொடுங்கினவிடத்து அவ்விர ண்டுமின்றிவரும் பயனெதுவோ வது நிசத்தை முன்னிட்டு வருதலால்

† அழிவுபாட் டபாவத்திற் கெதிர்மறையாகாதது நித்தமெனப்படும்; அஃதாவது நாசமின்றியிருப்பதென்பது.

'நிசாநந்தம்' எனவும், சிவனானவன் தனது பிரியத்தைத் தனுதிவிடயங்களின்மேல் வைத்து அவைகளை யின்பமாயநுபவிக்குமிடத்து அனுபவிப்பானும் அனுபவமுமாகிய விரண்டுமின்றி யுதிக்கும் பயனெதுவோ வது சீவனை முன்னிட்டுவருதலால் 'ஆத்மானந்தம்' எனவும், ஒன்றெனவும் இரண்டெனவு மறிந்தனுபவிக்குமிடத்து அவ்விரண்டு நீங்கிய வறிவினிடத்து உதிக்கும் பயனெதுவோ வது துவித நீக்கத்தை முன்னிட்டுவருதலால் 'அத்துவிதாநந்தம்' எனவும், மகாவாக்கியார்த்த நிச்சயமறிந்தவிடத்து அச்சொற்பொருளின்றி யுதிக்கும் பயனெதுவோ வது விசாரஞானத்தை முன்னிட்டுவருதலால் 'வித்தையாநந்தம்' எனவுமாம்.

நிசாநந்தம் - சுவகீயாநந்தம், அஃதாவது தன்னுடையதான வாநந்தம். எனவே, இங்கு மனதைப்பற்றி வரலால், மானதாநந்தமென்பதே நிசாநந்தமென்பதாயிற்று. இங்ஙனங்கூறிய ஆனந்தங்களொன்றற்கொன்று தாரதம்மியமாகியும் ஒன்றைமுன்னிட்டு உதிப்பதாகியும் அங்ஙனம் உதித்தவிடத்து அவ்வஸ்துக்க ளின்மையாயினும் பின்னுந்தா னுதித்தவிடத்து அவ்வஸ்துக்களாகவே காண்கையானும் இவை ஸ்வயாநந்தமாகாவென்க.

வினா:—இங்ஙனமாயின், உலகாயிதன் விடயாநந்தமே யாநந்தமெனக் கூறியதென்னை ?

விடை:—ஆகாயத்தினுள்ள ஆதித்தனை ஊர்த்த (மேல்) முகமாய்ப் பார்க்கச் சத்தியில்லாதவனுக்குச் சலாகாயத்திற்றோற்றிய கற்பனாசூரியனை யதோ (கீழ்) முகத்திற் காட்டி யதுகாரணமாக ஊர்த்தமுகத்தினுள்ள யதார்த்தம் வெளிப்படுத்துவதுபோல விடயக்காட்சியிறந்த பேரின்பமுதியாத அபக்குவனுக்கு இவ்விடயாநந்தமே பொருளெனக்கூறியதுகாரணமாக யதார்த்தமான சொரூபாநந்தம் வெளிப்படுமென்பது நோக்கியென்க.

வினா:—இனிச்சாமளாதிமதம் பிரமாநந்தமே யாநந்தமெனக் கூறியதென்ன ?

விடை:—யாவுஞ் சூனியமான விடத்துள்ள போதையே சுகமாயிருத்தலின் அதனை யடையுநிமித்தம் யாவுஞ் சூனியமான விடத்துள்ள சுழுத்தியாநந்தமே பொருளெனக் கௌணமாகக் கூறியதென்க.

வினா:—அற்றேல், இவ்வாநந்தம் ஆபாசமான தென்னை ?

விடை:—* சகலாவத்தையிற் றோன்றும் ஆநந்தஞ் சகலமே யாதல் போலக் கேவலாவத்தையிற் றோன்றும் ஆநந்தமுங் கேவலமே யாதலினாலென்க.

வினா:—அற்றேல், அதனைப் பிரமாநந்தமென்ற தென்னை ?

---

* சாக்கிராவத்தையும் சொப்பனாவத்தையும் சகலமெனவும் சுழுத்தியவத்தை கேவலமெனவு மறிக.

விடை:—பொய்யான தேகத்தில் மெய்யிருந்தமைகொண்டு அதற்கு மெய்யெனத் தானியாகுபெயராய் வந்ததுபோலச், சர்வசூன்ய மயானத்தி னுள்ள பிரமாநந்தம்போல இத்தத்துவங்க ளடங்கின சூன்யத்தினும் நித்திரை மயக்கத்தினும் இருத்தலின் இச்சுழுத்தியாநந்தத்திற்கும் அந்நாமம் வந்ததென்க.

வினா:—அச்சர்வ சூன்யத்தைப்போல விச்சூனியமு மிருக்க இதினுள்ள ஆநந்தத்திற்குத் தோஷம் வந்ததென்னை?

விடை:—அச்சூன்யம் "அண்டமெண் டிக்கெங் கண்ணு மடங்கச்சூனியம தாகக், கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டா, லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக், கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில்வந் துதிக்கு மன்றே" என்னுங் கவிப்படி ஆனந்தமேலிட்டிருக்கும் இச்சூன்யம் அவித்தையால் மறைப்புண்டிருக்குமாதலால் இங்ஙன மாயிற்றென்க.

வினா:—இனிச் சுத்தவாசனையாற் சத்துவாசனையும் இதனாற் சித்துவாசனையும் இதனால் ஆநந்த வாசனையும் இதனால் ஆநந்தாதீதமுமாதலின் வாசனாநந்தமே யாநந்தமெனச் சிலநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—அசுத்தவாசனை நீங்கச் சுத்தவாசனையும் இதனாலுண்டான ஆத்மவிசாரணையால் சித்துவாசனையும் இதனாலுண்டான சமாதியி னனுபவ சம்ஸ்காரமும் இதனா லியாவும் ஆநந்த மயமாமெனக் கருதிச் சாதனமாகக் கூறினதேயன்றி யதார்த்தமாயன் றென்க.

வினா:—இனி யிராகத்துவேஷ மின்றி யுபேக்ஷா புத்தியிற்றோற்றுகின்ற முக்கியாநந்தமே யாநந்தமெனச் சிலநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—காமக்குரோ தாதிகள் நசித்தவிடத்துண்டான இன்பமே பேராநந்தமெனக் காட்டற் கென்க.

வினா:—அங்ஙனமாயின், இஃதாபாச மென்ற தென்னை?

விடை:—இராகத்துவேஷம் நீங்கினவிடத்துத் தானாகத் தோன்றாது இவைகளை முன்னிட்டுத் தோற்றலின் இங்ஙனமாயிற் றென்க.

வினா:—இனி மனமொடுங்கின யோகத்தினுண்டான நிசாநந்தமே யாநந்தமென யோகநூல்களிற் கூறிய தென்னை?

விடை:—சங்கற்ப விகற்பங்கரைந்த சுத்தத்தினுள்ள பேராநந்தம் இஃதெனத் தெரிவிப்பான் கருதிக் கூறிய தென்க.

வினா:—ஆயின், அது மனோலயமான விடமன்றோ?

விடை:—மனம்தனக்குப் பிரியவஸ்து எதுவோ அதில் அடங்குமாதலின் அது பொருளாகா தென்க.

வினா:—அஃதெங்ஙனம்?

விடை:—அம்மனம் விடயத்தில் அடங்கினும் அடங்கும்; பிரமத்தில் அடங்கினும் அடங்கும், ஆதலின் தானுதித்தவிடத் தொடுங்க வேண்டுதலின் அஃதன்றென்க.

வினு:—அற்றேல், யோகத்தில் மனமொடுங்கின தென்றமையால் குற்றமென்னே?

விடை:—ஞானபாதத்திற்குக் கீழ்ப்படி யோகபாதமாதலினுனும் அஃதோர் குறியில் அடங்கி நிற்குமாதலினுனும் அக்குறி யேகதேசவஸ்துவாதலினுனும் இஃது மஃதேயாமென்க.

வினு:—இனி யாத்மஞான சாத்திரங்களில் ஆத்மாநந்தமே ஆநந்தமெனக் கூறிய தென்னே?

விடை:—ஆத்மா தனது பிரியத்தை விடயத்தினதென் றனுபவியாது தனதாகக்கண் டனுபவித்தலினு னென்க.

வினு:—அங்ஙனமாயின், இஃதாபாசமென்ற தென்னே?

விடை:—பிரிய விடயத்துள் யான் பிரியனெனக் கண்டும் பின்னும் அவ்விடயங்களை முன்னிட்டு வருதலின் அங்ஙன மாயிற்றென்க.

வினு:அற்றேல், தனுதிவிடயங்கள் பிரியமாய் நிற்பதென்னே?

விடை:—தனது பிரியத்தை யவைகள்மேல் வைத்தபோது அவை பிரியமாகவும் வெறுத்தபோது வெறுப்பாகவும் ஒன்றும் வையாதபோது உதாசீனமாகவு மிருத்தலின் தனது பிரியம் அவைகட் கிருத்தல்போலத் தோற்றிற் றென்க.

வினு:—இனிச் சுருதிகளில் துவித நீக்கத்தி லுதயமானது அத்துவிதாநந்தமென்ற தென்னே?

விடை:—கூடஸ்தப் பிரமமென்னும் நாமமும் அவைகளின் ரூபமுமாகிய இத்துவித நீங்கினவிடத்து உண்டானதே யஃதாமென் றறிவித்தற் கென்க.

வினு:—அங்ஙனமாயின், இஃதுமாபாச மென்றதென்னே?

விடை:—பொய் மெய்யெனக் கண்ட விவேகத்திற் ருேன்றலாலும் ஆரோபித சம்பந்தமாதலாலும் அங்ஙனமாயிற் றென்க.

வினு:—அற்றேல், இச்சடசித்து நீக்கந் துவிதநீக்கமன்ருே?

விடை:—இச்சட திருஷ்டியின்றிச் சித்தான கூடஸ்தப் பிரமாயிக்கியமே துவித நீக்கமாதலின் அவை யாகா வென்க.

வினு:—இனி, வேதாந்த சாத்திரங்க ளனைத்தும் மஹாவாக்கியத்திற் ருேன்றிய வித்தியாநந்தமே யாநந்தமெனக் கூறிய தென்னே?

விடை:—"அது நீயானுய்" என்னும் மகாவாக்கியத்தின் அருத்தமாகிய சுயஞ்சித்தினுதயமான நிரதிசயானந்தமே யஃதென அனுபவித்தற் கென்க.

வினு:—அங்ஙனமாயின், இஃதும் ஆபாசமென்ற தென்னே ?

விடை:—வாக்கியார்த்த விசாரணை செய்யும்போது உதயமும் அஃ தின்றியபோது இன்மையுமாதலின் இங்ஙன மாயிற்றென்க.

வினு:—அற்றேல், இவ்வாநந்தங்களாற் பிரயோசனமின்றே ?

விடை:—ஆடியிற்றேன்றிய ஆபாசமுகத்தால் யதார்த்தமுகம்வெளிப் படுவதுபோல இவ்வாநந்தங்களாற் சுயாநந்த வேத்தியம் வருதலே பிரயோ சனமா மென்க.

வினு:—அற்றேல், யாவர்க்கு மிங்ஙனந்தானே ?

விடை:—ஆடியிற் சாயாமுகத்தைக் கண்ட பாலர்கள் அஃதே பொரு ளெனக் கரத்தாற் பற்றித் துன்புறுவர்; வாலிபர்கள் அச்சாயையைக் கண்ட வுடனே தனது யதார்த்தமுகத்தி னிருக்கின்ற மீசைமேற் கரம்வைத்தின் புறுவர். அவைபோல, இவ்வாநந்தங்க ளுதித்தபோது இவையே பொருளெ னக்கண்டஅபக்குவன் துன்புறுவன்; பக்குவனிவை முன்னிலேயாகத் தனது சுயாநந்தத்தைக் கண் டின்புறுவனென்க. மேல், நித்தியம்போலத் தோற் றுஞ் சகம் அறிதற்கு முன்னும்பின்னும் இடையினும் எப்போதும் இன்மை யென்னும் இந்நான்குத்தியினுலும் நித்தியத்துட் புகாத அநித்தியமா மென்க.

வினு:—இச்சகம் இந்நான்கிடத்தும் அபாவமாயின் மேலிருக்கின்ற தியாது ?

விடை:—இந்நான் கிடத்தும், பாவமாயிருப்பது நித்தியமான பிரமமே யாதலின் அஃதே யிருக்கின்றதென்க.

வினு:—அற்றேல், இச்சகம் நித்தியமாகத் தோற்றுவதென்னே ?

விடை:—தனது சாயை சலத்தின் அதோமுகத்தில் அபாவமாயிருந்து ஞ் சுபாவமாய்த் தோற்றல்போல நித்தியச் சாயையான சகமுங் கற்பிதமா யிருந்தும் நித்தியம்போற் றேன்றுகிற தென்க.

வினு:—பிம்பரூபமாகப் பிரதிபிம்பந் தோற்றல்போலச் சித்துருபமா கச் சகந்தோற்ருது பலவாகத்தோற்றின தென்னே ?

விடை:—ஆடியின் பேதத்தினுல் ஆனன (முக)மும் வேருகத் தோற் றுதல்போல மாயாபேதத்தினுல் அகிலமும் அநேகமாகத் தோற்றும். அப் பேதம் நீங்கின் யாவுந் தன்மயமாக விளங்குமென்க.

(தா-ம்.) விடயாநந்தமுதல் வித்தியாநந்தமீருய எண்வகை யாநந் தங்களுண்டாகுங் காரணங்களும், அவற்றின்தாரதம்மியங்களும், சாதனத் தின்கண் உதயமான பிரயோசனங்களும், சாத்தியமான சுயாநந்தத்தின் ஆபாசமாக இவைகளனைத்தும் விளங்குமென்பதும், மேல்நித்தியம்போல விளங்குமிச்சகம் அபாவசதுட்டயமென்னு முத்தியினுல் நித்தியத்துட்புகாத அனித்தியமென்பதும், நித்தியத்தினுபாச மென்பதுவுந் தெரிவித்தவா றும். (கூடு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பூரணபாசமாக விளங்கிய காலபரிச்சேத முதலிய மூன்றனிலக்கண முணர்த்துகின்றார்.

(பரிச்சேதத்திரயம்.)

உரைத்தவைதா மியாவையெனி னொருகாலத் துண்டின்
றொருகாலத் தெனுங்கால † பரிச்சேத முடனே
தெரித்தவொரு தேயத்துண் டொருதேயத் திலையென்
றேயபரிச் சேதமுமொன் றுமாகா தென்னுங்
கருத்தில்வரு வத்துபரிச் சேதமுமா மென்னக்
கருதிடுக வினிச்சித்தின் விரிவாகு மெனமுன்
விரித்திடுமச் சீவாதி கட்குநா மாதி
விவகார கற்பனையீண் டெடுத்துமொழி குதுமால்.

(இ-ள்.) உரைத்தவை-முற்கூறிய பரிச்சேதங்கள், யாவையெனின்-ஏவையென்றால், ஒருகாலத்துண்டு- ஒருகாலத்துள்ளதும், இன்றொருகாலத்தெனும்-ஒருகாலத்தில்லது மென்னும், காலபரிச்சேதமுடன் - காலபரிச்சேதமும், தெரித்த-தெரிவிக்கப்பட்ட, ஒரு தேயத்துண்டு-ஒருதேசத்துள்ளதும், ஒரு தேயத்திலையென்-ஒருதேசத்தில்லது மென்னும், தேயபரிச்சேதமும்-தேசபரிச்சேதமும், ஒன்றும் - ஒருபொருளாம், ஆகாதென்னும் - ஒருபொருளாகாதென்கின்ற, கருத்தில் வரு-மனதிற் றோன்றுகின்ற, வத்துபரிச்சேதமும் - வஸ்துபரிச்சேதமும், ஆமென்ன - இம்மூன்றுமாமென்று, கருதிடுக-அறிவாயாக, இனி - மேல், சித்தின் - சுயஞ்சித்தினது, விரிவாகுமென - விரிவாகுமென்று, முன் விரித்திடும் - முன்னர் விரித்துக்கூறிய, அச்சீவாதிகட்கு - அச்சீவர் முதலிய சித்து நான்கிற்கும், நாமாதி விவகார கற்பனை - நாமரூப விவகார கற்பனைகளை, ஈண்டு - இவ்விடத்தில், எடுத்துமொழிகுதும் - விளங்கவெடுத்துச் சொல்லுவாம், ஏ - று. தாம்-ஏ - ஆல்-அசை.

விவகாரம் - வழக்கு. கற்பனை - உள்ளதுபோற் றோன்றுதல்.

---

† பிரமம் உற்பத்தி நாசமின்றி (நித்தியமா) யெக்காலத்து மிருப்பதாலும், கடபடம்போல் ஏகதேச விடத்திராது ஆகாயம்போல் எங்கும் வியாபகமாயிருப்பதாலும், கடமும் படமும்போல் உலகிற்கு வேறுபட்டிராது மண் தனது காரியவடிவ கடத்திற்கு வேறுபட்டிராமைபோல் தனது விவர்த்தகாரிய வடிவப்பொருளி (உலகி)ற்கு வேறுபட்டிராமையாலும் அதற்குக் கால தேச வஸ்துக்களால் முடிவின்றென்க.

காலத்தாலந்தமு (முடிவு) டையது கால பரிச்சேதமென்றும், தேசத்தாலந்த முடையது தேச பரிச்சேதமென்றும், வஸ்துவி (பொருளி)னலந்த முடையது வஸ்து பரிச்சேதமென்று மறிக.

சொரூபமுதல் ஸ்தம்ப பரியந்தம் இடைவிடாமல் நிறைந்திருப்பதே பூரணமெனவும், அதுபோலத் தோன்றுங் காலாதிபரிச்சேத மூன்றும் பூரணப்போலி யெனவுங்கொள்க. ஒன்றென்பதை யாகாதென்பதோடுங் கூட்டினும். நாமாதியென்றமையின் ரூபமுங் கொண்டாம். எனவே, கிரியையும் பெறப்பட்டது. * விபுவைபோலத் தோற்றுகின்ற காலமுந்தேசமும் வஸ்துவுமாகிய இம்மூன்றும் பரிச்சேதமேயன்றிப் பரிபூரணமாகாவென்க.

வினா:—அற்றேல், காலம் விபுவாய் அசஞ்சலமா (சலித்தலில்லாததா) யிருப்பதுமன்றி யதனிடத்தியாவுந் தோன்றி விளங்கி யழிவதனால் அதுவே பிரமமெனக் காலப்பிரமவாதிகள் கூறியதென்னை ?

விடை:—அமைச்சை யரசனெனக்கண்டு அவனால் அவ்வரசனைக்காண்பதுபோலக் காலத்தை விபுவெனக்கண்டு அதனால் அதற்கதீதமான பூரணத்தைக் காண்பதற்கென்க.

வினா:—அற்றேல், காலத்திற்கு விபுவாதி குணங்களின்றோ ?

விடை:—தன்மாத்திரையின் ஏகதேசத்தில் ஆகாய முதித்ததுபோல அதீதத்தின் ஏகதேசத்தி லுதித்த ஞெப்திக்கு முன் பின் இப்போதென்னும் காலமூன்றாதலினானும் ஒன்றினொன்றில்லை யென்னும் பருவங்கள் ஆறாதலினானும் ஒருபருவத்திற் றோன்றிய பொருள் மற்றோர் பருவத்திற் றோன்றாமையானும் அதற்குப் பரிச்சின்னமேயன்றி விபுத்துவ மெங்ஙனமாம் ?

வினா:—அற்றேல், இனித் தேயத்திற்கும் விபுத்துவமின்றோ ?

விடை:—யானைகண்ட குருடரைப்போலத் தான் கண்டபூமி யெங்குமிருக்கின்றதென்பதேயன்றி மேலாகாயமிருக்க அதற்கு எங்ஙனம் விபுத்துவம்வரும்? அன்றியும் ஒருதேயத்தன்மைபோல மற்றொருதேயத்தன்மையும் ஒருதேயத்தி லுண்டாதல்போல மற்றொருதேயத்தி லுண்டாதலு மின்மையின் எங்ஙனமாமென்க.

வினா:—அற்றேல், வஸ்துவுக்கும் விபுத்துவ மின்றோ ?

விடை:—அதற்குஞ் சமுதாயத்தில் விபுத்துவங் கூறினதே யன்றிப் பலவாயிருத்தற் கெங்ஙனம் விபுத்துவம்வரும்? அன்றியும் நாமத்தினும் ரூபத்தினும் மதுரத்தினும் பரிச்சின்னமே யிருத்தலின் எங்ஙனமாமென்க.

வினா:—அற்றேல், இவைகட்கு விபுத்துவங் கற்பித்தலேன் ?

விடை:—தனி வஸ்துவிற்குப் பல வஸ்துக்களும், இவ்வஸ்துக்களுண்டாதற்கு ஆதாரமான தேயங்களும், இத்தேயங்களுண்டாதற்கு ஆதாரமானகாலங்களுமாகிய விவைகட்கு ஒன்றற் கொன்று விசேடணமானதையே

---

* விபு - வியாபகம்; அஃதாவது தேசத்தாலுங் காலத்தாலு முடிவின்றியிருப்பது.

விபுவாமெனக் கூறி யிவைகட்கு ஆதாரமான பூரணமே விபுவாமெனக் காண்பித்து அதன்மேல் இம்மூன்றும் பரிச்சின்னமென வறிவித்தற் கென்க.

வினு:—அற்றேல், அசத்து சடம் துக்கம் அனித்தங் கண்டமெனக் கூறிய விவ்வைந்திற்கும் ஆதாரமான சத்து சித்து ஆநந்தம் நித்தியம் பூரண மென்ற விவ்வைந்து தன்மையுடைய வாத்மாவுக்கு அத்துவித மெங்ஙனங் கூடும்?

விடை:—அசத்தாதி யைந்துதன்மையுடையது இச்சகமெனத் தள்ளற் பொருட்டு இச்சத்தாதி தன்மைகளைக் கற்பித்ததே யன்றி யதற்குச் சுபாவ மன்றென்க. அன்றியும் சத்தில் நித்தியமுஞ் சித்திற் பூரணமுமடங்கச் சச்சிதானந்தமாம்; இவற்றுள் சத்து சித்தில் அடங்கச் சிதானந்தமாம்; சித்து ஆநந்தத்தினடங்க ஆநந்தமொன்றுமே சேடிக்கும். இவ்வாநந்தமுஞ் சுயம் பிரகாசமாய்த் தானேயதீதமாம். அங்ஙனமான விடம் சுத்தப்பிரமமாத லால் அத்துவிதமேயாமென்க.

வினு:—அற்றேல், பிரமத்திற்கு அவ்வைந்து தன்மையு மின்றோ?

விடை:—அத்தன்மை இன்றென்பதும் உண்டென்பதுங் கற்பித்துக் கூறுதலேயன்றி உண்மையிலில்லை. பிரமம் அவாங்மனோகோசர மாதலின் அதனைக் குருவாக்கியப்படி தன்னனுபவத்திற் காண்க.

(தா-ம்.) பரிபூரணத்தைப்போல விளங்குங் காலாதி மூன்றனிலக்க ணங்களும்அவை பூரணத்தினுபாசமென்பதும் தெரிவித்துச் சுயஞ்சத்தாதி யைந்தினது ஒருமையாகிய ஆத்மஸ்வரூபம் இஃதெனக் குறிப்பாற் றெரி வித்ததாம். (௯௯)

அ - கை.

முன்னர்ச் சுத்தப்பிரம சுபாவமான சத்தாதியைந்தி னிலக்கணங்கூறி மேற்சுயஞ்சித்தின் ஆபாசமான சீவாதிநான்கின் நாமரூப விவகாரங்களின் இலக்கணங் கூறுவான் றொடங்கி இச்செய்யுளிற் சீவனுக்கு அபிமான நாம மூன்றனுள் தூலதேக வபிமானியான விசுவனது * பரியாயநாமங் கள் பன்னிரண்டையு முணர்த்துகின்றார்.

சாற்றரிய சீவபே தங்கண்முறை விசுவன்
றைசதன்பின் பிராஞ்ஞனெனப் பகர்ந்திடுவ ரவருள்
வேற்றுமைசெய் தூலவுடல் வியட்டியபி மானி
விவகாரி கன்புத்தி கதுவுறுசை தன்யன்
மாற்றரிய சிதாபாசன் விட்சேப ரூபன்
வருபிரமாத் திருநுவல்கத் திருவொடுபோத் திருவே

* பரியாய நாமம் – ஒருசொல்லின் பொருளைக் குறிக்கும் மற்றொரு சொல்.

தோற்றியிடும் விஞ்ஞான மயன்குடும்பி சரீரி
தொம்பதமுக் கியன்முதலா யினவிசுவ ஞமம்.

(இ - ள்.) சாற்றரிய - சொல்லுதற்கரிய, சீவபேதங்கள் - சீவபேதங்களை, முறை - சாக்கிராதி முறைப்படி, விசுவன் - விசுவனும், தைசதன் - தைசஸனும், பின் - பின்பு, பிராஞ்ஞனென - பிராஞ்ஞனுமென, பகர்ந்திடுவர் - அறிஞர் சொல்லுவார்கள், அவருள் - அம்மூவருள், வேற்றுமைசெய் - வேறுபாடுசெய்கின்ற, தூலவுடல்வியட்டியபிமானி - வியட்டி தூலதேகாபிமானியும், விவகாரிகன் - வியாவகாரிகனும், புத்திகதுவுறுசைதன்யன் - அந்தக்கரணப் பிரதிபலன சைதன்னியனும், மாற்றரிய - நீக்குதற்கரிய, சிதாபாசன் - சிதாபாசனும், விக்ஷேபரூபன் - விட்சேபரூபனும், வருபிரமாத்திரு - வராநின்ற பிரமாதாவும், நுவல்-சொல்லத்தக்க, கத்திருவொடு - கர்த்தாவும், போத்திரு - போக்தாவும், தோற்றியிடும் - தோற்றுகின்ற, விஞ்ஞானமயன்-விஞ்ஞானமயனும், குடும்பி - குடும்பியும், சரீரி - சரீரியும், தொம்பதமுக்கியன் - தொம்பதமுக்கியனும், முதலாயின - இவை முதலிய பிறவும், விசுவனுமம் - விசுவனது பரியாய நாமங்களாம், எ - று. ஏ-அசை.

ஆபாசம் - உண்மைபோலத் தோன்றுதல். 'முதலாயின' என்றதனால் க்ஷேத்திரி, விஷயி முதலிய பிறவுங்கொள்க. விசுவன் - சாக்கிரத்தினிறைந்த தன்மையை யுடையவன், தைஜசன் - தேஜசு சம்பந்தமாத்திரமுடையவன், தேஜசு - அந்தக்கரணம். பிராஞ்ஞன் - பிரஞ்ஞா சம்பந்த மாத்திரமுடையவன்.

(ப - ம்.) தூலதேகத்திற் சாக்கிராவத்தையினுள்ள தத்துவங்களனைத்திலும் வியாபித்திருத்தலின் 'விசுவன்' எனவும், இத்தேகத்தைத் தானென்றபிமானித்தலின் 'தூலவுடல் வியட்டியபிமானி' எனவும், இத்தத்துவங்களோடும் விவகரித்தலின் 'வியாவகாரிகன்' எனவும், அந்தக்கரணப் பிரதிபலனனுதலின் 'புத்திகதுவுறு சைதன்னியன்' எனவும், கூடஸ்த சாயையாதலிற் 'சிதாபாசன்'எனவும், விடயமாகப் பரிணமித்தலின் 'விட்சேபன்' எனவும், கரணங்களோடு கூடி யறிதலிற் 'பிரமாத்திரு' எனவும், இவைகட்குக்கருத்தாவா யிருத்தலிற் 'கத்திரு' எனவும், யாவுந்தான் புசித்தலிற் 'போத்திரு' எனவும், யாவையு மறிதலின் 'விஞ்ஞானமயன்' எனவும், சம்சாரத்திற் கூடியிருத்தலின் 'குடும்பி' எனவும், சரீரத்தை யுடையவனுதலின் 'சரீரி' எனவும், நீயென்னும் பதத்திற்கு வாச்சியப் பொருளாயிருத்தலின் 'தொம்பத முக்கியன்' எனவும் கூறினர். (கஎ)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையாற் றைசதனது பரியாய நாம மூன்றும் பிராஞ்ஞனது பரியாய நாமமூன்றும் மேலாத்ம நாமமூன்று முணர்த்துகின்றார்.

பெற்றவொரு சூக்குமமெய் வியட்டியபி மானி
பிராதிபா திகசீவன் சொப்பனகற் பிதனே

மற்றிவைதா முதலாய தைசதன்றன் பெயராய்
வழங்குறுவ காரணமெய் வியட்டியபி மானி
யுற்றவிரு மவித்தையோ பாதிகன்கா ரியமா
முபாதிகனென் பனமுதலாம் பிராஞ்ஞனு மங்கள்
பற்றிவரு சீவான்மா வந்தரான் மாமேற்
பரமான்மா வெனப்படுமான் மாவிதமூன் ருகும்.

(இ - ள்.) பெற்றவொரு - ஓர் கற்பனையாகவந்த, சூக்குமமெய்வியட்டியபிமானி - சூட்சும சரீர வியட்டியபிமானியும், பிராதிபாதிகசிவன்- பிராதிபாசிக சீவனும், சொப்பனகற்பிதன் - சொப்பன கற்பிதனும், இவைதா முதலாய - இவைமுதலிய பிறவும், தைசதன்றன் பெயராய் - தைசதனது நாமமாக, வழங்குறுவ - வழங்கப்படுவனவாம், காரணமெய் வியட்டியபிமானி - காரண சரீர வியட்டிவபிமானியும், உற்றவிரும் - பொருந்தி விளங்கும், அவித்தையோபாதிகன் - அவித்தையோபாதிகனும், காரியமா முபாதிகன் - காரியோபாதிகனும், என்பனமுதலாம் - என்பன வாதிய பிறவும், பிராஞ்ஞனுமங்கள் - பிராஞ்ஞனது நாமங்களாம், பற்றிவரும் - இந் நாமங்களைப் பொருந்தி வருகின்ற, சிவான்மா - ஜீவாத்மாவெனவும், அந்தராத்மா - அந்தராத்மாவெனவும், மேல் - மேலான, பரமான்மாவெனப்படும் - பரமாத்மாவெனவும், ஆன்மா - ஆன்மாவானது, விதமூன்ருகும் - மூன்றுவிதமாம், எ - று. ஏ-மற்று, தாம்-அசை.

(ப - ம்.) சூட்சுமதேகத்திற் சொப்பனவத்தையிற் பிரகாசித்தலின் 'தைசதன்' எனவும், அத்தேகத்தை யானென் றபிமானித்தலின் 'சூக்கும மெய் வியட்டியபிமானி' எனவும், அங்ஙனமுள்ள தத்துவங்களின் முன்னுள்ள சாக்கிர வாசனையேறி மெய்போலக் காண்டலின் 'பிராதிபாசிக சீவன்' எனவும், கனவிற் றோன்றிநிற்றலின் 'சொப்பன கற்பிதன்' எனவுமாம்; இனிக் காரணதேகத்திற் சுழுத்தியவத்தையிற் றத்துவ நீங்கின விடத்திற் றெரிவாயிருத்தலின் 'பிராஞ்ஞன்' எனவும், ஸ்தூலாதி தேகங்களுக்குக் காரணமாய அவித்தையை யபிமானித் திருத்தலிற் 'காரணமெய் வியட்டியபிமானி' எனவும், அவித்தை சம்பந்தமா யிருத்தலின் 'அவித்தை யோபாதிகன்' எனவும், காரணத்தினின்று காரியப்படுதலின் 'காரியோபாதிகன்' எனவுங் கூறினர். (௬அ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வாத்மத்திரய விலக்கண முணர்த்துகின் றார்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

காய்ந்துள விரும்பு போலுடம் பாதி
கலந்துறு குடும்பமென் வழக்கிற்

சார்ந்துளன் சீவான் மாவெனப் படுவான்
றாமரை யிலையினீர் போலத்
தொய்ந்துள குடும்பப் பெருவிவ காரந்
தோய்வில னந்தரான் மாவாம்
போந்துல கிற்குப் பரிதிபோற் சான்றாய்ப்
பொருந்தினோன் றன்பர மான்மா.

(இ - ள்.) காய்ந்துள - தப்தமான, இரும்புபோல்-அயத்தைப்போல, உடம்பாதி - தூலமாதிய சரீரங்களில், கலந்துறு - சம்பந்தித்து, குடும்பமென் - சம்சாரமென்கின்ற, வழக்கில் - விவகாரத்தில், சார்ந்துளன் - சேர்ந்திருப்பவன், சீவான்மா வெனப்படுவான் - சீவாத்மாவென்று சொல்லப்படுவான், தாமரை யிலையினீர்போல - கமலபத்திரோதகம்போல, தோய்ந்து - சம்சாரத்திற் கலந்திருந்தும், உளகுடும்பம்-சம்சாரத்தினுள்ள, பெருவிவகாரம் - பெரிய விவகாரத்தில், தோய்விலன் - கலவாதவன், அந்தரான்மாவாம் - அந்தராத்மாவென்று சொல்லப்படுவான், போந்துலகிற்கு - தோன்றிய வுலகவியாபாரத்திற்கு, பரிதிபோல் - சூரியனைப்போல, சான்றாய - சாட்சியாக, பொருந்தினோன் - அமைந்திருப்பவன், பரமான்மா - பரமாத்மாவென்று சொல்லப்படுவான், எ - று, தான் - அசை.

ஆத்மாவென்றது அபிமானத்திரயசாட்சியை. தூலம் சூக்குமம் காரண மென்னும் சரீரத்திரய சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி யென்கிற வவத்தாத் திரயவிவகாரங்களை யானென்றபிமானிக்கும் விசுவ தைசச பிராஞ்ஞனென்னும் அபிமானத்திரயங்களோடுகூடி விடயங்களை யனுபவிக்கும் வியாவகாரிகன் பிராதிபாசிகன் பாரமார்த்திக னென்னுஞ் சீவத்திரயங்களுக்குச் சாட்சியான சீவான்மா, அந்தரான்மா, பரமான்மாவென்பன ஆன்மத்திரயங்களாம்.

இவற்றுள் தப்தாயபிண்டம்போல இச்சாக்கிர விவகாரத்திற் சார்ந்தும் அதற்குச் சாட்சியா யிருக்கின்றவன் 'சீவாத்மா' எனவும், சொப்பன விவகாரத்திற் கமலபத்திரோதகம்போலச் சேர்ந்துஞ் சேராது சாட்சியாயிருக்கின்றவன் 'அந்தராத்மா' எனவும், சுழுத்தி சூனியத்திற் சூரியனைப் போலச் சாட்சியா யிருக்கின்றவன் 'பரமாத்மா' எனவுங் கொள்க. இம்மூன்றுங் கூடத்தனது அமிசங்களாம்.

வினா:—அபிமானத் திரயங்களோடுங் கூட்டிக் கூறிய நாமங்களைச் சீவத்திரயங்களெனப் பிரித்துக் கூறிய தென்னை ?

விடை: விரிக்கின் விரியுமெனச் சமுதாயமாய்க் கூறினதாலென்க. இங்ஙனங் கூறுவதுபற்றி நானுசிவவாதக்கட்டளை முதலியவற்றிற் காண்க. இன்னும் நனவிற் சாக்கிராதி மூன்றிற்கும் விடயவிவகாரமும் மனோராச்சிய விவகாரமும் ஞெப்தி விவகாரமுமாகிய மூன்றிற்கும் சாட்சியெனக் கொள்ளினு மமையும்.

(நா - ம்.) தொம்பத விலக்கியார்த்தந் தோன்று நிமித்தம் அதன் முக் கியார்த்தத்தை விரித்துக் கூறியதாம். (௩௩)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய அவத்தாத்திரய விலட்சணமான ஞானாத் மாவினுக் * கவாந்தரமாகத் தோற்றிய கற்பனாவிலக்கண முணர்த்துகின்றார்.

நீர்விழுந் தொருவெங் கதிர்தடு மாறி
நின்றதென் றுரைப்பது போலுங்
கார்விரைந் தோட வோடுகின் றதுதண்
கலைமதி யென்பது போலு
மோர்வருந் திரிவில் போதவான் மாவிற்
குடன்முத லாகிய வுபாதிப்
போர்பெறுஞ் சீவ பாவனை யுலகப்
பெருவிவ காரமென் றறியே.

(இ - ள்.) நீர் - சலிக்கின்ற சலத்தின்கண், விழுந்து - விழுந்து, ஒரு வெங்கதிர் - ஓர் வெம்மையான சூரியன், தடுமாறி நின்ற தென்று - தத்த ளித்திருக்கின்றதென்று, உரைப்பதுபோலும் - சொல்வதுபோலவும், கார் - மேகமானது, விரைந்தோட - விரைவிற் செல்ல, ஓடுகின்றது - கடிதிற் செல்கின்றது, தண்கலை - குளிர்ந்தகலைகளையுடைய, மதியென்பதுபோ லும் - சந்திரனென்று சொல்வதுபோலவும், ஓர்வரும் - அறிதற்கரிய, திரி வில் - மாறுபடுதலில்லாத, போதவான்மாவிற்கு - ஞானாத்மாவினுக்கு, உடன் முதலாகிய - தேகமாதியான, உபாதிபோர்பெறும் - உபாதிநாமங்க ளூறுதல், ஜீவபாவனை - ஜீவகற்பிதமாம், உலகம் - ஜகத்திலிது, பெருவி வகார மென்றறி - பெரியவிவகார மென்றறிவாயாக, எ - று. ஏ - ஈற் றசை.

சலப்பிரதி பிம்பமான சூரியனது சலனமே நிச்சலமான பிம்ப சூரி யனுக்குண்டானதாகக் காண்பதுபோல அவித்தியாப்பிரதி பிம்பனான ஜீவ னது கற்பனா விவகாரங்களனைத்து மதிஷ்டான ஞானாத்மாவான கூடஸ்த னுக்கு வந்ததுபோல் அவாந்தரமாகத் தோற்றினதே யன்றி யதார்த்தமா யின் றென்க.

(நா - ம்.) தொம்பதத்தின் வாச்சியார்த்த விலக்கணம் இலக்கியார்த் தமாய கூடத்தனுக்கு வந்ததாகத் தோற்றுங் கற்பனையை யுணர்த்தியதாம்.

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையால் ஈசுரனுக் கபிமானநாம மூன்றும் இவற்றுள் விராட்டிற் கிரண்டும் இரணிய கருப்பற்கிரண்டுமாய பரியாய நாமங்களு முணர்த்துகின்றார்.

---

* முன்னும் பின்னுமின்றி யிடையிற்றோன்றி நிகழ்வது அவாந்தரமெ னப்படும்.

அருவிராட் புருட னிரணிய கருப்ப
னந்தரி யாமியென் றீசன்
றிரிவித மவருட் டூலவா கத்துச்
சமட்டியா கியவபி மானி
விரிவுறும் வைசுவா னரனெனன் முதலாம்
விராட்புரு டன்பெய ராகு
மருவுறு மிலிங்க மெனுமுடற் சமட்டி
மானிமாப் பிராணனே யன்றி.

(இ - ள்.) அருவிராட்புருடன் - அறிதற்கரிய விராட்புருடனும், இரணியகருப்பன் - இரணிய கருப்பனும், அந்தரியாமியென்று - அந்தரியாமியுமென, ஈசன் - ஈசனுனவன், திரிவிதம் - மூன்றுவிதமாம், அவருள் - அவர்களுக்குள், தூலவாகத்துச் சமட்டியாகிய வபிமானி - சமட்டி தூலசரீர வபிமானியும், விரிவுறும் - விரிவுற்ற, வைசுவானரனெனன் முதலாம்-வைசுவானரனென்னு மிரண்டு முதலிய பிறவும், விராட்புருடன் பெயராகும்-விராட்புருடனது நாமங்களாம், மருவுறும் - பொருந்தாநின்ற, இலிங்கமெனுமுடற் சமட்டிமானி - சமட்டி சூட்சுமசரீர வபிமானியும், மாப்பிராணனேயன்றி - மஹாப்பிராணனுமல்லாமல், எ - று, ஏ - அசை.

விராட்புருடன் பிருதிவியாதியாவுந் தனதுருவமாகக் கொண்டிருப்பவன், இரணிய கருப்பன் - விகசிதமாய்ப் பிரகாசிக்கின்ற யாவையுந் தனதுதரத்துளடக்கி யிருப்பவன், அந்தரியாமி-ஆகாயம்போல் யாவற்றுள்ளும் வியாபித்திருப்பவன். பிருதிவியாதி யென்றது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆத்மாவென்னு மஷ்டமூர்த்தங்களையெனினுமமையும். சமட்டி தூலத்தை யபிமானித்தலின் 'தூலவாகத்துச் சமட்டியாகிய வபிமானி' எனவும், விசுவவியாபகனுதலின் 'வைசுவானரன்' எனவுங் கூறினர். (சுக)

அ - கை.

இச்செய்யுளில் இரணியகருப்பனுக்கு முற்கூறுதவொன்றும் அந்தரியாமியி னுமமேழு முணர்த்துகின்றுர்.

சூத்திரான் மகனென் பெயர்முத லாகச்
சொற்றன ரிரணிய கருப்பற்
கேத்துகா ரணமா முடம்புறு சமட்டி
யெனுமபி மானியவ் வியத்தன்
வாய்த்தகா ரணமா முபாதிக னநந்த
மயன்பர தேவதை பரம
னுத்தகற் பதமுக் கியார்த்தனென் பெயர்மு
னந்தரி யாமிபெற் றிடுமே.

(இ - ள்.) சூத்திரான்மகனென்-சூத்திராத்மகனுமென்கின்ற, பெயர் முதலாக - நாமமாதியானபிறவும், சொற்றனரிரணியகருப்பற்கு - இரணிய கருப்பனுக்குச் சொன்னார்கள், ஏத்து - துதிக்கப்பட்ட, காரணமா முடம்புறு சமட்டியெனுமபிமானி - சமட்டிகாரண சரீரவபிமானியும், அவ்வியத்தன் - அவ்வியத்தனும், வாய்த்த - பொருந்திய, காரணமாமுபாதிகன் - காரணோபாதிகனும், அநந்தமயன் - அநந்தமயனும், பரதேவதை - பரதேவதையும், பரமன் - பரமனும், ஆத்த - பொருந்திய, தற்பதமுக்கியார்த்தனென் - தற்பதமுக்கியார்த்தனு மென்கின்ற, பெயர்முன் - நாமங்களாகிய பிறவும், அந்தரியாமி பெற்றிடும் - அந்தரியாமிபெறுவன், எ-று. ஏ-அசை.

'பெயர் முதலாக' என்றமையின் மாயோபாதிகன், மாயாபாசகன், மாயாவிசேஷகன், சகத்யோணி, அக்ஷரன், அவ்வியாகிருதன், சபலப்பிரமன், சகுணப்பிரமனென்பனவுங் கொள்க.

(ப - ம்.) சமட்டிசூக்குமசரீரத்தை யபிமானித்திருத்தலின் 'இலிங்கமெனுமுடற் சமட்டி (யபி)மானி' எனவும், மாருதமே மூச்சாயிருத்தலின் 'மாப்பிராணன்' எனவும், சூத்திரதாரியாயாவையு மசைப்பிக்கின்றவனாதலின் 'சூத்திரான்மகன்'எனவும், சமட்டிகாரணதேகத்தை யபிமானித்திருத்தலிற் 'காரணமா முடம்புறு சமட்டி யபிமானி' எனவும், இந்திரியங்கட்கு விஷயமாகாதடங்கி நிற்றலின் 'அவ்வியத்தன்' எனவும், சகத்சென்மாதிகாரணத்துவமே யுபாதியாயுடையவனாதலிற் 'காரணமுபாதிகள்' எனவும், முடிவின்றி வியாபித்திருத்தலின் 'அனந்தமயன்' எனவும், மஹாதேவாதலிற் 'பரதேவதை' எனவும், யாவுக்குமேலா யிருத்தலிற் 'பரமன்' எனவும், அதுவென்னும் பதத்திற்கு வாச்சியார்த்தனாதலின் 'தற்பதமுக்கியார்த்தன்' எனவுங் கூறினார்.

(தா-ம்.) தற்பதவிலக்கியார்த்தந் தோன்று நிமித்தம் அதன் முக்கியார்த்தத்தை விரித்துணர்த்தியதாம். (சூஉ)

அ - கை.

இச்செய்யுளில் அவத்தாத்திரய சம்பந்தமான வீசனது மூவுருவவிலக்கணமும் அவைகட்கு விலட்சணமான பிரமவிலக்கணமுந் தோன்றத் திருடாந்த பூருவகமாக வுணர்த்துகின்றார்.

சித்திரப் படமோர் பொருளொடுங் கூடாத்
திகழ்வினிற் றவுதமே யெனவு
நெய்த்தகூழ் வருடக் கடிதமே யெனவு
நீனிறத் திலாஞ்சனை யெனவும்
பத்தியோ வியஞ்சேர்ந் திரஞ்சித மெனவும்
படுதல்போற் பிரமமு மாயை
வைத்தகா ரியங்கள் கடந்துறு நிலையில்
வயங்குஞ்சித் தெனும்பெயர் புனைந்தே.

(இ - ள்.) சித்திரப்படம் - சித்திரப்படமானது, ஓர்பொருளொடும் - பஞ்சவன்னங்க ளொன்றோடும், கூடாத்திகழ்வினில் - சேராமற் றனித்து விளங்குமிடத்து, தவுதமெனவும் - தவுதபடமெனவும், நெய்த்தகூழ்வருட - பசைக்கூழ்தடவினால், கடிதமெனவும் - கடித படமெனவும், நீனிறத்து - நீல நிறத்தினு லச்சுக்கட்டினால், இலாஞ்சனை யெனவும் - இலாஞ்சன படமெனவும், பத்தியோவியஞ் சேர்ந்து - வரிசையாகச் சித்திரம்வரைந்தால், இரஞ்சிதமெனவும் - இரஞ்சித படமெனவும், படுதல்போல் - சொல்லப்படுவதுபோல, பிரமமும் - பிரமவஸ்துவும், மாயைவைத்த - மாயையினு லுண்டான, காரியங்கள் - பாஞ்சபூத பௌதிகங்களை, கடந்துறு நிலையில் - நீங்கியவிடத்தில், வயங்குஞ் சித்தெனும் பெயர்புனைந்து - சித்தெனு நாமத்தைத் தரித்து விளங்கும், எ - று. ஏ - அசை.

இலாஞ்சனை யென்பது உருவமமைத்தற் கடையாளமான சின்னம். இரஞ்சிதமென்பது உருவம் பூரணமா யமைத்ததின் மகிழ்தல். சித்திற்குப் படமும், ஈசுரனுக்கு வெளுத்தபடமும், அந்தரியாமிக்குக் கடிதபடமும், இரணியகருப்பனுக்கு இலாஞ்சன படமும், விராட்டிற்கு இரஞ்சிதபடமுமெனவுவமித்தவாறும்.

படமானது வெளுத்தவிடத்திற் றவுதமெனவும், துவரிட்டுக் கொட்டிய விடத்துக் கடிதமெனவும், ஓர் வன்னத்தினு லுருக்கட்டோன்ற வச்சுக் கட்டினவிடத்து இலாஞ்சனை யெனவும், மனது ரமிக்கும்படியான வன்னங்களடைத்தவிடத்து இரஞ்சிதமெனவுங் கொள்க. இந்நான்கிற்கும் ஆதாரம் சுபாவபடம்போல விராட்டாதிய நான்கிற்கு மாதாரம் பிரமசித்தொன்றே யெனக்கொள்க. (சரு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னுவமானப்படி யுவமேயந்தோன்ற ஈசுரசாட்சியான சித்திற்கமைந்த சற்பஞசரீர மூன்றும்வந்த கிரம முணர்த்துகின்றார்.

அகிலகா ரணமா மாயையை மருவி
யந்தரி யாமியாய் மாயை
சகலகா ரியமாஞ் சூக்கும வுடம்பு
சார்ந்துபொன் கருப்பனென் றாகி
விகலமி றால வுடம்பினை மேவி
விராட்டென் நிற்குமென் றறிவாய்
திகழுறு பிரமஞ் சித்திரப் படமேற்
சித்திர மியாதென வினவில்.

(இ - ள்.) அகிலகாரணமாம் - சகத்திற்குக் காரணமாகிய, மாயையை - சமட்டி காரண சரீரமாகிய மாயையினை, மருவி - அவ்வீசன் கூடி, அந்தரியாமியாய் - அந்தரியாமியென்னு நாமத்தையும், மாயை - மாயையி

னது, சகலகாரியமாம் - அபஞ்சிகிருத பூதமாகிய, சூக்குமவுடம்பு - சமட்டி சூட்சும சரீரத்தை, சார்ந்து - பொருந்தி, பொன்கருப்ப னென்ருகி - இரணியகருப்பனென்னு நாமத்தையும், விகலமிறூலவுடம்பினேமேவி - சமட்டி தூல தேகத்தைப்பொருந்தி, விராட்டென - விராட்டென்னு நாமத்தையுமடைந்து, நிற்குமென்றறிவாய் - இருக்குமென் றறிவாயாக, திகழுறு பிரமம் - எங்குந் தாளுகி விளங்கும் பிரமம், சித்திரப்படமேல் - சித்திரப்படமாளுல், சித்திரமியாதெனவினவில் - அதிலெழுதிய சித்திரமியாதெனக் கேட்கில், எ - று.

விகலமிலென்பது குறைவின்மையாம்; ஆகவே, சமட்டியென்ரும்.பிரமச்சாயையான ஈசனென்னுஞ் சித்து மாயையான காரணத்துடன் கூடின் 'அந்தரியாமி' எனவும், மாயாகாரியமான சூட்சுமத்திற் கூடி 'இரணியகருப்பன்' எனவும், காரியமான தூலத்திற்கூடின் 'விராட்டு' எனவும் பேர் பெறுமென்க.

(நா - ம்.) தற்பதத்தி னிலக்கியார்த்தந் தோன்ற அதற்கு வந்த வுபாதிகளை யுவமான பூருவகமாக விளக்கியதாம். (சஅ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சித்து சித்திரப்படமாயின் சித்திரமியாதென்னும் விளுவிற்கு உத்தரமுணர்த்துகின்ருர்-

விரிஞ்சனே முதலாஞ் சேதன மோடு
வெற்பெழு வாயசே தனமாய்ப்
பரந்துள வுலகஞ் சித்திர மென்பர்
பரம்பொரு ளாமொரு பிரமத்
திருஞ்சடா சடமா முலகது தோற்ற
மெவ்வண மெனிற்படந் தன்னில்
வரைந்தபன் னிறமாய்க் குளிர்முதன் மாற்ற
வல்லன வலதுகிற் போலி.

(இ - ள்.) விரிஞ்சனேமுதலாம் - பிரமனுதியான, சேதனமோடு-சித்துடன், வெற்பெழுவாய் - மேருமுதலாக, அசேதனமாய் - அசித்துருவமாய், பரந்துளவுலகம் - விரிந்திருக்கின்ற சகத்தை, சித்திரமென்பர் - சித்திரமென் றறிவுடையோர்கள் சொல்வார்கள், பரம்பொருளாம் - பரவஸ்துவாகிய, ஒருபிரமத்து - ஒரு தன்மையான பிரமத்தில், இருஞ்சடாசடமாம்- இருதன்மையுள்ள சடசித்தாகிய, உலகதுதோற்றம் - சகத்தோற்றமானது, எவ்வணமெனில் - எவ்வாறிருக்குமென்ருல், படந்தன்னில் - படத்தில், பன்னிறமாய் - பலவன்னமாக, வரைந்த - எழுதியிராநின்ற, துகிற்போலி- வஸ்திராபாசங்கள், குளிர்முதல் - சீதாதிகளை, மாற்றவல்லனவல - நீக்கச் சக்தியில்லாதனவாம், எ - று. ஏ - அசை.

'விரிஞ்சனேமுதலாம்' என்றமையின் சராசர வுயிர்களேயும், 'வெற் பெழுவாய்' என்றமையின் பாஞ்சபூத பௌதிகங்களேயும், 'துகிற்போலி' என்றமையின் பிரதிமையையுங்கொள்க. துகிற்போலி சித்தமிசத்திற் குவமிக்கப்பட்டது. எனவே, சீவேசுரசகத்தே சித்திரமென்பதாயிற்று. இதற்குப் பிரமாணம் பஞ்சதசப்பிரகரணத்தின் சித்திரதீபிகையில் "பரமாத்மாவாயிருக்கின்ற தன்னுடைய சொரூபத்திற் சீவேசுர சகத்தென்னப்பட்ட சித்திரமாரோபிக்கப்பட்டது" என்னும் வாக்கியத்திற் காண்க.

(தா - ம்.) பிரமாதி ஸ்தம்பபரியந்தமான சேதனமாகிய பரசீவர்களும், மலையாதியான வசேதனங்களுங் கூடின சகமே சித்திரமென்பதாம். (சடு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சித்தினிடத்திற் சடாசடமானசக மெங்ஙன மிருக்கின்றதென்னும் வினவிற்கு உத்தர முணர்த்துகின்றார்.

ஓர்வடி வாகிக் குளிர்முதன் மாற்று
முண்மையாஞ் சித்திரப் படம்போன்
* றார்வுறழ் வெழுதுங் கிரிமுத லாய
வதனெடொப் புறுகிலா வாபோற்
றேர்வரும் பிரமத் தெழுந்தபற் பலவாஞ்
சீவர்கள் சித்தொடொப் பாகா
பார்முத லொவ்வாச் சடங்களா தலினாற்
பரத்திலாஞ் சடாசட வுலகம்.

(இ - ள்.) ஓர்வடிவாகி - ஏகாகாரமாய், குளிர்முதன்மாற்றும் - சீதளமாதியவைகளே நீக்குதற்கு, உண்மையாம் - மெய்யான, சித்திரப்படம்போன்று - சித்ரபடத்திற் கொப்பாக, ஆர்வு - ஆராயின், உறழ்வு - துகிற்போலி யொப்பாகும், எழுதும் - வரையாநின்ற, கிரிமுதலாய - மலையாதிய சித்திரங்கள், அதனெடொப் புறுகிலாவாபோல் - அப்படத்திற் கொவ்வாதவாறுபோல, தேர்வரும் - அறிதற்கரிய, பிரமத்தெழுந்த - பிரமத்துதித்த, பற்பலவாஞ் சீவர்கள் - நானாவாகிய சீவேசுரர்கள், சித்தொடொப்பாகா - சித்தைப்போலிருக்கும், பார்முதல்-பிருதிவியாதியன, சடங்களாதலினல் - சடவஸ்துக்களாதலினல், ஒவ்வா - அச்சித்துக்கொப்பாகா,

---

* றார்வம தொருங்கே யகற்றிடற் கியைந்திங்
கணிபெற நிற்பதோர் பிரம
மேர்பெற வரைந்த சித்திர மென்ன
விருக்குமப் பரத்திலிவ் வுலகந்
தேர்வுறிற் றன்னைத் திரிபற வெங்குந்
திகழுமிந் நிலையது பின்னும். என்றும் பாடமுண்டு.

பரத்தில் - பிரமத்தில், ஆஞ்சடார் சடவுலகம் - சடசித்துக்களாயுள்ள சகந் தோற்றமாம், எ - று.

'கிரிமுதல்' என்றமையால் நதியும் 'பார்முதல்' என்றமையின்பகுதி வரையுங்கொள்க.

(தா - ம்.) பிரமத்திற் சேதனு சேதன வடிவ மிருக்கின்ற தெங்ஙன மெனின், சுபாவபடத்தி னமைந்த பிரதிமைகளுக்குத் தரித்திருக்கின்ற வஸ்திரங்கள் ஆபாசமாயினும் அவ்வஸ்திரம்போன் றிருக்கின்றமையின் அதற்கொப்பாகவும், வினயகிரியாதிக ளவ்வஸ்திரம்போன் றிராமையின் அதற்கொப்பாகாமையுமாம். இவ்விரண்டும் படத்திலிருத்தல்போலப் பிர மாதி பிபீலிகாந்தமீறுயுள்ள சீவர்க ளாபாசமாயினுங் கிஞ்சித்துச் சித்தமிச மிருத்தலின் சித்திற்கொப்பாகவும், பிருதிவியாதி சடமாதலின் அதற் கொப்பாகாமையுமான விவ்விரண்டும் பிரமத்திற் கற்பனையாகத் தோற்றிக் கொண்டிருக்கு மென்பதாம். (சு சு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய ஈசனது ஷட்குணங்களுஞ் சாமர்த்தியத் திரயங்களும் பஞ்சகிருத்தியத்தி னுமங்களு முணர்த்துகின்றார்.

இத்திறத் தீசன் முக்கிய குணங்க
ளெலாமறி தன்முத லனவாங்
கத்திருத் துவமோ டகத்திருத் துவம்பி
னங்நிதா கருத்திருத் துவமே
யத்தன்மெய்ப் பிரபுத் துவவலி யாக்க
லளித்தல்போக் குதல்சம னந்தா
னெய்த்திட லகற்று மனுப்பிர வேச
மென்பன வீசனேங் தொழிலே.

(இ - ள்.) இத்திறத்தீசன் - இத்தன்மையையுடைய வீசனுக்கு, முக் கியகுணங்கள் - முக்கியமான குணங்களாவன, எலா மறிதன் முதலன வாம் - சர்வஞ்ஞத்துவா தியென்பனவாம், கத்திருத்துவமோடு - கர்த்திருத் துவமும், அகத்திருத்துவம் - அகர்த்திருத்துவமும், பின் - பின்பு, அங்நி தாகருத்திருத்துவம் - அங்நிதாகத்திருவமுமாகிய மூன்றும், அத்தன் - ஈச னுக்கு, மெய்ப்பிரபுத்துவவலி-உள்ளபிரபுத்துவ சாமர்த்தியங்களாம், ஆக் கல் - சிருட்டித்தலும், அளித்தல் - திதித்தலும், போக்குதல் - சங்கரித்த லும், சமனம் - திரோபவித்தலும், எய்த்திடலகற்றும் - இளைப்பைநீக்கும், அனுப்பிரவேசம் - அனுக்கிரகித்தலும், என்பன - என்பவைகள், ஈசனேங் தொழில் - ஈசனது பஞ்சகிருத்தியங்களாம், எ - று. தான்-ஏ-அசை.

'எலாமறிதன்முதலனவாம்' என்றமையான் சர்வஞ்ஞத்துவமும் சர் வேசுரத்துவமும், சர்வநியந்திருத்துவமும், சர்வாந்தரியாமித்துவமும், சர் வாத்மகத்துவமும், சர்வசத்தியத்துவமுங் கொள்க.

இவற்றுள் சர்வாத்மாக்களுடைய வறிவை யறிதலிற் சர்வஞ்ஞத்துவ மெனவும், அவர்களுக்கு மேலாயிருத்தலிற் சர்வேசுரத்துவமெனவும், யாவினுள்ளுஞ் சமத்துவமா யிருத்தலிற் சர்வநியந்திருத்துவ மெனவும், சர்வத்துக்கு முள்ளீடாயிருத்தலிற் சர்வாந்தரியாமித்துவமெனவும், சர்வசீவர்களாயும் விளங்குதலிற் சர்வாத்மகத்துவமெனவும், சகலசத்தியு முடையவராதலிற் சர்வசத்தியத்துவமெனவுமாம். கர்த்திருத்துவமென்பது ஒன்றனுபாதானஞானமுஞ் செய்யும்விருப்பமு முயற்சியு முடைத்தானவன் தன்மை. எனவே, இச்சாஞானக்கிரியையாயின. அகர்த்திருத்துவமென்பது அத்தன்மை நீங்கிநிற்றல். அந்நியதாகர்த்திருத்துவமென்பது ஒன்றை யொன்ருக்குபவன்றன்மை. பிரபுத்துவமென்பது பிரபுவின்றன்மை.

அவித்தியாசம்பந்தமான வாத்மாக்களை யதினின்று நீக்கி முத்தியை யடைவிக்கு நிமித்தந் தனு கரண புவன போகங்களைக் கற்பிதமாக வுண்டாக்கி யவர்களி னிருவினைகளை ருசிப்பித்துப் புசிப்பித்து நசிப்பிக்கு நிமித்தஞ் சிருட்டி முதன்முத்திபரியந்தம் உயிர்க்குயிராயிருந்து அசைப்பித்துக் கொண்டிருக்குந் தனது சாமர்த்தியமே கர்த்திருத்துவமும், இவைகளிற் கூடிக் கன்மானுசாரப்பிரகாரம் ஆத்மாக்கள் பிரேரிக்கும்படி பிரேரகஞ் செய்தும் அவற்றிற் பற்றின்றித்தனியே தானிருத்தலே அகர்த்திருத்துவமும், சிற்சத்தியின் நியமப்படி வழுவாமற் செய்யுமுறைமையின்றிக் கடத்தைப் படமாகச் செய்வதுபோல வொன்றை மற்றென்ருகச்செய்யுஞ் சாமர்த்தியமே அந்நியதாகர்த்திருத்துவமுமாகிய விம்மூன்றும் ஈசுரனது பிரபுத்துவ சாமர்த்தியங்களாம்.

ஆத்மாக்களுக்குத் தனுவாதி கொடுப்பது சிருட்டியும், அவற்றினுள்ள சுகதுக்கபோகங்களைப் புசிப்பிப்பது திதியும், அப்போகானுபவங்களை நசிப்பிப்பது சங்காரமும், அங்ஙனம் நசிப்பித்த போகவாசனைகளை ருசிப்பிப்பது திரோபவமும், அவ்வாசனையை நீக்கித் தெளிவிப்பது அனுக்கிரகமுமே பஞ்சகிருத்தியமாம்.

அறிவையுண்டாக்குதல் சிருட்டியும், அது மறைபடாது வளர்த்தல் திதியும், அதைமறைக்கு மாயையைக்கெடுத்தல் சங்காரமும், அம்மாயாவாசனை தோன்ருதுமறைத்தல் திரோபவமும், அவ்வறிவே பூரணமாக விளக்குதல் அனுக்கிரகமுமா மெனினுமமையும்.

வினு:—இங்ஙனங்கூறிய குணங்களா லுண்டாகு மிருவினைகள் அவ்வீசனைச் சாராவோ?

விடை:—சூரியசந்நிதானத்தில் நடக்கு மிருவினைகள் அச்சூரியனைச் சாராவாறுபோல அனைத்தையுஞ்செய்துஞ் செய்யாதவனுயிருக்கும் ஈசனையும் அவை சாராவென்க.

(தா - ம்.) இங்ஙனங்கூறிய பதினன்கும் ஈசனது சுபாவ குணங்களென்பதாம். (சஎ)

Tirumadamarudur

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பஞ்சகிருத்தியங்கள் நிகழுந்தன்மையை யுவமான பூருவகமாக வுணர்த்துகின்றார்.

நீங்கிய விகாரப் பிரமமா மீச
 னிகழ்த்துமோ தொழில்பல வென்னிற்
பூங்கதி ரிச்சை யின்றியே வாரி
 பொழிமழைக் கதிரினாற் பொழிய
வாங்கதி னிழலாய்ப் பொருந்தியந் நிழலை
 யலர்முகி லான்மறைத் தளித்துத்
தூங்கிம கரத்தால் வெங்கதி ரானீர்
 தொலைத்ததைத் தன்னொடாக் குதல்போல்.

(இ - ள்.) நீங்கியவிகாரம் - நிர்விகாரமான, பிரமமாமீசன் - பிரமமாகியவீசுரன், நிகழ்த்துமோ - நடத்துமோ, தொழில்பலவென்னில் - விகாரமானபஞ்சகிருத்தியங்களையென்றால், பூங்கதிர் - பிரகாசமானசூரியன், இச்சையின்றி - இச்சாயத்தனமின்றி, வாரி - சமுத்திரத்தி லெடுத்து, பொழி - சொரியாநின்ற, மழைக்கதிரினால் - வருஷகிரணத்தினால், பொழிய - சலத்தைப்பெய்ய, ஆங்கதின் - அச்சலத்தின், நிழலாய்ப்பொருந்தி - சாயையாகப்பிரதிபிம்பித்து, அந்நிழலை - அச்சாயையை, அலர்முகிலால் - விரிவானமேககிரணத்தால், மறைத்து - ஆவரணித்து, அளித்துத்தூங்கிமகரத்தால் - தாழ்ந்துவரும் பனிக்கிரகணத்தாற்காத்து, வெங்கதிரால் - உஷ்ணகிரணத்தினால், நீர்தொலைத்து - சலத்தைக்கிரகித்து, அதை - அப்பிரதிபிம்பசூரியனை, தன்னொடாக்குதல்போல் - தன்னுடன் ஐக்கியமாக்கிக்கொள்வதுபோல, எ - று.

நீங்கியவிகாரப்பிரமா மீசனென்றது மாயாப்பிரதிபிம்பனான ஈசுரனுக்கு அதிஷ்டானமான பிரமத்தை. பிரமத்திற்குச் சூரியனையும், மாயாசத்திக்கு வருஷகிரணத்தையும், ஜீவர்களுக்குப் பிரதிபிம்பசூரியனையும், பிரகிருதிக்கு மேககிரணத்தையும், நியமசத்திக்கு இமகிரணத்தையும், உருத்திரனுக்கு உஷ்ணகிரணத்தையு முவமித்தவாறும். (சஅ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வுவமானப்படி யுவமேயந்தோன்ற வுணர்த்துகின்றார்.

போற்றிறை மாயா சத்தியோ டொன்றிப்
 பொலிந்தசிற் பிரதான மதனாற்
சாற்றரு நிமித்த காரண னாகித்
 தகுசடப் பிரதான மதனா
லாற்றுபா தான காரண னெனநின்
 றாக்கிய புத்தியா திகளிற்

றோற்றுபு சீவ ரூபமாய் வினையாற்
சொற்றபோத் திருவென நின்றே.

(இ-ள்.) போற்றிறை-துதிக்கத்தக்கவீசன், மாயாசத்தியோடொன்றி-மாயாசத்தியுடன்கூடி, பொலிந்த - விளங்கிய, சிற்பிரதான மதனல் - ஞானமேலீட்டினுல் - சாற்றரும் - சொல்லுதற்கரிய, நிமித்தகாரணனுகி - நிமித்தகாரணனுய், தகு - தகுதியான, சடப்பிரதானமதனல் - சடமேலீட்டினுல், ஆற்று - செய்வதற்குரிய, உபாதானகாரணனென - முதற்காரணனென்ன, நின்றாக்கிய - இருந்துண்டாக்கிய, புத்தியாதிகளில் - புத்திமுதலியவைகளில், தோற்றுபு - தோற்றுகின்ற, சீவரூபமாய் - சீவவடிவமாய், வினையால் - வினைகளால், சொற்ற - சொல்லாகின்ற, போத்திருவென - போத்திருவென்ன, நின்று - இருந்து, எ - று. ஏ-அசை.

உபாதானகாரணம் சமவாயிகாரணம் முதற்காரணமென்பன வொருபொருட்கிளவி. புத்தியென்றது அகங்கார தத்துவத்தினிராசதத்தை. ஆதியென்றமையால் அவித்தையுங்கொள்க. (சகூ)

இதுவுமது.

நியமசத் தியினுற் போகபோத் திருவை
நியமஞ்செய் துருத்திர வுருவான்
மயமுறு மாயா காரியஞ் சிதைத்து
வந்தரு ளாரிய வுருவா
லயர்வுறு சீவன் றன்னையே தன்னே
டயிக்கமாக் குவனென வறிக
வுயர்வுறு சமட்டி வியட்டியென் பனவா
லுயிரிறை கட்குறும் பேதம்.

(இ - ள்.) நியமசத்தியினுல் - நியாமகசத்தியினுல், போகபோத்திருவை - போகத்திற்குரிய சீவர்களை, நியமஞ்செய்து - நியமப்படி ரக்ஷித்து, உருத்திரவுருவால் - உருத்திர சொருபத்தினுல், மயமுறுமாயா - மாயாமயமாகிய, காரியஞ்சிதைத்து - காரியங்களைக் கெடுத்து, வந்தருள் - எழுந்தருளிவந் தனுக்கிரகஞ் செய்யும், ஆரியவுருவால் - ஆசிரிய ரூபத்தினுல், அயர்வுறு - தளர்ச்சியடைந்துள்ள, சீவன்றன்னை - ஜீவனை, தன்னேடு - தன்னுடன், அயிக்கமாக்குவனென - ஏகமாக்கிக் கொள்ளுவனென, அறிக - நீயுணர்வாயாக, உயர்வுறு - மேலான, சமட்டி - ஸமஷ்டியும், வியட்டி - வியஷ்டியும், என்பனவால் - என்னுந்தன்மையால், உயிரிறைகட்கு - சீவேசுரருக்கு, உறும்பேதம் - பேதமுண்டாம், எ - று. ஏ - அசை.

'ஆரியவுருவால்' என்றமையின் சுருதியுங்கொள்க. "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' என்னும் சூத்திரவிதியால் திரோபவமுங்கொள்க.

பிரமத்திற்குச் சூரியனையும், மாயைக்கு வருஷகிரண சலத்தையும், சீவேசுரர்களுக்குப் பிரதிபிம்பத்தையும், இரட்சித்தலுக்கு இமகிரணத்தை

யும், சங்கரித்தலுக்கு உஷ்ணகிரணத்தையும், திரோபவித்தற்கு மேககிரணத்தையும், அனுக்கிரகித்தலுக்குப் பிரதிபிம்பத்தைத் தன்னிடத்திற்சேர்த்துக் கொள்ளுதலையு முவமித்தவாறும்.

வினா:—இவ்வுவமப்படி பஞ்சகிருத்தியத்திற்கு உவமேயமியாது?

விடை:—போற்றிறையென்பது பிரமமெனவும், மாயாசத்தியோடொன்றியென்பதுமாயாப்பிரதிபிம்பனனவீசனெனவும்,சிற்பிரதானமதனுலென்பது தனதுகாரண மறைபடாமல் அறிவுமேலிட்டிருத்தலெனவும்,நிமித்தகாரணன் என்பது தனது காரணத்தை மறந்த சீவர்கட்கு அதுவெளிப்படுநிமித்தம் தனுகரணங்களைக் கொடுப்பதற்பொருட்டு நோக்கிச் சிருஷ்டிக்கும் பிரமனெனவும், சடப்பிரதானம் என்பது தானுண்டாதற் கேதுவாயிருந்த மாயை மேலிட்டிருத்தலெனவும், ஆற்றுபாதானகாரணம் என்பது அம்மாயாசம்பந்தத்திற் றானே யுபாதான காரணமெனவும், புத்தியாதிகளிற்றோற்றுப் சீவரூபம் என்பது அவித்தியா புத்தியிற் றோற்றிய சீவர்களெனவும், நியமசத்தியினாற் போகபோத்திருவை நியமஞ்செய்து என்பது நியமப்படி சீவர்களை விஷ்ணுரூபமா யிரட்சித்தலெனவும், உருத்திர வுருவான் மாயாகாரியஞ் சிதைத்து என்பது வித்தை அவித்தைமுதலிய தோற்றங்களை யுருத்திரரூபமாய்ச் சங்கரித்தலெனவும், இவைகளொன்றுந் தோன்றா தடங்கி நிற்றல் மயேசுர ரூபமாய் மறைப்பித்தலெனவும், வந்தருளாரியவுரு என்பது கற்பனை யிறந்தவிடத் துண்டாகிய சுகபோதமெனவும், சீவன்றன்னையே தன்னோடையிக்கமாக்குவன் என்பது பிரமத்தோடு கூடச்சதாசிவவுருவா யயிக்கியமாக்குவ னெனவுங்கொள்க.

சீவேசுரார்களுக்குத் தநுவாதியதோற்றம் சிருட்டி, அவற்றை யிரட்சித்தல் திதி, அவற்றைக்கெடுத்தல் சங்காரம், அவ்விஷயநீக்கம் திரோபவம், அவர்களுக்குத் தத்சொரூபம் வெளிப்படுதல் அனுக்கிரகமாம். இவற்றுள் முற்கூறியமூன்றும் தேகத்திற்கும் பிற்கூறிய இரண்டும் தேகிக்குமாம்.

வினா:—அற்றேல், இச்சிவ சீவர்க ளுபாதியோடுங் கூடினவரென முற்கூறி யிங்ஙனந் தன்னோடையிக்கிய மாக்கிக்கொள்வனென்ற தென்னை?

விடை:—அவ்வீசனுக்கு அதிஷ்டானமான பிரமமும் சீவனுக்கு அதிஷ்டானமான கூடஸ்தனும் ஏகமாய்க் கலத்தலினாலென்க.

வினா:—அற்றேல், அவையே சுயஞ்சித்தாகாவோ?

விடை:—அங்ஙனங் கலப்பதோ ருபாதியாதலின் ஆகாவென்க.

(தா - ம்.) பிரம சந்நிதியில் மாயாப் பிரதிபிம்பனான வீசுரன் அவித்தியாப் பிரதிபிம்பரான சீவர்களை முன்னிட்டு அவர்கள் தமது யதார்த்த ஸ்வரூபத்தை யடையும் பொருட்டும் தானும் அங்ஙனமே விளங்கும்பொருட்டும் பஞ்சகிருத்தியஞ் செய்யுங் கிரமமுணர்த்தியதாம். (௫௦)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சீவேசுரர்களின் பேதமான சமஷ்டி வியஷ்டியி னிலக்கணங்களை யுவமான பூருவகமாக வுணர்த்துகின்றார்.

மிகுமரப் பன்மை தண்டலை யெனல்போன்
மிகுமுயி ரெலாமுநா னெனுமோர்

தகுமபி மான மிறை * சமட் டியதாந்
தனித்தனி மரப்பெயர் கொளல்போற்
பகுமுட ேறும் வேறுவே ருகப்
படுமபி மானமோர்ந் துரைப்பிற்
றொகுமுயிர் ‡ வியட்டி யுருவமென் றுமேற்
றெம்பத விலக்கிய முரைப்பாம்.

(இ - ள்.) மிகுமரப்பன்மை - அநேக மரக்கூட்டங்களை, தண்டலே யெனல்போல்-வனமென்பதுபோல, மிகுமுயிரெலாமும் - திரண்ட சீவர்களியாவையும், நானெனும் - நானென்கிற, ஓர் தகுமபிமானம் - ஒரு தகுதியான வபிமானமே, இறைசமட்டியதாம்-ஈசனது சமஷ்டிரூபமாம், தனித்தனி - வேறுவேருக, மரப்பெயர்கொளல்போல் - விருட்சங்கள் நாமங்களைக்கொள்வதுபோல, பகுமுடேறும் - பகுக்காநின்ற தேகங்கடோறும், வேறுவேருக - பலபலவாக, படும் - சொல்லப்படுகின்ற, அபிமானம்-அபிமானத்தை, ஓர்ந்துரைப்பின் - விசாரித்துச்சொல்லின், தொகுமுயிர் - தொகுத்துக்கூறிய சீவர்களின், வியட்டியுருவமென்றும் - வியஷ்டிரூபமென்று சொல்லப்படும், மேற்றெம்பதம் - இனித்தொம்பதத்தின், இலக்கியம் - இலக்கியார்த்தத்தை, உரைப்பாம் - கூறுவாம், எ - று.

சீவர்களனைத்தினுள்ளும் இருப்பவன் ஈசுரனெனவும், தனித்தனியே யிருப்பவன் சீவனெனவும் இவையே சமஷ்டி வியஷ்டி பேதமெனவுங் கொள்க.

வினு:—இங்ஙனமாயின் மிகவும் பேதமாய்விடுமே?

விடை:—"யானுந் தானுந் தனிப்போய்" என்றே கவிப்படிசால(மரத்)தைத் தவிரச் சோலையுஞ் சோலையைத்தவிரச் சாலமு மெங்ஙனமின்றே அங்ஙனமே ஜீவனைத்தவிர வீசனும் ஈசனைத்தவிரச் சீவனுமின்மையிற் பேதம்போலத் தோற்றுவதன்றிச் சுபாவமாயஃதின்றெனக.

(தா - ம்.) ஒருமை பன்மையே ஜீவேசுரபேதமென்பதாம். (ருக)

அ - கை.

"அருவிராட் புருடன்" என்றகவிமுதல் இதுகாறுந்தற்பதவாச்சியார்த்தம் விளங்கக்கூறி யிச்செய்யுளில் தொம்பதவிலக்கியார்த்தமான கூடஸ்தனது தசவித பரியாய நாமங்களை யுணர்த்துகின்றார்.

சீவனென் றிடுமு வகையதிட் டான
சேதன னந்தரி யாமி

---

* வனத்தைப்போலாவது தடாகத்தைப் போலாவது ஆத்தன்மைமுதலிய ஜாதியைப்போலாவது தனது முழுவுடலைப்போலாவது அநேக பதார்த்தங்களில் ஒரு புத்திக்கு விஷயமாதல் எதுவோ அது சமட்டியெனப்படும்.

‡ ஒவ்வொரு விருட்சத்தைப்போலாவது ஒவ்வொரு நீர்த்துளியைப் போலாவது ஒவ்வொருவியக்தியை (ஜாதியுடையதை)ப்போலாவது தனது தேகத்திலுள்ள கிருமி முதலியவற்றின் ஒவ்வொரு தேகத்தைப்போலாவது அநேக புத்திக்கு விஷயமாதல் எதுவோ அது வியட்டியெனப்படும்.

யாவலி னனுசந் தாத்திரு சுயஞ்சத்
தார்த்தனே டவிச்சின்ன சீவன்
ருவரும் பார மார்த்திகன் றுரியன்
சான்றினன் பிரத்தியகான் மாவா
மேவமி றொம்ப தத்திலக் கியார்த்த
னென்பகூ டத்தனு மங்கள்.

(இ - ள்.) சிவனென்றிடும் - சீவனுக்குப் பொருந்தாநின்ற, மூவகை விசுவாதி மூன்றனுக்கும், அதிட்டானசேதனன் - அதிஷ்டான சைதன் னியனும், அந்தரியாமி - அந்தரியாமியும், ஆவலில். இச்சாசத்தியின்றிய, அனுசந்தாத்திரு - அனுசந்தாத்திருவும், சுயஞ்சத்தார்த்தனெடு - சுயஞ்சத் தார்த்தனும், அவிச்சின்னசிவன் - அவிச்சின்னசிவனும், தாவரும் - ஒன் றுற்பற்றுதற்கரிய, பாரமார்த்திகன் - பாரமார்த்திகனும், துரியன் - துரிய னும், சான்றினன் - சாட்சிகனும், பிரத்தியகான்மா - பிரத்தியகான்மாவும், ஏவமில் - குற்றமற்ற, தொம்பதத்திலக்கியார்த்தன் - தொம்பதலட்சியார்த் தனும், என்ப - என்று சொல்லப்படுவன, கூடத்தனுமங்கள் - கூடத்த னது பரியாயநாமங்களாம், எ - று.

(ப - ம்.) வியாவகாரிகனுதிய சீவத்திரய முதலியவைகட்கு ஆதாரமா யிருத்தலின் 'சீவனென்றிடு மூவகை யதிட்டான சேதனன்' எனவும், அகத்தி னிறைந்திருத்தலின் 'அந்தரியாமி' எனவும், அவாவின்றியாவினும் அனுசந்தித்திருத்தலின் 'ஆவலினனுசந்தாத்திரு' எனவும், தானே யுண் மைப்பொருளாயிருத்தலின் 'சுயஞ்சத்தார்த்தன்' எனவும், கடாகாசம்போ லத் தேகத்தினுல் வரைபட்டிருத்தலின் 'அவிச்சின்னசீவன்' எனவும், ஒன் றிலும் பற்றின்றி யதார்த்தனுயிருத்தலின் 'தாவரும் பாரமார்த்திகன்' என வும், தானே சித்தாய்விளங்கலின் 'துரியன்' எனவும், யாவிற்குஞ் சாட்சியா யிருத்தலின் 'சான்றினன்' எனவும், தேகாதிகட்கு விலட்சணமாயிருத்த லின் 'பிரத்தியகான்மா' எனவும், நீயென்னும்பதத்தி னிச்சயப்பொருளா யிருத்தலின் 'தொம்பத விலக்கியார்த்தன்' எனவுங் கூறினர்.

(நா - ம்.) தொம்பதலட்சியார்த்தமான கூடஸ்தனது பரியாயநாமங் களின் இலக்கண முணர்த்தியதாம். (கூஉ)

அ - கை.

இச்செய்யுளில் தற்பத விலக்கியார்த்தமான பிரமத்தின் சடுவிதபரி யாய நாமங்க ளுணர்த்துகின்முர்.

ஈசனென் றிடுமூ வகை * யதிட் டான
னியம்பரு மொருபரப் பிரமம்
பாசமில் பரதத் துவம்பர மான்மாப்
படியிலா விசுத்தசித் தன்றிப்

* விவர்த்த வடிவகாரியத்தின் காரணம் அதிஷ்டான மெனப்படும்.

பேசுதற் பதலக் கியார்த்தனென் பனமுற்
பெறும்பரி யாயநா மங்க
டேசுறு பிரமந் தனக்கென வுரைப்பர்
திருந்துநூ றெரிதரும் புலவர்.

(இ - ள்.) ஈசனென்றிடும் - ஈசனுக்குப் பொருந்தாநின்ற, மூவகை - விராட்டாதி மூன்றிற்கும், அதிட்டானன்-அதிஷ்டானனும், இயம்பரும் - வசனித்தற்கரிய, ஒரு பரப்பிரமம்-ஒப்பற்ற பரப்பிரமமும், பாசமில் - பாசாதீதமான, பரதத்துவம் - பரதத்துவமும், பரமாத்மா - பரமாத்மாவும், படியிலா - குணங்களொன்றினுந் தோயாத, விசுத்தசித்து பரிசுத்தமானசித்தும், அன்றி - இவையன்றியும், பேசு - வேதமுடிவினுதலிய, தற்பதவிலக்கியார்த்தன் - தற்பத லட்சியார்த்தனும், என்பனமுன் - என்பனமுதலிய, பெறும் பரியாயநாமங்கள் - பெற்றிருக்கும்பரியாய நாமங்கள், தேசுறுபிரமந்தனக்கென - சுயம்பிரகாசமான பிரமத்திற்கேயென, திருந்து - திருத்தமான, நூல் - வேதாந்த சாத்திரங்களை, தெரிதரும் - ஆராய்ந்தறிந்த, புலவர் - அறிஞர்கள், உரைப்பர் - சொல்லுவார்கள், எ - று. 'முன்' என்றமையின் சர்வாதிஷ்டாத்திரு முதலியவுங் கொள்க.

(ப - ம்.) விராட்டாதி யபிமானித் திரயங்களுக்கு முதன்மையான ஈசனுக் காதாரமாயிருத்தலின் 'ஈசனென்றிடு மூவகையதிட்டானன்' எனவும், அவாங்மனோகோசரமான வொப்பற்றபிரமமாதலின் 'இயம்பருமொரு பரப்பிரமம்' எனவும், மாயாதீதமான வஸ்துவாதலின் 'பாசமில் பரதத்துவம்' எனவும், மாட்சிமையான வான்மாவாதலின் 'பரமான்மா' எனவும் தாரதம்மியமின்றிப் பரிசுத்தமான சித்தாதலின் 'படியிலாவிசுத்தசித்து' எனவும், அதுவென்னும் பதத்தினிச்சயப் பொருளாய் விளங்கலின் 'தற்பதவிலக்கியார்த்தன்' எனவுங் கூறினர்.

(நா - ம்.) இப்பரியாய நாமங்களோடும் விளங்கிய தற்பதவிலக்கியார்த்தமான பிரமத்தின் சுபாவவிலக்கணங்களை யுணர்த்தியதாம். (ருரு)

அ - கை.

இச்செய்யுளில் முன்கூடஸ்தப் பிரமமென்னும் துவிதநீக்கி யத்துவிதமான சுத்தப் பிரமஸ்வரூபத்தின் இலக்கண முணர்த்துகின்றார்.

வடிவொடு பெயராற் குடமுத லாக
மண்பல வகைப்படு மதுபோற்
சுடுபசும் பொன்னே செய்கையாற் பலவாஞ்
சுடரிழை யுருவுகொள் வதுபோற்
படியறுஞ் சித்தே முன்சொல்சீ வாதி
பலவுமா மெனமுத லாக
விடலரு மறிஞர் நூல்பல திருக்கு
விவேகமென் றியம்புறு மன்றே.

(இ - ள்.) மண் - மிருத்திகை யொன்றே, வடிவொடு - உருவத்துடன், பெயரால் - நாமத்தினுல், குடமுதலாக - கடமாதியாக, பலவகைப்படும் - பலபேதங்களை யடையும், அதுபோல் - அதுபோலவும், சுடும் - புடம்வைத்த, பசும்பொன்னே - பசிய பொன்னொன்றே, செய்கையால் - தொழில்களால், பலவாம் - நானுவாகிய, சுடரிழை - விளங்காநின்ற வாபரண, உருவுகொள்வதுபோல் - ரூபமாவதுபோலவும், படியறுஞ்சித்தே - குணுதீதமாகிய பிரமமே, முன்சொல் - முற்கூறிய, சிவாதி - ஜீவேசுரசகத்தாதிய, பலவுமாமென - நானுவிதமாமென்று, விடலரும் - நீங்குதற்கரிய, அறிஞர் - சத்துக்களியற்றிய, முதலாக-ஆதியாகவுள்ள, நூல்பல - பலசாத்திரங்களும், திருக்குவிவேகமென் றியம்புறும் - திருக்கு விவேகமென்று சொல்லாநிற்கும், எ - று. அன்று, ஏ - அசை. திருக்குவிவேகமென்றென்பது இடைப்பிறவரல்.

(தா - ம்.) மண்ணே கடகலசாதிகளாகவும், கனகமே கடகமகுடாதிகளாகவுந் தோற்றுவதுபோல அத்துவிதப்பிரமமே முற்கூறிய ஜீவேசுரசகத்தைப்போலத் தோற்றல் மாத்திரமாய் விளங்குமென்பதாம். (௫௪)

திருக்குவிவேக முற்றிற்று.

# திரிஸ்ய விவேகம்.

அ - கை.

முன் றிருக்குவிவேகத்தில் திருக்குத் திரிஸ்யமென்னு மிரண்டிற்கும் அதீதமாகிய அத்துவிதப் பிரமமே மெய்ப்பொருளெனத் தெரிவித்து அதன் தற்பிரகாசமே கூடஸ்தப் பிரமமெனவும், புறப்பிரகாசமே சிவேசுரரென வும், இவைகள் சுத்தப் பிரமாம்சமானபடியால் திருக்குவெனக் கூறி, இவற் றிற் காணப்பட்ட மாயா காரியங்களான தனுவாதிக ளனைத்தும் பொய்ப் பொருளெனக் கண்டு இவற்றை நீக்குநிமித்தந் திரிஸ்யவிவேகங் கூறுவான் றொடங்கி இச்செய்யுளில் அப்பிரமத்தினின்று மித்திரிஸ்யங்கடோன்றற் கேதுவான மாயாசத்தியின் இலக்கண முணர்த்துகின்றார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இந்துவினை * யநாதியடைந் ததைமுழுது மறையாம லிந்து தன்னா, லந்திறனை யொளிர்வித்துக் கொள்களங்க மெனவெனையா னறியே னென்னு, முந்துலக விவகாரந் தனிலுயிரை யடைந்த தனை மூடா தென்று, மந்தவுயி ராலறியப் பட்டுமனற் றம்பிக்கு மந்தி ரம்போல்.

(இ - ள்.) அநாதி - அநாதியாக, இந்துவினை - சந்திரனை, அடைந்து - சேர்ந்து, அதை - அச்சந்திரனை, முழுதுமறையாமல் - முற்றுமறையாது, இந்துதன்னால் - அச்சந்திரனால், அந்திறனை - தனதழகியதன்மையை, ஒளிர் வித்துக்கொள் - பிரகாசிப்பித்துக் கொள்ளுகின்ற, களங்கமென - களங்கத் தைப்போல, எனை - எனது ஸ்வரூபத்தை, யானறியேனென்னும் - யான றியேனென்கின்ற, முந்து - தொன்றுதொட்டு வந்த, உலகவிவகாரந்த னில் - சகத் விவகாரத்தினால், உயிரை யடைந்து - ஆத்மாவைச் சேர்ந்து, அதனை - அவ்வாத்மாவை, மூடாது - முற்று மறையாமல், என்றும் - எப் பொழுதும், அந்தவுயிரால் - அவ்வாத்மாவினால், அறியப்பட்டும் - விளங்கப் பெற்றும், அனற்றம்பிக்கும் - அக்கினியைத் தம்பிக்கிற, மந்திரம்போல் - மந்திர சத்தியைப்போல, எ - று.

உயிரென்றது பிரத்தியகாத்மாவை. எனவே பிரமமாயிற்று. பிரமத் திற்குச் சந்திரனையும் அனலையும், மாயைக்குக் களங்கத்தையும் மந்திரத் தையு முவமித்தவாறும். (ருரு)

இதுவும் அது.

விளங்குறுமான் மாவுருவு மல்லாம லான்மாவின் வேறாத் தோன்றா, துளங்கொள்வியோ மாதிகா ரியங்கடமைத் தோன்

---

* உற்பத்தியில்லாதது அநாதி யெனப்படும்.

றுவா றொடுக்கி நின்று, துளங்கலக டிதகடனா சாமர்த்தி யாகி யுமே தோன்றா நின்ற, வளங்கடரு காரணமா மதுவாகுந் திரிசி யமா மாயா சத்தி.

(இ - ள்.) விளங்குறும் - விளங்காநின்ற, ஆன்மா - ஆத்மாவினது, உருவுமல்லாமல் - வடிவமுமல்லாமல், ஆன்மாவின் - ஆத்மாவிற்கு, வேறாத் தோன்றாது - வேறாகவுந் தோன்றாமல், ஒடுக்கிநின்று - மறைத்து நின்று, உளங்கொள் - சங்கற்ப ரூபமான, விபோமாதிகாரியங்கடமை - ஆகாயாதி காரியங்களை, தோன்றா - தோற்றுவிக்கின்றவளாயும், துளங்கல் - விளக்கமாய, அகடிதகடனா - செய்பாதகாரியத்தைச் செய்விக்கும், சாமர்த்தியாகியும் - சாமர்த்திய முடையவளாயும், தோன்றாநின்று - தோன்றிநின்று, அவளங்கடரு - சகல அனர்த்தங்களையுங் கொடுப்பதற்கு, காரணமாம் - காரணமுமா யிருக்கின்ற தெதுவோ, அது - அதுவே, ஆகுந்திரிசியமா மாயாசத்தி - திரிஸ்யரூபமான மாயாசத்தியாம், எ - று. ஏ - ஆல் - அசை. அவலங்களென்பது அவளங்களென வெதுகை நோக்கி வந்தது, சத்தியென்றது சத்தனது தொழிலின் வன்மையை.

மந்திரசத்தி அக்கினியி னுஷ்ணமுழுதும் ஸ்தம்பனஞ் செய்யின் அக்கினி யோராதாரத்தைப்பற்றிப் பிரகாசிப்பது கூடாது; அங்ஙனமின்றிப் பிரகாசித்தலின், அச்சத்தியை யுடைய மாந்திரிகனுக்குமாத்திரங் கற்பனையாகக் கிஞ்சித்துத்தோன்றினதேயன்றி வேறின்று. அக்கினியோ சுபாவமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அதுபோல மாயாசத்தி பிரம சுபாவமான சிற்சத்தியை முழுதுமறைக்கின் பிரமஞானம் பிரகாசிப்பது கூடாது; அங்ஙனமின்றிச் சொரூபமுதல் ஸ்தம்பமீறானயாவி னிடத்தும் பூரணமாய்ப் பிரகாசித்தலின், அம்மாயாசத்தியை யுடையவனுக்கே கிஞ்சித்துக் கற்பிதமாய் மறைந்ததுபோலத் தோன்றினதேயன்றி வேறின்றாம். ஆகவே, பிரமம் சுபாவமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்குமெனக்கொள்க.

(ப - ம்.) பூச்சாயையானது சொப்பிரகாசமாய் விளங்குஞ் சந்திரனிடத்திற் றோற்றி யதனை மறையாமற் றான் விளங்குவதுபோலப் பிரமப்பிரகாசத்திற் சங்கற்ப ரூபமான மாயையானது அதனை மறையாமல் அதனிடமாய் விளங்கிக்கொண் டிருக்குமென்பார் 'இந்துவினை யநாதியடைந் ததை முழுது மறையாமலிந்துதன்னா, லந்திறனை யொளிர்வித்துக் கொள்களங்கம்' எனவும், கண்ணைப்போல அனைத்தையும் அறிகின்ற சித்தாகியதன்னைத் தானெனவறியாததே யறியாமையென்பார் 'ஏனையான றியேனென்னு முந்துலக விவகாரம்' எனவும், அவ்வறியாமை யறிவினிடத்திருந்து அதனை மறையாமல் அதனாற் றான் விளங்குகின்றதென்பார் 'உயிரையடைந்ததனை மூடாதென்று மந்தவுயிரா லறியப்பட்டு' எனவும், அக்கினியினது உஷ்ணத்தை மந்திரசத்தியினால் அதனுளடக்குவதுபோலப் பிரமசுபாவமான சிற்சத்தியை யதனுளடக்கிற் றென்பார் 'அனற்றம்பிக்கு மந்திரம்போல்' எனவும், அம்மாயை பிரமமாகவும் அதற்கு வேறாகவு மிராதென்பார் 'விளங்குறு

மான்மா வுருவுமல்லாம லான்மாவின் வேறுத் தோன்றாது' எனவும், பிரமத்திற் கெதிரிட்ட சங்கற்பமாகிய கண்ணாடியில் இயல்பாய்த் தோற்றுகின்ற பிரமச்சாயை கண்ணாடியா லுண்டாகித் தோற்றுகின்றதென்றதுபோல மாயையாற் சகலமுந் தோற்றுகின்றதென்பார் 'உளங்கொள்வியோ மாதி கா ரியங்கடமைத் தோன்றா' எனவும், இங்ஙனங் கூடாதகாரியங்களைக் கூட்டுவிப்பதாசக் காட்டும் வல்லபமுடையதென்பார் 'அசடித கடனுசாமர்த்தி' எனவும், சர்வானர்த்தங்களுக்குங் காரணமென்பார் 'அவளங்கடரு காரணமாம்' எனவும், இவ்வல்லபமுள்ளதே மாயாசத்தியென்பார் 'அதுவே திரிசியமா மாயாசத்தி' எனவுங் கூறினார்.

வினா:—அதிரிஸ்யமான மாயாசத்தியைத் திரிஸ்யமென்றதென்னை ?

விடை:—வித்துவானின் சத்தி அவன் வித்தைசெய்யுங் காரியத்திற் றெரிவதுபோல் பிரமத்தின் மாயாசத்தியைப் பிரபஞ்சரூபத்திற் காட்டு நிமித்தம் 'திரிசியமா மாயாசத்தி' என்றாரென்க. இன்னும் பூச்சாயா களங்கமானது கலாநிதியினிடத்தி லிருத்தல்போலத்தோற்றி யதனை மறையாமல் அதனுற் றான் விளங்குவதுபோல அதீதப்பிரமஸ்புரணம் அவ்வதீதமாகவே விளங்க அதை யறியேனென்றவறிவி னறியாமை யவ்வறிவு மாகாம லதற்கு வேறுமாகாம லவ்வறிவினிடத் திருப்பதுபோலத்தோற்றி யவ்வறிவை மறையாம லதனுற் றான் விளங்குவதன்றியுந் தான் வெளிப்படாது தனக்காதாரமான திருக்குவின் சத்தியைக்கொண்டு ஆக முதலிய திரிஸ்யங்களென்னும் பொய்ப்பொருள்களை மெய்போலத் தோற்றுவிக்கு மாயாசத்தியொன்றுண்டென்று அவாந்தரமாகச் சுருதி யங்கீகரித்ததென்க.

வினா:—அற்றேல், முன் சுத்தப்பிரமத்திற்குச் சுகதாதிபேத மின்றென்ற சுருதி யிவ்விடத்து இங்ஙன் மங்கீகரித்ததென்னை ?

விடை:—இம்மாயா காரியங்களில் நிற்பவர்கள் அவற்றினின்று நீங்கு நிமித்தம் அவற்றை விசாரித்து அவையென்று மின்றென்பது தோன்றற்கென்க.

வினா:—அங்ஙனமாயின், வேதாந்தி யொருவனிற்க ஏனையோ ரியாவரும் இம்மாயையை நித்தியமெனக் கூறினதென்னை ?

விடை:—இம்மாயையின் யதார்த்தம் வெளிப்படாமையினு லென்க.

வினா:—அற்றேல், இம்மாயையி னுண்மைதா னியாது?

விடை:—தனக்கென வோருருவ மில்லாமையேயாமென்க.

வினா:—அற்றேல், மாயையினுண்மை தெரியாத மதங்கள் அதற் கதீதமான முத்தியின் இலக்கணங் கூறினதென்னை ?

விடை:—மதங்கள் மாயைக்குட்பட்ட பதமுத்தியைக் கூறினதேயன்றி யதற் கதீதமான பரமுத்தியைக் கூறினதன்றென்க.

வினா:—அற்றேல், மதங்கள் அற்பப் பிரயோசனமான பதமுத்திகளை முக்கியமாகக் கூறுதற்கு வேதஞ் சம்மதித்ததென்னை ?

விடை:—யாதுமின்றிய ஆதுலர்க் (யாசகர்க்) கியாதேனு முள்ளவன் ஆங்கவானென்பது இலவுகிக சம்மதமாதல்போலச் சுகமென்ப தொன்று மின்றிய பேதைகட்குக் கிஞ்சித் சுகத்தைக்கொடுக்கும் பதமுத்திகளைக் கூறுதலும், சக்கிரவர்த்திச் செல்வமுள்ள பெருமன்னனுக்கோர்தேசாதிபதியான குறுமன்னன் தாரித்திரனென்பதுபோலப் பரமுத்தியான மோக்ஷ சாம்பிராச்சியம்பெற்ற மகதைஸ்வரியவானுக்கு இப்பத முத்திபெற்ற சொற்பவைஸ்வரியவான் தாரித்திரனெனக் கூறுதலும் வேதசம்மதமேயாமென்க.

(தா - ம்.) அக்கினியானது பிரகாசத்தோடு கூடியிருக்க அதன்குணமான உஷ்ணத்தைத் தன்வசமாக்கிக்கொள்ளும் மந்திர சத்தியைப்போலப் பிரமமும் தனதருளோடும் பிரகாசித்திருக்க அதனுல்லாசமான சித்துவிலாசத்தைத் தன்வசமாக்கிக்கொண் டிருத்தலும், பிரமத்தைத் தவிரத் தானொரு பொருளுந் தனக்கோர் சுதந்தரமுமின்றி யதன் பிரதிபலனச் சாயையாகிய சீவேசுரசகத்திற்குக் காரணமா யிருத்தலு மான மாயாசத்தியினியல்பை விளங்கக் கூறினதாம். (ருசு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பிரமத்திற்குச் சத்தாதி யைந்து தன்மையுள்ளதாகத் தோற்றுவதுபோல அதனுபாசமான விம்மாயாசத்திக்கு அசத்தாதி யைந்துதன்மையு முள்ளதென்பது தோன்ற அவ்வைந்த னிலக்கண முணர்த்துகின்றார்.

அனையதொரு மாயையிலக் கணமசத்துச் சடந்துக்க மநித்தங் கண்ட, மெனுமிவையுண் முயற்கோடு முதலசத்துச் சடவுருக்கல் லெழுவாய் புத்தி, தனையடையுங் கோரமொடு மூடவிருத்திகடுக்கந் தபுமெய் யாதி, முனமுரைசெய் யநித்தங்கண் டங்கால பரிச்சேத முதல வாகும்.

(இ - ள்.) அனையது - அத்தன்மையதான், ஒருமாயை-ஒரு மாயையினது, இலக்கணம் - இலக்கணமானது, அசத்து - அசத்தும், சடம் - சடமும், துக்கம் - துக்கமும், அநித்தம் - அநித்தமும், கண்டமெனும் - கண்டமுமென்கின்ற, இவையுள் - இவ்வைந்தனுள், முயற்கோடுமுதல் - * சசவிஷாணாதியன, அசத்து - அசத்துரூபமும், கல்லெழுவாய் - மலை முதலியன, சடவுரு - சடரூபமும், புத்திதனையடையும் - புத்தியிலமைந்திருக்கின்ற, கோரமொடு - கோரவிருத்தியும், மூடவிருத்திகள் - மூடவிருத்தியுமானவை, துக்கம் - துக்கரூபமும், தபு - தோற்றி யழிகின்ற, மெய்யாதி - தேகாதியன, முனமுரைசெய் - முற்கூறிய, அநித்தம் - அநித்தரூபமும், காலபரிச்சேதமுதல - காலபரிச்சேதாதியன, கண்டம் - கண்டரூபமும், ஆகும் - ஆம், எ - று.

இத்திரிஸ்யம் உண்மையாய்ப் பார்க்குமிடத்து இல்லாமையால் அசத்தும், தனக்கெனவோ ரறிவின்மையிற் சடமும், இன்பம்போலத் தோற்றி

* சசவிஷாணம் - முயற்கொம்பு.

யழிதலின் துக்கமும், இருப்பதுபோலத் தோற்றி யழிதலின் அசித்தமும், பின்னமயமா யிருத்தலிற் கண்டமுமாமென்க.

வினா:—இவ்வைந்து தன்மையு மாயைக்கேயாயின், அதன் காரியமான சகத்திற்கெப்படி?

விடை:—காரணத்அநந்நியம் காரியமென்ற நியாயத்தாற் காரணத்தி லுள்ளது காரியத்திற்கு முண்டெனக்கொள்க.

(நா-ம்.) இம்மாயை யநாதியே * மித்தையென்பது தோன்ற வசத்தாதியைந்தின் இலக்கண முணர்த்தியதாம். (௬எ)

அ - கை.

இச்செய்யுளில் மாயைக்குள்ள வொன்பது தன்மையையு மூன்று ஞானமு முணர்த்துகின்றார்.

பின்னமோ டசத்துச்சா வயமுமெதிர் மறையுமவை பிரிந்து தம்மின்,மன்னியவு மொழிந்தநிர்வாச் சியமாகு நவவிதமம் மாயை யெய்து, முன்னலருஞ் சுருதிசம் பந்தமுத்தி சம்பந்த முலோக பந்த, மென்னவரு ஞானங்கண் முறையேயம் மாயைபடு மியல்பு கூறின்.

(இ - ள்.) பின்னமோடு - பின்னமும், அசத்து - அசத்தும், சாவயமும் - சாவயவமும், எதிர்மறையும் - இவைகட் கெதிர்மறையான அபின்னமும் சத்தும் நிரவயவமும், அவை - அர்மூன்றும், பிரிந்து - எதிர்மறையாகப்பிரிந்து, தம்மின்மன்னியவும் - தம்மினத்தோ டினஞ்சேர்ந்த பின்னபின்னமும் சத்தசத்தும் சாவயவநிரவயவமுமாய், மொழிந்த - சொல்லிய, நவவிதம்-இவ்வொன்பது பிரகாரத்தையும், அநிர்வாச்சியமாகும்-இன்னதென்று வசனித்தற்கரியதாகும், அம்மாயை-அம்மாயையானது, எய்தும் - அடையும், உன்னலரும்-நினைத்தற்கரிய, சுருதிசம்பந்தம்-சுருதி சம்பந்தமும், உத்திசம்பந்தம் - யுத்தி சம்பந்தமும், உலோகபந்தம் - சகத் சம்பந்தமும், என்ன - என்னும்படி, வருஞானங்கள் - வராநின்ற ஞானத்திரயங்கள், முறையே - கிரமமாக, அம்மாயைபடும் - அம்மாயைக்குண்டாகும், இயல்பு கூறின் - தன்மையைச் சொல்லுமிடத்து, எ - று.

சாவயவமென்பது, சாவயமெனவும் சம்பந்தமென்பது பந்தமெனவும் செய்யுள் விகாரத்தால் வந்தன. ஞானங்களென்ற பன்மையால் சுருதியாதி மூன்றற்குந் தனித்தனி ஞானமென்பதைக் கூட்டி யுரைத்துக்கொள்க.

(ப - ம்.) பிரமவிசாரத்தின்கண் ஆத்மதரிசன நிமித்தம் அநாத்மாக்களைமியதிகளையும்போது திரிஸ்யமனைத்தும் வேறுபட் டிருத்தலிற் பின்னமும், அது சமாதியினில்லாமையின் அசத்தும், அது முன்னர் அவயவமாகத்

* உள்ளதுபோலத் தோன்றி விசாரணை முகத்துத் தனக்கெனவோர் வடிவமின்றி யொழிவது மித்தையெனப்படும்.

தோற்றலிற் சாவயவமும், சமாதியின்கண்ணின்றெழுந்த தனதறிவிற்கு அத்திரிஸ்யங்கள் தனதுருவாக விளங்கலின் அபின்னமும், அவ்விடத்து அத்திரிஸ்யங்கள் அறிவாய் நிற்றலிற் சத்தும், அங்ஙனமதற் கோருருவமின்மையின் நிரவயவமும், சாதனத்தின்வேறாகவுஞ்சாத்தியத்தினொன்றாகவுமிருத்தலிற் பின்னாபின்னமும், அங்ஙனமே கற்பனையிற் சத்தும் யதார்த்தத்தில் அசத்தாகவுமிருத்தலிற் சதசத்தும், சகசத்தி (இயல்பி)ற் கண்டேகல்லானதுபோலப் பிரமமே யாவுமாக விளங்கலிற் சாவயவ நிரவயவமுமாகிய விவைகளாமென்றும் அல்லவென்றும் வசனிக்கப்படாததலின் இம்மாயையை அநிர்வசனீய நவப்பிரகாரமென்று கூறினர்.

(நா - ம்.) இம்மாயை யசத்தியமாயினுஞ் சத்தியமான பிரமசந்நிதானத்திலுண்டாகுந் தன்மை யிவையெனத் தெரிவித்ததாம். (ருஅ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மாயைக்கு மூன்று ஞானத்தினு லுண்டாகுந் தன்மையையுந் தமமாதிய வைந்து நாமத்தையு முணர்த்துகின்றார்.

விண்ணின்மல ரெனத்துச்ச மேயெனவு மிப்பிவரு வெள்ளி
போல, வெண்ணுமநிர் வாச்சியமா மெனவுமுயிர் போனித்த
மெனவு நிற்கு, முண்ணிலவு தமமாயை மோகமுட னவித்தை
பொய்ம்மை யுருவி யென்றே, நண்ணுமிவை மாயாபஞ் சகமாகு
மெனவறிஞர் நவில்வ ரன்றே.

(இ-ள்.) விண்ணின்மலரென-(மாயை) ஆகாயத்தாமரைபோல, துச்சமெனவும் - அசத்தெனவும், இப்பிவருவெள்ளிபோல - சுத்தியிற்றோன்றும் இரசிதம்போல, எண்ணும் - கருதாநின்ற, அநிர்வாச்சியமாமெனவும் - அநிர்வசனீயமெனவும், உயிர்போல் - ஆன்மாவைப்போல, நித்தமெனவு நிற்கும் - நித்தியமெனவு மிருக்கும், உண்ணிலவு - அகத்தில் விளங்குகின்ற, தமம் - தமசும், மாயை - மாயையும், மோகமுடன் - மோகமும், அவித்தை - அவித்தையும், பொய்ம்மையுருவியென்று - மித்தையா சொரூபியுமென, நண்ணும்-பொருந்தாநின்ற, இவை - இவற்றை, மாயாபஞ்சகமாகுமென - மாயாபஞ்சகமாமென்று, அறிஞர் - அறிவுடையோர், நவில்வர் - சொல்லுவார்கள், எ - று. அன்று-ஏ-அசை.

பொய்ம்மையுருவி யென்பதை வடநூலார் அநிர்தாத்மிகையெனக் கூறுவர்.

(ப - ம்.) மாயை சுருதிசம்பந்தமாய் விசாரிக்கின் ஆகாயத்தாமரைபோல என்றுமில்லா திருத்தலின் 'துச்சம்' எனவும், யுத்தி சம்பந்தமாய் விசாரிக்கிற் சுத்திகாரசிதம்போல மித்தையா யிருத்தலின் 'அனிர்வாச்சியம்' எனவும், உலகசம்பந்தமாய் விசாரிக்கின் ஆத்மாவைப்போல வுள்ளதாகத் தோற்றலின் 'நித்தம்' எனவுங் கூறினர்.

(நா - ம்.) இங்ஙனங் கூறிய வேதுக்களால் மாயைக்கு இம்மூன்று தன்மையுமுள வென்பதாம். (ருகூ)

அ - கை.

இச்செய்யுளில் முன் தொகுத்துக் கூறிய மாயாபஞ்சக விலக்கணங் களை வகுத்துணர்த்துகின்றார்.

சீவசே தனமறைத்துத் தமமயலா கியவுலகத் திறத்திற் கெல்லா, மேவுகா ரணமாகி மாயைவிப ரிதஞானம் விளைத்து. மோக, மோவவுணர் வழித்தவித்தை சத்தின்வே ருகிப்பொய் யுருவி யாகும், வீவிலா மாயையிதற் கிருதருமஞ் சங்கோச விகாச மென்றும்.

(இ - ள்.) சீவசேதனம் - ஆத்மஞானத்தை, மறைத்து - மறைத்து நிற்றலின், தமம் - தமசெனவும், அயலாகிய - தனக்கிதரமான, உலகத் திறத்திற்கெல்லாம் சகத்தன்மை யனைத்திற்கும், மேவுகாரணமாகி - பொருந்தாநின்ற காரணமாதலின், மாயை - மாயையெனவும், விபரிதஞானம் விளைத்து - ஒன்றையொன்று யறியும் ஞானத்தை யுண்டாக்குதலின், மோகம் - மோகமெனவும், ஓவவுணர்வு-நீங்காதவித்தையினுல், அழித்து - கெடுவதனுல், அவித்தை - அவித்தையெனவும், சத்தின் வேருகி-சத்துக்கு வேருயிருத்தலின், பொய்யுருவியாகும் - மித்தையா ரூபியெனவு மிருக் கின்ற, வீவிலா - நீக்கமில்லாத, மாயையிதற்கு - இம்மாயைக்கு, இருதரு மம் - இரண்டு தருமங்களுண்டு, (அவை) சங்கோசம் விகாசமென்றும் - சங்கோச விகாச மென்றுகும், எ - று.

சங்கோசம்-குவிதல், விகாசம் - விரிதல். அசத்து, பொய்யுருவி, துச்ச மென்பன வொருபொருட்கிளவி. ஒவ்வொன்றிலும் கிஞ்சித்துத்தாரதம்மிய மிருத்தலின் அது தோன்ற வாங்காங்குக் கூறினர்.

(ப - ம்.) இம்மாயை யிரவியை ஏகதேசமா யெழிலி (மேகம்) மறைத்ததுபோல் ஆத்ம ஞானத்தை யேகதேசமாய் மறைத்ததுபோலத் தோற் றுவிக்கும் அந்தகாரமாதலின் 'தமம்' எனவும், தன்னை மறந்தவிடத்து இப் பிரபஞ்சமாகத் தோற்றுவித்தற் கேதுவாகலின் 'மாயை' எனவும், குற் றியை மகனென்றதுபோலச் சிவத்தைச் சகமாகத் தோற்றுவித்தலின் 'மோகம்' எனவும், தன்னை யுள்ளவாறறியும் ஞானத்தினுல் தனக்கென வடிவமொன்றின்றியழிதலின் 'அவித்தை' எனவும், இங்ஙனமாய வுருவந் தனக்கிருத்தலிற் 'பொய்யுருவி' எனவுங் கூறினர்.

வினு.—'இந்துவினை' என்ற கவியில் ஆத்மாவை மறையாதென்ற மாயை யிங்ஙன மறைத்ததென்ற தென்னை?

விடை.—சந்திரனுருவம் களங்கத்தின் அளவெவ்வளவோ அவ்வளவு மறைபட்டதாகத் தோற்றல்போன்று ஆத்மஞான வியாபகத்தில் ஏகதேச

மான மாயை யெவ்வளவோ அவ்வளவு மறைபட்டதுபோன்று தோற்றின தேயன்றி வேறின்றெனக.

(நா - ம்.) மாயையின் செய்தியைக் குறித்துவந்தது இம்மாயாபஞ் சக மென்பதாம். (சு0)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிப தருமங்களி னிலக்கணமும் மேலிரண்டு குணங்களி னுமமு முணர்த்துகின்றார்.

விரிந்துபட மோவியங்கள் பலதிகழ்த்திக் குவிந்தொடுக்கும் விதமே போல, வரந்தைதரு மாயையுந்தன் விகாசதரு மத்தினு லகிலங் காட்டிப், பரந்தவைகள் சங்கோச தருமத்தா லடக்கு மெனப் பகர்வர் மாயைக், கிருந்தகுண மிரண்டுளவில் சுதந்திர முஞ் சுதந்திரமு மென்ன வன்றே.

(இ - ள்.) விரிந்துபட்டம் - சித்திரப்படமானது விரிந்தவிடத்து, ஓவி யங்கள்பல - நானாவிதமான சித்திரங்களை, திகழ்த்தி - விளங்கக்காண் பித்து, குவிந்து - குவிந்தவிடத்து, ஒடுக்கும் - சித்திரங்களை யடக்கிக்கொள் ளும், விதம்போல - வகையைப்போல, அரந்தைதரும் - துன்பத்தைக்கொ டுக்கின்ற, மாயையும் - மாயையும், தன் விகாசதருமத்தினுல் - தனது விரி ந்ததொழிலினுல், அகிலங்காட்டி - சகத்தைக்காண்பித்து, பரந்தவைகள் - விரிந்த வச்சகங்களை, சங்கோசதருமத்தால் - சுருங்குங் கிரியையினுல், அடக்குமென - ஒடுக்கிக்கொள்ளுமென்று, பகர்வர் - அறிஞருரைப்பார்கள், மாயைக்கு - பின்னும் அந்தமாயைக்கு, இருந்தகுணம் - உண்டானகுணங் கள், இல்சுதந்திரமும் - சுதந்திரமின்மையும், சுதந்திரமுமென்ன - சுதந்திர முமென, இரண்டுள - இரண்டுள்ளனவாம், எ - று, அன்று - ஏ - அசை.

யதார்த்தமான படத்தில் வன்னங்களாற் கற்பிதமாயமைத்த சித்திரங் களை விகசிதமாய் விளங்கல்போலச் சுயஞ்சித்திற் கற்பிக்கப்பட்ட சராசரங் களை விகசித்தலின் ஈண்டு மாயைக்கு இச்சித்திரப்படத்தை யுவமித்தா ரென்க.

(நா - ம்.) இச்சகமாகிய காரியம் தோற்றற்கு மாயை யொருசார்பு காரணமாயிருத்தலின் அதன் விரிவொடுக்கமே சகத்தினுதிப்பு மொடுக்கமு மா மென்பதாம். (சுக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய குணங்க ளிரண்டி னிலக்கண முணர் த்துகின்றார்.

பொய்யாகிச் சத்துருவப் பொருளின்வே றுகியொரு பொரு ளாய்த் தோற்றல், செய்யாமை யாவுளதில் சுதந்திரஞ்சான் றுய வொரு சேதனன்பா, லுய்யாத சீவாதி யாக்குதலாற் சுதந்திரமு முளது மாயை, மெய்யான தலதென்றல் விசும்பலர்போ லில்லை யென விளம்பலன்றே.

(இ-ள்.) பொய்யாகி-(மாயை) மித்தையாய், சத்துருவப்பொருளின்-சத்தருவமான வஸ்துவுக்கு, வேருகி-அயலாக, ஒருபொருளாய்-தானெரு வஸ்துவாகி, தோற்றல்செய்யாமையால் - தோன்ருமையால், இல்சுதந்திரம் - சுதந்திரமின்மை, உளது - உள்ளதாய், சான்ருய - சாட்சியாகிய, ஒரு சேதனன்பால் - ஒப்பற்ற ஞானுத்மாவை, உய்யாத - சுகமாய்ச் சீவியாத, சீவாதியாக்குதலால் - சீவேசுரசகத்தாகத் தோற்றுவித்தலால், சுதந்திரமுமுளது - சுதந்திரமு முடையதாம், மாயை - இம்மாயையை, மெய்யானதலதென்றல் - மித்தையென்று கூறுதல், விசும்பலர்போல் - ஆகாயத்தாமரைபோல, இல்லையென விளம்பலன்று - இல்பொருளென்று கூறப்படுவதன்ரும், எ - று. ஏ - அசை.

'மாயை மெய்யான தலதென்றல் விசும்பலர்போ லில்லையென விளம்பல்' என்றமையின் மாயை உள்பொருளுக்கும் இல்பொருளுக்கும் வேருய அநிர்வசனீயப்பொருளென்று பெறப்பட்டதென்க.

(நா - ம்.) பிரமத்தைத் தவிரத் தனக்கெனவோர் செயலில்லாமையாற் சுதந்திரமின்மையும் அப்பிரமசத்தையைக்கொண்டு யாவையுங் கற்பித்தலிற் சுதந்திரமும் மாயைக்குண்டென்பதாம். (கூஉ.)

அ - கை.

இச்செய்யுளில் முன்பொய் யென்றத னிலக்கணமுங் குணவிருத்தியின் நாமமு முணர்த்துகின்ருர்.

புலனில்கனுக் கரியாதி போற்ரோன்றி விசாரிக்கிற் பொன்றும் பொய்யா, நிலவுதல்செய் சுத்தசத் துவவடிவ மாயையொடு நிகழ்த்து கின்ற, மலினசத் துவவடிவ வித்தைதமப் பிரதான வடிவ மாகு, நலமில்பிர கிருதியென விருத்திமூன் றுடையதுமுன் னவின்ற மாயை.

(இ - ள்.) புலனில் - இவ்வைம்புலன்களு மின்றிய, கனுக்கரியாதிபோல்-சொப்பனத்திற் காணப்படுகின்ற கசாதிகள்போல, தோன்றி - அம்மாயையானது தோற்றி, விசாரிக்கில் - விசாரிக்குமிடத்தில், பொன்றும் பொய்யாம் - இல்லாதொழியுமித்தையாம், நிலவுதல்செய் - விளங்காநின்ற, சுத்தசத்துவ வடிவம் - சுத்தசத்வகுணரூபமான, மாயையொடு-மாயையும், நிகழ்த்துகின்ற - சொல்லாநின்ற, மலினசத்துவ வடிவு - அசுத்தசத்வகுணரூபமான, அவித்தை - அவித்தையும், நலமில் - நன்மையில்லாத, தமப்பிரதான வடிவமாகும் - தமோகுணமுக்கியரூபமான, பிரகிருதியென -பிரகிருதியுமென, முன்னவின்றமாயை - முற்கூறியமாயையானது, விருத்திமூன்றுடையது - விருத்தித்திரயங்களை யுடையதாம், எ - று.

விருத்தியென்பதைச் சுத்தசத்துவாதி மூன்றிடத்துங் கூட்டுக. எனவே, சுத்தசத்துவ வடிவ மாயாவிருத்தியெனவும், மலினசத்துவவடிவ அவி

த்திபா விருத்தியெனவும், தமப்பிரதானவடிவ விருத்தியெனவுங் கொள்க. மாயையின் சத்துவத்தின் மூன்றும், ரஜசின்மூன்றும் தமசின் மூன்றுமாக விருத்தியொன்பதாய் விரிந்து நிற்குமென்க.

(நா - ம்.) மாயை ககனாரவிந்தம்போலாகாது சொப்பனப் பொருள் போலுள்ளதெனவும் அது மூன்று விருத்தியையுடையதெனவும் உணர்த்தியவாறும். (சுரு)

அ - கை.

முற்கூறிய மாயையின் சத்துவாதிகுணங்களிற் சகசீவபரங்களின் உற்பத்தி கூறுவான்றொடங்கி இச்செய்யுளில் சுத்தசத்துவமாயையில் ஈசன் றோன்றுமியல்புணர்த்துகின்றார்.

மாயைவரு சுழுத்திலயங் களினத்தி யாசயிக்க மாயிற் றுண்மை, யாயபிர மத்தினன வொடுபெடைப்பி னிதுபேத வவத்தை யெய்து, மேயவதிற் பிரமசை தன்யம்விம்பித் திட்டதுவே விளங்கு ஞானத், தூயசைதன் னியவீசன் பதியிறையென் றிடநிற்குந் துணிவு தன்னால்.

(இ - ள்.) மாயை - மாயையானது, வருசுழுத்தி - வராநின்ற சுழுத்தியவத்தையினும்; லயங்களின் - சர்வசங்காரகாலங்களினும், உண்மையாய பிரமத்தின்-சத்தாகிய பிரமத்தில், அத்தியாசயிக்கமாயிற்று-அத்தியாச அயிக்கியமாயிருந்து, நனவொடுபெடைப்பின்-பின்சாக்கிர சிருஷ்டிகளில், இது பேதவவத்தையெய்தும்-இம்மாயைக்கிஞ்சித் பேதாவத்தையடையும், மேயவதில் - பொருந்திய விம்மாயையில், பிரமசைதன்னியம் - பிரமசேதனம், விம்பித்திட்டதுவே - பிரதிபலித்தது தானே, விளங்கும்-விளங்காநின்ற, ஞானம் - சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடைய, தூயசைதன்னியம் - பரிசுத்தசைதன்னியனை, ஈசன் - ஈசனெனவும், பதி - பதியெனவும், இறையென்றிடநிற்கும் - பிரேரகனெனவுமிருக்கும், துணிவு தன்னால் - தெளிவினால், எ - று.

பேதமென்றது பிரமவியாபகத்தில் மாயை கிஞ்சித் வேறுபட்டதுபோலிருத்தலை. இனியுண்டாகு மியாவைக்கு மேலாயிருத்தலின் 'ஈசன்' எனவும், இங்ஙனமுண்டாகின்ற யாவைக்குங் கர்த்தாவாயிருத்தலின் 'பதி' எனவும், அவையனைத்தையும் பிரேரகப்படுத்தலின் 'இறை' எனவுங் கூறினர்.

(நா - ம்.) மாயையானது உண்மையான பிரமத்தில் அத்தியாச ஐக்கியமா யடங்கிக் கிஞ்சித் வெளிப்படும்போது அதற்கே சுத்தசத்துவமாயா விருத்தியெனவும், இந்நிருமலத் துதித்த பிரமப்பிரபலனச்சாயை நிருமலமாய் விளங்கலின் அதுவே சர்வஞ்ஞத்துவாதிகுண விசிஷ்டனை ஈசனெனவுமாம். (சுசு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மலினசத்துவ அவித்தையிற் சீவர்கடோன்று மியல்புணர்த்துகின்றார்.

(வேறு.)

அப்பரற் குபாதி யாகி யமோககா ரணிபா மாயை
பொய்ப்புறு மவித்தை யெண்ணிற் போத்திருப் பசுவென் றோது
மொப்பருஞ் சீவர்க் கெல்லா முபாதியாய் மோகஞ் செய்யு
மெய்ப்புறு பகுதி பாச மெனச்சம குணமாய் நின்று.

(இ - ள்.) மாயை - மாயையானவள், அப்பரற்கு-முற்கூறிய வீசனுக்கு, உபாதியாகி - உபாதியாய், அமோகம் - மோகமின்மையைச் செய்வதற்கு, காரணியாம் - காரணமுடையவளாம், பொய்ப்புறும் - மித்தையான, அவித்தை - அவித்தையானது, எண்ணில் - அளவில்லாத, போத்திரு - போக்தாவென்றும், பசுவென்றோதும் - பசுக்களென்றுஞ் சொல்லப்படும், ஒப்பரும் - இணையின்றிய, சீவர்க்கெல்லாம் - ஜீவர்களனைவருக்கும், உபாதியாய் - உபாதியாகி, மோகஞ்செய்யும் - மயக்கத்தைச்செய்யும், எய்ப்புறு - இளைப்புறுவித்தற்கேதுவான, பகுதி - பிரகிருதியானது, பாசமென - போக்கியாத்மகத்துவத்தினாற் பாசமென்று சொல்லப்பட்டு, சமகுணமாய்நின்று - குணத்திரய சமானவத்தையினின்று, எ - று.

காரணமென்பது காரணியெனச் சுத்தமாயாசத்தியை நோக்கிவந்தது. போத்திரு அனுபவிப்பவன். மலினமான களங்கத்துதித்தலிற் சீவர்களை மயக்குஞ் சத்தி மாயைக்குண்டெனவும், நிர்மலத்துதித்தவனது காரணந் தெரிதலின் ஈசனைமயக்குஞ் சத்தியின் றெனவுங் கொள்க.

(நா - ம்.) மலினசத்துவ அவித்தையினுதித்த சேதனமே கிஞ்சிக்ஞத்துவாதி குணங்களையுடைய ஜீவர்களென்பதாம். (சுரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய தமப்பிரதான ரூபமான பிரகிருதியிற் காலதத்துவந் தோன்று மியல்பை யுணர்த்துகின்றார்.

அவித்தையின் விம்பித் துள்ள வாருயிர் நுகர்ச்சிக் காகத்
துவக்குறு காரியங்க டோற்றிட வெதிர்கு றித்த
வுவப்புறு மீச னோக்க மாத்திரத் துற்ற லர்ந்து
பவப்படு கால மாகி யதுகொடு பரிணா மித்து.

(இ - ள்) அவித்தையின் - முற்கூறிய அவித்தையின்கண், விம்பித்துள்ள-பிரதிபலித்திருக்கிற, ஆருயிர்-நிறைந்த சீவர்களின், நுகர்ச்சிக்காக - போகானுபவ நிமித்தம், துவக்குறு-தொந்தமான, காரியங்கடோற்றிட-தேகாதிகாரியங்களுண்டாகவேண்டி, எதிர்குறித்த - சங்கிதானத்திற் சங்கற்பித்த, உவப்புறு மீசன் - மகிழ்ச்சியுள்ள வீசனது, நோக்கமாத்திரத்து -

வீக்ஷணமாத்திரத்தின், உற்றலர்ந்து - மிகவும் விரிந்து, பவப்படு - உற்பத்திக்கேதுவான, காலமாகி - காலதத்துவமுண்டாய், அதுகொடு - அக்காலத்தைக்கொண்டு, பரிணமித்து - வேறுபட்டு, எ - று.

பிரதிவிம்பித்தலென்பது விம்பித்தலென விகாரப்பட்டு வந்தது. காலமென்றது தமோகுணப்பிரகிருதியை. பரிணமித்தல் - ஒன்று மற்றொன்றாய்த்திரிதல்; அது பால்தயிராதல் போலவாம்.

(தா - ம்.) வித்தியாப்பிரதிபிம்பனான ஈசனது நோக்கத்தினால் அவித்தியாப்பிரதிபிம்பரான சீவர்களின் மயக்கம் நீங்கத்தனுவாதிகளைக் கொடுக்கும் நிமித்தம் காலதத்துவமுண்டாயிற் றென்பதாம். (சுசு)

அ - கை.

இச்செய்யுளில் மகதத்துவத்தி னுற்பத்தியு மதன்குணமு முணர்த்துகின்றார்.

இருமக தத்து வந்தா னெனநிற்கு மதுதா னீர்பெய்
தரும்விதை முளையா மன்முன் போலிரா தாதல் போலக்
கருவெனும் பகுதி யோடாங் காரமு மாகா மற்பொய்
யுரமுறு நிருவி கற்ப வுருநடு வவத்தை யாகும்.

(இ - ள்.) இரு - பெருமையுள்ள, மகதத்துவந்தானென நிற்கும் - மகதத்துவமென்னும் பெயரையுடைத்தாயிருக்கும், அது - அந்தமகதத்துவமானது, நீர்பெய்து-சலம்விட்டூறிய, அரும்விதை-சூக்குமவடிவவித்தானது, முளையாமல் - முளையாமலும், முன்போலிராது - முன்போலக் கெட்டியாயிராமலும், ஆதல்போல - உப்பிநடுவாதல்போல, கருவெனும் - காரணமென்னும், பகுதியோடு - பிரகிருதியும், ஆங்காரமும் - (காரியமென்னும்) ஆங்காரமுமாகிய, ஆகாமல் - இவ்விரண்டுமாகாமல், பொய்யுரமுறு - மித்தையாஞானமுள்ள, நிருவிகற்பவுரு - விகற்பவடிவமில்லாத, நடுவவத்தையாகும் - மத்தியாவத்தையாயிருக்கும், எ - று. தான் - அசை.

பிரகிருதிக்கு விதையும், மகதத்துவத்துக்கு ஊறியவிதையும், அகங்காரத்திற்கு அங்குரவிதையு முவமித்தவாறும். 'நடு' என்றமையின் முதற்கண் பிரகிருதியும் ஈற்றின்கண் அகங்காரமுங்கொள்க. விதை நீரினுப்பினால் அங்குராதிவிருக்ஷமுண்டாதற் கேதுவாதல்போலப் பிரகிருதி யுற்பின்னவத்தையால் மகதத்துவமாதல் ஆங்காராதிசகமுண்டாதற் கேதுவாமென்க.

(தா - ம்.) சகசிருஷ்டிக் கேதுவா யிருக்கின்ற மகதத்துவத்தின் உற்பத்தி கூறியவாறும். (சுஎ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மகதத்துவத்தி னின்றுந் திரிகுணாத்மகமான அகங்காரதத்துவத்தின் உற்பத்தியை யுணர்த்துகின்றார்.

கொன்மக தத்து வத்திற் குணபேத முறும்பொய்ஞ் ஞான
மன்சவி கற்ப மாக வருமுத லத்தி யாச

மென்முத லாங்கா ரந்தோன் றிடுங்குணஞ் சத்து வந்தான்
பின்வரு மிராச தஞ்சொற் பெருந்தமோ குணமென் றாகும்.

(இ - ள்.) கொன் - பெருமைபெற்ற, மகதத்துவத்தில் - மகதத்துவத்தினின்றும், குணபேதமுரு - குணபேதமாய், பொய்ஞ்ஞானமன்-மித்தையாஞானமிருந்த, சவிகற்பமாக - விகற்பவடிவமாக, வரும் - வராநின்ற, முதலத்தியாசமென் - பிரதமாத்தியாசமென்னும், முதலாங்காரந்தோன்றிடும் - மூலாங்காரமுண்டாகும், குணம் - அதன் குணங்கள், சத்துவம் - சத்துவமும், பின்வரும் - பின்புண்டான, இராசதம் - இரஜசும் - சொல் - சொல்லாநின்ற, பெருந்தமோகுண மென்றாகும் - பெரிதாயதாமதகுணமுமெனத் திரிவிதமாம், எ - று. தான் - அசை.

விருட்சத்துக்கு அங்குர முதலாவது போலச் சகத்தோற்றத்திற்கு அகங்காரமுதலாதல்பற்றி இவ்வகங்காரத்தை 'முதல்' என்றார். அத்தியாசம் கற்பனை. அஃதாவது ஒன்றிற்பிறிதொன்று மித்தையாகத் தோன்றுதல்.

(தா - ம்.) அகங்காரதத்துவத்தி னுற்பத்தி கூறியதாம். (சுஅ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறியகுணங்களினுருவமும் வைகரிமுதலிய மூன்றாங்காரங்களின் நாமமும் உணர்த்துகின்றார்.

உரைப்பருஞ் சத்து வாதி யுருவங்கள் பிரகா சம்பின்
புரைப்பிர விருத்தி மோக மென்குவர் புகல்கு ணங்க
ணிரைப்பெயர் தான்வை காரி நிகழுந்தை சதம்பூ தாதி
விரிப்பருங் குணங்கண் மூன்றுந் தருவமேல் விளம்ப லுற்றும்.

(இ - ள்.) உரைப்பரும் - சொல்லுதற்கரிய, சத்துவாதி - சத்துவமுதலிய முக்குணங்களின், உருவங்கள் - வடிவங்களை, (முறையே) பிரகாசம் - பிரகாசமும், பின்புரை - பின்களங்கமுள்ள, பிரவிருத்தி - பிரவிர்த்தியும், மோகமென்குவர் - மோகமுமெனவறிவுடையோர் சொல்லுவார்கள், புகல் குணங்கள் - இங்ஙனங் கூறிய குணத்திரயங்களுக்கு, நிரைப்பெயர் - முறையாகவந்த பரியாய நாமங்கள், வைகாரி - வைகாரியும், நிகழும் - விளங்காநின்ற, தைசதம் - தைசதமும், பூதாதி - பூதாதியுமென்பனவாம், விரிப்பரும் - விரித்தற்கரிய, குணங்கண் மூன்றும் - இக்குணத்திரயங்களும், தருவ - தருபவைகளை, மேல்விளம்பலுற்றும் - மேற்கூறுவாம், எ - று. தான் - அசை.

'குணங்கணிரைப் பெயர்' என்றதனால் சத்துவம் - வைகாரியெனவும், ரஜசு - தைசதமெனவும், தமசு - பூதாதியெனவுங்கொள்க.

(தா - ம்.) விதையின்க ணுதித்த அங்குரமே (முளையே) மூன்றிதழானதுபோல மகதத்துவத்தி னுதித்த அகங்காரமே முக்குணங்களாயிற்றென்பதாம். (சுகூ)

(அ - கை.)

இச்செய்யுளில் முக்குணங்களினின் றுண்டாகுந் தத்துவங்க ளினைய வெனக் கூறுகின்றார்.

சத்துவ குணத்திற் றோன்றுந் தயங்குமுட் கரண நான்கும்
புத்தியிந் தியங்க ளைந்தும் போந்துதித் திடுமி ராச
தத்தில்வாக் காதி யைந்துந் தரும்பிரா ணாதி யைந்து
மத்தமோ குணத்திற் றோன்று மகல்விசும் பாதி பூதம்.

(இ - ள்.) சத்துவகுணத்தில் - சத்துவகுணத்தில், தயங்கும் - விளங்காநின்ற, உட்கரணநான்கும் - அந்தக்கரணநான்கும், புத்தியிந்தியங்களைந்தும் - ஞானேந்திரியங்களைந்தும், தோன்றும் - உதிக்கும், இராசதத்தில் - ரஜோகுணத்தில், வாக்காதியைந்தும் - கன்மேந்திரியங்களைந்தும், தரும்-பிராணிகள் ஜீவித்தற்குத் தகுதியாயுள்ள, பிராணாதியைந்தும் - பிராணாதி வாயுக்களைந்தும், போந்துதித்திடும்-வந்துண்டாகும், அத்தமோகுணத்தில்-முற்கூறிய அத்தாமதகுணத்தில், அகல்-அகன்ற, விசும்பாதி பூதம் - ஆகாயாதி பஞ்சபூதங்கள், தோன்றும் - உண்டாகும், எ - று.

கரண நான்கென்றது மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களை. புத்தியிந்திரியங்களைந்தென்றது மெய், நா, கண், மூக்கு, செவிகளை. வாக்காதியைந்தென்றது வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தங்களை. பிராணாதியைந்தென்றது பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன்களை. இப்பத்தொன்பது தத்துவத்தின் சமூதாயம் சூக்குமதேகமாம். விசும்பாதி பூதமென்றது விண். காற்று, அக்கினி, அப்பு, மண் என்னும் சூக்குமபூதங்களை. (எ0)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சூக்குமபூதம் பஞ்சீகரணப்பட்டுலகமாதலும் அந்தக்கரணத்தின் றொழிலும் அவைகட் கதிதேவதையு முணர்த்துகின்றார்.

அப்பெரும் பூதம் பஞ்சீ கரித்துல காகி நிற்குஞ்
செப்பிய கரண நான்கின் செயல்கடா நினைத்த லந்தப்
பொய்ப்பொரு டுணிதன் மானம் புரிதல்சிந் தித்த றிங்க
டிப்பிய நான்மு கன்கோத் திரிபுராந் தகன்றே வன்றே.

(இ - ள்.) அப்பெரும்பூதம் - அந்தச் சூக்குமபூதமானது, பஞ்சீகரித்து - பஞ்சீகரணப்பட்டு, உலகாகிநிற்கும் - பிரமாண்டபுவன சரீரகடாதி விஷயங்களாயிருக்கும், செப்பிய - முற்கூறிய, கரணநான்கின் - அந்தக்கரணநான்கினுடைய, செயல்கள்-தொழில்களாவன, அந்தப் பொய்ப்பொருள்-முற்கூறிய அம்மித்தையாவஸ்துக்களை, நினைத்தல் - சங்கற்பித்தலும், துணிதல் - நிச்சயித்தலும், மானம்புரிதல் - அபிமானித்தலும், சிந்தித்தல் - சிந்தித்தலுமாம், திங்கள் - சந்திரனும், திப்பியநான்முகன் - திவ்வியரூப

மான பிரமனும், கேத்திரி - அரியும், புராந்தகன் - அரனும், தேவு - இக்கரணங்கட்கதி தெய்வங்களாம், எ - று.

அன்று - ஏ - தாம் - அசை. கரண நான்கின் செயல்கள் தேவு எனவே மனதிற்குச் சங்கற்பித்தலும் சந்திரனும், புத்திக்குத் துணிதலும் பிரமனும், சித்தத்திற்குச் சிந்தித்தலும் விஷ்ணுவும், அகங்காரத்திற்கு அபிமானமு முருத்திரனுமாமென்றறிக.

பஞ்சீகரித்தலாவது தன்மாத்திரையின் றமோகுணபூதங்களை யொன்றிரண்டாகப்பகுத்து அதன் முற்பாதியைந்தை நிறுத்திப் பிற்பாதியைந்தை யொவ்வொன்றை நந்நான்காக்கி யிவற்றை முற்பாதியிற் றன்னமிசம்விட்டு மற்றவைக்கு இவ்விருபதையு முறையே கொடுக்கத் தன்னமிசம் தியுமேனையமிசம்பாதியுஞ் சேர்ந்தொன்றாதலாம். (எக)

அ - கை.

இச்செய்யுளில் கரணங்களிருக்குந் தானமும் ஞானேந்திரியங்களின் தொழில் அதிதெய்வம் தானமென்னு மிம் மூன்று முணர்த்துகின்றார்.

இக்கர ணங்க டான மிதயஞா னேந்தி யங்கட்
குய்க்குறு தொழிலாங் கேட்ட லுறல்காண்ட லுண்டன் மோத்த
றிக்குமா ருதமே நன்மித் திரனுயர் வருண னோடு
தக்கசு வினியாந் தெய்வந் தானங்கா தாதி யாமே,

(இ - ள்.) இக்கரணங்கள் - இவ்வந்தக்கரணங்களிருக்கும், தானம் - இடம், இதயம் - இருதயமாம், ஞானேந்தியங்கட்கு - ஞானேந்திரியங்களுக்கு, உய்க்குறு - செலுத்தாநின்ற, தொழில் - வியாபாரங்கள், கேட்டல் - கேட்டலும், உறல் - பரிசித்தலும், காண்டல் - காணலும், உண்டல்-புசித்தலும், மோத்தல் - ஆக்கிராணித்தலுமாம், திக்கு - திசையும், மாருதம் - வாயுவும், நன்மித்திரன் - நல்ல சூரியனும், உயர்வருணனோடு - உயர்ந்த வருணனும், தக்கசுவினி - தகுதியுள்ள அசுவினியும், ஆந்தெய்வம் - அதிதெய்வங்களாம், தானம் - இவைகட்கிடமாவன, காதாதியாம் - செவிமுதலியவைந்துமாம், எ - று. ஆம் - சாரியை. ஏ - ஈற்றசை.

கரணங்களென்று பன்மையாக் கூறித் தானமிதயமென நடுநிலையைக் கூறினமையின் புத்திக்கு அவ்விருதயமும், மனதிற்குக் கண்டமும், சித்தத்திற்குநாபியும், அகங்காரத்திற்குச் சர்வாங்கமுமா மெனக்கொள்க. காதாதியென்றதால் மெய், கண், நா, மூக்குங்கொள்க. ஞானேந்திரியங் கட்குத் தொழில் அதிதெய்வம் தானமெனவே நிரலே சுரோத்திரத்திற்குக் கேட்டலும் திக்கும் காதும், தொக்கிற்கு உறலும் மாருதமும் மெய்யும், சட்சுவுக்குக் காண்டலும் மித்திரனும் நேத்திரமும், சிங்குவைக்கு உண்டலும் வருணனும் நாவும், ஆக்கிராணத்திற்கு மோத்தலும் அசுவினியும் மூக்குமா மெனக் கொள்க.

(எஉ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய ஞானேந்திரியங்களினுட் டொழிலும் கன்மேந்திரியங்களின் புறத்தொழிலும் உணர்த்துகின்றார்.

எஃசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புந்தியிந் திரியங்க டாமுணரும் விடயம்
 புறமெனவே யுள்ளுமுணர்ந் திடுஞ்செவிகள் புதைப்பி
னுய்த்தபிரா ணாதியொலி கேட்கையன்ன திகளை
 யுண்ணும்போ தழல்குளிர்ச்சி யறிதல்விழி மூடின்
மெத்துமக விருளறித லுற்காரா திகளின்
 விளங்குசுவை கந்தமறிந் திடன்முறையே யாகும்
வைத்தகரு மேந்திரியத் தொழிலுரைத்த னடத்தல்
 வழங்கல்விட லானந்தித் திடுதலென வறியே.

(இ - ள்.) புத்தி யிந்திரியங்கள் - ஞானேந்திரியங்களைந்தும், தாமுணரும் விடயம்புறமெனவே-தாம்புறத்துள்ள விஷயங்களை யறிவதுபோலவே, உள்ளுமுணர்ந்திடும் - அகத்தினு மறிந்திடும், (அவை யெங்ஙனமெனின்) செவிகள் புதைப்பின் - செவிகளை விரல்களால் மூடியவிடத்து, உய்த்த - உசுவாச நிசுவாசங்களைச் செலுத்துகிற, பிராணாதி-பிராணவாயு சாடராக்கினிகளின், ஒலிகேட்கை - சத்தங்களைக்கேட்டலும், அன்னாதிகளை-அன்னபானாதிகளை, உண்ணும்போது - புசிக்குமிடத்து, அழல்குளிர்ச்சி சீதோஷ்ணாதி பரிசங்களை, அறிதல் - அறிதலும், விழிமூடின் - கண்ணை மூடுமிடத்து, மெத்தும் - நெருங்கிய, அகவிருளறிதல்-உள்ளிருட்டை யறிதலும், உற்காராதிகளில் - கார்ப்பு முதலியவைகளால், விளங்கு - விளங்காநின்ற, சுவை - இரசத்தையும், காந்தம்-வாசனையையும், அறிந்திடல் - அறிந்திடுதலும், முறையேயாகும் - கிரமமேயாம், வைத்த - முன்னிறுத்திவைத்த, கருமேந்திரியத்தொழில் - கன்மேந்திரியங்களைந்தின் செயல்கள், உரைத்தல் - வசனித்தலும், நடத்தல் - நடத்தலும், வழங்கல் - இடுதலேற்றலும், விடல் - மலசலங்களை விடுதலும், ஆநந்தித்திடுதல் - சுகத்தை யனுபவித்தலும், எனவறி-என்றுணர்வாயாக, எ - று. ஏ - அசை.

தொகுதி யொருமைபற்றிக் கருமேந்திரியமென்று கூறப்பட்டது 'பிராணாதி' என்றமையின் சாடராக்கினிவருவிக்கப்பட்டது. 'முறையே' என்றமையின் அகத்தில் வியானவாயுவினாற் சத்தத்தையும், பிராணவாயுவினாற் பரிசத்தையும், அபானவாயுவினால் ரூபத்தையும், சமானவாயுவினால் ரசத்தையும், உதானவாயுவினாற் கந்தத்தையு மறிதல் பெறப்படுமென்க. 'அன்னாதி' என்றமையின் பானமுதலிய வுணவுகளையும், 'உற்காராதி' என்றமையின் வாந்தி யேப்பங்களினா லிதயகண்டங்களிற் கரித்தல் கார்த்தல்களையுங்கொள்க. உரையிற் கோடலென்னு முத்தியால் ஊறுகளெட்டையுங் கொள்க. அவையாவன-வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்ம்மை, சீர்மை, சர்ச்சரையென்பனவாம்-'இருள்' என்றமை

யின் ஒளிமுதலியவுங் கொள்க. அவை வெண்மை முதலிய பஞ்சவன்னங்களெனினு மமையும்.

அ - கை.

இச்செயுளில் கருமேந்திரியங்களின் அதிதேவதைகளையும் அக்கருமேந்திரியங்களின் ஸ்தானங்களையும் இந்திரியவிஷய அதிதேவதைகளே தாபத்திரயமாமென்பதையும் அவ்வதிதேவதைகளே ஈசனுக்கு மூன்றவத்தைகளாமென்பதையு முணர்த்துகின்றார்.

அங்கிமக பதியிரவி மிருத்தியுபிர சேச
  னதிதெய்வம் வாய்முதலாங் கோளகங்க டான
மிங்கிவைக ளுட்கரண மிருவகையிந் திரிய
  மென்னவரு பதினான்கு மத்தியான் மிகமாந்
தங்குமிவற் றுறுவிடய மாதிபவு திகமாந்
  தகுமதிதே வதையாதி தெய்விக மாமிப்
புங்கவரே யிந்திரியம் விராட்புருடற் கதுமெய்
  பொன்கருப்பற் கதுமறைப்பா மந்தரியா மிக்கே.

(இ - ள்.) அங்கி - அக்கினியும், மகபதி - இந்திரனும், இரவி - சூரியனும், மிருத்தியு - யமனும், பிரசேசன் - பிரசாபதியும், அதிதெய்வம் - முற்கூறிய கன்மேந்திரியங்கட்கதிதெய்வங்களாம், வாய்முதலாங் கோளகங்கள்- வாக்காதி கோளகங்களே, தானம் - அவ்விந்திரியங் கட்கிடமாம், இங்கிவையுள் - இவைகளுள், உட்கரணம் - அந்தக்கரணம் நான்கு, இருவகையிந்திரியமென்ன - ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரிய மைந்துமென்று, வருபதினான்கும்-வாராநின்ற இப்பதினான்கும், அத்தியான்மிகமாம்- அத்தியாத்மிகமாம், தங்குமிவற்று - பொருந்திய விவைகளுக்குள், உறுவிடயம் - பொருந்தாநின்ற சம்சயாதி பதினான்கு விடயங்களே, ஆதிபௌதிகமாம்-ஆதிபௌதிகமாகும், தகும்-தகுதியாயுள்ள, அதிதேவதை-சந்திராதிய பதினான்குதேவுமே, ஆதிதெய்விகமாம்-ஆதிதெய்விகமாகும், இப்புங்கவரே-இத்தேவர்களே, விராட்புருடற்கிந்திரியம்-விராட்புருடனுக்கு இந்திரியங்களாம், பொன்கருப்பற்கு-இரணிய கருப்பனுக்கு, அதுமெய்-அவ்விந்திரியங்களே சூக்குமதேகமாம், அந்தரியாமிக்கு - அந்தரியாமிக்கு, அது - அச்சூக்குமதேகம், மறைப்பாம் - தமோரூபத்தால் ஆவரணமாம், எ - று. ஏ-அசை. கோளகம்-இடம்.

முற்கூறிய கன்மேந்திரியங்கட்குத் தெய்வமும் தானமுமென்றமையின் நிரலே வாக்கிற்கு அங்கியும் வாயும், பாதத்திற்கு மகபதியும் காலும், பாணிக்கு இரவியும் கையும், பாயுருவிற்கு மிருத்தியுவும் குதமும், உபஸ்தத்திற்குப் பிரஜாபதியும் குய்யமுமாம். விடயம் பதினான்காவன சம்சய, நிச்சய, சாஞ்சல்ய, அபிமான, சத்த, பரிச, ரூப, ரச, கந்த, வசன, கமன, தான விசர்க்க, ஆநந்தங்களாம். சம்சயாதி நான்கையு மொருபொருளிடத்தில் வைத்து விடயம் பதினென்கெனக் கூறுவாருமுளர். அக்கரணம் பதி

ளன்கிற்குந் தனித்தனியே விடயங்களிருத்தலி னங்ஙனங்கூறுதல் மரபன் றென்க.

(ப - ம்.) விடயங்களை நுகர்தற்கு இந்திரியங்களை யியக்குஞ் சந்திராதியருக்குத் தேவாம்சமிருத்தலின் அவர்களை 'அதிதேவதை' எனவும், இவர்கள் சகமாகிய தூலவிடயங்களை யறிதற் கிடமாயிருத்தலின் விராட்புருடனுக் கிந்திரியங்கள் எனவும், அவ்விந்திரியங்கள் அவ்விடயங்கட்குக் காரணமான சூக்குமமாயிருத்தலின் பொன்கருப்பற்கது மெய் எனவும், இவைகளொன்றுந் தோன்றாமற் காரணமான தமசிலடங்கி யிருத்தலின் 'அது மறைப்பாமந் தரியாமிக்கு'எனவுங் கூறினர். எனவே, ஈசனுக்குத் தூலாதி மூன்றும் தேகமுமாயின வென்பதாம். (எச)

அ - கை.

இச்செய்யுளில் தசவாயுவி னிலக்கணங்கூறுவான் றொடங்கிப் பிராணாதி சத்தவாயுக்களி னிலக்கண முணர்த்துகின்றார்.

நின்றிதயந் தனையடைந்து பிராணனுசு வாச
நிசுவாச மியற்றுமபா னன்குதத்தி னுற்றுச்
சென்றொழிய மலசலங்க ளொழித்தலுறுஞ் சமானன்
சேர்ந்துந்தி யன்னரச முறுப்பனைத்தும் பகுக்கு
மென்றுமுதா னன்களமுற் றுற்காரம் புரியு
மிருந்தங்க மெங்கும்வியா னன்பரிக்கு முடம்பைக்
குன்றுதலி னுகன்சோம் பாவித்தல் விளைக்குங்
கூர்மனால் விக்கலொடு தேக்குவரு மன்றே.

(இ - ள்.) பிராணன் - பிராணவாயுவானது, நின்றிதயந் தனையடைந்து - இதயஸ்தானத்தைச் சேர்ந்து நின்று, உசுவாசம் – மேற்செல்லுதலையும், நிசுவாசம் – கீழ்ச்செல்லுதலையும், இயற்றும் – செய்யும், அபானன் - அபானவாயு, குதத்தினுற்று - குதஸ்தானத்திருந்து, சென்றொழிய - வெளிப்பட, மலசலங்கள் - மலசலங்களை, ஒழித்தலுறும் - நீக்கிக் கொண்டிருக்கும், சமானன் - சமானவாயு, சேர்ந்துந்தி – நாபிஸ்தானத்திருந்து, அன்னரசம்-உண்ட வன்னரசத்தை, உறுப்பனைத்தும்-அங்கமுழுதிற்கும், பகுக்கும் - பகுத்துக் கொண்டிருக்கும், என்றும் - எப்போதும், உதானன்– உதானவாயு, களமுற்று - கண்டஸ்தானத்திருந்து, உற்காரம்புரியும் – வாந்தி பண்ணுவிக்கும், வியானன்-வியானவாயு, இருந்தங்கமெங்கும் - சர்வாங்கமு மிருந்து, பரிக்குமுடம்பை – தேகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும், குன்றுதலில் - குன்றாத, நாகன் – நாகவாயு, சோம்பு - சோம்பலையும், ஆவித்தல் - கொட்டாவியையும், விளைக்கும் - உண்டாக்கும், கூர்மனால் - கூர்மவாயுவால், விக்கலொடு - விக்கலும், தேக்குவரும் - ஏப்பமுமுண்டாகும், எ – று. அன்று-ஏ - அசை.

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் மூன்று வாயுக்களினிலக்கண முணர்த்துகின்றார்.

தும்மலுட னிருமல்வருங் கிரிகரனு னகுதல்
  சொல்லுதலாந் தேவதத்த னாற்சோக ராக
மென்மைதருந் தனஞ்செயனத் தனஞ்செயனும் வாயு
  வியனுயிர்போ யைந்நாளின் வீங்கிவெடித் தகலு
மிம்மையி னுகாதிபுற வாயுக்க ளாந்தா
  யிசைத்திடுங்கன் மேந்திரியங் கட்கதுசேட் டிக்குந்
தன்மையாம் பிராணாதி பஞ்சவா யுக்க
  டாமியக்கும் விடாமன்ஞா னேந்திரியங் களையே.

(இ-ள்.) கிரிகரனுல் - கிரிகரவாயுவினுல், தும்மலுடன் - தும்மலும், இருமல் - இருமலும், வரும் - உண்டாகும், தேவதத்தனுல் - தேவதத்த வாயுவினுல், நகுதல் - நகைத்தலும், சொல்லுதல் - சொல்லுதலும், ஆம் - உண்டாகும், தனஞ்செயன் - தனஞ்செய வாயுவினுல், சோகராகம்-துன்ப வின்பங்கள், மென்மை - மெதுவாக, தரும் - உண்டாகும், அத்தனஞ்செயனும்வாயு - அத்தனஞ்செய வாயுவானது, வியனுயிர்போய் - மேவான வுயிர் நீங்கி, ஐந்நாளின் - ஐந்துதினவரையில், வீங்கி - சரீரம் வீங்கி, வெடித்து - கபாலம் வெடித்தபின், அகலு மிம்மையில்-இச்சரீரத்தினின்று நீங்கும், நாகாதி - நாகன்முதலிய, புறவாயுக்களாந்தாய் - புறவாயுக்களாந்தாக, இசைத்திடும் - சொல்லப்படும், கன்மேந்திரியங்கட்கு - வாக்காதி கன்மேந்திரியங்களை, அது-அப்புறவாயுக்கள், சேட்டிக்கும்-அசைப்பிக்கும், தன்மையாம் - குணங்களாம், பிராணாதி - பிராணன்முதலிய, பஞ்சவாயுக்கள் - ஐந்துவாயுக்களும், ஞானேந்திரியங்களை - சுரோத்திராதி ஞானேந்திரியங்களை, தாமியக்கும்விடாமல் - தாம்விடாம லசைப்பிக்கும், எ - று. ஏ - அசை.

இந்திரியங்கட்கென்ற நான்காம்வேற்றுமை "பொருள் சென்மருங்கின் வேற்றுமைசாரும்" என்னும் விதிப்படி இரண்டாம் வேற்றுமையாயிற்று. புறவாயுக்களைத் தொகுதி யொருமைபற்றி 'அது' என்று கூறப்பட்டது. 'நாகாதிபுற வாயுக்கள்' என்றதனுல் பிராணாதி யைந்தும் அந்தர வாயுக்களெனவும் மேற்கூறும் வயிரம்பணாதி யைந்தும் அகவாயுக்களெனவுங் கொள்க. ஆகவே, புறம்பினுள்ள கன்மேந்திரியங்களைச் சேட்டிப்பித்தலின், நாகாதியைப் புறவாயுக்களெனவும், இடையினுள்ள ஞானேந்திரியங்களை யசைப்பித்தலின் பிராணாதியை யந்தரவாயுக்களெனவும், அகத்தினுள்ள வந்தக்கரணங்களை யசைப்பித்தலின் வயிரம்பணாதியை யகவாயுக்களெனவுங் கொள்க. (எசு)

அ - கை.

இச்செய்யுளில் வயிரம்பணாதிய பஞ்சவாயுக்களின் தொழில்களும், பஞ்சபூதங்களின் தொழில்களும் அவற்றின் தருமமும் அதிதேவதைகளுமான விவற்றை யுணர்த்துகின்றார்.

சாற்றின்வயி ரம்பன்முக் கியன்பிரபஞ் சனனந்
தரியாமி யொடுமகாப் பிராணனெனும் பெயர்கொள்
காற்றிவைகள் சீவசம் பந்தமா யேயுட்
கரணங்க ளியக்கியிடு மண்முதலேந் திற்கும்
பாற்றிகழும் வியாபாரம் பொறைபிண்டி கரணம்
பாகமொடு விரகமிடங் கொடையாகுந் தரும
மாற்றலுறுந் திண்மைநெகிழ் வழற்சிபரி வெளியா
மயனொடரி யரனீசன் சதாசிவன்றே வதைகள்.

(இ - ள்.) சாற்றின் - கூறுமிடத்து, வயிரம்பன் - வயிரம்பனும், முக்கியன் - முக்கியனும், பிரபஞ்சனன் - பிரபஞ்சனனும், அந்தரியாமியொடு - அந்தரியாமியும், மகாப்பிராணனெனும் - மகாப்பிராணனு மென்கின்ற, பெயர்கொள் - நாமங்களைக்கொண்ட, காற்று - வாயுக்களாகிய, இவைகள் - இவ்வைந்தும், சீவசம்பந்தமாய் - சீவனுடனே கூடிநின்று, உட்கரணங்கள் - மனமுதலிய அந்தக்கரணங்களை, இயக்கியிடும் - தொழிற்படுத்தும், மண்முதலேந்திற்கும் - பிருதிவியாதிய பஞ்சபூதத்திற்கும், பாற்றிகழும் - அவற்றினிடமாய்விளங்கும், வியாபாரம் - தொழில்களாவன, பொறை - பொறுத்தலும், பிண்டிகரணம் - திரட்டுதலும், பாகமொடு - பாகஞ்செய்வித்தலும், விரகம் - உலர்த்தலும், இடங்கொடையாகும் - இடங்கொடுத்தலுமாம், தருமம் - அவற்றின் றருமமாவன, ஆற்றலுறும் - நிலைபெற்ற, திண்மை - கடினமும், நெகிழ்வு - நெகிழ்ச்சியும், அழற்சி - வெம்மையும், பரி - பரிசித்தலும், வெளியாம் - வெளியுமாம், அயனொடு - பிரமனும், அரி - அரியும், அரன் - உருத்திரனும், ஈசன் - மயேசனும், சதாசிவன் - சதாசிவனும், தேவதைகள் - அவ்வைம்பூதங்களுக்கதி தேவதைகளாம், எ-று. ஏ - அசை.

பரிசம் - பரியெனக்கடைக்குறையாயிற்று. வயிரம்பனுதிய பஞ்சவாயுக்கள் ஜீவசம்பந்தமா யுட்கரணங்களை யியக்கி யிடுமென்றது உள்ளத்தை வயிரம்பனும் மனதை முக்கியனும் புத்தியைப் பிரபஞ்சனனும் சித்தத்தை யந்தரியாமியும் அகங்காரத்தைமகாப்பிராணனும் அசைப்பித்தலாம். மண்முதலேந்திற்கும் வியாபாரம் தருமம் தேவதை யென்றமைபின்கிரமேமண்ணிற்குப் பொறுத்தலும் வன்மையும்அயனும், நீரிற்குப் பிண்டி கரித்தலும் நெகிழ்ச்சியும் அரியும், தீக்குப்பாகித்தலும் அழற்சியும் அரனும், காற்றிற் குலர்த்தலும் பரிசித்தலும் மயேசனும், விண்ணிற்கிடங்கொடுத்தலும்வெளியும் சதாசிவனுமாம். இவற்றில் உற்பத்திக் கிரமப்படி யுள்ளத்தையுஞ் சேர்த்தந்தக் கரணமைந்தெனக்கொள்க. (எஎ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பஞ்சபூதங்களின் குணங்களுந் திரிபுடியிலக்கணமு முணர்த்துகின்றார்.

கந்தமுத லாயினவே குணங்களவை தம்முட்
ககனத்திற் கொலியொன்றே வளிக்கிரண்டே றுடனே

யந்தழலுக் கொளியொடுமூன் றறற்கிரத மொடுநான்
   கைந்துமண மொடுபுவிக்கென் றறிகதிரி புடிகண்
முந்துஞா திருஞான ஞேயமா மிவற்றின்
   மூலவகங் காரஞ்சேர் சீவசை தன்னிய
நந்துஞா திருமனத்திற் கதுவறிவு ஞான
   நவின்றபவு திகவிடய ஞேயமென வறியே.

(இ-ள்.) கந்தமுதலாயினவே - கந்தமாதியவைந்துமே, குணங்கள் - அப்பஞ்சபூதத்தின் குணங்களாம், அவைதம்முள் - அவற்றுள், ககனத்திற்கு - ஆகாயத்திற்கு, ஒலியொன்றே - சத்தமொன்றும், வளிக்கு - வாயுவிற்கு, இரண்டேறுடனே - பரிசத்துடனிரண்டும், அந்தழலுக்கு - அழகிய தேயுவிற்கு, ஒளியொடு மூன்று-ரூபத்துடன் மூன்றும், அறற்கு - அப்புவிற்கு, இரதமொடு - இரசத்துடன், நான்கு - நான்கும், புவிக்கு - பிருதிவிக்கு, மணமொடு - கந்தத்துடன், ஐந்தென்று - ஐந்துமாமென்று, அறிக - அறிவாயாக, திரிபுடிகள் - இனித்திரிபுடிகளாவன, முந்து - முதன்மையான, ஞாதிரு - ஞாதிருவும், ஞானம் - ஞானமும்,'ஞேயமாம் - ஞேயமுமான, இவற்றின் - இவைகளுள், மூலவகங்காரஞ்சேர் - மூலாங்காரத்திற் பிரதிபிம்பித்துள்ள, சீவசைதன்னியம் - சீவபோதமே, நந்து - தத்துவ ஞானத்தினல் கெடுதற்கியன்ற, ஞாதிரு - ஞாதாவும், மனத்திற்கதுவறிவு- அந்தக்கரணப் பிரதிபலனசைதன்னியமே, ஞானம் - ஞானமும், நவின்ற- முற்கூறிய, பௌதிகவிடயம் - பூதபௌதிகவிடயங்கள்,ஞேயமென-ஞேயமுமென, அறி - நீயறிவாயாக, எ - று. ஏ - ஈற்றசை. திரிபுடி-அறிபவனும் அறிவும் அறியப்படும்பொருளு மாம்.

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய தத்துவங்கள் பிரமபரியந்த மிருபத்தொன்பதாமென்பதை யுணர்த்துகின்றார்.

ஈங்குமன மிருபத்து நான்காவ தாகு
   மிருபத்தைந் தாவதுதான் மூலவகங் கார
மாங்கதனை யடைதலுறு சிதாபாசசீவ
   னறையினிரு பத்தாறு மவன்மாயை மருவு
மோங்கொளியா மீசனிரு பத்தேழா மவனவ்
   வுயிர்முதலாந் துரியனிரு பத்தெட்டா மவனு
நீங்கலரு மீசனதிட் டாத்திருவாம் பிரம
   நிகழ்த்தினிரு பத்தொன்ப தாவதுவா மன்றே.

(இ-ள்.) ஈங்கு - இவ்விடத்தில், மனம் - மனமானது, இருபத்துநான்காவதாகும் - இருபத்து நான்காந் தத்துவமாம், மூலவகங்காரம் - மூலாங்காரமானது, இருபத்தைந்தாவது - இருபத்தைந்தாந் தத்துவமாம், ஆங்க

தனை - அவ்விடத்தம் மூலாங்காரத்தை, அடைதலுறு - அடையா நின்ற, சிதாபாச சீவன் - சீவசிதாபாசனனவன், அறையின் - சொல்லுமிடத்து, இருபத்தாறுமவன் - இருபத்தாறுந்தத்துவமாவன், மாயை மருவும் - மாயா சகிதனன, ஓங்கொளியாமீசன் - உயர்ந்த பிரகாசத்தையுடைய வீசனன வன், இருபத்தேழாமவன் - இருபத்தேழாந் தத்துவமாவன், அவ்வுயிர்-முற் கூறிய சீவனுக்கு, முதலாம் - அதிஷ்டானமாய, துரியன் - * கூடத்தன னவன், இருபத்தெட்டாமவனும் - இருபத்தெட்டாந்தத்துவமாவன், நீங் கலரும் - நீங்குதற்கரிய, ஈசன் - ஈசனுக்கு, அதிட்டாத் திருவாம் - அதிஷ் டானமாகிய, பிரமம் - பிரமமானது, நிகழ்த்தின் - சொல்லுமிடத்தில், இரு பத்தொன்பதாவதுவாம் - இருபத்தொன்பதாந் தத்துவமாம், எ - று. தான்- அன்று-ஏ - அசை.

மூலாங்காரத்தின் சத்துவத்திற் கரண நான்கும் ஞானேந்திரியமை ந்துமாக வொன்பதும், இராஜதத்தில் வாயுவைந்துங் கன்மேந்திரிய மைந் துமாகப்பத்தும், தமசில் பூதமைந்துமாய இவ்விருபத்து நான்கனுள் முதன் மையானமனமும் இவற்றைத் தானென்றபிமானித்திருக்கும் அகங்காரமும் அதிற் பிரதிபிம்பித்துள்ள சீவனும் இதற்கு வியாபகமான வீசனும் இவ்விர ண்டிற்கும் அதிஷ்டானமான கூடஸ்தனும் பிரமமுமாக விருபத்தொன்ப துந் தத்துவமாமென்க.

வினு:—இங்ஙனமாயின், ஏனையநூல்களிற் சத்துவத்திற் பத்தும் இரா ஜதத்திற் பத்துந் தமசிற் பதினென்றும் இவைகட்குக் காரணமான அவித் தை வித்தை சீவன் ஈசன் பிரமமைந்துமாக முப்பத்தாறெனக் கூறிய தென்னே ?

விடை:—இந்நூலாசிரியர் சத்துவத்தினுதித்த பத்தனுள் முன்னுதித்த ஞானமொன்றை யகங்காரத்தினடக்கி யொன்பதெனவும், இராஜசத்தினுதி த்த பத்தும் பத்தேயெனவும், தமசினுதித்த பதினென்றனுள் அஸ்தி, மாமி சம், சருமம், நரம்பு, உரோமம், மச்சை என்னு மாறையு மிவற்றின் காரண மான பஞ்சபூதத்தி லடக்கியும் முன்னீக்கின ஞானத்தை யகங்காரான்மா வெனச் சேர்த்தும், அவித்தை வித்தையிரண்டையுஞ் சீவேசுவரரி லடக்கி யும், பிரமத்தைக் கூடஸ்தரென விரித்தும் ஆக விருபத்தொன்பதெனக் கூறினரென்க.

வினு:—இந்நூலில் முற்கூறிய வாயுக்கள் பதினைந்தைப் பின்னைந்தா கக்கூட்டிய தென்னே ?

விடை:—நாகாதி யென்றபுறவாயுக்களைந்தையும் பிராணதியைந்தினும் வயிரம்பனுதிய வாயுக்களைந்தையுஞ் சீவனிலுமடக்கியதா லென்க.

---

* கூடமென்பது கொல்லனது பணை. அப்பணையினிடத்து இரும்பு கள் விகாரப்படுவதன்றி அது விகாரப்படுவதின்று. அதுபோன்று அவத் தாத்திரயங்கள் தம்முள் மாறிமாறித் தன்னிடத்துவரத் தான் விகாரப் படாமலிருக்குஞ் சேதனம் கூடஸ்தனெனப்படும்.

வினா:—அற்றேல், வயிரம்பறுதிய வாயுக்களைச் சீவனிலடக்கியதேன்?

விடை:—இவ்வைந்தும் விராட்புருடனது பஞ்சவாயுக்களாய்ச் சிவசம்பந்தமா யிருத்தலினென்க.

வினா:—அற்றேல், அவை இத்தத்துவங்களடங்கிய விடத்துள்ள சீவனிடத்திருப்ப தெங்ஙனம்?

விடை:—இருபத்துநான்கு தத்துவங்க ளொடுங்கிய சுழுத்தியவத்தையிற் பிராணன் அசைதலின் அனுபவ மிருத்தலினாலும் "பிராணனுமல்ல" என்னும் சசிவன்னபோதக் கவியினானும் அஃ திருக்கின்றதெனக் காண்க.

வினா:—அங்ஙனமாயின், இனிச் சீவனிடத்து இவ்வாயுவெங்ஙன மிருக்கின்றது?

விடை:—சீவனுக்குச் சங்கற்பமா திரூபமான வந்தக்கரணங்களை யசைப்பித்தலின் அவனது ஜீவசத்தியா யிருக்கின்றதென்க. இதனாலிப்பிராணனன்றென்பதுதோன்ற மகாப்பிராணனென நாமம் வந்தது.

(தா-ம்.) முற்கூறிய சீவர்கட்கு அவித்தையின் நீக்கமும் வித்தையின் ஆக்கமும் உண்டாகும் நிமித்தம் அதற்குச் சாதனமாகக் காலமுதற்பௌதிக மீறாய தத்துவங்கள் ஈசுரனது கிருபாதிருஷ்டியினால் அவாந்தரமாக வுண்டாயின வென்பதாம். (எக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறியசிருஷ்டி யிருவகையாமென் றுணர்த்துகின்றார்.

தெரித்தகா ரியத்தோற்ற மிருவகை யாங் * கிரம
சிருட்டியுக பற் சிருட்டி யெனமூலப் பகுதி

---

* வேதாந்த சித்தாந்தத்துள் உத்தம மத்திம கனிஷ்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கும் பொருட்டு அஜாதவாதம், யுகபத் சிருஷ்டி, கிரமசிருஷ்டியென மூன்று பட்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன: உண்மையாக வுள்ளது பிரமமே; தேகாதிப் பிரபஞ்சம் எக்காலத்து மின்றென்னும் பட்சம் அஜாதவாதமாம். இதுவே அதனது முடிந்த தீர்ப்பாம். சொப்பன வுலகு கிரமமின்றி மனத்தினின்று முண்டாவதுபோன்று தேகாதிப் பிரபஞ்சம் கிரமமின்றிப் பிரமத்தினின்று முண்டாயிற்றென்னும் பட்சம் யுகபத்(ஏககால)சிருஷ்டியாம். மகதத்துவம் அகங்காரதத்துவம் சூக்குமபூத முதலியவை முறையே ஒன்றன்பின் னொன்றாக வுண்டாயினவென்னும் பட்சம் கிரமசிருஷ்டியாம். இச்சிருஷ்டி கனிஷ்டாதிகாரியின் பொருட்டுச் சொல்லப்பட்டதாம். அஜாதவாதமே யுடம்பாடாகக் கூறும் வேதாந்த சித்தாந்தத்திற்குக் கிரமசிருஷ்டியையும் யுகபத்சிருஷ்டியையும் கூறுவதில் கருத்தின்றாயினும் மத்திமாதிகாரியும் கனிஷ்டாதிகாரியும் அத்வைதப்பிரமத்தை யறிதற்காக ஜகத்தை நிஷேதிக்கவேண்டியிருத்தலால் அதுபற்றி அஃது (கிரமம் யுகபத் என்னும்) இருவகைச் சிருஷ்டியையும் கூறிற்றென் றறிதல்வேண்டும்.

விரித்தமக தத்வமக முந்தன்மாத் திரையாம்
விளங்கு ‡ சத்தப் பிரகிருதி யாற்பஞ்ச பூத
முரைத்தவற்றிற் பிரமாண்ட பிண்டமுத லாய
வுலகுதயந் தான்கிரம சிருட்டி நிறை கடலின்
மருத்துவசத் தலையாதி போற்சிவத்தின் மாயா
மயநாம வுருவநிகழ் வாமுகபற் சிருட்டி.

(இ-ள்.) தெரித்த - முற்கூறிய, காரியத்தோற்றம் - காரியமான சக முண்டாதல், இருவகையாம்-இரண்டு பிரகாரமாம், (அவை) கிரமசிருட்டி-கிரமசிருஷ்டியெனவும், உகபற் சிருட்டியென-யுகபத்சிருஷ்டியெனவுமாம், (இவற்றுள்) மூலப்பகுதி-மூலப்பிரகிருதியினின்றும், விரித்த - உண்டான, மகதத்துவம் - மகதத்துவமும், அகமும் - அகங்காரதத்துவமும், தன்மாத்திரையாம் - பஞ்சதன்மாத்திரையுமாக, விளங்கு - விளங்காநின்ற, சத்தப்பிரகிருதியால் - ஏழுபிரகிருதிகளினால், பஞ்சபூதம்-பஞ்ச பூதங்களும், உரைத்தவற்றில் - சொன்ன வப்பூதங்களால், பிரமாண்டம் - பிரமாண்டங்களும், பிண்டமுதலாய - சரீராதிகளுமான, உலகுதயம்-சகத்தோற்றம், கிரமசிருட்டி - கிரமசிருஷ்டியாம், நிறைகடலின் - நிறைந்த சமுத்திரசலத்துள், மருத்துவசத்து - வாயுவசத்தால், அலையாதிபோல்-தரங்கமாதிய பேதமுண்டாதல்போல, சிவத்தின்-பிரமசத்தினின்று, மாயாமயம்-மித்தையாரூபமான, நாமவுருவம் - நாமரூபமாகிய சகத்பேதம், நிகழ்வு - ஏககாலத்திற் றோற்றி விளங்குவது, ஆமுகபற்சிருட்டி-யுகபத்சிருஷ்டியாம், எ-று, தான்-அசை.

பிரமாண்ட மென்றது பஞ்சபூதா காரமான யாவுஞ் சேர்ந்தொன்று யிருக்கு மண்டமனைத்துங் கூடியதை. பிண்டமென்றது அதிற் சஞ்சரிக்கப்பட்ட பஞ்சபூத காரியமான பௌதிக வடிவமான தேகங்களை. பிரமாண்டத்தைப் புவனபோக மெனவும், பிண்டத்தைத் தனுகரண மெனவுங் கொள்க. அண்டத்தினுள்ள வுலக பேதங்களைப் பிண்டித்த பொருளென்பாருமுளர். அங்ஙனங்கூறுதல் சீவர்கட்குத் தேகாதிதத்துவந் தோன்றினமையானும் அவர்க்கே பிரதானமா யிச்சிருட்டி வந்தமையானுங் குற்றமாமென்க.

(தா-ம்.) சிருட்டி பிரகிருதி முதற் பிருதிவி பரியந்தமொன்றின் பின்னொன்றடைவாக வுதித்தல் கிரம சிருஷ்டியு மொருங்கே யுதித்தல் யுகபத் சிருஷ்டியுமா மெனவிருவகைத்தா மென்பதாம். (அ0)

---

‡ மகதத்துவம், அகங்காரதத்துவம், தன்மாத்திரா பஞ்சகம் என்னும் ஏழும் சத்தப்பிரகிருதி யெனப்படும். சத்தம் - ஏழு. பிரகிருதி - காரணமாயிருப்பது. மகதத்துவ முதலிய வேழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகிருதியாதலும் தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பிரகிருதியாதலுமுடையனவாமென்றறிக.

அ - கை.

இச்செய்யுளில் நிர்விகாரமான பிரமத்தில் விகாரமான விச் சகசீவபர மெங்ஙனந் தோற்றினவென்ற வினவிற்கு உத்தரமுணர்த்துகின்றூர்.

சுருதிசித்த மாதலினு லிவையுடன்பா டாகுந்
தூயபரப் பிரமமாம் விகாரமிலா விறையாற்
றருதலெங்ஙன் காரியங்கள் சடப்பகுதி யென்னிற்
ருளிலாக் கதிர்ச்சிலையி லிச்சையிலா தெழுந்த
பரிதியினு லழல்வரல்போற் பரசிவனுன் மூலப்
பகுதியிடை மகதாதி காரியங்கள் வரற்குக்
கருதின்முர ணிலையாகு மெனப்புகல்வ ரறிஞர்
காரியங்க டோற்றுதனல் வகையவையீண் டுரைப்பாம்.

(இ-ள்.) சுருதி - வேதங்களின், சித்தமாதலினல் - நிச்சயமாதலால், இவை - இவ்விரு சிருஷ்டியும், உடன்பாடாகும்-அங்கீகாரமாம், தூயபரப் பிரமமாம் - சுத்தப்பிரமமாகிய, விகாரமிலா - நிர்விகாரமான, இறையால் - ஈசனல், சடப்பகுதி - சடமான பிரகிருதியினின்று, காரியங்கள் - சகதாதி காரியங்கள், தருதலெங்ஙனென்னில் - சிருஷ்டிக்கப்படலெங்ஙன மெனின், தாளிலா - இச்சாவெத்தன மின்றிய, கதிர்ச்சிலையில் - சூரியகாந்தக்கல்லில், இச்சையிலாது-இச்சாவெத்தன மின்றி, எழுந்தபரிதியினல் - உதித்த சூரியனல், அழல்வரல்போல் - அக்கினியுண்டாவதுபோல, பரமசிவனல் - நிர்விகாரமான சிவத்தினல், மூலப்பகுதியிடை - மூலப் பிரகிருதியினின்று, மகதாதி - மகதத்துவமுதலிய, காரியங்கள் வரற்கு - சகத்துண்டாதற்கு, கருதின் - யூகிக்கின், முரணிலையாகுமென - மாறுபாடில்லையாமென்று, அறிஞர் - அறிவுடையோர், புகல்வர் - சொல்லுவார்கள், காரியங்கடோற்றுதல் - காரியங்களுண்டாதல், நால்வகை-நான்குவிதமாம், அவை - அவற்றை, ஈண்டுரைப்பாம் - இங்குச்சொல்லுவாம், எ - று.

சுத்தமாயையிற் ருேன்று மீசனுக்குச் சூரியனையும், மூலப்பகுதிக்குச் சூரிய காந்தக் கண்ணுடியையும், சகத்திற்கழலையு முவமித்தவாறும்.

(தா - ம்.) இச்சாவெத்தன மின்றிய வாதித்தன் சமுகத்தினுள்ள சடமான காந்தக்கல்லினின்று அக்கினி தோற்றுவதுபோல நிருவிகாரமான வீசனது சந்நிதியிற் சடமான பகுதியினின்று சகசீவபரந் தோற்றினவென்பதாம். (அக)

அ - கை.

இச்செய்யுளில் சத்தான பிரமத்தில் மித்தையான ஜகத்சிருஷ்டி யாதலையுவமான பூருவகமாய் விளங்க வுணர்த்துகின்றூர்.

* விருத்திபரி ணாமமா ரம்பம்விவர்த் தகமாம்
விர்ந்தபடங் குடிபாவம் பாறயிரா கார

* (1) விருத்தி - காரணத்தினின்றும் சூக்குமத்திரியாய்க் காரண முண்டாதலாம்.

முரைத்தலுறு தந்துபட நியாயம்வன் பழுதை
யுரகவுரு முறையவற்றின் திட்டாந்த மாகும்
வருத்துகயிற் றரவங்கந் திருவநகர் குற்றி
மகன்கனவிந் திரசாலஞ் சுத்திகா ரசிதந்
தெரித்தவிவை முதலனவாந் திரிதலின்மெய்ப் பொருளிற்
றிரிந்திடுபொய்ப் பொருளதுகற் பிதமாதற் குவமை.

---

இதற்கு உதாரணம்:—ஆடைவீடுருவமாக வமைதலும் பொன் பணியுருவமாக வமைதலும்போல்வதாம். இங்கு வீடுருவமும் பணியுருவமும் மீண்டுந் தத்தங்காரணமான ஆடையின் ஸ்திதியையும் பொன்னின் ஸ்திதியையுமடைதல்காண்க. விருத்தியெனினும் சூக்குமபரிணும மெனினுமொக்கும். பரிணமம் - திரிவு.

(2) பரிணமம்-ஒருவஸ்து தன் அவஸ்தையைவிட்டு வேறு அவஸ்தையை யடைவதாம். இதற்கு உதாரணம்:—பால்தயிராதல்போல்வதாம். இது ஸ்தூல பரிணும மென்று சொல்லப்படும்.

[சூக்குமபரிணுமத்திற்கும் ஸ்தூலபரிணுமத்திற்கும் உள்ளவேற்றுமை:—காரணத்திற்குக் கெடுதிவாராது திரிந்துண்டாயகாரியம் மீண்டு மக்காரணத்தில் விலயமாவது சூக்குமபரிணுமமெனவும், காரணங்கெடத் திரிந்துண்டாயகாரியம் மீண்டும் மற்றொருவடிவ மாதலேயன்றி முன் வடிவ மாகாதொழிதல் ஸ்தூலபரிணும மெனவுமறிக. பொன் பணியாய போது அப்பணி மீண்டும் பொன்னுதலேயும்,பால் தயிராயபோது அத்தயிர் மீண்டும் பாலாகாமையையு முய்த்துணர்க.]

(3) ஆரம்பம்-பலவவயவங்களோடு கூடிய பலகாரணங்களால் பலவவயவங்களோடுகூடிய ஒருகாரிய முண்டாதலாம். இதற்குதாரணம்:—பலஅவயவங்களோடு கூடிய பலநூல்களால் பலவவயவங்களோடு கூடிய ஓராடையுண்டாதல்போல்வதாம்.

(4) விவர்த்தம் - ஒருவஸ்து தன் சொரூபத்தை விடாமல் வேறு சொரூபத்தைக் காண்பித்தலாம்.

இதற்குதாரணம்:—கயிறரவு முதலியனவாம். கயிறானது தனது சொரூபத்திற்குப் பங்கம் வாராது வேறு சொரூபத்தை (அரவை)க் காண்பித்தலறிக.

பிரமத்தினின்று முலகுண்டாதற்கு ஈண்டுக் கூறிய நால்வகைப் பட்சங்களில் முதல் மூன்றுபட்சமும் தோஷசகிதமாயிருத்தலால் ஈற்றதாகிய விவர்த்தபட்சமே கொள்ளத்தக்கதாம்.

பிரமம் நிர்விகார மென்றும் நிரவயவ மென்றும் சுருதி கூறுதலால் விகாரமுடைய விருத்தியும் பரிணுமமும் அவயவமுடைய ஆரம்பமும் ஈண்டொவ்வாவாயினவென்க.

(இ-ள்.) விருத்தி - (காரியத்தோற்றங்கள்) விருத்தியும், பரிணமம் - பரிணமமும், ஆரம்பம்-ஆரம்பமும், விவர்த்தகம்-விவர்த்தகமும், ஆம்-என நான்குவகையாம், (இவற்றுள்) விரிந்தபடம்-விரிந்திருக்கின்றதுகிலே, குடி பாவம் - வீடுருவமும், பால் - பாலே, தயிராகாரம்-தயிர் வடிவமும், உரைத் தலுறு - சொல்லாகின்ற, தந்து - நூலே, படநியாயம் - ஒழுங்கான துகிலு ருவமும், வன்பழுதை - வன்மையுள்ளரச்சுவே, உரகவுரு - சர்ப்பரூபமும், முறை - நிரலே, அவற்றின் - அவ்விருத்தியாதி நான்கனுக்கும், திட்டாந்த மாகும் - திருஷ்டாந்தங்களாம், வருத்து-மனதை வருத்துகின்ற, கயிற்றர வம்-ரச்சுசர்ப்பமும், கந்திருவநகர்-கந்திருவநகரமும், குற்றிமகன்-தாணுபுரு டனும், கனவு - சொப்பனமும், இந்திரசாலம் - இந்திரசாலமும், சுத்திகா ரசிதம் - இப்பி வெள்ளியுமாக, தெரித்த – இங்ஙனந்தெரிவித்த, இவை முத லனவாம் - இவை முதலானவை, திரிதலில் - அழிவின்றிய, மெய்ப்பொரு ளில் - சத்தான பிரமத்தில், திரிந்திடு - நசிக்கப்பட்ட, பொய்ப்பொருளது - மித்தையா சகத்து, கற்பிதமாதற்கு - கற்பிதமாக வுண்டாதற்கு, உவமை - உவமானமாம், எ – று.

'முறை' என்றதனல் விருத்தி படம்வீடாதலும், பரிணமம் பால் தயி ராதலும், ஆரம்பம் தந்துபடமாதலும், விவர்த்தகம் ரச்சு சர்ப்பமாதலுமாம். வருத்துமென்றது பிராந்தியினற் பய கம்பனுதி யுண்டாதலே.

(தா-ம்.) பிரமத்திற்சக மிங்ஙனம் கற்பிதமா யுண்டாயிற்றென்பதாம்.

அ - கை.

இச்செய்யுளில் உண்மையான பிரமத்தில் மித்தையான ஜக சீவ பரந் தோற்றின் அத்தோற்றப்பிராந்தி யாருக்கென்ற வினவிற்கு உத்தரமுணர் த்துகின்றூர்.

பொய்ப்பொருள்கற் பிதமாயிற் றவிகாரி யாகப்
 பொருந்துமுயி ரிடத்தெனின்முன் பிராந்தியார்க் கென்னி
லொப்பில்சதி பதிரதிமா லுருவச்சொப் பனந்தா
 னெருமுனிவன் பானுதிப்பி னதனலங் கவனுக்
கெப்பழுது மிலாததுபோற் சான்றுமான் மாவி
 லிலங்குகுண வுருவமாம் பகுதியினன் மருளு
மெய்ப்பரிய ஞாதிருவும் பிராந்திஞா னமும்பொய்
 விடயனே யமும்வரினு மவற்கிடையூ றிலேயே.

(இ - ள்,) பொய்ப் பொருள் - மித்தியாவஸ்து, அவிகாரியா கப்பொருந்தும் - நிர்விகாரியாயிருக்கின்ற, உயிரிடத்து - ஆத்மாவி னிடத் தில், கற்பிதமாயிற்றெனின் - மித்தையாக வுண்டாயிற்றென்றால், முன் பிராந்தி - முற்கூறிய பிராந்தியானது, யார்க்கென்னில் - யாருக்கென் றால், ஒப்பில் - சமானமின்றிய, சதி - கற்புடைய தலைவியும், பதி - தலைவ னுங்கூடி, ரதிமால் - அனுபவிக்கும் ரதிகாங்கிசை யென்னும், உருவம்-

இத்திரிவிதரூபமான, சொப்பனம் - சொப்பனமானது, ஒருமுனிவன்பால் - ஒருயோகீசுவரனிடத்தில், உதிப்பின் - தோற்றின், அதனல் - அக்கனவினல், அங்கவனுக்கு-அவ்விடத்தவ்யோகீசுவரனுக்கு, எப்பொழுதுமிலாதது போல் - யாதொருகெடுதியு மில்லாததுபோல, சான்ருமான்மாவில் - சாட்சியான வாத்மாவினிடத்தில், இலங்கு - விளங்காநின்ற, குணவுருவமாம் - திரிகுணாத்மகமான, பகுதியினல் - பிரகிருதியினல், மருளு மெய்ப்பரிய - மித்தியாப் பிராந்தியையுடைய, ஞாதிருவும் - ஞாதாவும், பிராந்திஞானம் - மயக்கஞானமும், பொய்விடயம் - பிராந்திவிஷயமான, ஞேயமும் - ஞேயமுமாகிய திரிபுடிகள், வரினும் - தோற்றினும், அவற்கு - அவ்வாத்மாவிற்கு, இடையூறிலை - யாதோரானியுமில்லை, எ - று.

சகசநிஷ்டையையுடைய யோகி சாக்கிரத்திற் பிராரத்தவசமாயெவ்விதவனுபவங்கள் வந்தாலும் அவற்றைத் தனது பிரமாநந்தமாயனுபவித்தலின் இங்ஙனங் கூறினரென்க. 'அவிகாரியாகப் பொருந்து முயிர்' என்றதனல் அது கூடஸ்தனம். ஆகவே, அது பிரம மென்பதாயிற்று. முனிவன்போல வாத்மா, கனவைப்போலச் சங்கற்பம், சதிகேளி மயக்கம்போலத் திரிபுடிகள்.

(நா - ம்.) கனவிற்கண்டமயக்கமாய மன்மதவிகாரத்தையவ்வவத்தையிற்ருனே கனவெனக் கண்டவர்க்கு எங்ஙன மவ்விகாரமின்ருே அங்ஙனமே சகத்துற்பத்தி முதலிற்ருனே தனது விலாசமாய்க் கண்டிருந்த பிரமத்திற்கு என்றும் பிராந்தியில்லையென்றும் இத்திரிபுடிவிகாரஞ் சிதாபாசர்களுக்கேயாமென்றும் விளக்கியவாறும். (அரு)

அ - கை.

இச்செய்யுளில் சீவர்கள் மறைப்பு நீங்கு நிமித்தமுண்டான ஜகசிருஷ்டியிற் சீவகற்பித முணர்த்துகின்ருர்.

இறைவனற் ருேன்றியமா யாமயமா முலக
மிருந்தபடி யிருக்குந்தன் வடிவினு லதனுண்
மறைவிலாச் சீவபுத்தி விருத்திகற் பிதமா
மற்றொருபோக் கியவடிவ மேவிருப்பு விடயம்
வெறுவிதாம் வெறுப்புவிட யத்தினெடு நொதுமல்
விடயமெனத் திரிவிதமா மவையாவை யென்னின்
முறையின்வனி தாதிபுலி யெழுவாய்வீழ் துரும்பு
முதலனவா மெனமொழிவர் முற்றுமுணர்ந் துடையோர்.

(இ-ள்.) இறைவனல் - ஈசனல், தோன்றிய-உண்டாகிய, மாயாமயமாம்-மாயாவடிவமாகிய, உலகம்-சகத்தானது, இருந்தபடி-முன்னுண்டானபடி, இருக்குந்தன் வடிவினல்-தன்வடிவத்துடனேரேபிரகாரமாயிருக்கும், அதனுள்-அவ்வுலகத்தில், மறைவிலா-மறைவுபடாத, சீவன்-சீவனது, புத்தி விருத்தி - புத்திவிருத்தியினல், கற்பிதமாம்-கற்பிதமான, மற்றொரு - வே

ருெரு, போக்கிய வடிவமே - போக்கிய ரூபமே, விருப்புவிடயம் - பிரிய விஷயமும், வெறுவிதாம்-விருப்பமற்ற, வெறுப்பு விடயத்திஞெடு-துவேஷ விஷயமும், நொதுமல் விடயமென - உபேட்சா விஷயமுமென, திரிவித மாம்-மூன்றுபிரகாரமாயிருக்கும், அவையாவை யென்னில் - அவையெவை யென்ருல், முறையில்-நிரலே, வனிதாதி-பெண் முதலியனவும், புலியெழு வாய்-வியாக்கிர முதலியனவும், வீழ்துரும்பு முதலான - வீழ்ந்துகிடக்கின்ற திரணமுதலியனவும், ஆமென - ஆகுமென்று, முற்றுமுணர்ந்துடையோர்-யாவுமுணர்ந்த சத்துக்கள், மொழிவர் - சொல்லுவார்கள், எ - று.

'முறையின்' என்றமையின் வனிதாதி விருப்புவிஷயமெனவும், புலியாதி வெறுப்பு விஷயமெனவுந் துரும்பாதி நொதுமல் விஷயமெனவுங் கொள்க.

(தா - ம்.) முத்திசாதனமாய் வந்தது ஈசுரசிருஷ்டியெனவும், பந்த சாதனமாய்வந்தது ஜீவசிருஷ்டியெனவும் விளக்கியவாறும். (அ௬)

அ - கை.

இச்செய்யுளில் ஈசுரசிருஷ்டியி ஞெருமையையுஞ் சீவசிருஷ்டியின் பன்மையையும் உவமான பூருவகமாக வுணர்த்துகின்ருர்.

ஈசனிரு மிதமான வேகாகா ரமும்பி
    னெய்துமுயிர்க் கற்பிதமாம் பலவாகா ரமுமோர்
தேசவிட யத்துறுதற் கெவ்வாறிங் கென்னிற்
    றிட்டாந்த மீசனிரு மிதமணியா திகடாம்
பேசிலொரு தகையாய்ப்போத் திருபுத்தி தன்கற்
    பிதநாஞ விதத்திஞ லவைதமைப்பெற் ருேனுக்
காசைவிட யமதாகிப் பெருற்குவெறுப் பாகி
    யரியதுற விக்குபேட் சாவிடய மாமே.

(இ-ள்.) ஈசனிருமிதமான - ஈசுரசிருஷ்டியான, ஏகாகாரமும்-ஏக வடிவமும், பின்னெய்தும் - பின்னுண்டான, உயிர்க்கற்பிதமாம் - சீவசிரு ஷ்டியான, பலவாகாரம் - நாஞவித போகாகாரங்களும், ஓர் தேசவிடயத் துறுதற்கு - ஓரிடத்துள்ள விடயத்திருத்தற்கு, திட்டாந்தம்-திட்டாந்தமானது, எவ்வாறிங்கென்னில் - இங்கெவ்வண்ணமா மென்ருல், ஈசனிருமிதம் - ஈசுரசிருஷ்டியான, மணியாதிகள் - இரத்தின முதலானவைகள், பேசில் - சொல்லுமிடத்து, ஒருதகையாய் - ஒருதன்மையா யிருந்தும், போத்திரு - சீவனுடைய, புத்தி கற்பிதம் - புத்தி கற்பிதமானது, நாஞ விதத்திஞல்-பலவிதமாயிருப்பதிஞல், அவை-அவ்விரத்திஞதிகள், தமை-தம்மை, பெற்ருேனுக்கு - அடைந்தவனுக்கு, ஆசைவிடயமதாகி - இராக விஷயமுமாய், பெருற்கு - அடையாதவனுக்கு, வெறுப்பாகி-துவேஷ விஷயமுமாய், அரிய துறவிக்கு - பெறுதற்கரிய விரத்தனுக்கு, உபேக்ஷாவிடயமாம் - நொதுமல் விஷயமுமாம், எ - று.

(நா - ம்.) மணியாதிய வீசுர சிருஷ்டியும் அவற்றுள் விருப்பாதிய மூன்றுமுண்டாதலே சீவசிருஷ்டியுமா மென்றுணர்த்திய வாறும். (அரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சிருட்டிகள் நன்கு விளங்குமாறு வற்புறுத்தி யுணர்த்துகின்றார்.

அப்பொருடா னேவிளங்கித் தோன் றுறுதற் கின்னு
மறைதுமோர் திட்டாந்தந் தோன்றியவோர் மாது
மெய்ப்பரிசோர் திறமாகப் போத்திருக்கள் புத்தி
விருத்திகற் பிதத்தினாற் றாதைக்கு மகளாய்த்
தப்பில்கொழு நற்குக்கா தலியாகி மகற்குத்
தாயாகி மாதுலற்கு மருகியா யிருப்ப
ளிப்பரிசு விடயமெலா மிறைவனிரு மிதமு
மிலங்குயிர்க்கற் பிதமுமென விருதிறத்துற் றிடுமே.

(இ-ள்.) அப்பொருள்-முற்கூறிய சிருட்டிகள், விளங்கித் தோன்றுறுதற்கு - விளக்கமாய்த் தெரிவதற்கு, இன்னும் - இன்னமும், அறைதுமோர் திட்டாந்தம்-ஓர் திருஷ்டாந்தஞ்சொல்லுகின்றோம், தோன்றிய-ஈசுரசிருட்டியினாலுண்டான, ஓர் மாது-ஒரு பெண், மெய்ப்பரிசு-தேகத்தன்மையால், ஓர் திறமாக-ஒரே பிரகாரமாயிருக்க, போத்திருக்கள் - சீவர்களின், புத்தி விருத்தி - புத்திவிருத்தியினது, கற்பிதத்தினால்-கற்பனையால், தாதைக்கு - தந்தைக்கு, மகளாய் - குமாரியாகியும், தப்பில் - தவறின்றிய, கொழுநற்கு- மணாளனுக்கு, காதலியாகி - மனைவியாகியும், மகற்கு - குமாரனுக்கு, தாயாகி - மாதாவாகியும், மாதுலற்கு - மாமனுக்கு, மருகியாய் - மருமகளாகியும், இருப்பள் - இருப்பாள், இப்பரிசு - இத்தன்மையாக, விடயமெலாம் - சர்வவிஷயங்களும், இறைவனிருமிதமும் - ஈசுரசிருஷ்டியும், இலங்கும் - விளங்காநின்ற, உயிர்க்கற்பிதமுமென-சீவசிருஷ்டியுமுமாமென, இருதிறத்துற்றிடும் - இவ்விருதன்மையாக விருக்கும், எ - று, தான் - ஏ-அசை.

(நா - ம்.) ஏகமான்வோர் பெண்வடிவைச் சீவசிருஷ்டி யெனவும் புத்திரியாதிய பேதமாகக் கற்பிப்பது சீவசிருஷ்டி யெனவும் விளக்கியவாறும். (அசு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சிருஷ்டிகளில் ஈசுரசிருஷ்டி முத்திசாதனமெனவும் சீவசிருஷ்டி முத்தியை யடைதற்கும் விடுதற்கு மேதுவெனவும் அதுவும் சாத்திரப்பிரபஞ்சம் அசாத்திரப்பிரபஞ்சமென விரண்டாமெனவும் அவற்றுள்ளும் சாத்திரப்பிரபஞ்சம் இரண்டாமெனவும் உணர்த்துகின்றார்.

அண்ணனிரு மிதப்பிரபஞ் சந்தான்வா திப்ப
தல்லாமை யானுநூ லாசிரிய வடிவாய்

நண்ணலரு முத்திசா தனமாயுந் தன்னு
னழுவவொண்ணு மையினுனு மனையதுதா னிற்க
வெண்ணரிய சீவகற் பிதமாய வதுதா
னிருபிரபஞ் சங்கள்சாத் திரத்தொடசாத் திரமாங்
கண்ணுமசாத் திரப்பிரபஞ் சங்கொலிரு திறனுங்
கழறிற்றீ விரமந்த மெனவவைமீண் டுரைப்பாம்.

(இ-ள்.) அண்ணனிருமிதம் - ஈசுரசிருஷ்டியாகிய, பிரபஞ்சம் - பிர பஞ்சமானது, வாதிப்பதல்லாமையானும்-பாதகமாயிராமையினுனும், நூலா சிரியவடிவாய்-சுருதிகுருரூபத்தினுல், நண்ணலரும்-அடைதற்கரிய, முத்தி சாதனமாயும்-மோக்ஷசாதனமா யிருத்தலினுனும், தன்னுல்-சீவனுகிய தன் னுல், நழுவவொண்ணுமையினுனும் - விடுதற்கசக்கியமாவதினுனும், அனை யதுதானிற்க-அவ்வீசுரசிருஷ்டி யவ்வாறே நிற்கட்டும், எண்ணரிய-கணித் தற்கரிய, சீவகற்பிதமாய-சீவகற்பனையாகிய, அதுதான்-(முமுட்சுக்களால் நிவிர்த்திக்கத்தக்கதான) அதுவே, இருபிரபஞ்சங்கள்-இரண்டு பிரபஞ்சங்க ளாம், (அவை) சாத்திரத்தோடு - சாத்திரப்பிரபஞ்சமும், அசாத்திரமாம்- அசாத்திரப்பிரபஞ்சமுமாம், கண்ணும் - வருத்துகின்ற, அசாத்திரப் பிர பஞ்சம் - அசாத்திரப்பிரபஞ்சமானது, கழறில் - கூறுமிடத்து, தீவிரம் மந் தமென - தீரவிரமும் மந்தமுமென, இருதிறனும் - இருவகைத்தாம், அவை மீண்டுரைப்பாம் - அவற்றை யிவ்விடத் தெடுத்துக் கூறுவாம், எ - று. கொல் - அசை.

ஈசுரசிருஷ்டி 'நழுவவொண்ணுமையினுனும்' என்றமையின் சீவசிரு ஷ்டி நழுவுமென்பது பெறப்பட்டது. (அஎ)

அ-கை.

இச்செய்யுளில் முற்கூறிய சீவசிருஷ்டியாய சாத்திர அசாத்திரப் பிர பஞ்சங்களின் இலக்கண முணர்த்துகின்றுர்.

சீவபர விசாரணையே யுரைத்தலரி தாஞ்சாத்
திரப்பிரபஞ் சங்காமா திகளேதீ விரமாங்
காவனுறு சாதிகரு மாதிகமொ டேதான்
கருதுமனக் கற்பிதமே மந்தமசாத் திரத்தின்
மேவுறுமிவ் விருதிறமு மாருயிர்மெய்க் காட்சி
விரோதிகளா தலின்ஞானம் பயிறற்கு முன்ன
மோவுவசாத் திரப்பிரபஞ் சந்தான்மெய்ஞ் ஞான
வுதவியா யான்மகாட் சியின்பின்விடு வதுவாம்.

(இ - ள்.) சீவபரவிசாரணையே-ஆன்மப்பிரம விசாரமே, உரைத்தல்- சொல்லுதற்கு, அரிதாம் - அரியதான, சாத்திரப்பிரபஞ்சம் - சாத்திரப்பிர பஞ்சமாம், காமாதிகளே - காமக்குரோதாதிகளே, தீவிரமாம் - தீவிரப்பிர

பஞ்சமாம், காவலுறும் - பந்தப்படுத்துகின்ற, சாதிகருமாதிகமொடு - சாதி கர்மாதிகளுடன், கருதுமனக் கற்பிதமே - கருதாநின்ற மனோசங்கற்பமே, மந்தம் - மந்தப்பிரபஞ்சமாம், அசாத்திரத்தின் - அசாத்திரப்பிரபஞ்சத்தின் கண், மேவுறும் - பொருந்துகின்ற, இவ்விருதிறமும் - இவ்விரண்டுதன்மையும், ஆருயிர் - கூடஸ்தனது, மெய்க்காட்சி - உண்மையான தரிசனத்திற்கு, விரோதிகளாதலின் - பகைகளாதலின், ஞானம் பயிறற்கு - ஞானப்பியாசத்திற்கு, முன்னம் - முன்னரே, ஒவுவ - விடத்தக்கனவாம், சாத்திரப்பிரபஞ்சம் - சாத்திரப் பிரபஞ்சமானது, மெய்ஞ்ஞானம் - உண்மை ஞானத்தை யடைதற்கு, உதவியாய் - சகாயமாயிருத்தலின், ஆன்மகாட்சியின்பின் - ஆத்மதரிசனமான பின்னர், விடுவதுவாம் - விடத்தக்கதாம், எ - று. தான் - அசை.

சாத்திரம்-தானுய்விளங்கும் யதார்த்தமாகிய வாத்மலாபமான பேரின்பத்தையடையு முத்தியாதியவற்றைக் கூறும். அசாத்திரம் புறம்பாயுள்ள கற்பிதமாகிய வனுத்மலாபமான சிற்றின்பத்தை யடையு முத்தியாதியவற்றைக் கூறும். தீவிரமென்றது வனிதாதி போகசம்பத்தின்மேற்காமிப்பதை. மந்தமென்றது வருணுசிரம தர்மப்படி சொர்க்காபேக்ஷையாற் செய்யுங்கருமத்தை.

(ப-ம்.) தானுகிய பிரமத்தில் அத்தியாசமாகத் தோற்றிய மூலாஞ்ஞானத்தினுற் றேன்ருத தன்னை யதார்த்தமாகத் தரிசிக்கு நிமித்தஞ் சீவர்களுடைய அவித்தியா நாசத்தின்பொருட்டு ஈசுரானுக்கிரகத்தினுலுண்டான சரீரத்தினின்றும் இச்சநந மரணப் பிரவாகரூபத்திற்கு ஏதுவான காமாதிகளாகிய தீவிரத்தை நீக்கி மேற்செய்யுங் கர்மங்களின் மனுஷாநந்தமாதிய சுகங்களை யனுபவிக்கும் பதப்பிராப்திகட்கு ஏதுவாகுங் கர்மரூப மந்தத்தை நீக்கி மேல் நிஷ்காமமான சற்கிருத்தியங்களினுற் சித்தசுத்தியும் அதனுற் சாதன சதுஷ்டயமும் உண்டாதலின் தீவிர மந்தங்களாய வசாத்திரப் பிரபஞ்சம் 'ஞானம் பயிறற்கு முன்னமோவுவ' எனவும், இச்சாதனத்தினுற் பரமாத்மவிசாரம் பிறந்து அதனுல் மனனமும் அதனுல் நிதித்தியாசனமும் அதனுற் சமாதியுங் கூடினவிடத்தில் அங்ஙனம் விசாரித்த விசாரம் நீங்கலின் 'சாத்திரப் பிரபஞ்சந்தான் மெய்ஞ்ஞான வுதவியா யான்மகாட்சியின்பின் விடுவதுவாம்' எனவுங்கூறினுர். இவ்விரண்டும் விடுவதாயினும் அசாத்திரப்பிரபஞ்சம் ஆன்மலாபத்தைக் கொடாமலும் சாத்திரப்பிரபஞ்சம் அதனைக் கொடுத்தும் நீங்குமாதலின் இச்சாத்திரப் பிரபஞ்சம் முமூட்சுக்களால் முக்கியமாக விரும்பத்தக்கதாயிற்று.

வினு:—ஆத்ம தரிசனத்துக்கு விரோதமான தீவிரமந்தமெனும் அசாத்திரப் பிரபஞ்சம் விடத்தக்கதுதான். சாத்திரப்பிரபஞ்சத்தை விடுதலெற்றிற்கு?

விடை:—பரமாத்ம விசாரணையால் ஆத்மதரிசனமாயினும் அவ்வதிஷ்டானமான கூடஸ்தப் பிரமாயிக்கியத்தின்கண் இவ்விருதன்மையு நீங்குமிடத்து அதனை விசாரிக்குஞ் சாத்திரப் பிரபஞ்சமும் நீங்குதலாமென்க.

(நா - ம்.) சீவேசுர சிருஷ்டிகள் முத்தியின்க ணில்லையென்ப துணர்த்தியவாறும். (அஅ)

அ - கை.

முற்கூறிய சீவனுக்கு மூன்றுபாதியும் எட்டத்தியாசமும் ஐந்தவத்தையுங் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளில் மூன்றுபாதிகளின் நாமங்களும் அவற்றினொன்ற னிலக்கணமு முணர்த்துகின்றார்.

தீவிரமந் தங்களுயிர்க் காட்சியுற்ற பின்னுந்
　திகழ்முத்தி பெறற்பொருட்டு விடுவனவென் றறிக
பாவமுறு மவிச்சின்னோ பாதிபதி விம்போ
　பாதியுட னத்தியா சோபாதி யெனவே
மேவுமுபா திகளொருமூன் றுளவவற்றை முறையே
　விளம்பியிடிற் சுழுத்தியுரு வாமவித்தை தானே
யாவரண வவிச்சின்னோ பாதியாம் பிரத்திய
　கான்மாவிற் கதனதுகா ரியமாம்புத் தியினில்.

(இ - ள்.) தீவிரமந்தங்கள்-முற்கூறிய தீவிரமந்தங்கள், உயிர்க்காட்சி-ஆத்ம தரிசனத்தை, உற்றபின்னும் - அடைந்த பின்பும், திகழ் - விளங்காநின்ற, முத்திபெறற்பொருட்டு- மோட்சமடையு நிமித்தம், விடுவனவென்றறிக-விடத்தக்கன வென்றறிவாயாக, பாவமுறும்-பாவனையாயுள்ள, அவிச்சின்னோபாதி - அவிச்சின்னோ பாதியும், பதிவிம்போ பாதியுடன் - பிரதிபிம்போபாதியும், அத்தியாசோ பாதியென - அத்தியாசோபாதியுமென, மேவுமுபாதிகள் - மேவாநின்ற வுபாதிகள், ஒருமூன்றுள - ஒப்பற்ற மூன்றுள்ளனவாம், அவற்றை - அவைகளை, முறையே-நிரலே, விளம்பியிடில் - சொல்லுமிடத்து, பிரத்தியகான்மாவிற்கு-கூடஸ்தனுக்கு, சுழுத்தியுருவாம்-சுழுத்திவடிவமான, அவித்தைதானே - அவித்தையே, ஆவரண அவிச்சின்னோபாதியாம் - மறைப்புவடிவ அவிச்சின்னோபா திபாகும், அதனது - அவ்வவித்தையின், காரியமாம்-காரியமான, புத்தியினில்-புத்தியில், எ-று.

அவிச்சின்ன + உபாதி = அவிச்சின்னோபாதியெனவும், பதிவிம்ப + உபாதி = பதிவிம்போபாதியெனவும, அத்தியாச + உபாதி = அத்தியாசோபாதியெனவும், நிலைமொழியீற்று அகரமும் வருமொழி முதலி னுகரமுங் கெட்டுக் கமலபத்திரோதகம்போல ஓகாரமாதல் குணசந்தியாமென்க.

வினா:—ஞானப்பியாசத்துக்கு முன்அசாத்திரப் பிரபஞ்சமும், ஆத்ம தரிசனத்திற்குப்பின் சாத்திரப்பிரபஞ்சமும், முத்தியின்கண் இவ்வுபயப்பிரபஞ்சமும் விடத்தக்கவை யென்றதினால் ஞானப்பியாசத்திற்கு முன்னர் அசாத்திரப்பிரபஞ்சத்தை விடவேண்டுமென்றது அது பகையாதலின் விடத்தக்கதுதான். ஆத்ம தரிசனத்திற்குப் பின்னர்ச் சாத்திரப்பிரபஞ்சத்தின் லட்சியார்த்தம் வெளிப்படுத்தலின் அதன் வாச்சியார்த்தம் விடத்தக்கது தான். இவ்வுபயமும் முத்திபெறற்பொருட்டு விடவேண்டுமாயின் ஆத்ம தரிசனமும் முத்தியும் வெவ்வேறோ?

விடை:—ஆத்மதரிசனமென்பது சீவன்முத்தியாம், நிகழ்முத்தியென்பது விதேகமுத்தியாம். இச்சீவன்முத்தியே தேகோபாதி நீக்கத்தில் விதேகமுத்தியாதலின் இதற்கு முன்னும் பின்னும் விடவேண்டுமென்ற வுபயப் பிரபஞ்சமும் விதேகமுத்தியி லியல்பாகவே யில்லையென்பது தோன்ற இங்ஙனங் கூறினாரென்க. (அகூ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையா விரண்டு உபாதிகளின் இலக்கணமும் நான் கத்தியாசங்களி னாமமு முணர்த்துகின்றார்.

பற்றியவான் மாப்பதிவிம் பித்திடுத றானே
பதிவிம்போ பாதியாம் புத்திகத மாய
முற்றுசுக துக்கங்க ளுயிர்நுகர்தல் போல
முயலுதலே யத்தியா சோபாதி யாகு
முற்ற * வத்தி யாசவிலக் கணமாம்வே றொன்றி
லொன்றுணர்த லாமிப்பி வெள்ளியது போல
மற்றதுநால் வகைப்படுமா மித்தையுட னிதர
மிற்றிதரே தரஞ்சத்தி யங்களினா லன்றே.

(இ - ள்.) பற்றிய - தொடர்ந்த, ஆன்மா - ஆத்மா, பதிபிம்பித்திடுத றானே - பிரதிபிம்பித்திடுதலே, பதிவிம்போபாதியாம் - பிரதிபிம்போபாதியாகும், புத்திகதமாய - அந்தக்கரணசம்பந்தமாகிய, முற்று சுகதுக்கங்கள் - சுகதுக்கங்கண்முழுதும், உயிர்நுகர்தல்போல - ஆத்மாவனுபவிப்பது போல், முயலுதலே - முயற்சிப்பதே, அத்தியாசோபாதியாகும் - அத்தியாசோபாதியாம், உற்ற - இங்ஙனம் வந்த, அத்தியாசம் - அத்தியாசத்தின், இலக்கணம் - இலக்கணமானது, இப்பி வெள்ளியதுபோல் - சுத்திகாரசிதம்போல, ஒன்றில் - ஒருவஸ்துவில், வேறொன்றுணர்தலாம் - மற்றொருவஸ்துவையறிதலாம், மற்றது - பின்னந்தவத்தியாசமே, நால்வகைப்படும் - நான்குவிதமாம், மித்தையுடன் - மித்தியாத்தியாசம், இதரம் - இதராத்தியாசம், இதரேதரம்-இதரேதராத்தியாசமும், சத்தியங்களினால்- சத்தியாத்தியாசமுமாகிய விவைகளினால், எ - று. ஆம் - சாரியை. ஆல் - அன்று - அசை. சத்தியங்களினாலென்னும் மூன்றனுருபு 'ஆம்' என்னும் வினைகொண்டு முடிந்தது.

(தா - ம்.) சுழுத்தியவத்தையிற் பிராஞ்ஞனாகக் கட்டுண் டிருத்தலின் 'ஆவரண அவிச்சின்னோபாதி' எனவும், அந்தக்கரணப்பிரதிபலனனாகிக்கனவில் தைசதனாக அதனைப்பார்த்திருத்தலின் 'பதிவிம்போபாதி' எனவும், மனோகற்பிதத்தா லுண்டானதுக்கரூபமானவிடயங்களைச் சுகம்போலக்கருதி நனவின்கண் அடைதற்கு விசுவனாகமுயலுதலின் 'அத்தியாசோபாதி' எனவும் ஆத்மாவிற்கவாந்தரமாகவந்தனபோலத் தோற்றினவென்பதாம்.()

* அஃதல்லாததன்கண் அதைக் காண்டல் அத்தியாசமெனப்படும்.

அ - ௯௧.

இச்செய்யுளில் முற்கூறிய நான் கு த்தியாசங்களின் இலக்கண முணர்த்துகின்றார்.

நெருப்பினொடு புணர்ச்சியாற் புனற்கழற்சி வரல்போ
 னித்தமுறு மான்மசந் நிதியதனின் முறையே
சரிப்பினொடு காண்டனினை வுறலறிதல் வரலாற்
 றகுந்தூல மெய்ம்மித்தி யாத்தியா சந்தா
னிரிப்பருமிந் தியங்களே யிதராத்தி யாச
 மிதரேத ராத்தியா சங்கரண மாகுந்
தரிப்பரிய மூலவகங் காரமது தானே
 சத்தியாத்தி யாசமெனச் சாற்றுவர்தக் கவரே.

(இ - ள்.) நெருப்பினொடு - அக்கினியின், புணர்ச்சியால் - கூட்டரவினால், புனற்கு - சலத்திற்கு, அழற்சிவரல்போல் - உஷ்ணம் வருவது போல, நித்தமுறும்-நித்தியமான, ஆன்மசந்நிதியதனின்-கூடஸ்தசந்நிதானத்தில், முறையே - கிரமமாக, சரிப்பினொடு-சஞ்சரித்தலும், காண்டல்-பார்த்தலும், நினைவுறல்-நினைத்தலும், அறிதல்-அறிதலும்,வரலால்-வருதலினால், தகும் - போகானுபவத்திற்குத் தகுதியாயுள்ள, தூலமெய் - தூலசரீரமே, மித்தியாத்தியாசம் - மித்தியாத்தியாசமாம், இரிப்பரும் - நீக்கற்கரிய, இந்தியங்களே - ஞானேந்திரிய கன்மேந்திரியங்களே, இதராத்தியாசம் - இதராத்தியாசமாம், கரணம் - அந்தக்கரணங்களே, இதரேதராத்தியாசமாகும் - இதரேதராத்தியாசமாம், தரிப்பரிய-நிலையில்லாத, மூலவகங்காரமதுதானே - மூலாங்காரமே, சத்தியாத்தியாசம் - சத்தியாத்தியாசமாம், எனச் சாற்றுவர்தக்கவரே - என்று சத்துக்கள் சொல்லுவார்கள், எ - று. தான் - ஏ - அசை.

மித்திய+அத்தியாசம்=மித்தியாத்தியாசம், இதர+அத்தியாசம்=இதராத்தியாசம், சத்திய+அத்தியாசம்=சத்தியாத்தியாசமெனப் புணர்ந்து நின்றன. இவ்வாறு புணர்தல் தீர்க்கசந்தியெனப்படும். இதர+இதர+அத்தியாசம்=இதரேதராத்தியாசமெனப் புணர்ந்து நின்றது. ஈண்டுள்ள விருவகைச் சந்தியுள் முன்னது குணசந்தியும் பின்னது தீர்க்கசந்தியுமா மென்க. 'முறையே' என்றமையின் சரிப்பு ஸ்தூலதேகத்திற்கும் காண்ட லிந்திரியங்களுக்கும், நினைத்த லந்தக்கரணங்களுக்கும், அறிதல் மூலவகங்காரத்திற்கு மெனக்கொள்க. கூடத்தனது சந்நிதியையடுத்திருத்தலால் அகங்காரமுதலிய நான்கிற்கு மித்தொழில்க ளுண்டாயினவென்க. எனவே இவைகட்கோ ரறிவு தனியே யின்றென்பது பெற்றாம்.

(ப-ம்.) நித்தியமானவாத்மா அனித்தியமான தேகசம்பந்தமாய் அதன் சரித்தலாதியின் றொழிலைத் தனதாகப்பாவித்தலின் 'மித்தியாத்தியாசம்' எனவும், தனக்கு வேறானவிந்திரியங்களின் றொழிலைத்தனதாகக் காண்ட

லின் 'இதராத்தியாசம்' எனவும், மனமாதியவற்றை யானெனதெனச் சங்கற்பிக்கும் சங்கற்பத்தைத் தனதாகப்பாவித்தலின் 'இதரேதராத்தியாசம்' எனவும், தானல்லாததைத் தானுகக்கருதும் அகங்காரத்தைத் தானுக வறிதலின் 'சத்தியாத்தியாசம்' எனவுங் கூறினுர்.

(நா-ம்.) அத்தியாசோபாதியினுலுண்டான நான்கத்தியாசங்களினிலக்கண முணர்த்தியவாறும்.

அ - கை.

இச்செய்யுளில் ஏனைய நான்கத்தியாசங்களுள் மூன்றத்தியாசங்களினிலக்கண முணர்த்துகின்ருர்.

ஆங்காரான் மாவிற்கு நானெனலாற் கயிற்றி
  னரவமென நிருபாதி காத்தியா சந்தா
ஞங்கார வியலான்மா விற்குநான் கருத்தா
  வாமெனலாற் சிவப்புவலம் போற்சோ பாதிகமா
மீங்காகுங் கரணதரு மான்மாவிற் கிச்சா
  மியநானென் றிருத்தலினு லலைபுனலிற் புக்க
வீர்ங்கதிரின் விம்பமெனத் தத்தருமாத் தியாச
  மெனவுரைப்பார் நான்குடும்ப வானெனநிற் கையினுல்.

(இ - ள்.) ஆங்காரான்மாவிற்கு - அகங்காராத்மாவிற்கு, நானெனலால் - அகமென்பதனுல், கயிற்றினரவமென - ரச்சுசர்ப்பம்போல், நிருபாதிகாத்தியாசம்-நிருபாதிகாத்தியாசமாம், ஆங்காரவியலான்மாவிற்கு-அகங்காரதருமாத்மாவிற்கே, நான் கருத்தாவாமெனலால் - அகங்கருத்தாவென்பதனுல், சிவப்புவலம்போல் - படிகத்திற்பற்றிய சிவப்புப்போல், சோபாதிகமாம் - சோபாதிகாத்தியாசமாம், ஈங்காகும் - இவ்விடத்திற்பொருந்திய, கரணதருமான்மாவிற்கு - அந்தக்கரண தருமாத்மாவிற்கே, இச்சாமியநானென்றிருத்தலினுல் - இச்சாமியக மென்பதனுல், அலைபுனலில் - தரங்கசலத்தில், புக்க - பிரதிபலித்த, ஈர்ங்கதிரின் விம்பமென - குளிர்ச்சிபொருந்திய சந்திரவிம்பம்போல், தத்தரு மாத்தியாசமென - தத்தருமாத்தியாசமென, உரைப்பர் - சத்துக்கள்சொல்லுவார்கள், நான் குடும்பவானென நிற்கையினுல் - அகங்குடும்ப வானென்றிருப்பதனுல், எ - று.

இச்சாமியக மென்பதன்பொருள் யானிச்சிக்கின்றே னென்பது.

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறுத வோரத்தியாசத்தி னிலக்கணமும் ஐந்தவத்தைகளினமமும் உணர்த்துகின்ருர்.

மைந்தர்முத லாயினு ருடனுன்மா விற்கு
  மண்ணுலகிற் பஃறியத்தர் விவகார மெனவே

யந்தமுறுஞ் சம்பந்த மாத்திராத் தியாச
மாமென்ப ரிவ் * வத்தி யாசங்க டம்மா

---

* பிராந்தி (மயக்க) ஞானத்தின் விஷயமாகிய மித்தியாவஸ்துவிற்கும் (கயிற்றிற்றோன்றியவரவிற்கும்) பிராந்திஞானத்திற்கும் அத்தியாசமென்று பெயராம். இவ்வத்தியாசம் அர்த்தாத்தியாசம் ஞானத்தியாசமென்றிருவகைத்தாம். [கயிற்றிற் றோன்றியவரவு அர்த்தாத்தியாசமாம்; அதன்ஞானம் ஞானத்தியாசமாம்.] இவ்விரண்டனுள் அர்த்தாத்தியாசம் எண்வகைத்தாம். அவை மித்தியாத்தியாச முதலியனவாம். அவ்வெண்வகையத்தியாசத்தின்றன்மை சுருக்கமாகக் கூறப்படுகின்றது. அதுவருமாறு:—

(1) மித்தியாத்தியாசம்.

நெருப்பினது சம்பந்தத்தினற் புனலுக்குச் சூடுண்டாதல் போன்று பிரத்தியகாத்ம சந்நிதியில் முறையே நடத்தல், காண்டல், நினைத்தல், அறிதல் ஸ்தூலசரீரத்திற் குண்டாதலால் அத்தூலசரீரம் ஆத்மாவின்கண் மித்தியாத்தியாசமாம். நடத்தலை ஸ்தூலதேகத்திற்கும், காண்டலை ஞானேந்திரியத்திற்கும், நினைத்தலை அந்தக்கரணத்திற்கும், அறிதலை (ஆபாச சகித) மூலவகங்காரத்திற்குங்கொள்க. நடத்தல் முதலியவை ஸ்தூலசரீரத்தை முன்னிட்டுநிகழ்தலின் அவையாவும் ஸ்தூலசரீரத்திற் குரியனவாகச் சொல்லப்பட்டன.

(2) இதராத்தியாசம்.

இந்திரியங்களில் ஆத்மா சொரூபமாக வத்தியாசமாகாது ஆத்மாவில் இந்திரியங்கள் சொரூபமாக அத்தியாசமா யிருத்தலின், இந்திரியவர்க்கம் இதராத்தியாசமாம். இதராத்தியாசமெனினும் அன்னியதராத்தியாசமெனினும் ஒக்கும். இரண்டில் ஒன்றனது அத்தியாசம் அன்னியதராத்தியாசமாம். அன்னியதரம் - இரண்டிலொன்று.

(3) இதரேதராத்தியாசம்.

நான் கர்த்தா நான் போக்தா என்னுமிடத்து அந்தக்கரணத்தின் விசேஷணமாகிய கருத்திருத்துவமும் போக்திருத்துவமும் ஆன்மாவினிடத்திலும் அந்தக்கரணம் இருக்கிறது விளங்குகின்றது என்னுமிடத்து ஆத்மாவின் விசேஷணமாகிய சத்தும் சித்தும் அந்தக்கரணத்திலும் அத்தியாசமாயிருத்தலின், அந்தக்கரணத்திற்கும் ஆத்துமாவிர்கு முள்ள அத்தியாசம் இதரேதராத்தியாசமாம். இதரேதராத்தியாசமெனினும் அன்னியோன்னியாத்தியாசமெனினு மொக்கும். ஒன்றற்கொன்றத்தியாசமாதல் அன்னியோன்னியாத்தியாசத்தின் தன்மையாம்.

(4) சத்தியாத்தியாசம்.

சுருதிசம்பந்தஞானம், யுக்திசம்பந்தஞானம், உலகசம்பந்தஞானமென்னு மூன்றனுள் உலகசம்பந்த ஞானத்தால் மூலவகங்காரம் அல்லது மாயை சத்தியமாக விவகரிக்கப்படுதலின், அது சத்தியாத்தியாசமாம். [மா

ஙந்துநிர்வி காரியான் மாவென்றல் பெற்று
நவிறருமைந் தவத்தையுள வவையாவை யென்னிற்

யைசுருதிசம்பந்தஞானத்தால் ஆகாயத்தாமரைபோன்று துச்சமாயும்,யுக்திசம்பந்த ஞானத்தால் கயிற்றரவுபோன்று மித்தையாயும் பிரதீதியாமென்க] [“சிரௌதம் யௌத்திகம் லௌகிகம் என்னும் மூவகை ஞானங்களால் இச்சகத்தாகிய காரியத்தோடுகூடிய மாயையைத் துச்சை, அநிர்வசநீயை, வாஸ்தவியென்னும் பேதத்தால்மூன்றுவகையாக வறியத்தக்கதாம்” என்று பஞ்சதசி கூறுகின்றது.] கயிற்றின்கண் அரவுபோன்று ஆத்மாவின்கண் மித்தையாகவிருக்கும்மாயையை ஆத்மாநாத்மவிவேகமின்றியபாமரர்களும் விஷயிகளும் ஆத்மாவைப்போலச் சத்தியப்பொருளாக விவகரித்தல்பற்றி அது சத்தியாத்தியாசம் எனப்பட்டது.

(5) நிருபாதிகாத்தியாசம்.

நான் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாக மயக்ககாலத்தில் பிரத்தியகாத்மாவென்றும் அகங்காரமென்றும் பேதமின்றிக் கயிற்றரவுபோன்று விவகரிக்கப்படுதலின், இது நிருபாதிகாத்தியாசமாம்.

(6) சோபாதிகாத்தியாசம்.

செவ்வரத்தம் பூவின் நிறம் படிகமணியில் ஆரோபமாக விளங்குதல் போன்று நான் கருத்தாவென்னுமிடத்து அகங்காரத்தின் தருமமாகியகருத்திருத்துவம் நான் என்னும் சொல்லுக்குண்மைப்பொருளாகிய ஆத்மாவினிடத்தில் ஆரோபமாக விளங்குதலின், இது சோபாதிகாத்தியாசமாம்.

[காரணத்தைக் கண்டவிடத்துக் காரியந் தோன்றுதொழிவது நிருபாதிகாத்தியாசமாம். அது கயிற்றைக்கண்டவுடன் அதிற்றோன்றிய பாம்பு தோன்றுதொழிவதுபோலாம். காரணத்தைக் கண்டவிடத்துங் காரியந் தோற்றிக்கொண்டிருப்பது சோபாதிகாத்தியாசமாம். அது கானலைக் கண்டவிடத்தும் கானனீர் தோற்றுவதுபோலாம். இவற்றின் விளக்கம் வருமாறு:—

நிருபாதிக அஞ்ஞான ஜந்நியம் சோபாதிக அஞ்ஞான ஜந்நியம் என்னும் பேதத்தால் பிராந்தி (மயக்கம்) இருவகைத்தாம். விலக்ஷண (தனது சமகாலபரியந்தங் காரியத்தை நிறுத்துவதாகிய) நிமித்தகாரணம் இங்கு உபாதியெனப்படுகிறது. அவ்வுபாதியின்றிக் கேவல அஞ்ஞானத்தால் தோன்றும் பிராந்தி நிருபாதிகப் பிராந்தியாம். அது ரஜ்ஜு சர்ப்பம் சுத்திரஜத முதலியவற்றின் பிராந்தியாம். விலக்ஷணமான நிமித்தகாரண வடிவ உபாதியோடு கூடிய அஞ்ஞான ஜந்நியப்பிராந்தி சோபாதிகப்பிராந்தியாம். எங்ஙனம் பிரகாச அந்தகாரங்களின் சம்பந்தவடிவ உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தால் தோன்றும் ஆகாயத்தினது நீலத்தன்மையின் பிராந்தி யிருக்கின்றதோ, எங்ஙனம் பிம்பத்தின் சந்நிதிவடிவ உபாதியோடு கூடிய கண்ணாடியின் அஞ்ஞானத்தால் தோன்றிய பிரதிபிம்பத்தின் பிரா

ஞெருந்தமூறு நனவொடுசொப் பனஞ்சுழுத்தி துரியந்
துரியாதீ தந்தானு மவற்றியல்பு மொழிவாம்.

ந்தி இருக்கின்றதோ, அங்ஙனமே ஜீவர்களது அதிருஷ்டவடிவ உபாதி யோடு கூடிய மூலாஞ்ஞானத்தால் தோன்றிய பிரபஞ்சத்தின் பிராந்தி இருக்கின்றது. அது முற்கூறிய உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தால் தோன்றியதாயிருத்தலின், சோபாதிகப் பிராந்தியாம். நிருபாதிகப் பிரா ந்தியின் பாதிதாநுவிர்த்தி (பாதமாகியபின் தோற்றுதல்) உண்டாகிற தில்லை; ஏனெனில், உபாதியின்மையால் அதன் நாசமும் பாதமுமாகிய இரண்டு மிருத்தலினென்க. சோபாதிகப் பிராந்தியின் பாதிதாநுவிரு த்தி யுண்டாகின்றது; ஏனெனில், மித்தியாத்தன்மை நிச்சயவடிவ பாதம் [பொய்யென்று நிச்சயித்தல்] உண்டாகியும் உபாதியின் இருப்புவரையில் ஸ்வரூபத்தின் அப்பிரதீதி (விளங்காமை) வடிவ நாசமின்மையாலென்க.

(7) தத்தருமாத்தியாசம்.

நான் இச்சிக்கின்றேன் என்பதில் அந்தக்கரணத்தின் தருமமாய இச்சை நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய ஆத்மாவில் நீரிற் பிரதி பலித்த சூரிய பிம்பம்போன்று அத்தியாசமாய்த் தோன்றுதல் தத் (அந்தக் கரணத்தின்) தருமாத்தியாசமாம். இங்கு அந்தக்கரணத்தின் தருமமாத் திரம் ஆத்மாவில் அத்தியாசமாதல்பற்றி அது தத்தருமாத்தியாசமென்று கூறப்பட்டது.

(8) சம்பந்தமாத்திராத்தியாசம்.

யான் குடும்பி என்னுமிடத்துத் தனக்கும் புத்திரர் முதலானவர்களு க்குமுள்ள சம்பந்தம் கப்பலிற் பிரயாணஞ்செய்யும் மக்களது விவகாரம் போன்றிருத்தலின், இது சம்பந்தமாத்திராத்தியாசமாம்.

ஈண்டுக்கூறிய வெண்வகை யத்தியாசங்களும் கீழ்க்கூறப்படு மிரு வகையத்தியாசத்தினுள் அடங்கும். அவை (1) சொரூபாத்தியாசம், (2) சம்சர்க்காத்தியாச மென்பனவாம்.

(1) சொரூபாத்தியாசம்.

தத்துவஞானத்தினால் பொய்யென்று நிச்சயிக்கத்தக்கவஸ்து (அரவு) அதிஷ்டானத்தி (கயிற்றி)ல் சொரூபமாக அத்தியஸ்தமா யிருக்கிறது. தேகாதிப்பிரபஞ்ச அனான்மாவிற்கு அதிஷ்டான (ஆன்ம) ஞானத்தினால் பாதம் (பொய்யென்று நிச்சயித்தல்) உண்டாதலால், ஆன்மாவில் அதன் சொரூபாத்தியாசமுண்டாகின்றது. ஒன்றன் முழுவடிவமும் மற்றொன்றில் அத்தியஸ்தமாதல் சொரூபாத்தியாசமாம்.

(2) சம்சர்க்காத்தியாசம்.

பாதிக்கத்தகாதவஸ்துவின் சொரூபம் அத்தியஸ்தமாகின்றதின்று. ஆனால், அதன் சம்பந்தம் அத்தியஸ்தமாம். ஆதலால் அநான்மாவில்ஆன் மாவின் சம்சர்க்காத்தியாச முண்டாகின்றது. ஆகவே இது சம்சர்க்காத்தி யாசமாம். சம்சர்க்கம் - சம்பந்தம்.

(இ - ள்.) மைந்தர் முதலாயினு ருடனுன்மாவிற்கு - புத்திரகளத்தி ராதிகளுடன் ஆத்மாவிற்கு, மண்ணுலகில் - பூமியின்கண், பஃறியத்தர் - ஓடத்திலிருப்பவரது, விவகாரமெனவே - விவகாரத்தைப்போன்று, அந்த முறும்-முடிவுள்ள, சம்பந்தமாத்திராத்தியாசம் - சம்பந்தமாத்திராத்தியாசம், ஆமென்பர்-ஆமெனவறிஞர் சொல்லுவார்கள், இவ்வத்தியாசங்கடம்மால் - இவ்வெட்டத்தியாசங்களினுல், நந்து - ஆக்கமுள்ள, நிர்விகாரியான்மாவென்றல் - ஆத்மா நிருவிகாரியென்பது, பெற்றும் - பெற்றனம், நவிறும் - சொல்லாநின்ற, ஐந்தவர்த்தையுள - பஞ்சாவத்தை யுள்ளன, அவை - அவ்வவத்தைகள், யாவையென்னில் - எவையென்முல், தொந்தமுறு - ஒன்றற்கொன்று சம்பந்தமுள்ள, நனவொடு - சாக்கிரமும், சொப்பனம் - கனவும், சுழுத்தி - சுழுத்தியும், துரியம் - துரியமும், துரியாதீதம் - துரியாதீதமும், ஆம் - ஆகும், அவற்றியல்பு - அவைகளின் றன்மையை, மொழிவாம் - மேற்கூறுவாம், எ - று - தான் - அசை.

(ப-ம்.) ரச்சுசர்ப்பம்போலக் கூடஸ்தசாயைதங்கிய அகங்காராத்மாவானது முன்னுள்ள கூடஸ்தனையும் பின்னுள்ள திரிகுணத்மகத்தையும் நோக்குமுபாதியின்றித் தன்னை நானென நோக்குதலின் 'நிருபாதிகாத்தியாசம்' எனவும், மாணிக்கச்சாயைபற்றியபடிகம் அதனைத்தன்னிறமாகக் காண்பது போலத் தனதுவடிவங் கூடஸ்த சாயையென வறியாது முற்கூறிய திரிகுணத்மகத்தை நோக்கிய வுள்முகத்தைக்கொண்டு தானேகருத்தாவெனமதித்தலின் 'சோபாதிகாத்தியாசம்' எனவும், சலப்பிரதிபிம்பத்தைச் சூரியனென்பதுபோல அந்தக்கரணசம்பந்தத்தினுலுண்டான அதன்தருமத்தைத் தன் தருமமாகக்காண்டலின் 'தத்தருமாத்தியாசம்' எனவும், ஓடத்திலுள்ளவர் சம்பந்தம்போலப் புத்திராதி விடயங்களின் ஏகதேச சம்பந்தமாத்திரத்தினுனே குடும்பியென நிற்றலின் 'சம்பந்த மாத்திராத்தியாசம்' எனவுங் கூறினர்.

வினு:—அற்றேல், இங்ஙனங்கூறிய அகங்காரான்மா யாது?

விடை:—மேற்கூறுதலாற் காண்க.

ஆன்ம சந்நிதியில் அகங்காரான்மா, அகங்காரவியலான்மா, கரணதருமான்மா, அகங்குடும்பான்மா ஆகியநான்குமாம். கரணதருமான்மா என்றலின் ஈற்றிலுள்ள ஆன்மாவை யிந்திரிய தருமான்மாவெனக் கொள்க; எனவே, கன்மேந்திரியங்களை யங்ஙனந் தூலதேகமென்றலின் அவற்றின் முன்னையவிரண்டுந் தருமியெனவும், பின்னையவிரண்டுந் தருமமெனவுமாம். இவ்வத்தியாசங்கள் தனது சந்நிதிசத்தையினுற் ருேற்றினுந்தான் அவற்றிற் சம்பந்தமின்றி யிருத்தலின், ஆத்மா நிருவிகாரியென்ருயிற்று. அவற்றின் சம்பந்தங்களைத் தானறிந்துகொண்டிருத்தலின் சமுசாரமாத்மாவிற்கு என்னினுமமையும்.

(தா - ம்.) கூடஸ்தனது இச்சாயெத்தனமின்றி அவனது சந்நிதியில் இயல்பாக நான்கத்தியாசங்களும், அகங்காரசம்பந்தமாக நான்கத்தியாசங்

களுமாகிய விஃவெண்வகை யத்தியாசங்களும் அவாந்தரமா யுண்டானது போலத் தோற்றின வென்பதாம். (கூரு)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறியவைந்தவத்தைகளுள் சாக்கிராவத்தையினிலக்கண முணர்த்துகின்றார்.

பெருந்தூல வைம்பூத மீரைந்திந் திரியம்
பிராணபஞ் சகமொடுநாற் கரணமிவை யுருவா
மருந்தூல சரீரத்திற் சாத்துவித குணமோ
டகாரவெழுத் தரிதெய்வம் விழியிடமே யாக
விருந்தாக விதயமல ரட்டதள கதியில்
விசுவசீ வனும்விராட் டிறையுமொருங் கடைந்து
வருந்தாவில் விடயங்கள் கரணமனைத் தானு
மருவிநுகர்ந் திடுதல்சாக் கிரமதா மன்றே.

(இ-ள்.) பெருந்தூலவைம் பூதம்-பெரியதூலபஞ்சபூதமும், ஈரைந்திந்திரியம் - தசேந்திரியங்களும், பிராணபஞ்சகமொடு - பஞ்சப்பிராணனும், நாற்கரணம் - அந்தக்கரண சதுஷ்டயமுமான, இவை-இவ்விருபத்துநான்கு தத்துவங்களும், உருவாம் - வடிவமான, அருந்தூலசரீரத்தில் - கிடைத்தற்கரிய தூலதேகத்தில், சாத்துவிதகுணமோடு-சத்துவகுணத்துடன், அகாரவெழுத்து-அகராக்ஷரமும், அரிதெய்வம் -விஷ்ணுதெய்வமும், விழியிடமேயாக - நேத்திரமே ஸ்தானமாக, விருந்தாக-புதுமையாக, இதயமலர்-இருதயகமலத்தினுள்ள, அட்டதளகதியில்-எட்டிதழ்களில், விசுவசீவனும்-விசுவரூபமானசீவனும், விராட்டிறையும் - விராட்டுருவமான வீசனும், ஒருங்கடைந்து - கூடிநின்று, வருந்தா - இன்பமாக, இல் - வனிதாதி, விடயங்கள் - விஷயங்களை, கரணமனைத்தானும் - கரணங்களனைத்தினலும், மருவிநுகர்ந்திடுதல் - கூடியனுபவித்தலே, சாக்கிரமதாம் - சாக்கிராவத்தையாம், எ - று, அன்று - ஏ - அசை.

கதி - இடம். 'கரணமனைத்தானும்' என்றமையின், அந்தக்கரணம் பிராண பஞ்சகத்தோடுங்கூடி ஞானேந்தியங்களினின்று கன்மேந்தியங்களால் விடயங்களை யனுபவித்தலெனவும், 'விழியிடம்' என்றதனல் அதனுள்ளிருக்கும் பாவைவடிவான ரூபமெனவுங்கொள்க.

(தா - ம்.) முற்கூறிய சான்ருகிய ஜீவாத்மா தூலசரீரத்தினுள்ள விருதயகமலத்தில் விசுவநாமத்தோடு விராட்டுடன் கூடியிருந்து நேத்திரஸ்தான முன்னிலையிற் சகலவிடயானுபவங்களையும் இந்திரியங்களாற் புசிப்பது சாக்கிராவத்தை யென்பதாம். (கூசு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் சொப்பனவத்தையினிலக்கண முணர்த்துகின்றார்.

பஞ்சபூ தமுஞ்சித்த புத்தியினின் றெழிந்த
 பதினேழின் மயமாஞ்சூக் குமதனுவி னின்று
விஞ்சுரஜோ குணமுகர வெழுத்ததிதெய் வந்தான்
 விரிஞ்சனிடங் களமாக நல்லிதய மென்னுங்
கஞ்சமலர்க் கன்னிகா கதியிற்றை சதனுங்
 கனககர்ப் பனுமருவி நனவின்வா சனையை
நெஞ்சமெனுங் கரணத்தா லனுபவிக்கை தானே
 நிகழ்ந்திடுஞ்சொப் பனமென்று நிகழ்த்துவர்மூ தறிஞர்.

(இ - ள்.) பஞ்சபூதமும் - ஐந்துபூதமும், சித்தபுத்தியினின்று - சித்தமும்புத்தியுமாகிய விவ்வேழினின்றும், ஒழிந்த - நீங்கிய, பதினேழின்மயமாம் - பதினேழின்வடிவமான, சூக்குமதனுவினின்று - சூட்சுமதேகத்திலிருந்து, விஞ்சு - மேலிட்டிருக்கின்ற, ரஜோகுணம் - ராசதகுணமும், உகரவெழுத்து - உகராக்ஷரமும், அதிதெய்வம் - அதிதெய்வமானது, விரிஞ்சன் - பிரமனும், இடங்களமாக - தானங்கண்டமுமாக, நல்லிதயமென்னும்-சிறந்த இதயமென்கின்ற, கஞ்சமலர்க் கன்னிகாகதியில்-தாமரைப்பூப் பொகுட்டில், தைசதனும் - தைசதனும், கனககர்ப்பனும் - இரணிய கருப்பனும், மருவி - கூடி, நனவின்வாசனையை - சாக்கிரவாசனையை, நெஞ்சமெனும் - மனமென்னும், கரணத்தால் - அந்தக்கரணத்தால், அனுபவிக்கைதானே - அனுபவிப்பதே, நிகழ்ந்திடும் - விளங்காநின்ற, சொப்பனமென்று-சொப்பனாவத்தையென, நிகழ்த்துவர் மூதறிஞர் - முதிர்ந்தவறிவுடையோர் சொல்லுவார்கள், எ - று.

நின்றொழிந்த பதினேழென்பது மனமும் அகங்காரமும் பிராண பஞ்சகமுந் தசேந்திரியமுமாம். இடங்களமென்றது அதனுள்ளிருக்கு மனத்தை.

(தா - ம்.) முற்கூறியசான்றாகிய அந்தராத்மா சூட்சும தேகத்தினுள் இருதயகமலப்பொகுட்டில் தைசதனும் இரணியகருப்பனோடுங்கூடிக் கண்டஸ்தான முன்னிலையில் வாசனாவிடயங்களை மனதினாற்புசிப்பது சொப்பனாவத்தை யென்பதாம். (கூரு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்தமுறையாற் சுழுத்தியவத்தையினிலக்கணமுணர்த்துகின்றார்.

மேய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங்களகு போல
 விரிந்தகா ரியங்களையுட் கொண்டுவா சனையோ
டாய்ந்தவான் மாசிரயத் தவத்தையற விருக்கு
 மரும்பகுதி மயமாங்கா ரணவுடம்பிற் றமமே
யேய்ந்தகுண மகரவெழுத் தரன்றெய்வ மிதய
 மிடமாந்தத் கமலமலர்ப் பொகுட்டுநடுக் கதியி

லோர்ந்தபிராஞ் ஞனும்பரனு மாய்ப்பிரமா நந்த
முறுமாயா விருத்தியெனு நுண்கரணந் தன்னால்.

(இ - ள்.) மேய்ந்துதிரி பார்ப்படக்கி - மேய்ந்து திரியாநின்றகுஞ்சுக ளைச்சிறையிலடக்கி, உறங்கு-நித்திரைசெய்கின்ற, அளகுபோல-பெட்டைக் கோழியைப்போல, விரிந்தகாரியங்களை-பலவகைப்பட்டு விரிந்துள்ள சமஸ்த காரியங்களையும், உட்கொண்டு - அடக்கிக்கொண்டு, வாதனையோடு - அச்சாக்கிராதி வாசனையுடன், ஆய்ந்தவான்மா - நுண்மையான வாத்மாவினது, ஆசிரயத்து-அனுசாரத்தில், அவத்தையற - ஈரவத்தைகளும்நீங்க, இருக்கும்-இருக்கின்ற, அரும் - அரிய, பகுதிமயமாம் - அவித்தியாரூபமாகிய, காரணவுடம்பில்-காரணதேகத்தில், தமமேயேய்ந்தகுணம் - பொருந்திய தமோகுணமும், மகரவெழுத்து - மகராக்ஷரமும், அரன்றெய்வம் - உருத்திரதேவதையும், இதயமிடமாம்-இருதயம் ஸ்தானமுமாக, தத்கமலமலர் - அத்தாமரைப்பூவினது, பொகுட்டுநடுக்கதியில் - கன்னிகாமத்தியத்தானத்தில், ஓர்ந்த-ஓர்ந்துள்ள, பிராஞ்ஞனும்-பிராஞ்ஞனும், பரனுமாய் - அந்தரியாமியுஞ்சேர்ந்து, பிரமாநந்தம் - பிரமாநந்தத்தை, மாயாவிருத்தியெனும் - அவித்தியா விருத்தியென்னும், நுண்கரணந்தன்னால்- சூக்குமகரணத்தினால், உறும்-அனுபவிக்கும், எ- று. ஏ - அசை.

'மேய்ந்துதிரி பார்ப்படக்கி யுறங்களகு' என்றமையின், அளகு என்பது பெட்டைக்கோழியாயிற்று. அவத்தையெனப்பொதுவாகக் கூறினமையின் ஈரவத்தையெனவும் காரணதேகத்தைச் சுட்டிவருதலின் பகுதியை அவித்தையெனவுங்கூறினும். இதயமிடமென்றது அதனுள்ளிருக்கு நுண்கரணத்தை. மாயாவிருத்தியெனு நுண்கரணமென்றது அவித்தையான் மறைபட்டு மெலிந்து நின்றவித்தையை. எனவே, சுழுத்தியில் அவித்தையினானும் கனவில் மனத்தினானும் நனவில்கரணங்களினானும் புசித்தலாம். பிரமாநந்தமென்றது அவித்தைக ளனைத்தும் இறந்து அவற்றால் வராநின்ற துன்பங்கணீங்கினவிடத்துள்ள சுகத்தை.

(நா - ம்.) முற்கூறிய சான்றாகிய பரமாத்மா காரணதேகத்தினுள் பிராஞ்ஞனாய் அவ்வியாகிருதனென்னும்பரனோடுங்கூடி யிதயகமலப்பொகுட்டுமத்திய விதயமுன்னிலையிலவித்தியாவிருத்தினா லானந்தமனுபவிப்பதே சுஷூத்தியவத்தை யென்பதாம். (கசு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் துரியம் துரியாதீதமென்னு மிரண்டனிலக்கணமும் சாக்கிராதியவத்தைகளுள் தாவரத்திற்குரியது சுழுத்தியவத்தையெனவுங் கூறுகின்றார்.

அனுபவித்தல் சுழுத்தியா மிந்நனவா திகண்மூ
வவத்தையொடு முத்தரும முப்புரமுத் தானம்

பினுமுத்தெய் வங்களெனும் பரியாய நாமம்
பெறுமுரைத்த சாக்கிரத்தே தத்கமல மழிந்து
மனவழக்கந் தவிர்ந்துபரந் தனைச்சிந்தித் திடலே
வருதுரிய மப்பரமான் மாவினமன் மடங்கன்
முனமுரைத்தல் செய்துரியா தீதமெனப் புகல்வர்
மொழிந்தவற்றுட் டாவரங்கள் பெறுதலிருட் சுழுத்தி.

(இ-ள்.) அனுபவித்தல்-(முற்கூறிய பரமாநந்தத்தை) யனுபவிப்பதே, சுழுத்தியாம் - சுழுத்தியவத்தையாம், இந்நனவாதிகள் - இச்சாக்கிராதியவத்தைகள், மூவவத்தையொடு - அவத்தாத்திரயத்துடன், முத்தருமம்- மூன்றுதர்மமும், முப்புரம் - மூன்றுபுரமும், முத்தானம் - மூன்றிடமும், பினும் - பின்னும், முத்தெய்வங்களெனும் - மூன்றுதெய்வங்களுமென்கின்ற, பரியாயநாமம் - பரியாயநாமங்களை, பெறும் - அடையும், உரைத்த- முற்கூறிய, சாக்கிரத்து - சாக்கிராவத்தையில், தத்கமலமழிந்து-முற்கூறிய அந்தக்கமலநீங்கி, மனவழக்கந்தவிர்ந்து-மனோவியாபாரம்நீங்கி, பரந்தனை - பிரமத்தை, சிந்தித்திடலே-சிந்திப்பதே, வருதுரியம் - வராநின்றதுரியாவத்தையும், அப்பரமான்மாவில் - அப்பரமாத்மாவினிடத்தில், மனமடங்கல்- மனங்கரைவதே, முனமுரைத்தல்செய்-முற்கூறிய, துரியாதீதமெனப்புகல்வர் - துரியாதீதமென்று சத்துக்களுரைப்பார்கள், மொழிந்தவற்றுள்- முற்கூறியவைந் தவத்தைகளுள், தாவரங்கள் பெறுதல்-விருட்சங்களடைவது, இருட்சுழுத்தி - அந்தகாரமாகிய சுழுத்தியொன்றே, எ-று.

துரியத்தில் ஈவேசுரரையும் அதீதத்தில் கூடஸ்தப் பிரமத்தையுங் கொள்க.

எற்றினுக்கென்றால், நனவில் விசுவனையும் விராட்டையும், கனவில் தைசதனையும் இரணியகருப்பனையும், சுழுத்தியிற் பிராஞ்ஞனையும்பரனையுங் கூட்டினமையினென்க.

(ப - ம்.) சாக்கிராதிமூன்றை 'மூன்றவத்தை' எனவும், இவை மூன்றுதன்மையாயிருத்தலின் 'முத்தருமம்' எனவும், மூன்றுதேகமாயிருத்தலின் 'முப்புரம்' எனவும், இருதயங் கண்டம் நேத்திரமென மூன்றிடமாயிருத்தலின் 'முத்தானம்' எனவும், மும்மூர்த்திகளாயிருத்தலின் 'முத்தெய்வங்கள்' எனவும், இங்ஙனங் கூறிய அவத்தைகள் நீங்கியவிடத்தைத் 'தத்கமல மழிந்து மனவழக்கந் தவிர்ந்து' எனவுங் கூறினார்.

தத்கமலமழிந்தென்றது கேவலசுழுத்திநிகழு மிதயத்தைநீங்கி யச்சுழுத்தியினனவாகி யாவினிடத்து நிகழ்தலை.

(தா-ம்.) முற்கூறியசான்றாகிய ஞானாத்மா அவத்தாத்திரயவியவகாரமியாவுமின்றி விலட்சணமானவிடத்துள்ள சிவசைதன்னியனாய் அப்பிரத்தியகாத்மனைக்கூடிச் சாக்கிரசுழுத்தியென்னுஞ் சமாதியிற் சின்மாத்திரமா யனுபவிப்பதே துரியாவத்தையெனவும், சான்றாகிய ஆநந்தாத்மா இவ்வறி

யுந்தன்மையினைத்து நீங்கியவிடத்துள்ள கூடஸ்தனைப் பரமானந்தத்தைக் கூடி யாவுந்தன்மயமாகச் சகசத்திலனுபவிப்பதே துரியாதீதாவத்தையென வும் விளக்கியவாறும். (கஎ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையாற் றேவர்முதலிய வறுவ ரடையும் அவத்தைகளின் இயல்பை யுணர்த்துகின்றார்.

விலங்குமுத லனபெறுவ சுழுத்தியொடு கனவாம்
விண்ணவர்க்கு நனவுநரர்க் கம்மூன்று மாகுங்
கலங்கலறு மருளர்க்குத் துரியம்வர யோகி
கட்குவரு வது துரியா தீதமுதன் மூன்று
மலங்கலுறு மனிதர்க்குத் தமிற்றாமே தோன்றி
வருபந்த மாமேனை யிரண்டுமியோ கத்தா
லிலங்குமுத்தி சாதனமா மவைகளிலொன் றினிலொன்
றிலாமையினாற் காலதே சங்கணிய மம்பொய்.

(இ - ள்.) விலங்குமுதலன-மிருகமுதலானவைகள், பெறுவ-அடைவன, சுழுத்தியொடு - சுழுத்தியவத்தையும், கனவாம் - சொப்பனவத்தையுமென விரண்டாம், விண்ணவர்க்கு - தேவர்க்கு, நனவு - சாக்கிரமொன்றேயாம், நரர்க்கு-மனிதர்களுக்கு, அம்மூன்றுமாகும்-அச்சாக்கிராதி மூன்றவத்தையுமாம், கலங்கலறு - கலங்குதலற்ற, மருளர்க்கு - உன்மத்தருக்கு, துரியம் - துரியாவத்தை யொன்றுமேயாம், வரயோகிகட்கு-மேன்மையான யோகிகளுக்கு, வருவது - உண்டாவது, துரியாதீதம் - துரியாதீத மொன்றுமேயாம், முதன்மூன்றும் - முன்னுள்ள சாக்கிராதி மூன்றவத்தைகளும், மலங்கலுறும் - சஞ்சலமுடைய, மனிதர்க்கு - மானிடருக்கு, தமிற்றாமே-தமக்குத்தாமே, தோன்றி உதித்து, வருபந்தமாம் - வருகின்ற சம்சாரபந்தமாம், ஏனை யிரண்டும் - மற்றையவிரண்டும், யோகத்தால் - யோகாப்பியாசபலத்தால், இலங்கு - விளங்காநின்ற, மூத்திசாதனமாம் - மோக்ஷசாதனங்களாம், அவைகளில் - அவ்வவத்தைகளில், ஒன்றினிலொன்று-ஓரவத்தையி னோரவத்தை, இலாமையினால்-இல்லாமையானும், காலதேசங்கள்-காலதேசங்களின், நியமம்-நியமத்தில், (அவை தோன்றாமையானும்) பொய்-மித்தையேயாம், எ - று.

'விலங்குமுதல்' என்றமையின் பறவைகளையும், ஊர்வனவற்றையும், சலசெந்துக்களையுங் கொள்க. மருளன் - ஒரு தெய்வவசப்பட்டவன்; எனவே, அறிவின் வசப்பட்டு, அதுவாய் நின்ற துரியனென்பதாயிற்று.

(ப - ம்.) முற்கூறிய பஞ்சாவத்தைகளுள் பரிசவறிவு ஒன்றையுடைய தாவர வுயிர்கட்கு மற்றொன்றுந் தோன்றாதிருத்தலின் அவைகட்கு சுழுத்தியொன்றே எனவும், பரிசமிரச மென்னு மிரண்டறிவையுமுடைய நீரில் வாழும் நத்துமுதலிய வுயிர்கட்கும், பரிசமிரசங் கந்தமுமாகிய மூன்ற

றிவையுமுடைய செல்லு முதலிய ஊர்வனவாகிய வுயிர்கட்கும்,பரிச மிரசங் கந்த முருவமுமாகிய விந்நான்கறிவையுமுடைய வண்டாதிவுயிர்கட்கும், சத் தமாதி யைந்தறிவையுமுடைய நடப்பன பறப்பனவாகிய பசுபக்ஷி முதலிய வுயிர்கட்கும் கனவைப்போலத் தோற்றிய நினைவு சுழுத்தியைப்போல மறைதலின் இந்நான்கு வகுப்பிற்குஞ் சொப்பனஞ் சுழுத்தியிரண்டே என வும், ஐந்தறிவையுமுடைய தேவர்கட்குத் தோற்றிய நினைவுமறையா திருத்த லின் அவர்கட்குநனவொன்றே எனவும், இவ்வைந் தறிவையுமுடைய மா னிடவுயிர்கட்குத் தோற்றிய நினைவு, ஒருகாற் றெரிவாயிருத்தலின்நனவும், ஒருகாற் ரேற்றியுந் தோன்றாதிருத்தலிற் கனவும், ஒருகாற்றோன்றுதலுந் தோன்றாததுமாயிருத்தலிற் சுழுத்தியுமாகிய விம்மூன்றே எனவும், மரு ளர்க்கு ஆசானனுக்கிரகம் பெற்று ஆத்மவிசாரணையினால் உதயமானவறிவு சொப்பிரகாசமாய் விளங்கலின் துரியமொன்றே எனவும், வரயோகிகட்கு அங்ஙனந் தோன்றிய வறிவு ஆநந்தமா யதீதப்பட்டிருத்தலின் துரியாதீத மொன்றே எனவும், முன்மூன்றவத்தையும் ஆத்மாவை மறைக்குமென வும், மேலிரண்டவத்தையும் ஆத்மாவை வெளிப்படுத்துமெனவுங் கொள்க.

வினா:—இங்ஙனமாயின்,தேவர் முதலிய வறுவகையாரும் நிற்க மனித ரொருவர்க்கே யிம்மூன்றவத்தைகள் வந்தகாரணமென்னை ?

விடை:—தேவர்களுக்குச் சாக்கிராவத்தையின் நினைவன்றி மறைப்பின் மையினானும், ஏனைய வைந்திற்கும் மறைப்பன்றி நினைவின்மையினானும், மானிடர்க்கு அவ்விரண்டு மிருத்தலினானும், இவ்விரண்டும் நீங்கினவிட முத் தியடைதற் காதாரமாதலினானும் அதற்காக விச்சரீரம் வந்ததனாலென்க.

வினா:—அற்றேல்,முப்பத்தாறு தத்துவங்களோடுங்கூடி விவயகரிப்பது சாக்கிரமெனவும், இவற்றுள் அஸ்திமுதற் பதினொன்றும் நிற்க ஏனைய விரு பத்தைந்து தத்துவங்களோடுங் கூடி வியவகரிப்பது சொப்பனமெனவும், இவற்றுள் மனமுதலிய விருபதும் நிற்க ஏனைய வைந்து தத்துவங்களோடுங் கூடி வியவகரிப்பது சுழுத்தியெனவும், இவற்றுள் வித்தையவித்தை யிரண் டும் நிற்க ஏனைய மூன்று தத்துவங்களோடுங் கூடி வியவகரிப்பது துரிய மெனவும், இவற்றுள் ஜீவன் ஈச னிரண்டும் நிற்க ஏனைய பிரமமொன் றும் வியவகரிப்பது துரியாதீதமெனவுமாய இவ்வைந்தவத்தையும் மானிட வுயிர்கட்குச் சமுதாயத்தின் நித்தியப் பிரளயம்போலத் துயிலினும் விழிப் பினும் நியதிப்படி யனுபவமிருக்கச் சுரோத்திரியனுக் கிரண்டும் விராத்தி ரியனுக்கு மூன்றுமெனக் கூறியதென்னை ?

விடை:—மானிட வுயிர்கட்கு இவ்வைந்தவத்தையு முளவாயினும் விராத் திரியன் அறியாமையினால்மூன்றவத்தையிற்சஞ்சரிக்குமிடத்து அவ்விரண்டு மிவற்றி னடங்கி நிற்றலின் இவர்கட் கம்மூன்றேயெனவும், சுரோத்திரியன் அறிவினா லிவ்விரண்டினுஞ் சஞ்சரிக்குமிடத்து அம்மூன்று மிவற்றிலடங் கிப் போதலின் இவர்கட் கிரண்டே யெனவுங் கூறப்பட்டன வென்க.

(தா-ம்.) இவ்வைந்தவத்தையும் நீக்கு நிமித்தம் இவைகளி னிலக்கணமும் இவற்றை யடைந்தவர்களின் இலக்கணமு முணர்த்தியவாறும். (கூஅ)

அ - கை.

இச்செய்யுளில் இவ்வைந்தவத்தைகளி னிடையீடின்றிப் பூரணமாயிருத்தலொன்றுமே பிரமமெனவும், சாக்கிர சொப்பனம்போலச் சுழுத்தியின்கண் அறிவுவிளங்க வில்லையே யென்ற வினவிற்கு உத்தரமு முணர்த்துகின்றார்.

சொற்றவவத் தைகளிலனு சூதனை யறியுந்
துரியனே யுளனனவு கனவிலறி வுண்மை
பெற்றனமச் சுழுத்தியினிற் பெறலுரைப்பி னெழுந்து
பிறிதொன்று மறியாது சுகத்துறங்கி னேனென்
றுற்றவிரு நினைவுமனு பவஞ்சுழுத்தி யதனி
லுறாதுவரா தெனுமருத்தா பத்தியினாற் பொருள்கண்
முற்றுமடக் கிருள்விழிகாண் குதலெனக்கா ரியங்கண்
முழுதையுமுட் கொண்டபே ரவித்தையிரு ளினையும்.

(இ - ள்.) சொற்ற - முற்கூறிய, அவத்தைகளின் - பஞ்சாவத்தைகளிலும், அனுசூதனைப் - நீங்காமற் பூரணனாயிருந்து, அறியும்-சர்வசாக்ஷியாயறிகின்ற, துரியனேயுளன் - கூடஸ்தனே யிருக்கின்றனன், நனவு - சாக்கிரத்தினும், கனவில் - சொப்பனத்தினும், அறிவுண்மை - அறிவுண்டென்பதை, பெற்றனம் - உண்மையாக வேற்கப்பெற்றனம், அச்சுழுத்தியினில்-அச்சுழுத்தியவத்தையில், பெறலுரைப்பின் - அவ்வறிவுண்டென வேற்கப்பெற்றதுபற்றிச் சொல்லுமிடத்து, எழுந்து - நித்திரையினின் றெழுந்திருந்து, பிறிதொன்றும்-மற்றொன்றையும், அறியாது-அறியாமல், சுகத்து-சுகமாக, உறங்கினேனென்று - நித்திரை செய்தேனென்று, உற்ற - உண்டான, இருநினைவும் - இருவகை நினைப்பு முண்டென்பது, அனுபவம் - அனுபவமாதலினாலும், சுழுத்தியதனில் - சுழுத்தியில், உறாது - இல்லாதது, வராதெனும் - நனவில் வாராதென்கின்ற, அருத்தாபத்தியினால்-அருத்தாபத்திப் பிரமாணத்தினாலும், பொருள்கண் முற்றும் - வஸ்துக்களனைத்தையும், அடக்கும் - அடக்கியிருக்கின்ற, இருள் - அந்தகாரத்தை, விழி காண்குதலென - கண் பார்ப்பதுபோல, காரியங்கண் முழுதையும் - மாயா காரியங்களனைத்தையும், உட்கொண்ட-அடக்கியிருக்கின்ற, பேரவித்தை-பேரவித்தையாகிய, இருளினையும் - அந்தகாரத்தையும், எ - று.

துரியனேயுளன் என்ற தேற்றேகாரம் மற்றொன்றுமில்லை யென்பதை விளக்கி நின்றது. அனுசூதம் - நீங்காமை; எனவே துரியன் ஒன்றையும் விட்டு நீங்காமற் பரிபூரணனா யிருத்தல் பெறப்பட்டது. (கூக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சுழுத்தியின்கண் மனோவிருத்தியின் சகாய மின்றிச் சுகானுபவந் தோன்றலின் ஆண்டறிவுளதென்பதற் கையமின் றென் றுணர்த்துகின்றார்.

அந்தவவித் தையினதுசூக் குமவிருத்தி தன்னி
லலையுமரத் திலையிடையின் வெண்ணிலாத் துளிபோல்
வந்திலங்கி யடங்குநிசா நந்தக்கூற் றினையும்
வருகரணாந் தராபேட்சை யின்றியே யான்மா
முந்துரைசெய் சுழுத்தியினி லனுபவிக்கை யாலே
மொழிந்ததனி லறிவுளதா மேதுமறி யாமை
நந்துசுகத் துறங்கினே னெனற்கேது விடய
ஞானமிலா மையுங்குடும்ப நிவிர்த்தியுமா முறையே.

(இ - ள்.) அந்தவவித்தையினது - அவ்வவித்தையினுடைய, சூக்கும விருத்தி தன்னில் - சூட்சுமவிருத்தியில், அலையும்-காற்றினலைசையப்பட்ட, மரத்து - மரங்களினது, இலையிடையின் - பத்திரங்களி னிடையிற்றோன் றும், வெண் - வாலிதான, நிலாத்துளிபோல் - சந்திரிகாலேசங்கள்போல, வந்து - உதித்து, இலங்கி - விளங்கி, அடங்கும் - ஒடுங்குகின்ற, நிசானந் தக்கூற்றினையும் - நிசாநந்தக் கூறுபாட்டினையும், வரு - வாராநின்ற,கரணாந் தரம் - வேறு கரணங்களின், அபேட்சையின்றி - சகாயமில்லாது, ஆன் மா - ஆத்மாவானது, முந்துரைசெய் - முற்கூறிய, சுழுத்தியினில் - சுழுத்தி யவத்தையில், அனுபவிக்கையால் - அனுபவித்திருத்தலின், மொழிந்தத னில்-முற்கூறிய சுழுத்தியவத்தையில், அறிவுளதாம்-அறிவுண்டென்பது உண்மையாம், ஏது மறியாமை - வேறொன்று மறியாது, நந்து - விள ங்குகின்ற, சுகத்துறங்கினேனெனற்கு - சுகமாய் நித்திரைசெய்தேனெ ன்னு மிரண்டிற்கும், ஏது-காரணமானது, முறையே-நிரலே, விடயஞான மிலாமையும் - விஷயக்காட்சி யின்மையும், குடும்பநிவிர்த்தியும் - சமுசார நிவர்த்தியும், ஆம் - ஆகிய விரண்டுமாம், எ - று, ஏ - ஈற்றசை.

சூக்குமவிருத்தி யென்றது சுழுத்தியவத்தையினுள்ள அவித்தியா விருத்தியை. குடும்பநிவிர்த்தியென்பது துக்கரூபமாகிய பந்தரீக்கம். நிசாநந் தக் கூற்றென்பது பிரமானந்தாமிசலேசம். இதனைச் சமாதியின்க ணவநவ மாய் விளங்கு மானந்தமெனினுமமையும். முறையே என்றமையின், விடய ஞானமிலாமை யறியாமைக்குங் குடும்பநிவிர்த்தி சுகத்துறங்கினேனென்ப தற்குங்கொள்க. (கOO)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சுழுத்தியிற் றனக்குத் தானே தரிசனமென் னும் உவமேயம் விளங்க உவமான பூருவகமாக வுணர்த்துகின்றார்.

மன்றசுழுத் தியிலதற்குக் கரியாமா நந்த
மயவுயிருண் டெனிலொருவ ராகினுமாண் டறிந்தே

னென்றலில தேதுகா ரணமெனிலோர் பொருளை
யெடுப்பநீர் மூழ்கினே னாண்டுளதென் பதுமேற்
சென்றலது புகலவொணா ததுபோலக் கருமச்
செயலினா லெழுந்துதுணை யாங்கரணங் கூடி
னன்றியதி லறிந்தபொருள் கூறொணா தாகு
மாதலினா லுயிர்சச்சி தாநந்த வொளியாம்.

(இ - ள்.) மன்றசுழுத்தியில் - நிச்சயமாகச் சுழுத்தியவத்தையில், அதற்கு - அவ்வவத்தைக்கு, கரியாம் - சாட்சியாகிய, ஆநந்தமயம் - ஆநந்தவடிவமான, உயிருண்டெனில் - கூடத்தனுண்டென்றால், ஒருவராகிலும் - யாதொருத்தராலும், ஆண்டு - அச்சுழுத்தியில், அறிந்தேனென்றல் - அறிந்தேனென்பது, இலது - இல்லாதது, ஏதுகாரணமெனில் - யாதுகாரணமென்றால், ஓர்பொருளை - கூபத்தில்வீழ்ந்தவோர்வஸ்துவை, எடுப்ப - எடுக்குநிமித்தம், நீர்மூழ்கினேன் - சலத்தில் மூழ்கினவன், ஆண்டு - அவ்விடத்து, உளதென்பது - அஃதிருக்கின்றதென்பதை, மேற்சென்றலது - சலத்தினின்று வெளிப்பட்டாலன்றி, புகலவொணாததுபோல - சொல்லக் கூடாதவிதம்போன்று. கருமச்செயலினால்-காலகர்மவாயுக்களின் வசத்தால், எழுந்து-சுழுத்தியினின்று வெளிப்பட்டு, துணையாங்கரணம்-சகாயமான கரணங்களோடும், கூடினன்றி - சேர்ந்தாலல்லது, அதில் - அச்சுழுத்தியில், அறிந்தபொருள் - அறிந்தவஸ்துவை, கூறொணாதாகும் - சொல்லக்கூடாததாம், ஆதலினால் - ஆகையால், உயிர் - ஆத்மாவானது, சச்சிதானந்தவொளியாம் -சச்சிதாநந்தசுயம்பிரகாசமாம்,—எ - று.

‘கரணங்கூடினன்றி அதி லறிந்தபொருள்கூறொணாதாகும்’ என்றமையின், கூடத்தனறிவுமயமா மென்பதுபெற்றாம். முற்கூறியவைந்தவத்தையினுள் இடையினுள்ள சுழுத்தியினுமறிவுண்டென விளக்கி அவற்றை யறிகின்ற விசுவன் தைசதன் பிராஞ்ஞன் சிவன்ஸாக்ஷியென்பதற்கு முறையே சத்து சித்துஆனந்தம்நித்தியம்பூரணமென்னுமைந்துதன்மையுமுண்டு. அவ்வைந்து தன்மையுமுடையதேயாத்மாவெனவும்,இவற்றிற்கெதிர்மறையான ஐந்து தன்மையுமுடையதே யனாத்மாவெனவுந் தோன்ற விளக்கியவாறாம்.

வினா:—அற்றேல், துரியத்திலுள்ள சீவனையும் அதீதத்திலுள்ள சாக்ஷியையு மிங்ஙனம் கூறலாமோ?

விடை:—‘சொற்றவவத்தைகளிலனுசூதனையறியுந் துரியனேயுளன்’ என்னுமிடத்து உளனென்பது நித்தியமும் அனுசூதனென்பது பூரணமுமாகவிளங்கலினானும் இச்சீவனுக்கு நித்தியத்துவமும் இச்சாட்சிக்குப் பூரணத்துவமு மிருத்தலினானுமென்க.

வினா:—அர்றேல், ஆச்மாவுக்கிவ்வைந்துதன்மையுங் கூறலாமோ?

விடை:—‘உயிர்சச்சிதாநந்தவொளியாம்’ என்பது அசத்தாதியைந்தும் நீங்கவந்த நாமமேயன்றிச் சுபாவமன்றென முற்கூறியிருத்தலே யுத்தரமாமென்க.

(நா-ப்.) இவ்வைந்தவத்தையும் அமனாத்மாவெனவும் இமிவற்றை யறிவது கற்பிதாத்மாவெனவும் இவையாவுமா யவையல்லாததாயுள்ள சொப்பிரகாசமே ஆத்மாவெனவும் விளக்கியவாறும். (கoக)

அ - கை.

இச்செய்யுளில் ஆத்மாவரணமான பஞ்சகோசநாமமும் அவற்றுள் மூன்றனிலக்கணமு முணர்த்துகின்றார்.

அன்னமொடு பிராணன்மனம் விஞ்ஞான மிக்க
வாநந்த மயமாமைங் கோசமுள வவைதாஞ்
சொன்னமுறை சுக்கிலசோ ணிதத்தாகி நின்ற
தூலவுடம் பன்னமய கோசஞ்சூக் குமமெய்
மன்னலுறு பிராணனும்வாக் காதியுமே பிராண
மயகோச மனமுஞா னேந்தியமும் புணரிற்
பன்னுமனோ மயகோசந் துரியன்சிற் சாயை
பதிதலொடு லோகாந்த குந்தமே போன்று.

(இ - ள்.) அன்னமொடு – அன்னமயமும், பிராணன் - பிராணமயமும், மனம் - மனோமயமும், விஞ்ஞானம் – விஞ்ஞானமயமும், மிக்க - மேலான, ஆநந்தமயமாம் - ஆநந்தமயமுமென, ஐங்கோசமுள - பஞ்சகோசமுள்ளன, அவை - அவையாவன, சொன்னமுறை - முற்கூறியகிரமப்படி, சுக்கிலம் - பிதாவின் சுக்கிலமும், சோணிதத்து-மாதாவின் சோணிதமும், ஆகிநின்ற - சேர்ந்தாகாநின்ற, தூலவுடம்பு – தூலசரீரமே, அன்னமய கோசம் – அன்னமயகோசமாம், சூக்குமமெய் - சூக்குமதேகத்தில், மன்னலுறு - பொருந்திபிருக்கின்ற, பிராணனும்-பிராணவாயுவும், வாக்காதியும்-வாக்குமுதலியகன்மேந்தியங்களுங்கூடில், பிராணமயகோசம் - பிராணமய கோசமாம், மனமும் - மனதும், ஞானேந்தியமும்-சுரோத்திராதி ஞானேந்திரியங்களும், புணரில் - கூடில், பன்னும் - முற்கூறிய, மனோமயகோசம்–மனோமயகோசமாம், துரியன் - பிரத்தியகாத்மாவினது, சிற்சாயை – சைதன்னியச் சாயைபானது, பதிதலொடு – சேர்தலுடன், லோகாந்த குந்தமே போன்று - இரும்பை நுனியிலுடைய ஈட்டியைப்போல, எ - று. தாம் - ஏ - அசை.

குந்தமேபோன்றென்றது வருஞ்செய்யுளின் முதலிலுள்ள வகங்காரத்திற் குவமித்தற்பொருட்டென்க, அஃதொருவனிடமாய் வருவதுபோலக் கூடஸ்தன லறிவுதோன்று மென்பதாம், கோசமென்பது-உறை. அது கட்க முதலியவைகளை மறைப்பதுபோல இவ்வைந்துங் கூடத்தனை மறைத்து நிற்றலா லங்ஙன முருவகிக்கப்பட்டது. (கoஉ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறத்தமுறையால் இரண்டு கோசவிலக்கணமும் அறிவீனரது கொள்கை யினையதெனவும் உணர்த்துகின்றார்.

இருந்தவகங் காரமுஞா னேந்தியமுங் கூடி
னிசைத்தலுறும் விஞ்ஞான மயகோச மாகும்
பொருந்துகா ரணதேக ரூபாவித் தையுந்தாம்
புகல்விடய தரிசனமா மீப்பியசை யோகந்
தரும் * பிரிய மோதமொடு பிரமோத மென்னத்
தக்கவையு மாநந்த மயகோச நானென்
றரந்தைதரும் விஞ்ஞான மயகோச வடிவா
மாங்கார் தனையான்மா வென்பரறி விழந்தோர்.

(இ - ள்.) இருந்த - முற்கூறிய ஈட்டிபோன்றிருந்த, அகங்காரமும்- ஆங்காரமும், ஞானேந்தியமும் - ஞானேந்திரியங்களும், கூடின் - சேரின், இசைத்தலுறும் - சொல்லாநின்ற, விஞ்ஞானமயகோசமாகும் - விஞ்ஞான மயகோசமாம், பொருந்து - பொருந்தாநின்ற, காரணதேகரூபம் - காரண சரீர வடிவமான, அவித்தையும்-அவித்தையும், புகல் - சொல்லுகின்ற, விடயதரிசனம் - வனிதாதிவிடயக்காட்சியும், சாமீப்பியம் - சமீபமும், சை யோகம் - கூட்டரவுமாகிய விம்மூன்றினால், தரும்-உண்டாகின்ற, பிரியம்- பிரியமும், மோதமொடு - மோதமும், பிரமோதம் - பிரமோதமும், என் னத் தக்கவையும் - என்றுசொல்லத்தக்க மூன்றுங்கூடில், ஆனந்தமயகோ சம் - ஆநந்தமயகோசமாம், நானென்றரந்தைதரும் - நானென்று துன்பத் தைத்தருகின்ற, விஞ்ஞானமயகோசவடிவாம் - விஞ்ஞானமய கோசரூப மான, ஆங்காரந்தனை - ஆங்காரத்தை, ஆன்மாவென்பர் - ஆத்மாவெனச் சொல்லுவார்கள், அறிவிழந்தோர்-ஆத்மாநாத்மவிவேக சூனியர்கள், எ-று. தாம்-அசை.

அவித்தையானது விடயதரிசனத்தி லுதிக்கும் பிரியமும், சாமீப்பியத் திலுதிக்கு மோதமும், சையோகத்தி லுதிக்கும் பிரமோதமுமாகியவிம் மூன்றுடன் கூடின் ஆநந்தமய கோசமாம், அவற்றுள் அந்தக்கரணவிருத்தி யடங்கிநிற்றலின் அவித்தையெனவும், அங்ஙனமுள்ள சுகத்தையறிதலின் பிரியமெனவும், அச்சுகம் சமீபமா யிருத்தலின் மோதமெனவும், அச்சுகத் தோடுங் கூடிநிற்றலின் பிரமோதமெனவும் வந்தனவென்க.

அறிவிழந்தோரென்றது பாரமார்த்திக கூடத்தரிலக்கணந்தெரியாது கற்பிதமான வகங்காரத்தையே யாத்மாவெனக்கொள்ளுஞ் சிலமதஸ்தரை. அவரிலிங்ஙனங் கொள்ளுவோர் சைவசித்தாந்தி யென்பாருமுளர். அங்ங னங் கூறினுமமையும். ஆநந்தமயகோசத்துக்கதீதமாகியவாத்மா விஞ்ஞான மயகோசத்துக்குரித்தாகிய வகங்காரமாகாமையின் அங்ஙனங் கூறுவாராத்ம ஞான மில்லாதவரெனக்காண்க.

---

* இஷ்ட விஷயத்தின் தரிசனத்தினாலுண்டாகும் விருத்தி பிரியமாம்; அதன் லாபத்தினா லுண்டாகும் விருத்தி மோதமாம்; அதன் போகத்தினா லுண்டாகும் விருத்தி பிரமோதமாம்.

(நா - ம்.) பிரமத்தைத் தரிசிப்பிக்குநிமித்தம் அதனை மறைக்கும் பஞ்ச கோசத்தை நீக்கவேண்டி அவற்றினிலக்கண முணர்த்தியவாறும். (௧0௩)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய விஞ்ஞானமயகோசமாயிருந்தறிகின்றவாங் காரம் கற்பிதாத்மாவென் றறிவிப்பான் றொடங்கி இங்ஙனமவத்தாத்திரய விலட்சணமான கூடஸ்தனது சந்நிதியினின்று அவனது சத்தியினாற் றூல முதல் மனமீறான தத்துவங்களை யறிவதன்றி யிதற்கறியுஞ்சத்தி சுயமாயின் றெனவுணர்த்துகின்றார்.

நீலகுண விசேடமொடுற் பலவிசே டியந்தா
 னிகழ்தரவேத் தியமாதல் போலிளைத்தே னெனினான்
றூலதனு வொடுங்கேட்ப னானெனிலிந் தியத்துஞ்
 சூழ்வனா னெனிற்கரண முடனும்வேத் தியமாய்ச்
சாலவுயர் துரியனிற்கை யாலேயாங் காரந்
 தானான்மா வன்றாகி லசேதனவாங் காரஞ்
சீலமொடு புறவிடய மறிவதென் னெனினூ
 சிக்கலின்முன் னூசிசேட் டித்திடுதல் போலும்.

(இ - ள்.) நீலகுணம் - நீலநிறமாகிய, விசேடமொடு - விசேடத்துடன், உற்பலம் - உற்பலமென்னும், விசேடியம்-விசேஷியமானது, நிகழ்தர - விளங்க, வேத்தியமாதல்போல் - அறியப்படுவதுபோல, இளைத்தேனெனினான் - யானிளைத்தேனென்றால், தூலதனுவொடும் - தூலதேகத்துடனும், கேட்பனானெனில் - நான்கேட்ப னென்றால், இந்தியத்தும் - இந்திரியங்களுடனும், சூழ்வனானெனில் - யான்யோசிப்ப னென்றால், கரணமுடனும் - அந்தக்கரணத்துடனுங்கூடி, வேத்தியமாய் - பிரத்தியட்சமாய், சாலவுயர் - மிகவுமேன்மையாயுள்ள, துரியன் - துரியனுக்கு, நிற்கையால் - விஷயமாக விருப்பதனால், ஆங்காரம் - ஆங்காரமானது, ஆன்மாவன்று - ஆத்மாவல்ல, ஆகில் - அங்ஙனமாயின், அசேதனவாங்காரம் - சடவடிவவகங்காரமானது, சீலமொடு - ஒழுங்குடன், புறவிடயம்-பாகியவிஷயங்களை, அறிவதென்னெனில் - அறிவதெங்ஙன மென்றால், ஊசிக்கலின்முன்-காந்தக்கல்லின்சந்நிதானத்தில், ஊசி-இருப்பூசியானது, சேட்டித்திடுதல்போலும் - அசைந்திடுதல்போலும், எ - று. தான்-அசை. உற்பலம்= குவளைமலர்.

துரியனுக்கு உற்பலமும், அகங்காரசம்பந்தமானதூலாதிகட்கு நீலகுணமு முவமித்தவாறும். வேத்தியம்-வெளியாய்க் காண்குதல். அகங்காரமான்மாவன்று என்றமையின் துரியனேயாத்மாவென்பதாயிற்று. துரியனே தனுவாதி தத்துவங்களைச் சாட்சியாயறிந்து நிற்றலின் அவனே யாத்மாவெனவும், அகங்கார மங்ஙனமறியாமையின் அநாத்மாவெனவுங்காண்க.

வினா:—அங்ஙனமாயின், புறவிடயங்களை யறிவதெங்ஙனம்?

விடை:—அவனது சந்நிதான விசேடத்தாலென்க.

வினு:—அற்றேல், ஆத்மாவிற்கும் அநாத்மாவிற்கும் வியடங்களையறி யுந்தன்மை யொன்றென்று விவ்விரண்டற்கும் பேதமென்னை?

விடை:—ஆகாயமானது பிருதிவியாதிய நான்குபூதத்தினுங் கூடியிரு ந்துங்கூடாமல் அதற்குச் சாக்ஷியாயிருப்பதுபோலச் சின்மாத்திரமான வாத் மாவானது தனுவாதிவிஷயங்களோடுங்கூடி யவற்றின் ஞெழில்களை யறி ந்தும்அவற்றிற்சம்பந்தப்படாமற்சாக்ஷியாயறிவதாமென்க.மாணிக்கச்சாயை பற்றின படிகம் அச்சாயையைத் தனதாகக் காட்டல்போல ஆத்மாவினது பூரணமான சிற்சாயையிற் கிஞ்சிதமிசம்பெற்ற அகங்காரம் விடயங்களிற் சம்பந்தமா யவற்றிற் சுகதுக்கங்களைத் தானறிவதுபோலக்காட்டுதலாம்.

'கேட்பனுன்' என்றமையின் பரிசிப்பன் காண்பன் உண்பன் மோப்ப னென்னும்ஞானேந்தியங்களுடனும்,இந்தியமெனப்பொதுவாகக்கூறினமை யின் வசனிப்பன் கவனிப்பன் கொடுப்பன் ஆநந்திப்பன் விசர்ச்சிப்பனென் னுங் கன்மேந்தியங்களுடனும், 'சூழ்வனுன்' என்றமையின் இச்சிப்பன் சிந்திப்பன் அபிமானிப்பனென்னும் அந்தக்கரணங்களுடனுங்கூடி அவற் றின் குணகுணங்களுக்கு விலட்சணமாயிருந்தறிவது துரியனென்பது பெற்றும். (கOச)

அ-கை.

இச்செய்யுளில் அகங்காரமானது மேலானபிரமப்பிரகாசத்தைப் பெ ற்றுக் கீழானவிடய ஞானத்தோடுங்கூடிச் சாக்கிரசொப்பனத்திற் சுழன்று சுழுத்தியி லடங்குமென வுணர்த்துகின்றூர்.

வெயிலினிடைக் காட்டுபடி மக்கலமுண் மனையை
 விளக்குதல்போ லுந்துரியன் றன்றிருச்சந் நிதியி
னியலுறுதற் சைதன்யப் பதிவிம்பந் தன்பா
 லெய்தலும்பெற் றிடுதலினு லச்சடவாங் காரம்
பயில்விடய வுணர்வினெடு நனவுகன வுழன்று
 பகர்சுழுத்தி தனிலடங்கு மவ்வழக்க முறைப்பிற்
செயிர்தருமாங் காரமடங் குறுசுழுத்தி தன்னிற்
 செறியவித்தை யுட்சுவருந் துயிற்கதவு மன்றி.

(இ-ள்.) வெயிலினிடை - சூரியகிரணத்தின்கண், காட்டும் - காட் டப்படுகின்ற, படிமக்கலம் - கண்ணுடியானது, உண்மனையை - உள்வீட்டி விருளை, விளக்குதல்போலும் - விளக்குவிப்பதுபோல, துரியன்றன் - ஆத் மாவினுடைய, திருச்சந்நிதியில் - சிறந்தசந்நிதானத்தில், இயலுறு - சுபா வமாயுள்ள, தற்சைதன்யப்பதிவிம்பம் - அந்த ஞானப்பிரதிவிம்பமானது, தன்பால் - தன்னிடத்தில், எய்தல் - சேர்தலை, பெற்றிடுதலினுல்-அடைந் திருப்பதனுல், அச்சடவாங்காரம் - அந்தச்சடவாங்காரமானது, பயில்விடய

வுணர்வினெடு - நிகழுகின்ற விடயவுணர்ச்சிகாரணமாக, நனவு - சாக்கிரத்தும், கனவு - சொப்பனத்தும், உழன்று - சஞ்சரித்து, பகர்சுழுத்திதனில் - முற்கூறிய சுழுத்தியவத்தையில், அடங்கும்-அடங்கிநிற்கும், அவ்வழக்கம் - அம்முறைமையை, உரைப்பில் - கூறில், செயிர்தரும் - குற்றத்தைத் தருகின்ற, ஆங்காரம் - அகங்காரமானது, அடங்குறு - அடங்காநின்ற, சுழுத்திதன்னில் - சுழுத்தியவத்தையில், செறியவித்தை - நெருங்கிய அவித்தையென்னும், உட்சுவரும் - உள்வீட்டுச் சுவரும், துயிற்கதவும் - நித்திராக பாடமுமாகிய விரண்டையும், அன்றி - விளக்குவதேயல்லாமல், எ - று. உம் - அசை.

அவித்தையை உட்சுவரெனவும், துயிலைக் கதவெனவு முருவகித்தார்.

அ - கை.

இச்செய்யுளில் அது முற்கூறிய சுழுத்தியினுள்ள பிரத்தியகான்மப் பிரகாசத்திலடங்கிப் பின் வெளிப்பட்டு அகங்காரான்மாவாக நிற்குமென வுணர்த்துகின்றார்.

நடுக்கமறு தீபமாந் தனைத்தானே விளக்க
　னவில்பிரத்திய கான்மாவின் சோதியாம் பின்னர்த்
தொடக்கிவரு காலகரு மாதிசமீ ரணனாற்
　றுயிற்கதவந் திறந்திடவவ் வவித்தையது தன்னி
லடுக்குமுத லவத்தைமக தத்துவமாந் தெற்றி
　யடுத்திருந்தாங் காரமெனும் வெண்பளிக்கு மணிதான்
படைத்தலருந் துரியசுடர்ப் பதிவிம்பம் பதியப்
　பட்டுமுனம் போற்சிவ னென்னவே நின்று.

(இ - ள்.) நடுக்கமறு - நிஷ்கம்பரூபமான, தீபமாந்தனை - தீபப்பிரகாசமாகியதன்னையும், தானேவிளக்கல் - தானேபிரகாசிப்பிப்பது, நவில்-முற்கூறிய, பிரத்தியகான்மாவின்-பிரத்தியகாத்மாவினது, சோதியாம்-சுவப்பிரகாசமாம், பின்னர் - பின்பு, தொடக்கிவரு - தொடர்ந்துவருகின்ற, காலம் - காலமும், கருமம் - கருமமும், ஆதி - காரணமாகவெழுகின்ற, சமீரணனால் - மகாப்பிராணனால், துயிற்கதவம் - நித்திராகபாடம், திறந்திட - திறக்க, அவ்வவித்தையதுதன்னில் - அவ்வவித்தையின்கண், அடுக்கும் - அடுத்திருக்கின்ற, முதலவத்தை-முதலவத்தையென்னும், மகதத்துவமாம்-மகதத்துவமாகிய, தெற்றி - வாசற்படியில், அடுத்திருந்த - சேர்ந்திருந்த, ஆங்காரமெனும் - சத்துவவாங்காரமென்கின்ற, வெண்பளிக்குமணி - தவளமானபடிகமணியில், படைத்தலரும் - சுயம்பாகிய, துரியசுடர் - பிரத்தியகாத்மப்பிரகாசமானது, பதிவிம்பம் - பிரதிவிம்பமாக, பதியப்பட்டு-அடையப்பெறுதலால், முனம்போல் - முன்போலவே, சிவனென்னவேநின்று - ஜீவனாகவேயிருந்து, எ - று. தான் - அசை. அகரம் தொக்குநின்றது.

பிரத்தியகாத்மாவினைத் தீபமெனவும், மகதத்துவத்தைத் தெற்றியெனவும், அங்காரத்தைப் பளிக்குமணியெனவு முருவகித்தார்.

'கருமாதி' என்றதனல் இச்சையுஞ்ஞானமுங்கொள்க. எனவே, அவை உயிர்களினதிச்சா ஞானக்கிரியைகளென்பனவாம். சமீரணனென்றது சீவ சம்பந்தமான மகாப்பிராணனை. 'முதலவத்தைமகதத்துவம்' என்றமையின் இதற்குக் காரணமான அவித்தை மூலப்பிரகிருதியென்பது பெற்றும்.

வினு:—அதனை யிச்சுழுத்தியிற் கூறலாமோ?

விடை:—பிரமத்தையே கூடத்தனுகக் கூறுதலின் அதனிடத்தாரோ பிதக்கிரமப்படி பிரகிருதியாதிய மூன்றையுங் கூறினுரென்க.

வினு:—சுழுத்தியின்கண் மகாப்பிராண னிருக்கின்றதென்ப தெங்ஙனம்?

விடை:—அவித்தையினடங்கியிருந்த அறிவின்புடைபெயர்ச்சியே காற்ருதலினனும், அதுவே ஜீவசம்பந்தமாயிருத்தலினுனும், அதுவேயுள்ளிருந்து துயிற்கதவைத் திறப்பதற்கும் அடைப்பதற்கும் எதுவாயிருத்தலினுனும், பண்டிதபாமரசாதாரணமாய்ச் சுழுத்தியவத்தையிற் பிராணனிருக்கின்றதென்னும் அனுபவத்தினுனும் அச்சுழுத்தியிற் பிராணனுண்டென்பதற் கையமின்றென்க. (கOசு)

அ - கை.

இதுவுமது.

சொற்பனமா நடுமனையை விளக்கியே பொறியாஞ்
 சுருங்கையினிற் போந்துநன வெனுமுன்றில் விளக்கு
முற்பகருங் காலகரு மாதிசமீ ரணனுன்
 மூடலுமத் துயிற்கதவங் காரியவாங் கார
நற்படிக மணியவித்தை தனிலடங்கச் சென்று
 நனவுகன வெனுமுன்றி னடுமனைக ளிருளாந்
தற்படிக மணிக்கதுவு மறிவொளிதன் முதலாந்
 தனித்துரிய விளக்கையடைந் தேகமா மன்றே.

(இ - ள்.) சொப்பனமாம்-கனவாகிய, நடுமனையை-நடுவீட்டை, விளக்கி - விளக்கிக்கொண்டு, பொறியாம் - இந்திரியங்களாகிய, சுருங்கையினில் - பலகணிவாயிலில், போந்து - வெளிப்பட்டு, நனவெனும் - சாக்கிரமென்கின்ற, முன்றில் - பாகியமுற்றத்தை, விளக்கும் - பிரகாசிப்பிக்கும், முற்பகரும் - முற்கூறுகின்ற, காலகருமாதி - காலகருமங்களின் காரணமாக வெழுகின்ற, சமீரணனல் - மகாப்பிராணனுல், மூடலுமத்துயிற்கதவம் - அந்நித்திராகபாட மூடினவுடன், காரியம் - மகதத்துவத்தின் காரியமான, ஆங்காரம் - ஆங்காரமென்னும், நற்படிகமணி - நல்லபடிகக்கல்லானது, அவித்தைதனில் - தனக்காதாரமான சுழுத்தியவத்தையில், அடங்கச்சென்று - சென்றடங்கலால், நனவுகனவெனும் - சாக்கிரஞ் சொப்பனமென்கிற, முன்றினடுமனைகள்-பாகியமுற்றமும் நடுவீடும், இருளாம்-அந்த

காரமாம், தற்படிகமணி - அவ்வகங்காரமென்னும் படிகக்கல்லில், கதுவும்- பிரதிபலித்திருந்த, அறிவொளி - ஞானப்பிரகாசமானது, தன்முதலாம் - தனக்குக்காரணமாகிய, தனித்துரிய விளக்கை - ஒப்பற்ற பிரத்தியகாத்மப் பிரகாசத்தை, அடைந்து - சேர்ந்து, ஏகமாம் - ஒன்றும், எ-று. அன்று - ஏ - அசை.

பொறியைச் சுருங்கை யெனவும், நனவை முன்றிலெனவும், கனவை நடுமனையெனவு முருவகித்தார். 'சொற்பனமா நடுமனையை' என்றமையின் சுழுத்தியுள்வீடும், நனவுமுன்வீடுமாயினவென்க.

(தா-ம்.) ஆத்மாவின் சிற்சாயைதங்கினவிடத்து அதுபோலத் தோற்றிய அகங்காரமானது அவத்தாத்திரயங்களிற் சஞ்சரித்தடங்கும்போது அது பெற்றிருந்தசிற்சாயை தன்காரணமான வாத்மாவினிடத்தி லடங்குமென்பதாம். (கO௭)

அ - கை.

இச்செய்யுளில் ஆத்மாநாத்மவிலக்கண முணர்த்துகின்றார்.

இத்திறமிங் ககமினது பாவாபா வங்க
ளிலங்குநன வாதிகளி னவிகார மாகி
யுய்த்துணரு முயிர்வேறுன் றிருத்தலினு லென்று
முரைத்தவக மான்மாவன் றெனவறிக புறம்பு
வைத்தவிட யங்கடமக் கான்மாவாய்ப் பரமான்
மாவிற்கு வேத்தியமா தலிற்சடா சடமா
யத்தமதின் முன்பின்போ லொளியிலதா மகந்தைக்
காகஞ்சிற் சாயையான் மாவுடனும் புணர்ச்சி.

(இ - ள்.) இத்திறம் - இத்தன்மையாக, இங்கு - இவ்விடத்தில், இலங்கும் - விளங்காநின்ற, நனவாதிகளின் - சாக்கிராதியவத்தைகளில், அகமினது - அகங்காரத்தினது, பாவாபாவங்கள்-உண்மையின்மைகளை, அவிகாரமாகி-நிர்விகாரமாய், உய்த்துணரும் - மாறுதறிகின்ற, உயிர்வேறுன்றிருத்தலினால் - பிரத்தியகாத்மாவொன்று வேறிருத்தலால், என்றும் - எப்போதும், உரைத்தவகம் - முற்கூறியவகங்காரமானது, ஆன்மாவன்றென- ஆத்மாவல்லவென்று, அறிக - நீயறிவாயாக, புறம்புவைத்த - புறம்பினுள்ள, விடயங்கடமக்கு - விஷயங்களுக்கு, ஆன்மாவாய் - ஆத்மாவாகி, பரமான்மாவிற்கு - பிரத்தியகாத்மாவிற்கு, வேத்தியமாதலின் - அறியப்படுவதாயிருத்தலால், சடாசடமாய் - சடசித்தாய், அத்தமதின் - கண்ணுடியின், முன்பின்போல் - முன்னும்பின்னும்போல, ஒளி-பிரகாசமும், இலது- அப்பிரகாசமும், ஆம் - ஆகிய, அகந்தைக்கு-அகங்காரத்திற்கு, ஆகம்-தூலதேகத்துடனும், சிற்சாயை - சிற்சாயையுடனும், ஆன்மாவுடன் - ஆத்மாவினுடனும், புணர்ச்சியாம்-சம்பந்தமே தாதான்மியத்திரயங்களாம், எ-று.

ஆடிக்குமுன் பொளியும் பின் பிருட்டுமொதல்போல அகங்காரத்திற்கு முன்பு சித்தும் பின்பு சடமுமாம். ஆகவே, இவ்வகங்காரஞ்சித்திற்குச்சட முஞ் சடத்திற்குச்சித்துமாயிருத்தலிற் சிற்சடவடிவமாமென்க.

வினு:—அற்றேல், ஒருபொருள் மாறுபட்ட விருதன்மையடையுமோ?

விடை:—அத்தம்போ விருத்தலி னடைதல் கூடும்.

வினு:—அற்றேல், கண்ணுடியின் பிற்பாகத்திற்கு இரதப்பூச்சினு லிரு ட்டுவந்ததன்றிச் சுபாவமாயின்றே?

விடை:—இவ்வகங்காரத்திற்கு முன்பு சிற்சாயாவொளியும் பின்பு சடச்சாயாமலினமுமிருத்தலின் அங்ஙனமாயிற்றென்க.

வினு:—அற்றேல், முன்சடமெனக்கூறிப் பின்சிற்சடமெனக் கூறலாமோ?

விடை:—சடமாயிருந்தவாடிக்குச் சூரியனொளியைவாங்கி யிருளைவிள க்குந்தெளிவொன் றிருப்பதுபோல இவ்வகங்காரஞ் சடமாயினும் அதற்குக் கூடஸ்த னொளியைவாங்கி விடயங்களை விளக்குந்தன்மை யிருத்தலி னிங் ஙனங் கூறலாயிற்றென்க. ஒளி - அறிவும், இலது - அறியாமையு மெனக் கொள்க.

(தா - ம்.) சாக்கிராதியவத்தைகளில் விகாரத்தோடுஞ் சஞ்சரிக்கும் அகங்காராதியவத்தைகட்கு விலட்சணனுயிருந்தறியுந் துரியனேயாத்மா வெனவும், சடசித்துரூபமாய்ச் சஞ்சரிக்கும் அகங்காரம் கற்பிதாத்மா வெனவும், அவன் சஞ்சரிக்குஞ் சாக்கிராதியவத்தைகள் அநாத்மாவெனவுந் தெரிவித்தவாறும். (௧0அ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னர்ச் சிற்சடமென்றுகூறிய வகங்காரத்திற்குச் சம்பந்தங்களினுல்வருந் தாதான்மியத்திரய முணர்த்துகின்றார்.

வெப்பினே ஞனெனலாற் சிற்பதிவிம் பந்தான்
மேவுமாங் காரசம் பந்தத்தாற் றால
மெய்ப்படுவ வெம்மைமுத லனவறிதல் கரும
விளைவாகிக் கருமசமா நானறிந்தே னெனலாற்
றப்பரிய சிற்சாயை யுடனவ்வாங் கார
சம்பந்தஞ் சிருட்டிமுதன் முத்திபள வாகப்
பொய்ப்பரிசி னியல்பாகு நான்கருத்த னெனலாற்
புணர்ச்சியிலான் மாவினுட னணையதின்சம் பந்தம்.

(இ - ள்.) வெப்பினேனுனெனலால்-யானிச்சையையுடைய ஆன்மா வென்றிருத்தலின், சிற்பதிவிம்பமேவும்-ஞானப்பிரதிவிம்பயுக்தமான, ஆங் காரம்-ஆங்காரத்தினது, சம்பந்தத்தால்-கூட்டரவினுல், தாலமெய்ப்படுவ-

தூலதேகத்திற்குண்டான, வெம்மைமுதலனவறிதல் - உஷ்ணாதிகளையறி வதே, கருமவிளைவாகி - கர்மஜன்னியமாயுள்ள, கருமசமாம்-கர்மஜதாதாத்மியமாம், நானறிந்தே னெனலால் - நானறிந்தேனென்பதனால், தப்பரிய - கெடாத, சிற்சாயையுடன் - சிற்சாயையோடு, அவ்வாங்கார சம்பந்தம் - அவ்வகங்காரத்திற்குள்ள சம்பந்தமே, சிருட்டிமுதல்-சிருஷ்டிதொடங்கி, முத்தியளவாக - மோக்ஷபரியந்தம், பொய்ப்பரிசில் - மெய்த்தன்மையாயிருத்தலின், இயல்பாகும்-சகஜதாதாத்மியமாம், நான்கருத்தனெனலால்-நான் செய்கிறவ னென்பதனால், புணர்ச்சியிலான்மாவினுடன் - அசங்க வடிவ பிரத்தியகாத்மாவின்கண், அணையதின் - அவ்வகங்காரத்தினது, சம்பந்தம் - சம்பந்தமே, எ-று. தான் - அசை. தாதான்மியம்-ஒன்றுபட்டிருத்தல்.

(ப - ம்.) சிற்சாயைதங்கிய வகங்காரமானது நானிச்சாரூபி யென்பதனிலிருந்து தூலசம்பந்தத்தினாலதன் கன்மமான சீதோஷ்ணாதிகளையறிதலே கன்மஜதாதாத்மியமெனவும், அவ்வகங்காரமானது சீவனுடன் கூடி நானறிந்தேனென்பது இயல்பாயிருத்தலிற் சகஜதாதாத்மியமெனவும், அவ்வகங்காரம் ஆத்மசம்பந்தத்தினால் நான் கருத்தாவென் றறிவது பிராந்தியா யிருத்தலின் பிராந்திஜதாதாத்மிய மெனவுங் கூறினார்.

(நா-ம்.) அகங்காரசம்பந்தமான இத்தாதாத்மியத்திரயங்களா லிவ்வகங்காரம் ஆத்மாவன்றென வுணர்த்தியவாறும். (க0கூ)

அ - கை.

முன் 'இந்துவினை' என்ற கவிமுத லிதுகாறு மாயையினாலுண்டாகிய திரிசியங்களி னிலக்கணங்களைப் பகுத்தறிகின்ற திரிசிய விவேக மிவ்வளவெனக்கூறி, மேல் இத்திரிசியத்தை நீக்கு நிமித்த மிதனைச் சங்கிரகமாகச் சுருக்கி யாத்மாவில் ஆகந்துகமாகத் தோற்றின வஞ்ஞான முதலிய வேழவத்தையி னிலக்கணங் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளில் அவ்வேழவத்தையின் நாம முணர்த்துகின்றார்.

இசைப்பிலது பிராந்திசென் னியமாகு மென்னு
  மிவைமுழுதுஞ் செப்புதிரி சியவிவே கந்தான்
மிசைப்புகல்வ வஞ்ஞான மாவரண மிக்க
  விட்சேபம் பரோட்சமப ரோட்சஞா னம்பின்
வசைப்படுத லுறுஞ்சோக நிவிர்த்தியதன் மீது
  வருகிரங் கிசதிருத்தி யெனுமவத்தை யேழுந்
திசைப்புறுத லுறுஞ்சீவர்க் காவனவா மிவற்றின்
  றிறமனைத்து முறைபிறழா தினியெடுத்து மொழிவாம்.

(இ - ள்.) இசைப்பில் - சொல்லுமிடத்தில், அது - முற்கூறிய வச் சம்பந்தமே, பிராந்தி சென்னியமாகுமென்னும் - பிராந்திஜதாதாத்மிய மென்று சொல்லப்படும், இவை முழுதும் - இங்ஙனங் கூறிய யாவும்,

செப்பு - சொல்லாநின்ற, திரிசியவிவேகம் - திரிசியவிவேகமாம், மிசைப் புகல்வ - மேற்கூறுவன, அஞ்ஞானம் - அஞ்ஞானமும், ஆவரணம் - ஆவரணமும், மிக்கவிட்சேபம் - விரிந்தவிட்சேபமும், பரோட்சம் - பரோக்ஷஞானமும், அபரோட்சஞானம் - அபரோக்ஷஞானமும் - பின் - பின்பு, வசைப்படுதலுறும் - இகழ்ச்சியுற்ற, சோகநிவிர்த்தி - துக்கநிவிர்த்தியும், அதன்மீதுவரு - அதற்குமேலுண்டான, நிரங்கிசதிருத்தியெனும் - தடையற்ற வானந்தமுமென்கின்ற, அவத்தையேழும்-சத்தாவத்தையும், திசைப்புறுதலுறும் - திகப்பையடைந்துள்ள, சீவர்க்கு - சிதாபாசர்களுக்கு,ஆவனவாம் - உண்டானவைகளாம், இவற்றின் - இச்சத்தாவத்தைகளின், திறமனைத்தும் - தன்மைகளியாவையும், முறைபிறழாது - கிரமப்படி, இனியெடுத்து மொழிவாம் - மேலெடுத்துக் கூறுவாம், எ-று.

திகைப்பென்பது எதுகைநோக்கித் திசைப்பென வந்தது. அம்சமென்பது அங்கிசமென்றாயிற்று.

வி௵:—அஞ்ஞனந்திரிசிய விவேகமெனக்கூறி யிவண் அவத்தையென வேறுபிரித்த தென்னை?

விடை:—இந்நூலாசிரியர் திருக்குத் திரிசியமென்னு மிரண்டானவிவற்றுள் திரிசியத்தின் அபிப்பிராயமான அஞ்ஞான ஆவரணவிட்சேபத்தையும் திருக்குவின் அபிப்பிராயமான அபரோட்சாதி மூன்றையும் இத்திரிசியத்தை விடுதற்குந் திருக்குவைப் பற்றுதற்கும் ஏதுவாக மத்தியிலுள்ள பரோட்ச ஞானமுமான வேழவத்தையும் பற்றுதலும் விடுதலுமாதலினிவற்றைபுந் திரிசியத்தி லடக்கிக் கூறினரேனும் இவை மலினவத்தையை நீக்குஞ் சுத்தாவத்தையெனத் தோன்றப் பிரித்தாரென்க.

(நா - ம்) வெளிப்படை. (௧௧௦)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையால் சத்தாவத்தையுள் அஞ்ஞான ஆவரண மிரண்டி னிலக்கண முணர்த்துகின்றார்.

புன்னெறிகொள் குடும்பியாய் வலியறுமோர் சித்துப்
    போலியாஞ் சீவனுயர் சுருதிவிசா ரத்தின்
முன்னமொரு தன்சொருப மாகியபே ரொளியா
    முதற்றுரிய நிலையறியா திருந்திடலஞ் ஞானம்
பின்னொருகா லுயிரியல்பு கூறுமிடத் தின்று
    பிரத்தியகான் மாத்தோன்றா தெனுங்கலக்க மிரண்டும்
பன்னியவஞ் ஞானகா ரியமாகு மென்னப்
    பகர்தருமா வரணமென்பர் பலகலைகற் றுணர்ந்தோர்.

(இ - ள்.) புன்னெறிகொள் - அற்பமார்க்கத்தைக்கொண்ட, குடும்பியாய் - சமுசாரியாய், வலியறும் - அசத்தனை, ஓர் சித்துப்போலியாம்-

ஓர் சிதாபாசனாகிய, சீவன் - சீவனானவன், உயர்-மேலான, சுருதிவிசாரத்தின் - வேதவிசாரத்திற்கு, முன்னம்-முன்னர், ஒரு-ஒப்பற்ற, தன்சொரூபமாகிய-தன் நிஜசொரூபமான, பேரொளியாம் - சுயம்பிரகாசமாகிய, முதற்றுரியநிலை - முதன்மையான பிரத்தியகாத்மாவின்றன்மையை, அறியாதிருந்திடல் - அறியாதிருப்பதே, அஞ்ஞானம் - முற்கூறிய வஞ்ஞானமாம், பின் - பின்பு, ஒருகால் - ஒருவேளையில், உயிரியல்பு - ஆத்மாவின் றன்மையை, கூறுமிடத்து - பிரசங்கிக்குமிடத்து, இன்று பிரத்தியகான்மா - பிரத்தியகாத்மா வில்லையென்னும் நாஸ்தியும், தோன்றாதெனும் - இருந்தாற்றோன்றாதா வென்னும் நபாதியுமாகிய, கலக்க மிரண்டும் - இவ்விரண்டு கலக்கமும், பன்னிய - முற்கூறிய, அஞ்ஞானம் - அஞ்ஞானத்தினது, காரியமாகுமென்ன-காரியமாமென்று, பகர்தரும்-சொல்லாநின்ற,ஆவரணமென்பர் - ஆவரணமென்றுரைப்பர், பலகலை - சகலசாத்திரங்களையும், கற்றுணர்ந்தோர் - ஓதியுணர்ந்த பெரியோர்கள், எ - று. (கககக)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையான் விட்சேபமுதல் மூன்றவத்தையினிலக்கண முணர்த்துகிறார்.

கருத்தனுமொண் கருமபலப் போத்திருவுந் தானாய்க்
  கருதியுடம் பபிமானி யாஞ்சீவன் றானே
யுரைத்தலரும் விட்சேபஞ் சுருதிகுரு வுண்மை
  யுரையாலுண் டுயிரெனவே யறிதலசத் தென்று
நிரைத்தமுத லாவரண நிவர்த்தகமாம் பரோட்ச
  நீபிரம மெனும்வேத மொழிவிசா ரத்தால்
வரத்துரியன் றானெனவே யறிந்திடுத லபாவா
  வரணநிவர்த் தகமாகு மபரோட்ச ஞானம்.

(இ - ள்.) கருத்தனும் - கருத்தாவும், ஒண்கருமபலம் - ஒள்ளியகருமபலத்தை யனுபவிக்கும், போத்திருவும் - போத்தாவும், தானாய்க்கருதி - தானாகநினைத்து, உடம்பபிமானியாம் - தேகாபிமானியான, சீவன்றானே - சிதாபாசனே, உரைத்தலரும் - சொல்லுதற்கரிய, விட்சேபம் - விட்சேபமாம், சுருதி - வேதங்களும், குரு - ஆசிரியருங்கூறாநின்ற, உண்மையுரையால் - மஹாவாக்கியப் பிரமோபதேச மென்னுஞ் சத்தியவசனத்தினால், உண்டுயிரெனவே - ஆத்மாவிருக்கின்றதெனவே, அறிதல் - அறிவது, அசத்தென்று - முன்னாஸ்தியென்று, நிரைத்த - சொல்லிய, முதலாவரணம் - முதலாவரணமானது, நிவிர்த்தகமாம் - நிவிர்த்தியான, பரோட்சம்-டரோட்சஞானமாம், நீ பிரமமெனும் - நீயேபிரமமென்கின்ற, வேதமொழி - வேதமுடிவினுள்ள மஹாவாக்கியத்தின், விசாரத்தால் - விசாரணையால், வரம் - சிரேட்டமான, துரியன் - பிரத்யகாத்மா, தானெனவே-தானென்று,அறிந்திடுதல் - தெரிந்துகொள்வது, அபாவம்-இரண்டாவதான

நபாதியென்னும், ஆவரணம் - ஆவரணமானது, நிவர்த்தகமாம் - நிவிர்த்தியான, அபரோட்சஞானம்-அபரோக்ஷஞானமாம், எ - று. தான்-அசை.

ஞானமென்பது பரோட்சத்துடனுங் கூட்டப்பட்டது. பரோக்ஷஞானத்தால் நாஸ்தியென்பதும், அபரோக்ஷஞானத்தால் நபாதியென்பதுமாகிய விருதன்மையையுடைய வாவரணநீங்கிற்றென்க.

'நீபிரமமெனும் வேதமொழி' என்பது நீயே பிரமம் பிரமமேநீயென்றவிடத்துள்ள தேற்றேகாரத்தினு லவ்விருதன்மையு நீங்கிச் சுயம்பிரகாசமான பிரத்யகாத்மாவே தானென விளங்கு மத்துவிதஸ்வரூபத்தை விளக்கிற்றென்க. (கக௨)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையாற் சோகநிவிர்த்தி முதலிரண்டவத்தையினிலக்கண முணர்த்துகின்றூர்.

துரியநிலை யடைந்ததற்பி னான்கருத்த னான்போத்
திருவென்னுஞ் சீவவுருத் துக்கமகன் றிடுத
லரியதெனு மச்சோக நிவிர்த்தியாஞ் செய்தே
யடைதலுறும் பலனனைத்து மடைந்தனமென் றமைதல்
பரிவினிரங் கிசதிருத்தி யிரண்டு மபரோட்ச
பலமாகு மறிவுருவா மான்மாவிற் கென்றுந்
தெரியுமப ரோட்சமுள தாதலினு லவற்குச்
சேர்தலெவ்வா றஞ்ஞான முதலனவிங் கென்னில்.

(இ - ள்.) துரியநிலையடைந்து - ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெற்று, அதன்பின் - அதற்குமேல், நான்கருத்தன்-நான்கர்மகர்த்துரு, நான்போத்திரு - நான்கன்மபலப்போக்திரு, என்னும் - என்கின்ற, சீவவுரு - சிதாபாச வடிவமான, துக்கமகன்றிடுதல் - துக்கநிவிர்த்தியே, அரியதெனும்-நீங்கற்கரியதெனச்சொல்லும், அச்சோகநிவிர்த்தியாம் - முற்கூறிய துக்கநிவிர்த்தியாம், செய்து - யாம் செய்யத்தக்க கிருத்தியங்களைச் செய்து, அடைதலுறும் பலனனைத்தும் - அடையவேண்டிய பயனியாவையும், அடைந்தனமென்று - பெற்றனமென்ன, அமைதல் - சகசதிருஷ்டியிலமைந்திருப்பதே, பரிவின் - இன்பவடிவமான, நிரங்கிசதிருத்தி-முற்கூறிய தடையற்றவாநந்தமாம், இரண்டும் - இவ்விரண்டும், அபரோட்சபலமாகும்-அபரோட்சஞானத்தின்பயனும், அறிவுருவாம்-சைதன்னிய ஸ்வரூபமான, ஆன்மாவிற்கு - பிரத்தியகாத்மாவிற்கு, என்றும் - எப்போதும், தெரியும் - அறிதற்கியைந்த, அபரோட்சம் - (நித்திய) அபரோக்ஷஞானம், உளதாதலினுல் - உண்டாயிருத்தலினுல், அவற்கு - அவ்வாத்மாவிற்கு, அஞ்ஞான முதலன- அஞ்ஞானுதி சப்தாவத்தைகள், இங்கு - இவ்விடத்தில், சேர்தல்- அடைதல், எவ்வாறென்னில் - எங்ஙனமென்னில், எ - று. ஏ - ஈற்றசை, சோகமென்றது - கூடத்தனில்லையென்ற துன்பத்தை.

(நா-ம்.) அவாங்மனோகோசரமாய்த் தானேதானும் விளங்கும் அதீன மான கூடஸ்தன் தனது லீலாவிபூதியினு லெவ்விடத்து மதுவதுவாய் விள ங்குந் தன்னை யறியும் நிமித்தமுண்டான சங்கற்பம் அந்தர் முகத்தை நோக்கி அதிற்கரையாது பகிர்முகநோக்கத்திற் றனது நிரதிசயம் வெளிப் படாமையை யானறியேனென்ற சங்கற்பத்துக்கு மூன்னுள்ளவிடம் அஞ் ஞானமும்,அது விசாரத்தாற் றேடுமிடத்து அவ்வதீதம் இவ்விருத்திக் கெட்டாமையால் இல்லையெனக்காண்பது ஆவரணமும், அவ்வனுபவம் விளங்கவில்லையேயென வருந்தி விரிகின்ற விருத்தியையுடையது விட்சேப மும்,ஆசிரியனால் அந்நிரதிசயமிருக்கின்றதெனக் கூறும் யுக்தியினால் அமர்ந் திருக்குமிடத்து முன்னில்லையென்ற மயக்க நீங்கியிருப்பதாக நிச்சயிப்பது பரோக்ஷஞானமும், அவ்வாசிரியன் சுருதியுத்தியனுபவங்களால் வெளிப் படுத்துமிடத்து முன்தோன்றுநின்ற மயக்கநீங்கித் தானாகக் காண்பது அப ரோக்ஷஞானமும், இவற்றான் முன்னில்லை யென்றதனால் வந்த கர்த்திருத் துவ போக்திருத்துவமாதிய துன்பங்க ணீங்குவதே சோகநிவிர்த்தியும், இவ்விடத்திற் றனக்குத்தானே யுள்ளவின்பம் விளங்குவது நிரங்கிசதிரு த்தியுமென விளக்குவித்தவாறும். (கககூ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய உவமேயம்போதமாம்படி யிவ்வவத்தைகள் வந்த காரணம் நன்றாக விளக்கவேண்டுமென்னும் வினாவை நோக்கி உவ மான பூருவகமாகக் கூறுவான்றொடங்கி அஞ்ஞானாதி நான்கவத்தையி னிலக்கண முணர்த்துகின்றார்.

கடந்துநதி பதின்மர்தமை யெண்ணுங்கா லொருவன்
  கண்டுநவ புருடரைப்பத் தாமவன்று னெனவே
யடைந்தறியா திருத்தலே யஞ்ஞானம் பத்தா
  மவனிலைகா ணப்படா னென்னுமிரு பிராந்தி
யிடும்பைதரு மாவரண நதியுளவ னிறந்தா
  னெனுந்துக்கம் விட்சேபம் வேறொருவன் மொழியாற்
கிடந்ததொரு துறக்கமென வுளனெனவே யறிதல்
  கிளர்ந்தவவ னிலையென்ற லொடுபகைத்த பரோட்சம்.

(இ - ள்.) கடந்து நதி-ஆற்றைக்கடந்து, பதின்மர்தமை-பத்துப்பேர் தம்மை, எண்ணுங்கால் - எண்ணுமிடத்து, ஒருவன் - அவருளொருவன், கண்டுநவபுருடரை - ஒன்பதுபேரைப்பார்த்து, பத்தாமவன் - பத்தாவான், தானெனவேயடைந்தும்-தானாயிருந்தும், அறியா திருத்தலே-யான்பத்தாவா னென்றுணரா திருப்பதே, அஞ்ஞானம்-அஞ்ஞானமாம்,பத்தாமவன்-பத்தா வான், இலை - இல்லை, காணப்படானென்னும் - இருந்தாற் காணப்படா னென்கின்ற, இருபிராந்தி - இவ்விரண்டு கலக்கமும், இடும்பைதரும் - துன்பத்தைக் கொடுக்கின்ற, ஆவரணம் - ஆவரணமாம், நதியுள் - ஆற்றி

னுள், அவன் அப்பத்தாவான், இறந்தானெனும் - மரித்தானென்கின்ற, துக்கம் - துன்பமே, விட்சேபம் - விட்சேபமாம், வேறொருவன் - மார்க்கத்திற்செல்லுமற்றோராப்தன், மொழியால் - வாக்கினுல், கிடந்ததொரு துறக்கமென - ஒரு சொர்க்க முண்டென் றுகமப்பிரமாணத்தா லறிவதுபோல, உளனென - பத்தாவானுண்டென, அறிதல் - அறிகின்றதே, கிளர்ந்த - முற்கூறிய, அவன் - அப்பத்தாவான், இலையென்றலொடு - நாஸ்தியென்பதனேடு, பகைத்த - பகையான, பரோட்சம் - பரோட்சஞானமாம், எ - று. (ககச)

அ - கை.

இச்செய்யுளில் அபரோட்சமுதலிய மூன்றவத்தையி னிலக்கணமுணர்த்துகின்றார்.

சங்கைநவ புருடரொடு முறையெண்ணி நீயே
 தசமனெனத் தனைத்தானே யிருந்தபடி யறித
லிங்குவரு தசமன்கா ணப்படா னெனலோ
 டிகலுமப ரோட்சமா நதியிலிறந் தனனென்
றங்குவரு துயரகறல் சோகநிவிர்த் தியதா
 மடைந்ததன தியனிலையிற் சுகித்திருத்த றனே
துங்கநிரங் கிசதிருத்தி யெனவறிக வினிமேற்
 றொல்வேத வாக்கியமாம் விசாரமெடுத் துரைப்பாம்.

(இ - ள்.) சங்கை - சங்கையுள்ள, நவபுருடரொடு - ஒன்பதின்மருடன்கூடி, முறை - கிரமமாக, எண்ணி - எண்ணிக்கையிட்டு, நீயே தசமனென - நீயேபத்தாவானென்று தெரிவிக்க, தனை - தன்னை, தானே - தான்றனே, இருந்தபடி யறிதல் - முன்னிருந்தவண்ணந் தெரிந்துகொள்வதே, இங்குவரு - இவ்விடத்தில் வராநின்ற, தசமன் - பத்தாவான், காணப்படானெனலோடு - காணப்படானென்ற நபாதியோடு, இகலும் - பகைக்கின்ற, அபரோட்சமாம் - அபரோக்ஷஞானமாம், நதியில் - ஆற்றில், இறந்தனனென்று - மரித்தானென்று, அங்குவரு - அவ்விடத்துண்டான, துயரகறல் - துக்கம் நீங்கலே, சோகநிவிர்த்தியதாம் - துக்கநிவிர்த்தியாம், அடைந்த - இங்ஙனமடைந்த, தனதியனிலையில்-தனதுநிசஸ்திதியில், சுகித்திருத்தறனே - சுகித்திருத்தலே, துங்கம் - மேலான, நிரங்கிசதிருத்தியென - தடையற்றவானந்தமென்று, அறிக - நீயறிவாயாக, இனிமேல்-இனிமேல், தொல்வேதம் - அநாதியான வேதமுடிவிற்கூறிய, வாக்கியமாம் - மஹாவாக்கியத்தினது, விசாரம்-பரமாத்மாயிக்கிய விசாரணையை, எடுத்துரைப்பாம் - எடுத்துச்சொல்லுவாம், எ - று.

தசமனென்பது ஆன்மா. ஏனையவொன்பதும் விசுவன், தைசுதன், பிராஞ்ஞன்; வைசுவானரன், சூத்திரான்மா, அந்தரியாமி; சிற்சொலிதை, போற்புவிசாந்தன், பிரசாடத்தியனும். வேறொருவனென்றது ஆசிரி

யனே. அஞ்ஞானம்-தன்னே மறந்தவறியாமை; ஆவரணம் - முழுதுந் தெரியாமல் மறைத்தல்; விட்சேபம் - அவனிறந்தா னென்றதனுல் வருந்துன்பம்; பரோட்சஞானம்-இருக்கின்முனென்னும்நிச்சயம்; அபரோக்ஷஞானம்-பிரத்தியக்ஷமாய்க் காண்பது; துக்கநிவர்த்தி - மரித்தானென்றதனுல் வருந்துந் துன்பநீங்கல்; நிரங்கிசதிருத்தி – மரித்தானென்றவனேக் கண்டதனுல் வந்த சுகம்.

வினு:—ஈற்றிலுள்ள மூன்றும் அவத்தையானவா றென்னே?

விடை:—ஏனைய நான்கு நீங்கினவிடத் துதித்தனவாதலி னென்க.

(நா.-ம்.) தசமனுக்கு முன்னும் பின்னுமின்றி விசாரணகாலத்தில் அவாந்தரமாக வில்வவசுதைகள் தோன்றி நீங்கினவாறுபோல ஆன்மாவிற்கும் அவஸ்தைகள் இங்ஙனமே தோன்றி நீங்கினவென்பதாம். (கசரு)

அ - கை.

முற்கூறிய ஏழவத்தைகளில் ஆசிரியர் முகமாய்ச் செய்யுஞ் சுருதி விசாரத்திற் பரோட்சஞானத்தாலுண்டான ஆன்ம நிச்சயத்தை அபரோட்சமாய் விளக்குவான் கருதி வேதங்களின் முடிவான மகாவாக்கியங்களினிலக்கணங் கூறுவான்றெடங்கி இச்செய்யுளில் மூன்று மகாவாக்கியங்களின் இலக்கண முணர்த்துகின்ருர்.

விரிந்தவிதி நிடேதஞ்சித் தார்த்தபோ தகமாம்
வேதவாக் கியமூன்று திறனுகு மவற்றுள்
வருந்திமக முதலனசெய் கென்றல்விதி விடுக
மதுபாஞ திகளென்கை நிடேதம்விதி யின்றித்
திருந்துசிவ வுயிரயிக்கப் பொருடனேயே தெருட்டல்
சித்தார்த்த போதகவாக் கியமாகு மென்னப்
பொருந்துமறை நான்கினுநான் குளவாஞ்சித் தார்த்த
போதகமா கியமகா வாக்கியங்க ளன்றே.

(இ - ள்.) விரிந்த - விரிந்திருக்கின்ற, விதி-விதிவாக்கியமும், நிடேதம் - நிஷேதவாக்கியமும், சித்தார்த்தபோதகம் - சித்தார்த்த போதகவாக்கியமும், ஆம்-ஆமென்று, வேதவாக்கியம் - சுருதிவாக்கியம், மூன்றுதிறனுகும் - மூன்றுவகையாம், அவற்றுள் - அவைகளுக்குள், வருந்தி - வருத்தப்பட்டு, மகமுதலன - யாகாதிகன்மங்களே, செய்கென்றல் - செய்கவென்று சொல்லுதலே, விதி-விதிவாக்கியமும், மதுபாஞதிகளே-சுராபானமுதலியவற்றை, விடுக - தவிர்வாயாக, என்கை - என்றுசொல்லுவதே, நிடேதம் - நிஷேதவாக்கியமும், விதியின்றி - இவ்விதி நிஷேதசூனியமாய், திருந்து-திருத்தமான, சிவவுயிர் - ஜீவப்பிரமங்களுக்கு, அயிக்கியப்பொருடனே - ஐக்கியார்த்தத்தை, தெருட்டல் – உறுதியாய்ப் போதிப்பதே, சித்தார்த்தபோதகவாக்கியம் - சித்தார்த்தபோதகவாக்கியமும், ஆகுமென்ன –

ஆகுமென்று, பொருந்தும் - அமைந்திருக்கும், மறை நான்கினும் - நான்கு வேதங்களிலும், சித்தார்த்தபோதகமாகிய - சித்தார்த்தபோதகமான, மகா வாக்கியங்கள் - மகாவாக்கியங்களானவை, நான்குளவாம் - நான்குள்ளன வாம், எ - று. அன்று - ஏ - அசை.

சித்தார்த்தபோதகம் - சித்தித்துள்ள நிச்சயப்பொருளை விளக்குதல். என்வே, கூடஸ்தப்பிரமாயிக்கியத்தைக் கூறவந்த மகாவாக்கியமாமென்க.

இங்ஙனங்கூறவந்த மறைநான்கினும் நான்குளவாஞ் சித்தார்த்த போதக மகாவாக்கியமெனவே, இருக்கு யசுர் சாமம் அதர்வணமென்னும் நான்கு வேதங்களினும்முறையே. * பிரஞ்ஞானம்பிரமம், அகம்பிரமாஸ்மி, தத்துவமசி, அயமாதமாப்பிரமமென்னும் நான்குவாக்கியங்களுண்டென வறிக.

வினா:—அற்றேல் இங்ஙனங்கூறிய வேதம்: விதி நிஷேதமான கருமத்தையுங் கூறியதென்னை?

விடை:—அக்கருமங்களின் சிறுமையும் ஞானத்தின் பெருமையுந் தோன்றி அவற்றை நீக்கி யிதனை யடைதற்கென்க.

வினா:—யாகாதிகளை விதிப்படி செய்கவென்ற விதிவாக்கியம் கருமமாம்; மதுபானாதிகளை விடுகவென்ற நிஷேதவாக்கியம் கருமமா மென்பதெங்ஙனம்?

விடை:—விலக்குகவென்றதும் ஓர்விதியாதலி னதுவுங் கருமமேயாயிற்றென்க.

வினா:—அற்றேல், இவ்வேதம்: கருமம், பத்தி, ஞானமென மூன்று காண்டமாகக் கூறியதென்னை?

விடை:—இவ்விரண்டிற்கும் நடுவாயிருந்த பத்திக்குத் தனக்கென வோருருவமின்றி யவ்விரண்டற்கும் கருவியாய்க் கருமத்தைச் சேரின் அதனையும் ஞானத்தைச்சேரின் அதனையும் விளக்கலால் அதனை யவற்றி னடக்கிக் கூறிற்றென்க. (கககூ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய வேதங்களிற் சாமவேதத்தின் முடிவிற் கூறுஞ் சித்தார்த்தபோதகமான தத்துவமசி யென்னும் மஹாவாக்யமும் அதனிலக்கணமும் விளங்க உணர்த்துகின்றார்.

---

* (1) பிரஞ்ஞானம் பிரமம்—பிரத்தியக் சேதனம் (ஆத்மா) பிரமம். பிரத்தியக்—உள்.

(2) அகம்பிரமாஸ்மி—(பிரத்தியகாத்மாவாகிய) நான் பிரமமா யிருக்கிறேன்.

(3) தத்துவமசி—அது (பிரமம்) நீயாயிருக்கிறாய்.

(4) அயமாத்மாப் பிரமம்—இந்த ஆத்மா பிரமம். என்பன நான்கு மகாவாக்கியங்களின் பொருளாம்.

உரைத்தவைபுட் சிறந்தது நற் சாமமறை புகனு
　　மோங்குதத்தொ மசிமகா வாக்கியமங் கதற்குப்
பரத்தனுறு தற்பதந்தொம் பதமொடசி பதமாய்ப்
　　பதமூன்றுஞ் சிவமுயிரங் கவற்றயிக்க முறையே
யருத்தமென லாம்பதமே பதார்த்தமொடு வாக்கி
　　யாாத்தங்க டமக்குச்சம் பந்தமுறை மூன்றும்
விரிக்கிலவை தாஞ் * சமா னுதிகர ணம்பின்
　　விசேடவிசே டியமிலக் கணமொடிலக் கியமாம்.

---

* தத்துவமசியாதிவாக்கியம் சம்பந்தத்திரயத்தால் அகண்டார்த்தத்தைப் போதிக்கின்றமையின் அச்சம்பந்தத்திரயத்தின் றன்மையின்றியமையாதறிதல்வேண்டும். அது: சமானுதிகரணிய பாவசம்பந்தம், விசேஷண விசேஷிய பாவசம்பந்தம், லக்ஷயலக்ஷண பாவசம்பந்த மென்பனவாம்.

(1) பதங்களின் சமானுதி கரணிய பாவசம்பந்தம் வருமாறு:—

சமான (ஒரு) வேற்றுமையின் பலத்தால் சமான (ஒரு) அதிகரண (அர்த்தவடிவ ஆசிரய)த்தினையுடைய இரண்டு பதங்கள் சமானுதிகரணமெனப்படும். ['கடவுள் ஒருவர்' என்னும் வாக்கியத்தில் கடவுளென்னும் பதமும் ஒருவர் என்னும் பதமும் சமான வேற்றுமை (முதல் வேற்றுமை) யாயிருத்தலால் ஒரு பொருளையே குறிப்பித்தவாறு காண்க.] அவ்விரண்டு பதங்களுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தம் சமானுதிகரணியம் (ஒரு பொருளுடைமை) எனப்படுகின்றது.

அவன்றான் இவன் (இத்தேவதத்தன்) என்னும் வாக்கியத்தில் அந்தக் காலத்துடன் கூடிய தேவதத்தனைக் குறிப்பித்துக் காட்டும் அவன் என்னும் பதமும், இந்தக் காலத்துடன் கூடிய தேவதத்தனைக் குறிப்பித்துக் காட்டும் இவன் என்னும் பதமும், ஒரு வேற்றுமை (அவன் இவன் என்னும் முதல் வேற்றுமை)யின் பலத்தால் ஒரே தேவதத்த சரீரத்தில் தாற்பரிய முடையனவா யிருத்தலால் (அவன் இவன் என்னும்) இவ்விரண்டு பதங்கட்கும் சமானுதிகரணிய பாவசம்பந்தம் சித்திக்கின்றது. இவ்வாறே 'தத்துவமசி' மகாவாக்கியத்தின் பரோட்சத்துவாதிகளுடன் கூடிய சேதனத்தைக் குறிப்பித்துக் காட்டும் 'தத்' என்னும் பதமும், அபரோட்சத்துவாதிகளுடன் கூடிய சேதனத்தைக் குறிப்பித்துக் காட்டும் 'துவம்' என்னும் பதமும், ஒருவேற்றுமை (தத் துவம் என்னும் முதல் வேற்றுமை) யின் பலத்தால் ஒரே சேதனத்தில் தாற்பரிய முடையனவாயிருத்தலால் (தத் துவம் என்னும்) இவ்விரண்டு பதங்களுக்கும் சமானுதிகரணியபாவ சம்பந்தம் சித்திக்கின்றதென்க. இதன்கண் விருத்தமான பரோட்சத்துவாதி தர்மங்களும் அபரோட்சத்துவாதி தர்மங்களும் விடுபட்டுச் சேதன பாகம் விடப்படாதிருத்தலால் இச்சம்பந்தம் விட்டுவிடாதலட்சணையாமென்க. பின் வரும் சம்பந்தங்களும் இவ்விலட்சணையா மென்பதை யுய்த்துணர்ந்துகொள்க. விட்டுவிடாத லட்சணையெனினும், பாகத்தியாக லக்ஷணை யெனினும், ஜகதஜகத் லட்சணை யெனினு மொக்கும்.

(இ - ள்.) உரைத்த - முற்கூறிய, அவையுள் - அந்நான்கனுள், சிறந்தது - மேம்பாடுள்ளது, நற்சாமமறை - சிறந்த சாமவேதமானது, புகலும் -

(2) பதார்த்தங்களின் விசேஷண விசேஷிய பாவசம்பந்தம் வருமாறு:—

ஒன்றைப்பிறித்தறிவிப்பதற்கேதுவா யிருப்பது விசேஷணமெனப்படும். அதனால் பிறித்தறிவிக்கப்பட்டது விசேஷியமெனப்படும். அவன்றான் இவன் (இத்தேவதத்தன்) என்னும் வாக்கியத்தில் இவன் என்னும் சொல்லால் விளங்குகிற இந்தக் காலதேச (இட)ங்களுடன் கூடிய தேவதத்தனாகிய இவன், அவன் என்னும் சொல்லால் விளங்குகிற அந்தக் காலதேசங்களுடன் கூடிய தேவதத்தனிலும் வேறுபட்டவனல்ல னென்றெப்போது விளங்குகின்றதோ அப்போது இவன் என்னும் சொற்பொருளின் பேதத்தை அவன் என்னும் சொல்லின் பொருள் வேறுபடுத்துவதால் அவன் என்பது விசேஷணமும், இவன் என்னும் சொல்லின் பொருள் வேறுபடுத்தப்படுவதா யிருத்தலால் இவன் என்பது விசேஷியமுமாம். இவ்வாறே இவன்றான் அவன் (அத்தேவதத்தன்) என்னும் வாக்கியத்திலும் இவன் என்பதுவிசேஷணமும் அவன்என்பது விசேஷியமுமாம். இதனால், அவன்றான் இவன் இவன்றான் அவன் என்னும் வாக்கியங்களில் அவன் இவன் என்னும் பதங்கள் பொருள் நோக்கம்பற்றிப் பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) விசேஷணவிசேஷியங்களா யிருக்கின்றன. [அஃதாவது அவன் என்பது ஒரு நோக்கத்தில் விசேஷணமாயும் மற்றொரு நோக்கத்தில்விசேஷியமாயும் இவன் என்பதும் அங்ஙனமே விசேஷணமாயும் விசேஷியமாயு மிருக்கின்றன வென்பதாம்] இருக்கவே, விசேஷண விசேஷியபாவவடிவசம்பந்தம் சித்திக்கின்றது. இதுபோன்று 'தத் துவமசி' மகாவாக்கியத்தில் 'துவம்' பதவாச்சியமாயஅபரோட்சத்துவ (பிரத்தியட்சமாய)கிஞ்சிக்ஞத்வாதிகளுடன் கூடிய சைதன்னியம், 'தத்' பதவாச்சியமாய பரோட்சதுவ சர்வஞ்ஞத்வாதிகளுடன்கூடிய சைதன்னியத்திலும் வேறுபட்டதன்றென்றெப்போது விளங்குகின்றதோ அப்போது 'துவம்' பதார்த்தத்தின் பேதத்தைத் 'தத்' பதார்த்தம் (பதப்பொருள்) வேறுபடுத்துவதால் 'தத்' என்பது விசேஷணமும் 'துவம்' பதார்த்தம் வேறுபடுத்தப்படுவதாயிருத்தலால் துவம் என்பது விசேஷியமுமாம்.

இவ்வாறே 'துவந்ததசி' என்னும் வாக்கியத்தில் 'துவம்'என்பது விசேஷணமும், 'தத்' என்பது விசேஷியமுமாம். இதனால் 'தத்துவமசி' 'துவந்ததசி' என்னும் வாக்கியங்களில் 'தத்' 'துவம்' என்னும் பதங்கள் பொருள் நோக்கம் பற்றிப் பரஸ்பரம் விசேஷண விசேஷியங்களா யிருக்கின்றன. [அஃதாவது 'தத்' என்பது ஒருநோக்கத்தில் விசேஷணமாயும், மற்றொரு நோக்கத்தில் விசேஷியமாயும், 'துவம்' என்பதும் அங்ஙனமே விசேஷணமாயும், விசேஷியமாயும் இருக்கின்றன வென்பதாம்.] இருக்கவே, 'தத்துவமசி' மகாவாக்கியத்தில் விசேஷண விசேஷியபாவரூப சம்பந்தம் சித்தித்தவாறு காண்க.

கூறும், ஒங்கு-உயர்ந்த, தத்தோமசி-தத்துவமசியென்னும், மகாவாக்கியம் - மஹாவாக்கியமாகும், அங்கதற்கு - அவ்வாக்கியத்திற்கு, பரத்சலுறு - விரித்துச் சொல்லுகின்ற, தற்பதம் - தற்பதமும், தொம்பதமொடு - துவம் பதமும், அசிபதமாய் - அசிபதமுமாக, பதமூன்றும் - பதம் மூன்றுக்கும், சிவம் - பிரமமும், உயிர்-கூடஸ்தனும், அங்கவற்று-அவ்விரண்டின், அயிக்கியம் - அயிக்கியமுமாகிய விம்மூன்றும், முறையே - நிரலே, அருத்தமெனலாம் - அர்த்தமெனப்படும், பதம்-மூன்று பதமும், பதார்த்தமொடு-மூன்று பதார்த்தமும், வாக்கியார்த்தங்கடமக்கு - வாக்கியார்த்தமுமாகிய விம்மூன்றற்கும், சம்பந்த முறை மூன்றும் - சம்பந்தத் திரயங்களாம், விரிக்கிலவை - அவற்றை விரிக்கில், சாமானாதிகரணம் - சமானாதி கரணமும், பின் - பின்பு, விசேட விசேடியம் - விசேஷண விசேஷியமும், இலக்கணமொடிலக்கியம் - லக்ஷண லக்ஷியமும், ஆம் - ஆகும், எ - று. ஏ - தாம் - அசை.

'முறையே யருத்தம்' என்றமையின் தற்பதத்திற்குச் சிவமும், துவம் பதத்திற்கு உயிரும், அசிபதத்திற்கு ஐக்கியமுங் கொள்க.

சாமானாதி கரண சம்பந்தமென்பது தத்துவமென்னும் துவிதபதம் சம்பந்தமாயிருத்தலின் சமானமும், இவ்விரண்டும் அசிபதமாயிருத்தலின் அதிகரணமும், இம்மூன்றுபதமுமொன்றாய்ச் சம்பந்தித்திருத்தலின் சம்பந்தமு

---

(3) பிரத்தியகாத்ம பரமாத்மாக்களின் லட்சியலட்சண பாவ சம்பந்தம் வருமாறு:—

சிறந்தகுறியை யெடுத்துரைப்பது லட்சணமாம். அதனையுடையது லட்சியமாம். அவன்றான் இவன் (இத்தேவதத்தன்) என்னும் வாக்கியத்தில் அவன் இவன் என்னும் சொற்களால் விளங்குகின்ற விருத்த தருமமாய அந்தக்கால தேசங்கள் இந்தக்கால தேசங்கள் இவைகளுடன் கூடியிருப்பவை ஆகிய விவைகளை விடுவதனால் அவிருத்தமாய தேவதத்தவிசிட்ட (கூடிய) தேவதத்த பிண்டத்தோ (பொருளோ)டு தேவதத்தத் தன்மையுடன் கூடிய தேவதத்த சப்தத்திற்கு லட்சிய லட்சணபாவரூப சம்பந்தம் சித்திக்கின்றது. இவ்வாறே 'தத்துவமசி' மகாவாக்கியத்தில் "தத்" "துவம்" என்னும் சொற்களால் விளங்குகின்ற விருத்ததருமமாய பரோட்சத்துவ அபரோட்சத்துவாதிகளை விடுவதனால் அவிருத்தமாயசேதனத்தோடு தத்துவம் பதங்களுக்கு லட்சிய லட்சண பாவரூபசம்பந்தம் சித்திக்கின்றதென்க.

இங்குத் 'தத்' 'துவம்' பதங்களுக்கும் அவைகளின் பொருள்களுக்கும் விடப்பட்ட விருத்தாம்சங்களில் லட்சணமும் அகண்ட சேதனத்தில் லட்சியமும் இருத்தல்காண்க. [அவன்றான் இவன் (இத்தேவதத்தன்) என்னும் வாக்கியத்தில் அந்தக்காலதேசங்களும் இந்தக்காலதேசங்களும் லட்சணமாம்; தேவதத்தபிண்டம் லட்சியமாம். 'தத்துவமசி' மகாவாக்கியத்தில் பரோட்சத்துவாதிகளும் அபரோட்சத்துவாதிகளும் லட்சணமாம்; அகண்டசேதனம் லட்சியமாம்.]

மாம். விசேடண விசேடிய சம்பந்தமென்பது பரசீவரின் தற்கிழமையை விசேடித்தல் விசேடணமும், அவ்விசேடணத்தி னொருமையான ஆனுயெ ன்னும் பொருளாய்க் காண்பது விசேடியமும், இப்பொருள் மூன்றுமொ ன்ருய்ச் சம்பந்தித்திருப்பது சம்பந்தமுமாம். இலக்கண விலக்கிய சம்பந்த மென்பது இம்மூன்றுபொருளும் ஏகமாயிருத்தல் இலக்கணமும், ஏகமென் பதின்றிச் சுயமாய் விளங்குவது இலக்கியமும், அங்ஙன மேகமென் னும் பிரிவின்றிச் சம்பந்திப்பதே சம்பந்தமுமாம். கூடஸ்தப் பிரமா யிக்கியம் போதமாம்படி கரதலாமலகம்போல விளங்கக்கூறுதலின் 'உரை த்தவையுட் சிறந்ததுநற் சாமமறைபுகலு மோங்குதத் தொமசி மகாவாக் கியம்' என்ருர். 'முறைமூன்ரும்' என்றமையின் தத்துவமசி யென்னும் பதங்கட்குச் சாமானுதி கரணிய சம்பந்தமும், அது நீ யானுயென்னும் பதார்த்தங்கட்கு விசேஷண விசேஷிய சம்பந்தமும், இப்பதார்த்தமுள்ள வாக்கியார்த்தங்கட்கு இலக்கண விலக்கிய சம்பந்தமுமாம்.

(தா - ம்.) சாமவேத மகாவாக்கியத்தின் பதமும் பதார்த்தமும் வாக்கி யார்த்தமுமாகிய மூன்றற்கு முள்ள சம்பந்தமும் அதனுலுண்டான பரமாத் மாயிக்கியமான வத்துவித ஸ்வரூபமுமே பிரயோசனமாக விளக்குவித்த வாருமும். (ககஎ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மஹாவாக்கியத்தின்கண் முன்னுள்ள விர ண்டு பதத்தி னிலக்கண முணர்த்துகின்ருர்.

அறைதலுறு பதார்த்தங்கட் கிருபொருளிங் குளவா
மவைவாச்சி யார்த்தமிலக் கியார்த்தமென வவற்றுண்
முறைமைதரு விராட்புருடன் முதலாகி நின்ற
மூவுருவ வீசனுமப் பிரமமுமொன் ருகிப்
பிறிதலற நிற்புழிதற் பதத்திற்கெய் துறுவ
பெயர்வாச்சி யார்த்தமுக் கியார்த்தமபி தார்த்த
நெறிகொள்விக வாதிகளுந் துரியனுமொன் ருகி
நிற்புழித்தொம் பதத்திற்கு வருமம்மூ வகையும்.

(இ - ள்.) அறைதலுறு - முற்கூறிய, பதார்த்தங்கட்கு-பதப்பொருள் களிரண்டிற்கும், இருபொருள் - இரண்டருத்தம், இங்குளவாம்-இவ்விடத் துள்ளனவாம், அவை - அவையாவன, வாச்சியார்த்தம் - வாச்சியார்த்தமெ னவும், இலக்கியார்த்தமென - இலக்கியார்த்தமெனவுமாம், அவற்றுள்-அவ் விரண்டினுள், முறைமைதரு - கிரமமாய்வராநின்ற, விராட்புருடன் முத லாகிநின்ற - விராட்புருஷனுதியான, மூவுருவவீசனும் - மூன்றுருவமா கிய ஈசுரனும், அப்பிரமமும்-இவைகட்கதிஷ்டானமானவப்பிரமமும், ஒன் ருகி - ஏகமாய், பிறிதலறநிற்புழி - பிரிவின்றி நின்றவிடத்து, தற்பதத்திற் கெய்துறுவ - தற்பதத்திற்கடைவனவாகிய, பெயர்-நாமங்கள், வாச்சியார்த்

தம் - வாச்சியார்த்தமும், முக்கியார்த்தம் - முக்கியார்த்தமும், அபிதார்த்தம் - அபிதார்த்தமுமாகிய மூன்றுமாம், நெறிகொள் - இந்நெறியோடு, விசுவாதிகளும் - விசுவனுதிபமூன்றுஜீவரும், துரியனும் - இவைகட்கதிஷ்டானமான கூடஸ்தனும், ஒன்ருகி - ஏகமாய், நிற்புழி - பிரிவின்றி நின்றவிடத்து, தொம்பதத்திற்கு - துவம்பதத்தினுக்கும், அம்மூவகையும் - அவ்வாச்சியார்த்த முதலான மூன்றுவிதமும், வரும் - உண்டாம், எ - று.

வாச்சியார்த்தம்-வாசகப்பொருள்; முக்கியார்த்தம் - இவ்வாசகப் பொருட் குணத்தி னிலக்கணப்பொருள்; அபிதார்த்தம்-இவ்விலக்கணப் பொருளே விராட்டாதி நாமமாய்த்தோற்றல். முக்கியார்த்தம் அபிதார்த்தமென்பன வாச்சியார்த்தத்தின் பேதங்களாம். இவை பிரமகூடஸ்தர்கட் காபாசமாகத் தோற்றிய வுபாதி நாமங்கள்.

(தா - ம்.) பிரமசந்நிதானத்தில் ஈசுரன் விராட்டாதி மூன்றனுடன் கூடிச் சிருஷ்டியாதிய தொழில்களைச் செய்வதும்,கூடஸ்த சந்நிதானத்திற் சீவன் விசுவாதி மூன்றனுடன் கூடி யிராகத்துவேஷங்களால் விஷயங்களைப் புசிப்பதும், வாச் சியார்த்தமெனத் தெரிவித்தவாறும். (கக அ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய விரண்டுபதத்தி னிலக்கியார்த்த விலக்கணங்களை யுணர்த்துகின்ருர்.

தற்பதத்தி னுக்குவிராட் புருடாதி யகன்ற
 தனிநிருபா திகப்பிரம மேயிலக்கி யார்த்தஞ்
சொற்பரவு சோதிததற் பதார்த்தமென நிற்குந்
 தொம்பதத்திற் குற்றவிசு வாதிகளின் வேருய்
பொற்பினிரு பாதிகமாந் துரியனிலக் கியார்த்தம்
 பொருந்துறுசோ திதொம்ப தார்த்தமென வாமவ்
விற்பரவு மிலக்கணைவிட் டதுவும்விடா ததுவும்
 விட்டுவிடா ததுவுமென மூவகையா மன்றே.

(இ - ள்.) தற்பதத்தினுக்கு - முற்கூறியதற்பதத்திற்கு, விராட்புருடாதி - விராட்புருஷன்முதலியமூன்றும், அகன்ற - நீங்கிய, தனி - தனிமையான, நிருபாதிகப்பிரமமே-உபாதிநீங்கிய பிரமமே, இலக்கியார்த்தம்-லக்ஷியார்த்தமெனவும், சொற்பரவு - யாவராலுந் துதிக்கப்பெற்ற, சோதித - சோதனையிற் சேடித்த, தற்பதார்த்தமென-தற்பதார்த்தமெனவும், நிற்கும்-இருக்கும், தொம்பதத்திற்கு - முற்கூறிய துவம்பதத்திற்கு, உற்ற - பொருந்திய, விசுவாதிகளின் - விசுவனுதிய மூன்றற்கும், வேருய் - வேருன, பொற்பின் - பொலிவையுடைய, நிருபாதிகமாம் - உபாதிரகிதமான, துரியன் - கூடஸ்தனே, இலக்கியார்த்தம் - இலக்கியார்த்தமெனவும், பொருந்துறு - அடையப்பெற்ற, சோதித - சோதனையிற்சேடித்த, தொம்ப

தார்த்தமெனவாம் - துவம்பதார்த்தமெனவுமாம், அவ்விற்பரவும் - அந்தப் பிரகாசம பொருந்திய, இலக்கணை - இலக்கணையாவது, விட்டதுவும் - விட்டவிலக்கணையெனவும், விடாததுவும் - விடாத விலக்கணையெனவும், விட்டுவிடாததுமென - விட்டுவிடாத விலக்கணையெனவும், மூவகையாம் - மூன்றுவிதமாம், எ-று. அன்று - ஏ - அசை.

இலக்கியார்த்தம் - இலக்கணையாலறியு முண்மைப்பொருள். எனவே அது நீயென்னும் பதங்கட்குஇலட்சியப் பொருள் பிரம கூடஸ்தராதலின் இலக்கியார்த்தமெனவும், அப்பதங்களைச் சோதனை செய்தவிடத்துச் சேடித்து நிற்றலின் சோதித தத்தொம்பதார்த்தங்களெனவும் நாமங்கள் வந்தன. இவை பரசீவர்களின் யதார்த்தமாயுள்ள நிருபாதிக நாமங்களைச் சொல்லுதலாம். தேகாதித்தன்மைகளை விட்டுச் சிவனை லட்சியிப்பதால் விட்டவிலக்கணையெனவும், சர்வஞ்ஞத்துவாதித் தன்மைகளை விடாமலீசனை லட்சியிப்பதால் விடாத விலக்கணையெனவும், இவைகட்காதாரமாயும் யாவுமாயும் விளங்காநின்ற பிரமகூடஸ்தரை விட்டுவிடாமல் அத்துவிதத்தை லட்சியிப்பதால் விட்டுவிடாத விலக்கணை யெனவுமாம்.

(தா - ம்.) விராட்டாதி யுபாதி நீங்கிய பிரமத்தையும், விசுவாதி யுபாதி நீங்கிய கூடஸ்தனையும், பிரத்தியட்சமாய்க் காண்பது இலக்கியார்த்தமெனத் தெரிவித்தவாறும். (கககூ)

அ - கை.

முன் மகாவாக்கியத்திற் கூறிய வஸ்துநிச்சயத்தைப் பின்னும் ஸ்திரப்படுத்துவதற்காக வற்புறுத்திச் சொல்லிய மூன்றிலக்கணைகளை யுதாஹரண பூருவகமாகக் கூறுவான்றொடங்கி யிச்செய்யுளில் மூன்றுதாஹரணமும் அவற்றினிரண்டினிலக்கணங்களு முணர்த்துகின்றார்.

கங்கையினி லிடைச்சேரி மருவலுறுஞ் சொல்லுங்
கவன்குந்த மொடுசோயந் தேவதத்த னெனுஞ்சொ
லிங்கிவைக ளுதாரணமா மவற்றினுக்குக் கங்கை
யெனுமொழிநீர் வடிவாந்தன் முக்கியார்த் தத்தைத்
தங்குமிடைச் சேரிதனக் கிடமாகா மையினற்
றணந்துகரை காட்டுந்தன் முக்கியார்த் தத்தைத்
துங்கமுறு குந்தமொழி விடாமற்குந் தத்தைச்
சுமப்பதனைக் காட்டுமென வுணர்ந்திடுக துணிந்தே.

(இ - ள்.) கங்கையினில் - கங்காநதியில், இடைச்சேரி - இடைச்சேரியானது, மருவலுறும் - மருவியிருக்கின்றதென்ற, சொல்லும் - வசனமும், கவன் குந்தமொடு - செல்லுகின்ற குந்தமென்றவசனத்துடன், சோயந்தேவதத்த னெனுஞ்சொல் - சோயந் தேவதத்தனென்கிற வசனமுமாகிய, இங்கு - இவண், இவைகள் - இம்மூன்றும், உதாரணமாம் - முற்கூ

றியவிலக்கணே மூன்றற்குமுதாரணங்களாம், அவற்றினுக்கு - அவ்வுதாரணங்களுக்குள், கங்கையெனுமொழி - கங்கையென்னும் பதம், (தன் முக்கியார்த்தத்தால்) தங்கு - பொருந்திய, இடைச்சேரிதனக்கு - இடைச்சேரிக்கு, இடமாகாமையினல் - ஆசிரயமாகாமையின், நீர்வடிவாம் - பிரவாசரூபமான, தன் முக்கியார்த்தத்தை - தனது முக்கியப்பொருளே, தணந்து - விட்டு, கரைகாட்டும் - கரையைக் காண்பிப்பது விட்டலக்கணேயெனவும், துங்கமுறு - பெருமையுள்ள, குந்தமொழி - சவளசத்தமானது, தன்முக்கியார்த்தத்தை - தனது முக்கியப்பொருளே, விடாமல் - நீங்காமல், குந்தத்தை - அச்சவளத்தை, சுமப்பவனே - சுமக்கின்ற புருடனே, காட்டுமென - காண்பிப்பது விடாதலக்கணேயெனவும், துணிந்து - தெளிவாக, உணர்த்திடுக - அறிவாயாக, எ-று. ஏ-ஈற்றசை.

கங்கையென்பது தேகாதிப்பிராஞ்ஞனீருனவொன்பதிற்கும்,இடைச்சேரியென்பது இவற்றைநீங்கின சீவனுக்கும், குந்தமென்பது விராட்டாதியந்தரியாமியீருன வொன்பதிற்கும், இவற்றை விடாமனின்ற குந்ததாரி ஈசனுக்கும், சோவெனபது அவனென்னுமீசனுக்கும், அயமென்பது இவனென்னுஞ்சீவனுக்கும், தேவதத்தனென்பது அத்துவிதத்திற்கு முவமித்தவாறும். இவ்வுதாகரணங்கள் காரணகாரியோபாதுகளிற் சம்பந்தமான பரசீவர்களே வெளிப்படுத்து நிமித்தமிவ்விரண்டிலக்கணேயானவுவமானத்தின் வாச்சியார்த்தலட்சியார்த்தவிலக்கணம் உணர்த்தியவாறும். (கஉ0)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்தமுறையால் மூன்ருவதிலக்கணேயி னிலக்கணத்தை யுவமான பூருவகமா யுணர்த்துகின்றூர்.

முன்னமொழி தருஞ்சோயக் தேவதத்த னென்னு
மொழியுண்முத லவனென்னு மொழியிறந்த காலந்
தன்னில்வரு தேசவயோ விசிட்டனுந் தேவ
தத்தனேக்காட் டிடுமிவனென் மொழிநிகழ்கா லத்தி
லுன்னவரு மவையுடைய தேவதத்தன் றன்னே
யுணர்த்திடுமிவ் விருத்ததரு மப்பொருள்க ளிரண்டு
மன்னுதல்செய் யயிக்கமுறு மையினுலப் பொருட்கண்
வருவிருத்த தருமங்க ளனேத்தினேயும் விட்டே.

(இ - ள்.) முன்னமொழிதரும் - முற்கூறிய, சோயந் தேவதத்தனென்னும் - சோயந்தேவதத்தனென்கின்ற, மொழியுள் - வாக்கியத்துள், முதல் - முதலில், அவனென்னும் - அவனென்கின்ற, மொழி - வசனமானது, இறந்தகாலந்தன்னில் - பூதகாலத்தில்,வரு - வராநின்ற,தேச - தேயமும், வயோவிசிட்டனும் - வயதிலுயர்ந்தவனுமாகிய, தேவதத்தனே - தேவதத்த

னென்னும் புருடனை, காட்டும் - காண்பிக்கும், இவனென்மொழி - இவனென்னும் வசனமானது, நிகழ்காலத்தில் - வர்த்தமானகாலத்தில், உன்னவரும் - கருதாநின்ற, அவையுடைய - அத்தேசவயசுக்களையுடைய, தேவதத்தன்றன்னை - தேவதத்தனென்னும் புருடனையே, உணர்த்திடும் - அறிவிக்கும், இவ்விருத்ததருமம் - இப்பேததன்மமாகிய, பொருள்களிரண்டும் - இருபொருள்களும், மன்னுதல்செய் - நிலைபெற்ற, அயிக்கமுறுமையினால் - அயிக்கமடையாமையினால், அப்பொருட்கண் - அப்பொருள்களில், வரு - வாராநின்ற, விருத்ததருமங்கள் - பேததருமங்களான, அனைத்தினையும் விட்டே - யாவையுநீக்கி, எ - று; ஏ - ஈற்றசை.

சோவென்னும்பதத்திற்கு அவனெனவும், அயமென்னும் பதத்திற்கு இவனெனவுங்கொள்க. விருத்தமென்பது வேறுபாடுடையது. அதுவென்னு மீசனுக்குச் சோ தேவதத்தனெனவும், நீயென்னுஞ் சீவனுக்கு அயந்தேவதத்தனெனவு முவமித்தவாறும். இது விட்டுவிடாத விலக்கணையான வுவமானத்தின் வாச்சியார்த்த விலக்கண முணர்த்தியது. (கஉக)

அ - கை.

இச்செய்யுளில் மூன்றுமிலக்கணையி னிலக்கியார்த்த முணர்த்துகின்றார்.

விருத்தமறு தருமமாந் தேவதத்தன் றனையே
  விடாதுகொளி னவனிவனே யிவனவனே யென்னுந்
தெரித்தலரி தாயதா தான்மியங்கூ டறுமாற்
  றேரினிதை விட்டுவிடா விலக்கணையி னுடுதா
னருத்தவிலக் கணைபாகத் தியாகவிலக் கணையென்
  றறைதலினு * லிதுவேதத் தொம்மசிவாக் கியத்திற்

* 1. யாண்டுவிட்ட லட்சணை யிருக்கிறதோ ஆண்டு வாச்சியார்த்த முற்றும் விடப்படுகின்றது. மகாவாக்கியத்தில் விட்ட லட்சணையைக் கொண்டால் 'தத் துவம்' பதங்களின் வாச்சியார்த்தத்தில் பிரவேசித்துள்ள பிரம சைதன்னிய சாட்சி சைதன்னியங்களுக்கு விடுபாடுண்டாய், அவற்றினும் வேறாய அசத்து ஜடதுக்கவடிவ பிரபஞ்சம் கொள்ளப்படுவதாகும். அதனால் பெருமனர்த்தத்தின் அடைவுண்டாகும். அதனுற் புருஷார்த்தமுஞ் சித்தியாது. ஆகையால் மகா வாக்கியத்தில் விட்ட லட்சணை பொருந்தாது. "மனோப் பிரஹ்மம்" என்கிறவிடத்து விட்ட லட்சணையாம்.

2. யாண்டுவிடாத லட்சணை யிருக்கின்றதோ ஆண்டு வாச்சியார்த்தத்தின் ஒரு பாகமும் விடுபடுகிறதில்லை. மகா வாக்கியத்தில் விடாத லட்சணையைக் கொண்டால் 'தத்துவம்' பதவாச்சியார்த்தங்களின் ஐக்கியவிரோதம் நீங்காது. அதனால் இலட்சணையைச் செய்தற்கு ஒரு பிரயோஜனமுஞ் சித்தியாது. ஆகையால் மகாவாக்கியத்தில் விடாதலட்சணை பொருந்தாது. "சத்தியம் ஞான மனந்தம் பிரஹ்மம்" என்கிறவிடத்து விடாத லட்சணையாம்.

குரைத்திடுவ ருதாரணமா யுரியதென வுண்மை [பாம்.
யுணர்ந்துடையோ ரஃதெவ்வா றெனின்முறையே யுரைப்

(இ - ள்.) விருத்தமறுதருமமாம் - அவிருத்தாம்சதருமமான, தேவதத்தன்றனையே - தேவதத்தபுருடனையே, விடாதுகொளின்-விடாமற்கொண்டால், அவன் - அப்புருடன், இவனே-இப்புருடனே, இவன்-இப்புருடன், அவனேயென்னும் - அப்புருடனே யென்கின்ற, தெரித்தலரிதாய - அறிவித்தற்கரியவாகிய, தாதான்மியம்- அயிக்கமானது, கூடுறும் - பொருந்தும், தேரின் - விசாரிக்கின், இதை - இதனை, விட்டுவிடா-விட்டுவிடாத, இலக்கணையினொடு-இலக்கணையினுடன், அருத்தவிலக்கணை-அருத்தவிலக்கணையும், பாகத்தியாக விலக்கணையென்று-பாகத்தியாகவிலக்கணையுமென, அறைதலினால் - சொல்லுதலினால், இதுவே - இவ்விலக்கணையே, தத்தொம்மசி - தத்துவமசியென்னும், வாக்கியத்திற்கு - மஹாவாக்கியத்திற்கு, உரியது - உரித்தான, உதாரணமாமென - உதாரணமாகுமென்று, உண்மை - தத்துவத்தை, உணர்ந்துடையோர் - உணர்ந்தசத்துக்கள், உரைத்திடுவர் - சொல்லுவார்கள், அஃது - அவ்விலக்கணை, எவ்வாறென்னில் - எங்ஙனமெனின், முறையே - நிரலே, உரைப்பாம் - சொல்லுவாம், எ-று. தான் - ஏ - அசை.

விட்டுவிடாதவிலக்கணை, அருத்தவிலக்கணை, பாகத்தியாக விலக்கணை யென்பனவொருபொருட்கிளவி. வேடங்களைவிட்டுப் புருடனைவிடாமற் கொள்ளுமிடத்து அவ்வேடத்தோடும் புருடனை யொன்றாகக் காணுதலின், விட்டுவிடாத விலக்கணையெனவும், அதன் பொருளைமாத்திரங்காட்டுதலின் அருத்தவிலக்கணையெனவும், இவ்விருத்ததருமமாகிய பாகுபாட்டை நீக்குதலின் பாகத்தியாக விலக்கணையெனவுங் கொள்க. இஃது உவமானங் கூறிய விட்டுவிடாதவிலக்கணையி னிலக்கியார்த்த முணர்த்தியது. (கஉஉ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மஹாவாக்கியத்தின் யதார்த்த சொரூபத்தை லட்சியிக்குநிமித்தம் அதிற்கூறிய மூன்று பொருளை மூன்றிலக்கணையான் வெளிப்படுத்துவான் கருதிமுன்பு அவனிவனென்கின்ற பேததன்மத்தை

3. யாண்டு விட்டுவிடாதலட்சணை யிருக்கிறதோ ஆண்டுவிரோதமுடையபாகம் விடுபட்டு, விரோதமில்லாத பாகம்கொள்ளப்படுகின்றது. மகா வாக்கியத்தில் விட்டுவிடாத லட்சணையைக் கொண்டால் 'தத்துவம்' பதங்களின் வாச்சியார்த்தத்தில் தர்மத்தோடு கூடியமாயை அவித்தையாகிய விரோதமுடைய பாகம் விடுபட்டு, விரோதமின்றிய அசங்க சுத்த சேதன பாகம் கொள்ளப்படுகின்றது. அதனாலவற்றிற்கு (ஜீவப்பிரஹ்மங்களுக்கு) ஐக்கியமும் பொருந்துகின்றது. அதனால் பரம புருஷார்த்தத்தின் பிராப்தி யுண்டாகின்றது, ஆகையால் மகா வாக்கியார்த்தத்தில் விட்டுவிடாத லட்சணை பொருந்துகின்றது. பொருந்துகின்றமை பற்றி 'இதுவே தத்தொமசி வாக்கியத்திற் றுரைத்திடுவ ருதாரணமா யுரியதென வுண்மை யுணர்ந்துடையோர்' என்று கூறப்பட்டதென்க.

நீக்கிப் பின்பு அவனே யிவ னிவனே யவனென்கிற அபேத தன்மத்தை விளக்கிவைத்த வுவமானப்படி யுவமேயத்தின் வாச்சியார்த்தம் விளங்க வுணர்த்துகின்றார்.

தற்பதவாச் சியார்த்தமா மெலாமறிதன் முதலாஞ்
சட்குணங்கொள் பரோட்சனுஞ் சிவன்றனையே யுணர்த்து
முற்பகருந் தொம்பதமுக் கியமாஞ்சிற் றுணர்வு
முதலாய வீனகுண விசிட்டவப ரோட்ச
கற்பிதசீ வனையுணர்த்து மிம்முரண்கொள் பொருட்கே
கத்துவங்கூ டாமையினவ் விருபொருளு மடையும்
பற்பலவாம் பரோட்சமுட னபரோட்ச மாகும்
பகைத்ததரு மத்திறங்க ளனைத்தினையும் விட்டே.

(இ - ள்.) தற்பதம் - தற்பதத்திற்கு, வாச்சியார்த்தமாம் - வாச்சியார்த்தமானது, எலாமறிதன் முதலாம் - சர்வஞ்ஞத்துவாதிய, சட்குணங்கொள் - ஆறுகுணங்களையுடைய, பரோட்சனும் - பரோட்சனாகிய, சிவன்றனையே - ஈசனையே, உணர்த்தும் - அறிவிக்கும், முற்பகரும் - முற்கூறிய, தொம்பதம் - துவம்பதத்திற்கு, முக்கியமாம் - வாச்சியார்த்தமானது, சிற்றுணர்வுமுதலாய - கிஞ்சிக்ஞத்துவாதிய, ஈனகுணவிசிட்ட - ஈனகுணங்களுடன்கூடிய, அபரோட்ச - பிரத்தியட்சமான, கற்பித சீவனை - சிதாபாசஜீவனை, உணர்த்தும் - அறிவிக்கும், இம்முரண்கொள் - இவ்விரோதாம்சமுள்ள, பொருட்கு - ஜீவேசுரர்களுக்கு, ஏகத்துவம் - ஐக்கத்துவம், கூடாமையின் - வாராமையினால், அவ்விருபொருளும் - அச்சீவேசுரர்களும், அடையும் - பொருந்தாநின்ற, பற்பலவாம் - பலபலவான, * பரோட்சமுடன் - பரோட்சத்துடன், † அபரோட்சமாகும் - அபரோட்சமுமாகிய, பகைத்த தருமத்திறங்கள் - விரோதாம்சங்களான, அனைத்தினையும்விட்டே - யாவையும்நீக்கி, ஏ - று. ஏ - அசை.

சகத்திற்குக் காரணனொருவ னுண்டென நிச்சயிப்பதால் ஈசனைப் பரோட்சமெனவும், காரியமான தூலதேகத்தோடு விடயங்களை யனுபவிப்பது காட்சியாயிருத்தலின் சீவனை அபரோட்சமெனவும், கிஞ்சிக்ஞத்துவ சர்வஞ்ஞத்துவாதிவிருத்த தருமங்கட்கு ஐக்கங்கூடாமையின் இம்முரண்கொள் பொருட்கேகத்துவங் கூடாமையின் எனவும், முற்கூறிய சர்வஞ்ஞத்தவகிஞ்சிக்ஞத்துவகுணங்களான விருத்தாமிசத்தை நீக்கவேண்டுமாதலின் பற்பலவாம்பரோட்சமுட னபரோட்சமாகும் பகைத்ததருமத் திறங்களனைத்தினையும் விட்டே எனவுங் கூறினார். இங்குத் தற்பததுவம் பதங்களின் வாச்சியார்த்தபேதமான சீவேசுரர்களுக் கேகத்துவங் கூடாதென்னு மிலக்கணமுணர்த்தியவாறாம். (கஉ௫)

* கடமிருக்கிறது என்றாற்போல்வது பரோட்சஞானமாம்.
† இது கடம் என்றாற்போல்வது அபரோட்சஞானமாம்.

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மகாவாக்கியத்தி னிலக்கியார்த்தங்களை விளங்க வுணர்த்துகின்றார்.

இகலிலா வறிவுமாத் திரமாகி நின்ற
விலக்கியமாம் பிரமகூ டத்தவுயிர் கொள்ளிற்
புகரிலா வதுவிதுவே யிதுவதுவே யென்னப்
பொருந்துதா தான்மியம்வந் துறுமெனவே யறிக
பகரிலா வசிபதமிவ் விலக்கியார்த் தத்திற்
பரோட்சவப் ரோட்சங்கண் மாயாகற் பிதமென்
றுகவிலா துணர்த்தியுறு பலமாமிம் முறையா
லொன்றுகு மறிவேயுண் டெனல்வாக்கி யார்த்தம்.

(இ - ள்.) இகலிலா - விரோதமில்லாத, அறிவுமாத்திரமாகிநின்ற - சின்மாத்திரமாயிருந்த, இலக்கியமாம் - மஹாவாக்கியவிலக்கியார்த்தமாகிய, பிரமம் - பிரமத்தையும், கூடத்தவுயிர் - பிரத்தியகாத்மாவையும், கொள்ளில் - அங்கீகரிக்கில், புகரிலா - குற்றமற்ற, அது - அந்தப்பிரமம், இது-இக்கூடத்தனே, இது-இக்கூடத்தன், அதுவேயென்ன-அந்தப்பிரமமேயென்று, பொருந்து - பொருந்தாநின்ற, தாதான்மியம் - அயிக்கமானது, வந்துறுமெனவே - வருமென்றே, அறிக - அறிவாயாக, பகரிலா - கூறுதற்கரிய, அசிபதம்-அசிபதமானது, இவ்விலக்கியார்த்தத்தில்-இவ்விலக்கியார்த்தத்தினுல், பரோட்சம் - பரோட்சமானபரனும், அபரோட்சங்கள் - அபரோட்சமானஜீவர்களும், மாயா - மாயையினுல், கற்பிதமென்று - கற்பிக்கப்பட்டனவென்று, உகவிலாதுணர்த்தி-உண்மையாகத்தெரிவிப்பதே,உறுபலமாம் - அடையப்பெற்ற பலமாம், இம்முறையால் - இக்கிரமத்தினுல், ஒன்றுகும் - ஏகமாகிய, அறிவே - சுயஞ்சித்தே, உண்டெனல் - உள்ளதென்பது, வாக்கியார்த்தம் - முற்கூறிய மஹாவாக்கியத்திற் கருத்தமாம், எ-று.

இவ்வைந்துகவிகளால் மஹாவாக்கியத்தின் லக்ஷியார்த்தம் வெளிப்படுத்துவான் நுதலிய மூன்றிலக்கணையினுல் உவமான வுவமேயப்படி தூலமுதலியவற்றிற் சம்பந்தமான காரியவுபாதிகளை விட்டு அவத்தாத்திரய விலட்சணமான ஜீவதுரியங் கடந்து அதீதமாய் நிற்பது கூடஸ்தனெனவும், விராட்டு முதலியவற்றுட் சம்பந்தமான காரணோபாதிகளைவிட்டு அவற்றிற் காதாரமான பரதுரியமுங் கடந்து அதீதமாய் நிற்பது பிரமமெனவும், கூறவந்தது இக்கூடஸ்தப் பிரமாயிக்கமான் வத்துவிதஸ்வரூபமே பொருளெனக் காட்டற்கென்க. அதன் சம்பந்தமியாதெனின், கங்கைக்கணுள்ள விடைச்சேரி சத்திக்கின்றதென்னுமிடத்து அக்கங்கை சத்திக்குமா என்று அதனை விட்டு அதன் கரையிலுள்ள விடைச்சேரியின் சத்தமென்று காண்பதுபோலத் தூலாதிகள் தெரிவிக்கின்றன வெனுமிடத்துச் சடமான தேகாதிகள் தெரிவிக்குமா வென்றவற்றைவிட்டு அவற்றினிடமாயிரு

ந்த சீவன் தெரிவிக்குமெனக் காண்பது விட்டவிலக்கணை யெனவும், குந்தஞ்செல்லுகின்றதென்னுமிடத்து அக்குந்தம் தனியே செல்லுமாவென்று அதனைவிடாமற் குந்தத்தைச் சுமப்பவனைக்காண்பதுபோல ஞானஞ்செல்லுகின்றதென்னுமிடத்து அது தனியே செல்லுமா என்று அதனை விடாமல் அதற்காதாரமான இன்புருவமாகிய வீசனைக்காண்பது விடாதவிலக்கணை யெனவும், சோயந் (அந்த இந்த) தேவதத்த னென்புழிச் சோ அவனென்னுமீசனே அயம் இவனென்னுஞ் சீவன், தேவதத்தனென்பது இவ்விரண்டின் அயிக்கமான வஸ்துவாம். இத்தேவதத்தனை யவ்விரண்டிடத்துங் கூட்டிச் சோ தேவதத்தனென்னின், அங்ஙன முதய காலத்திற் காசித்தலத்தி லில்லறத்தோடுங் கூடியிருந்தவன்போல விராட்டாதியவற்றிற் கூடியிருந்தவீசனும், அயந் தேவதத்தனென்னின், இங்ஙன மர்த்த சாமத்திற் சிதம்பரஸ்தலத்திற் றுறவோடுங் கூடியிருந்தவன்போலத் தூலாதிகட்கு விலட்சணனாயிருந்த ஜீவனும் வாச்சியார்த்தமெனவும், உதயார்த்த சாமமென்னுங் காலமும் காசிசிதம்பரமென்னுந்தேசமும் துறவி கிருகஸ்தனென்னும் வேடமுமான விவ்விருத்ததருமங்களைவிட்டு இவ்விரண்டு காலத்து மிவ்விரண்டு தேசத்து மிவ்விரண்டு வேடத்து மிருந்த அவிருத்தமான அவனேயிவ னிவனே யவனென் றொருபுருடனைக் காண்பது போல அனுக்கிரகஞ் செய்தல் அதனை யடைதலென்னும் காலமும் அகிலாண்ட மண்டமென்னுந் தேசமுஞ் சமஷ்டி வியஷ்டியென்னும் வேடமுமான விவ்விருத்த தருமங்களைவிட்டு அவ்விரண்டு காலத்து மிரண்டு தேசத்து மிரண்டு வேடத்துமுள்ள அவிருத்தமான அப்பிரமமே இக்கூடஸ்தன் அக்கூடஸ்தனே அப்பிரமமென ஏகமான விடத்துத் தன்னைவிடாமலவைகளைத் தனது தேஜஸாய் விட்டிருத்தலின், விட்டுவிடாத விலக்கணை யெனவும், இதுவே தத்துவமசியென்னு மஹாவாக்கியத்தின் லக்ஷியார்த்தமெனவுங் கொள்க.

வினா:—அற்றேல், இவ்வாக்கியார்த்த விசாரம் இங்ஙனங்கூறிய விருவர்களில் யாவர்க்கு ?

விடை:—சீவர்க்கேயா மென்க.

வினா:—அற்றேல், சீவன் துவம்பதத்தை விசாரித்ததனால் நீக்கவேண்டிய தூலாதியவத்தைக ளனைத்தையும் நீக்கி அவற்றுடன் றனது சங்கற்பமும் நீங்கினவிடத்திற் சேடித்த கூடத்தனே தானாதலின் மேலிவனுக்கு தற்பதவிசாரம் யாதுக்கு ?

விடை:—அந்தர் முகத்திற் றூலாதிய வவத்தைகளனைத்தையும்நீக்கின சீவனுக்கு மேல்நின்ற கூடஸ்தனைத் தரிசித்துஅதீதமாய் அதன்மயமாயினும் அச்சீவ கூடஸ்த மத்தியிலுள்ள மித்தியாரூபமான பிரகிருதி நீங்காமலடங்கிநிற்றலின் அங்ஙனம்நின் றுபாகியப்படும்போதுஅவ்வவத்தைக டோன்றுமாதலின் அப்பிரகிருதி நசிக்குநிமித்தம் தற்பதசோதனை பண்ணவேண்டிற் றென்க.

வினு:—அங்ஙனஞ் செய்யாவிடி னென்னை ?

விடை.—பிரகிருதி நசிப்புஞ் சுவானுபவவிலாசமு மறையுமென்க.

வினு:—அங்ஙன மறைதற்குப் பிரமாணமுண்டோ ?

விடை:—உபநிடதம் "தொம்பதத்தி லுபாதிகெடச் சொரூபமதா யது போற் றென்மையதாந் தற்பதசோ தனைசெயவும் வேண்டுந், தம்பவுடன் மூன்றினுக்குஞ் சீவனுக்கு முதலாய்ச் சாற்றுதன்மாத் திரைப்பகுதி தானு மிருப் பதனு, னம்பரிபூ ரணமறைந்து ஞானமின்றி முனம்போ னுடுமுயி ராதலினு லுதனருட் படியே, யிம்பருபா தியும்போய்நிரு பாதிகமா மதனு லெப்பொருளப் பொருளாகி யிருப்பதுதன் னியல்பே" என்றுகூறுவதனுற் காண்க.

வினு:—அற்றேல், இங்ஙனந் தற்பதவிசாரத்தாற் சீவர்க்குப் பயனென்னை ?

விடை:—முன்பு துவம்பத விசாரத்தால் அந்தர் முகத்திற் றூலாதி கற்பனுவவத்தைகளின் சம்பந்தமான வாச்சியார்த்த சொரூப சீவத்துவம் நீங்கி லட்சியார்த்த பிரத்தியகாத்ம சொரூபமான கூடஸ்தனனதுபோலத் தற்பத விசாரத்தாற் பாகியத்தினுள்ளவிராட்டாதியாகத்தோற்றுமவத்தை களின் சம்பந்தமான வாச்சியார்த்த ஸ்வரூபமாகியஈசத்துவம் நீங்கி லட்சியார்த்தமான பிரமமாய் அது இதுவென்னுந் துவிதநீங்கி அத்துவித சுத்த சைதன்னியமாய நிரதிசயானந்தமாய் விளங்கலின், பிரகிருதி முதலிய யாவுந் தனது சிற்பிரகாசமாய்விளங்கும் அகம்புறமின்றிய சுவானுபவமாத லேயென்க.

வினு:—அற்றேல்,இவ்விசாரம் ஈசன்செய்யா திருந்தகாரணமென்னை? ஈசனும் விராட்டாதிய காரணேபாதியிற் கட்டுப்பட்டிருப்பதை விசாரித்த ல்லவா அவ்வுபாதிகளை நீக்கி மேல் நின்ற பிரமத்தைத் தரிசித்து அதனதீத மாக வேண்டும். அங்ஙனம் விசாரியாமற் பிரமமாகின்ற தென்னை ?

விடை:—அவ்வீசன் மாயை முதலிய அவத்தைகளிற்கூடியிருக்கினுஞ் சீவர்களைப்போல மறைப்பின்மையின் அங்ஙனங்கூடாது. அவைகட் கதீத மான பிரமத்தைத் தரிசித்து அதுவாகவிளங்குவனுதலால் அவனுக் கிவ்வி சாரம் வேண்டுவதின்றென்க.

வினு:—அற்றேல், இம்மாயாப்பிரதிவிம்பராய் விராட்டாதிய அவத் தைகளையுடைய வீசன் பிரமவிசாரஞ்செய்யாது எங்ஙனம் மாயையை நீக் கிப் பிரமத்தை யடைந்தான்?

விடை:—சுத்தமாயையிற் பிரதிபிம்பிக்கும்போதே மறைப்பின்றித் தனக்காதாரமான பிரமத்தைத் தரிசித்தே யிருந்தானென்க.

வினு:—அற்றேல், அவன்மாயையால் மறைபடவில்லையோ?

விடை:—கண்முன்னின்றகண்ணுடி நேரே தடையாயிருக்கினும் அத னுன் மறைவுபடாம லெப்பொருளும் விளங்கத்தோற்றுவதுபோலச் சுத்த

மாயை நிருமலமாதலின் அதிற்கூடி யிருக்கினும் பிரமதரிசனத்திற்குத் தடையின்மையின் கூடாதவனேயா மென்க.

வினு:—அற்றேல், இத்தடையின்மை கட்புலனுக்கேயன்றிக் கைப்பரிசத்திற் கின்றாயதுபோல இச்சுத்தமாயை பிரமத்தை யறிதற்குத் தடையின்றியதாயினும் அனுபவித்தற்குத் தடைதானே?

விடை:—அவ்வனுபவம் ஆகத்திற்கின்றி யறிவிற்கேயாதலினுனும் அவன் நித்திய முத்தனென்று சுருதிசொல்லுகையினுனும் அவனுக்குத் தடையேயின்றென்க.

வினு:—இங்ஙனங்கூறிய சுருதி ஒரிடத்தில் மாயாசகிதனெனவும், ஒரிடத்தில் மாயாரகிதனெனவும் கூறிய தென்னை?

விடை:—மாயாப்பிரதிவிம்பனுய் அதுகருவியாகச் சிருட்டியாதிகளைச் செய்தலிற் சகிதனெனவும், அம்மாயையின்யதார்த்த சொரூபந் தெரிந்து அதன் வசமாகாம லிருத்தலின் ரகிதனெனவுங் கூறிற்றென்க.

வினு:—அம்மாயையோடு கூடியிருந்தும்அதன் வயப்படவில்லை யென்பதற்கு மேற்கோளுண்டோ?

விடை:—"கைவல்ய நவநீதம் "அச்சு வத்தமென் றெருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழும், நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னு, மெச்சு மங்கொரு பறவைதின் ஞதென வியங்கியப் பொருளாக, வைச்சு மாமறை சிவனை யீசனை வகுத்தவா றறிவாயே" என்றுகூறுவது காண்க.

வினு:—அற்றேல், இம்மகாவாக்கிய விசாரஞ் சீவனுக்கு வேண்டுவது மீசனுக்கு வேண்டாதது மியாதுகாரணத்தால்?

விடை:—சீவன் றனது காரணத்தை மறந்தமையானும் ஈசன் மறவாமையானுஞ் சீவனுக்கே வேண்டிற்றென்க,

வினு:—அற்றேல், இச்சீவனுக்கு மஹாவாக்கியார்த்த விசாரம் அதற்கு முன்பினுள்ள அனுபவத்தையும் விளக்கவேண்டுமே?

விடை:—அவாங்மனேகோசரசயஞ்சைதன்னியநிரதிசய சுகானுபவ வேத்தியமே வேதமொழிந்த சச்சிதானந்தம்போலப் பரசிவசகத்தாகத் தோற்றும். அவை ஆகமங்களினுற் பதிபசுபாச மெனப்பட்டு அவற்றை மதங்களனைத்து மனுஷ்டித்துவரும். இவற்றிலானந்தமென்பது பரம்; சித்தென்பதுசீவன்; சத்தென்பதுசகம். இவற்றி னடுநிலையாய் நின்றசுகானுபவ சங்கற்பரூபமானசீவன் அச்சுகத்திலுதித்து அதில் விளங்கி அதில் அடங்கித் தனது மறைப்பினின்று நீங்கித் தெளிதலினுல் அச்சுகவடிவமான வீசனுக்கே பஞ்சகிருத்தியமெனவும், அதற்கு முன்னிலை சீவனெனவும், அவ்வனுபவத்திற்குச் சகத்தெனவும் வந்தன. அங்ஙனமுள்ள சீவன் தனது சுகானுபவநிமித்தம் ஸ்புரணரூபமா யனுபவிக்கப் பகிர்முகப்பட்ட விடத்திற் சத்துப்போலத் தோற்றுஞ் சகத்விஷயத்திற் சுகிக்கவரும்போது ஜநந

Tiruvadamarudur.



மும் அதிலடங்கும்போது மரணமும் அவற்றால் சுகதுக்கமும் நல்வினைதீவினையும் சொர்க்கநரகமு மாதியபலவுமாம். இவற்றால் வருந்துவது சீவர்க்கேயன்றி யேனையோர்க்கின்றாம். இங்ஙனம் வருந்துவதுந் தனது அந்தரங்கமான சுகத்தை நாடி விஷயத்திலிருப்பதாக அனுபவிக்கும்போது அச்சகமுண்மையின்றித் தோற்ற மாத்திரமாய்த் தோன்றி மறைதலால் அங்ஙனந் தோன்றும்போது சுகமும் மறையும்போது துன்பமுமாய்ச் சுகதுக்கமென்னுஞ் சனனமரணப்பிரவாக ரூபமான சாகரத்தின் வீழ்ந்தலைகின்றனன். அங்ஙனம் அலையும்போது சுகஸ்புரணானுபவமே தனது சொரூபமாயிருப்பதை யறியாத விச்சீவனுக்கே யிவன் யதார்த்தந் தெரிவிக்குநிமித்தம் அநாதியாக விளங்கியநாதரூபமான வேதம் இச்சுகமென்னும் ஈசனையே தற்பதமெனவும், அதனை யனுபவிக்கவந்த புரணசித்தென்னுஞ் சீவனையே துவம்பதமெனவும், அவ்விரண்டினது ஒருமையான வஸ்துவையே அசிபதமெனவும், நுதலியவிம்மூன்றுபதங்களையுடைய மஹாவாக்கியத்தினால் பகுத்துக்கூறினவாதலால் இம்மஹாவாக்கியமு மதன்விசாரமு மிச்சீவர்க்கேயாம்.

வினா:—இச்சத்தேசகத்தென்பதற்கும் இவ்வாக்கியானுபவம் இச்சீவனுக்கே யென்பதற்கும் மேற்கோளுளவோ?

விடை:—"விளக்குமிர வியுமலரு மூண்டா மூண்டாம் வீசொளியும் பகற்பொழுதும் விரையும்போலத், துளக்கமில்சித் துண்டாகி லுண்டா ஞாலந் தோற்றரவு மாத்திரமே சொரூபமாகுங், கிளர்த்தபர மார்த்தத்தா லில்லையென்னக் கேட்டலுமே பாற்கடல்போற் கெம்பீரத்தா, லளக்கரிதாய்ச் சீதளமா யமலமாகி யற்புதமா நின்மொழியென் றண்ணல் சொல்வான்" என்னும் வாசிட்டக்கவியினாலும், "ஆனந்தோப் பிரமமெனு மிரண்டாம் வாக்கியத்தினா லகண்டா கார, வாநந்தம் பிரமமாய்த் துன்பறியா வின்பமா மாத லாலே, யாநந்த மாநந்தி யெனும்வடிவ மிரண்டுமெற வளவி லாத, வாநந்தஞ் சீவனிடத் தாதலால் வாக்கியத்தி னயிக்கங் கூடும்" என்னு மஹாவாக்கியக்கவியினானுங் காண்க.

வினா:—இவை நிற்க; இம்மஹாவாக்கியப்பொருளான சச்சிதாநந்தமே பிரமாதிஸ்தம்ப பரியந்தமு நிறைந்திருக்கின்றதென்பது எங்ஙனம்?

விடை:—இச்சச்சிதாநந்தாதீதமாகிய சுத்தப்பிரமம் தத்விலாசத்தினாற் றன்னைநோக்குதற் குண்முகமானவிடத்து அவ்வின்பந்தானா யிருத்தலின் அவ்வறிவிற் கெட்டாமற் பகிர்முகமானவிடத்து எதிரிட்டுத் தோன்றிய வின்பமே விடயமும், அதனை யனுபவிக்கவந்தவறிவே விருத்தியும், இங்ஙனம் பிரிவுபட்டவிடத்திற் றோன்றாதசத்தே மூலாஞ்ஞானமுமாம். இது நிற்க; முற்கூறியவறிவினுள் ஆநந்தமும் ஆநந்தத்துளறிவுமாய்ப் பிரதிபலித்து ஏகதேசத்திற் பிரகிருதிமுதற் பிண்ட பரியந்தங் கற்பிதமாகத் தோன்றி நிற்கும். இவ்வற்றிற் காதாரமான வறியாமையாங்காங்கு மறைத்துநின்றது. இம்மறைப்பையுடைய சிற்றறிவும் அதனாலனுபவிக்குஞ் சிற்

றின்பமுமுடைய ஜீவன் கதகன்ம நிஷ்காமபுண்ணிய பரிபாகத்தினுற் சித்த சுத்தியும் அதனுற் சாதனசதுட்டயமும் அதனுற் சற்குரு கடாட்சமும் பெற்று அதனு லாத்மவிசாரஞ் செய்யத்தொடங்கி முன் பிரதிபலித் திறங்கிய விடயஞானத்தினு லனுபவித்துக் கொண்டிருந்த விடயாநந்தரூபமான தூலாதி மூன்றுசரீரமும் மித்தையெனக்கண்டு, அவற்றை நீக்கினவிடத்து ஆங்காங் கொன்றற்கொன் றதிகரிப்பாய் வியாபித்திருந்த விசுவாதி மூன்றறிவும் அவற்முலனுபவிக்கும் சிற்றின்பங்களுங்கண்டு அப்பாற் றுரியவறிவும் அதனுலனுபவிக்கும் பேரின்பமுங்கண்டு அவைக ளொருமைப்படலே கூடஸ்தனென வகத்திற் றெளிந்ததே துவம்பதவிசாரமாம். இவற்முல் அவித்தியாரூபமான படிவங்க ணீங்கின. இது நிற்க; முற்கூறிய கூடஸ்தனதொருமையான சித்ரூபமாகிய விராட்டாதி மூன்று சரீரமும், மித்தையெனக்கண்டு அவற்றை நீக்காமல் நீக்கினவிடத்து ஆங்காங்கொன்றற் கொன்றதிகரிப்பாய் வியாபித்திருந்த வைசுவானரனுதிய விம்மூன்றறிவும் அவற்றினு லனுபவிக்குமாநந்தமுங் கண்டு அப்பாற் பரதுரியமான வறிவும் அதனுலனுபவிக்கும் பரமாநந்தமுங் கண்டு அவைகளொருமைப் படலே பிரமமெனப் புறத்திற் றெளிந்ததே தற்பதவிசாரமுமாம். இவற்முன் மாயையும்,அதன் காரிய ரூபமான படிவங்க ளனைத்து நீங்கின விச்சீவனே யவித்தை நீங்கின் வித்தையாரூபமான வீசனுயென்பதற்கு மேற்கோள். "துரிய மாகிய போதமோர் துளக்கமற் றனைத்தின்,கரிய தாயிருந் திடம்பரனனவெனக் கண்டேன்" என்னுஞ் சசிவன்னபோதக்கவியினுற்காண்க.இங்ஙனங் கூறிய அது வென்னும் பிரமமே நீயென்னுங் கூடத்தன் நீயென்னும் கூடஸ்தனே அது என்னும் பிரமமெனக் கலப்பதே யசிபதவிசாரமாம். இவற்முற் பிண்டாண்டங்களும் அவித்தியாவித்தைகளுங் கிஞ்சிக்ஞத்துவ சர்வஞ்ஞத்துவங்களும் இவற்ரு னொருமை தோன்றுமற் செய்த மூலாஞ்ஞானமுமான இத்துவிதங்கள் நீங்கிய நிரதிசயானந்த விளக்கமே யுண்மையான வத்துவித ஸ்வரூபமாம். இதுவே முத்துரியமுங் கடந்த குரு துரியமாம். இங்ஙனம் விளங்குதல் முற்கூறிய ஜீவனது யதார்த்த சொரூபமாதலால் இவனுக்கே மஹாவாக்கிய விசாரமும் அதனுலுள்ள நிரதிசயாநந்தவனுபவமு மாமெனக்காண்க.

(நா-ம்.) முற்கூறிய வுவமான வுவமேயப்படி பரமாத்மாயிக்கியமான அத்துவித சுயஞ்சைதன்னியமே யாவுமாய் விளங்குகின்றதென் றுணர்த்தியவாறும். (கஉச)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய மஹாவாக்கியார்த்தம் எஞ்ஞான்றுஞ் சுபாவசித்தமான வத்துவிதமாக விளங்க, மத்தியிற்சீவேச கூடத்தப்பிரமமாகப் பிரிந்தும் ஒருமையுமான கற்பனை யாகந்துகமாய்த் தோற்றி நீங்கிற்றென் பதற்குவமான முணர்த்துகின்றுர்.

தூயதத்தொ மசிமகா வாக்கியத்தி னுலே
துரியபரற் ருளதேகத் துவமென்கை கடாதி

யாயவுபா திகளகற்றி விசும்பொன்றே யெனவு
மகற்றிமனி தத்தன்மை யிராமனேநீ தானே
மாயவன்கா ணெனவும் * கன் னனேவேடு கழித்து
மகன்குந்திக் கெனவுமொரு தசமனேமாய் துயரம்

* "வெளிபடா மையினிற் குந்தி சுதனெனக் கன்ன வேந்தன்
இழிபடு ராதை மைந்த னெனத்துய ருற்ற வாங்கு
மிளிர்சிதா நந்த ரூப மெய்க்கனப் பிரஹ்மந் தானே
எளியதோர் ஜீவ பாவ மெய்திய தென்பர் மேலோர்.

எப்போதும் அசங்கமும் நித்தியமுக்தமுமாகிய சிதாநந்தப் பிரஹ்மத்தில் கற்பித அவித்தை முதலியவற்றின் சம்பந்தத்தால் பிரதிபிம்பிக்குந்தன்மையும் அவச்சின்னத்தன்மையும் சம்பவியா. எங்ஙனம் கானற்சலத்தால் நிரப்பப்பட்டதும், மலடிமைந்தனுகிய குலாலனுல் முயற்கோடாகிய தண்டத்தினுல் ஆக்கப்பட்டதுமாயுள்ள கடத்தின் சம்பந்தத்தால் ஆகாயத்தில் பிரதிபிம்பிக்குந்தன்மை யல்லது அவச்சின்னத்தன்மை உண்டாகிறதில்லை. ஆனுல் ஆகாயத்தின் சமானசத்தையுடைய ஜலம் நிரம்பியகடம் தடாகமுதலியவற்றின் சம்பந்தத்தினுலேயே ஆகாயத்தில் பிரதி பிம்பிக்குந் தன்மையும் அவச்சின்னத்தன்மையும் உண்டாகின்றன. அவித்தையும் அதன் காரியமும் பிரஹ்மசேதனத்தின் சமானசத்தை யுடையன வன்று, ஆனுல் சுவயமே சத்தாசூன்யமா யிருக்கின்றன. பிரஹ்மத்தின் சத்தையினுல் சத்தையுடையன அவித்தை முதலியனவாம். ஆதலால் முயற்கோடு முதலியவற்றைப்போல அத்தியந்தம் இல்லாதனவாகிய அவித்தை முதலியவற்றோடு சேதனத்தின் சம்பந்தத்தைக் கூறுதலே சம்பவியாது. சம்பந்தமின்றிய போது பிரதிபிம்பிக்குந்தன்மை முதலியனவோ அத்தியந்தம் தூரமாம். ஆதலால் எப்போதும் ஏகரசம் பிரஹ்மமாம். அதனிடத்து அவச்சின்னத் தன்மை அல்லது பிரதிபிம்பத்தன்மை வடிவ ஜீவத்தன்மை சம்பவிக்கிறதில்லை. ஆனுல் அஞ்ஞானத்தின் கற்பித சம்பந்தத்தால் பிரஹ்மத்தில் உண்டாகாமலே ஜீவத்தன்மைதோற்றுகின்றது. எங்ஙனம் அதிகாரியாகிய குந்திபுத்திரனிடத்து ராதாபுத்திரத்தன்மையின் பிரதீதி பிரம (மயக்க) வடிவமாயுண்டாயிற்றோ, அங்ஙனமே பிரதிபிம்ப முதலிய விகார மின்றியே பிரஹ்மத்தில் ஜீவத்தன்மைப் பிரம (மயக்க)ம் உண்டாகின்றது, பிரதிபிம்ப வடிவ அல்லது அவச்சேதவடிவ ஜீவத்தன்மையின்அடைவுஉண்டாகிறதில்லை. தனது அவித்தையினுல் ஜீவத்தன்மையை அடைந்த பிரஹ்மமே பிரபஞ்சத்தைக் கற்பிப்பதாயிருத்தலின் சர்வஞ்ஞத்தன்மை முதலிய தர்மங்களோடு கூடிய ஈசுவரனும் இந்தப்பக்ஷத்தில் ஜீவகற்பிதனுவர். எங்ஙனம் சொப்பனகற்பித இராஜாவின் சேவையினுல் சொப்பனத்தில் பலப்பிராப்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே சொப்பன கற்பித ஈசுவர பஜனத்தினுல் பலப்பிராப்தியும் சம்பவிக்கின்றது. இவ்வாறு அநாதி அவித்தையின்வலியால் தனதுபிரஹ்மத்

போயகல வொழித்துநீ யேதசம னெனவும்
புகலுதல்போற் சுடாவசித்த மாகுவதே யன்றி.

தன்மையின் ஆவரணத்தால் ஜீவத்தன்மைப் பிரமம் உண்டாகின்றது. தத்துவமஸிமுதலிய வாக்கிய ஜந்திய சாக்ஷாத்காரத்தால் ஜீவத்தன்மைப் பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றது, பிரமகாலத்திலும் ஜீவத்தன்மையில்லை. ஆனால் நித்தியமுக்த சிதாநந்த சொரூபப் பிரஹ்மமே உள்தெனும் பக்ஷத்தினையே பாஷியகார வார்த்திககாரர்கள் பிருகதாரணியத்தின் வியாக்கியானத்தில் கர்ணனது திருஷ்டாந்தத்தாற் கூறியிருக்கின்றனர். குந்தி புத்திரனாகிய கர்ணனுக்கு ஈனசாதியின் சம்பந்தத்தால் இழிந்ததன்மைப் பிரமம் உண்டாயிற்று, அநேகவித திரஸ்காரத்தா லுண்டாகிய துக்கத்தை அநுபவிக்கின்றவனாய்த் தானாகச் சித்தித்துள்ள குந்திபுத்திரத் தன்மை நிமித்தத்தாலுள்ள மேன்மையி னின்றும் நழுவினவனானான்,

ஒருநாள் ஏகாந்தத்தில் சூரியபகவானானவர் 'நீ ராதாபுத்திரனல்லன், எனது சம்பந்தத்தால் குந்தியின் உதரத்தினின்றும் உண்டானாய்' என்று கூறினார். இத்தன்மைய சூரியனது வாக்கியத்தினால் தன்னிடத்திருந்த ஈனஜாதியின் மயக்கத்தைவிட்டு இயல்பாய்ச் சித்தித்துள்ள குந்திபுத்திரத் தன்மை நிமித்தத்தாலுள்ள மேன்மையை அறிந்தான். அங்ஙனமே சிதாநந்தப் பிரஹ்மமும் அநாதி அவித்தையின் சம்பந்தத்தால் ஜீவத்தன்மைப் பிரமத்தை அடைந்ததாய், சுயமாகச் சித்தித்துள்ள பிரஹ்மபாவத்தை மறந்து அநேகவித துக்கத்தை அநுபவிக்கின்றது.

ஒருகாலத்துத் தனது அஞ்ஞானத்தினால் கற்பித சொப்பன கற்பித ஆசாரியருக்குச் சமானமான ஆசாரியர் வாயிலாக மகாவாக்கிய சிரவணத்தால் தன்னைக் கோசரிக்கும் வித்தையினால் அவித்தையின் நிவிருத்தி உண்டாக, நித்திய பரமாநந்தத்தைச் சொரூப சைதன்னியமாக அநுபவம் செய்கின்றான். இவ்வாறு பிருகதாரணியத்தின் வியாக்கியானத்தில் பாஷியகாரர் வார்த்திககாரர் எழுதியிருக்கின்றனர். எங்ஙனம் ஜீவனது அவித்தியா கற்பித ஆசாரியர் வேத உபதேசத்திற் கேதுவாவரோ, அங்ஙனமே ஈசுவரனும் சொப்பன கற்பித இராஜாவைப்போல ஜீவகற்பிதரேயாய்ப் பஜனத்தினால் பலத்திற் கேதுவாகின்றார். இம்மதத்தில் ஏகஜீவவாத முளது. ஆதலால் ஏகஜீவகற்பித ஈசுவரனும் ஏகமேயாவர். நாநா (பல) ஈசுவரரது அடையில்லை. சுகர், வாமதேவர் முதலியோரது முக்தியைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்தினும் சொப்பன கற்பித நாநா புருஷர்களைப்போல ஜீவாபாசகர்களும் நாநாவாகச் சித்திக்கின்றனர். நாநா ஜீவவாதம் சித்திக்கிறதில்லை. எங்ஙனம், சொப்பனத்தில் ஒரு திருஷ்டாவிற்கு நாநா புருஷர்கள் தோற்றுகின்றார்கள். அவர்களுள் ஒருவன் பெரிய காட்டில் தப்பு வழியிற் செல்பவனாய்ப் புலி முதலியவற்றாலுண்டாகிய துக்கத்தை அநுபவிக்கின்றான். ஒருவன் இராஜமார்க்கத்திற் செல்லுகின்றவனாய்த் தனது நகரத்தையடைகின்றான். ஆண்டு வனத்திற் பிரிதலும் தனது நகரத்தை அடைதலும் சொப்

(இ - ள்.) தூய - பரிசுத்தமான, தத்தொமசி - தத்துவமசியென்னும், மகாவாக்கியத்தினல் - மஹாவாக்கியத்தினல் விளங்கிய, துரியபரற்கு - கூடத்தப்பிரமத்திற்கு, ஏகத்துவம் - ஐக்கியம், உளதென்கை - உண டென்பது எங்ஙனமெனின், கடாதியாய - கடாகாயமுதலிய, உபாதிகள் - நான்கு உபாதிகளையும், அகற்றி-நீக்கி, விசும்பு ஆகாயம், ஒன்றேயெனவும்- ஏகமேயெனவும், அகற்றி மனிதத்தன்மை - மானிடத்தன்மையை நீக்கி, இராமனை - இராகவனை, நீதானே - நீயே, மாயவன்காணெனவும் - திரு மாலெனவும், கன்னனை - கர்ணனை, * வேடுகழித்து - வேடத்தன்மையை நீக்கி, குந்திக்கு - குந்திதேவிக்கு, மகனெனவும் - புத்திரனெனவும், ஒரு தசமனை - பத்தாவானுகிய வோர்புருடனை, மாய்துயரம் - மரணதுன்பம், போயகல-நீங்கும்படி, ஒழித்து - நீக்கி, நீயேதசமனெனவும் - நீயே பத்தா வானெனவும், புகலுதல்போல் - சொல்லுதல்போல, சுபாவசித்தமாகுவ தேயன்றி - சுபாவசித்தமாவதே யல்லாமல், எ—று.

---

பன திருஷ்டாவிற்கில்லை. ஆனுல் ஆபாச புருஷர்களுக்கு உண்டாகின் றது. அங்ஙனமே அவித்தையோடு கூடிய பிரஹ்ம வடிவ ஜீவனுக்குப் பந்த மோக்ஷத்தின் அடைவில்லை. ஆனுல் ஆபாசவடிவ ஜீவர்களுக்குப் பந்த மோக்ஷம் தோன்றுகின்றன.

இப்பக்ஷத்தில் யாருடைய ஞானத்தினுல் அவித்தையின் நிவிர்த்தி வடிவ மோக்ஷமுண்டாகும் என்று வினவின், அதற்கு உனது ஞானத்தி னுல் உண்டாகுமென்பது உத்தரமாம். அல்லது ஒருவருடைய ஞானத்தி னுலும் மோக்ஷமுண்டாகிறதில்லை யென்பது உத்தரமாம். ஏனெனின், இந்த மதத்தில் பந்தத்தின் "அத்தியந்த அசத்துத்தன்மை ஆத்மாவிலிருக் கின்றது. நித்திய முக்தமாகிய ஆத்மாவிற்கு மோக்ஷமுண்டாகும், அல்லது உண்டாயிருக்கின்றது என்று கூறுதல் சம்பவியாது. இவ்வபிப்பிராயத்தால் மோக்ஷத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்களை அர்த்தவாத மென்பர். பந்த மிருக்கின்றது; இற்றையவரை ஒருவரும் முக்தராகவில்லை; மேல் புருஷார் த்தத்தால் மோக்ஷமுண்டாகும் என்னும் அபிப்பிராயத்தால் வாமதேவர் முதலியோர்களது முத்தியைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்களை அர்த்தவாத மென்று சொல்லவில்லை. ஏனெனின், பந்தமிருக்க வாமதேவாதிகளுக்கு மோக்ஷம் உண்டாகாதிருக்குமாயின், மேலும் மோக்ஷத்தை விரும்புதல் பய னின்றியதாமென்னும் புத்தியினுல் சிரவணத்தில் பிரவிருத்தியின் அபாவ மே யுண்டாகும். ஆதலால் ஆத்மாவில் பந்தத்தின் அத்தியந்த அசத்பாவ மிருக்கின்றது ; நித்திய முக்தப் பிரஹ்மவடிவம் ஆத்மாவாம் ; அதற்கு மோக்ஷம் சம்பவியாதென்பது உத்தம பூமியிலேறிய வித்துவானது நிச் சயமாம்'' என்று விருத்திப் பிரபாகரத்தில் கூறியிருப்பதின் கறியத்தக்க தாம்.

* வேடு - வியாதத்தன்மை.

கடமென்றமையின், அதனுள்ளிருக்கும் ஆகாயமும், ஆதியென்றமையின், கடசலப்பிரதி பிம்பாகாயமும் மகாகாயமும் மேகாகாயமுங்கொள்க. சுபாவசித்தமென்பது சுபாவமாகவே சித்தித்திருப்பதாம். சுபாவம் - இயற்கை, சித்தம் - பெறப்பட்டது. எனவே, பிரமத்திற் சீவேசுரபேதமாகப் பிரிந்ததும் விசாரத்தினு லொன்றுபட்டது மியல்பாகவே யின்றென்பதாம். சுயவாகாயத்திற்குக் கடாகாயமாதிய நான்குபாதியும் வந்தது நீங்கினதும், திருமாலுக்கிராமனென்னும் மனிதத்தன்மைவந்ததும்நீங்கினதும், கன்னனுக்கு வேடத்தன்மை வந்ததும் நீங்கினதும், பத்தாவானுக்கு மரித்தானிருந்தானென்னு முபாதி வந்ததும் நீங்கினதும் எங்ஙனஞ் சுபாவமாயில்லையோ, அங்ஙனமே சுயஞ்சைதன்னியத்திற் சீவேசுரபேதம் வந்ததும் நீங்கினது மின்றிச் சுயமாகவே யாவுந்தற்பிரகாசமாய் விளங்குகின்றதெனக்கொள்க.

(தா - ம்.) வேதாந்தத்தினுள்ள மஹாவாக்கியார்த்த நிச்சயமான பிரமஸ்வரூபம் சுபாவத்தில் யாதோருபாதியுமின்றி யென்றுஞ் சதோதயமாய் விளங்குகின்றதென்பதாம். (கஉரு)

அ - கை.

முன் மஹாவாக்கியத்தாற் கூறியபேதாபேத மின்றிய வத்துவித வஸ்துவான சுபாவசித்தமே சுருதிசம்மதமெனத் தோன்றப் பேதாபேதமான அர்த்தவாதமுத லேகாதசவாதங் கூறுவான் றொடங்கி யிச்செய்யுளில் சடுவிதபேதவாத முணர்த்துகின்றார்.

ஒருமலர்க்குத் துறக்கமெனல் போன்முத்தி விருப்ப
முத * வருத்த வாதமெழிற் பதுமையைத்தே வெனல்போ
லிருமைதரு முபாசனு பரமனிதன் றன்னை
யிந்திரனென் பதுபோலத் துதிபரமா னினேயே

* (1) ஸ்துதியை அல்லது நிந்தையை அறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதமெனப்படும்.

(2) உபாசனையால் மோக்ஷ முண்டாகுமென்று கூறும் வாக்கியம் உபாசனுபரவாதமெனப்படும்.

(3) ஒருவனை ஸ்துதிபற்றி யுயர்த்திக்கூறும் வாக்கியம் ஸ்துதிபரவாதமெனப்படும்.

(4) ஒன்றன்றன்மையை மற்றொன்றன்மேல் ஏற்றிக்கூறும் வாக்கியம் உபசாரவாத மெனப்படும்.

(5) ஒரு பொருளோடு மற்றொரு பொருளைக் குணவொப்புமை நோக்கியபேதப்படுத்திக் கூறும் வாக்கியம் குணசாதிருசியவாத மெனப்படும்.

(6) ஜாதிக்கும் வியக்திக்குமுள்ள சமவாய அல்லது தாதாத்மிய (ஒற்றுமைவடிவ) சம்பந்தத்தைக் கூறும் வாக்கியம் ஜாதிவியக்திபரவாத மெனப்படும்.

யருமரசென் பதுபோல வுபசாரி கந்தா
னக்கினிமா ணவகனெனும் வாக்கியமே போல
வுரிமைதரு சகுணசா திரிசமிது கோவி
னுடம்பென்கை போற்சாதி வியத்தியா மன்றே.

(இ - ள்.) ஒரு மலர்க்கு - ஒரு புஷ்பங்கொண்டருச்சித்த புருஷனுக்கு, துறக்கமெனல்போல்-சுவர்க்கம் வருமென்பதுபோல, முத்திவிருப்பம் - மோட்சவிச்சையை, உதவு - தருகின்ற, அருத்தவாதம் - அருத்தவாதமும், எழிற்பதுமையை - அழகுள்ள விக்கிரகத்தை, தேவெனல்போல் - தேவதாரூபமென்பதுபோல, இருமைதரும் - பெருமையைக்கொடுக்கின்ற, உபாசனுபரம் - உபாசனுபரமும், மனிதன்றன்னை - மனிதனை, இந்திரனென்பதுபோல - தேவேந்திரனென்பதுபோல, துதிபரம்-துதிபரமும், ஆளினை-அடிமையை, அருமரசென்பதுபோல - கிடைத்தற்கரிய வரசனென்பதுபோல, உபசாரிகம் - ஔபசாரமும், அக்கினி மாணவகனெனும் - இம்மாணவகன் அக்கினியென்னும், வாக்கியம்போல - வாக்கியத்தைப்போல, உரிமைதரு - ஒன்றற்கொன்றுரித்தாகிய, சகுணசாதிரிசம் - சகுணசாதிரிசமும், இது - இவ்வவயவங்கள், கோவினுடம்பென்கைபோல், பசுவின் றேகமென்பதுபோல், சாதிவியத்தியமாம் - சாதிவியத்தியுமாம். எ — று, அன்று - ஏ-அசை.

சகுணசாதிரிசமென்பது குணவொப்புமை. சகுணம் - குணம், சாதிரிசம் - ஒப்பு. எனவே, ஒன்றன்குணத்தை மற்றொன்றில் ரூபகப்படுத்தலாம். சாதி - தன்மை, வியத்தி அதனையுடையது. அபேக்ஷித்தலா லடையக்கூடாதவஸ்துவை ஈசுரனுடைய வியல்பான சொரூபத்திலொரு புஷ்பார்ச்சனைசெய்தா லதற்கே சுவர்க்கபலங் கிடைக்குமென்னுங் கன்மகாண்டவசனம்போல ஒருவனுக்கு நிராசையினுலுண்டான முத்திவிருப்பத்தினு லடையலாமென்னும் அருத்தவாதமும், சிந்திக்கப்படாதவஸ்துவை யொரு விக்கிரகத்தினிடத்திற்றனது பிரியத்தைவைத்து அன்போடு முபாசிக்கு முபாசனையேதேவதாரூபமாய்த் தனது இஷ்டப்பிராப்தி தருவதுபோல எதிரிட்ட வஸ்துக்களைத் தனதுருவமாகச் சிந்தித்தலின் அச்சிந்தனையா லடையலாமென்னும் உபாசனு பரவாதமும், புகழ்தற்கடங்காத வஸ்துவை மனிதனைத் தேவனுகத் துதிக்கின் அத்தேவனுவதுபோலச் சீவனைச் சிவமாகத் துதித்தலாற் சீவனே சிவமாக அடையலாமென்னும் துதிபரவாதமும், பெருமை சிறுமையின்றிய வஸ்துவை ஆளையரசனென்பதுபோல அடியார்களாகிய சீவர்களை அடிகளாகிய சிவமாகவுபசரித்துக் கூறுதலா லடையலா மென்னும் உபசாரிகவாதமும், உருவகப்படாத வஸ்துவை யக்கினி மாணவகனென்பதுபோலச் சிவத்தின் குணத்தைச் சீவனிடத்திற் காண்பித்து அதனுல் அடையலாமென்னும் சகுணசாதிரிசவாதமும், உறுப்பில்லாத வஸ்துவை யலைதாடி முதலிய யவயவங்கள் கோவின்வடிவமாக விளங்குதல்போலச் சீவேசுரசகத்துக்கள் சிவத்தினவயவங்களாய் விளங்கலா லடையலாமென்னும் சாதிவியத்திவாதமுமா மெனவுங்கூறினர்.

இங்ஙனங் கூறுதற்கு மேற்கோளுளவோவெனின், நிரலே "காலான மூதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே" எனவும், "ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா லதுவாம்" எனவும், "சீவன் சிவலிங்க மாகு மவர்க்கே பாவங்கள் போகும் பறந்து" எனவும், "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீ ரியாம் வணங்குங் கடவுளாரே" எனவும், "உயிர்சச்சிதாநந்த வடிவாம்" எனவும், "பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்தபோது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெல்லாந் தோன்றுமொரு படமா னனே" எனவும் வருவதனாற் காண்க.

(தா-ம்.) இங்ஙனங்கூறிய சடுவிதவாதமும் பேதவாதமாதலின் அபே தமென்றலிற் சுருதி விரோத மென்பதாம். (கஉசு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் ஐந்துவித அபேதவாதங்களி னிலக்கண முணர்த்துகின்றார்.

கடத்தொடுமட் கநநியமென் வாக்கியமே போலக்
காரியகா ரண * நீலோற் பலமெனும்வாக் கியம்போல்
விடுப்பில்குண குணிதயிர்பாற் கபேதமெனல் போல
† விகாரமே வாரிகணங் கட்கேக மெனல்போ
லடுத ‡ வஞ்சாஞ் சிகம்விம்பப் பதிவிம்பங் களினுக்
கயிக்கமெனல் போல்விம்பப் பதிவிம்ப வாத
மெடுத்துணரி லெனவிங்ங னபேதபர மாக
விசைப்பனவெ லாஞ்சுருதி விரோதமென வறியே.

(இ - ள்.) கடத்தொடு - கடத்துடன், மட்கு - மண்ணினுக்கு, அந நியமென் - ஏகமென்கின்ற, வாக்கியமேபோல - வாக்கியத்தைப் போல, காரியகாரணம் - காரியகாரணவாதமும், நீலோற்பலமெனும் - நீலநிறமு டையது உற்பலமென்கின்ற, வாக்கியம்போல்-வாக்கியத்தைப்போல, விடு ப்பில் - நீக்கமின்றிய, குணகுணி - குணகுணிவாதமும், தயிர்-ததியானது - பாற்கு - க்ஷீரத்திற்கு, அபேதமெனல்போல - ஏகமென்பதுபோல, விகா

---

* நீலத்தின் அபேதமுடைய ஒரு உற்பலமிருக்கிறதென்பது நீலோற் பலமென்னும் வாக்கியத்தின் பொருளாம். நீலோற்பலமென்பது தொகை நிலைவகையாற் றொடர்ந்த வாக்கியமாம்.

† உபாதான காரணத்திற்குச் சமான சுவாபமுடையதாயும் அந்நிய தா (வேறு) சொரூபமாயுமுள்ளது பரிணாமமெனப்படும். பரிணாம மெனி னும், விகாரமெனினும், திரிபெனினுமொக்கும்.

‡ அம்சம் - கூறு (உறுப்பு), அம்சிகம் - கூற்றையுடையது (உறுப்பி).

ரம் - விகாரவாதமும், வாரி - சலமானது, கணங்கட்கு - அலையாதிய கூட்டங்களுக்கு, ஏகமெனல்போல - அபேதமென்பதுபோல, அடுத்த - பொருந்திய, அஞ்சாஞ்சிகம் - அம்சாம்சிகவாதமும்,விம்பம் - பிம்பத்திற்கும், பதிவிம்பங்களினுக்கு - பிரதிபிம்பங்களுக்கும், அயிக்கமெனல்போல் - ஐக்கியமுள்ளதென்பதுபோல, விம்பப்பதிவிம்பவாதமென - பிம்பப்பிரதி பிம்பவாதமென, எடுத்துணரில் - இவற்றைச்சீர்தூக்கி விசாரிக்குமிடத்தில்,இங்ஙன் - இவ்விடத்து, அபேதபரமாக - அபேதமாக, இசைப்பனவெலாம் - சொல்லுதல் யாவும், சுருதி-பரமாத்மவயிக்கியங்கூறிய சுருதிக்கு, விரோதமெனவறியே - விருத்தமேயாமென்றறிவாயாக, எ—று. ஏ - ஈற்றசை.

இப்பதினென்றுஞ் சுருதி விரோதமென்றமையால் முற்கூறிய நான்குஞ் சுருதிசம்மத மெனவாயிற்று. ஆதாரவாதேய ரகிதமான வஸ்துவிற்கு அவை யமைத்துக் கூறுகிற காரணகாரியவாதமும், பண்புபண்பிரகிதமான வஸ்துவிற்கு அவை யமைத்துக்கூறுகின்ற குணகுணிவாதமும், அவிருத்தவிருத்தரகித வஸ்துவிற்கு அவை யமைத்துக்கூறுகின்ற அம்சாம்சிகவாதமும், ஒன்றிற்கூடி மற்றொன்றாகத் தோற்றாத வஸ்துவிற்கு அவையமைத்துக்கூறும் பிம்பப்பிரதிபிம்பவாதமுமாம். இவ்வைந்துவாதமும் பேதத்திற்கபேதஞ் சாதித்தல், காரணமாகிய மிருத்திகையைக் காரியமாகிய கடமாகச் சொல்லுதல் காரணகாரியவாதமும், குணமாகிய நீலநிறங் குணியாகிய வுற்பலத்தி லிருக்கிறதென்று சொல்லுதல் குணகுணிவாதமும், ஒன்று தன்றன்மைகெட்டு மற்றொன்றாயிற்றென்று சொல்லுதல் விகாரவாதமும், அம்சிகமான ஜலம் தன்னம்சத்தால் குமிழியாயிற்றென்று சொல்லுதல் அம்சாம்சிகவாதமும், பிம்பமாகிய சூரியன் சலத்திற் பிரதிபிம்பமாகத் தோன்றுகின்றதென்று சொல்லுதல் பிம்பப்பிரதிபிம்பவாதமுமாம். இங்ஙனமாக விவைகள் அபேதத்துவம் பேசினும் அறிதற்கதீதமான வஸ்துவை யறிந்து அதிலதீதமாகுநிமித்தம் இவற்றைச் சாதனமாகக் கற்பித்துக் கூறினதேயன்றி யதார்த்தமன்றாதலிற் சுருதி விரோதம் என்றார்.

வினா:—அற்றேல், அதீதமானயதார்த்தம் அறிதலான கற்பனையா லெங்ஙனங் கிடைக்கும்?

விடை:—பலகறைதேட விரத்தினங் கிடைத்ததுபோற் கிடைக்குமென்க.

வினா:—இங்ஙனங்கிடைத்தல் விடயம்; அஃதிஃதன்றே?

விடை:—ஒன்றைத்தேட வொன்றுகிடைத்தல்போல அறிதலைத் தேட வதீதங்கிடைக்குமென்க.

வினா:—அற்றேல், தேடினது கிடைக்குமே யன்றித் தேடாதது எங்ஙனங் கிடைக்கும்?

விடை:—தேடல் பொருணயத்தைப் பற்றியாதலிற் பலகறை நயத்திற்கு இரத்தினத்தின்நய மளவின்மையாதல்போல அறிதல் இன்பநயத்

தைப்பற்றியாதலின் இவ்வறிதலின்பத்திற்கு அதீதவின்ப மளவின்மையின் அவ்வின்பந் தேடாததேட்டத்தாற்றானே வருமென்க.

வினா:—அற்றேல், சுவானுபவத்திற்குப் பிரயோசனமின்றிய வாதங்களைச் சுருதி கூறிய தெற்றிற்கு?

விடை:—கடவுபாதி நீங்கின கடாகாயத்திற்கும் மகாகாயத்திற்கும் ஐக்கியம் வருவதுபோல மூலாஞ்ஞான நீங்கின கூடஸ்தனுக்கும் பிரமத்திற்கும் ஐக்கியஞ் சொல்லுகிமித்தங் கடாகாய மகா காயமெனக் கூறினதாலென்க.

வினா:—மெய்யான பிம்பசூரியனிடத்திற் சலவுபாதி நீங்கினபோது அதிற் பொய்யாகத்தோன்றிய பிரதிபிம்ப சூரியன் ஐக்கியமாக வில்லையோ?

விடை:—சலவுபாதிநீங்கலே, அக்கற்பனாசூரியனும் நீங்கல் மாத்திரமேயன்றி ஐக்கியமாக வில்லையென்க. ஆயினும், வேறுதோன்றாத பிரயோசனத்தைக் கருதி ஐக்கியங்கூறினதுபோலப் பிரமத்திற்குஞ் சகத்திற்கும் ஐக்கியங் கூறினதே யன்றி வேறன்று.இச்சகந்தோன்றற்குக் காரணமான மாயை பிரதிபிம்ப சூரியன் றோன்றற்குக் காரணமானசலம் பிம்பசூரியன் கிரணத்திற் சோஷித்ததுபோலப் பிரமப்பிரகாசத்திற் சோஷிக்கிற் பிரமமே சுபாவமாக விளங்குமென்பது தோன்றக்காரணமான பிரமங் காரியமான சகம்போலத் தோற்றிற்றெனக் கற்பனா ஐக்கியங்கூறல், யதார்த்த வயிக்கியந் தோன்றற்குப் பூருவபட்சமாகச் சுருதி கூறினதே யன்றிச் சித்தாந்த பட்சமாகவன்றென்க.

(நா - ம்.) யதார்த்தத்திற்கும் யதார்த்தத்திற்கும் ஐக்கியமேயன்றி யதார்த்தத்திற்குங் கற்பனைக்கும் ஐக்கியமின்மையாற் சுருதி விரோதமெனக் கூறியவாறும். (கஉஏ)

அ - கை.

இச்செய்யுளில் பூருவபட்சமாகக் கூறிய சுருதிவாக்கியத்தினாற் சித்தாந்தமாகிய முத்தியெங்ஙனங் கூடுமென்ற வினாவிற்குவமான பூருவகமாகக் கூடுமென்பதற் குத்தரமுணர்த்துகின்றார்.

அவ்வகிலங் கட்கெல்லாம் பொய்ம்மையே புகலு
  மரியதாம் வேதாந்த பக்கமதி லினைய
வெவ்வமறு சுருதிவிசா ரத்தினா லுண்மை
  யெனுமுத்தி கூடுமென லெவ்வாறிங் கென்னி
லவ்வியமென் சொப்பனமா தணைவினான் மெய்ம்மை
  யாயவீ ரியவொழிவுங் கற்பிதமாம் வடிவிற்
செவ்வியவொண் கடவுள்வழி பாட்டினா லிட்டஞ்
  சேர்தலும்போ னூலுணர்வான் முத்தியுஞ்சித் திக்கும்.

(இ-ள்.) அவ்விலிங்கட்கெல்லாம் - முற்கூறிய திரிசியரூபமான பிரபஞ்சங்களனைத்திற்கும், பொய்ம்மையே புகலும் - மித்தியாத்தன்மையே கூறுகின்ற, அரியதாம் - அறிதற்கரியதான, வேதாந்தபக்கமதில்-வேதாந்த பட்சத்தில், இனைய - இத்தன்மையான, எவ்வமறு - துன்பநீங்குதற்கேதுவான, சுருதிவிசாரத்தினுல் - வேதவிசாரணையினுல், உண்மையெனும் - மெய்யென்ற, முத்தி - வீடானது, கூடுமெனல்-சித்திக்குமெனச் சொல்லுதல், எவ்வாறிங்கென்னில் - இவ்வணங்ஙனமென்றால், அவ்வியமென் - வடிவமில்லையென்னும், சொப்பனம் - கனவிற்கண்ட, மாதணைவினுல் - பெண்ணைக்கூடுதலால், மெய்ம்மையாய - மெய்யான, வீரியவொழிவும்-இந்திரியவீழ்ச்சியும், கற்பிதமாம் - கற்பியாநின்ற, வடிவில் - விக்கிரகங்களில், செவ்விய-செவ்விதான, ஒண்கடவுள் - அழகியதேவினை, வழிபாட்டினுல் - வழிபடுதலினுல், இட்டஞ்சேர்தலும்போல் - இஷ்டப்பிராப்தியு முண்டாவதுபோல், நூலுணர்வால் - சுருதிஞானத்தால், முத்தியுஞ்சித்திக்கும் - வீடுமுண்டாகும். எ—று.

அவியமென்பது அவ்வியமெனவெதுகை நோக்கிவந்தது. அ - நீக்கம், வியம் - வடிவம்; எனவே, பொய்வடிவமாயிற்று. பொய்யான பெண்ணைக் கூடுதலால் மெய்யான வீரியவீழ்ச்சியும், பொய்வடிவத்தைத் தேவெனவுபாசித்தலால் மெய்யான இஷ்டப் பிராப்தியு முண்டாவதுபோலச் சித்தினிலக்கணம் வெளிப்படுத்தும் அபிப்பிராய முட்கொண்ட சுருதிசடத்தினிலக்கணம் வெளியாகக்கூறினும் அதன்கருத்தை யுணரும்போது அதனந்தரங்கமான சித்தே வெளிப்படுமென்க.

வினு:—அற்றேல், சுருதிகற்பித்துக் கூறியபொய்யினுலான மெய்யும் பொய்யாகவேண்டுமேயன்றி மெய்யாதற் கேதுவென்னை?

விடை:—பொய்யான சொப்பன சிம்மத்தால் பொய்யானசாக்கிரமுண்டாவதுபோல மெய்யேயாயிற்றென்க, இதற்கு மேற்கோள் "சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான,சத்தியும் பொய்யே யென்றாற் சத்திசா தனமா வந்த, முத்தியும் பொய்பா மென்னின் மோகநித் திரைவிலங்கா, னித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே" என்று கைவல்யநவநீதங் கூறுவதாற் காண்க.

(தா - ம்.) சுருதிகூறிய கற்பிதத்தினும் யதார்த்தாம்சமே விளங்கலின் அதில்வெளிப்படும் பிரயோசனமும் யதார்த்தமேயா மென்பதாம். (கஉஅ)

அ - கை.

இச்செய்யுளில் இங்ஙனஞ் சுருதியினுல் ஞானமுண்டாவதற்கு முரணுன அஞ்ஞானுதி மூன்றனிலக்கணமும் அவற்றை நிவிர்த்திக்குஞ் சிரவணுதி மூன்றனுமமு முணர்த்துகின்ருர்.

அருமையெனு முத்திவிலக் காகமூன் றுளவா
மஞ்ஞான மையம்விப ரீதமென வவற்றுட்

பிரமமல னென்கை யஞ்ஞான நானப்
பிரமமோ வலனோவென் றிடலையஞ் சுருதி
வருமினிய யுத்திகளா னான்பரமா யினுமுன்
வளர்சீவ பாவமுண்டென் குதல்விபரீ தந்தான்
றருமுறையி லஞ்ஞான திகட்குமுர ணாகுஞ்
சவணமொடு மனனநிதித் தியாசனங்க ளன்றே.

(இ - ள்.) அருமையெனும் – அரிதற்கரிதென்கின்ற, முத்தி - மோட்சமடைதற்கு, விலக்காக - விக்கினமாக, அஞ்ஞானம் - அஞ்ஞானமும், ஐயம் – சந்தேகமும், விபரீதமென – விபரீதமுமென, மூன்றுளவாம் - மூன்றுள்ளனவாம், அவற்றுள் - அவைகளுக்குள், நான் - யான், பிரமமலனென்கை - பிரமமல்லவெனச் சொல்லுதல், அஞ்ஞானம் – அஞ்ஞானமாம், நான் – யான், அப்பிரமமோ – முற்கூறியபிரமமோ, அலனோவென்றிடல் - அல்லனோவென நினைத்தல், ஐயம் - சந்தேகமாம், சுருதி – சுருதியினாலும், வரும் - அதனாலுண்டாகாநின்ற, இனியயுத்திகளால் - இனிமையான யுத்திகளினாலும், நான் - யான், பரமாயினும் - பிரமமானாலும், முன்வளர் – முன்தேகமேயானென வர்த்தித்த, சீவபாவம்-சீவத்தன்மை, உண்டென்குதல்-எனக்கிருக்கின்றதென்பது, விபரீதம்-விபரீதமாம், தரும்-இங்ஙனம்வந்த, முறையில் - கிரமப்படி, அஞ்ஞானதிகட்கு - அஞ்ஞானதி மூன்றற்கும், சவணமொடு - சிரவணத்துடன், மனனம் - மனனமும், நிதித்தியாசனங்கள் – நிருத்தியாசனமுமாகிய மூன்றும், முரணாகும் - விரோதமாம். ஏ – று. தான்–அன்று – ஏ - அசை.

முறையிலென்றமையின், சவணம் அஞ்ஞானத்தையும், மனனம் ஐயத்தையும், நிதித்தியாசனம் விபரீதத்தையும் விலக்குமெனக்கொள்க.

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சிரவணாதியினிலக்கண முணர்த்துகின்றார்.

குதகாதி களினிடைச் சுருதிவிசா ரத்தாற்
றுணிவுதோன் றுதலெனவே சிவமொடுயி ரயிக்க
மோதுமா ரணமொழியின் றாற்பரியங் கேட்கை
யுயர்சவணங் கேட்டபொரு ளுத்தியிற்சிந் தித்த
றீதின்மா மனனமவற் றாற்றுணிந்த பொருளிற்
சித்தமசை வறவிருத்த னிதித்தியா சனந்தான்
மேதையா கியசவண ஞானத்தா லான்மா
மெய்ம்மையா முக்கியத்தாற் சவணமங்கி யெனலாம்.

(இ - ள்.) சூதகாதிகளினிடை - ஆசௌசமுதலியவற்றில், சுருதி - சுருதியிற்கூறும், விசாரத்தால் - கன்மகாண்டவிசாரணையால், துணிவு - திடபுத்தியானதெளிவு, தோன்றுதலெனவே - உண்டாதல்போலவே, சிவமொடு - பிரமத்துடன், உயிர் - கூடத்தனுக்கு, அயிக்கம் - ஐக்கியத்தை, ஓதும் - சொல்லும், ஆரணமொழியின் - (ஞானகாண்ட) வேதவாக்கியத்தின், தாற்பரியம் - அபிப்பிராயத்தை, கேட்கை - திடபுத்தியுட ஞசிரியமுகமாய்க் கேட்பது, உயர்சவணம் - மேலானசிரவணமாம், கேட்டபொருள் - இங்ஙனங்கேட்ட பொருளை, உத்தியில் - யுத்தியினால், சிந்தித்தல் - சிந்திப்பது, தீதில் - குற்றமற்ற, மாமனனம்-மாட்சிமைபொருந்திய மனனமாம், அவற்றால் - அவ்விரண்டினாலும், துணிந்தபொருளில் - தெளிந்தபிரமவஸ்துவில், சித்தம் - சித்தமானது, அசைவறவிருத்தல் - நிச்சலமாயிருப்பது, நிதித்தியாசனம் - நிதித்தியாசனமாம், மேதையாகிய-மேன்மையாகிய, சவணஞானத்தால் - சிரவணத்தினா லுதயமான ஞானத்தினால் விளங்கிய, ஆன்மா - ஆத்மாவே, மெய்ம்மையாம் - உண்மையாம், முக்கியத்தால்-இம்முக்கியத்தால், சவணம் - சிரவணமே, அங்கியெனலாம் - அங்கியென்று சொல்லலாம், ஏ-று - தான் - அசை.

சிரவணம் அங்கிபோல்வதென் றுவமிக்கப்பட்டது. அங்கி - அங்கங்களை யுடையது; எனவே, சிரவணம் அங்கியும், ஏனைய விரண்டு மங்கங்களாம், இவற்றை மேற்கூறுப.

சென்மாந்திரப் பழக்கத்தினாற் கற்பிதமாகியசடம் கிஞ்சித்துத் தோற்றுதலால் தான்சித்தென்பதை மறப்பது அஞ்ஞானமாம்; இதனைக் கெடுப்பது இச்சடத்தைக் காண்பவன் சித்தேயென்று கேட்டலாகிய சிரவணமாம். இச்சிரவணமிருந்தும் அடிக்கடி சடந்தோற்றுதலால் நான் சித்தோவலனோவென மயங்கல் ஐயமாம்; இதனைக் கெடுப்பது முன்னுள்ளசித்துத்தானெனக்கண்டு அதைச் சிந்தித்திருப்பதாகிய மனனமாம். இச்சிந்தனத்தாலுண்டான சித்துத்தானாகினும் முற்கூறிய சகசீவபரமுண்டெனக் காண்டல் விபரீதமாம்; இதனைக் கெடுப்பது முன்னர்ச் சிந்தித்தலினா னுதித்த தானாகிய சித்தே யாவுமாய்விளங்குகின்றதென்றறிந்ததே தெளிவான நிதித்தியாசனமாம்.

(நா - ம்.) சுவானுபவத்திற்கு விலக்கான அஞ்ஞானாதிகள்வரின் அவற்றை யாங்காங்குச்சிரவணாதிகளின் அனுஷ்டானத்தினாற் கெடுக்கவேண்டுமென்பதாம். (கூ௦)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சிரவணாதிமூன்றனுள் சிரவணமே முக்கியமெனவும் ஏனைய விரண்டுங் கவுணமெனவும் உவமான பூருவமாக வுணர்த்துகின்றார்.

ஏனையவோ ரிரண்டுமதன் றுணையெனலா லங்க
மெனலாகு மஃதெவ்வா றெனிற்பொருள்க டிகழ்த்து

மானதோர் சுடரசைவிற் கருமவலி யின்று
  மாதலினால் வளிதடுக்குந் திரையெனலா மனன
மேனிமிர்வான் றிரிதூண்டி யொளிர்வித்தல் போலும்
  விளம்புநிதித் தியாசனமென் றறிந்திடுக தெரிந்து
மோனையா மெனவுரைத்த சவணத்திற் குள்ள
  முறையிலறு வகையிலிங்க தாற்பரிய முரைப்பாம்.

(இ - ள்.) ஏனைய - மற்றைய, ஓரிரண்டும் - ஒப்பற்றமனனநிதித்தியாசன மென்றவிரண்டும், அதன் - அச்சிரவணத்திற்கு, துணையெனலால் - சககாரிக ளென்பதனால், அங்கமெனலாகும் - அங்கமெனப்படும், அஃதெவ்வாறெனில் - அஃதெங்ஙனமென்றால், பொருள்கள் - இருட்டின்கணுள்ள வஸ்துக்களை, திகழ்த்துமானது - விளக்குவிப்பதாகிய, ஓர்சுடர் - ஓர்விளக்கிற்கு, அசைவில் - சஞ்சலாவத்தையில், கருமவலி - பொருளை விளக்குவிக்குந் தொழில்வல்லமை, இன்றாம் - இன்றாகும், ஆதலினால் - ஆதலால், வளி தடுக்கும் - (அச்சஞ்சலாவத்தைக் கேதுவான) காற்றைத் தடுக்கின்ற, திரையெனலாம் - திரையினைப் போல்வதாகும், மனனம் - மனனமும், மேனிமிர்வான் - அத்தீபமேலோங்கிப் பிரகாசிக்குநிமித்தம், திரிதூண்டி - வத்தியைத் தூண்டுகோலால் உந்தி, ஒளிர்வித்தல்போலும் - பிரகாசிப்பித்தல் போலும், விளம்பும்-முற்கூறிய, நிதித்தியாசனமென்று - நிதித்தியாசனமுமென, அறிந்திடுக தெரிந்து - ஆராய்ந்தறிவாயாக, மோனையாமென - முதலாமென, உரைத்த - சொல்லிய, சவணத்திற்கு - சிரவணத்தினுக்கு, உள்ளமுறையில் - உண்டானகிரமப்படி, அறுவகையிலிங்கம் - சடுவிதலிங்கத்தின், தாற்பரியம் - கருத்தை, உரைப்பாம் - சொல்லுவாம், எ - று.

முற்கூறிய சிரவணத்தினால் உதயமான ஞானத்தைத் தீபமாகவும், அத்தீபம் புறவிருத்தியான காற்றினால் அணையாமல் அகவிருத்தியினாற் சிந்திக்கு மனனமாகிய காப்பைத் திரையாகவும், அந்தஞானதீபத்தைச் சதோதயமாகப் பிரகாசிப்பிக்குந் தெளிவாகிய நிதித்தியாசனத்தைத் தூண்டுகோலாகவு முவமித்தவாறாம்.

அரணியாற் கடைந்தெடுத்த அங்கியால் ஏற்றியதீபம்போல ஜாக்கிர முதலிய அவத்தைகளை நீக்கினவிடத்துள்ள அத்துவிதப்பிரகாச சுயஞ்சைதன்யம் சிரவணத்தினாற் றோன்றுதலின் அதனை அங்கியென்றார், இங்ஙன முண்டான சிற்பிரகாசதீபம் துவிதவாதத்தால் அணையாமற் றற்சிந்தனமாகிய திரையாற்காத்தலால் அதுவே மனனமும், அச்சிற்பிரகாசத்தைத் தெளிவாகிய தூண்டுகோலால் நன்றாய் விளங்கச்செய்தலின் அதுவே நிதித்தியாசனமுமாம்; இவ்விரண்டும் அச்சிரவணத்திற்குச் சகாயமாதலா லங்கமெனப்பட்டன.

(தா - ம்.) சிரவணாதிகளின் விசேடண விசேடியங் கூறியவாறாம். ()

அ - கை.

இச்செய்யுளில் முன் முக்கியமெனக் கூறிய சிரவணத்தின் சட்வித லிங்கதாற்பரியங் கூறுவான் றொடங்கி உபக்கிரம முபசங்காரமாகிய பிரதம லிங்கத்தின் இலக்கண முணர்த்துகின்றார்.

அவைகளுபக் கிரமமுப சங்கார முடனே
யப்பியாசம் பின்பபூர்வ தைபலமோ டுற்ற
நவிலருத்த வாதமுப பத்தியென லாகு
நற்சிருட்டி முன்சகமெய்ப் பரமாயிற் றென்றுஞ்
சிவமதற்குச் சுவகதா திகளிலையென் றகண்டஞ்
செப்புவதே யுபக்கிரமஞ் சகஞ்சிவத்தின் மாய்த்துப்
பவமகலத் துரியற்குப் பிரமமுட னயிக்கம்
பகர்ந்தத்து விதங்கூற லுபசங்கா ரந்தான்.

(இ - ள்.) அவைகள் - அவ்விலிங்கங்கள், உபக்கிரம முபசங்காரமுடனே - உபக்கிரம முபசங்காரமும், அப்பியாசம் - அப்பியாசமும், பின்பபூர்வதை-பின்பு அபூர்வதையும், பலமோடு-பலமும், உற்ற-பொருந்திய,நவில்-சொல்லாநின்ற, அருத்தவாதம் - அர்த்தவாதமும், உபபத்தி-உபபத்தியும், எனலாகும் - என்று சொல்லப்படுவனவாம், (அவற்றுள்) நற்சிருட்டிமுன்-நல்லசிருட்டிக்குமுன்னே, சகம் - சகத்தானது, மெய்ப்பரம் - சத்தாமாத்திரமான பிரமமே, ஆயிற்றென்றும் - ஆனதென்றும், சிவமதற்கு - அப்பிரமத்திற்கு, சுவகதாதிகள் - சுவகதாதிமூன்றும், இலையென்று - இல்லையெனக்களைந்து, அகண்டஞ்செப்புவதே - பூரணத்துவஞ் சொல்லுவதே, உபக்கிரமம் - உபக்கிரமமும், சகம் - இச்சகத்தை, சிவத்தின்மாய்த்து - பிரமத்திற்கரைத்து, பவமகல - ஜநநநீங்க, துரியற்கு - கூடத்தனுக்கு, பிரமமுடன் - பிரமத்தோடு, அயிக்கம்பகர்ந்து - ஐக்கியஞ்சொல்லி, அத்துவிதங்கூறல் - துவிதநீக்கஞ்சொல்லுவதே, உபசங்காரம் - உபசங்காரமுமாம், எ - று. ஏ - தான் - அசை.

லிங்கம் - குறி. நெருப்பை யறிதற்குப் புகை லிங்கமா யிருப்பதுபோன்று பிரஹ்மத்தை யறிதற்கு இவ்வாறும் லிங்கமா யிருக்கின்றனவென்க. சிருட்டிக்கு முன் ஜகசீவபரம் பிரஹ்மமாக விளங்குவதே யுபக்கிரமமும், இங்ஙனந்தோன்றிய சகசீவபரங்களை அதிற் கரைப்பதே யுபசங்காரமுமாம்.

(நா - ம்.) அத்துவிதத்தி லுண்டாகிய சகம் உதித்துவிளங்கி யொடுங்குமிடத்தும் அவ்வத்துவித ஸ்வரூபமாகவே விளங்குமென்பதாம். ()

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் நான்கிலிங்கவிலக்கணமுணர்த்துகின்றார்.

கூறுமிவை யிரண்டுமோ ரிலிங்கமென வறிக
கூடத்த னேபிரம மெனமறித்து மறித்துங்

தேறவுரைத் திடலப்பி யாசமாந் துரியன்
 திகழ்பிரமா ணாதீத னென்கையபூர் வதையாம்
பாறிலுயி ரொன்றறித லெலாமறித லென்கை
 பயில்பிரத்திய கான்மவுரு வாம்பிரமந் தனக்கு
மாறரிய வைந்தொழிற்கத் திருத்துவஞ்செப் புறுதல்
 வயங்கருத்த வாதமென மதித்திடுக தெரிந்தே.

(இ - ள்.) கூறும் - இங்ஙனங்கூறிய, இவையிரண்டும் - உபக்கிரம முமுபசங்காரமுமாகிய விரண்டும், ஒரிலிங்கமென-ஒருலிங்கமென, அறிக- அறிவாயாக, கூடத்தனே - முற்கூறியகூடத்தனே, பிரமமென - பிரமமெ ன்று, மறித்துமறித்தும்-மீண்டுமீண்டும், தேறவுரைத்திடல்-தெளியச்சொல் லுதல், அப்பியாசமாம் - அப்பியாசமாகும், துரியன் - கூடஸ்தன், திகழ் - விளங்காநின்ற, பிரமாணாதீதனென்கை - பிரத்தியட்சாதிப் பிரமாணங்க ளுக்கதீத னென்பது, அபூர்வதையாம் - அபூர்வதையாகும், பாறில் - பிறி வில்லாத, உயிர் - கூடத்தனை, ஒன்றறிதல் - ஒருபொருளை யறிதலால், எலாமறிதலென்கை - அனைத்தையு மறிதலாமென்பதே, பலம்-பலமாகும், பிரத்தியகான்மவுருவாம் - கூடத்தசொரூபமாகிய, பிரமந்தனக்கு - பிரமத் திற்கு, மாறரிய - தவறுதற்கரிய, ஐந்தொழில் - பஞ்சகிருத்தியத்திற்கு, கத் திருத்துவம் - கர்த்தாவாந்தன்மையை, செப்புறுதல் - சொல்லுதலே, வய ங்கு - விளங்காநின்ற, அருத்தவாதமென - * பூதார்த்தவாதமென்று, மதி த்திடுகதெரிந்து - வரையறுத்தறிவாயாக, எ - று. ஏ - ஈற்றசை.

(ப - ம்.) சாமவேதத்திற் பிரத்தியகான்மாவே பிரமமென வொன்பது முறை போதிக்கப்பட்டிருத்தலின் கூடஸ்தனே பிரமமெனமறித்துமறித்துந் தேறவுரைத்திட லப்பியாசம் என்றார், முற்கூறியவண்ணம் யாவுஞ் சின் மாத்திரமாகச் சிந்திக்குமிடத்துச் சகசீவபரந் தோன்றின் சித்தே யிங்ஙனந் தோன்றுவதெனக்கண்டு அவற்றை யதுவேயெனப் பழகுவதே அப்பியாச மெனவும், இங்ஙனம் அப்பியாசித்த அச்சித்து லதீதமாதலே அபூருவதை யெனவும், இத்துரியாதீதம் யாவுமாய் நிறைந்திருக்கின்றமையால் அதனை யறிதல் யாவையு மறிந்ததாதலே பலம் எனவும், இங்ஙனம் விளங்கிய சத் தனுக்குச் சகநோக்கால் சிருட்டியாதி கர்த்திருத்துவஞ் சொல்லுவதே அரு த்தவாதமெனவுமாம்.

(தா - ம்.) முதலிற் கூறிய இலிங்கத்தால் நிச்சயித்த பொருளினை ஐயந்திரிபின்றி யனுபவமாக அனுஷ்டித்தற்கும் அங்ஙனமனுபவித்தபொரு ளில் அதீதமாதற்கும் அவ்வதீதமே யாவுமாய் விளங்குதற்கும் அங்ஙனம்

---

* பூதார்த்தவாதம்—தனதர்த்தத்திற் பிரமாண முள்ளதாய் இலக் கணையினுல் விதேய (அமைக்கப்படுகிற) அர்த்தத்தின் சிலாக்கியத்தை யறி விக்கும் வாக்கியம். உதாரணம் - வச்சிர அஸ்தன் புரந்தரன் என்றாற் போல்வது.

விளங்குதலே மாகர்த்திருத்துவ மென்பதற்கும் இந்நான்கிலிங்கமும் வந்தனவென்பதாம். (கூகூ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் உபபத்தியிலிங்க விலக்கணங்கூறி மேல் மனனத்துக்குச் சகாயமான யுத்திமுதல் மூன்ற னிலக்கணங்கூறுவான் றொடங்கி முன்னர் யுக்தியி னிலக்கண முணர்த்துகின்றார்.

கடத்தினுக்கு மண்ணினையு நூற்குலண்டு தனையுங்
 காரணமென் பதுபோலப் பிரமமே முன்னம்
படைத்தசகத் காரணமென் கின்றதுப பத்தி
 பக*ருத்தி தருக்கமனு மானமிவை மூன்று
மடுத்துவரு மனனசக காரிகளா மவற்று
 ளாருயிர்க ளனேகம்வியா பகமெனவே கூறுந்
தடுப்பரிய சாங்கியமே முதலாய மதத்துட்
 சாற்றுமுயி ரெலாமுடம்பு தொறும்புணர்ச்சி யுறலால்.

(இ - ள்) கடத்தினுக்கு - கலசத்திற்கு, மண்ணினையும்-மிருத்திகையையும், நூற்கு - பட்டுநூற்கு, உலண்டுதனையும் - கோசகாரப்புழுவையும், காரணமென்பதுபோல - காரணமெனச் சொல்வதுபோல, பிரமமே-ஆத்மாவே, முன்னம் படைத்த - முன்னர்ச் சிருட்டித்த, சகத் - உலகத்திற்கு, காரணமென்கின்றது - காரணமெனச் சொல்வதே, உபபத்தி - உபபத்தியாம், பகர் - சொல்லாநின்ற, உத்தி - யுத்தியும், தருக்கம்-தர்க்கமும், அனுமானம் - அனுமானமுமாகிய, இவை மூன்றும் - இம்மூன்றும், அடுத்துவரும் - சிரவணத்தைச் சார்ந்துவராநின்ற, மனனம் - மனனத்திற்கு, சககாரிகளாம் - துணைக்காரணங்களாம், அவற்றுள்-அம்மூன்றனுள், ஆருயிர்கள்-பொருந்தியசீவர்கள், அநேகம்-பலவெனவும், வியாபகமெனவே-வியாபகமெனவும், கூறும் - சொல்லாநின்ற, தடுப்பரிய - தடுத்தற்கரிய, சாங்கியமே முதலாய - சாங்கியமாதியான, மதத்துள் - சமயங்களுள், சாற்றும் - சொல்லாநின்ற, உயிரெலாம் - சீவர்களனைத்தும், உடம்புதொறும் - தேகங்கடோறும், புணர்ச்சியுறலால் - சேர்ந்திருத்தலால், எ - று. ஏ - அசை.

உபபத்தி என்றதால் சகமுண்டாதற்கு உபாதானகாரணமும் நிமித்தகாரணமும் பிரமமே யென்பதாயிற்று. உபபத்தி (பொருத்தம்) - திருஷ்டாந்தம்.

---

* (1) இதுகூடும் இது கூடாதெனத் தன்னிடத்தே தோன்றுவது யுக்தி யெனப்படும்.

(2) தருக்கித்துப் பேசுதல் தருக்கமெனப்படும். அஃதாவது அநிஷ்டத்தைச் சம்பாதித்துக் கொடுப்பது. தருக்கித்தல் காரணம் (தீ) இன்றாயின் காரியம் (புகை) இன்றாமென்பது.

(3) ஏதுவை (புகையை) க்கொண்டு சாத்தியத்தை (தீயை) யாராய்ந்தறிதல் அனுமானமெனப்படும்.

வினா:—இங்ஙனமிருக்கச் சகத்திற் குபாதானகாரணம் மாயையென்று சிலர் கூறுவதென்னை?

விடை:—சுத்தியி லிரசிதம் புத்திமயக்காற் றோற்றல்போலப் பிரமத்திற் சகத்து மாயாமயக்காற் றோற்றலினென்க.

வினா:—அற்றேல், இவர் இங்ஙனங் கூறுவதற்குக் காரணமென்னை?

விடை:—இச்சகம் சச்சிதாநந்தாம்சமா யிருத்தலின் இதற்குக் காரணம் பிரமமாமெனக் கூறினாரென்க. எனவே, அவரது திருஷ்டிக்குச் சகம் நாமரூபமாதலினானும் இவரது திருஷ்டிக்குச் சச்சிதாநந்தாம்சமாதலினானு மிங்ஙனம் வியவகாரம் நேர்ந்ததென்க. அது கடத்திற்கு உபாதானகாரணமான மிருத்திகையும் அம்மிருத்திகையிற் கடமாதற்குப் பக்குவமுள்ள சத்தியுமென்பவை போலவாம். காரணகாரியங்கட் கொன்றற்கொன்று சம்பந்தங்களைக் காட்டி அவைகட் கதீதமான பிரமத்தை யாறுலிங்கத்தாற் றறிசிப்பித்தவாறு காண்க.

(தா-ம்.) முற்கூறிய சிரவணத்தினால் உதயமான ஆத்மசொரூபம் ஆதிமத்தியாந்த ரகிதமா யெக்காலத்து மொருபடித்தாய்ச் சதோதயமாக விளங்குகின்றதென்பதைச் சட்விதலிங்க தாற்பரியத்தால் விளக்குவித்தவாறாம்.()

(இதுவுமது.)

இந்தவுடம் பிவற்கேயாம் போகசா தனமற்
  றேனோர்க்கன் றெனிற்போகத் திதிபுகலொ ணாதாம்
வந்தவுடம் பெத்திறத்து மிவன்வினையால் வரலான்
  மற்றிவற்கே யெனின்வினையு மெவர்க்குமிலை யோதான்
முந்தையுடம் பபிமானத் தாற்செய்வினை யிவற்கே
  முற்றுமெனி னவ்வபிமா னமுமுந்தை யுடல்சே
ரந்தவுயி ரனைத்திற்கு மிலையோதா னிவ்வா
  றனவத்தை நீக்கலரி தநேகவுயி ரெனலால்.

(இ-ள்.) இந்தவுடம்பு-இத்தேகம், இவற்கே-இவனுக்கே, ஆம் போகசாதனம் - போகானுபவத்திற் கிடமாம், மற்றேனோர்க்கு-மற்றவர்களுக்கு, அன்றெனில் - அல்லவென்றால், போகத்திதி - போகஸ்திதியை, புகலொணாதாம்-சொல்லுதல் கூடாதாம், வந்தவுடம்பு-வராநின்ற தேகம், எத்திறத்தும் - எவ்விதத்தினாலும், இவன் வினையால் - இவனது கருமத்தினால், வரலால் - வருவதனால், மற்றிவற்கேயெனில்-இவனுக்கேயாமென்றால், வினையும் - அவ்வினையும், எவர்க்குமிலையோ - யாவர்களுக்குமிலையோ, முந்தையுடம்பபிமானத்தால் - பூருவ தேகாபிமானத்தினால், செய்வினை - செய்யாநின்ற கருமம், இவற்கே - இவனுக்கே, முற்றுமெனில்-கூடுமென்றால், அவ்வபிமானமும் - அத் தேகாபிமானமும், முந்தையுடல் - பூருவதேகத்தில், சேர் - அடைந்த, அந்தவுயி ரனைத்திற்கும் - அச்சீவர்களனைவர்க்கும், இலையோ - இல்லையோ, இவ்வாறு - இவ்வண்ணம் வரும், அனவத்தை - அன

வஸ்தாதோஷத்தை, நீக்கலரிது - நீக்குதல்கூடாது, அநேகவுயிரெனலால்- ஜீவர்களநேகரென்று கூறுகின்றமையால், எ - று. மற்று-தான்-அசை.

போகஸ்திதி - போக்கியவஸ்துவைப் புசிப்பதனிலைமை. இலையோ வென்ற எதிர்மறையோகார மிருக்குமென்பதைக் காட்டிற்று. அனவத்தை-முடிவுபெறாமை. (கரு)

(இதுவுமது.)

செப்பரிய வேகான்ம பக்கத்திற் போகத்
திதியிலையென் றநேகான்ம பக்கமது கொளினு
மிப்பரிசு மிகுபோகத் திதிகூடா தாயிற்
றிச்சங்கை யிருமதத்து மொக்குமே யென்னிற்
பற்பலவி லேகான்ம பக்கமதில் விம்பப்
பதிவிம்ப நியாயத்தாற் கரணவசை வாதி
மெய்ப்பரிய பலதிறத்தா லெண்ணிறந்த போக
விளைவுகூ டுதலெளிதென் குதலுத்தி யாமால்.

(இ - ள்.) செப்பரிய - வசனித்தற்கரிய, ஏகான்மபக்கத்தில்-ஏகான்ம பக்ஷத்தில், போகத்திதி - போகஸ்திதியானது, இலையென்று-இல்லையென்று, அநேகான்மபக்கமது - அநேகான்மபட்சத்தை, கொளினும் - கொண்டாலும், (அதிலும்) இப்பரிசு - இத்தன்மையாக, மிகுபோகத்திதி - மிகுந்த போகஸ்திதியானது, கூடாதாயிற்று - கூடாததாகும், இச்சங்கை - இச்சங்கையானது, இருமதத்தும் - முற்கூறிய விரண்டு மதத்திற்கும், ஒக்குமேயென்னில் - ஒத்திருக்கின்றதே யென்றால், பற்பலவில் - பலவின்றிய, ஏகான்மபக்கமதில் - ஏகான்ம பக்ஷத்தில், விம்பப்பதிவிம்ப நியாயத்தால் - பிம்பப்பிரதிபிம்ப நியாயத்தினுல், கரணம்-அந்தக்கரணத்தின், அசைவாதி- மந்தம் கலக்க முதலிய, மெய்ப்பரிய - மித்தையாகிய, பலதிறத்தால் - நானுவிதத்தினுல், எண்ணிறந்த - அளவின்றிய, போகவிளைவு - விசித்ரமான போகஸ்திதி, கூடுதல் - உண்டாகுதல், எளிதென்குதல் - எளிதிற்கொள்ளுதலாமென்பதே, உத்தியாம் - யுத்தியாம், எ - று. ஆல்-அசை.

சாங்கியமதஸ்தர் ஆத்மா பலவாய் வியாபகமாய்ச் சத்தாயுள்ள தென்பர். சரீரங்கடோறுங் கூடியிருத்தலின் ஆத்மா வேகமாம், அங்ஙனமாயின் இத்தேகம் இவனுக்கே போகத்தைக் கொடுப்பதன்றி மற்றவர்களுக்குக் கொடாமையான் ஆத்மா அநேகமேயாம்; ஆயின் அப்போகத்திற்கு நிலை சொல்லக் கூடாமையான் ஆத்மாவேகமேயாம், இவன் கன்மத்திற்கிடான தேகம் வருதலினுல் இவனுக்கே போகமென்பதனுல் ஆத்மாவநேகமேயாம்; யாவர்க்குங் கன்மமிருப்பதனுல் ஆத்மா வேகமேயாம், இவனபிமானத்தாற் செய்த கன்ம மிவனுக்கே வருதலால் ஆத்மாவநேகமேயாம்; இவ்வபிமானமித்தேகங்களி னுள்ள வாத்மாவுக்கெல்லா மிருத்தலின் ஆத்மாவேகமேயாம் என்றவிடத்து ஒன்று முற்றுப்பெறாது அனவத்தாதோஷ முண்டா

மென விவற்றை நீக்கி ஏகான்மடக்கத்திற்போகமில்லையென்று அநேகான்மபக்கத்தைக் கொள்ளினும் முற்கூறியவண்ண மிதற்கும் போகஸ்திதியில்லையென வரும். அங்ஙனம் வருதல் இவ்விருபட்சத்திற்கு மொக்குமாயினும் ஏகான்மபக்கத்தில் பிம்பமாகிய வாத்மாவானது, கரணசலத்திற் பிரதிபிம்பமாய் நானுவிதமா யிருத்தலிற் பலவிதமான போகானுபவ மெளிதிற் கூடுமென்பதாம். பிரதிபிம்பம்போல்வது அநேகான்மபக்கமும் பிம்பம்போல்வது ஏகான்மபக்கமுமாதலான் இவ்வநேகான்மபக்கங் கற்பிதமெனவும், ஏகான்ம பக்கம் யதார்த்தமெனவுங் கண்டு அதனை நீக்கி யிதனை யொப்புதலே யுத்தியெனக் காண்க.

(நா - ம்.) முற்கூறியபிரமஸ்வரூபம் என்றும் இடையூறின்றித் தானே தானாய் விளங்குமென்பதற் கையமின்றென்பதைக் காக்குநிமித்தமுண்டான மனனத்திற்குள்ளயுத்தியானது ஒன்று அநேகமென்னுமையத்திற்குப் பகையாக வரிக்குமென்ப தறிவித்தவாறும். (கரு௬)

அ - கை.

இச்செய்யுளில் முன்னர்க் கூறுதொழிந்த தர்க்கவனுமான மென்னுமிரண்டுங் கூறின் பெருகுமென நிறுத்தி மேல் நிதித்தியாசனத்திற்கு உருவமான மந்திரயோக முதலிய வைந்தையுங் கூறுவான்றொடங்கி அவற்றின் நாமங்க ளுணர்த்துகின்றார்.

தருக்கவனு மானவிலக் கணங்கடா மிசிரா
சாரியர்கண் முதலானோர் கண்டனு திகளில்
விரித்தமைத லாலிதுதான் சுவானுபவ நூலாய்
விளங்குதலா லீண்டுரைப்பிற் பெருகுமெனுங் கருத்தா
லுரைக்கிலமந் திரயோகம் பரிசயோ கம்பின்
னுயர்பாவ யோகமுட னபாவயோ கந்தான்
றெரித்தமகா யோகமெனு மிவைகளோ ரைந்துந்
திகழ்கின்ற நிதித்தியா சனவடிவ மாமால்.

(இ - ள்.) தருக்கம் - தருக்கமும், அனுமானம் - அனுமானமு மாகிய விவ்விரண்டின், இலக்கணங்கள் - இலக்கணங்கள், மிசிராசாரியர்கள் - ஸ்ரீ அர்ஷமிசிராசாரியர் பிரமாநந்தர், முதலானோர் - முதலானவர்களாற் செய்யப்பட்ட, கண்டனுதிகளில் - கண்டன முதலியவைகளில், விரித்தமைதலால் - பிரசித்தமாய் விரிக்கப்பட் டமைந்திருத்தலானும், இது - இந்நூல், சுவானுபவநூலாய் - சுவானுபவநூலாக, விளங்குதலால்-விளங்குகின்றமையானும், ஈண்டு - இவ்விடத்து, உரைப்பில் - அவற்றைக்கூறில், பெருகுமெனுங் கருத்தால் - விரியுமென்கின்ற கருத்தினானும், உரைக்கிலம்-சொற்றிலம், மந்திரயோகம் - இனிமந்திரயோகமும், பரிசயோகம் - பரிசயோகமும், பின்னுயர் - பின்பு மேலான, பாவயோகமுடன் - பாவயோகமும், அபாவயோகம் - அபாவயோகமும், தெரித்த - கூறிய, மகாயோக

மெனும் - மஹாயோகமுமென்கின்ற, இவைகளோரைந்தும் - இவ்வைந்து யோகங்களும், திகழ்கின்ற - விளங்காநின்ற, நிதித்தியாசன வடிவமாம் - நிதித்தியாசனரூபமாம், எ - று. தான் - ஆல் - அசை.

சுவானுபவம்-ஆத்மானுபவம். அஃதாவது உள்ளவாறு தன்னைத்தான் றரிசித்தல். (கரு௭)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பஞ்சயோகவிலக்கண முணர்த்துகின்றூர்.

ஓங்காரா திகளநுசந் தானத்தாற் பரத்தி
னுள்ளமடங் குதலேமந் திரயோக மதனோ
டீங்காகு மனம்பவனம் மொன்றாய்மூ லத்தி
னிருஞ்சுழினை வழிசென்று சென்னிநடு விருந்த
தேங்கான்ம வொளியின்மனோ லயமாதல் பரிசஞ்
சிரந்துறக்கஞ் செவிதிசைக ளிருசுடர்கள் விழிதீப்
பாங்காய முகமுந்தி விசும்புநிலம் பதமாம்
பரமனுரு வாயவிராட் புருடவடி வெனினும்.

(இ-ள்.) ஓங்காராதிகள் - பிரணவமுதலிய மந்திரங்களை, அனுசந்தானத்தால் - இடையறாது சிந்தனஞ் செய்வதால், பரத்தின் - பிரமத்தில், உள்ளமடங்குதலே - மனோலயமாவதே, மந்திரயோகம்-மந்திரயோகமாம், அதனோடு - அம்மந்திரயோகத்துடன், ஈங்காகும்-இவ்விடத்துள்ள, மனம்-மனமும், பவனம் - பிராணவாயுவும், ஒன்றாய்-ஏகமாய், மூலத்தின்-மூலாதாரத்திலிருந்து, இரும் - மாட்சிமையுள்ள, சுழினைவழி சென்று-சுழிமுனை நாடி மார்க்கத்திலேறி, சென்னிநடுவிருந்த - சிரோமத்திய பிரமரந்திரத்திலிருந்த, தேங்கு - நிறைவான, ஆன்மவொளியில் - ஆத்மப்பிரகாசத்தில், மனோலயமாதல் - அம்மனம் லயிப்பதே, பரிசம் - பரிசயோகமாம், சிரம் - சிரமானது, துறக்கம் - சுவர்க்கமாகவும், செவி - காதானது, திசைகள் - திக்குகளாகவும், இரு சுடர்கள் - சந்திராதித்தர்கள், விழி - கண்களாகவும், தீ - அக்கினி, பாங்காய - அழகான, முகம்-வதனமாகவும், உந்தி - கொப்பூழ், விசும்பு - ஆகாயமாகவும், நிலம் - பூமி, பதமாம் - பதமாகவும் விளங்கிய, பரமனுருவாய - சிவஸ்வரூபமான, விராட்புருடவடிவெனினும்- விராட்புருட ஸ்வரூபத்தையானாலும், எ - று.

விராட்புருட வடிவமென்றது பூமியந்தர சுவர்க்கங்களை யவயவமாக வியாபித்துநின்ற ஈசனது பேருருவத்தை. (கரு௮)

இதுவுமது.

அன்றியள வறுபெருந்தோட் படைபணியோ டுற்ற
வண்ணல்வடி வெனினுநினைந் தவயவங்க டம்மி
லொன்றொன்றாய் விடுத்துநின்ற வவயவிமாத் திரமா
யுண்மையாம் பிரமத்தின் மனமடங்கல்பாவஞ்

சென்றனவுங் கரணமுறு வொருபிரமந் தன்னிற்
சிந்தையடங் குதலபா வம்படைப்பி லொழிவிற்
றன்றெரித றெரியாமை யிடத்தினோர் பரிசாய்த்
தன்வடிவாம் பிரமத்தின் மனமிறன்மா யோகம்.

(இ-ள்.) அன்றி - அல்லது, அளவறு - அளவிறந்த, பெருந்தோள் - மாட்சிமையுள்ள புயங்களையும், படை - அவற்றிற்குத் தக்க வாயுதங்களையும், பணியோடு - அவற்றிற்கேற்ற வாபரணத்துடன், உற்ற - கூடிய, அண்ணல் வடிவெனினும் - பரமேசுவர ஸ்வரூபத்தையாஹலும், நினைந்து - சிந்தித்து, அவயவங்கடம்மில் - கூறிய அவ்வவயவங்களில், ஒன்றொன்றாய் விடுத்து-ஒவ்வொன்றாக நீக்கி, நின்ற-சேடித்திருந்த, அவயவிமாத்திரமாய் - அவயவிமாத்திரமாய்நின்ற, உண்மையாம் பிரமத்தில் - சத்துரூபமாகிய பிரமத்தில், மனமடங்கல் - மனம் லயிப்பதே, பாவம்-பாவயோகமாம், சென்றனவும் - விஷயங்களிற் சென்றடையாநின்ற, கரணமுறு - கரணத்திற்கு (பிரமாணங்கட்கு) அகோசரமான, ஒருபிரமந்தன்னில் - ஒப்பற்ற பிரமத்தில், சிந்தை யடங்குதல் - மனோலயமாவதே, அபாவம்- அபாவயோகமாம், படைப்பில் - சகசிருட்டியினும், ஒழிவில் - லயத்தினும், தன்றெரிதல் - தனதறிவினும், தெரியாமை யிடத்தின் - அறியாமையினும், ஓர்பரிசாய் - ஒருதன்மையாக விளங்கிய, தன்வடிவாம் - தனது சொரூபமான, பிரமத்தில் - பரத்தில், மனமிறல் - மனோலயமாவதே, மாயோகம் - மஹாயோகமாம், எ - று.

அண்ணல் வடிவென்றது பரமனுருவத்தை. எனவே விராட்டாதிய ஜீவேசுரசகங்களே அவயவங்களாகவுடையன வென்றாயிற்று. அவயவியென்றது இவ்வவயவங்களை யுடையவனை. எனவே அவைகளை நீக்கியவிடத்துத் தனியேநிற்பதுகரணமுறு வொருபிரமமென்றாயிற்று. ஆகவே அஃது அவாங்மனோகோசரமான சுத்த சைதன்னியமெனப் பெற்றாம்.

பிரணவாதியனு சந்தானத்தாற் பிரமமுதயமாதலின் மந்திரயோகம் எனவும், இடைபிங்கலை நாடிகளையடைத்துச் சுழிமுனை நாடிமார்க்கத்திற் சென்று மூலாதாரமுதல் ஆக்கினை யீறான தானங்களினுள்ள தேவதைகளோடுங்கூடி மேற் பிரமரந்திரத்தினுள்ள பிரமத்தோடுங் கலத்தலிற் பரிசயோகம் எனவும், ஜீவேசுர சகங்களனைத்தையும் அவயவங்களாகக் கண்டு அவைகளை நீக்கியவிடத்துள்ள அவயவியைப் பிரமமாகப் பாவித்தலிற் பாவயோகம் எனவும்,அங்ஙனம் பாவிக்கு மனதிற்கு அகோசரமானவிடத்துள்ள பிரமத்திற் பாவனாதீதமாய் நிற்றலின் அபாவயோகம் எனவும், சங்கற்பமுதித் தொடங்கினவிடத்தும் அறிவறியாமையிடத்தும் ஒருதன்மையாய் விளங்கும் பிரமமே தானாய் விளங்கலின் மாயோகம் எனவுங் கூறினர்.

வினா:—இங்ஙனங் கூறிய வைந்தனுள் ஒவ்வொன்றினாலும் பிரமத்தை யடைதல் கூடுமோதலின் இவற்றிற்குள் தாரதம்மியம் வந்தவாறென்னை ?

விடை:—ஒன்றென்ப தின்றி யாவுமாய் நிறைந்திருக்கின்ற பிரமம் இவ்வட்சரத்தில் அடங்கிநின்றுவெளிப்பட்டதெனக் கண்டமையானும்,அங்ஙனம் நிறைந்துள்ளபிரமம் இத்தேகக்கிருகத்தில்வெளிப்பட்டதாகத் தரிசித்தமையானும், அவயவங்களை நீக்கியவிடத்துள்ள அவயவியைப் பார்க்கும் பாவனையா லுதயமாமென்றமையானும், அப் பாவனையிறந்து அதீதமாய் விளங்குமென்றமையானும், மனமுதித்தவிடத் தொடுங்கின் உண்மை விளங்கு மென்றமையானும் இவ்வைந்திற்கும் ஏகதேசமான தோஷங்களும் இவை யொன்றற்கொன் றறிவு வியாபித்து வருதலி னுயர்வு தாழ்வான தாரதம்மியங்களு முண்டாம். இம்முன்னிலைகள் யாவுமின்றிச் சிந்திக்கு மனதின்கண் நிறைந்திருக்கின்ற சுத்த சைதன்னியமா யெங்கு நிறைந்திருக்கின்ற அத்துவிதவஸ்துவாதலே முக்கியமெனவும், ஏனைய வைந்து யோகங்களுங் கௌணமெனவும் வந்தவாறு காண்க.

இவற்றுள் மந்திரயோகத்திற் பிரம முதிக்குமென்பது (பிரமகீதை) "திமி ரந்தொறு மடைந்தழி வுறுது தெரிவா, காம னின்றரணி யால்வடிவு காணு மதுபோ, லாமு டம்பிலழி வின்றிமறை கின்ற வமல, னேமெ னும்பொரு ளுணர்ந்திட வுடம்பின் வெளியாம்" என்பதனானும், பரிசயோகமென்பதற் குதாரணம் (வாதவூரர் புராணம்) "முக்கு ணம்புல னைந்துடனடக்கி மூலவாயுவை யடைத்திரு வழியைச்,சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த், தக்க வைந்தெழுத் தோரெழுத் துருவாந் தன்மை கண்டவர் தரும்பெரு வெளிக்கே, புக்க மூந்தின ரெமதுருப் பெறுவர் புவியில் வேட்டுவ னெடுத்தமண் புழுப்போல்" என்பதனானும், பாவயோகமென்பதற் குதாரணம் (வாசிட்டம்) "கரையறு பரமா காசங் கதித்தறப் பருத்த கண்டம், புரையறு மதன்கீழெல்லை யற்றவிண் பொற்றூட் கஞ்ச, நிரைபயின் முடிவிறிக்கு நீண்டற வுயர்ந்த தோள்க, ளுரையுயிர் நானுலோக மொளிகொளா யுதங்க ளாமே" என்பதனானும், அபாவயோக மென்பதற்குதாரணம் (சுருதிசாரம்) "தனித்த சுவானு பவாதீதம் பிரமோக மேதாற் றானவனு யிருப்பதுஞ்சங் கற்பத்தானு, மனித்தமென விட்டிடிற்சூ னியமாத லானு மதுமறவா விடினினைவா யழிதலானு, மினித்தநிட்டை சாதகமா யிருத்தலானு மேதுமல்ல மூடமென்றே யியம்ப லானுந், தொனித்தசுபா வமுங்கடந்த வதீதந்தானே சுயம்பிரகா சம்மெனவே சொல்வர் தாமே" என்பதனானும், மஹாயோகமென்பதற் குதாரணம் (ஞானவாசிட்டம்) "ஆங்கதுவே யதீதபத மாதலாலே யதுகிஞ்சி லன்றெங்கு மதுவே யாகும், பாங்குறுவீ டென்றும்ப ருலகி லில்லைப் பாதலத்திற் பூதலத்திற் பார்க்கி லில்லை, வீங்கியவாசைகளெல்லா மிறந்த காலை விரிந்தமன மிறப்பதுவே வீடென் றோது, மோங்கியவீ டெனக்குளதென் றுள்ளேயெண்ண முண்டாகின் மீண்டுமன முற்ப விக்கும்" என்பதனாலுங் காண்க. இன்னும், "சகத்தானது உதயலயமாகின்ற தெவ்விடமோ அவ்விடத்தில் மனோலயமாகுவதே மஹாயோகம்" என்று பிரமாநந்தவிவேக சமுத்திரமென்னுநூலில் கூறுவதுங் காண்க.

(நா - ம்.) இவ்வைந்து யோகமும் நிதித்தியாசனத்துக்கு அங்கமாக வுஞ் சட்சமாதிக் கனுகூலமாகவுங் கண்டு இவற்றிற் கதீதமான பொருளைச் சகசத்தில் அனுஷ்டிக்கும்படியாகக் கூறினாரென்பதாம். (கஙக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சடுவிதலிங்காதியோடு கூடிய சிரவணாதி மூன்றனாலும் பிரமானுபவ முண்டாயினும் அதற் கிடையூறான பிரதிபந்த மூன்றுண்டெனக் கூறுவான் றொடங்கி அவற்றினுமமூம் பூதப்பிரதிபந்த விலக்கணமு முணர்த்துகின்றார்.

பகர்ந்தவுயி ருண்மைவிலக் காகவரும் பூதப்
பதிபந்தம் வர்த்தமா னப்பதிபந் தம்பி
னிகழ்ந்தவா காமியப் பதிபந்த முத்தி
நேயமொடு துறந்துகுரு பரனையறிந் தடைந்து
மகிழ்ந்துசவ ணாதிகமுற் றிடினுமுன் னுகர்ந்த
வனிதாதி விடயசுக வாதனையாற் றினமும்
புகுந்துமன நிலைகலக்கி யுயிருண்மை யுறுமற்
போக்கியிட றனைப்பூதப் பதிபந்த மென்பர்.

(இ - ள்.) பகர்ந்த - முற்கூறிய, உயிருண்மை - ஆத்மநிச்சயத்திற்கு, விலக்காக - விக்கினமாக, வரும்-வராநின்ற, (பிரதிபந்தம்)பூதப்பதிபந்தம்-பூதப்பிரதிபந்தம், வர்த்தமானப்பதிபந்தம்-வர்த்தமானப்பிரதிபந்தம், பின்-பின்பு, நிகழ்ந்த - விளங்கிய, ஆகாமியப்பதிபந்தங்களென - ஆகாமியப் பிரதிபந்தங்களென மூன்றும், (அவற்றுள்) முத்திநேயமொடு - முமுட் சத்துவத்துடன், துறந்து - இச்சைக்கு விஷயமான யாவற்றையும்விடுத்து, குருபரனை - சற்குருவை, அறிந்து - இவர் நம்மையிரட்சிக்கத் தக்கவரென் றறிந்து, அடைந்து - சரணாகதியடைந்து, மகிழ்ந்து-மனமுவந்து, சவணாதிகம் - சிரவணாதித்திரயங்களை, உற்றிடினும்-அடைந்திட்டாலும், முன்னுகர்ந்த - முன்னனுபவித்த, வனிதாதி - பெண் முதலிய, விடயம் - விஷயங்களிலுண்டாகிய, சுகவாதனையால் - சிற்றின்பவாசனையால், தினமும் - நாடோறும், புகுந்து - அகத்திற் புகுந்து, மனநிலை கலக்கி - மனோநிச்சயத்தைக்குழம்பச்செய்து, உயிருண்மை - ஆத்மநிச்சயத்தை, உறுமல் - அடையாவாறு, போக்கியிடறனை - நீக்கியிடுதலை, பூதப்பதிபந்தமென்பர் - பூதப் பிரதிபந்தமெனச் சத்துக்களுரைப்பார்கள், எ-று.

பூதம் - இறந்தகாலம். உயிருண்மை - ஆத்மசாட்சாத்காரம். (கச0)

அ - கை.

இச்செய்யுளில் ஏனைய விரண்டுபிரதிபந்தங்களின் இலக்கண முணர்த்துகின்றார்.

மடிவிடயா சத்தியபி மானமொடு குதர்க்க
மறுகிடுஞ்சிற் றினஞ்சேர்தல் சயலத்து வாதி

யடைதலின்மெய் தெரிந்துமுயி ருண்மையுரு தழித்த
லதுவாகும் வர்த்தமா னப்பதிபந் தங்காண்
விடலரிய சநநமின்னுஞ் சிலவடைந்தா லன்றி
விடாதுபிர மாதியுல கிச்சையெனுந் தோட
மொடுமருவி மறைப்பொருளை யுணர்ந்திடினு மான்ம
வுண்மையுரு தழித்தலா காமியப்பதி பந்தம்.

(இ - ள்.) மடி - சடபுத்தியும், விடயாசத்தி - விடயவிச்சையும், அபிமானமோடு - அபிமானமும், குதர்க்கம் - குதர்க்கமும், மறுகிடும் - மனங் கலங்கற்கேதுவான, சிற்றினஞ்சேர்தல் - அறிவின்மையோர் குழாங்களைச் சேர்தலும், சபலத்துவாதி - சஞ்சலத்தன்மை முதலிய குணங்களை, அடைதலின் - அடைதலுமாகிய இவற்றால், மெய் தெரிந்தும் - உண்மை யறிந்தும், உயிருண்மையுறாது - ஆத்மசாட்சாத்காரத்தை யடையவொட்டாது, அழித்தல் - கெடுக்கின்றதெதுவோ, அது-அதுவே, வர்த்தமானப் பதிபந்தமாகும்-வர்த்தமானப் பிரதிபந்தமாம், விடலரிய-நீக்குதற்கரிய, சநநம்-பிறப்பை, இன்னும் - இன்னமும், சிலவடைந்தாலன்றி - சிலபெற்றாலல்லது, பிரமாதியுலகு-சத்தியலோக முதலியவற்றில்வைத்த, இச்சைவிடாதெனும்-இச்சைநீங்காதென்கின்ற, தோடமொடு - தோஷத்துடன், மருவி - சேர்ந்து, மறைப்பொருளை - வேதார்த்தத்தை, உணர்ந்திடினும் - அறிந்திருந்தாலும், ஆன்மவுண்மை - ஆத்மசாட்சாத்காரத்தை, உறாது - அடையவொட்டாமல், அழித்தல் - கெடுப்பதே, ஆகாமியப்பதிபந்தமாம் - மேல்வருமாகாமியப் பிரதிபந்தமாகும். எ—று.

வர்த்தமானம் - நிகழ்காலம்.

பூதப்பிரதிபந்தம் ஆத்மதரிசனமாகியும் முன்னனுபவித்தவிடயானுபவத்தைச் சிந்தித்தல்; வர்த்தமானப் பிரதிபந்தம் இப்போது காணும் விஷயங்களி லிச்சையுண்டாதல்; ஆகாமியப்பிரதிபந்தம் மேல்வரும் விடயலாபங்களைக்கருதிநிற்றல். சபலமென்றது நிலையின்றி மின்போலத்தோன்றி மறைதலை. அஃதாவது சித்த மொருநிலையினில்லாது சஞ்சலப்படுதல். குருமுகமாயாத்ம விசாரஞ் செய்யு மிடத்து முன்னனுபவித்த விடயவாசனை தாக்குவதால் மனங்கலங்குவது பூதப்பிரதிபந்தமும், அங்ஙனம் விசாரித்த மெய்யுணர்வை யிப்போது மடி விடயாசத்தி யாதிகளாற்கெடுப்பது வர்த்தமானப்பிரதிபந்தமும், இன்னஞ் சிலபிறப்பெடுத்துப் பெரும்போகங்க ளனுபவித்தாலல்லது இச்சைவிடாதென்கின்ற சங்கற்பம் வஸ்து நிச்சயந்தெரிந்தும் அஃதாகவொட்டாமற் செய்வதால் ஆகாமியப் பிரதிபந்தமுமாம். பிரதிபந்தம் - தனக்கு வேறாகநின்று பந்திப்பது.

(நா - ம்.) பூதாதிப்பிரதிபந்தங்கள் சிரவணாதி யனுசந்தானத்தினாலுண்டான ஆத்மசாட்சாத்காரத்தைக் கெடுத்தலால் அவற்றை நீக்குதற்காக வுணர்த்தினாரென்பதாம். (கசக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பூதாதிப் பிரதிபந்தங்கட்கு இடையூறுன ஞானுதிமூன்றும் அவற்றுள் ஒவ்வொன்றற்கு முரிய காரணுதி யைந்துங் கூறுவான் ஜெடங்கி ஞானுதிமூன்றன் நாமமும் அவற்றுள் ஞானத்தின் காரணுதி மூன்றனிலக்கணமு முணர்த்துகின்முர்.

பந்தமவை மூன்றினையுங் கடந்திடுவான் பயில்வ
பகர்ஞான வயிராக முபரதியா மவற்றின்
வந்தணுகு மிலக்கணங்கா ரணமொடுதான் சொரூப
மருவுகா ரியமெனவே தனித்தனிஞா னக்கு
முந்துசவ ணுதிகமே காரணமான் மாவு
மூலவகங் காரமும்வே றுக்குதலே சொரூப
நந்துமகங் காரகத மயற்குத்தான் கரியாய்
நணுகுதலே காரியமென் றறைகுவர்மூ தறிஞர்.

(இ - ள்.) பந்தமவை-முற்கூறிய பூதாதிப்பிரதிபந்தங்கள், மூன்றினையும்-மூன்றையும், கடந்திடுவான் - நீக்குநிமித்தம், பயில்வ - அப்பியாசஞ் செய்யத்தக்கவை, பகர் - சொல்லாநின்ற, ஞானம் - ஞானமும், வயிராகம்-வயிராகமும், உபரதியாம் - உபரதியுமாம், அவற்றின் - அம்மூன்றனது, இலக்கணம் - இலக்கணமாவது, காரணமொடு - காரணமும், சொரூபம் - சொரூபமும், மருவு - பொருந்திய, காரியமென - காரியமுமென்று, தனித் தனி - ஒவ்வொன்றற்கும், வந்தணுகும் - வந்துபொருந்தும், ஞானக்கு - (அவற்றுள்) ஞானத்திற்கு, முந்துசவணுதிகமே - முதன்மையான சிரவ ணுதிமூன்றுமே, காரணம் - காரணமாம், ஆன்மாவும் - கூடத்தனையும், மூலவகங்காரமும் - மூலவகங்காரத்தினையும், வேறுக்குதலே - பிரித்தறி வதே, சொரூபம் - சொரூபமாம், நந்து - நசிக்குமியல்புள்ள, அகங்காரகத மயற்கு - அகங்காரசம்பந்தமான ஜீவனுக்கு, தான்கரியாய் - கூடஸ்தனுகிய தான் சாட்சியாக, நணுகுதலே - பொருந்துதலே, காரியமென்று - காரிய மாமென, அறைகுவர் - சொல்லுவார்கள், மூதறிஞர் - பேரறிவை யுடை யவர்கள், எ—று. தான் - அசை.

சவணுதி யென்றதனுன் மனன நிதித்தியாசனமுங்கொள்க. ஞானத் திற்குச் சிரவண மனன நிதித்தியாசனங்கள் காரணமும், அவற்றுல் அனு த்ம சம்பந்தமின்றி யாத்மாவைத் தனியே தரிசித்தல் சொரூபமும், அநாத்ம சம்பந்தமான சீவனுக்குத்தான் சாட்சியாய்விளங்குவதே காரியமுமாம்.

(நா - ம்.) இங்ஙனங்கூறிய விசாரஞானத்தினு லாகாமியப் பிரதிப ந்தம் நீங்குமென்பதாம். (கசஉ)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்த முறையால் ஏனைய விரண்டிற்குங் கார ணுதி மூன்றனிலக்கண முணர்த்துகின்முர்.

வேண்டும்வயி ராக்கியத்திற் குற்ற வனிதாதி
விடயத்தி னிலேயாமை முதலாய குற்றங்

காண்டலது காரணமெத் திறந்தானு மதனைக்
கழன்றிடுதல் சொரூபம்பின் புருமைகா ரியமா
மாண்டவுப ரதிக்கியமா திகளேகா ரணஞ்சூழ்
மனமொடுங்கல் சொரூபமாம் புறக்கருமந் தன்னின்
மீண்டுபுகு மயலறுதல் காரியமென் றிசைப்பர்
விளம்பலுறு ஞானாதி கட்கவதி மொழிவாம்.

(இ - ள்.) வேண்டும் - அறிஞரால்விரும்பத்தக்க, வயிராக்கியத்திற்கு - முற்கூறியவைராக்கியத்திற்கு, உற்ற - பொருந்திய, வனிதாதி-மனைவி முதலிய, விடயத்தில் - விடயங்களில், நிலையாமை முதலாய - அனித்தியமாதிய, குற்றங்காண்டலது - தோடதெரிசனமே, காரணம் - காரணமும், எத்திறத்தானும் - எந்தப்பிரகாரத்தினானும், அதனை - அவ்விஷயானுபவத்தை, கழன்றிடுதல் - நீங்குவதே, சொரூபம் - சொரூபமும், பின்புருமை - பின்னு மவ்விடயங்களிற் புகாமையே, காரியமாம் - காரியமுமாம், மாண்ட - மாட்சிமையுள்ள, உபரதிக்கு - உபரதிக்கு, இயமாதிகளே - இயமாதியஷ்டாங்கயோகங்களே, காரணம் - காரணமும், சூழ் - சங்கற்பரூபமான, மனமொடுங்கல் - மனமடங்குவதே, சொரூபம் - சொரூபமும்,புறக்கருமந்தன்னில் - முன்விடுத்தபகிர்முக வியாபாரங்களில், மீண்டுபுகும் - திரும்பச்செல்கின்ற, மயலறுதல் - மயக்கநீங்குவதே, காரியமாமென்று - காரியமுமாமென, இசைப்பர் - சத்துக்கள் சொல்லுவார்கள், விளம்பலுறும் - முற்கூறிய, ஞானாதிகட்கு - ஞானமுதலிய மூன்றற்கும், அவதி மொழிவாம் - அவதியைச் சொல்லுவாம், எ—று. அவதி - எல்லை.

வனிதாதி என்றதால் பஞ்சணை, சௌக்கியபோசனம், சுகந்தம், வஸ்திரம்,ஆபரணம், தயிலம்,தாம்பூலமுதலியனவுங்கொள்க, நிலையாமையென்றதால் எதிரிட்டுத்தோற்றும் விடயங்களியாவும் அனித்தியமெனக்கொள்க. இயமாதிகள்-இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. ஞானாதி யென்றமையின் வைராக்கியமும் உபாதியுங்கொள்க. புறத்தொழில்-பாகியவிடயத்திற் செல்லுஞ்சரியைகிரியைகள். முற்கூறிய வைராக்கியத்திற்கு விடயங்களிற்றோஷ திருஷ்டி வருவதேகாரணமும், அங்ஙனமுண்டான விடயவாசனையை நீக்குதலே சொரூபமும், அங்ஙனம் நீக்கினவிடயத்திற் பின்னரிச்சை பிறவாததே காரியமுமாம். உபரதிக்கு அட்டாங்கயோகஞ் செய்வதே காரணமும், அவற்றால்மனமொடுங்குதலே சொரூபமும், முன்னர் நீக்கின கருமங்களில் மீண்டும் மயக்கம் வாராததே காரியமுமாம்.

(தா - ம்.) இங்ஙனங்கூறிய வைராக்கியத்தினால் வர்த்தமானப்பிரதிபந்தமும், உபரதியினாற் பூதப்பிரதிபந்தமும் நீங்குமென்பதாம்.

அ - ௯௧.

இச்செய்யுளில் நிறுத்த முறையால் ஞானாதிகளி னவதியினிலக்கணமுணர்த்துகின்றார்.

தக்கதே கான்மபா வம்போலப் பிரமந்
தானென்னுந் திண்மைஞா னத்தினுக்கா மவதி

மிக்கபிர மாதிபதந் துரும்பெனவே நினைத்தல்
விளம்புவயி ராக்கியத்திற் கவதிசுழுத் தியன்போற்
றொக்ககரு மங்களனைத் தினையுநினை யாமை
தோன்றுமுப ரதிக்கவதி யாகுமிவை மூன்றும்
புக்கொருவ னடைந்திடுமே லிதுமுன்னம் விடாது
புரிந்தமா தவத்தின்வலி யென்றறிக தெரிந்தே.

(இ - ள்.) தக்க - உரிமையான, தேகான்மபாவம்போல - தேகமே யாத்மாவெனப் பாவிப்பதுபோல், பிரமம் - பிரமமே, தானென்னும் - தானென்கின்ற, திண்மை - திடபோதமே, ஞானத்தினுக்கு - ஞானத்திற்கு, ஆமவதி - அவதியாம், மிக்க - மேலான, பிரமாதிபதம் - சத்தியலோகாதி பதப்பிராப்திகளை, துரும்பெனவே - திரணம்போல, நினைத்தல் - நினைப்பது, விளம்பும் - முற்கூறிய, வயிராக்கியத்திற்கு - வைராக்கியத்திற்கு, அவதி - அவதியாம், சுழுத்தியன்போல் - சுழுத்தி யுடையவனைப்போல, தொக்க - பொருந்திய, கருமங்களனைத்தினையும் - எல்லாக் கருமங்களையும், நினையாமை-மறப்பதே,தோன்றும் - விளங்காநின்ற, உபரதிக்கவதியாகும்- உபரதியினவதியாம், இவை மூன்றும் - இந்தஞானாதி மூன்றையும், புக்கு- புகுந்து, ஒருவன் - ஓர்புருடன், அடைந்திடுமேல்-அடைவானாயின், இது - இது, முன்னம் - ஜென்மாந்தரங்களில், விடாது புரிந்த - நீங்காமற்செய்த, மாதவத்தின் - மகாதவத்தினது, வலியென்று - வல்லபமென, அறிக தெரிந்து - உணர்ந்தறிவாயாக, எ—று. ஏ - ஈற்றசை.

பிரமாதிபதம் என்றமையின், பிருதிவிலோக பதப்பிராப்திபரியந்த முங்கொள்க. அஞ்ஞானகாலத்தில் தேகந் தானாயிருப்பதுபோல அஞ்ஞானம் நீங்கியகாலத்தில் பிரமந் தானாய் விளங்குதல் ஞானத்திற்கும், பதப்பிராப்திகளனைத்தினையுந் துரும்பாக வுபேட்சித்தல் வைராக்கியத்திற்கும், கருமங்க ளனைத்தினும் மனமெழா திருத்தல் உபரதிக்கும் அவதிகளாம்.

(தா - ம்.) ஞானாதி மூன்றனிலைமையினளவு கூறியவாறாம். (கசச)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய ஞானாதிகளின் பன்மூன்றும் அவற்றுள் ஞானமே முக்கியமெனவும் ஏனைய விரண்டுங் கௌணமெனவு முணர்த்துகின்றார்.

குறையகலும் வயிராக முபரதியா மிரண்டுங்
கூடிஞா னங்கூடா தாயின்முத்தி யரிதா
முறுமினிய மிசையுலக பதங்கிடைக்கு ஞான
மொன்றுமடைந் தவையிரண்டு மிலையேனு நிற்க
முறியுமர நெடும்பனையோன் விழநினைவின் மேனு
முறியவிழல் போலவே தேகாந்த மதனிற்

பெறுவனுயர் முத்தியினை யுடற்கமைந்த வினையாற்
பிறந்திடுந்துக் கானுபவ முளதாத றிண்ணம்.

(இ - ள்.) குறையகலும் - குற்றமற்ற, வயிராகம் - வைராக்கியமும், உபரதியாம் - உபரதியுமாகிய, இரண்டும் - இவ்விரண்டும், கூடி-ஒருபுருடனைக்கூடி, ஞானங்கூடாதாயின் - ஞானங்கூடாவிடின், முத்தியரிதாம்- மோட்சங்கிடையாதாம், உறுமினிய - இனிமைபொருந்திய, மிசை - மேலான, உலகபதங்கிடைக்கும் - சத்தியலோகபதப் பிராப்தியுண்டாம், ஞானமொன்றும் - ஞானமாத்திரம், அடைந்து - பெற்று, அவையிரண்டும் - உபரதிவைராக்கியமான வவ்விரண்டும், இலையேனுநிற்க-இல்லையாயினுமிருக்கட்டும், முறிபுமரம்-வேரோடுமொடிந்து வீழ்கின்றமரத்தின், நெடும்பணையோன் - நெடியகிளையிலிருப்பவன், விழநினைவின்றேனும் - பூமியில் வீழமனமின்றாயினும், முறிய - மரமுறிந்துவிழ, விழல்போல - அம்மரத்தினிற்பவன் பூமிபதனமாதல்போல, தேகாந்தமதனில் - தேகாந்தத்தில், பெறுவனுயர்முத்தியினை - மேலானமோட்சத்தையடைவன், உடற்கமைந்த - தேகத்திற்கமைந்த, வினையால் - பிராரத்தகன்மத்தால், பிறந்திடும் - உண்டாகும், துக்கானுபவம் - துக்கமனுபவித்தல், உளதாதறிண்ணம் - உண்டென்பதுநிச்சயமாம், எ—று. ஏ-அசை.

பணை - பிராரத்ததேகத்திற்கும், விழல் - முத்தியடைதற்கு முவமித்தவாறும். தேகாந்தமதனிற் பெறுவனுயர்முத்தி என்றமையின் சத்தியோ (உடனே) முத்தியெனவும்; உடற்கமைந்தவினை என்றமையின் சஞ்சித ஆகாமியம்நீங்கின பிராரத்தவினைமாத்திரமெனவும்; துக்கானுபவமுளதாத திண்ண என்றமையின் பிராரத்தத்தால் வருஞ்சுகதுக்கமனுபவிப்பனெனவும் பெற்றும். பெறவே, வைராக்கியவுபரதியில்லாதவன் சுகதுக்கமனு பவிப்பானென்பதும் இச்சுகதுக்கங்கள் அனுபவத்தால் நீங்குவதே யன்றிமேல் வினைவிற் கேதுவாகாதென்பதுங் காண்க.

(தா-ம்.) வைராக்கியமுபரதிகட்குப் பதப்பிராப்தியே பலமன்றிமுத்தியன்றென்பதும் ஞானமொன்றற்கு முத்தியே பலமென்பது மிம்மூன்றுங் கூடியிருக்கின் சுகதுக்கமின்றிச் சத்தியோமுத்தனுவனென்பதும் உணர்த்தியவாறும். (கசரு)

அ - கை.

இச்செய்யுளில் சிரவணாதிமூன்றினு லுதயமான ஞானம் அபரோட்சமாதற்கேதுவான சமாதி கூறுவான்றொடங்கி அதற்குச் சாதனமாயுள்ள ஞானபூமிகளினேழினுமமும் அவற்றுள் இரண்டனிலக்கணமு முணர்த்துகின்றார்.

சாற்றரிய சுவேச்சைவிசா ரணைதனுமா னசிசத்
வாபத்தி யசம்சத்தி பதார்த்தாபா வனையே
மேற்றுரிய காமியெனு மிவற்றினைமூ தறிஞர்
விளங்குசத்த ஞானபூ மிகளென்ப ரவற்றுட்

டோற்றிடுநான் மூடனு யிருந்தகா ரணமென்
சுருதிகுரு வாலறிவ லெனநினைதல் சுவேச்சை
மாற்றரிய சுருதிகுரு வாற்சிறிது தோன்றும்
வைராகத் துறுதல்சதா சாரவிசா ரணையே.

(இ - ள்.) சாற்றரிய - சொல்லுதற்கரிய, சுவேச்சை - சுவேச்சையும், விசாரணை - விசாரணையும், தனுமானசி - தனுமானசியும், சத்வாபத்தி - சத்துவாபத்தியும், அசம்சத்தி - அசம்சத்தியும், பதார்த்தாபாவனை - பதார்த்தா. பாவனையும், மேல் - மேலான, துரியகாமியெனு ம்- துரியகாமியுமென்கின்ற, இவற்றினை - இவ்வேழினையும், மூதறிஞர் - பேரறிவையுடைய சத்துக்கள், விளங்கு-விளங்காநின்ற, சத்தஞானபூமிகளென்பர் - ஞானபூமிகளேழெனச் சொல்லுவார்கள், அவற்றுள் - அவைகளுக்குள், தோற்றிடும் - தோற்றுநின்ற, நான்மூடனாய் - யான்மூடனாகை, இருந்தகாரணமென் - இருந்தகாரணமென்ன, சுருதி-வேதவாக்கியத்தினாலும், குருவால்-ஆசிரியருபதேசத்தினாலும், அறிவலென - அறிந்துகொள்வேனென்று, நினைதல்-கருதுவதே, சுவேச்சை - சுவேச்சையாகும், மாற்றரிய - நீக்குதற்கரிய, சுருதிகுருவால் - வேதங்களினானுமாசிரியரானும், சிறிதுதோன்றும் - கிஞ்சித்துண்டான, வயிராகத்துறுதல் - வைராக்கிய பலத்தினாலுண்டாகும், சதாசாரம் - சதாசாரப்பிரவிர்த்தியே, விசாரணை - விசாரணையாம், எ-று. ஏ-ஈற்றசை.

ஞானபூமியென்றது ஞானம்விளைதற் கேதுவான ஸ்தானத்தை. ஆலென்பது சுருதியென்பதினுங் கூட்டப்பட்டது.

(ப - ம்.) நிஷ்காமபுண்ணியபரிபாகத்தாற் சுதந்தரமாயுதயமான ஞானம் அவ்வியத்தமா யிருந்ததைக்கொண்டு விடயங்கள் யாவையுந் துக்கமெனக்கண்டும் தத்தரிசனம் வியத்தப்படாதிருந்தது யாதுகாரணமென்பார் தோற்றிடுநான் மூடனாயிருந்தகாரணமென் எனவும், இவ்வறியாமையை நீக்குமேதுவைக்கொண்டு நீக்கக்கருதினனென்பார் சுருதிகுருவாலறிவல் எனவும், அங்ஙனமுள்ள துக்கத்தைநீக்கிச் சுகத்தை விரும்பினனென்பார் சுவேச்சை எனவும், மஹாவாக்கியத்தினாலும் பிரமோபதேசத்தினாலும் விளங்கும் பரமசுகஞ் சிறிதுதயமாமென்பார் சுருதிகுருவாற் சிறிது தோன்றும் எனவும், அதனாற் பிரமாதிபதந் துரும்பாகத்தோன்றும் நிராசையுண்டாமென்பார் வைராகத்துறுதல் எனவம், அதனால் ஆத்மாநாத்மவிவேகஞ்செய்து அனாத்மாவைநீக்கி யாத்மாவைப் பூரணமாக விசாரித்தானென்பார் சதாசாரவிசாரணை எனவுங் கூறினர்.

அ - கை.

இச்செய்யுளில் ஏனையவற்றுள் நான்கனிலக்கண முணர்த்துகின்றார்.

மருவலுறு சுவேச்சைவிசா ரணைவலியால் விடய
வலியறுத ருன்றனுமா னசியவற்றின் பயில்வால்

விரவுநன வாயவுல கினைக்கனவென் றெண்ணி
மெய்த்தவான் மாவுண்மை கருதல்சத்வா பத்தி
பரவலுறு முலகுதோன் ருதுசுழுத தியன்போற்
பகரறிவு மாத்திரையாய் நிற்றலசம் சத்தி
யொருவிவா சனையனைத்து மிகுதுயிலோன் போல
வுயிராநந் தத்தொடுங்கல் பதார்த்தாபா வனையாம்.

(இ - ள்.) மருவலுற - பொருந்தாநின்ற, சுவேச்சை-சுவேச்சையும், விசாரணை-விசாரணையுமாகிய விவ்விரண்டின், வலியால்-அப்பியாச பலத்தினால், விடயவலியறுதல் - விடயப்பற்று நீங்கலே, தனுமானசி - தனுமானசியாகும், அவற்றின்பயில்வால் - அம்மூன்றனப்பியாச பலத்தினால்,விரவு-கலந்திருக்கின்ற, நனவாயவுலகினை - சாக்கிரப்பிரபஞ்சத்தை,கனவென்றெண்ணி-சொப்பனமாக நினைத்து, மெய்த்தவான்மா - உள்ளதான வாத்மாவினது, உண்மைகருதல் - சத்தாமாத்திரத்தைச் சிந்திப்பது, சத்வாபத்தி-சத்வாபத்தியாம், பரவலுறும் - விரிந்திருக்கின்ற, உலகுதோன்ருது - சகத்தோற்றரவின்றி, சுழுத்தியன்போல - சுழுத்தியுடையவனைப்போல, பகர் - சொல்லாநின்ற, அறிவுமாத்திரையாய்-சின்மாத்திரமாய், நிற்றல்-நிற்பதே, அசம்சத்தி - அசம்சத்தியாகும், ஒருவிவாசனையனைத்தும் - சர்வவாசனைகளையும்நீக்கி, மிகுதுயிலோன்போல-காடநித்திரை யடைந்தவனைப்போல, உயிராநந்தத் தொடுங்கல் - ஆத்மாநந்தத்திலயிப்பதே, பதார்த்தாபாவனையாம் - பதார்த்தாபாவனையாம், எ—று, தான்-அசை.

விடயவலியறுதல் - விஷயாசக்தி நீங்குதலாம்; நீங்கவே,மனஞ் சிறுகுமெனக் கொள்க, ஆசக்தி - ஆசை.

(ப - ம்.) முற்கூறியவிரண்டு பூமியின் அப்பியாசமுதிர்ச்சியாலென்பார் சுவேச்சைவிசாரணைவலியால் எனவும், அதனால்விடயஅவாவிற்குச்சிரணம் வந்ததென்பார் விடயவலியறுதல் எனவும், அதனால் மனம்அணுத்துவமாய்க் குறகினதென்பார் தனுமானசிஎனவும், இங்ஙன மறிவு வளர்தலும் மனஞ் சிறுகலுமாகப் பழகி வருதலென்பார் அவற்றின் பயில்வால் எனவும், அதனாற் சாக்கிரத்தில் நிச்சயமாகத் தோற்றப்பட்ட திருசியங்களைச் சொப்பனத்தைப்போல மித்தையாகக் காண்பானென்பார் நனவாயவுலகினைக் கனவென்றெண்ணி எனவும், இங்ஙனமெண்ணிய விடத்து ஆத்மசத்தைத் தரிசித்தானென்பார் மெய்த்த வான்மா வுண்மை கருதல் சத்வாபத்தி எனவும், இவ்வனுபவத்தினாற் சொப்பனப் பிரபஞ்சம் மனதேயெனக் கண்டவிடத்து அச்சொப்பனந் தோன்ருது மனமாத்திரமாய் நிற்பதுபோல முன் கனவெனக் கண்ட உலகங் காண்பானாகிய திருக்கு மாத்திரமாய் நிற்குமென்பார் உலகுதோன்ருது சுழுத்தியன்போற் பகரறிவு மாத்திரையாய் நிற்றலசம்சத்தி எனவும், இங்ஙனம் நிற்றலால் வாசனாட்சயமாய்ப் பிரமாநந்தம் வெளிப்படுமென்பார் ஒருவிவாசனை யனைத்து மிகுதுயிலோன் போல வுயிராநந்தத் தொடுங்கல் எனவும், இப்போதாநந்த

மான விடத்துச் சர்வமுந் தன்மயமாய் விளங்குமென்பார் பதார்த்தாபா வனே எனவுங் கூறினர். (கசஎ)

அ - கை.

இச்செய்யுளில் ஏனையவொன்ற னிலக்கணமும் இப்பூமிகளிலுள்ள அனுபவத்தை யபரோட்சப் படுத்துதற்குச் சகாயமான சட்சமாதியி னிலக் கணங் கூறுவான் தொடங்கி அவற்றினமமு முணர்த்துகின்றார்.

உண்டிலையென் றும்லகங் கிருதிநிரங் கிருதி
யுறாமலறி வுருவாய வத்துவித பதத்துட்
கண்டதொரு வறுங்குடம்போ லுட்புறஞ்சூ னியமாங்
கதிதுரிய காமியா முபரதியை யடைந்து
கொண்டிலக லுறுதிரிசி யானுவே தம்பின்
கூறலுறு சத்தானு வேதநிரு விகற்ப
மெண்டருசட் சமாதிகளாம் புறமொ டகமென்னு
மிருபேத மடைந்தவற்றை முறையினிவண் மொழிவாம்.

(இ - ள்.) உண்டு - ஒன்றையுண்டெனவும், இலையென்றுமல்-இல்லை யெனவுஞ் சொல்லாமல், அகங்கிருதி - அகவிவகாரமும், நிரங்கிருதி - புற விவகாரமும், உறாமல்-தோன்றாமல், அறிவுருவாய - ஞப்திஸ்வரூபமாகிய, அத்துவிதபதத்துள் - அத்துவிதபதத்தில், கண்டது - வெளியிற் காணப் பட்டதான, ஒருவறுங்குடம்போல் - ஒரு வெறுங்கடத்தைப்போல, உட் புறம் - உள்ளும்புறம்பும், சூனியமாங்கதி-சூனியமா யிருக்குமிடமே, துரிய காமியாம் - துரியகாமியாகும், உபரதியை - மூற்கூறிய வுபரதியை, அடைந் துகொண்டு - அனுசரித்துக்கொண்டு, இலகலுறு - விளங்காநின்ற, திரிசி யானுவேதம் - திரிசியானுவித்தமும், பின்கூறலுறு - பின்சொல்லப்பட்ட, சத்தானுவேதம் - சத்தானுவித்தமும். நிருவிகற்பம் - நிருவிகற்பமுமென, புறமொடக மென்னும் - உட்புறமென்கிற, இருபேதமடைந்து-இருவகை ப்பேத மடைந்திருப்பதால், எண்டரு - கருதற்கியன்ற, சட்சமாதிகளாம்- ஆறுசமாதிகளாம், அவற்றை-அச்சமாதிகளை, முறையின்-நிரலே, இவண் - இவ்விடத்தில், மொழிவாம் - சொல்லுவாம், எ - று.

நிரகங்கிருதி யென்பது நிரங்கிருதியென விகாரமாயிற்று. புறமொ டகம் என்றமையின் புறத்தின்மூன்றும் அகத்தின் மூன்றுமாகச் சமாதியா றாம். இவ்வனுசந்தானம் திரிசியத்தை யனுசரித்து வருதலால் திரிசியானு வேதமெனவும்,திருக்குவானசத்தை யனுசரித்து வருதலால் சத்தானுவேத மெனவும், இவ்விரண்டையு மனுசரியாமற் சுவயமாய் விகற்பமின்றிச் சச்சி தானந்தமாய் வருவது நிருவிகற்பமெனவும், திரிசியத்திற் றன்னைக் காண் பது புறமெனவும், தேகாதி யகக்கரணத்திற் றன்னைக் காண்பது அகமென வுங் கொள்க.

(ப - ம்.) முற்கூறிய சிற்சுகானுபவத்தினல் சத்தசத்து, பாகியாந்தரம் முதலிய பேதமியாவுமின்றிச் சின்மாத்திரமான வத்துவித ஸ்வரூபத்தைத் தவிர மற்றொன்றுமில்லாததே துரியாதீத மென்பார் துரியகாமியாம் எனவும் கூறினர்.

சரியையாதி மூன்றுங்கடந்த ஞானபாதத்திற்குச் சாதனமான சுவேச்சை விசாரணை தனுமானசி யென்னு மூன்றும் அப்பியாச பூமியெனவும், சத்துவாபத்தி - அசம்சத்தி - பதார்த்தாபாவனை - துரியமென்னு நான்கும் அனுபவ பூமியெனவும், இவ்வனுபவ பூமிகளால் நிரலே பிரமவித்து - பிரமவரன் - பிரமவரியான் - பிரமவரிட்டனெனச் சீவன் முத்தர்களது தாரதம்மியங்களேற்பட்டன வெனவும், இப்பூமிகளின் அனுபவமுடைய புருடனுக்கு முற்கூறிய மூன்று பூமியுஞ் சாக்கிரமும், நான்காம்பூமி சொப்பனமும், ஐந்தாம்பூமி சுழுத்தியும் ஆறும்பூமி துரியமும் ஏழாம்பூமி துரியாதீதமுமாகிய பஞ்சாவத்தைகளா மெனவுமறிக.

(தா - ம்.) இவைகள் அப்பியாசத்திற் தாரதம்மியமா யிருப்பதன்றி யனுபவத்தினுந் தாரதம்மியமா யிருப்பதைக்கண்டு இவ்வவதிகட்கதீதமாக வேண்டிஇஞ்ஞான பூமியினிலக்கணங்களை யுணர்த்தியவாறும்.

அ - கை.

இச்செய்யுளிற் புறச்சவிகற்பசமாதியி னிலக்கண முணர்த்துகின்றார்.

கடாதிவிட யத்தினிலொன் றனைக்குறித்து நாம
கற்பனையோ டுருவமெனு மாயையதன் றிறத்தைத்
தடாதுவிடுத் தத்திபா திப்பிரிய மென்னுஞ்
சச்சிதா நந்தமாம் பிரமத்தின் றிறத்தை
விடாதனுசந் தானஞ்செய் திடுதலே புறத்து
மெய்த்திரிசி யானுவே தப்பெயர்கொள் கின்ற
கெடாததொரு சவ்விகற்ப சமாதியென லாகுங்
கிளந்தபுறச் சத்தானு வேதமது கிளம்பில்.

(இ - ள்.) கடாதிவிடயத்தினில் - கடமுதலிய விடயசமூகத்தில், ஒன்றனைக்குறித்து - யாதொன்றை யாவது குறித்து, நாமகற்பனையோடு-கற்பனாமத்துடன், உருவமெனும் - உருவமுமென்கின்ற, மாயையதன்றிறத்தை - மாயையின் அம்சமாகிய வவ்விரண்டையும், தடாதுவிடுத்து-தடையில்லாமனீக்கி, அத்திபாதிப்பிரியமென்னும் - அஸ்திபாதிப் பிரியமென்கின்ற, சச்சிதாநந்தமாம் - சச்சிதாநந்தமாகிய, பிரமத்தின்றிறத்தை - பிரமத்தின்அம்சத்தை, விடாது - இடைவிடாமல், அனுசந்தானம்-அப்பியாசம், செய்திடுதலே - செய்வதே, புறத்துமெய் - பாகியத்திலுள்ள, திரிசியானுவேதம் - திரிஸ்யானுவித்தமென்னும், பெயர்கொள்கின்ற - நாமம்பெற்றிருக்கின்ற, கெடாதது-நசியாததாகிய, ஒரு-ஒப்பற்ற, சவ்விகற்பசமாதி யென

லாகும்-சவிகற்பசமாதி யென்று சொல்லப்படும், இளந்த-முற்கூறிய, புறச் சத்தானுவேதமது-புறச்சத்தானுவித்தத்தை, இளப்பின்-கூறின், எ - று.

(ப - ம்.) காணப்பட்ட திருசியங்களில் மாயையின் தன்மையானநாம ரூபத்தை நீக்கிப் பிரமாம்சத்தால் யதார்த்தமாக விளங்குகிற சச்சிதாநந்த மாய்ப் பழகவேண்டுமென்பார் கடாதிவிடயத்தினில் அனுசந்தானஞ் செய் திடுதல்எனவும், அங்ஙனஞ் செய்தல் பாகியத்திலென்பார் புறத்து எனவும், அது திருசியத்தை யனுசரித்துவருதலென்பார் திரிசியானுவேதம் எனவும், அங்ஙனஞ்செய்தல் விடயங்களின் வேறுபாடென்பார் சவிகற்ப சமாதி எனவுங் கூறினர்.

(தா - ம்.) புறம்பிலுள்ள விடயங்களின் நாமரூப திருஷ்டி யின்றிச் சச்சிதாநந்த திருஷ்டியாகப் பழகவேண்டு மென்பதாம். (கசக)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையால் ஏனையவற்றுள் புறச்சத்தானுவே தமுதலிய மூன்றுசமாதியி னிலக்கண முணர்த்துகின்றார்.

சச்சிதா நந்தவுரு வாகுவதே பிரமந்
 தானெனவே தியானித்த லதுவாகு மென்க
விச்சமா திகள்பயின்ற வலியினாற் றோன்று
 மிரும்பிரமா நந்தநிலை தனின்மனஞ்சென் றொடுங்கி
நிச்சலமா யலையில்கடல் போலிருத்தல் புறத்து
 நிருவிகற்ப சமாதியா மனோகதகா மாதிக்
கச்சமறு கரிதானென் றெண்ணுதலுட் டிரிசி
 யானுவே தப்பெயர்கொள் சவ்விகற்ப சமாதி.

(இ - ள்.) சச்சிதாநந்த வுருவாகுவதே-சச்சிதாநந்த சொரூபமாவதே, பிரமந்தானெனவே-பிரமமேயென, தியானித்தல் - சிந்திப்பதே, அதுவாகு மென்க - முற்கூறிய புறச்சத்தானு வேதமென்றறிக, இச்சமாதிகள் - இவ் விருவகைச் சமாதிகளையும், பயின்றவலியினால் - அப்பியாசித்தபலத்தினால், தோன்றும்-உண்டாகின்ற, இரும்-மேன்மையுள்ள, பிரமாநந்தநிலை தனில்-பிரமாநந்த ஸ்தானத்தில், மனஞ் சென்றொடுங்கி - மனோலயமாய், நிச்சல மாய் - சலனமின்றி, அலையில் கடல்போல் - நிஸ்தரங்க சமுத்திரம்போல, இருத்தல் - இருப்பதே, புறத்து - பாகியத்திலுள்ள, நிருவிகற்ப சமாதி யாம் - நிருவிகற்ப சமாதியாம், மனோகத காமாதிக்கு - மனதின்கணுள்ள ராகத் துவேஷாதி விஷயங்களுக்கு, அச்சமறு - கனமான, கரிதானென்று - தானே சாட்சியென்று, எண்ணுதல் - சிந்திப்பதே, உள் - அகத்தினுள்ள, திரிசியானுவேதம்-திரிஸ்யானு வித்தமென்னும், பெயர்கொள்-நாமமுள்ள, சவ்விகற்பசமாதி - சவிகற்ப சமாதியாம், எ - று.

(ப - ம்.) முன்னரனுசந்தித்துவந்த சச்சிதாநந்தமே பிரமசத்தென அனுசந்தித்து வருதலே புறச்சத்தானுவேதம் எனவும், இவற்றால் உதய

மான ஆநந்தத்தில் மனங்கரைந்துநிற்றல் புறத்துநிருவிகற்பசமாதி எனவும், இத்தேகாதியந்தக் கரணங்களால்வருங் காமக்குரோதாதிகளின்சேட்டைக்குத் தான்சாட்சியாய்க் காண்பதை மனோகதகாமாதிக்குக்கரிதான் எனவும், இஃது அகவிடயத்தில் அனுசந்தானமாதலின் உட்டிரிசியானுவேதம்எனவும், அதுதனக்குவேறுபாடாயிருத்தலின் உட்சவ்விகற்பசமாதி எனவுங் கூறினர்.

(தா - ம்.) சச்சிதாநந்தமே பிரமமாகவும் அதன் சிந்தனையினாலுதயமான பிரமாநந்தத்தில் மனங்கரைவதும் அகத்திலுள்ள சகல தத்துவங்களுக்குந் தான் சாட்சியாயிருப்பதுமாகப் பழகவேண்டு மென்பதாம். (கரு0)

அ - ௯க.

இச்செய்யுளில் ஏனைய அகச்சத்தானு வேதமாதிய விரண்டு சமாதியிலக்கண முணர்த்துகின்றார்.

சங்கமறு சச்சிதா நந்தவொளி யுருவந்
 தானெனச்சிந் தித்திடலுட் சத்தானு வேதம்
பொங்குறுதன் னனுபூதி ரசந்தோன்று மதனாற்
 புகன்றதிரி சியஞ்சத்த மெனுமிரண்டு மகன்றே
யிங்கசைவி றீபமெனப் பந்தமற விருத்த
 லிலங்குமக நிருவிகற்ப சமாதியிவ்வா றுனுந்
தங்கலுற வொழுகுமியோ கிக்குமன மெங்குச்
 சரிக்குமாண் டாண்டெலாஞ் சமாதியென லாமே.

(இ - ள்.) சங்கமறு - அசங்க, சச்சிதாநந்தவொளியுருவம் - சச்சிதாநந்தசுயம்பிரகாசஸ்வரூபமே, தானெனச்சிந்தித்திடல் - நானெனச் சிந்திப்பதே, உட்சத்தானுவேதம் - அகச்சத்தானுவித்தசமாதியாம், பொங்குறு - விளங்காநின்ற, தன்னனுபூதிரசம் - சுவானுபூதிரசாவேசம், தோன்றுமதனால் - உண்டாவதனால், புகன்ற - கூறிய, திரிசியஞ்சத்தமெனும் - திரிசியானுவேதம் சத்தானுவேதமென்னும், இரண்டுமகன்று - இரண்டையும் விட்டு, இங்கு - இவ்விடத்து, அசைவிறீபமென - அசைவற்ற சித்திரதீபத்தைப்போல, பந்தமறவிருத்தல் - பந்தநீங்கிநிற்பதே, இலங்கும் - விளங்காநின்ற, அகநிருவிகற்பசமாதி - அகநிருவிகற்பசமாதியாம், இவ்வாறுனும் - இச்சட்சமாதிகளினும், தங்கலுறவொழுகும் - தரித்து நடக்கின்ற, யோகிக்கு - யோகீச்சுரனுக்கு, மனம் - மனமானது, எங்குச்சரிக்கும்-எங்கெங்கே சஞ்சரிக்கின்றதோ, ஆண்டாண்டெலாம் - அங்கங்கெல்லாம், சமாதியெனலாம்-சமாதியென்று சொல்லலாம், எ—று. ஏ-ஈற்றசை.

(ப - ம்.) சங்கத் தியாகமாய்த் தனித்து விளங்கிய சச்சிதாநந்தமே ஆத்மாவெனவும், இவ்வாத்ம சிந்தனம் அகத்தி லனுசரித்துவருதல் அகச்சத்தானுவேதம் எனவும், அதனாலுண்டான ஆத்மாநந்தத்தில் முன்பழகின

விரண்டும்நீங்கி மனங்கரைந்து நிச்சலமாய் நிற்பதே அகநிருவிகற்ப சமாதி எனவும், இதனால் இவன்மனம் ஆனந்தவடிவமாய் நிற்றலின் சஞ்சரிக்குமாண்டாண்டெலாஞ்சமாதி எனவுங்கூறினர். சங்கம்-கூட்டம்.

வினா:—திரிசியானு வேதத்தையுஞ் சத்தானுவேதத்தையும் சவிகற்ப சமாதியெனச் சொல்வது யாதுபற்றி?

விடை:—நாமரூபவடிவ திருசியத்தை விகற்பித்துச் சச்சிதாநந்தத்தைக் கிரகித்தலினாலும் சச்சிதாநந்தமே பிரமமெனச் சிந்திக்கும்பேதம்இருத்தலினானும் இவ்விரண்டிற்கு மொரே நாமம் வந்ததென்க.

மனம் ஆனந்தவடிவமா மென்பது "மனநிறைத்திட னமுதமாய்நிறைந் திடும்வையந், தனதுதாட்செருப் புலகெலாந் தோன்முச்சுந் தரம்போல்" என்று வாசிட்டங் கூறுவதாலறிக.

(தா - ம்.) புறச்சத்தானுவித்த சமாதி மூன்றுந் தற்பதசோதனையாம். அவற்றுள் முன்னையவிரண்டும் வாச்சியார்த்தமான வீசனையும், பின்னையவொன்றும் லட்சியார்த்தமான பிரமத்தையும் விளக்கும். அகச்சமாதி மூன்றுந் தொம்பதசோதனையாம். அவற்றுள் முன்னையவிரண்டும் வாச்சியார்த்தமான ஜீவனையும், பின்னையவொன்றும் லட்சியார்த்தமான கூடஸ்தனையும் விளக்கும். இந்த லட்சியார்த்தத்தின் ஒருமையனுபவமுள்ளவனே சதா சமாதியை யுடையவனாவ னென்பதாம். (கருக)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய சமாதிகளால் அனுபவமானஞானத்திற்குப் பலம் முன்னர்ப் பொதுவாகக்கூறினதன்றி யதன் சிறப்பைத் துக்காபாவ முதல் நான்காகத் தொகுத்தும் அந்நான்கனுள் முதலொன்றை நான்காக வகுத்துங் கூறுவான் றொடங்கி அவற்றினமமும் இகலோக துக்கவிலக்கணமு முணர்த்துகின்றார்.

தக்கமா ஞானபல நான்குதுக்கா பாவஞ்
சருவகா மாப்தியொடு கிருதகிருத் தியமே
தொக்கபிராப் திப்பிராப் பியங்களெனு மவற்றுட்
சொல்லியதுக் காபாவ மிகபரத்தா லிரண்டாம்
பொய்க்குமோர் தூலவுடம் பெழிலொழிதீ நாற்றம்
புகுபிணிகண் முதலனவுங் காரியதே கத்து
மிக்ககா மாதியுங்கா ரணத்தினிலவ் வாதி
வியாதிகட்கு வித்தாம்வா சனையுமிகத் திடும்பை.

(இ - ள்.) தக்க – தகுதியான, மாஞானபலம் - பூரணஞானத்திற்குப் பலமானது, துக்காபாவம் - துக்காபாவமும், சருவகாமாப்தியொடு-சர்வகாமாப்தியும், கிருதகிருத்தியம் - கிருதகிருத்தியமும், தொக்க - தொகுத்திராநின்ற, பிராப்திப் பிராப்பியங்களெனும் - பிராப்திப்பிராப்பியமுமென்கின்ற, நான்கு - நான்காம், அவற்றுள் - அந்நான்கனுள், சொல்லிய – முற்

கூறிய, துக்காபாவம் - துக்காபாவமானது, இகபரத்தால் - இகலோக பரலோகமென்னும் பேதத்தினுல், இரண்டாம் - இருவகையாம், (அவற்றுள்) பொய்க்கும் - மித்தையாகிய, ஓர் தூலவுடம்பு - ஒப்பற்ற தூலதேகத்தில், எழிலொழி - குரூபத்துவமும், தீநாற்றம்-துர்க்கந்தமும், புகு - வராநின்ற, பிணிகண் முதலனவும்-வியாதி முதலானவைகளும், காரியதேகத்து - சூட்சுமதேகத்தில், மிக்க - மிகுந்த, காமாதியும் - காமக்குரோதாதிகளானவாதியும், காரணத்தினில்-காரணதேகத்தில், அவ்வாதி வியாதிகட்கு-அங்ஙனங் கூறிய * வாதிவியாதிகளுக்கு, வித்தாம் - பீசமான, வாசனையும், சம்ஸ்காரமுமாகிய திரிவித சந்தாபமே, இகத்திடும்பை - இகலோக துக்கமாம், எ - று, ஏ - அசை.

துக்காபாவம் - துக்கமின்மை. சர்வகாமாப்தி - யாவற்றினும் நிறைந்திருக்கின்றசுகத்தையடைதல். கிருதகிருத்தியம்-செய்யவேண்டிய சாதகங்களனைத்துஞ் செய்துமுடிந்தது. பிராப்திப் பிராப்பியம் - அடையவேண்டிய பொருளனைத்தையு மடைதல். துக்காபாவ மிகபரத்தா லிரண்டாம் என்றமையின் துக்கமு மங்ஙனமே யிரண்டாயின. பிணிகண் முதலனவும் என்றமையின் வாதபித்த சிலேத்துமங்களாலும், விஷஸ்பரிச முதலாயினவற்றிற்குக் கீறிப்பாய்ச்சல் முதலானவற்றுலுந் தூலத்திற்கு வருந் துன்பங்களும், காமாதியும் என்றமையின் இராகத்துவேஷங்களாற் சூக்குமத்திற்கு வருந்துன்பங்களும், வித்தாம் வாசனையும் என்றமையின் இவ்விரண்டிற்குங் காரணமானவாசனையாற் காரணதேகத்திற்கு வருந் துன்பங்களு மெனக் கொள்க. கொள்ளவே, இத்தூலாதி மூன்றுதேகத்தால் வருந்துன்பங்களேயிகலோக துக்கங்க ளென்பதாயிற்று.

(தா-ம்.) இகலோக துக்காபாவம் வருவிப்பான் கருதி யிவ்விகலோக துக்கம் நீங்கு நிமித்த மிம்மூன்று சரீரங்களால் வருந்துன்பங்களைத் தரிசிப்பித்தவாறும். (கஉ௨)

அ - கை.

இச்செய்யுளில் இகலோக துக்காபாவமும் பரலோகதுக்கமுமாகிய விரண்டனிலக்கண முணர்த்துகின்றுர்.

மித்தையெனு மாயாகா ரியவுடம்பா திகளின்
வேருய துரியஞா னத்தின்மே லாக
வைத்தவொரு போகபோத் திருக்களிலா மையினுன்
வாஞானிக் கவ்விடும்பை மூன்றுமிலா திருத்தல்
பொய்த்தவிக லோகதுக்கா பாவமென லாகும்
புண்ணியம்வந் தென்றுபோம் பாவமென நின்ற
சித்தமுறு சிந்தனையே பரலோக துக்கந்
தெரியினெனப் புகன்றிடுவர் திருக்கறுநல் லறிஞர்.

* ஆதி - மானசதாபம் (துன்பம்); வியாதி - தேகதாபம்.

(இ - ள்.) மித்தையெனும் - மித்தையென்று சொல்லப்படுகின்ற, மாயாகாரியம் - மாயையின் காரியமான, உடம்பாதிகளில் - தூலதேக முதலியவற்றிலும், வேறாய - வேறான, துரியஞானத்தின் - பிரத்தியகாத்மாவின் ஞானத்தின் பின்னர், மேலாகவைத்த - பாரமார்த்திகமாயிருக்கின்ற, ஒருபோகம் - ஒருபோகமும், போத்திருக்கள் - அப்போகத்தை யனுபவிக்கும் போக்தாக்களும், இலாமையினான் - இல்லாமையினால், வரஞானிக்கு - மேலான ஞானவானுக்கு, அவ்விடும்பை மூன்றும் - முற்கூறிய அத்துக்கத்திரயங்களும், இலாதிருத்தல் - சம்பந்த மில்லாதிருப்பதே, பொய்த்த - மித்தையாகிய, இகலோக துக்காபாவ மெனலாகும் - இகலோக துக்கநிவிர்த்தியென்று சொல்லப்படும், புண்ணியம் - புண்ணியமானது, வந்து - என்றைக்கு வருமோ, பாவம் - பாவமானது, என்றுபோமென நின்ற - என்றைக்குப் போகுமோ வென்கின்ற, சித்தமுறு சிந்தனையே - மனதிலுள்ள வாலோசனையே, பரலோக துக்கந் தெரியினென - விசாரிக்குமிடத்துப் பரலோக துக்கமென்று, புகன்றிடுவர் - சொல்லுவார்கள், திருக்கறு - குற்றமற்ற, நல்லறிஞர் - சுகபோதத்தையுடைய சத்துக்கள், எ - று.

வரும் என்பது வந்தெனத் திரிந்துநின்றது. ஐயவோகாரங்கள் தொக்குநின்றன.

வினா:—பரலோக துக்கத்தைக் குறித்து வந்த பாவவெறுப்பும் புண்ணிய விருப்புந் துன்பமாயினவா றென்னை ?

விடை:—இங்ஙனமிவற்றைக் குறிக்கும்போதே வருமோ வாராதோவென மனத்திற் கையமாதலினானும் அங்ஙனங்கிடைப்பினும் அதுவும் இகலோக துக்கத்தைப்போலத் தூலதேகத்திற்குச் சுரமாதிநோய்களினானும், சூட்சுமதேகத்திற்குக் காமநோயாதிய வனிதாதிய போகங்களினாலும், காரணதேகத்திற் காதிவியாதியாதிய வாசனைகணிறைந்திருப்பதினானுந் துன்பமேயாமென்க.

வினா:—அற்றேல், வனிதாதிபோகங்களை யனுபவிக்கு மின்பமுந் துன்பமாயினவா றென்னை ?

விடை:—துக்கரூபமான விஷய வின்பமுந் துக்கமே யன்றி மற்றொன்றாகாமையாற் றுக்கமேயா மென்க.

(தா - ம்.) துன்ப வடிவமான சரீரத்திரயங்களையும் அவற்றை யனுபவிக்கும் அகங்காரான்மாவையும் நேதிகளைந்து மேற்சேடித்திருந்த பிரத்தியகான்மசொரூப சுகத்திலிருப்பதே இகலோக துக்க பாவமெனவும், இம்மையிற்செய்த பாவமெங்ஙன நீங்கும் மறுமைக்குவேண்டிய புண்ணியமெங்ஙனமுண்டாகுமெனக் கருதிச் சர்வப்பிராயச் சித்தமுஞ் செய்வதனோடு தேகாந்தத்திற் பரலோகத்தை விரும்பி வருந்துவதே பரலோக துக்கமெனவுமுணர்த்தியவாறும். (௧௫௬)

அ - கை.

இச்செய்யுளிற் பரலோக தூக்காபாவ விலக்கண மூணர்த்துகின்றார்.

ஞானநிலை யடைதலுந்தா மரையிலையி னீர்போன்
ஞானியிரு வினையுமுறா மையினுலிந் தனத்திற்
றீநணுகு மனலில்விற கிலாததுபோற் கருமச்
செயலிலவ னுமவனி லஃதிரா மையினுன்
மானழலுண் வனத்திலுறா ததுபோல ஞான
மயனைவினை யாவுமுறா மையினுலச் சிந்தை
தானவனி லெழாதிருத்த றனையுரைப்பர் மேலோர்
தக்கபர லோகதுக்கா பாவமென வன்றே.

(இ - ள்.) ஞானநிலை - ஆத்மஞான நிச்சயத்தை, அடைதலும்-அடைந்தமாத்திரத்தில், தாமரையிலையினீர்போல் - கமலபத்திரோதகம்போல, ஞானி - ஞானவானுக்கு, இருவினையுமுறாமையினுல்-கர்மதொந்தமின்மையினுல், இந்தனத்திற் றீநணுகும்-காட்டத்தி லக்கினியிருக்கும், அனலில் - அவ்வக்கினியில், விறகிலாததுபோல் - காட்டமில்லாததுபோல,கருமச்செயலில் - கன்மத்துவயவிவகாரத்தில், அவனும்-அவ்விவேகியிருப்பன், அவனில்-அவ்விவேகியினிடத்தில், அஃது-அக்கருமத்துவயம், இராமையினுல்-இல்லாமையினுல், மான் - மிருகம், அழலுண் - அக்கினியினுற் றபிக்கப்படுகின்ற, வனத்தில் - கானகத்தில், உறாது - சேராது, அதுபோல - அதுபோல, ஞானமயனை - ஞானசொரூபனை, வினையாவும்-சகலகன்மங்களும், உறாமையினுல் - பொருந்தாமையினுல், அச்சிந்தை - அச்சிந்தையானது, அவனில் - அந்த ஞானியினிடத்தில், எழாதிருத்தறனை - உண்டாகாதிருப்பதை, மேலோர் - மேலான சத்துக்கள், தக்க - தகுதியான, பரலோக துக்காபாவமென-பரலோக துக்காபாவமென்று, உரைப்பார்-சொல்லுவார்கள், எ - று. தான் - அன்று, ஏ - அசை.

மான் என்றமையின் இனம்பற்றிப் பறவை முதலானவையுங் கொள்க.

ஞானிக்குக் கமலபத்திரத்தையும், அக்கினியையும், அழலுண் வனத்தையும், வினைக்குச்சலத்தையும், விறகையும், மானையு முவமித்தவாறும்.

வினு:—இங்ஙனங் கூறியவினைகளெவ்வாறு நீங்கும்?

விடை:—அக்கினியினுலெரிக்கப்பட்ட விறகு அவ்வக்கினிமயமாய் நீங்கினதுபோல, முன்னுள்ள சஞ்சிதவினை ஞானத்தாலெரிக்கப்பட்டு ஞானமயமாய் நீங்கிற்றென்க.

வினு:—பின்னுள்ள ஆகாமியத்தால் வரும் வினைகள் நீங்குவதெங்ஙனம்?

விடை:—காடாக்கினியா யெரிகின்றவனத்தில் மிருகாதிகளுண்டாத லும் வருதலுமில்லையானாற்போல, ஞானமயமாய்ப் பிரகாசிக்கின்ற சத்துக்களிடத்தில் வினைகளுண்டாதலும் வருதலுமில்லையாமென்க.

வினா:—அற்றேல், அவ்வினைகளெரியு மென்றும் வாராவென்றுங்கூறினமையின் அவற்றின் சொரூபமென்னை?

விடை:—அவை தமது தொழிலேயன்றி யவற்றிற்கோர் சொரூபமின்றென்க. எனவே, அவை தமது தொழிலாதலின் தமது சங்கற்ப நீங்கவே நீங்குமெனவும், அந்நீக்கமே ஞானவியாபகமாய் விளங்குமெனவும், அங்ஙனம் விளங்கவே யிவ்வினைகளுண்டாதற் கேதுவின்றெனவுங்காண்க.

வினா:—பிராரத்தவினை யனுபவித்துத்தீரவேண்டு மென்ப தென்னை?

விடை:—அவ்வினை ஞானோதயமாதற்குமுன்னரே யமைந்து உடலிருப்பிற் கேதுவா யிருத்தலினென்க.

வினா:—அற்றேல், அதனாலுண்டாகும் இருவினைகள் நீங்குவ தெங்ஙனம்?

விடை:—அவ்விருவினைகளும் இவனைப்புகழ்வார்பாலொன்றும் இகழ்வார்பாலொன்றுமாய் நீங்குமென்க.

வினா:—அற்றேல், இவையிங்ஙனமிருக்க, வினைகளை யொருமுதலாக நினைத்து இவனை நீங்கிற் புறத்திற்சேருமெனச் சிலர் கூறுவதென்னை?

விடை:—அவ்வினைகள் பரிபூரணசொரூபமான தன்னிடத்தில் ஏகதேச சங்கற்பத்தா லுண்டானவையென் றறிந்து அவற்றைத் தனது நிருவிகற்பத்தாற் கரைக்கத்தெரியாத சிற்றறிஞர் அங்ஙனங் கூறுவரென்க.

(தா-ம்.) இங்ஙனங்கூறிய புண்ணிய பாவமென்னு மிருவினைகளும் நீங்கிய விடத்து அவற்றிற் சிந்தையெழாது சின்மாத்திரமாய் விளங்குவதே பரலோக துக்காபாவ மெனவும் இந்நான்கினாற் றுக்கநிவிர்த்தியான சுகத்திலிருப்ப னெனவுங் கூறியவாறும். (கருச)

அ-கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையாற் சர்வகாமாப்தியி னிலக்கண முணர்த்துகின்றார்.

எல்லாவாழ் வினையுமுறுஞ் சார்வபௌ மாதி
யிரணியகர்ப் பாந்தமாய் மேன்மேல்வேண் டுற்ற
நல்லாநந் தங்களெலாம் பற்றிலா வறிஞ
னணுகுதலான் ஞானங்கொண் டறிசிவத்தின் கூறாய்த்
தொல்லாநந் தங்களெலா நிற்கையினா லவற்றுக்
துவமிலகண் டாநந்த சித்திதோன் றுதலே

பொல்லாத வினைப்பகையைக் கடந்தபெருந் தவர்கள்
புகன்றிடுவர் சர்வகா மாப்தியென வன்றே.

(இ - ள்.) எல்லாவாழ்வினையுமுறும் - சர்வைசுவரிய சம்பன்னனுன, சார்வபௌமாதி - சார்வபௌமன் முதலாக, இரணியகர்ப்பாந்தமாய் - இரணியகர்ப்பனீருக, மேன்மேல்-உத்தரோத்தரமாய் (முறையே ஒன்றினென்று நூறுடடங் கதிகமாக), வேண்டுற்ற - விரும்பத்தக்க, நல்லாநந்தங்களெலாம் - சிறந்த வாநந்தங்களனைத்தும், பற்றிலா - பற்றற்ற, அறிஞன் - ஞானவான், நணுகுதலால் - அடைந்திருப்பதனுல், ஞானங்கொண்டு - ஞானத்தினுல், அறி - அறியத்தக்க, சிவத்தின்கூறாய் - பிரமாம்சங்களாய், தொல்லாநந்தங்களெலாம் - மூற்கூறிய பழமையானவாநந்தங்களனைத்தும், நிற்கையினுல் - இருப்பதனுல், அகற்கு - அவ்விவேகிக்கு, துவமில் - இரண்டற்ற, அகண்டாநந்தம் - அகண்டாநந்தாம்சமான, சித்தி தோன்றுதலே - சித்தியுண்டாவதே, பொல்லாத - ஈனமான, வினைப்பகையை - கன்மவிகலை, கடந்த-செயித்த, பெருந்தவர்கள்-மாதவர்கள், சர்வகாமாப்தியென - சர்வகாமாப்தியாமென்று, புகன்றிடுவர் - சொல்லுவார்கள், எ-று. அன்று, ஏ - அசை.

சார்வபௌமாதி இரணியகர்ப்பாந்தமென்றது துவாதசவாநந்தங்களை. அவையாவன: மனுஷாநந்தம், மனுஷகந்தர்வாநந்தம், தேவகந்தர்வாநந்தம், பிதுராநந்தம், ஆஜான தேவாநந்தம், கருமதேவாநந்தம், தேவாநந்தம், இந்திராநந்தம், பிரகஸ்பதியாநந்தம், பிரஜாபதியாநந்தம், விராட்டாநந்தம், இரணியகர்ப்பாநந்த மென்பனவாம்.

பிரசாபதியை விராட்டிலடக்கி * ஏகாதசமாகக் கூறுவது முண்டு. சார்வபௌமன்முதற் பிரகஸ்பதி யீருன வொன்பதுஞ் சீவர்சளனுபவிக்கு மாநந்தமும், ஏனையமூன்று மீசுரர்களனுபவிக்கு மாநந்தமுமாம். பிரமாநந்தசமுத்திரத்தில் இவ்வாநந்தங்க ளனைத்துந் தரங்கபுற்புதபேனதிவலைகளா யிருத்தலின் சிவத்தின்கூறு எனப்பட்டது. இவ்வாநந்தங்க ளனைத்துந் தானுயிருக்கின்றஞானி இப்பிரமாம்சமான வாநந்தங்களனைத்திற்கும் அதீதமான நிரதிசயாநந்தமாய் நிற்றலின்,அகண்டாநந்த சித்தியையுடையவனென்பதாயிற்று. ஈசரிலந்தரியாமியைக் கூறுதொழிந்தது மேற்பிரமத்திற் கடுத்தபடியாய் நிற்றலினுனென்க.

(தா - ம்.) கிஞ்சிஞ்ஞத்துவஞ் சர்வஞ்ஞத்துவங்களிலுண்டரன வாநந்தங்களனைத்தையுந் தனதம்சமாகக் கண்டு அவற்றிற்கதீதமான நிரதிசயாநந்தமாயிருத்தலே சர்வகாமாப்தியென விளக்கியவாறும். (கருகு)

* "மனுடன் மனுடகந் தருவன் றேவகந் தருவனெண் பிதிரோடே, பனுமா ஜானர்கள் கருமத் தேவர்கள் பகர்முக் கியரிந் திரனுசான், கனமார் பிரஜா பதியென் விராட்டுபொன் கர்ப்பப் பிரமனென் றின்னோர்கள், பினவா நந்தங்க ளுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிரமாநந்தம்" என்று கைவல்லியநவநீதங் கூறுவதிங் கறியத்தக்கதாம்.

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையாற் கிருதகிருத்தியத்துவ விலக்கணமுணர்த்துகின்றார்.

தத்துவஞா னத்திற்கு முன்னமீங் கடையத்
தக்கவிட்டம் பெறவநிட்ட வொழிவிற்கு வேண்டி
வைத்தவுழ வாதிகளுந் துறக்கமுதல் பெறற்கு
மகமுதலா யினவுமுத்தி சாதனமா ஞான
சித்தியுற மிகுசவணா திகமுமறி ஞர்க்குச்
செய்வனவாந் தத்துவஞா னத்தின்பின் குடும்ப
புத்தியொடு பலபோகத் திச்சையிலா மையினாற்
புகன்றவுழ வாதிதொழி லியாவுமிலை யாமால்.

(இ - ள்) தத்துவஞானத்திற்கு - தத்துவஞான மடைதற்கு, முன்னம் - முன்னரே, ஈங்கடையத்தக்க - இவ்விகத்திலடையத்தக்க, இட்டம் பெற - இஷ்டப்பிராப்திக்கும், அநிட்டவொழிவிற்கு - அனிஷ்ட நிவிர்த்திக்கு மேதுவாக, வேண்டி - விரும்பி, வைத்த - நியமமாய் வைத்திருக்கின்ற, உழவாதிகளும், கிருஷியாதிகளும், துறக்கமுதல் - சுவர்க்காதி பதங்களை, பெறற்கு - அடையும் பொருட்டு, மகமுதலாயினவும் - யாகோபாசனாதிகளும், முத்திசாதனமாம் - மோக்ஷசாதனமாகிய, ஞானசித்தியுற - ஞானமடையும் பொருட்டு, மிகுசவணாதிகமும் - மேலான சிரவணாதிகளும், அறிஞர்க்கு - விவேகிகட்கு, செய்வனவாம் - செய்யத்தக்கனவாம், தத்துவஞானத்தின்பின் - தத்துவஞானம்வந்தபின்பு, குடும்பபுத்தியொடு - சம்சாரானுபவத்துடன், பலபோகத்து - பலபோகங்களில், இச்சையிலாமையினால் - அவாவின்மையினால், புகன்ற - முற்கூறிய, உழவாதிதொழிலியாவும் - கிருஷியாதியவிருத்திகளனைத்தும், இலையாம் - இல்லையாம், எ-று, ஆல் - அசை.

உழவாதிகளும் என்றமையின் வாணிப கோபாலன மாதிகளும், மகமுதலாயினவும் என்றமையின் உபாசனை, திரிவேணி சங்கமத்தின் மரித்தல் முலானவைகளும், சவணாதிகமும் என்றமையின் மன்னநிதித்தியாசன சமாதியுங்கொள்க. யாவுமிலை என்றது வருணாசிரம தருமங்களான விதிநிடேதரூபமாதியகன்மங்களை. (கடுசு)

அ - கை.

இதுவுமது.

வந்துசிறு சாளரத்திற் றோற்றுபர மாணு
வான்கதிரின் மிகுமொளியிற் றோற்றிடா வாபோ
னந்தலுறு சிற்றறிஞன் விடயமாங் கரும
ஞானியிடை தோன்றாமை யாலியற்றத் தக்க
முந்துமக முதலனவிங் கிலைபிரமா னந்த
முதலுண்மை யெய்தலாற் சவணாதி யெல்லாஞ்

சிந்தையுற வியற்றுமள வாகுமதா லிதுவே
செப்பியவக் கிருதகிருத் தியத்துவமென் றறியே.

(இ - ள்.) வந்து - ஆகாயத்தினின்றிறங்கி, சிறு சாளரத்தில் - சிறிய பலகணிவாயலில், தோற்று - தோற்றுகின்ற, பாமாணு - பரமாணுக்கள், வான்கதிரின் - மேலான சூரியனது, மிகுமொளியில் - மிகுந்த பிரகாசத்தில், தோற்றிடாவாபோல் - தோன்றுவாறுபோல, நசலுறு - நசித்தற்கியைந்த, சிற்றறிஞன் - புல்லறிஞனுக்குள்ள, விடயமாங்கருமம் - விடய வியாபாரங்களனைத்தும், ஞானியிடை - மூதறிஞனிடத்து, தோன்றுமையால் - தோற்றுதபடியால், இயற்றத்தக்க - அப்பியாசிக்கத்தக்க, முந்துமக முதலன - முற்கூறியயாகோபாசனுதிகள், இங்கிலை-இவ்விடத்தில்லை, பிரமாநந்தம் - பிரமாநந்தமாகிய, முதலுண்மை - முதன்மையான தத்துவத்தை, எய்தலால் - அடைந்திருத்தலினல், சவணுதியெல்லாம் - சிரவணுதித்திரயங்களும், சிந்தையுற - மனதிற்பொருந்த, இயற்றுமளவும் - அப்பியாசிக்குமட்டும், ஆகும் - ஆம், அதால் - அதனல், இதுவே - இதுவே, செப்பிய - முற்கூறிய, அக்கிருதகிருத்தியத்துவமென்று - அக்கிருதகிருத்தியத்துவமென, அறி - அறிவாயாக,—எ - று. ஏ - ஈற்றசை.

சிற்றறிஞன் எனவே பேரறிஞனையுங் கூட்டி ஜீவேசகருமமெனக் கொள்க. ஞானியென்றது இப்பேதஞான மின்றிச் சுத்த சைதன்னிய சொருபமாய் விளங்குகின்றவனே. சிந்தையுறவியற்றுமளவு என்றது சவணுதியானசாதனங்கள் சாத்தியமாகிற பரியந்தமேயன்றி மேல் வேண்டுவதின்றெனலை.

(தா-மீ.) இகபோகநிமித்தந் தேகயாத்திரைக்கு வேண்டிய உழவாதிகளும்,பரபோகநிமித்தம் இலிங்கதேகயாத்திரைக்கு வேண்டியயாகாதிகளும், நிருவாணசுகநிமித்தம் ஆத்மயாத்திரைக்கு வேண்டிய சிரவணுதிகளும் ஞானமுண்டாயபின்னர் யாவுந்தன்மயமாய் விளங்கலின் இவையனைத்துஞ் செய்துஞ்செய்யாமற் சுயமாய்ப்பிரகாசித்தலே கிருதகிருத்தியத்துவமெனத் தரிசிப்பித்தவாறும். (கடுஎ)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறைபான் பிராப்திப்பிராப்பிய விலக்கணமும் மேற் சாட்சாத்கார மிருவிதமாகக் கூறுவான்றொடங்கி யவற்றி னுமமும் உணர்த்துகின்றூர்.

முற்றலுறு விசிட்டபுண் ணியபரிபா கந்தான்
முத்திவிருப் பரியகுரு வழிபாடு பெருநூல்
வெற்றிதரு சவணுதி யறிவறியா மைகளின்
விவேகமிகு மஞ்ஞான வழிவொடுதன் னுண்மை
பெற்றசமு சாரதுக்க நிவிர்த்திநிசா நந்தப்
பேறெய்த லேபிராப் திப்பிராப் பியமாம்

பற்றுமுயர் முத்திவகை யிரண்டாகு மவைதாம்
பகர்சீவன் முத்தியொடு விதேககைவல்யம்.

(இ - ள்.) முற்றலுறு - முற்றுப்பெற்ற, விசிட்ட - விசேடமான, புண்ணியபரிபாகம் - புண்ணியபரிபாகமும், முத்திவிருப்பு - அதனல் முமுட்சுத்துவமும், அரிய - கிடைத்தற்கரிய, குருவழிபாடு - அதனலாசிரியரை வழிபடுதலும், பெருநூல் - அதனற் பிரபலச் சுருதியின், வெற்றிதரு - அனுச்மஜெபத்தைத்தராநின்ற, சவணுதி - சிரவணுதித்திரயங்களும், அறிவறியாமைகளின் - அதனு லாத்மாநாத்மாக்களைப் பகுத்தறிகின்ற, விவேகமிகும் - அறிவுவளர்தலும், அஞ்ஞானவழிவொடு - அதனலஞ்ஞானநாசத்துடன், தன்னுண்மை - ஆத்மசாட்சாத்காரம், பெற்ற - பெறுதலும், சமுசாரதுக்கநிவிர்த்தி - அதனல் முன்னமடைந்த சமுசார துக்கநிவிர்த்தியும், நிசாநந்தப்பேறு - அதனற் சுயாநந்தப்பேறும், எய்தலே - அடைதலே, பிராப்திப்பிராப்பியமாம் - முற்கூறிய பிராப்திப்பிராப்பியமாம், பற்றும் - இங்ஙனம் பெறும், உயர் முத்திவகை - மேலானவீட்டின்றன்மை, இரண்டாகும் - இரண்டுவிதமாம், அவை - அவையாவன, பகர் - சுருதிசொல்லாநின்ற - சீவன் முத்திபொடு - சீவன்முத்தியும், விதேககைவல்யம் - விதேகமுத்தியுமாம், எ - று. தாம் - அசை.

சீவன்முத்தி - சீவன்சிவமாக விளங்குதல்; விதேககைவல்லியம், நாமரூபரகிதமான ஞானவடிவமாதல். பெற்ற - தொழிற்பெயர்.

(தா - ம்.) புண்ணிய பரிபாகமுதற் சம்சாரதுக்க நிவிர்த்தியீறன தசவித பதங்களையடைந்து அவற்றைநீக்கி நிரதிசயாநந்தத்தையடைதலே பிராப்திப்பிராப்பிய மென்பதாம். இங்ஙனங் கூறிய துக்கநிவிர்த்தியும் அதனல் தடையற்றவானந்தமும், அதனற் செய்யவேண்டிய கருமஞ்செய்து முடிந்ததும் அதனு லடையவேண்டிய பதத்தையடைந்ததும் ஆகிய விந்நான்குமே முற்கூறிய ஞானத்திற்குப் பலவிசேஷ மென்பதாம். (கருஅ)

அ - கை.

இச்செய்யுளில் ஞானபலம்பெற்ற மகான்களைச் சீவன்முத்தர் விதேகமுத்தரென விருவிதமாகக் கூறுவான் ரெடங்கி முன்னர்ச் சீவன்முத்தரிலக்கண முணர்த்துகின்றூர்.

அறிவுடையோர்க் ககமான்மா வொடுவருசம் பந்த
மகறலினுற் பிறருடல்போற் றன்னுடலந் தனிலு
முறுதிதரு மபிமான மின்மையே யாகி
யுண்ணுமனு பவவொப்பால் வருபிரா ரத்த
வறுநுகர்வுண் டாஞ்சுழுத்திப் பாலாதி போல
மந்தானு சத்தான மாதலிற்றே காதி
செறியபிமா னங்கழன் றுங் கடமுதித்துஞ் சுழலுஞ்
திகிரிபோல் வாதனையா லுறல்சீவன் முத்தி,

(இ - ள்.) அறிவுடையோர்க்கும் - ஞானவான்களுக்கும், அகமான்மாவொடு - அஞ்ஞானிகளுக்கும் (உடனிகழ்ச்சியாய்); வருசம்பந்தம் - வராநின்ற வன்னியோன்னிய சம்பந்தம்சமானமாயிருக்கினும், (ஞானவான்களுக்கு) அகறலினுல் - இருதயக்கிரந்தி நீங்கினதிஞல், பிறருடல்போல் - பரசரீரம்போல, தன்னுடலந்தனிலும் - தனது தேகத்தினும்,உறுதிதரும்- திடமான, அபிமானமின்மையாகி - அபிமானமின்றி, உண்ணும் - புசிக்கின்ற, அனுபவவொப்பால் - அனுபவசாமியத்திஞல், வரு - வரப்பட்ட, பிராரத்தம்-பிராரத்த வினையின்பயனுய, வறுநுகர்வு - மித்தையானுபவம், உண்டாம் - உண்டாகும், சுழுத்திப்பாலாதிபோல-சுழுத்தியிலுள்ளவனும் பாலர் முதலியவர்களும்போல, மந்தானுசந்தானமாதலின் - விஷயப்பிரவிர்த்தி அற்பமாயிருத்தலின், தேகாதி - தேகமுதலியவற்றில், செறி-நெருங்கியிருக்கின்ற, அபிமானங்கழன்றும் - போகாபிமான நீங்கியும், கடமூதித்தும் - கடோற்பத்தியாகியும், சுழலுந்திகிரிபோல் - சுழலாநின்ற குலாலசக்கிரம்போல, வாதனையாலுறல் - வாசனுபலத்திருந்து சஞ்சரிப்பதே, சீவன் முத்தி - சீவன் முத்தியாம், எ - று.

அகறலினுல் என்றமையின், இருதயக்கிரந்தி வருவிக்கப்பட்டது. பாலாதி என்றமையின் உன்மத்தனையுங் கொள்க. மந்தம் - கூர்மையின்மை, அனுசந்தானம்-விஷயப்பிரவிருத்தி. சீவன்முத்தன் யாவும் மித்தையென நீக்கியும் பிராரத்தம் புசித்து நீங்கவேண்டி விடயவாசனைகளைப் பருப்பின்றிக் காடாக்கினியைப்போல வனுபவிப்ப னென்பதாம். வாசனையென்றது முன்ன ரனுபவித்த சம்ஸ்காரசேடத்தை. அஃது இத்தேக மொழிகின்றபரியந்தம் இருப்பதுபோலத் தோன்றும். எனவே, சஞ்சித காமிய நீங்கினபிராரத்தம், குலாலன் திகிரி கடமெடுத்தவிடத்துங் கிஞ்சித்துத் தானே சுழன்று நிற்பதுபோலவாம்.

வினு:—அங்ஙனமாயின், மாயை நசிக்கி னதன் காரியமான தேகமும் நசிக்கவேண்டுமன்றோ?

விடை:—நசித்தேயிருக்கின்றது.

வினு:—எங்ஙனம்?

விடை:—ஞானோதயமானபோது அவித்தியாரூபமான காரணதேகம் நசித்தேயிருக்கின்றமையின்.

வினு:—அற்றேல், அது நசிக்கின் அதன்காரியமான தூலதேக மிருக்குமோ?

விடை:—தக்தமானபடங் காற்றுவருமளவும் இருப்பதுபோல் ஞானக்கினியினுல் தக்தமான வித்தேகம் பிராரத்தநீக்கம் வருமளவும் இருக்குமென்க.

(தா-ம்.) சுவானுபூதியைப் பெற்று அதனுலடைந்தசுகவடிவத்தோடுங் கூடித் தேகாபிமானமின்றிச் சுகித்திருப்பவனே சீவன்முத்தனென்பதாம்.

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்தமுறையான் விதேகமுத்தியினிலக்கணங் கூறி மேற் சீவன்முத்தனிலக்கணத்தை ஐயமின்றி விளங்க வுணர்த்துகின்றார்.

பரமமா ஞானந்தோன் றுதலுமே கதிர்முன்
 பாயிருள்போ லஞ்ஞானத் துடனதன்கா ரியமாம்
புரமுதலா யினவனைத்து மகன்றிடுதே ருனே
 புகலரிய விதேககைவல் லியமென் றிசைப்ப
ருரமுறுமிங் கிதுவாகச் சீவன்முத்தி யுளதென்
 றுரைப்பதெவ்வா றெனிற்கயிற்றி னரவமயக் கொழிந்தும்
வருமதன்கா ரியமாகும் பயகம்ப ளுதி
 மருவுதல்போன் ஞானத்தா லஞ்ஞானங் கெடினும்.

(இ - ள்.) பரமமாம் - மேலான, ஞானம் - பிரமஞானம், தோன்றுதலும் - உதயமாகவும், கதிர்முன் - சூரியன்முன், பாயிருள்போல் - நீங்குமிருளைப்போல, அஞ்ஞானத்துடன் - அஞ்ஞானத்தோடு, அதன்காரியமாம் - அதனது காரியமான, புரமுதலாயின - தேகமாதிய, அனைத்தும் - தத்துவங்களனைத்தும், அகன்றிடுதேருனே - நசிப்பதே, புகலரிய - சொல்லுதற்கரிய, விதேககைவல்லியமென்று - விதேகமுத்தியென்று, இசைப்பர் - சத்துக்களுரைப்பார்கள், உரமுறும் - திடமுள்ள, இங்கு - இவ்விடத்து, இதுவாக - இவ்விதேகமுத்தி யிருப்பதாக, சீவன்முத்தி - மத்தியிற் சீவன் முத்தி, உளதென்றுரைப்பது - உளதெனக் கூறுவது, எவ்வாறெனில் - எங்ஙனமென்றால், கயிற்றின் - இரச்சுவிற்றோன்றிய, அரவமயக்கு - சர்ப்பப் பிராந்தி, ஒழிந்தும் - நீங்கியும், வரும் - வராநின்ற, அதன் காரியமாகும் - அச் சர்ப்பப்பிராந்தியின் காரியமான, பயகம்பளுதி - அஞ்சிநடுங்கன் முதலியவைகளை, மருவுதல்போல் - (ஒருவன்) சிறிதுபொழுது கூடியிருப்பதுபோல, ஞானத்தால் - ஆத்மஞானத்தினால், அஞ்ஞானம் கெடினும் - அஞ்ஞான நசிக்கினும், எ-று. தான் - அசை.

ஞானத்திற்குச் சூரியனும், அஞ்ஞானத்திற் கிருளுங் கயிற்றரவமும், பிராரத்தத்திற்குப் பயகம்பளுதியு முவமித்தவாறும்.

(தா - ம்.) சூரியப்பிரகாசத்தின் முன்னர் அந்தகார மதன்மயமாவது போலச் சிற்பிரகாசத்தின் முன்னர்ச் சகசீவபரம் அதன்மயமாய் விளங்குவதே விதேகமுத்தி யென்பதாம். (கசுO)

அ - கை.

இச்செய்யுளிற் பிரமஞானம் பெற்றும் பிராரத்ததேக மிருப்பது யாது பற்றியெனின், அஃது இல்லாவிடின் சம்பிரதாயம் விர்த்தி யடையாதென வுணர்த்துகின்றார்.

அதனதுகா ரியமாகு முடம்பாதி யிற்கு
 மதனலும் பிரமஞா னந்தோன்றும் பொழுதே

சிதைதருமஞ் ஞானமுட னுடம்பொழியு மாயிற்
றிகழ்பிரம வித்தியா சம்பிரதா யத்தின்
கதியொழியு மதனலும் பரசிவனுற் பிரமன்
கமலனு லுயர்பிரசா பதியவனுன் மனுவற்
புதமனுவான் மனிதருணர்ந் தனரெனவே முறைமை
புகல்சுருதி விரோதமா மதனுனு மன்றே.

(இ - ள்.) அதனது காரியமாகும்-அவ்வஞ்ஞானத்தின் காரியமாகிய, உடம்பாதி - தூலதேக முதலியவைகள், நிற்குமதனுலும் - இருக்கின்றமை யானும், பிரமஞானம் - பிரமஞானமானது, தோன்றும்பொழுதே - உதிக் கும்போதே, சிதைதரும் - கெடாநின்ற, அஞ்ஞானமுடன் - அஞ்ஞானத் தோடு, உடம்பு - அதன் காரியமானதேகமும், ஒழியுமாகில்-நீங்குமாயின், திகழ் - விளங்காநின்ற, பிரமவித்தியா - பிரமவித்தையின், சம்பிரதாயத் தின்கதி - சம்பிரதாயத்தின் கதியானது, ஒழியும் - கெடும், அதனுலும் - அக்காரணத்தாலும், பரசிவனல் - பரமசிவனல், பிரமன் - பிரமனும், கம லனல் - அப்பிரமனல், உயர் - மேலான, பிரசாபதி - பிரசாபதியும், அவ னல் - அப்பிரசாபதியினல், மனு - மனுவும், அற்புதமனுவால்-அற்புதமான மனுவினல், மனிதர்-மானிடரும், உணர்ந்தனரென - பூருவத்தி லறிந்தன ரென்று, முறைமை - பிரமவித்தியாசம்பிரதாயத்தை, புகல்சுருதி - சொல் லாநின்ற சாந்தோக்கிய வுபநிடதத்திற்கும், விரோதமாம் - முரணுகும், அத னுலும் - அக்காரணத்தாலும், எ - று. அன்று - ஏ - அசை.

பிரசாபதி - நவப்பிரமரி லொருவர்.

வினு:—ஞானத்தின் சாட்சாத் பிரயோஜனம் விதேகமுத்தியாயிருக் கக் கிஞ்சித்காலமாவது ஜீவன்முத்தித்தன்மையோடு மிருப்பது யாதுபற்றி?

விடை:—அங்ஙனம் ஞானம்வந்தவுடனே காரணதேகம் நீங்குதல்போ லக்காரியமான தூலதேகமும் நீங்குமாயின் பிரமவித்தையைப் போதிக்குஞ் சுருதியின் சம்பிரதாயமும், பரசிவனுதிய குருபாரம்பரிய பிரமோபதேச சம்பிரதாயமும், அதனலடையத்தக்க சமாதிமார்க்க சம்பிரதாயமுமின்றிச் சூன்யமாகு மாதலால் அதுபற்றிக் கிஞ்சித்காலந் தேகமிருக்கவேண்டிப் பிராரத்தவினை ஞானத்தால் நாசமாகாதிருக்கின்றதெனக.

(தா - ம்.) ஞானவான்கள் தாமடைந்தபேறு இன்னுஞ் சில பக்கு வர்க ளடையு நிமித்தம் பிராரத்தானுபவத்தோடுங் கூடிய ஜீவன்முத்தித் தன்மையோ டிருக்கின்றன ரென்பதாம். (கசுக)

அ - ரைக.

இச்செய்யுளிற் சீவன்முத்தித்தன்மை யுண்டாதற்கேதுவான சஞ்சித மாதிய வினை நீங்கும் வகையை யுணர்த்துகின்றார்.

செஞ்ஞானிக் குரித்தாகு நற்சீவன் முத்தி
சித்தித்தற் குற்றபிரா ரத்தவா தனையோ

டஞ்ஞான விலேசசற் பாவவுடன் பாட்டா
லாகநிலை யுஞ்சீடர்க் குபதேசா திகமு
மெஞ்ஞான்றுங் கிடைத்திடுமா லிச்சீவன் முத்தற்
கிரிதருசஞ் சிதமங்கி புகுமுளிபுற் போல
மெய்ஞ்ஞானத் தாற்பிரா ரத்தநுகர்ந் தொழியு
மேல்வினைகூ டாதனதி காரியா தலினல்.

(இ - ள்.) செஞ்ஞானிக்கு - செவ்விய ஞானவானுக்கு, உரித்தாகும் - உரியதாகிய, நற்சீவன்முத்தி - நல்ல ஜீவன்முத்தியானது, சித்தித்தற்கு - கிடைத்தற்பொருட்டு, உற்ற - பொருந்திய, பிராரத்தம் - பிராரத்வ கன்மத்தின், வாதனையோடு - வாசனையுடன், அஞ்ஞான விலேசம் - அஞ்ஞானத்தி னம்சமாகிய விட்சேபம், சற்பாவ உடன்பாட்டால் - இருப்பதாக அங்கிகரிப்பதனல், ஆகநிலையும் - தேகஸ்திதியும், சீடர்க்கு - மாணுக்கருக்கு, உபதேசாதிகமும் - உபதேசமுதலியனவும், எஞ்ஞான்றும் - எந்நாளும், கிடைத்திடும் - சித்திக்கும், இச்சீவன் முத்தற்கு - இச்சீவன் முத்தனுக்கு, சஞ்சிதம் - சஞ்சிதவினையானது, அங்கிபுகும் - அக்கினிபுகுந்த, முளிபுற்போல - உலர்ந்த புல்லைப்போல, மெய்ஞ்ஞானத்தால் - மெய்யுணர்வால், இரிதரும் - நசிக்கும், பிராரத்தம்-பிராரத்தவினையானது, நுகர்ந்தொழியும் - அனுபவிக்க நீங்கும், மேல்வினை - ஆகாமிய வினையானது, அனதிகாரியாதலினல் - பிறவிக்கதிகாரமின்மையால், கூடாது - உண்டாகாது, எ - று. ஆல் - அசை.

சீவன்முத்தி சித்தித்தற்கென்பது ஏனையோர்க்கு மதுசித்திக்குநிமித்தமென்க. உபதேசாதி என்றமையின் பிரமத்தியானமுங் கொள்க. பிராரத்தவாசனையாற் கிஞ்சித்காலந் தேகமிருப்பதும், சீடனைமரபிற்செல்லச் சிட்சித்தலும், பிரமத்தியானஞ் செய்தலுஞ் சீவன்முத்தனுக் குண்டென்க. எஞ்ஞான்றுமென்பது ஜீவன்முத்தி யுள்ளபரியந்தமாம். ஆகவே, ஜீவன்முத்தனுக்கே விதேகமுத்தியாமென்க.

(தா-ம்.) மாயாகாரியமான தேகம் இருப்பதுபோலத் தோற்றிய ஜீவன்முத்தனுக்குப் பூரணஞானத்தாற் சஞ்சிதமும் புசித்தலாற் பிராரத்தமும், பிரமானுசந்தானத்தினல் ஆகாமியமுமாகிய விம்மூன்று வினையு நசிக்குமென்பதாம். (கசுஉ)

அ - கை.

இச்செய்யுளிற் பிராரத்தபோகத்தைக் கொடுக்குஞ் சஞ்சிதவினைமேல் தேகத்தையுங் கொடாதோவென்ற வினவிற் குத்தர முணர்த்துகின்றார்.

பெற்றவுயர் ஞானத்தா லொழிந்தவினை தானே
பிராரத்த போகத்தை யளிக்குமெனி லதுமே
லுற்றவுட லுற்பத்தி தனையுமியற் றுறுமென்
றுரைப்பில்வறு விதைநுகர்ச்சிக் கன்றியே முளைக்கு

மற்றதுதான் காரணமன் றதுபோல ஞான
மடிகரும நுகர்ச்சியினு னேயொழிவ தாகி
யற்றமுறு பிறவிமேல் விளைத்திடுதற் கேது
வாகாதென் றியம்பிடுவ ரறிவறிதக் கவரே.

(இ - ள்.) பெற்ற - தானடைந்த, உயர்ஞானத்தால் - பிரமஞானத்தினால், ஒழிந்தவினைதானே - நசித்த சஞ்சிதவினையே, பிராரத்தபோகத்தை - பிராரத்தானுபவத்தை, அளிக்குமெனில் - கொடுக்குமென்றால், அது-அவ்வினை, மேலுற்ற - இனிவரக்கடவதாய, உடலுற்பத்திதனையும் - தேகோற்பவத்தையும், இபற்றுறுமென்று - செய்விக்குமென்று, உரைப்பில் - சொன்னால், வறவிதை - வறுத்தவித்து, நுகர்ச்சிக்கன்றியே - புசித்தற்கேயன்றி, முளைக்கு - முளைப்பதற்கு, அது - அவ்விதையானது, காரணமன்று - ஏதுவன்றாம், அதுபோல - அவ்வகைபோல, ஞானம் - ஞானத்தால், மடி - எரிபட்ட, கருமம்-(சஞ்சிதசேடமான) பிராரத்தகன்மம், நுகர்ச்சியினுன்-அனுபவித்தலினால், ஒழிவதாகி - நீங்குவதல்லாது, அற்றமுறு - நசித்தலையுடைய, பிறவி - சநநங்களை, மேல்விளைத்திடுதற்கு - இனி யுண்டாக்குவதற்கு, ஏதுவாகாதென்று - காரணமாகாதென, அறிவறிதக்கவர் - ஆத்மஞானத்தை யறியத்தக்கவர், இயம்பிடுவர்-சொல்லுவார்கள், எ-று. மற்று - தான் - ஏ - அசை.

சஞ்சிதத்திற்கு வறுத்தவித்து உவயிக்கப்பட்டது. எனவே அதன் வாசனுசேஷம் பிராரத்தவினையெனக் கொள்க.

(நா - ம்.) வறுத்தவிதை புசித்தற்கு யோக்கியமன்றி முளைத்தற்கு யோக்கியமாகாததுபோல ஞானக்கினியினுற் றக்தமான சஞ்சிதவினையின் வாசனுரூபமான பிராரத்தகன்மம் இத்தேகத்தோடுந் தீர்வதேயன்றி மேற்சநநத்தைக் கொடுப்பதற் கேதுவாகா தென்பதாம். (கசுரு)

'அ - கை.

இச்செய்யுளிற் பிராரத்தம்புசிக்க நீங்குத லியாவர்க்கு மொத்ததாயினும் பெத்தனுக்கு மறைப்புண்மையினுனும் முத்தனுக்கு மறைப்பின்மையினுனும் நீங்குமென வுணர்த்துகின்றூர்.

அறைந்தநுகர் வினையதுதா னுலோகயாத் திரைக
ளதிகரியா துறுநரர்க்கே யோருடம்பு தன்னிற்
செறிந்துநுகர் வாமவற்றி னதிகிருத ராகிச்
சிறந்தமா புருடர்க்குத் தசசங்கை யுடம்பி
னுறைந்தலது தீர்ந்திடா தெனினுமறைப் பின்றி
யுறுதலா லொருவனுக்கிங் கிளைமைமுதற் பேதம்
பிறந்திடினு மவனுக்கோ ருடம்பேயாய் நின்ற
பெற்றிபோ லாகுமென வுணர்ந்திடுக தெரிந்தே.

(இ - ள்.) அறைந்த - முற்கூறிய, நுகர்வினையது - புசியாநின்ற பிராரத்தவினையானது, உலோகயாத்திரைகள் - உலக நடைகளை, அதிகரியா துறு - அதிகரியாதிருக்கும், நரர்க்கு - மானிடர்க்கு, ஒருடம்புதன்னில் - ஒருதேகத்தில், செறிந்து நுகர்வாம் - அடைந்தனுபவிப்பதாம், அவற்றின் - அவ்வுலகநடைகளை, அதிகிருதராகி - அதிகரித்தவராய், சிறந்த-சிறப்புள்ள, மாபுருடர்க்கே - மனு வியாசாதிய மகான்களுக்கே, தசசங்கை - பத்தென்னும் கணக்குள்ள, உடம்பின் - தேகத்தில், உறைந்தலது - சேர்ந்தனுபவித்தாலல்லது, தீர்ந்திடாதெனினும் - பிராரத்தம் நீங்காதாயினும், மறைப்பின்றி-திரோதானமின்றி, உறுதல்-பிராரத்தவினை நிற்றலெங்ஙனமெனின், ஒருவனுக்கு - ஓர் புருடனுக்கு, இங்கு-இவ்விடத்து, இளமைமுதற்பேதம்- பாலியகௌமாராதி பேதங்கள், பிறந்திடினும்-உண்டாயினும், அவனுக்கு- அப்புருடனுக்கு, ஒருடம்பே யாய்கின்ற - ஒருதேகமாகவேயிருந்த, பெற்றிபோல் - தன்மையைப்போல, ஆகுமென - ஆமென்று, தெரிந்து - ஆராய்ந்து, உணர்ந்திடுக - அறிவாயாக, எ - று. தான்-ஆல்-ஏ-அசை.

லௌகிக நடையுள்ள மானிடர்க் கொரு ஜன்மத்தினும், வைதிக நடையுள்ள தேவாம்சமான மனுவியாசாதிகளுக்குத் தச ஜன்மத்தினும் பிராரத்தகன்ம மனுபவித்தலால் நீங்குமாயினும் இவர்களுக்கு வருகின்றதறியாம லனுபவிப்பதும் அவர்கட்கு வருவதறிந் தனுபவிப்பதுமா மென்க.

வினு:—அற்றேல், பிராரத்தம் ஒருஜன்மத்திற் கமைந்ததேயன்றித் தசஜன்மத்திற் கமைந்ததென்பதற்கு மேற்கோளுண்டோ?

விடை:—விஷ்ணுவிற் கொரு பிராரத்தம் தசாவதாரத்தி னீங்குதலேயாமென்க.

(தா - ம்.) ஒருஜன்மத்திற்குந் தசஜன்மத்திற்கும் பிராரத்தகன்ம மொன்று யமைந்திருக்கின்ற தென்பதைத் தெரிவித்தவாறும். (கசுச)

அ - கை.

இச்செய்யுளில் ஞானமும் கருமமும் தம்முள் பகையுடையனவாதலின் புசிப்பெங்ஙனங் கூடுமென்ற வினவிற் குத்தர முணர்த்துகின்றார்.

விடயங்க ளனைத்தினுக்கும் பொய்ம்மைசா திக்கு
மெய்ஞ்ஞானந் தனக்குமவைக் குண்மைசா திக்கு
முடலினுகர் வினைக்குமொன் றற் கொன்றுவிரோ தமதா
யுண்மையினுன் ஞானிக்கு நுகர்வெங்ங னென்னிற்
கெடுகனவு முதலவற்றுண் மைதுனு திகளாங்
கேடினுகர் வாதல்போற் பிராரத்த போக
விடயங்க ளுண்மையா மலதாகா வென்னும்
விதியின்மை யானுகர்வு முணர்வுமுற வாவால்.

(இ-ள்.) விடயங்களனைத்தினுக்கும் - சசலவிஷயங்களுக்கும், பொய்ம்மை சாதிக்கும் - மித்தியாத்துவஞ் சாதிக்கின்ற, மெய்ஞ்ஞானந்தனக்கும்- மெய்ஞ்ஞானத்திற்கும், அவைக்கு - அவ்விடயங்களுக்கு, உண்மைசாதிக்

கும் - சத்தியத்துவஞ் சாதிக்கின்ற, உடலினுகர்வினைக்கும் - தேகத்தினலனுபவிக்கும் பிராரத்தவினைக்கும், ஒன்றற்கொன்று விரோதமதாய் - அன்னியோன்னிய விரோதமாய், உண்மையினல் - இருத்தலின், ஞானிக்கு - ஜீவன்முத்தனுக்கு, நுகர்வு - பிராரத்தானுபவம், எங்ஙனெனனில்-எப்படி கூடுமென்றால், கெடுகனவுமுதலவற்றுள் - மித்தியாத்துவமான சொப்பன முதலியவைகளுக்குள், மைதுனாதிகளாம் - புணர்ச்சி முதலானவைகளாகிய, கேடில் - நிசமான, நுகர்வாதல்போல் - போகானுபவ மாவதுபோல, பிராரத்தம் - பிராரத்தகன்மபலமாகிய, போகவிடயங்கள் - விடயானுபவங்கள், உண்மையாமலது - சத்தியமானலல்லாமல், ஆகாவென்னும்-பொருந்தமாட்டாவென்கிற, விதியின்மையால் - நியமமின்மையின், நுகர்வும்-பிராரத்தவினைக்கும், உணர்வு - ஞானத்திற்கும், முரணு - ஒன்றற்கொன்று விரோதமில்லை, எ - று. ஆல் - அசை.

கனவு முதலென்றமையின் இந்திரசாலமும், மைதுனாதியென்றமையின் சுவர்க்காதித் தோற்றங்களும், முரணுஎன்றமையின் ஞானிக்குப் பிராரத்தபோக முண்டென்பதுங் கொள்க.

(நா - ம்.) மித்தையான சொப்பன வனிதையினிடத்தும் இந்திரசாலவித்தையினிடத்தும் நிசமான மைதுனமுஞ்சுவர்க்காதித் தோற்றமுங் காண்பதில் விரோதமில்லாததுபோல மித்தையான பிராரத்தத்திற்கும், சத்தையான ஞானத்திற்கும் விரோதமின்மையாற் பிராரத்தபோகஞ் சீவன் முத்த னனுபவித்துத் தீர்வதுண்மையே யென்பதாம். (கசுஞ)

அ - கை.

இச்செய்யுளிற் சித்துதயத்திற் சகநீங்கின் எங்ஙனம் பிராரத்த வினையின் புசிப்புண்டாமென்னும் வினவிற்குப் பிராந்தி யிருவகைத்தா மெனக் கூறுவான்றொடங்கி நிருபாதிகப்பிராந்தியி னிலக்கண முணர்த்துகின்றார்.

வந்தமய லொழிந்தளவே யிப்பியிடை வெள்ளி
மாய்தல்போ லறிவினு லஞ்ஞானங் கெடனு
மிந்தவுல கதுதோற்ற மேயிலா மையினு
லெங்ஙனமாம் வினைப்போக நுகர்ச்சியெனி லிப்பி
தந்தவிர சித * நிருபா திகப்பிராந்தி யாகுந்
தன்மையினு லுணர்ந்தளவில் வெள்ளியுரு வொழியும்
பந்தமுறு மிதுசோபா திகமாகு மதனுற்
பகர்ந்ததுபோ லன்றுமற் றெங்ஙனெனி லுரைப்பாம்.

---

* "நிருபாதிக அஞ்ஞான ஜந்நியம் சோபாதிக அஞ்ஞான ஜந்நியம் என்னும் பேதத்தால் பிராந்தி இருவகைத்தாம். விலக்ஷண (தனது சமகால பரியந்தம் காரியத்தை நிறுத்துவதாகிய) நிமித்தகாரணம் ஈண்டு உபாதியெனப்படுகின்றது. அஃதின்றிக் கேவல அஞ்ஞானத்தால் தோன்றும் பிராந்தி நிருபாதிகப் பிராந்தியாம். அது இரஜ்ஜு சர்ப்பம் சுக்திரஜத முதலியவற்றின் பிராந்தியாம். விலக்ஷணமான நிமித்தகாரணவடிவ உபாதியோடு கூடிய அஞ்ஞான ஜந்நியப் பிராந்தி சோபாதிகப் பிராந்தியாம். எங்ஙனம்

(இ - ள்.) வந்தமயல்-ஒருவனுக்குவந்த விரசிதமயக்கம், ஒழிந்தளவே-நீங்கினவுடனே, இப்பியிடை-கிளிஞ்சிலினிடத்து, வெள்ளிமாய்தல்போல்-இரசிதங் கெடுவதுபோல, அறிவினால் - ஞானத்தினால், அஞ்ஞானங்கெடலும் - அஞ்ஞான நசித்தலும், இந்தவுலகது - இவ்வுலகத்தினது, தோற்றமே - தோற்றமாத்திரமாவது, இலாமையினால் - இன்மையினால், வினைப்போகநுகர்ச்சி - பிராரத்தானுபவம், எங்ஙனமாமெனில் - ஞானிக்கெப்படியுண்டாமென்றால், இப்பிதந்த-கிளிஞ்சிலிலுண்டான, இரசிதம்-வெள்ளி, நிருபாதிகப் பிராந்தியாகும் - நிருபாதிகப் பிராந்தியாம், தன்மையினால்-தன்மையால், உணர்ந்தளவில் - அறிந்தமாத்திரத்தில், வெள்ளியுரு - இரசிதரூபம், ஒழியும் - நீங்கும், பந்தமுறும் - பந்தப்பட்ட, இது - இச்சகத்து, சோபாதிகமாகும் - சோபாதிகப்பிராந்தியாம், அதனால் - அவ்வேதுவினால், பகர்ந்ததுபோலன்று - முற்கூறிய நிருபாதிகப்பிராந்தியைப்போலல்ல, மற்றெங்ஙனெனில் - பின்னெப்படியென்றால், உரைப்பாம் - மேற்கூறுவாம், எ - று.

தோற்றமேயிலாமையின் என்ற தேற்றேகாரம், சகத்துண்மையி லில்லவேயில்லையெனக் காட்டிநின்றது. நிருபாதிகம் - உபாதியில்லாதது. சோபாதிகம் - உபாதியோடு கூடியது. (௧௬௬)

அ - கை.

இச்செய்யுளில் சோபாதிகப்பிராந்தியி னிலக்கண முவமான பூருவகமாக உணர்த்துகின்றார்.

தடத்தினுயர் கரையினமர் வோன்றடத்துப் புனலிற்
றானதோ முகமாக விருப்பதுபொய் யென்றே
படைத்ததெளி வுளமொடிருப் பினுமதோ முகமாம்
படிவந்தோன் றுதல்போல மூலவகங் கார
மடுத்துவரு சீவபா வாதிகமே மித்தை
யறிதுரியன் றானெனவே யுணரினுஞ்சீ வாதி

---

பிரகாச அந்தகாரங்களின் சம்பந்தவடிவ உபாதியோடுகூடிய அஞ்ஞானத்தாற்றோன்றும் ஆகாயத்தினது நீலத்தன்மையின் பிராந்தி யிருக்கின்றதோ எங்ஙனம் பிம்பத்தின் சந்நிதிவடிவ உபாதியோடு கூடிய கண்ணாடியின் அஞ்ஞானத்தாற் றோன்றிய பிரதிபிம்பத்தின் பிராந்தி யிருக்கின்றதோ, அங்ஙனமே ஜீவர்களது அதிருஷ்டவடிவ உபாதியோடு கூடிய மூலாஞ்ஞானத்தால் தோன்றிய பிரபஞ்சத்தின் பிராந்தி யிருக்கின்றது. அது முற்கூறிய உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தாற் றோன்றியதா யிருத்தலின், சோபாதிகப் பிராந்தியாம். நிருபாதிகப் பிராந்தியின் பாதிதாநுவிருத்தி (பாதமாகியபின் தோற்றுதல்) உண்டாகிறதில்லை; ஏனெனின், உபாதியின்மையால் அதன் நாசமும் பாதமுமாகிய இரண்டு மிருத்தலின். சோபாதிகப் பிராந்தியின் பாதிதாநுவிருத்தி யுண்டாகின்றது; ஏனெனின், மித்தியாத்தன்மை நிச்சயவடிவபாதம் உண்டாகியும் உபாதியின் இருப்புவரையில் ஸ்வரூபத்தின் அப்பிரதீதிவடிவ நாசமின்மையால்.” என்று பாலபோதக் குறிப்புரையிற் கூறப்பட்டிருக்கின்றது.

தொடுத்தவுல குறுதலினுற் சீவன்முத்தன் றனக்குத்
துய்க்கும்வினைப் போகவிவ காரமுடன் பாடம்.

(இ - ள்.) தடத்தின்-ஒர்வாவியினது, உயர்கரையின் - உயர்ந்ததீர த்தில், அமர்வோன் - இருப்பவன், தடத்து - அத்தடாகத்தினுள்ள, புனலில் - சலத்தில், தான்-தனதுருவம், அதோர்முகமாக - தலைகீழாக, இருப்பது-இருக்கின்றது, பொய்யென்றே - மித்தையெனவே, படைத்த - பெற்ற, தெளிவு-தெளிவான, உளமொடு - மனதுடன், இருப்பினும் - இருந்தாலும், அதோமுகமாம்-தலைகீழாயுள்ள, படிவம்-தனதுவடிவம்,தோன்றுதல்போல் - தோன்றுவதுபோல, மூலவகங்காரமடுத்து - மூலாங்கார சம்பந்தமாய், வரு - வராநின்ற, சீவபாவாதிகம் - சீவபாவமுதலியவைகள், மித்தை-மித்தையாம், அறிதுரியன்-இவற்றைச் சாட்சியாயறிகின்ற கூடத்தன், தானெனவே - தானேயென்று, உணரினும்-அறிந்தாலும், சீவாதி தொடுத்த-சீவனுதியாகப்பொருந்திய, உலகு-சகத்து, உறுதலினல்-தோற்றிக்கொண்டிருப்பதனுல், சீவன்முத்தன்றனக்கு-சீவன்முத்தனுக்கு, துய்க்கும் - அனுபவியாநின்ற. வினைப்போகம் - பிராரத்தானுபவத்தின், விவகாரம்-வியவகாரமானது, உடன்பாடாம்-அங்கீகாரமாம், ஏ-று. ஏ-அசை.

சீவபாவாதிகம் என்றமையின் விகற்பமுங் கொள்க. எனவே, சங்கற்ப விகற்பம் மித்தையா மென்பதாயிற்று.

வினு:—சுத்தியிலிரசதப்பிராந்தி நீங்கிய மாத்திரத்திற் பின்னரந்தப் பிராந்தி தோன்ருததுபோன்று ஞானமுதித்த மாத்திரத்தில் அஞ்ஞான மழிதலின் அதன்காரியமான சகத்தோற்றமு மதன்போகமு முண்டாதல் கூடாது. அங்ஙனமாக எங்ஙனமுண்டாதல் கூடும்?

விடை:—இரசதப்பிராந்தி நிருபாதிகப் பிராந்தியாதலினீங்கும். இச்சகத்து சோபாதிகப் பிராந்தியாதலின் நீரின்கண் தான் அதோமுகமாயிருத்தல் மித்தையெனத்தெரிந்தும் அத்தோற்றம் நீங்காததுபோலச் சித்துருவமாகிய தான் சகசீவபரமாய்த் தோன்றுதல் மித்தையெனத் தெரிந்தும் அவை நீங்காமற் றோன்றலின் பிராரத்தப் புசிப்பிருத்தற்கு ஐயமின்றென்க.

(தா - ம்.) சுத்திரசதம் நிருபாதிகப் பிராந்தியாதலின் அதைநீக்கிச் சோபாதிகப்பிராந்தியாசச் சலத்திற் பிரதிபலித்த சாயை அச்சலமுள்ள பரியந்தம் தோற்றுதல்போல மாயாப்பிரதிபலனஞ் சகத்தாதலினுலும் அஃதுள்ளமட்டும் இது தோற்று மதனுனும் அதுவும் பிராரத்தமுடிவில் நீங்குதலினுனும் அப்பிராரத்தானுபவத்தை யையமின்றி யங்கீகரிக்க வேண்டு மென்பதாம். (கசுஎ)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய பிராரத்தபோக மனுபவிக்குஞ் சீவன் முத்தனுக்குள்ள மைத்திரியாதி நான்குகுணங்களின் இலக்கண முணர்த்துகின்றூர்.

சீவன்முத்தர்க் குரியனவா மைத்திரியே கருணை
திகழ்முதிதை யுபேட்சையெனுஞ் சற்குணங்க ளவற்றுண்

மேவுறுசற் புருடரோடு நட்புமைத் திரியா
 மெலிதருதுக் கிகளிடத்தி னிரக்கமே கருணை
யோவறுநற் புண்ணியர்பால் விருப்பமே முதிதை
 யுவப்புவெறுப் பிரண்டுமிலா துலகிலவ மியற்றும்
பாவிகளை விடுதலே யுபேட்சையென வறிக
 பயனைந்து சீவன்முத்தர்க் குளவவையீண் டுரைப்பாம்.

(இ-ள்.) சீவன்முத்தர்க்கு-சீவன்முத்தர்களுக்கு, உரியனவாம்-உரிமையாயிருப்பன, மைத்திரி-மைத்திரியும், கருணை-கருணையும், திகழ்முதிதை-விளங்காநின்ற முதிதையும், உபேட்சையெனும்-உபேக்ஷையுமென்கின்ற, சற்குணங்கள் - சற்குணசதுஷ்டயங்களாம், அவற்றுள் - அந்நான்கனுள், மேவுறு - பொருந்திய, சற்புருடரோடு - சத்துக்களுடன், நட்பு - சினேகமே, மைத்திரி-மைத்திரியும், மெலிதரு - மெலியாநின்ற, துக்கிகளிடத்தின்-துன்பமுடையவர்களிடத்தில், இரக்கமே - இரங்குவதே, கருணை - கருணையும், ஓவறு-நீங்காத, நற்புண்ணியர்பால்-நல்ல புண்ணிய புருஷர்களிடத்தில், விருப்பமே-விருப்பம்வைப்பதே, முதிதை-முதிதையும், உவப்பு - விருப்பும், வெறுப்பு - வெறுப்புமாகிய, இரண்டுமிலாது - இரண்டுமின்றி, உலகில்-சகத்தில், அவமியற்றும்-தீங்குசெய்யாநின்ற, பாவிகளை விடுதலே - பாவிகளைவிட்டு நீங்கலே, உபேட்சை - உபேட்சையுமாம், எனவறிக - என்றறிவாயாக, சீவன்முத்தர்க்குள - இன்னுஞ்சீவன் முத்தர்களுக்குள்ள, பயனைந்து-பிரயோசனங்களைந்தாம், அவை - அவற்றை, ஈண்டுரைப்பாம் - ஈண்டெடுத்துக் கூறுவாம், எ - று.

(தா - ம்) சத்துக்கள் தம துருவமா நிற்றலின் அவரிடத்து நீங்காத அன்பே மைத்திரியும், பவக்கடலிற் சுழல்வாரை நோக்கி யேனோ வாளா துக்கிக்கின்றார்கள் இவர்க் கென்று இத்தீங்கொழியுமென்னும் இரக்கமே கருணையும், ஈசுரார்ப்பணமாகச் செய்யும் புண்ணியரிடத்தி லவர்நோக்குச் சித்தசுத்திக் கேதுவா யகமுகப்படுங் குறியால்வரும் விருப்பமே முதிதையும், இராகத்துவேஷங்களாற் சுகதுக்கங்களை யனுபவிக்கும் பாவிகளைத் துரும்பென விருப்பு வெறுப்பின்றி விடுதலே யுபேட்சையும், உலோகானுக்கிரக நிமித்தமாகச் சீவன் முத்தரிடத்தி னிகழுமென்பதாம். (கசுஅ)

அ - கை.

இச்செய்யுளில் சீவன்முத்தர்க்குள்ள பயனைந்தி னிலக்கண முணர்த்துகின்றார்.

ஞானரக்கை தவஞ்சகல சம்வாத முடனே
 நவிறுக்க வொடுக்கமொடு சுகாவிர்ப்பா வத்தா
னவற்றுண் மருவும்வா சனையழிவு மனத்தி
 னடக்கங்க ளாற்புத்தி நிருமலமா யிருத்தன்
ஞானரக்கை மனம்பொறிகட் கொருமையே தவமா
 ஞானியென வுலகமெலாம் வழிபடல்சம் வாத

மானமனக் கிலேசமற லேதுக்க வொடுக்க
மவற்றினாற் பந்தமறல் சுகாவிர்ப்பா வந்தான்.

(இ-ள்.) ஞானரக்கை-ஞானரட்சையும், தவம்-தவமும், சகலசம்வாதமுடன் - சர்வசம்வாதமும், நவில்-சொல்லாநின்ற-துக்க வொடுக்கமொடு - துக்கநீக்கமும், சுகாவிர்ப்பாவம் - சுகாவிர்ப்பாவமும், ஆனவற்றுள்-ஆகிய பஞ்சப்பிரயோஜனங்களுள், மருவும் - பொருந்தியிராநின்ற, வாசனையழிவும் - வாசனாக்ஷயமும், மனத்தினடக்கங்களால்-மனோநாசமுமாகிய விவ்விரண்டால், புத்தி - அறிவு, நிருமலமாயிருத்தல் - களங்கரகிதமா யிருப்பதே, ஞானரக்கை-ஞானரட்சையும், மனம் - மனதிற்கும், பொறிகட்கு- இந்திரியங்கட்கும், ஒருமையே - ஏகாக்கிரகம் வருவதே, தவம் - தவமும், ஞானியென-இவன் ஞானவானென, உலகமெலாம்-உலகத்தாரியாவரும், வழிபடல் - வந்தித்தலே, சம்வாதம் - சர்வசம்வாதமும், ஆனமனக்கிலேசமறலே-பொருந்திய மனக்கிலேசம் நீங்குதலே, துக்க வொடுக்கம் - துக்கவொடுக்கமும், அவற்றினால் - அவைகளால், பந்தமறல் - பந்தநீங்குதலே, சுகாவிர்ப்பாவம்-சுகாவிர்ப்பாவமும், ஆம்-ஆகும், ஏ-று. ஏ-தான்-அசை.

உலகமென்பது அதிலுள்ளமக்கள் மேனிற்றலின், உலகத்தாரென்றும், எலாமென்றமையின் பாலர்முதற் பண்டிதரீறாகக் கொள்க. உலகமெனப் பொதுவாகக் கூறினமையின் மூவுலகமெனினு மமையும். மனக்கிலேசமென்றது* அவித்தையாதிபஞ்சக்கிலேசத்தை. சுகாவிர்ப்பாவமென்றது சுகம்பிரகாசமாயுண்டாதலே, வாசனாக்ஷயமான மனது தத்துவஞானத்திற் கரைந்துநிற்றலே ஞானரக்கையும், அம்மன மிந்திரியங்கட் கொருமையாய பரோட்சஞானத்தை நாடி நிற்றலே தவமும், இங்ஙனஞ்செய்தல் மெய்த்தவமென வுலகோர் வழிபடலே சர்வ சம்வாதமும், இவற்றால் மனோதுன்பமின்மையே துக்கவொடுக்கமும், அவற்றாற் சகல பந்தமு நீங்கி நித்யாநந்த முண்டாதலே சுகாவிர்ப்பாவமுமாம். (கசுக)

அ - கை.

இச்செய்யுளில் ஞானவடிவுமான ஜீவன்முத்தற்குள்ள தசவித வடையாளங்களின் இலக்கணமும் இவனாலருள்பெற்ற சீடர் முதலிய நால்வரின் நாமமு முணர்த்துகின்றார்.

---

* அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் என்பன பஞ்சக்கிலேசமாம்.

(1) அநாத்மாவாகிய தேகாதிகளில் ஆத்மபுத்தியும், அநித்தியமான ஆகாயாதிகளில் நித்திய புத்தியும், துக்கவடிவதனாதிகளில் சுகபுத்தியும், அசுசியான சரீர முதலியவற்றில் சுசிபுத்தியும் அவித்தையாம்;

(2) புத்தி ஆன்மாக்களின் ஒருமை யுணர்ச்சி அஸ்மிதையாம்;

(3) அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி ராகமாம்;

(4) பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி துவேஷமாம்;

(5) மரணபயத்தால் உடலைக்காப்பாற்றுவதி லுண்டாகும் ஆக்கிரகம் அபிநிவேசமாம்.

குறிகளோர் பத்துளவா ஞானமயற் கவைதாங்
குரோதமின்மை வயிராக மைம்பொறிக ளடக்க
லறமுதவு சமைதமையே சனப்பிரியத் துவமே
யலோபமொடு கொடையபய நிருமதமென் றறிக
நெறிமருவு சீடரொடு பத்தருதா சீனர்
நிலையில்பா விகளென்னு நால்வகையோ ரிடத்து
முறையினனுக் கிரகம்வந் துறுமருள்கொள் சீவன்
முத்தனு லென்பரவை முறையினெடுத் துரைப்பாம்.

(இ - ள்.) குறிகள் - அடையாளங்கள், ஓர்பத்து - ஒருபத்து, உள வாஞானமயற்கு - சீவன்முத்தற் குள்ளனவாம், அவை - அவையாவன, குரோதமின்மை-குரோதமின்மையும், வயிராகம் - வைராக்கியமும், ஐம் பொறிகளடக்கல்-பஞ்சவிந்திரியங்களை யடக்குதலும், அறமுதவு - தருமத் தைக் கொடுக்கின்ற, சமை - சமையும், தமை - தமையும், சனப்பிரி யத்துவம் - சனப்பிரியத்துவமும், அலோபமொடு - லோபமின்மையும், கொடை - கொடையும், அபயம் - அபயமும், நிருமதம் - நிருமதமும், என்றறிக - என் றறிவாயாக, நெறிமருவு - சன்மார்க்கமுள்ள, சீட ரொடு-சீடரும், பத்தர் - பத்தரும், உதாசீனர்-உதாசீனரும், நிலையில் - நிலையற்ற, பாவிகளென்னும்-பாவிகளுமென்கின்ற, நால்வகையோரிடத் தும் - நான்குபேரிடத்தும், முறையின் - முறையே, அருள்கொள்-கிருபா மூர்த்தியாகிய, சீவன்முத்தனுல் - ஜீவன்முத்தனாலே, அனுக்கிரகம் - அனுக்கிரகமானது, வந்துறும்-வந்தடையும், என்பர்-என்று சொல்லுவார் கள், அவை - அவற்றை, முறையின்-கிரமமாக, எடுத்துரைப்பாம் - தூக் கிச்சொல்லுவாம், எ - று. ஏ-அசை.

தனக்கு வேறான வஸ்து வொன்றின்மையின் குரோத மின்மையும், தன்னைத்தவிரப் பிரிய வஸ்து வொன்றின்மையின் நிராசையுற்றிருப்பதே வைராக்கியமும், பொறிகளை விடயங்களிற் செல்லவொட்டாமல் மெய்யு ணர்விற் செலுத்துவதே யைம்பொறிக ளடக்கமும், அகத்திற் கற்பனை யெழாமலடக்கி யதார்த்தத்திற் செலுத்துவதே சமையும், புறத்திற்பிரிசிய த்தில் எழவொட்டாம லவற்றிலுள்ள சத்தினில் நிறுத்துவதே சமையும், மகான்கள் சங்கத்திற் கூடி ரமித்திருத்தலே சனப்பிரியத்துவமும், தற்பிரி யத்தைச் சீவர்களடைய வேண்டுமென்னும் அன்பிருத்தலின் அலோபமும், தனக்குள்ள வஸ்தக்க ளியாவற்றையும் விரும்பினோர்பாற் கொடுத்துவிடுவ தே கொடையும், சம்சாரதுக்க பயத்தினாற் சரணாகதி யடைந்தவனைக் காக் குந்தன்மையே அபயமும், தனது நிச்சய மிங்ஙனமென மதித்திருந்துஞ் செருக்கின்மையே நிருமதமுமாமென்க.

(தா - ப்.) சீவன்முத்தனது சொரூபந் தெரிந்தடையும் நிமித்தம் அவனது அடையாளங்களைக் கூறியவாறும். (கஎ0)

அ - கை.

இச்செய்யுளில் சீவன் முத்தனற் சீடர் முதலிய நால்வரும் பெறும் பிரயோசன விலக்கண முணர்த்துகின்றார்.

தெரிவரிய சீவன்முத்தன் றனைநம்பு மதனாற்
சீடர்க்கு முத்தியுமன் பொடுவழிபா டதனைப்
புரியுமுயர் பத்தர்க்கு நல்வினையு மவன்றன்
புனிதமுறு சரிதமது கண்டவுதா சீனர்க்
குரியபுண் ணியலயமு மவன்றன்வடி வினைக்கண்
ணுறுதன்முத லானவற்றாற் பாவிகட்குப் பாவ
விரிவுமுறு மென்பரகர்த் தாதருக்கா தியினா
லெங்ஙனெனின் முத்தனாற் பிரமோப தேசம்.

(இ - ள்.) தெரிவரிய - அறிதற்கரிய, சீவன்முத்தன்றனை - சீவன் முத்தனை, நம்புமதனால் - நம்புதலினால், சீடர்க்கு - மாணாக்கருக்கு, முத்தியும் - வீடும், அன்பொடு - அன்புடன், வழிபாடதனை - வழிபடுதலை, புரியும் - செய்யாநின்ற, உயர் பத்தர்க்கு - முதிர்ந்த பத்திமான்களுக்கு, நல்வினையும் - சற்கிருத்தியமும், அவன்றன் - அச்சீவன் முத்தனுடைய, புனிதமுறு - பரிசுத்தமான, சரிதமது - சரித்திரத்தை, கண்ட - கண்ட, உதாசீனர்க்கு - உதாசீனர்களுக்கு, உரிய - உரிமையான, புண்ணியலயமும் - தருமக்ஷயமும், அவன்றன் வடிவினை - அச்சீவன் முத்தனதுருவத்தை, கண்ணுறுதன் முதலானவற்றால் - தரிசித்தல்முதலியவற்றால், பாவிகட்கு - தீயோர்களுக்கு, பாவவிரிவும் - தீமைநசிப்பும், உறுமென்பர் - உண்டாகுமெனக் கூறுவர், அகர்த்தா - கருத்திருத்துவாதி கன்மமில்லாத, முத்தனால் - ஜீவன் முத்தனால், தருக்காதியினால் - தர்க்கமுதலியவைகளால், பிரமோபதேசம் - பிரமோபதேசஞ் செய்வது, எங்ஙனெனில் - எங்ஙனமாமெனில், எ - று.

உதாசீனம் - உபேக்ஷை. சத்துக்களின் பரிசுத்த நடையைக் கண்டும் வழிபடாதிருத்தல் அவமானமாதலின் அதனால் பூருவ புண்ணிய க்ஷயமுண்டாமென்க. தருக்காதியென்றமையின் வேதாந்தவாக்கியசத்தியதாற்பரிய பிரமாணவனுகூல தர்க்கதிருஷ்டாந்த யுக்திகளுங் கொள்க.

(ப - ம்.) தீவிரதாபக்குவத்தால் இவரே நம்மை யிரட்சிக்கத்தக்கவரென நம்பிச் சரணாகதி யடைந்து அவரது அனுக்கிரகமாகிய பிரமோபதேசத்தினாற் பிரமமேதாமாக நிற்றலின் சீடர்க்குமுத்தியும், பிரிவில்லாதஅன்பினா லிவரே நாமடையத்தக்க கதியை யடைவிக்கத் தக்கவரென வழிபாடுடைய பத்தர்களுக்கு ஈசுரார்ப்பணமாகச் செய்யும் நல்வினையும், அவரது சரித்திரத்தினால் விளங்கிய பரிசுத்த நடையைக் கண்டுஞ் செல்வச்செருக்கினால் இலட்சியஞ் செய்யாதவர்களுக்குப் புண்ணிய க்ஷயமும், அவரது வடிவை நேரே தரிசிக்கும்போது அவர்கடாக்ஷந் தங்கலின் பாவிகட்குப் பாவவிரிவு முண்டாமென்க.

வினா:—முன் அனுக்கிரகமெனக் கூறிப் பின் தருமகூயமான நிக்கிரகம் கூறலாமோ ?

விடை :—காமியகருமத்தா லுண்டான ஐசுவரிய மமதையால் மகான்களை இலட்சியா தவமதித்தலினாற் புண்ணிய நசிப்புவருதல் பின் அன்புண்டாதற் கேதுவாதலி னதுவுங் கிருபையேயெனக் கொள்க.

(தா-ம்.) சீவன்முத்தனை யடைந்தவர்களின் பக்குவத்திற்குத் தகுந்த பயனுண்டாதலைக் கூறியவாறும். (கஎக)

அ - கை.

இச்செய்யுளில் அகர்த்தாவான சீவன்முத்தனால் மஹாவாக்கியார்த்தத்துக் கனுகூலமான திருஷ்டாந்தமாதியவற்றால் வெளிப்படுத்தும் பிரயோசனத்தோடுகூடிய உபதேச மெங்ஙனமா மென்னும் வினாவிற்கு உத்தர முணர்த்துகின்றார்.

மறைப்பகலு மொருபிரம சொரூபமா தலினால்
மகிழ்ச்சிவெறுப் பிலாவீசற் கனுக்கிரகஞ் செயவு
மொருப்புறவும் வரும்வினையி னோராலத் தொழில்க
ளுறுதல்போற் சாதகர்தம் பக்குவபே தத்தாற்
சிறப்புறுநல் லுபதேசா திகண்ஞானிக் கெய்துஞ்
செப்பியவில் லிலக்கணமொ டிராதுபல முறையாற்
றுறப்பிலருட் சீவன்முத்த ரிருப்பதென்கொ லென்னிற்
றுணிவுதோன் றுறமுதநூற் றொகுத்தபரி சுரைப்பாம்.

(இ-ள்.) மறைப்பகலும்-ஆவரணம்நீங்கிய, ஒரு-ஒப்பற்ற, பிரமசொரூபமாதலினால் - பிரம சொரூபமாயிருத்தலால், மகிழ்ச்சி வெறுப்பிலா - ராகத்துவேஷமில்லாத, ஈசற்கு-ஈசனுக்கு, வரும்-உண்டாகின்ற - வினையினோரால் - நல்வினை தீவினையுடைய சீவர்களால், அனுக்கிரகஞ்செயவும்-அனுக்கிரகித்தலும், ஒருப்புறவும் - நிக்கிரகித்தலுமான, அத்தொழில்கள்-அப்பஞ்சகிருத்தியங்கள், உறுதல்போல் - உண்டாவதுபோல், சாதகர்தம்-அப்பியாசிகளுடைய, பக்குவபேதத்தால் - பக்குவத்தினது தாரதம்மியத்தால், சிறப்புறும் - மேம்பாடுள்ள, நல்லுபதேசாதிகள்-மேன்மையான பிரமோபதேசாதிகளைச் செய்தல், ஞானிக்கு - ஜீவன் முத்தனுக்கும், எய்தும்-உண்டாம், செப்பிய-இங்ஙனங் கூறிய, இவ்விலக்கணமொடு-இந்தவிலக்கணங்களுடன், இராது - இல்லாமல், பலமுறையால் - பலதன்மையினால், துறப்பிலருள் - நீங்காத கிருபையுடைய, சீவன்முத்தர்-ஜீவன்முத்தர்கள், இருப்பதென்னெனில் - இருப்பதெங்ஙனமென்றால், துணிவுதோன்றுற-தெளிவுண்டாக, முதநூல் - வேதாந்த சாத்திரங்கள், தொகுத்தபரிசு-தொகுத்துக்கூறிய தன்மையை, உரைப்பாம் - கூறுவாம், எ-று. கொல்-அசை.

(தா - ம்.) இராகத்துவேஷ மின்றிச் சுயம்பு வடிவமான வீசனுக்குச் சீவர்களின் நல்வினை தீவினைகளைக்குறித்து அவர்கட் கனுக்கிரகநிக்கிரகஞ்

செய்த லுண்டாவதுபோல விருப்பு வெறுப்பின்றிச் சுயஞ் சைதன்னிய சொரூபமாக விளங்குகின்ற ஜீவன்முத்தனுக்கு ஆத்மாக்களின் பக்குவ தாரதம்மியங்களைக் குறித்துச் சிக்ஷை ரக்ஷைக்கிரமமான வுபதேசாதிகள் உண்டாதற் கையமின்றென்பதாம். (கஎ௨)

அ - கை.

இச்செய்யுளில் சீவன்முத்த னொருபடித்தா யிராமற் பலபடித்தா யிருப்பது எதனு லென்ற வினுவை நோக்கிப் பிராரத்த சம்ஸ்கார நான்கினுல் அது வந்ததெனக் கூறுவான் றொடங்கி அவற்றி னுமமுமவற்றுள் மூன்றனிலக்கணமு முணர்த்துகின்றார்.

வந்தணையும் பிராரத்த வாசனைதீ விரமே
மத்தியமந் தஞ்சுத்த மெனவொருநான் காகும்
பந்தமறு ஞானியா யினும்போகத் தழுந்திப்
பசுப்போலத் தன்மகிழ்ச்சி மாத்திரையா யிருத்தன்
முந்துரைசெய் தீவிரம்போ கச்சிறப்புற் றிடினு
மொழியான்ம தற்பரனுய் விநோதமே புரிந்து
மைந்தரென விருத்தன்மத் தியம்போக மனைத்து
மாற்றிமிது னம்போலா நந்தமுறன் மந்தம்.

(இ - ள்.) வந்தணையும் - அனுபவித்துநீங்கற்காக வாராநின்ற, பிராரத்தவாசனை - பிராரத்துவ சம்ஸ்காரமானது, தீவிரம் - தீவிரமெனவும், மத்தியம்-மத்தியமெனவும், மந்தம்-மந்தமெனவும், சுத்தமென-சுத்தமெனவும், ஒருநான்காகும்-ஒருநான்காம், (அவற்றுள்) பந்தமறு-பந்தம்நீங்கிய, ஞானியாயினும் - ஞானவானுனுலும், போகத்தழுந்தி - போகங்களின் மூழ்கி, பசுப்போல - பசுவைப்போல, தன்மகிழ்ச்சிமாத்திரையாய் - ஆத்மப்பிரீதிமாத்திரமாய், இருத்தல்-இருப்பதே, முந்துரைசெய்- முற்கூறிய, தீவிரம் - தீவிரசம்ஸ்காரமும், போகம்-அனுபவிக்கும் விஷயங்கள், சிறப்புற்றிடினும்-விருத்தியடைபினும், மொழி-சொல்லாநின்ற, ஆன்மதற்பரனுய்-ஆத்மசொரூபனுய், விநோதமேபுரிந்து - விநோதங்களைச்செய்து, மைந்தரென - பாலரைப்போல, இருத்தல் - இருப்பதே, மத்தியம் - மத்தியசம்ஸ்காரமும், போகமனைத்தும் - சகலபோகங்களையும், மாற்றி-நீக்கி, மிதுனம்போல் - சுரதசுகத்தைப்போல, ஆனந்தமுறல் - நிசாநந்தத்திருப்பதே, மந்தம் - மந்தசம்ஸ்காரமுமாம், எ - று. ஏ - அசை.

மிதுனம்-சுரதலீலையிலுண்டாகும் விஷயாநந்தம். ஜீவன்முத்தன் சுகதுக்கங்களில் மூழ்கியிருப்பினும் முன்பின் உணராது தற்பிரியம் விடாமலனுபவித்தலின் பசுவைப்போலெனவும்,விடயபோகங்கள் விசேடமாயுண்டாயினுந் தானவைகட்குச் சாட்சியாய் அப்போகங்களை விளையாட்டாகப் பார்த்திருத்தலின் பாலரைப்போலெனவும், வராநின்ற போகங்களைத்

தையும்மித்தையெனநீக்கினவனும் நீக்கப்படும்பொருளு மின்றித் தன்னின்பமாத்திரமாயிருத்தலின் மிதுனப்போலெனவு றுவமிக்கப்பட்டன. (கஎ௫)

அ - கை.

இச்செய்யுளில் வினைய வொன்றனிலக்கணமும் அந்நான்கினு லுண்டாகும் பயனு முணர்த்துகின்றார்.

உலகவழக் ககன்றுநிரு பாதிகான் மாவி
லுற்றதற் பரனாகிப் பரமுத்த னெனவே
யிலகுசுகத் துடனிருத்தல் சுத்தவா சனையா
மென்பரிந்நால் வகையாகுங் கருமவா சனையாற்
றலைமைகொண்முத் தர்கள்வேறு வேறாய வொழுக்கஞ்
சாரினுஞ்செந் நெறிகோண னெறிபெறுமா நதிக்
ளலைகடலிற் புகுதல்போன் முடிவினின்மெய்ப் பரமா
யமர்தருநன் முத்திசுக மொருபரிசென் றறியே.

(இ-ள்.) உலகவழக்ககன்று-லௌகிக தருமங்களினின்று நீங்கி, நிருபாதிகான்மாவில் - நிருபாதிகப்பிரமத்தில், உற்ற-பொருந்திய, தற்பரனாகி-ததேகனாய், பரமுத்தனெனவே - பரமுத்தனைப்போலவே, இலகு-விளங்காநின்ற, சுகத்துடனிருத்தல்-பரமசுகத்திருப்பதே, சுத்தவாசனையாமென்பர் - சுத்தசம்ஸ்காரமென்று சொல்லுவார்கள், இந்நால்வகையாரும் - இந்நான்குவிதமாகிய, கருமவாசனையால்-பிராரத்த சம்ஸ்காரத்தால், தலைமைகொள்-முதன்மையான, முத்தர்கள்-சீவன்முத்தர்கள், வேறுவேறாய-நானாவிதமான, ஒழுக்கஞ்சாரினும் - நடைகளைச்சேர்ந்திருக்கினும், செந்நெறி - ஒழுங்கான மார்க்கமும், கோணல்நெறி - வளைவானமார்க்கமும், பெறும் - செல்லுதலைப்பெற்றிருக்கின்ற, மாநதிகள் - பெரியநதிகள், அலைகடலில்-தரங்கத்தினையுடைய சாகரத்தில், புகுதல்போல்-சேர்வதுபோல், முடிவினில் - தேகாந்தத்தில், மெய்ப்பரமாய் - உண்மையாகிய பிரமஸ்வரூபமாய், அமர்தரும்-பொருந்தியிருக்கின்ற, நன்முத்திசுகம்-நல்லமோட்சவின்பம், ஒருபரிசென்று - ஒருதன்மையாமென்று, அறி - நீயறிவாயாக, எ-று. ஏ-ஈற்றசை.

யாவுமாய் விளங்காநின்ற பிரமானந்தத்திருத்தலின் பரமுத்தனைப்போலென் றுவமிக்கப்பட்டது முத்தர்களென்னும் பன்மை பிரமவித்தன் பிரமவரன் பிரமவரியான் பிரமவரிட்டனெனவும், வேறுவேறாய வொழுக்கமென்பது அவர்களனுஷ்டான தாரதம்மியமெனவும், வியவகாரங்களினாற் போகங்களிற் கூடினுந் தற்பிரியத்திற் றீவிரமாயுற்றிருத்தலின் பிரமவித்தனுக்குத் தீவிர வாசனையெனவும், அவ்வியவகாரங்களினுள்ள போகங்களனைத்தினுக்கும் மத்தியனாயிருந்து சாட்சியாயறிதலின் பிரமவரனுக்கும் மத்தியவாசனை யெனவும், வாசனாக்ஷயத்திற் றத்துவஞானமானது பரிசுத்த

மாய் விளங்கலின் பிரமவரிட்டனுக்குச் சுத்தவாசனையெனவும், * அவ்வியவகாரபோக மனைத்தும் நீங்கிப் பரமசுகத்தில் மந்தகதியாக அடங்கி நிற்றலின் பிரமவரியனுக்கு மந்தவாசனையெனவுங்கொள்க.

(நா - ம்.) குருமுகமாய் விசாரிக்கும் ஆத்மவிசாரத்தினால் நித்தியா நந்தபோத முதயமாவதாயினும் பிராரத்த வினையால் அப்பியாச தாரதம்மிய மிருத்தலின் அதுபற்றி அநுபவமாகிய முத்தி வேறுபடாது ஒருதன்மையதாமென்பது விளங்க வுணர்த்தியவாறும். (கஎச)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய அப்பியாசத்தின்கணுள்ள பிராரத்த வாசனை மூன்றுவிதமாமென்ப துணர்த்துகின்றார்.

இச்சையுட னனிச்சைபிற ரிச்சையெனு மிவற்றா
லியம்பலுறு பிராரத்த மூன்றுவகைப் படுமா
லச்சுரர்க ளானும்விலக் குதற்கரிய வாகு
மபத்தியஞ்செய் திடறனக்கே கேடெனவிங் கறிந்து
வைச்சுமது புரிவித்த லிச்சைசெய்யே னெனினு
மன்னவர்தம் மாணைபோற் செய்வித்த லனிச்சை
யிச்சையனிச் சைகளின்றி யிருந்துமய லோரா
லின்பதுன்ப நுகர்வித்தல் பிறரிச்சை வினையாம்.

(இ - ள்.) இச்சையுடன் - இச்சையும், அனிச்சை - அனிச்சையும், பிறரிச்சையெனும் - பரேச்சையுமென்கின்ற, இவற்றால் - இவைகளால், இயம்பலுறும் - முற்கூறிய, பிராரத்தம் - பிராரத்தகன்மமானது, மூன்று வகைப்படும் - மூவகைத்தாம், (இவை) அச்சுரர்களானும் - அத்தேவர்களாலும், விலக்குதற்கு - நீக்குதற்கு, அரியவாகும்-கூடாதனவாம், (அவற்றுள்) அபத்தியஞ்செய்திடல் - பத்தியந்தவறுதல், தனக்கே கேடென - தனக்கே துன்பமென, இங்கு - இவ்விடத்து, அறிந்துவைச்சும் - அறிந்திருந்தும், அதுபுரிவித்தல் - அதைச்செய்விப்பதே, இச்சை-இச்சாப்பிராரத்தமும், செய்யேனெனினும் - நான் செய்யேனென்றாலும், மன்னவர்தம்மாணைபோல்-அரசாக்கினையைப்போல, செய்வித்தல்-பலாத்காரமாகச் செய்விப்பதே, அனிச்சை - அனிச்சாப்பிராரத்தமும், இச்சை யனிச்சைகள் - இச்சையும் அனிச்சையுமான வ்விரண்டும், இன்றியிருந்தும்-இல்லாதிருந்தும், அயலோரால் - அந்நியரால், இன்பதுன்பம்-சுகதுக்கங்களை, நுகர்வித்தல் - புசிப்பித்தல், பிறரிச்சை வினையாம் - பரேச்சாப் பிராரத்தமுமாம், எ-று. ஆல் - அசை.

தான் இஃதனுபவிக்கக்கூடாததென நன்றாய்த் தெரிந்திருந்தும் அதன்படி நில்லாமல் அனுபவிக்க வருவது இச்சையெனவும், தனக்கிச்சையின்றாயினும் அதனை யனுபவிக்கச் செய்வது அனிச்சையெனவும், தனக்

* இதனைப் பிரமவரனுக்கு மத்தியவாசனை யெனவும் என்பதன்கீழ் வாசித்துக்கொள்க.

கவ்விரண்டு மில்லையாயினும் பிறரன்புக்காக அனுபவிக்கப்படுவது பரேச்சை யெனவுங் கொள்க.

(தா - ம்.) விருப்பு வெறுப்பு உபேக்ஷையென்னு மிவற்றாற் சுகதுக்க மனுபவிப்பது பிராரத்த கன்மத்தின் பயனுமென்க. (கஎடு)

(அ - கை.)

இச்செய்யுளில் முற்கூறிய பிராரத்தகன்மங்களுள்ள ஜீவன்முத்தர்களது நடை பலவாயினும் அவர்களுண்மை யொன்றேயென வற்புறுத்தற்கு உவமான பூருவகமாக வுணர்த்துகின்றார்.

இப்பரிசு மூவகையாம் பிராரத்த வினைவா
  லெண்ணில்பல வொழுக்கமாஞ் சீவன்முத்தர்க் கிந்த
மெய்ப்பொருளை வசிட்டனு ரதன் றுருவா சன்சீர்
  வியாதனொடு சுகன்வாம தேவனருட் சனக
னொப்பரிய பரதனெழிற் கௌதமனே முதலா
  யுளர்வருத்த னுபேத முணர்த்தலுறு மிங்ஙன்
றுப்புதவு பிராரத்தங் கொளினஞ்சா னிக்குஞ்
  சுத்தனுக்கும் வேறுபா டெங்ஙனெனின் மொழிவாம்.

(இ - ள்.) இப்பரிசு - இத்தன்மையாக, மூவகையாம் - மூன்றுவிதமான, பிராரத்தவினைவால் - பிராரத்தமுண்டாவதால், எண்ணில் - அளவிறந்த, பலவொழுக்கம் - நாநாவிதமான நடைகள், சீவன்முத்தர்க்கு-ஜீவன்முத்தர்களுக்கு, ஆம் - உள்ளனவாம், இந்த மெய்ப்பொருளை - இவ்வுண்மைப்பொருளை, வசிட்டன் - வசிஷ்டமுனியும், நாரதன்-நாரதமுனியும், துருவாசன்-தூருவாசமுனியும், சீர்வியாதனொடு-சிறப்புள்ள வியாசமுனியும், சுகன் - சுகமுனியும், வாமதேவன் - வாமதேவமுனியும், அருட்சனகன் - கிருபையுள்ள சனகராஜனும், ஒப்பரிய பரதன் - இணையின்றிய சடபரதமுனியும், எழிற்கௌதமன் - அழகுள்ள கௌதமமுனியும், முதலாயுளர் - முதலாகவுள்ள மகான்களது, வருத்தனுபேதம் - வர்த்தித்து வருகின்ற ஒழுக்க தாரதம்மியமே, உணர்த்தலுறும் - அறிவிக்கும், இங்ஙன் - இவ்வண்ணம், துப்புதவு - புசிப்பைக் கொடுக்கின்ற, பிராரத்தம் - பிராரத்த கன்மங்களை, கொளின் - சீவன்முத்தனுக்குண்டெனக் கொண்டால், அஞ்ஞானிக்கும் - பெத்தனுக்கும், சுத்தனுக்கும் - ஞானிக்கும், வேறுபா டெங்ஙனெனின் - பேத மியாதெனக் கேட்கின், மொழிவாம் - கூறுவாம், எ - று. ஏ - அசை.

(தா - ம்.) சீவன்முத்தர்கள் நானுவித நடைகளையுடையவர்களாய் விருத்தியடைந்து வருதற்கு வசிட்டமுனியாதிய பெரியோர்களை மேற்கோளாக வெடுத்துணர்த்தியவாறாம். (கஎசு)

அ - கை.

இச்செய்யுளில் பெத்தனுக்கும் முத்தனுக்கும் பிராரத்தவினை புசித்த லொக்குமாயின் இவர்கட்குப் பேதந்தா னியாதென்ற வினவிற்கு உத்தர முணர்த்துகின்றார்.

மண்ணுலகில் விராத்திரியர் சுரோத்திரியர் தமக்கு
மறையொழிதன் மொழிதலா லன்றியுணன் முதலா
யெண்ணவருஞ் செயலால்வே றிலாமையது போல
விதயபந்த முறலொழித லாலன்றிப் போக
முண்ணுநிலை யதனலஞ் ஞானமுடை யோர்க்கு
முணர்வுமய மாய்நின்ற சீவன்முத்தர் தமக்கு
நண்ணிவரு வேறுபா டிலையெனவே நவில்வர்
ஞானநூல் பலவுணர்ந்த நல்லுணர்வி னவரே.

(இ - ள்.) மண்ணுலகில் - உலகத்தில், விராத்திரியர் - விராத்திரியர்க்கும், சுரோத்திரியர்தமக்கும்-சுரோத்திரியருக்கும், மறையொழிதல் - வேதாத்தியயனமின்மையாலும், மொழிதலால் - அவ்வத்தியயனமுண்மையாலும், அன்றி-பேதமேயல்லாது, உணன் முதலாய்-ஆகார நித்திரையாதியாக, எண்ணவருஞ்செயலால்-எண்ணப்பட்ட தொழில்களால், வேறிலாமையதுபோல - பேதமில்லாமைபோல, இதயபந்தமுறல்-இருதயக்கிரந்தியடைதலாலும்,ஒழிதலால்-அஃதொழிதலாலும்,அன்றி-பேதமேயல்லாது, போகமுண்ணும் - போகங்களைப்புசிக்கும், நிலையதனல் - தன்மையினல், அஞ்ஞானமுடையோர்க்கும் - அஞ்ஞானிகட்கும், உணர்வுமயமாய்நின்ற - ஞானகாரமாயிருந்த, சீவன் முத்தர் தமக்கும் - ஞானிகளுக்கும், நண்ணிவரு - பொருந்திவரப்பட்ட, வேறுபாடு - பேதம், இல்லையெனவே - இல்லையென்றே, ஞானநூல்பல - ஞானசாத்திரம்பலவற்றையும், உணர்ந்த - ஆராய்ந்தறிந்த, நல்லுணர்வினவர் - சுகபோத மடைந்த பெரியோர்கள், நவில்வர் - சொல்லுவார்கள், எ - று.ஏ - அசை.

மறையொழிதலை விராத்திரியருடனும் மறை மொழிதலைச் சுரோத்திரியருடனுங் கூட்டுக. விராத்திரியன் - அனுலோமப் பெண்ணிற்கும் பிரதிலோமவாணுக்கும் பிறந்தவன். அனுலோமப்பெண் - கீழான பீசத்திற்கும் மேலான யோனிக்கும் பிறந்தவள்; பிரதிலோமன்-மேலானபீசத்திற்குங் கீழான யோனிக்கும் பிறந்தவன். சுரோத்திரியன் - பிரமோபதேசத்தைக் கேட்டற்குரிய அந்தணன்.

(நா-ம்.)பெத்தனுக்கும்முத்தனுக்கும்முறையேஅகம்பாவமோங்கலும் நீங்கலுமேயன்றி மற்றைச்செய்கைகளினுற் பேதமின்றென்பதாம்.(கஎஎ)

அ - கை.

இச்செய்யுளில் சீவன்றன் தொழிவிற்குச் சம்மதித்துப் பிரமமாதற் குடன்படுமோ வென்ற வினவிற்கு உத்தரமுணர்த்துகின்றார்.

தத்துவஞா னத்தினாற் பிரமமடைந் திடுமேற்
றறுகண்வரிப் புலிகண்டோன் போற்சீவத் துவமே
யத்தலையே யழிந்திடுமா தலினாலச் சீவ
னழிவுதனக் குடன்படுமோ வெனிற்கடவுட் டன்மைக்
குய்த்தவா தரவினாற் கங்கைமுத லவற்று
ளொழிப்பதனுக் கிசைவர்நரத் துவமதுபோ லென்றும்
பொய்த்தலிலாத் துரியவடி வாம்பிரமத் துவத்திற்
பொருந்தத்தன் கேட்டினுக்கிங் குடன்படுஞ்சீ வன்றான்.

(இ-ள்.) தத்துவஞானத்தினால் - மெய்யுணர்வினால், பிரமமடைந்திடுமேல் - பிரமசொரூபத்தை யடையுமாயின், தறுகண்-மறஞ் செய்யுங் கொடிய கண்களையும், வரி-தேமல்களையுமுடைய, புலி - வியாக்கிரத்தை, கண்டோன்போல்-சடுதியிற் பார்த்தவனைப்போல, சீவத்துவம் - ஜீவத்தன்மை யானது, அத்தலையே-அப்பிரம சொரூபமான மாத்திரத்தில், அழிந்திடுமாதலினால் - கெடுமாதலால், அச்சீவன் - அந்தச்சீவனானவன், அழிவுதனக்கு-தனது நாசத்திற்கு, உடன்படுமோவெனில் - சம்மதிக்குமோ வென்றால், கடவுட்டன்மைக்கு - தேவத்தன்மையை யடைதற்கு, உய்த்த-செலுத்திய, ஆதரவினால் - ஆசையினால், கங்கைமுதலவற்றுள் - கங்கையாதிய நதிகளில், நரத்துவம் - மானிடத்தன்மையை, ஒழிப்பதனுக்கு - நீக்குவதற்கு, இசைவர் - அங்கீகரிப்பர், அதுபோல் - அவ்வாறு, என்றும் - எப்பொழுதும், பொய்த்தலிலா - சத்தியமான, துரியவடிவாம்-தனது யதார்த்தமான துரியஸ்வரூபமாகிய, பிரமத்துவத்தில் - பிரமத்தன்மையில், பொருந்த - அமைந்திருக்கவேண்டி, சீவன் - ஜீவனானவன், தன் கேட்டினுக்கு-தனது கற்பிதமான சிதாபாசநாசத்திற்கு, இங்குடன்படும் - இங்கே சம்மதிக்கும், எ - று. ஏ - தான் - அசை. பிரமத்திற்கு புலி யுவமிக்கப்பட்டது.

'கங்கை முதல்' என்றமையின், யமுனை சரசுவதி கூடிய திரிவேணி சங்கமமெனக் கொள்க.

(நா - ம்.) தன் கண்ணினாற் றனதுருவத்தைக் காண்பதுபோலத் தன் பிரஞ்ஞையாற் றன்னைக்கண் டமைவானென்பார் தத்துவஞானத்தினாற்பிரமமடைந்திடுமேல் எனவும், ஆணவத்தைக் கெடுக்குங் கொடியநோக்கென்பார் தறுகண் எனவும், சமாதியின்கண் நவநவமாயுதயமான வனுபவமென்பார் வரி எனவும், சீவன் றனக்காதாரமான சிவத்தைப் பார்க்கச் சிவந் தனக்காரோபமான சிதாபாசனைப் பார்க்க இவ்விருபார்வையும் ஒத்தவிடத்து அவ்விரு தன்மையும் நீங்கச் சுயஞ்சைதன்னியமாய் அதனாற் சங்கற்பநாசம் வருமென்பார் புலி கண்டோன்போற் சீவத்துவமத்தலையே யழிந்திடும் எனவும், சங்கற்பம் தனதழிவான அதீதத்திற் குடன்படுமோ வென்பார் சீவனழிவுதனக் குடன்படுமோ எனவும், மண்ணின்கண் மனித வேடம் பூண்டவன் விண்ணின்கண் தேவவேடம்பூணும்நிமித்தங் கங்கை

யாதியில் இத்தேசத்தை விடுவதுபோலச் சீவவேடம்பூண்ட துரியன் தனது யதார்த்த வடிவமாகிய பிரமசொரூபத்தையடையும் நிமித்தங் கற்பித ரூபமான சீவசிதாபாசத்துவத்தைச் சமாதி முதலியவற்றினல் ஒழிக்க விரும்பினு னென்பார் கடவுட்டன்மைக் குய்த்தவாதரவினுற் கங்கை முதலவற்று ளொழிப்பதனுக்கிசைவர் நரத்துவம்போல் எனவும்,பரமாத்ம ஐக்கியமான பரதத்துவந்தானுய்த் துவிதநீங்கினுனென்பார் பொய்த்தலி லாத் துரியவடிவாம்பிரமத்துவத்திற் பொருந்தத்தன் கேட்டினுக்கிங்குடன் படுஞ் சீவன்முன் எனவுங் கூறினர்.

வினு:—தேகவழிவைச் சீவனழிவாகஉவமானத்திற்கூறியதென்னே ?

விடை:—தேகியைக்காணுது தேகத்தைத் தானெனக் காண்பதனு லென்க.

வினு:—சீவன் றனதிலாபத்திற் குடன்படுமென்னுது தனது கேட் டிற் குடன்படுமென்றதென்னே ?

விடை:—சங்கற்பஞ் சத்திற்கரைதலே சித்தாய் விளங்கலி னென்க.

(நா - ம்.) சிவசிதாபாசன் றனது அவிருத்தாம்சமான சுயஞ்சித்தை நோக்கினவிடத்து அதனது விருத்தாம்சமான சகல கற்பனைகளும் நீங்கு மென்பதாம். (கஎஅ)

அ - கை.

இச்செய்யுளில் இங்ஙனங் கூறிய சீவன்முத்தரிடத்து முன்னுள்ள மகரிஷிகளைப்போலச் சாபானுக்கிரக சாமர்த்தியங் காண்கிலமாதலின் இவர்களை ஞானியென்ப தெங்ஙன மமையுமென்ற வினுவிற்கு உத்தர முணர்த்துகின்முர்.

வாதரா யணன்முதலோர் போற்சாப முடனே
　மற்றருள்செய் வலியுடையோன் றத்துவஞா னத்தோ
னேதிலா னலனெனினவ் வலிதவத்தின் பலமா
　மிலங்குதத் துவஞான பலமன்று மாயின்
மாதவமே ஞானத்திற் கேதுவெனுஞ் சுருதி
　வழக்கினுற் றவமிலர்க்குத் தத்துவஞா னந்தா
னேதெனிலாஞ் சாபாதிக் குச்சகா மியமே
　யேதுநிட்கா மியதவஞா னத்தினுக்கென் றறிமே.

(இ - ள்.) வாதராயணன் முதலோர்போல் - வியாசாதி மகரிஷி களைப்போல, சாபமுடன் - சாபமும், மற்றருள் — பின்னனுக்கிரகமும், செய் - செய்யத்தக்க, வலியுடையோன் - சாமர்த்தியமுடையவனே, தத் துவஞானத்தோன் — மெய்யுணர்வுடையவன், ஏதிலான் - இவற்றிலொ ன்று மில்லாதவன், அலனெனில் - ஞானியலனென்முல், அவ்வலி - அச் சாமர்த்தியம், தவத்தின் பலமாம் - தபசின்பலமாமன்றி, இலங்கு - விளங்

காநின்ற, தத்துவஞானம் - உண்மைஞானத்தின், பலமன்றும் - பலனல்லவாம், ஆயின் - அங்ஙனமானால், மாதவமே - மகத்தானதபசே, ஞானத்திற்கு - ஞானமுதித்தற்கு, எதுவெனும் - காரணமென்னும், சுருதிவழக்கினல் - வேதவழக்கால், தவமிலர்க்கு - தவமில்லாதவர்களுக்கு, தத்துவஞானம் - மெய்யுணர்வானது, ஏதெனில் - உண்டாவதியாங்ஙனமென்று கேட்கில், சாபாதிக்கு - சாபானுக்கிரகங்களுக்கு, சகாமியமேயேது - காமியதவமேகாரணம், ஞானத்தினுக்கு - ஞான முதயமாதற்கு, நிட்காமியதவம் - நிஷ்காமியமதவமே, ஆம் - எதுவாம், என்றறி - என்றறிவாயாக, எ - று. ஏ - தான் - அசை.

எது என்பது நிட்காமியதவத்திற்குக் கூட்டப்பட்டது. சகாமியம் - சுவர்க்காதி போகங்களை யனுபவிக்க விரும்பிச் செய்யுங் கருமம்; நிட்காமியம் - அவ்விச்சையின்றிச் செய்யுங் கருமம்.

வினு:—சித்தியுள்ள சாபானுக்கிரக சாமர்த்தியம் காமியதவத்தின் வலியேயன்றி ஞானத்தின் வலியல்லவென்று விதற்குத் தவமேதுவெனச் சுருதி கூறியதென்னை ?

விடை:—ஞானத்திற்கு நிட்காமியதவ மேதுவாதலினு லென்க.

வினு:—இந்நிட்காமிய தவத்திற் கவ்வலிமையின்றுய தென்னை ?

விடை:—இது ஞானேதயத்தில் நசித்தலின் இதற்கு அவ்வளவு சத்தியில்லையென்க.

வினு:—சாபாதிக்குங் காமிய மேதுதானே யதற்கவ்வலி வந்ததென்னை ?

விடை:—அக்காமியம் சித்தியை யுண்டாக்கித் தானீங்காமல் விருத்தியடைந்து வருதலினென்க.

வினு:—அற்றேல், அச்சித்தியினுல் இம்முத்திக்குப் பிரயோசனமின்றே ?

விடை:—கோசரம் அகோசரத்தி லெங்ஙனம் பிரயோசனமாமென்க.

(நா - ம்.) ஞானமாத்திரம் பெற்ற சீவன்முத்தனுக்குச் சாபானுக்கிரக சாமர்த்தியம் சம்பவியாதென்பதாம். (௧எ௧)

அ - கை.

இச்செய்யுளில் ஞானத்தால் சீவன் முத்தி பெற்றிருக்கும் வியாசாதி மஹர்ஷிகட்கு இச்சித்திவந்த காரணமியாதென்ற வினுவிற்கு உத்தரமுணர்த்துகின்றூர்.

வேதவியா சாதிகட்கு ஞானம்வலி யிரண்டு
மேவுமே யெனிலவர்கட் கிருதவமு முளவா

மாதலினு லவ்விரண்டு மாகுமொரோர் தவமே
யாயினெவ்வொன் றேயடையு மதனுன்மா றின்று
மேதையாஞ் சாபாதி வலியிலர்க ளாகி
விதியிறத் துவஞானி களைக்கிரியா நிட்ட
ரோதுவார் நிந்தையெனி னவர்தமக்கு விடயத்
துழல்பவரா னிந்தையா தலிற்குறைவின் ருமால்.

(இ - ள்.) வேதவியாசாதிகட்கு - வேதவியாசர் முதலிய முனிவர்களுக்கு, ஞானம் - சீவன்முத்தியும், வலி - சித்தியுமாகிய, இரண்டும் - இவ்விரண்டும், மேவுமேயெனில் - மேவியிருக்கின்றனவே யென்றால், அவர்கட்கு - அவ்விருடிகளுக்கு, இருதவமுமுளவாம் - முற்கூறிய விரண்டு தவமுமுள்ளனவாம், ஆதலினுல் - ஆதலால், அவ்விரண்டுமாகும் - சித்தியும்முத்தியுமாகிய அவ்விரண்டு முண்டாம், ஒரோர்தவமேயாயின் - அவ்விரண்டிலொவ்வொருதவத்தைச் செய்யின், ஒவ்வொன்றேயடையும்- ஒன்றொன்றே வரும், அதனுல் - ஆதலால், மாறின்றாம் - முரணில்லை, மேதையாம் - மேம்பாடுள்ள, சாபாதி - சாபானுக்கிரகங்களாகிய, வலியிலர்களாகி - சாமர்த்தியமில்லாதவர்களாய், விதியில்-விதி நிஷேதமின்றிய, தத்துவஞானிகளை - சீவன்முத்தர்களை, கிரியாநிட்டர் - கன்மிகள், ஓதுவார் நிந்தையெனில் - நிந்தை கூறுவார்களென்றால், அவர் தமக்கு - அக்கன்மிகளுக்கு, விடயத்துழல்பவரால்-விஷயப் பற்றுடையவரா யுழல்கின்ற மூடர்களால், நிந்தை யாதலின் - நிந்தைவருதலின், குறைவின்றாம் - அதனுற் சீவன்முத்தருக்கோர் குறையுமில்லை, எ - று. ஆல் - அசை. விதி என்றமையின் நிடேதம் வருவிக்கப்பட்டது.

வினு:—ஞானிகட்கு இக்காமியதவமின்றெனபதென்னை ?

விடை:—தனக்கு வேறு யனித்தமாயுள்ள சிவலோகாதிபதத்தை யடைய விருப்பமின்றுதலினுனும், தனக்கு வேறின்றாய்த் தானே தானுய் விளங்குமிடத்து ஒன்று வேண்டுதலுந் தள்ளுதலும் இன்மையாதலினுனுமென்க. காமியதவத்தாற் சித்தியும் நிஷ்காமிய தவத்தான் முத்தியும் வருமாயினும் முத்தியின்றியசித்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்தியமுண்டாயிருந்தும் பிறர்க்கு விநோதமாய்த் தமக்குப் பயனின்றி யிருத்தலின் அவர் இந்திரசால முதலான வித்தைசெய்வோனெப்பர். சித்தியின்றிய முத்தியோர்க்குச் சாபானுக்கிரக சாமர்த்திய மின்றாயினும் பிறர்க்கு விநோதமின்றித் தமக்குப் பயனுயிருத்தலின் அவர் வித்தையைப் பார்க்குஞ் செல்வரொப்பர். இங்ஙன மிருத்தலின் ஈவோரி லேற்போரதிகமாகார்போல் முத்தியுள்ள ஞானவான்கட்குச் சித்தியுள்ளோர் சமானுதிகராகாரென்க.

வினு:—அங்ஙனமாயின், முத்திமாத்திரம் பெற்ற ஞானிக்கு இச்சித்தியும் முத்தியும் பெற்றவர்கள் அதிகரல்லரோ ?

விடை:—பிராரத்தத்தினுற் சாபானுக்கிரக சாமர்த்திய முண்டாம். அஃதுண்டானவிடத்து விநோதமாத்திரமே பயனன்றி வேறுபயனின்மை யின், அதிகராகாரென்க.

வினு:—அங்ஙனமாயின் யாவருமவர்களை முக்கியமாகக் கூறுவதெற் றிற்கு ?

விடை:—சீவர்கள் வேதத்தின் மஹாவாக்கிய நிச்சயத்தை யுண்மை யாகக்கொண்டு முத்தியையடையும் நிமித்தம் அவ்வாக்கியார்த்த நிச்சயத் தைச் சுருக்கிச் சொல்வதில் விசுவாசந் தோன்றி அச்சாபானுக்கிரக சாமர் த்தியத்தினுற் பயமுண்டாய் அதன்வழி யொழுகவேண்டி ஈசுர நியதிப் படி வந்தவர்க ளாதலினென்க.

வினு:—அற்றேல், இச்சாபானுக்கிரக சாமர்த்தியமில்லாத ஞானி களை யஃதுடைய கன்மிகள் தூஷிப்பார்களன்ரு ?

விடை:—அவர்களைவிடயபோகத் துழல்வோர் தூஷித்தலின் அதனு லக்கன்மிகளுக்கோர்குறைவின்ருயதுபோல அக்கன்மிகள் தூஷிப்பதனுல் ஞானிக்கோர் குறைவின்றென்க.

(தா - ம்.) இச்சித்திகள் ஈசுரனுடைய வல்லபமாதலின்இவையுள்ள வர்களைத் தேவத்தன்மை யுள்ளவராக நம்பி அவர்களால் விதிக்கப்பட்ட விதிப்படியுயிர்களொழுகவேண்டி அவர்கட்கு இவ்விநோதமாயுள்ள சாபா னுக்கிரகசாமர்த்தியம் ஈசுரானுக்கிரகத்தினுலுண்டாயிற்றென்பது. (கஅ0)

அ - கை.

இச்செய்யுளில் முற்கூறிய ஜீவன்முத்தன் பிராரத்தவசத்தாற் பல வித நடையை யுடையவனுனுலும் அதனை அவனது சித்துவிலாசமாகக் காணவேண்டுமென வுணர்த்துகின்ருர்.

உலகிறந்த சீவன்முத்த னுகர்வினைவா சனையா
 லுண்பொருள்கள் பலகவர்ந்து மௌனமே யுற்றும்
பலதிறங்கண் மொழிந்துமுப தேசநெறி புரிந்தும்
 பரிதவித்து மகிழ்ந்துமிக வேடங்கள் புனைந்துங்
கலைதுறந்து முடையுடுத்துங் கல்விபல பயின்றுங்
 கல்லாது மாதர்முயக் கிடையுற்று மிவ்வா
றலகிறந்த நடையுறினு மருள்விளையாட் டென்றே
 யவன்றனைநம் புகவைய மொருசிறிது முருமல்.

(இ - ள்.) உலகிறந்த - உலகநடைக்கப்பாற்பட்ட, சீவன்முத்தன் - சீவன்முத்தனுனவன், நுகர்வினை - பிராரத்தகன்மத்தின், வாசனையால் - சம்ஸ்காரத்தினுல், உண்பொருள்கள் - அனுபவிக்கின்ற வஸ்துக்கள், பல கவர்ந்தும்-பலவற்றைக்கிரகித்தும், மௌனமேயுற்றும் - மௌனமாயிருந்

தும், பலதிறங்கண் மொழிந்தும் - பலசாஸ்திர நெறிகளைக் கூறியும், உபதேச நெறிபுரிந்தும் - உபதேசமுறைமைகளைச் செய்தும், பரிதவித்தும் - விசனப்பட்டும், மகிழ்ந்தும் - மகிழ்ச்சியடைந்தும், மிகவேடங்கள்-பலவேடங்களை, புனைந்தும் - தரித்தும், கலைதுறந்தும் - நக்னனாகியும், உடையுடுத்தும் - கலையைத்தரித்தும், கல்விபலபயின்றும் - அநேக சாஸ்திரங்களையப்பியாசித்தும், கல்லாதும் - கற்காமலும், மாதர் முயக்கிடையுற்றும் - ஸ்திரீலோலனா யிருந்தும், இவ்வாறு - இவ்வண்ணமாக, அலகிறந்த - அளவற்ற, நடையுறினும் - நடைகளைப் பொருந்தினும், அருள் விளையாட்டென்றே - கிருபாவிலாச மென்றே நினைத்து, ஐயமொருசிறிது முறாமல் - சந்தேக மென்பது சிறிதுமின்றி, அவன்றனை - அச்சீவன் முத்தனை, * நம்புக - சிவமெனநம்புவாயாக, ஏ - று. ஏ - அசை.

* "சீவன்முத்தன் இலௌகிகனாதலால் பிராரத்தவசத்தால் அறிவுடைமை அறிவின்மையாகிய அவஸ்தைகளிலிருந்தாலும் வாயுவசத்தால் சிதறியும் சிதறாமலிருக்கும் மேகபடலமுள்ள வாகாயம்போல நித்தியநிர்மலனாவான்; மற்றும் அதிருஷ்டமென்னும் பரிசாரகனால் புஷ்ப சந்தனாதி போகங்களைக் கிரகித்தும் தன் கணவனிடமே பற்றுள்ள ஸ்திரீயினைப்போலச் சொரூபத்தில் இரமித்திருப்பன்; மூடனைப்போலக் கலாஞானத்துள் மௌனியாயிருந்தாலும் கற்பிதத் துவைதபரமான சுருதிவாக்கியமாகிய வைகரி விஷயத்தில் ஆலசியனாவன்; மற்றும் பிரஸ்துத மறியாத வெகு பாஷிதனைப்போல யாது வசனித்தாலும் கூட அபிப்பிராயத்தை யடக்கிய சத்தியாத்துவைத நிஷ்டநிகமாபிப்பிராயமாகும்; மற்றும் ஆசாரியனைப்போலச் சிஷ்யருக்கு உபதேசித்தாலும் ஆத்மா நித்தியமுத்தனாதலால் போத்தியபோதகத்துவங்கள் மாயாசிருஷ்டி வடிவினவென்று செய்துள்ள நிச்சயத்தால் ஆகாயவாணிபோலக் குருத்துவாபிமான மில்லாதவனாயிருப்பன்; மற்றும் உன்மத்தனைப்போல அநுசிதத்தைப் பேசுபவனானாலும் துவைதபாவ மழிந்து ஆத்மராமனா யிருத்தலின், சுரதசமயத்து அதிகாமரசமுள்ள மிதுனவாக்கியம்போல அநபிதேய (சொல்லுதற்கரிய) விஷயமாகும்; மற்றும் கவீசாக்கிரகண்யனைப்போலக் கலகலெனப் பேசினாலும் பூரணைக்கிய சுபாவநிஷ்டனாவதனால், விரகிகள் மனம்போல அப்பிராப்பியாநு சந்தனமாகும்; மற்றும் புத்திர வியோகாநுபவமுள்ள கிராம்மிய ஜனங்களைப்போலச் சோகஞ் செய்தாலும் சர்வேந்திரியங்களும் பிரஹ்மாம்சங்களென்று ஆலோசனை செய்யாதே கற்பிதசாதகாவஸ்தையில் நிக்கிரகித்த சர்வேந்திரிய தர்மவிஷயமான கருணாரசமாகும்; மற்றும் விவித வெகுரூபதரிசன விநோதத்துள் அட்டகாசஞ் செய்தாலும், விசித்திர புண்ணியபாபாதிவியவகாரமுஞ் சத்தியமென்று பிரதிபாதிக்கிறமீமாம்சாதி தரிசன விஷயமான பரியாசமாகும்; மற்றும் விடனைப்போல ஸ்திரீலோலனாயிருந்தாலும் பூரணைக்கிய சுபாவனாவதல்லாமல் நிசாநந்தாநுபவியாவன்; மற்றும் சத்துருவைப்போலக் குரோதத்தால் சந்தாபஞ்செய்தாலும் க்ஷேத்திரதகனாக்கினிபோல விசிஷ்ட பலசம்பத்துக்கு ஆசிரயஞ் செய்வேனென்று விசுவாசஞ் செய்யவேண்டும்" என்றிங்ஙன மூலத்தின் மொழிபெயர்ப்பிருக்கின்றது.

(தா - ம்.) சீவன் முத்தனது நடைகள் உலாகானுக்கிரகமாகவே யன்றி யவற்ருலவனுக்கோர் பலாபல மின்மையின் அந்நடைகளே அவனது ஆத்மவுல்லாச மென்றே காணவேண்டு மென்பதாம். (கஅக)

அ - கை.

இச்செய்யுளில் விதேகமுத்த னிலக்கணமும்விதேகமுத்தியை யடைதற் கேதுவான நித்தியகரும முதலிய வனுஷ்டான மரபிருபதும் கூறுவான்ருெடங்கி அம்மரபிருபதில் நித்தியகருமமாதியவாறுணர்த்துகின்ருர்.

என்றுமெவ் விடத்தினுமோ ருடம்புமுரு தொன்ரு
யிருந்தசச்சி தாநந்த சிவசொருப மாத
னன்றிதரு விதேககை வல்லியமென் றிசைப்பர்
நவின்றவிதை யெய்துமா றெவ்வாறிங் கென்னிற்
பொன்றலினித் தியகருமா னுட்டான மதனுற்
புண்ணியமப் புண்ணியத்தாற் பாவவொழி வதனுற்
குன்றலறு சித்தசுத்தி யதனுற்பொய்க் குடும்பக்
குற்றநெகிழ் வதனுன்மெய்த் துறவுதுற வதனுல்.

(இ - ள்.) என்றும் - எக்காலத்திலும், எவ்விடத்தினும் - எத்தேசத்திலும், ஒருடம்பும் - யாதொரு சரீரமாயினும், உருது-சேராது, ஒன்ருயிருந்த-ஏகமாயிருந்த, சச்சிதாநந்த - சச்சிதாநந்தவடிவமாகிய, சிவசொருப மாதல் - பிரமசொருபமாக விளங்குதல், நன்றிதரும் - நன்மையைத்தரா நின்ற, விதேககைவல்லியமென்று - விதேகமுத்தியென்று, இசைப்பர் - அறிஞர் கூறுவர், நவின்ற - இங்ஙனங் கூறிய, இதை - இவ்விதேக முத்தியை, எய்துமாறு - அடையுமார்க்கம், இங்கு - இவ்விடத்து, எவ்வாறென்னில் - எவ்வண்ணமென்ருல், பொன்றலில் - நசியாத, நித்திய கருமானுட்டானம் - நித்தியகருமானுஷ்டானமும், அதனுல் - அவ்வனுஷ்டானத்தினுல், புண்ணியம் - புண்ணியமும், அப்புண்ணியத்தால் - அந்தப்புண்ணியத்தினுல், பாவவொழிவு - பாவநாசமும், அதனுல் - அப்பாவ நாசத்தால், குன்றலறு - குறைவின்றிய, சித்தசுத்தி - சித்தசுத்தியும்,அதனுல் - அச்சித்த சுத்தியினுல், பொய்க்குடும்பம் - மித்தையாகிய குடும்பத்தின், குற்றநெகிழ்வு - தோஷதரிசனமும், அதனுல் - அத்தோஷதரிசனத்தால், மெய்த்துறவு - உண்மையானதுறவும், துறவதனுல் - அத்துறவினுல், எ - று.

(ப-ம்.)காலதத்துவமென்பார் என்றும் எனவும், சகலபுவனபோகங்களுமென்பார் எவ்விடத்தினும் எனவும், சராசரவுயிர்களாகிய பௌதிகமென்பார் ஒருடம்பு எனவும்,இவையாவுமில்லையென்பார் உருது எனவம், பரிபூரணமா யிருந்ததென்பார் ஒன்ருயிருந்த எனவும், காலத்திரயத்திலுமழிவின்றி நித்தியமாயிருந்ததென்பார் சத்து எனவும், ஆதிமத்தியாந்த

ரகித சதோதயமாய் விளங்குமென்பார் சித்து எனவும், தடையற்ற நிரதிசயாநந்தமென்பார் ஆநந்தம் எனவும், மூன்றும் பிரிவின்றி யொன்ருய் மங்களகரமாய் விளங்குகின்றதே பிரமமென்பார் சிவசொரூபம் எனவும், அதுவே யுண்மையான தென்பார் ஆதல் எனவும், அதுவே அதீதபதமான முத்தியென்பார் விதேக கைவல்லியம் எனவுங்கூறினர்.

விதேகமுத்தி - தேகஞ் சின்மாத்திரமாதல்; எனவே, சீவன்முத்தியில் சீவன் சிவமாய் விளங்குவதுபோலப் பிராரத்தானுபவநீக்கத்தில் தேகம் தேகியின் தேஜோமயாநந்தமாத்திரமாய்ச் சேடித்து நிற்பதெனக்கொள்க.

வினு:—அற்றேல், உலகத்தவரைப்போலஞானவான்களுக்கும்உயிர் பிரிவதும் அது பிரிந்த தேகத்தைக் தகனஞ்செய்வதுங் கண்டிருக்கின்ருேமேயன்ரு? அங்ஙனமாக, அஃதெங்ஙனம் பூரணமாயிற்று ?

விடை:—பஞ்சபூத பௌதிகங்கள் பூரணமாய் விளங்க இத்தேக மாத்திரமா விளங்கவில்லை; இதுவு மங்ஙனமே விளங்குமென்க.

வினு:—அற்றேல், இச்சகம் பூரண திருஷ்டியாய்ப் பார்க்கிற் பூரணமாய்த் தோற்றுவதேயன்றிப் பூரணமாய்க் கரையாததுபோலத் தேகமும் அங்ஙனம் பார்க்குமிடத்து அதுவாய்த் தோற்றுவதேயன்றி அதுவாய்க் கரையவில்லையன்ரு ?

விடை:—அஸ்தியாதிய கடின ரூபமாயுள்ள வித்தேகம் ஓர் சித்தியினுற் பரமாணுரூபமாய்ப் பந்தனம் பண்ணின வீட்டின்கணின்று வெளிப்படுதல்போலச் சைதன்னிய சிந்தனையாற் றேகம் சைதன்னிய ரூபமாதற்குச் சந்தேகமென்னை யென்க.

வினு:—அற்றேல், இதற்குப் பிரமாணமுண்டோ ?

விடை:—பரத்தில் வியாச வசிஷ்டாதிய மஹாரிஷிகளும், இகத்தில் சங்கராசாரியசுவாமிகள் முதலியோரும், மாணிக்கவாசகசுவாமிகள் முதலியோரும் தேகசேடமின்றிச் சோதியாய்க்கரைந்தாரென்பதும், அல்லமாப்பிரபுதேவர் ஜீவன்முத்தித் தசையிற்ருனே கோரக்கர் கட்கம் பரிசியாமற் சாயையாயிருந்தா ரென்பதும் பிறவுமாம்.

வினு:—அற்றேல், யாவருமே னனுஷ்டிக்கவில்லை ?

விடை:—கிஞ்சிஞ்ஞத்துவமுள்ள ஜீவன் சர்வஞ்ஞத்துவ முள்ள சிவத்தைச் சிந்தித்து அதுநீயென்னும் பகுப்பறச் சுத்த சைதன்னிய மாதற்கே சிருட்டிதொடங்கி யிதுகாறும் வருந்தும் வருத்தத்திற்கு அளவின்மையாயிருத்தலின் இச்சடத்தைச் சித்தாகக் கரைத்தற்குள்ள வருத்தமிவ்வளவென மட்டிடக்கூடாமையால் எவரு மனுஷ்டிக்கும்படி சுருதி சொல்லாமையால் ஆசிரியரும் நிரந்தரமா யனுஷ்ட்டிக்கச் சொல்லவில்லை; ஆதலி னேகதேசத்தி லுண்டெனக.

வினு:—இனிச் சீவன்முத்தியில் விதேகமுத்தியும் விதேகமுத்தியில் சீவன்முத்தியு முண்டென்ப தெங்ஙனம்?

விடை:—ஜீவன்முத்தியோடிருந் துபதேசாதிகள் செய்யுமிடத்துத் தேகமின்றிச் சாயைமாத்திரமாயிருந்த அல்லமாப்பிரபுதேவர்போல விருப்பது சீவன்முத்தியில்விதேகமுத்தியெனவும், விதேகமுத்தியோடு பரிபூரணமாயிருந்து சகஜீவபரங்களை யியக்காமலியக்குவிக்கும் பரமேசனைப்போல விருப்பது விதேகமுத்தியிற் சீவன்முத்தியெனவு மறிக.

(தா-ம்.) விதேகமுத்தி யின்னதென விளங்கக் கூறியவாறும்.(கஅஉ)

அ - கை.

இச்செய்யுளில் நிறுத்த முறையான் முத்திவிருப்பமாதிய ஏகாதசமரபுணர்த்துகின்றூர்.

முத்திவிருப் பதனுனே புறக்கரும வொடுக்க
  மொழிந்ததனுல் யோகநிலை முயற்சியது தன்னுற்
பொய்த்தலறு துரியவிழை வத்துரிய விழைவாற்
  புகலருமா வாக்கியவா ராய்ச்சியத னுனே
யத்துவித ஞானமத னுலவிச்சை நாச
  மதனுற்பொய்த் துவிதமயக் கழிதலத னுனே
மெத்துசுக துக்கநினை வழிவதனுல் விருப்பு
  வெறுப்பறுத லதனுலொண் விதிவிலக்கோய் வதனுல்.

(இ - ள்.) முத்திவிருப்பு - முமுட்சுத்துவமும், அதனுல் - அம்முமுட்சுத்துவத்தினுல், புறக்கருமவொடுக்கம் - பாகியகன்மநிவிர்த்தியும், மொழிந்ததனுல் - முற்கூறியபாகியகன்மநீக்கத்தினுல், யோகநிலைமுயற்சி- ஞானயோகமடைதற்குமுயற்சியும், அதுதன்னுல்-அம்முயற்சியினுல், பொய்த்தலறு-மெய்யான, துரியவிழைவு - ஆத்மப்பிரியமும், அத்துரியவிழைவால்-அவ்வாத்மப்பிரியத்தினுல், புகலரும் - வசனித்தற்கரிய, மாவாக்கியவாராய்ச்சி-மகாவாக்கியவிசாரணையும், அதனுல்-அவ்விசாரணையால்,அத்துவிதஞானம்-அத்துவிதஞானமும், அதனுல் - அவ்வத்துவிதஞானத்தினுல், அவிச்சைநாசம் - அவித்தியாநாசமும், அதனுல் - அவ்வவித்தியாநாசத்தால், பொய்-மித்தையாகிய, துவிதமயக்கழிதல் - துவிதப்பிராந்திநாசமும், அதனுல் - அத்துவிதப்பிராந்திநாசத்தால், மெத்து - மெலிதற்கேதுவான, சுகதுக்கம்-சுகதுக்கங்களின், நினைவழிவு - சங்கற்பநாசமும், அதனுல்-அச்சங்கற்பநாசத்தால், விருப்புவெறுப்பறுதல் - ராகத்துவேஷநீக்கமும், அதனுல் - அந்தராகத்துவேஷ நீக்கத்தினுல், ஒண்-ஒழுங்கான, விதிவிலக்கு - விதிநிஷேதங்கள், ஓய்வு - ஓய்தலும், அதனுல் - அவ்விதிவிலக் கோய்தலினுல், எ - று. ஏ - அசை.

(கஅரு)

அ - கை.

இச்செய்யுளில் முன்னிறுத்தமுறையால் இருவினை முதலிய மூன்றனிலக்கணமுங்கூறி இவ்விருபதுசோபானத்திற்கும் அதீதமானதேவிதேககைவல்லியமென வுணர்த்துகின்றார்.

விணையிரண்டு மகறலத னூற்றேக பாவ
விச்சிந்தி யதனாலே பாசமெலா மொழிதல்
பிணையறைந்த வதனாலே பராபரமாய் முடிவாய்ப்
பெயர்சாதி குறிபெறா தொன்றாகி வாக்கு
மனமிறந்து நித்தியா நந்தமய மாகி
மறுவிலா விதேககை வல்லியம்வந் தெய்து
மெனவறிந்து துணிந்திடுக சுருதிகுரு பரனா
லின்பவீ டடையுநெறி விரும்புறுமுத் தமரே.

(இ - ள்.) வினையிரண்டும்-நல்வினை தீவினையென்னு மிரண்டும், அகறல்-நீங்குதலும், அதனால் - அவ்விருவினையினீக்கத்தினால், தேகபாவவிச்சிந்தி - தேகான்மபுத்தி நீக்கமும், அதனால் - அத்தேகான்மபுத்தி நீக்கத்தினால், பாசமெலாமொழிதல் - பாசமனைத்தும் நீங்குதலும், பினை - பின்பு, அறைந்தவதனால் - கூறிய அப்பாசநாசத்தினால், பராபரமாய் - பரப்பிரமமாகவும், முடிவாய் - முடிவாகவும், பெயர் - நாமமும், சாதி - வருணமும், குறி - ரூபமும், பெறாது-அடையாமலும், ஒன்றாகி-ஏகமாயும், வாக்குமனமிறந்து - அவாங்மனோகோசரமாயும், நித்தியாநந்தமயமாகி-நித்தியானந்தசொரூபமாயுமுள்ள, மறுவிலா-களங்கமற்ற, விதேக கைவல்லியம்-விதேகமுத்தியானது, வந்தெய்துமென - வந்தடையுமென, அறிந்து - தெரிந்து, சுருதி - சுருதிவாக்கியத்தினாலும், குருபரனால் - ஆசிரியருபதேசத்தினாலும், இன்ப வீடு - பேரின்பமாகிய மோட்சத்தை, அடையுநெறி - சேருமார்க்கத்தை, விரும்புறும்-விரும்பாநின்ற, உத்தமர் - உத்தமர்கள், துணிந்திடுக - தெளியக்கடவாராக, எ - று. ஏ - ஈற்றசை.

(ப - ம்.) உதயபூருவமைந்து கடிகைக்குள்ளான உஷக்காலத்தில் விழித்துச் சுசியோடுங்கூடத் தான் வழிபடுகடவுள் வணக்கத்தோடும் விதிப்படி மலசலவுபயத்துவார சுத்திசெய்வதேசவுசவிதி யெனவும், மேற்றந்ததாபன சப்தத்துவாரசுத்திசெய்வது தந்ததாபனவிதியெனவும், தீர்த்தத்திற்படிந்து மனோசரீர சுத்திசெய்வது ஸ்நானவிதியெனவும், மூன்று சுத்தியோடு தான் சிவசொரூபமாக விபூதிதரிப்பது அனுஷ்டானவிதி யெனவும், பிரணவாதி மந்திரங்களாலுருவேற்றுவது செபவிதியெனவும், பூதசுத்தி முதலிய பஞ்சசுத்தியுடன் தான் சிவசொரூபமாயிருந்து சோடசோபசாரத்தோடு சிவத்தைப்பூசிப்பது பூசாவிதியெனவும், மேற்பிரணவபலியோடுங்கூட வாத்மதிருப்தி பண்ணுவிப்பது போஜனவிதியெனவுமாம்.

ஆகியசப்தவிதியு மிங்ஙனம் அபராண காலத்திலுஞ் செய்கின்றதும் இடை
யிற்றியானபரன யிருப்பதுமாதலின் அவைநித்தியகருமானுஷ்டானம் என
வும்,இவ்வனுஷ்டானஞ்சற்கருமமாதலால் தூய்தானபுண்ணியவிசேடமாத
லின் புண்ணியமாம் எனவும், அத்தூய்மையாற் பாவகருமஞ் சேர்தற் கிட
மின்மையின் பாவவொழிவு எனவும், அதனீக்கம் நிருமலமாதலின் குன்ற
லறசித்த சுத்தியாம் எனவும்,அச்சித்தசுத்தியினால்விடயத்தினுண்மைதெரி
தலின் பொய்க்குடும்பக்குற்ற நெகிழ்வு எனவும், அத்தோஷ திருஷ்டியினா
லொன்றினும் பற்றின்மையின் மெய்த்துறவாம் எனவும்,அவ்விரக்தி சுகத்
துக்கேதுவாயிருத்தலின்முத்திவிருப்பமாம்எனவும்,அம்முத்திவிருப்பம்அக
முகத்திற் சார்தலால் பாகியகன்மமொடுங்கலின் புறக்கருமவொடுக்கமாம்
எனவும், அவ்வொடுக்கம், மனோநிக்கிரகத்தை நாடலின் யோகநிலை முயற்
சியாம் எனவும், அம்முயற்சி தனித்திருப்பதை நாடலின் பொய்த்தலறு
துரிய விழைவாம்எனவும்,அத்துரிய மித்தன்மையதென வறியப் பரமாத்ம
விசாரஞானம் வேண்டுதலின் புகலருமாவாக்கிய வாராய்ச்சியாம்எனவும்,
அவ்விசாரம்அபேதமாதலின் அதன்சாரமான அத்துவிதஞானமாம் எனவும்,
அவ்வத்துவிதஞானம் அபரோட்சமாதலின் அவித்தியா நாசமாம் எனவும்,
அவித்தியாநாசத்தில் அசுமிதமென்னும் பிராந்தி நீங்கலின் துவிதமயக்
கொழிதலாம் எனவும், அவ்வொழிதலினாலின்ப துன்பநீங்கலின் துக்கசுக
நினைவொழிவாம் எனவும், அவ்வொழிவினா விராகத்துவேஷமின்மையின்
விருப்பு வெறுப்பறுதல் எனவும்,அவைநீங்கவே இதுசெய்யத்தக்கது இது
செய்யத்தகாதென்னுஞ் சங்கற்ப விகற்பமின்மையின் விதிவிலக்கோய்
வாம் எனவும், இவற்றாற் சுவர்க்கநரக மின்மையின் வினையிரண்டு நீங்
கும் எனவும், இந்நீக்கத்தில் நாமரூப பாவனையின்மையின் தேகபாவ
விச்சிந்தியாம் எனவும், இவ்விச்சிந்தியினால் அவாவனைத்தும் அன்பாய்க்
கரைதலின் பாசமெலாமொழிதல் எனவும், அப்பாசமாகிய மூலாஞ்ஞான
ம்நசித்த விடத்துப் பரமாகிய வீசுரத்தன்மையும் அபரமாகிய ஜீவத்தன்
மையு நீங்கி ஆறுயென்னும் பிரமகூடஸ்த ஐக்கமான வத்துவித சொரூ
பமாதலின்பராபரமாய் எனவும்,இவ்வத்துவிதபதத்திற்கு மேலொருபதமு
மின்மையின் முடிவாய் எனவும், இதற்கோ ருருவமின்மையின் பெயர்பெ
றாது எனவும், இஃதொன்றி னம்சமாகாமையின் சாதி பெறாது எனவும்,
இஃதிங்ஙன மிருக்குமென வோரடையாள மின்மையின் குறி பெறாது
எனவும், இஃதெங்கும் பரிபூரணமாக நிறைந்திருத்தலின் ஒன்றாகி என
வும், இதனை வாக்கினாற்றுதிக்கத் தொடங்கின் அது முடிவுபெறாது அதிற்
கரைதலின் வாக்கிறந்து எனவும், இது மனதினாற் சிந்திக்கத் தொடங்
கின் அச்சிந்தனத்தின்கண் மனம்அதுவாய் கரைந்து போதலின் மனமிற
ந்து எனவும், இங்ஙன மியாவுங் கரைந்தவிடத்து நிரதிசயானந்தமாய்
நிறைந்து நிற்றலின் நித்தியாநந்த மயமாகி எனவும், பெயர் சாதி முதலிய
இக்களங்கங்க ளனைத்தும் நீங்கித் தானேதானாய் விளங்கலின் மறுவிலா
விதேககைவல்லியம் எனவுங் கூறினர்.

இங்ஙனம் விதேககைவல்லியத்தை யடையுநிமித்தம் நுதலிய நித்திய கருமானுஷ்டானமுதற் பாசநாசமீறுன மரபிருபதில் முன்னையவெட்டும் பாகியசாதனமெனவம், இடையின் மூன்றும் ஆந்தரசாதனமெனவும் மேலொன்றுஞ் சாத்தியமெனவும், ஏனைய வெட்டும் நீங்கல் சாதன சாத்தியமெனவுங் கொள்க.

வினு:—இவ்வாறு வஸ்து நிச்சயத்தை உபக்கிரமத்திலாவது உபசங்காரத்திலாவது கூருது மத்தியிற் கூறியதென்னை.

விடை:—அவ்வஸ்து சர்வதோமுகமாயிருந்து யாவுமாய் விளங்குதல் அனுபவமாதலினுனும், சுருதிகள் மத்தியகத ஸ்வரூபமென விளம்புதலினுலும், விசாரத்தி லொன்றிற் சார்பில்லாது நடுநிலையாய் விளங்குதலினுலும், சாதனத்திலாசிரிய ருபதேசவனுஷ்டானத்தி லியாவற்றிற்குஞ்சாட்சியாய்க் காண்கையினுலும், சாத்தியத்திலியாவும் பரிபூரணமாய் விளங்குதலினுலும் மரபினும்மத்தியகதமே கூறினுரென்க.

வினு:—இங்ஙனங் கூறிய மரபிற் சீவன் முத்தியைக் கூருது விதேக கைவல்லிய மாத்திரங் கூறியதென்னை ?

விடை:—சீவன்முத்தியே விதேகமுத்தியாதலினென்க.

வினு:—அற்றேல், அஃதிரண்டாகக் கூறுவதென்னை?

விடை:—தந்தபடமென்னு மிடத்திற் படத்திற்கு நாமரூபம் தோற்றல் மாத்திரமேயன்றி யுண்மையி லின்மைபோல ஞானத்திறுற் றேகபாவ நீங்கியும் இருப்பது தோற்றல் மாத்திரமேயன்றி யஃதில்லாமையால் அத்தோற்றத்தைச் சீவன் முத்தியெனவும், அது நீங்கினதே விதேக முத்தி எனவும், நாவை நாவென்ருற்போலக் கூறினுரென்க.

(நா-ம்.) அதிதீவிரபக்குவர் விதேகமுத்தியை யடையுஞ் சோபான மரபிங்ஙனமெனவும் இங்ஙனமதனையடைந்த ஸ்வானுபவ வுல்லாச மிங்ஙனமெனவு முணர்த்தியவாரும். (கஅச)

அ - கை.

இச்செய்யுளில் இந்நூற் பெருமையையும் இதனையடையத்தக்க வதிகாரியினியல்பையு முணர்த்துகின்ருர்.

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொற் பொருளை
விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப்
போதமய மாகியபே ரானந்தத் தழுத்தும்
பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய
சாதனநான் கினையுமடைந் தெவரானு மென்றுந்
தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி
யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு
மன்புடையார் தமைக்காணி னளித்திடுக வுவந்தே.

(இ - ள்.) வேதமுதலாகிய - சுருதியாதியான, நூலனைத்தினும் - சாஸ்திரங்களனைத்தி னுள்ளும், சொற்பொருளை - சொல்லாநின்ற அர்த்தங்களை, கரதலாமலகமென - உள்ளங்கை நெல்லிக்கனிபோல, விளங்கியிட - விளக்கும்படி, காட்டி - காண்பித்து, போதமயமாகிய - சின்மாத்திரமாகிய, பேரானந்தத்து - பேரானந்தத்தில், அழுத்தும் - மூழ்கச்செய்யும், பொருவிகந்த - சமானமின்றிய, இந்நூலை - இந்த ஞானசாஸ்திரத்தை, முத்திபெறற்கு - வீடடைதற்கு, உரிய - உரித்தாகிய, சாதனநான்கினையும் - சாதனசதுஷ்டயங்களையும், அடைந்து - பெற்று, எவரானும் - யாவராலும், என்றும் - எப்போதும், தடுப்பரிய - தடுத்தற்கரிய, பிறவிநோய் - பவத்துன்பத்தை, தணிப்பதனுக்கு - நீக்குவதற்கு, எண்ணி - நினைத்து, ஆதரவின் - அன்பினால், அருட்குரவன்றனை - அருளையுடைய ஞாநாசிரியனை, தேடி - அவனெழுந்தருளியிருக்கின்ற விடத்தைத்தேடி, உருகும் - மனமுருகுகின்ற, அன்புடையார்தமை - அன்புடையவர்களை, காணின் - கண்டால், உவந்து-சந்தோஷத்து, அளித்திடுக - கொடுப்பாயாக, எ - று.

(தா - ம்.) தீவிரதரபக்குவமுள்ள சாதனசதுஷ்டய சம்பன்னரான வதிகாரிகட்கே இச்சுவானுபவநூல் பிறந்தமையின் அவர்கட்கே யிந்நூலுரித்தென்ப துணர்த்தியவாறும். (கஅ௫)

## வேதாந்தசூளாமணி மூலம் உரையுடன்

## முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சற்குருவேநம:.

உ

# ஸ்ரீபஞ்சதசி.

## [பஞ்சதசப்பிரகரணம்]

ஸ்ரீ பஞ்சதசி யென்பது சதுர்வேதபாஷ்யம் சர்வதரிசனசங்கிரகமுதலிய அநேக கிரந்தங்களை இயற்றியவரும், சர்வஞ்ஞவித்துவத்சிரோமணியென உலகப்பிரசித்திபெற்றவருமான ஸ்ரீ வித்தியாரண்ணியஸ்வாமிகளால் ஸ்ரீ காயத்திரிதேவியின் வரத்தால் அருளிச்செய்யப்பட்டது. இதற்குத் தஞ்சைமாநகரம் ஸ்ரீமான் வெ. துப்புஸ்வாமிராஜு அவர்கள், சிறிது சம்ஸ்கிருதமும் தமிழும் உணர்ந்தவர்களும் தமிழ்மாத்திரமுணர்ந்தவர்களுமாகிய இருதிற முமுக்ஷுக்களுக்கும் உபயோகப்படுமாறு அந்நூலிற்கு மூலசுலோகங்களின்பேரில் ஓர் பொழிப்புரையும், ஸ்ரீவித்தியாரணியசுவாமிகளின் சிஷ்யரான ஸ்ரீராமகிருஷ்ணபண்டிதர் அவர்களது சம்ஸ்கிருத வியாக்கியானத்திற்குச் சரியான மொழிப்பெயர்ப்புவடிவ உரையும், அவ்வுரைகளுக்கு அங்கங்கே வேண்டியவிடத்துப் பிரஹ்மநிஷ்டபண்டித ஸ்ரீபீதாம்பராஜீ அவர்களால் செய்யப்பட்ட டிப்பணியையும் மற்றும் பலவுரையாசிரியர்கள் கருத்துக்களையும் அநுசரித்த ஓர் விளக்கவுரையும் எழுதப்பட்டுளது. இவ்வுரையில் மூலசுலோகம் சமஸ்கிருதவியாக்கியானம் இரண்டிலுமுள்ள விஷயங்களினும் வெகு மடங்கதிகமாகத் தெரியத்தக்க விஷயங்களிருப்பதோடு ஆங்காங்கு உதாரணமாகக் காட்டப்பட்ட சம்ஸ்கிருத சுருதி சூத்திரம் சுலோகமுதலியவற்றிற்குத் தமிழுரையும் எழுதப்பட்டுளது.

இத்தமிழ்ப் பஞ்சதசியை வாசிப்பவர்கள் மற்ற எந்த நூலின் உதவியுமில்லாமல் அத்வைதவுண்மையினையும் அதன் சகல சாதனங்களையும் செவ்வையாய்த் தெரிவதனோடு பிறவாதிகளாற் கலங்காதிருந்து தாம் பிறர்சம்சயங்களை யொழிப்பதிற் சமர்த்தருமாவர் என்பதற்கையமில்லை.

இவ்வரிய பெரிய நூலை நல்ல காகிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பித்து மனோரம்மியமான வர்ணமைமுதலியவற்றாலாகிய நேர்த்தியான சித்திரகோசமொன் றமைத்து, ஸ்ரீஆதிசங்கராசாரியாவர்கள் உருவமைந்த புகைப்படத்துடன், இவ்வுரையாசிரியராசிரியர் புகைப்படமும், உரையாசிரியர் புகைப்படமும் வைத்து இராயல் 50 பவுண்டு பேப்பரில் ராயல் 8 பக்க அளவுள்ள 1452-பக்கங்களுள்ள 2-புத்தகங்களாக்கி வெளிப்படுத்தியிருக்கின்றோம். இதன் விலை ரூ 10—0—0 தபாற்கூலி 0—15—0.

## இந்நூலாசிரியர் இயற்றியவைகளில் இப்பொழுது விற்பனைக்குத் தயாராயுள்ள புத்தகங்கள்.

| | ரூ அ. | | ரூ அ. |
|---|---|---|---|
| ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் | 4—0 | ஸ்ரீ விருத்திரத்நாவலி | 0–12 |
| ஸ்ரீ விசாரசாகரம் | 3—0 | விவேகசிந்தாமணி (வேதாந்தபரிச்சேதம்) | 0—6 |
| ஹடயோகப்பிரதீபிகை | 1—8 | | |
| ஸ்ரீ பாலபோதம் | 1—0 | | |

| | |
|---|---|
| சங்கரகிரந்தாவலி பு-க. அபரோக்ஷாநுபூதி சம்ஸ்கிருதசுலோகமும் தமிழுரையும் | 0—6 |
| தர்க்ககௌமுதியும் நியாயபதார்த்தம் 16-ன் இலக்ஷணங்களும் (குறிப்புரையுடன் 2-ம் பதிப்பு) | 0—6 |
| கீதைக்கொத்து பு-க. உத்தரகீதை (சம்ஸ்கிருதசுலோகமும் தமிழுரையும்) | 0—4 |
| சாந்தோக்கியத்துள்ள தத்துவமஸிமகாவாக்கிய உபதேசம், சுகரகஸ்யோபநிஷதத்துள்ள நான்குமகாவாக்கியார்த்தத்துடன் 2 ம் பதிப்பு | 0—2 |
| ஸ்ரீ விசாரசந்திரோதயம் 2-ம் பதிப்பு அநேக சுருதிப்பிரமாணங்களுடன் கூடியசீக்கிரத்தில் வெளியாய்விடும். முன்பதிப்பினும் விசேஷமாக்கப்பட்டது. | 1—4 |

## பிறர் பதிப்பு.

| | |
|---|---|
| தலயாத்திரைப் பொதுவிதி | 0—6 |
| திருவள்ளுவர்சரித்திரம் | 0-1½ |
| அகம்புறவாராய்ச்சிவிளக்கம் | 1—4 |
| அவதூதசம்வாதம் | 0—2 |
| கிருஷ்ணன்செய்திருப்புகழ் | 0—1 |
| அழுகணிச்சித்தர்பாடல் | 0—½ |
| தேவாரத்திரட்டு. N. கண்ணுசாமிபிள்ளையால்போடப்பட்ட 5-வது சுத்தப்பதிப்பு கிளேஸ் திக்கு | 0—4 |
| ஷை சின்ன தேவாரத்திரட்டு | 0—1 |
| ஆசாரக்கோவை யுரை | 0—4 |
| ஆசாரத்திரட்டு | 0—4 |
| இந்துபாகசாஸ்திரம் | 0—8 |
| இனியது நாற்பது உரை | 0—3 |
| ஏரெழுபதுதிருக்கைவழக்கம் | 0—4 |
| ஐந்திணை ஐம்பது உரை | 0—3 |
| சிதம்பரமகாத்மியம் (கிரந்தம்) | 0—1 |
| சிவதத்துவவிவேகம் ஷை | 1—8 |
| சைவமஞ்சரி | 1—8 |
| ஞானாமிருதம் | 1—0 |
| சுவாநுபூதிரஸாயனம், சுவாநுபவரஸமஞ்சரீ, நிஜாநந்தவிலாஸம் ஒரு கட்டடம் | 2—4 |
| ஞானயிபோதம் | 0—1 |
| திரிகடுகம் உரை | 0—2 |
| துலாக்காவேரிமான்மியம் | 0—8 |
| நாநாஜீவவாதக்கட்டளை (ஆத்தரார்த்தப்பிரகாசிகை) | 0—2 |
| ஷை அவதாரிகை | 0—2 |
| ஷை குறிப்புரை | 0—4 |
| ஷை விருத்தியுரை | 1—8 |
| ஷை செய்யுள் | 0—1 |
| நான்மணிக்கடிகையுரை | 0—3 |
| சுந்தரராஜா (நாவல்) | 0—8 |
| பக்தலீலாமிர்தம் செய்யுள் | 2—0 |
| ஷை வசனம் | 3—0 |
| பஞ்சபக்ஷிசாஸ்திரசந்திரிகை | 0—4 |
| புலவராற்றுப்படை | 0—3 |
| மகாபாரதம்(ஆதிபர்வம், சபாபர்வம்) | 1—0 |
| மநுதர்மசாஸ்திரமூலமும் தமிழுரையும் | 2—8 |
| யாப்பிலக்கணம் அணியிலக்கணம் | 0—8 |
| மகாமகமகத்துவம் | 0—6 |
| அற்புதத்தேவாரத்திரட்டு | 0—3 |
| பகவத்கீதை திக்கு | 1—4 |
| வேதாந்தம் பிரஹ்மசூத்திரம் சங்கரராமாநுஜபாஷ்யம் பிரதிபததாற்பரியம் | 3—0 |
| ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் படம் | 0—1 |
| விபூதிமகாத்மியம் | 0—¾ |
| வேதாந்தசாரம் வினாவிடை | 0-10 |
| ஜோதிடப்பிரபஞ்சசேகரம் | 0-12 |
| நேமிநாதம் உரை | 0-10 |
| விபூதிருத்திராக்ஷதாரணம் | 0-14 |
| சிவக்ஷேத்திரயாத்திராநுகூலம் | 0-10 |
| அநவத்யா | 0—½ |
| தாயுமானவர் மூலம் சுத்தப்பதிப்பு (பாக்கெட்சைஸ்) | 0—8 |
| திருக்குறள் மூலம் பரிமேலழகருரை, தெளிபொருள் விளக்கப்பதவுரை, குறிப்புரைகளுடன் | 6—0 |

## ஸ்ரீ சாரதாமந்திரபுஸ்தகசாலை, தஞ்சாவூர்.

| | |
|---|---|
| திலோத்தமா | 0—½ |
| நாமராமாயணம் | 0—½ |
| ராமாயணசூர்ணிகை | 0—½ |
| ஷை (சம்ஸ்கிருதம்) | 0—¾ |
| காயத்திரிராமாயணம் (சம்ஸ்கிருதம்) | 0—½ |
| பாரதசங்கிரகம் (ஸம்ஸ்கிருதம்) | 0-12 |
| பிருக்தை | 0—½ |
| நாராயணஸ்தோத்திரம் (ஸம்ஸ்கிருதம்) | 0—¼ |
| பிரஹ்மநாமாவளி (ஸம்ஸ்கிருதம்) | 0 - ¼ |
| நீதிக்கதை (விசுவநாதீயம்) | 0—½ |
| ரிபுகீதை | 2—8 |
| பகவத்கீதை வசனம் | 1—4 |
| தர்க்கபரிபாஷை குறிப்புரையுடன் | 1—0 |
| சித்தாந்தபிந்து (வேதாந்தம்) | 0-10 |
| ரிபுகீதைத்திரட்டு(குறிப்புரையுடன்) | 1—0 |
| திருவாசகம் (சுத்தப்பதிப்பு பாக்கெட்சைஸ்) | 0-10 |
| ஷை மற்றோர் பதிப்பு | 1—0 |
| வாக்கியசுதையென்னும்திருக்குத் திருசியவிவேகம் தமிழ் மூலமும் உரையும் | 0—2 |
| வேதாந்தபரிபாஷை (தமிழ்) | 0-10 |
| பாட்டியற்கொத்து | 0—6 |
| தாலாட்டுப்பிரபந்தம் | 0—4 |
| சிவராத்திரிமான்மியம் | 0—4 |
| நித்தியாநுசந்தானப் பிரதிபததாற்பரியம் | 1—8 |
| சந்தியாவந்தனபாஷ்யம் | 1—4 |
| பராசரஸ்மிருதி | 1—2 |
| கல்கிபுராணம் | 0-12 |
| தசாவதாரப்பிரபாவம் வசனம் | 1—0 |
| வாஸந்திகா தமிழ் (நாடகம்) | 0—8 |
| ஸத்குருதியாகராஜஸ்வாமி சரித்திரம் | 0—1 |
| சங்கரபகவத்பாதாசாரியர் சரித்திரம் | 0—1 |
| மஹாமஹதீர்த்தமாகூஷி | 0—1 |
| ஸ்ரீமங்களாம்பிகை ஆதிகும்பேசுவர் பதிகம் | 0—½ |
| ஈசாவாஸ்யோபநிஷத்தேவநாகரி எழுத்தில் சாகமும் தமிழில் திரிமதபாஷ்யமும் A. சிவராவ்பதிப்பு. | 1—8 |
| கேநோபநிஷத்தேவநாகரம் கிரந்தம் எழுத்துக்களில் சுலோகமும் தமிழில் திரிமதபாஷ்யமும் ஷை பதிப்பு. | 1-12 |
| கடோபநிஷத் திரிமதபாஷ்யம் ஷை ஷை | 4—0 |
| முண்டகோபநிஷத் ஷை | 2—8 |
| மாண்டூக்கிய உபநிஷத் ஷை | 3—8 |
| தைத்திரியோபநிஷத் ஷை | 6—0 |
| கைவல்யோபநிஷத் தமிழ்ச்சூத்திரம் பாஷ்யத்துடன் | 0—6 |
| கைவல்யோபநிஷத் கிரந்த சுலோகமும் தமிழில் பாஷ்யமும். | 0-12 |
| கர்ப்போபநிஷத் ஷை | 0-12 |
| அதர்வசிரோபநிஷத் | 0—4 |
| புருஷசூக்தபாஷ்யம்(தமிழ்) | 0—6 |
| அதர்வசிகோபநிஷத் ஷை | 0—4 |
| மைத்ராயணீயோபநிஷத் | 0-15 |
| குமாரதேவர் 16 சாஸ்திரம் மகாராஜா துறவு முதலியன | 0-10 |
| பிரபோதசந்திரோதய வசனம் அல்லது மெய்ஞ்ஞான விளக்கம். | 1—0 |
| ஒழிவிலொடுக்கம் சிதம்பரசுவாமிகள் உரையுடன் காலிகோபயிண்டு கிலிட்டுடன் | 1—0 |
| சுகர் கைவல்யம் | 0—2 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தின் பிற்பகுதி சௌத்திகபருவமுதல் இறுதி சொர்க்காரோகண பருவம் வரையும் 2500 செய்யுட்கள். (அரங்கநாதகவிராயரியற்றியது. | 1—8 |
| பெரியபுராணவசனச்சுருக்கம் (பாக்கெட்) | 0-10 |

## ஸ்ரீ சாரதாமந்திரபுஸ்தகசாலை, தஞ்சாவூர்.

| | |
|---|---|
| வள்ளலார் 20 சாஸ்திரம் | 1—8 |
| பெரியபுராணம் திருவிளையாடல் வசனச்சுருக்கம் (பாக்கெட்) | 1—0 |
| விவேகாநந்தவிஜயம் :-விவேகாநந்தசுவாமிகளின் திவ்விய சரித்திரமும் அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் சுவாமிகள் படத்துடன் காலிகோபயிண்டு உயர்ந்தகிலிட்டுடன் | 1—4 |
| இராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம். ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும் கதாமிர்தமும் 2-வதுபதிப்பு கலிகோபயிண்டு உயர்ந்த கிலிட்டுடன் | 1—4 |
| சங்கரவிஜயம் ஆதி சங்கராசார்யசுவாமிகள் சரித்திரம் (ஷை சுவாமிகள் படமும் சிருங்கேரி ஸ்ரீ சாரதம்பாள்படமும் கூடியுள்ளது கிலிட்டுபயிண்டு.) | 1—0 |
| சைவசித்தாந்தவரலாறு சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கும்தோன்றியவரலாறும் சந்தான குரவர்சரித்திரமும் | 0—4 |
| இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம் உபநிஷத்துக்கள் முதலிய ஹிந்துமதத்தின் உண்மைகள் இரண்டாவது பதிப்பு (நூலாசிரியர் படமும்) | 1—12 |
| சிவமகாபுராணம் வேதவியாசமுனிவரருளிய பதினெண்புராணங்களுளொன்றாகியஇந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் வசனரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது | 5—0 |
| நைடதம் மூலமும் உரையும் இதில் அன்னமும் தமயந்தியும் அமைந்த உயர்ந்த ஆப்டோன் வர்ணப்படமும் 27விதகிராப்படமும் அடங்கியுள்ள உயர்ந்த கிலிட்டுபயிண்டு | 2—0 |
| குசேலோபாக்கியானம் | 0—6 |
| மாதரொழுக்கவிலக்கணம் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகள் முதலியன | 0—2 |
| மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்மூலம் | 0—2 |
| சீகாளத்திக்கலம்பகம் | 0—2 |
| திருவெங்கைக்கோவை சிவப்பிரகாசசுவாமிகள் அருளிய இவ்வரியகோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விசேஷஉரைகளுடன் உயர்ந்த கிலிட்டுப் பயிண்டு | 2—8 |
| திருவிளையாடற்புராணவசனச்சுருக்கம் (பாக்கெட்) | 0-10 |
| கந்தரநுபூதி உரை | 0—6 |
| விஷப்பிரதிதிரட்டு | 0—2 |
| அகஸ்தியர் தேவாரத்திரட்டு மூலமும் உரையும் | 0-12 |
| சௌந்தரியலகரிமூலமும் உரையும் | 0—6 |
| சிற்றின்பசாஸ்திரசிந்தாமணி | 0—4 |
| வேளாளசூளாமணி | 0—4 |

இதில் காணப்படாத மற்றும் அநேக புஸ்தகங்களுண்டு.

**வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்,**
சாரதாமந்திரபுத்தகசாலை, வடக்குவீதி,
தஞ்சாவூர்.